ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில்

பதினொராவது சதகம்

மதங்கள் சாஸ்திரங்கள் இலக்கியங்களில்
வாசகர்களின் 100 ஐயவினாக்களுக்கு
ஆசிரியரின் விளக்கங்கள்

ஆசிரியர் & கிடைக்குமிடம் :

'விசிஷ்டாத்3வைத ஸம்ரக்ஷகர்'
'ஸ்ரீதத்வ நிர்த்3தா4ரகர்'

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்
[ஸுதர்சனர்]

ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளிவருகிறது.

டிரஸ்டிகள் :
S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L., அட்வகேட்
S. ராமய்யங்கார், B.Sc., B.L., அட்வகேட்.

விலை ரூ. 30.00]   2002   [தபால் கூலி தனி

http://acharya.org

ஸ்ரீ:

இந்நூலில் விமர்சிக்கப்படும் பத்திரிகை, பிரமுகர்களின் பெயரும், அதற்கான கேள்விகளின் எண்ணும் கீழே தரப்படுகின்றன.

1. ந்ருஸிம்ஹப்ரியா — முதல் கேள்வி முதல் 32-வது கேள்வி ஈருக.
38, 39, 40, 41,42, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 62.
2. தினமணி — 33.
3. ஹிந்து — 43, 64, 65, 67.
4. குமுதம் பக்தி ஸ்பெஷல் — 53, 54, 57, 91.
5. மங்கையர் மலர் — 55.
6. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் — 56.
7. தினமலர் — 58, 72, 84, 94.
8. தினமலர் சண்டே ஸ்பெஷல் — 73
9. விஜய பாரதம் — 59.
10. ஹயக்ரீவப்ரியா — 61, 63, 70, 80, 85, 86, 93, 95.
11. நாவல் லீடர் — 66.
12. சென்னைத் தொலைக்காட்சி — 71, 79.
13. சன் டிவி (விசு) — 84.
14. அகஸ்திய விஜயம் — 87.
15. ஆதிப்பிரான் — 89, 96, 98.
16. சைதந்யா (ஸாஹித்யஅகடமி) — 90.
17. துக்ளக் — 97.

அநுபந்தங்கள்

1. புனிதர்கள் போற்றும் புத்தூர்ப் புண்ணியர்.
2. ஆண்டாளின் கவிதை நயம்.
3. காமகோடிக்குத் தெரியுமா கர்ப்பூர வாஸனை.
4. ஆலிநாடனும் கூரநாதனும்.
5. வைணவம்—நேற்று இன்று நாளை.
6. நாதமுனிகள் வைபவம்.
7. ஸ்ரீ ரா ஸ்ரீ கி ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம அறக்கட்டளை (டிரஸ்ட்) வழக்கு. திருச்சி சப்கோர்ட் OS 37 / 85 தீர்ப்பு.
8. உபயகலை ஒற்றுமை 1—2.
9. ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம் விருது — ஏற்புரை.
10. சமரசமா சகிப்புத் தன்மையா?—தினமலரின் நேர்மையின்மை
11. ஸு தர்சனம் ஆசிரியரின் குறிப்பு—ஜெயபேரிகை.

http://acharya.org

ஸ்ரீ:

ஸுதர்சனர் பதில் — பதினைலாவது சதகம்

[ஸுதர்சனர்]

முகவுரை

ஸுதர்சனர் பதில் பதின்மூன்றுவது சதகம் 1998-ம் வருடத்தில் சுமார் நாலு வருடங்களுக்குமுன் வெளியிடப்பட்டது. அதில் தினமலர் செய்துவரும் பல பொய்ப் பிரசாரங்கள் ஆதாரத்தோடு மறுக்கப்பட்டிருந்தன. மேலும் தொடர்ந்து தினமலர் பத்திரிகை விஷ்ணு தூஷண ப்ரசாரங்களைச் செய்து வந்தது. "ஸ்ரீ உ. நரஸிம்மன் 1/87, 'இசையகம்' தேப்பெருமாநல்லூர்" என்னும் விலாசமுள்ள நம் வாசகர் தினமலரில் ஆன்மீகக் கட்டுரைகளை எழுதிவரும் திரு. சங்கரமணியுடன் தொடர்புகொண்டு, தினமலரின் போக்கு மாறவேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். 26—9—2001 அன்று "சமரசமா, சகிப்புத்தன்மையா? — தினமலரின் நேர்மையின்மை" என்னும் கட்டுரை நம்மால் வெளியிடப்பட்டு சங்கரமணியைக் குறித்துச் சில கேள்விகளும் கேட்கப்பட்டன. நாம் எழுப்பிய கேள்விகள் நியாயமானவையே என்பதை சங்கரமணியும் ஒப்புக்கொண்டார். இந்த விஷயங்கள் 14 வது சதகத்தில் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

சென்ற சதகத்தில் ஸ்ரீதத்வ விஷய விவாதத்தில் உட்புகுந்து, ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகை பல விதண்டாவாதங்களைச் செய்து இந்த விவாதத்தை விரும்பத்தகாத முறையில் வளர்த்து வந்தது. அதற்கு அவ்வப்போது இந்த சதகத்தில் ஆதாரத்துடன் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. நம்முடைய ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் பஞ்சமபக்ஷ சததூஷணி ஆகிய நூல்களைப் பற்றிய விலை விபரங்களை வெளியிடவும் ப்ரியா மறுத்துவிட்டது. நம்முடைய சததூஷணிக்கும், மற்ற நூல்களுக்கும் நேர்மையாக பதில் அளிக்க இயலாமையால் ப்ரியா கையொழிந்து நின்றது.

http://acharya.org

இந்நிலையில் பரகால மடப்பத்திரிகையான 'ஹயக்ரீவ ப்ரியா' இவ்விவாதத்தில் புகுந்து, தூஷண பரிஹாரங்களைச் செய்யத் தொடங்கிற்று. இறுதியாக நமது நண்பர் ஸ்ரீ உ வே கருணாகராசார்யஸ்வாமி, நம்முடைய பஞ்சமபக்ஷ சததூஷணி யின் நூற்றுக்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு, ஹயக்ரீவப்ரியா வில் பதில் எழுத முற்பட்டுள்ளார். இவ்விஷயங்கள் அனைத் தும் பதினாலாவது சதகத்தின் கேள்வி, பதில்களில் விளக்கப் பட்டுள்ளன. 'உபயகலை ஒற்றுமை' முதலான பல கட்டுரை களும் இந்த சதகத்தில் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சென்னையில் மத்ய கைலாசம் என்னும் ஓர் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா எண்டோமெண்ட்" என்று சென்னைப் பல்கலை வைணவத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் அறக்கட்டளையின் மூலம் 1—2—2002 அன்று ஓர் சொற்பொழிவு நடத்த ஏற்பாடு செய்தார்கள். இந்தச் சொற்பொழிவை நிகழ்த்தியவர் ஆந்திர மாநில ஆளுநர் (கவர்னர்) அவர்களின் துணைவியரான ஸ்ரீமதி ஹரிப்ரியா ரங்கராஜன் ஆவார் இந்தச் சொற்பொழி வில் 'மஹாலக்ஷ்மியே மும்மூர்த்திகளையும் படைத்த மூல முதற்பொருள்' என்று வாதம் செய்யப்பட்டிருந்தது. இந்த உத்தீர்ண வாதத்திற்கும், கடந்த ஒன்பது வருடங்களாகப் பல வித்வான்கள் செய்துவரும் லக்ஷ்மீநாராயண ஸாம்யவாதத்திற் கும் பதிலளிப்பதற்காக "ஸ்ரீதத்வவிஜயம்" என்னும் க்ரந்தம் ஒன்று நம்மால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த க்ரந்தத்தில் ஸ்ரீதேவியைப் பற்றிய தவறான வாதங்களனைத்தும் நிரஸிக்கப் பட்டு, விசிஷ்டாத்வைத மதத்தில் சாக்தம் புகாமலும், விசிஷ்டாத்வைத மதம் விசிஷ்டமிதுநாத்வைதமாக மாறாமலும் இருக்க, பகவத் பாரதந்த்ரியமே வடிவெடுத்த பெரிய பிராட்டி யாரோடு கூடிய பரப்ரஹ்மமான நாராயணன் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவைஷ்ணவ தாஸன்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

[ஸுதர்சனர்]

http://acharya.org

ஸுதர்சனர் பதில் — பதினொலாவது சதகம்

முன்னுரை

[ஸுதர்சனர்]

ஸ்ரீதத்வ விஷயத்தில் விசிஷ்டாத்வைதத்தை விசிஷ்டத்வைதமாக்குவதற்கும், விசிஷ்டாத்வைதமதத்தில் இரண்டு ப்ரஹ்மங்கள் உண்டு என்று ஸ்தாபிப்பதற்கும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகை பலவிதண்டாவாதங்களைத் தொடர்ந்து செய்துவருகிறது. இந்த விதண்டாவாதங்களுக்கெல்லாம் உரிய பதில்களையும் அளித்து, மற்றும் இவர்களுடைய வாதங்களைத் தகர்க்கும் நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களையும் காட்டிப் பல நடுநிலையாளர்களின் தீர்ப்புகளையும் இணைத்து ஸ்ரீதத்வஸர்வஸ்வம் என்னும் 200 பக்கங்கள் கொண்ட நூலை வெளியிட்டு இவர்களுக்கும் அனுப்பித் தங்களால் கண்டிக்கப்படும் இந்நூல் ரூ 35 விலையில் நம்மிடம் கிடைக்கும் என்று அறிவிக்கும்படியும் கேட்டிருந்தோம். அந்நூலைப்பெற்றுப் படிப்பவர்களுக்கு இவர்களுடைய விதண்டா வாதங்கள் புரிந்து விடுமாகையாலே அவ்வாறு அறிவிக்கமறுக்கிறார்கள். தொடர்ந்து விதண்டா வாதங்களைச் செய்து வரும் இவர்கள் பல மாதங்களுக்கு இப்படியே செய்து கொண்டிருக்கப் போவதாகக் கூறுகிறார்கள். வாசகர்கள் தெளிவு பெறுவதற்காக இவர்களுடைய விதண்டாவாதங்களை மறுக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கிருப்பதால் இந்தப் பதினொலாவது சதகத்தில் இவர்களுடைய வாதங்களையே கேள்விகளாக அமைத்து. அவற்றுக்குப் பதிலுரைக்கிறோம். ஸ்ரீதத்வதீபிகை என்னும் கட்டுரைத் தொடர் விஷயமான கேள்விகள் 'தீபிகை' என்னும் பெயரிலும், 'ஸ்ரீதத்வ அவபோதனம்' என்னும் கட்டுரைத் தொடர் விஷயமான கேள்விகள் 'அவபோதனம்' என்னும் பெயரிலும், அவ்வப்போது வரும் கட்டுரைகள் விஷயமான கேள்விகள் அந்தந்தப் பெயரிலும் அமைக்கப்படும்.

http://acharya.org

ப்ரியா ஈச்வர பங்குனி அவபோதனம் (பக் 144)

1. "பிராட்டி எம்பெருமானுக்குப் பரதந்த்ரையாக-சேஷபூதையாக இருப்பது இவளும் எம்பெருமானுமாகிய இருவருடையவும் இச்சையினால் ஏற்பட்டதாகும். இந்தப் பிராட்டிக்கே ஜகத் காரணமாயிருக்கைக்கு வேண்டிய ஸ்வாதந்த்ர்யத்தை எம்பெருமான் தன்னுடைய ஸ்வாதந்த்ர்யம் இச்சை இரண்டையும் கொண்டு தருகிறான்" என்று நாங்கள் கொள்வதில் என்ன தவறு?

இப்படி நீங்கள் கொள்வதற்கு ப்ரமாணங்களில், குறிப்பாக தேசிகன் உள்ளிட்ட பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் எந்த ஆதாரமும் இல்லை. இருந்தால் காட்டலாம். மேலும், பாகவதர்களுக்கும் இத்தகைய ஸ்வாதந்த்ர்யத்தைக் கொடுத்திருக்கிறான் எம்பெருமான் என்று விளக்கியிருக்கிறீர்கள். எம்பெருமானும் கூத்யத்தில் ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரச் செயல்களை விஷ்வக்ஸேநர் தம் ஸங்கல்பத்தினால் செய்வதாக அருளியிருக்கிறார். உங்கள் வாதத்தின்படி பார்த்தால் விஷ்வக்ஸேநருக்கும் ப்ராஹ்மத்வம் உண்டாகவேண்டிவருமே. அவருக்கு பகவத் பாரதந்த்ரியம் உண்டு என்பீர்களாகில், பிராட்டிக்கும் பகவத் பாரதந்த்ரியம் உண்டுஎன்று நீங்களே இசைகிறீர்கள். ஆகவே இவளுக்கு ப்ரஹ்மத்வம் எப்படி ஏற்பட முடியும்? நிரதிசயப்ருஹத்தாய் (எல்லையற்ற பெருமையை யுடையதாய்) இருப்பதே ப்ராஹ்மமாகும். எம்பெருமானுக்குப் பாரதந்திரையாய் (வசப்பட்டவளாய்) இருக்கும் பிராட்டிக்கு எப்படி எல்லையற்ற ப்ராஹ்மத்வம் ஸித்திக்கும்?

பஹுதான்ய சித்திரை — ப்ரியாதரும் விளக்கங்கள் (பக் 145)

பங்குனி சித்திரை இதழ்கை

2. ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் பக்கம் 54 ல் நீங்கள் கேட்டிருக்கும் முதல் கேள்விக்குப் பதில் பின்வருமாறு:—தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த நாம் எம்பெருமானுல் ஜகத்காரணம் ப்ராஹ்மம் ஆகிறான். இவ்வாறே பிராட்டியும் ஜகத்

http://acharya.org

காரணம் ப்₃ரஹ்மம் ஆகிருள் என்று ஒப்புக்கொண்டுள்ளோம். இதற்கு ஸ்ரீதத்வ தீபிகையில் பல ப்ரமாணங்களைக் காட்டியிருக்கிறோம்.

ஸ்ரீதத்வ தீபிகையில் நீங்கள் காட்டியிருக்கும் ஸம்ஹிதை முதலான ப்ரமாணங்களுக்கு அந்த ஸம்ஹிதையிலேயே உள்ள 'ஶரீரஞ்ச ஹரேரஸ்மி' [லக்ஷ்மீ தந்த்ரம் 50–80] [நான் எம்பெருமானுக்கு ஶரீரமாயிருக்கிறேன்.] "அஹந்தையான எனக்கு ஆதாரமாக அஹமர்த்தமான எம்பெருமான் இருக்கிறான்" [லக்ஷ்மீ தந்த்ரம் 17—30, 31] முதலான வசனங்களையொட்டிப் பொருள் கொள்ளும்போது பிராட்டிக்கு அப்ரதா₄ந ஜகத்காரணத்வம் தேறுமே யொழிய எம்பெருமானுக்குள்ளது போலே முக்₂யமான மூவகை ஜக₃த்காரணத்வம தேறாது என்று ஸ்ரீதத்வஸர்வஸ்வத்தில் 5, 8, 10, 67, 95 69, 132, 133 முதலான பக்கங்களில் விரிவாக பதிலுரைக்கப்பட்டுள்ளது. நீங்கள் இதைக்காணுக் கண்ணிட்டிருப்பதோடல்லாமல் உங்களுடைய வாசகர்கள் உங்கள் விதண்டாவாதங்களைப் பற்றித்தெரிந்துகொண்டுவிடுவார்களே என்கிற அச்சத்தினுல் இப்புத்தகத்தைப் பற்றிய விலை விபரங்களை உங்கள் பத்திரிகையில் அறிவிக்க மறுக்கிறீர்கள். நேர்மையிருந்தால் வரும் இதழிலாவது இவற்றை அறிவிக்கவும். "ஆநீத₃வாதம்" முதலான ஶ்ருதிவாக்யங்களுக்கு தேசிகன் அருளிய நிர்வாஹத்தை உபேக்ஷிக்கும் நீங்கள் நிர்க்கு₃ணப்₃ரஹ்ம வாதியான ஶங்கரர் ந்ருஸிம்ஹ தாபநீயத்தின் உரையில் எழுதியிருப்பதை ப்ரமாணமாகக் கொள்வது அருவருக்கத்தக்கது.

ப்ரியா பகுதான்ய சித்திரை — விளக்கம். [பக்கம் 155]

3. ஈஶ்வர ஆடி ஸுதர்சனத்தில் ஸ்ரீ உ. வே N S ராமானுஜ தாதாசார்ய ஸ்வாமியிடம் "தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான மடாதிபதிகளுக்கும் வித்வத்வரிஷ்டர்களுக்கும் 'பூர்வாசார்ய க்ரந்தங்களில் பிராட்டி ப்₃ரஹ்மம் என்னும் வாத₃மோ இருவரும் துல்யமான ஈஶ்வரர்கள் என்னும் வாத₃மோ இல்லை' என்னும் இவ்விஷயத்தை எடுத்துக்

http://acharya.org

காட்டி அவர்கள் பலரையும் ஒருவித்வத்ஸதஸ்ஸில் கூட்டி தேசிகன் வரையில் உள்ள பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்தி களைமட்டும் கருத்தில்கொண்டு ஒருநிர்ணயம்செய்ய வேண்டி யதுஅவசியம்'' என்று வற்புறுத்தியதாக நீங்களே எழுதியிருக் கிறீர்கள். அதைபொட்டித்தான் நாமும் ப்ரியா பங்குனி இத ழில்ஸதஸ்ஒன்றைகூட்டவேண்டுமென்று எழுதியிருந்தோம். 'ஸதஸ் கூட்டுவதால் தத்வநிர்ணயம் ஏற்படாது' என்று பங்குனி ஸுதர்சன இதழில் தான் உங்களுக்கு ஞானோதயம் உண்டாயிற்று போலும்! வாசகப்பெருமக்கள் உங்களுடைய ஏமாற்றல் வித்யையை நன்கு புரிந்து கொள் வார்கள்.

நாம் கூட்டச் சொன்ன ஸதஸ் தேசிக ஸம்ப்ரதாயஸ் தர்கள் மட்டும் கலந்து கொண்டு பூர்வாசார்ய ஸ்ரீஸூக் திகளின் அடிப்படையில் அவர்கள் ஸம்ப்ரதாயத்தை மட்டும் நிர்ணயிப்பதற்காகவே. நீங்கள் கூட்டச்சொல் வது உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் கலந்து கொள்ளும் கூட்டத்தில்ஒருநிர்ணயம் செய்யவேண்டுமென்பதற்காக. நாம் சொன்னது ஒத்த கருத்துடையவர்களுடைய ஸதஸ்ஸாகை யாலேமனமிருந்தால்அதில ஒருநிர்ணயம் செய்யத்தடையில்லை. நீங்கள் சொல்லுகிறபடி மாறுபட்ட கருத்துடைய இரு ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஒரே ஸதஸ்ஸில் கூடினால் கூச்சல் குழப்பம் வசவுகள் தான் மிஞ்சும். அதனாலேயே கீர்த்தி மூர்த்தியான வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி ''வாத ஸபை உதவாத ஸபையாகவே முடியும்'' என்று எழுதினார். இரண்டு ஸதஸ்ஸையும் ஒத்தவை என்று குழப்பம் செய்து ஏமாற்றுவது நீங்களேயொழிய நாமல்ல என்பதை எமது வாசகப் பெருமக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். உங்கள் வாசகர்கள் உணரமுடியாதபடி தடுக்கிறீர்கள்.

ஈச்வர பங்குனி அவபோதனம், சித்திரை ப்ரியா தரும் விளக்கங்கள்.

4. நீங்கள் யுவஹூ தைமீ இதழில் (ஸுதர்சனர் பதில் 12 வது சதகம் முன்னுரையில்) 'பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமாயிருப்பது' என்று தொடங்கி, ''யஸ்ய சேதநஸ்ய''

http://acharya.org

என்று தொடங்கி ஸ்ரீபாஷ்யத்தில் அருளியிருக்கும் சரீர லக்ஷணம் உங்களுக்குப் பொருந்தாதே'' என்பதீரூக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். ஸ்ரீபாஷ்யத்தில் எங்கு இம்மாதிரிக் கூறப்பட்டிருக்கிறது என்பதை விளக்கவேண்டும்.

ஸ்ரீபாஷ்யம் 2—1—9 ஸூத்ரத்தில் "யஸ்ய சேதநஸ்ய'' என்றுதொடங்கும் ஶரீரலக்ஷணத்தை எம்பெருமானார் அருளிச் செய்திருக்கிறார். அதற்கு ஶ்ருதப்ரகாசிகாசார்யர் வ்யாக்யானமும் செய்திருக்கிறார். ஈடு 1—1—7 பிரமாணத்திரட்டிலும் அதன் அடையவளைந்தான் அரும்பதவுரையிலும் இந்த சரீரலக்ஷணம் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் வித்வத்ஸதஸ்ஸில் இந்த ஶரீர லக்ஷணத்தை மாற்றி மனம்போனபடி ஒரு வித்வான் சரீரலக்ஷணம் சொன்னார். அதற்கு ப்ரதிபந்தியாக எழுந்தது நமமுடைய இந்தக் கேள்வி. கேள்வி விளக்கமாயில்லை என்பதை இசைகிறேன். ''பிராட்டிக்கு பகுவச்சரீரத்வம் உண்டு என்று கொள்ளும் நீங்கள் 'யஸ்ய சேதநஸ்ய' என்று தொடங்கி ஸ்ரீபாஷ்யகாரர் அருளியுள்ள சரீரலக்ஷணத்தைப் பிராட்டிக்கு இசைகிறீர்களா அல்லது மதுராந்தக ஸதஸ்ஸிற்போலே மனம்போனபடி பாஷ்யகாரர் அருளியுள்ளஶரீரலக்ஷணத்தை மாற்றப் போகிறீர்களா'' என்பது முதலில் உலகிற்குத் தெரியவேண்டும். அதை விளக்கி "பிராட்டிக்கு ஒரே சமயத்தில் பகுவச்சரீரத்வமும் ப்ரஹ்மத்வமும் எப்படி இருக்கமுடியும்?'' என்னும் நமது 16-வது கேள்விக்கு நீங்கள் பதில் கூறியபின்பே நாம் உங்களுடைய இந்தக் கேள்விக்குப் பதில் கூறமுடியும். நம்முடைய கேள்விகள் அனைத்துக்கும் அடைவே நீங்கள் பதில் கூறி முடித்தபின்பு நீங்கள் நம்மைக் குறித்துக் கேள்வி கேட்கலாம். நாம் பதில் கூற ஸித்தமாயிருக்கிறோம். நமது கேள்விகளுக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் படிப்பவர்களுக்குப் புரியும் வண்ணம் பதில் கூற இயலாமையாலே, கடந்த எட்டு மாதங்களாக பதில்களை இழுத்தடித்து விதண்டாவாதங்களையே செய்து கொண்டும் பெரும்பாலான கேள்விகளுக்குப் பதிலளிக்காமலும், நாம் ப்ரமாணங்களை மேற்கோள்காட்டி உங்கள் வாதங்களுக்குக் கூறும் பதில்களைக் கருத்தில் கொள்ளாமலும் நம்மைக்குறித்துக் கேள்விகள் கேட்

http://acharya.org

டும் விவாதத்தைத் திசை திருப்பி விடப்பார்க்கிறீர்கள் நீங்கள். நம்முடைய ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தை முழுவதும் பார்த்தவர்களுக்கு இது நன்கு விளங்கும். உங்கள்வாசகர்கள் அதைப் பார்க்கவிடாமல் செய்கிறீர்கள்.

நீங்கள் இவ்விஷயத்தில் மிகவும் ஆர்ப்பாட்டம் செய்வதால், அப்யுபகம்யவாதரீதியில், இப்பாராவை இப்போதே எழுதுகிறோம். ஸுதர்சனர் பதில் 12 வது ஶதகத்தின் முன்னுரையில் நாம் எழுதியது அநவதாநத்தால் (கவனக் குறைவால்) என்றே கொள்க. அதனால் பஞ்சம பக்ஷமே பிராட்டியைப் பற்றி எம்பெருமானார் பட்டர், நஞ்சீயர், தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் கைக்கொண்டது என்னும் உங்கள் பகற்கனவு நனவாகிவிடுமா? பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட பற்பல நூல்களை எழுதி அவற்றுக்குப் பல பதிப்புகளும் வெளியிட்டு வைணவவுலகம் முழுவதும் பரவிவிட்டிருக்கும் நம்முடைய எழுத்துக்களில் சிலவிடங்களில் தவறு நேர்ந்திருக்கிறது என்பதைப் பிறர் சுட்டிக்காட்டினால் அதைத்திருத்திக்கொண்டிருக்கிறோம். அப்படியே இவ்விஷயத்திலும் நமது வாக்யத்தைத் திருத்திப் பிழைதிருத்தம் வெளியிட ஸித்தமாயிருக்கிறோம். நமது ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷமத தூஷணியிலும் ஸ்ரீபாஷ்யம் தேசிக ஸ்ரீஸூக்திகள் முதலானவற்றுக்கு மாறாக நீங்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் எழுதியிருப்பதை எடுத்துக்காட்டியிருக்கிறோம். அவற்றை நீங்கள் திருத்திக்கொள்ளப் போவதில்லை. ஆயினும், மனஸ்ஸாக்ஷியிருந்தால் "பஞ்சம பக்ஷமத தூஷணி" என்னும் ஒரு நூல் ப்ரியாவின் வாதங்களுக்கு மறுப்பாக நம்மால் 8-5-98 அன்று வெளியிடப்படவிருக்கிறது என்றும், நமக்கு ரூ 1-00 தபால் கூலிக்காக அனுப்பும் 'ப்ரியா' வாசகர்களுக்கு இந்நூல் இலவசமாகக் கிடைக்கும் என்றும் ஓர் அறிவிப்பை அடுத்த 'ப்ரியா'வில் வெளியிடுங்கள். இதையும் செய்யமறுத்தால் 'மனஸ்ஸாக்ஷியே இல்லாதவர்கள் நீங்கள்' என்று நடுநிலையாளர்கள் தீர்ப்பளிப்பார்கள். 8-5-98 அன்று 'ப்ரியா' வுக்கு இதை அனுப்புவோம்.

http://acharya.org

ப்ரியா பங்குனி அவபோதனம்

5. ஸ்ரீவிஷ்ணு புராண வ்யாக்யானம் விஷ்ணு சித்தீயம் காளயுக்தி வருஷத்தில் தெலுங்கு லிபியில் ஸ்மார்த்த பண்டிதர்கள் பரிசோதித்து அச்சிடப்பட்டுள்ளது. அதில் க்ரந்தலிபிப்பதிப்பில் உள்ளது போலவே பாடம்காண்கிறது

காளயுக்திஞ்எண்பது வருடங்களுக்கு முன்ஞல்வந்தது. உங்களுடைய க்ரந்த லிபிப்பதிப்பு 1910 ல் அச்சிடப்பட்டுள்ளது. அதற்குப் பிற்பட்ட தெலுங்கு லிபிட்பதிப்பு இந்த க்ரந்தலிபிப்பதிப்பையே மூலமாகக் கொண்டது என்று இதிலிருந்து தேறுகிறது. இதில் அஹோபில மடத்தாரால நீக்கப்பட்ட வாக்யம் பல நூற்ருண்டுகளுக்குமுற்பட்ட வாதிகேஸரிஜீயரின் ரஹஸ்யத்ரய காரிகாவளியிலும், ஈட்டின் [5-6-11] அரும்பதவுரைகளிலும் மேற்கோளாகக்காட்டப்பட்டுள்ளது என்பதை ஸ்ரீதத்வஸர்வஸ்வம் 109–113 பக்கங்களில் விரிவாக எடுத்துக்காட்டி விளக்கியிருக்கிருேம். இதற்கு எந்த பதிலேயும் சொல்லாமல் தெலுங்கு எழுத்துப் பதிப்பைக்காட்டுவது முற்றிலும் பயனற்றது.

ப்ரியா – சித்திரை ப்ரியா விளக்கம்

6. இந்த மிதுநமே ஶேஷி என்பதை நீங்களும் இசைந்துள்ளீர்கள். இப்போது உங்கள் முதல் கேள்வியை உங்களைக் குறித்தே கேட்டுக்கொள்ளலாம்.

“பிராட்டியுள்ளிட்ட அனைவர்க்கும் ஶேஷியாய் வ்யாபகனுயிருக்கும் எம்பெருமான் ஸர்வ ஶேஷியாய், ஸர்வ வ்யாபகனுயிருக்கையாலே ப்ரஹ்மமாகிருன். எம்பெருமானைத்தவிர மற்றவர்களுக்கே ஶேஷிணியாய் எம்பெருமானை வியாபித்து நியமிக்க இயலாத பிராட்டி ப்ரஹ்மமோ, துல்யேஶ்வரியோ ஆக முடியாது” என்று நாங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபிக்கிருேம். ஆகையால், உங்கள் பக்ஷத்தைத் தகர்க்கும் முதல் கேள்வி எங்களுக்கு பூாதகமாகாது.

http://acharya.org

ப்ரியா சித்திரை தீபிகை

7. எங்கள் ஸம்ப்ரதாயத்தில் பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தி உண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் "பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தி கிடையாது; அவள் தன்னுடைய தர்மபூதஜ்ஞானத்தினால் தான் உலகத்தில் வ்யாபித்துள்ளாள்" என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதேசிகன் தம் க்ரந்தங்களில் பிராட்டி உலகை ஸ்வரூபத்தால் வ்யாபித்திருக்கிறாள் என்று அருளியிருக்கிறார் என்பது உண்மையே; அது போலவே எம்பெருமான் அப்பிராட்டியையும் வியாபித்து நியமிக்கிறான் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். பிராட்டி எம்பெருமானை வியாபித்து நியமிக்கிறாள் என்பதை ஏற்கவில்லை. நம்முடைய பஞ்சமபக்ஷாபாததூஷணியில் பலபல தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி இதை நிரூபித்திருக்கிறோம். 'தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் பிராட்டி தர்மபூதஜ்ஞானத்தினால் தான் உலகை வியாபித்துள்ளாள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது" என்று நீங்கள் எழுதுவதும் தவறு. பிராட்டி அணுவாயிருந்தபோதிலும் அகடிதகடநாசக்தியால் பகவத் ஸ்வரூபம் முழுவதும் தன் ஸ்வரூபத்தாலேயே வியாபித்திருக்கிறாள் என்று, பரந்த ரஹஸ்யத்தில் பெரியவாச்சான் பிள்ளையும், சதுஃஶ்லோகீ வ்யாக்யானத்தில் நாயனாராச்சான் பிள்ளையும் விரிவாக எடுத்துக்காட்டியிருப்பதையும், தேசிகன் சதுஃஶ்லோகீ பாஷ்யத்தில் இதையே முதல் பக்ஷமாகக் காட்டிக்கண்டிக்கிறார் என்பதையும் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், எமது சது:ஶ்லோகீ விரிவுரை முன்னுரையிலும் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளோம். தேசிகனின் திருவுள்ளத்தையும், தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தையும் உள்ளபடி உணராமலே நீங்கள் வாதம் செய்யப் புகுந்தது விசித்திரமாயுள்ளது.

http://acharya.org

ப்ரியா சித்திரை விளக்கம் (8 முதல் 12 வரை)

8. "பல வேதவாக்யங்கள் ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வ விஜ்ஞாநதையை (ஒன்றை அறிந்தால் எல்லாம் அறிந்ததாவதை) முழங்கியிருக்க, மிதுனவிஜ்ஞானத்தால் ஸர்வ விஜ்ஞானம் என்பது எப்படிப் பொருந்தும்?" என்பது (ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பக்கம் 54) உங்கள் இரண்டாவது கேள்வி. இதற்கு எங்கள் பதில்—ஏக ஶப்தம் 'ஒன்று' என்ற பொருளைக் குறிக்கவில்லை. உபாதான காரணமாயிருக்கும் வஸ்துவைக்குறிக்கிறது. பிராட்டிக்கும் உபாதானகாரணத்வம் உண்டு. பிராட்டி எம்பெருமான் இருவரும் சேர்ந்து தான் உபாதானகாரணம். பிராட்டி விசேஷணம்தானே. இவளை விசேஷணமாகக் கொண்ட எம்பெருமான் ஒருவன் தானே! ஆகையால் இவ்விருவரையும் ஏகஶப்தத்தாலே குறிக்கலாம்.

"நிமித்தம், உபாதானம் ஸஹகாரி ஆகிய மூவகைக்காரணமாகவும் இருக்கும் ப்ரஹ்மம் ஒன்றே; மற்றவையனைத்தும் அதன் விஶேஷணம் அல்லது ப்ரகாரமே" என்றே ஸகல ப்ரமாணங்களும் பேசுகின்றன. பூர்வாசார்யர்களும் அவ்வண்ணமே நிர்ணயித்துள்ளனர். பிராட்டி உபாதானகாரணம் என்று ஒரு பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியிலும் இல்லை. ஏக ஶப்தம் 'ஒன்று' என்ற பொருளைக்குறிக்கவில்லை என்று வடமொழியறிந்த சிறுவனும் கூறமாட்டான். நீங்கள் கூறு கிறீர்கள். உடனே அதற்கு நேர் மாருக இருவரும் ஒன்று தான் என்றும் சாதிக்கிறீர்கள்! என்னே உங்களுடைய முரண்பட்ட பேச்சு!

9. ஈஶ்வரத்வம் ப்ரஹ்மத்வம் முதலான பெருமைகளைக் கொண்டவனாயினும், பிராட்டி எம்பெருமானுக்கு விஶேஷணம் தானே! இவளை விஶேஷணமாகக் கொண்ட எம்பெருமான் ஒருவன் தானே! ஆகையால் 'ஒருவனே தேவன்' என்னும் ப்ரமாணங்கள் முரண்படமாட்டா.

பிராட்டி எம்பெருமானுக்கு வெறும் விஶேஷணம் மட்டுமல்ல. அவளால் வியாபிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுத் தாங்கப்படும் சரீரமாகவுமிருப்பவள் — என்று நீங்களே ஒப்புக்

http://acharya.org

கொள்கிறீர்கள். அத்தகையவளுக்கு எல்லையற்ற பெருமை பெற்றதாயிருக்கையாகிற ப்₃ரஹ்மத்வம் உண்டு என்று திருடபித்திருப்பி நீங்கள் கூறுவது 'பால் கருமை நிறம்' என்று சாதிப்பதை ஒக்கும்.

10. நிரதிஶய ப்₃ருஹத்த்வம் ஶரீரமாய், பரதந்த்ரையாய் இருக்கும் பிராட்டிக்கு எப்படிவரும்? என்று கேட்கிறீர்கள். ப்ரஹ்மருத்ராதிகளைவிடப் பிராட்டி பெரியவளாகையாலே நிரதிஶய ப்ருஹத்த்வம் அவளுக்கும் வரும்:

'நிரதிஶய' என்றால் 'தனக்கு மேல் ஒன்று இல்லாத' என்று பொருள். அத்தகையப்ருஹத்த்வம் பிராட்டிக்கும் ஆத்மாவான எம்பெருமான் ஒருவனுக்கே வரும். நீங்கள் சொல்லுகிறபடி பொருள் கொண்டால் ப்₃ரஹ்மருத்₃ராதி₃களைக் காட்டிலும் பெரியவர்களான நித்ய ஸூரிகளுக்கும் பரப்₃ரஹ்மத்வம் சொல்ல வேண்டி வரும்.

11. "ப்₃ருஹதீ ஶ்ரீரஸி" [தை-நா] என்னும் வாக்யம் பிராட்டியைக் கூறுகிறது என்று ஸ்தாபித்துள்ளார் ச்ருத ப்ரகாசிகாசார்யர் இதில் பிராட்டி ப்₃ரஹ்மம் என்று கூறப் பட்டுள்ளது.

மூலப்ரக்ருதி. ஜீவன் முதலான பல தத்துவங்கள் சில பெருமைகளிருப்பதையிட்டு ப்₃ரஹ்ம ஶப்₃த₃த்தாலேயே ஶாஸ்திரங்களில் பல இடங்களில் குறிக்கப்படுகின்றன. அவ் விடங்களிலெல்லாம் அவைதனக்குமேலில்லாத (நிரதிஶயமான பெருமையை உடையவையல்லாதவையாகையாலே பரப்₃ரஹ்மமல்ல என்றே ஸகல பூர்வாசார்யர்களும் நிர்வஹித்துள்ளனர். இங்கு எம்பெருமானால் வியாபிக்கப்பட்டு நியமிக்கப் படும் பிராட்டி ப்₃ருஹதீ' என்று சொல்லப்பட்டாலும் பர ப்₃ரஹ்மமாகமாட்டாள் என்பது சிறுவர்க்கும் விளங்கும். மெத்தப்படித்த உங்களுக்கு விளங்காது. வாதத்துக்குமருந்து உண்டு. பிடிவாதத்துக்கு ஏது மருந்து?

12. பஞ்சமபக்ஷ ஶததூஷணியைக் கண்டித்தனமாக எழுதியிருக்கிறீர்கள்.

அப்படியானால் அந்த விஷயத்தை ப்ரியா வாசகர்களும் புரிந்து கொள்ளும்படி 'அப்புத்தகம் தபாற்கூலிக்கு ரூ 1 அனுப்புகிறவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்'' என்று

http://acharya.org

நாம்கோரியபடிப்ரியாவில்அச்சிடலாமே. "அப்படி அச்சிட்டால் பலப்ரியாவாசகர்கள்இந்நூலைப்பெற்றுப்படித்துவிடுவார்கள். நீங்கள் கூறும் பஞ்சமபக்ஷம் 'நேமியால் பாறுபாறுபாக்கினன் பால்' [பெரிய திருவ33] என்கிற ரீதியில் சின்னபின்னமாக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து விடுவார்கள்" என்னும் பெரும்பயத்தாலேயே நாம் கோரியதைச் செய்ய மறுக்கிறீர்கள் என்பதே உண்மை, அப்படியில்லாவிடில் ஆனி ப்ரியாவில் 'ஸ்ரீதத்வஸர்வஸ்வம்' 'பஞ்சமபக்ஷ ஶததூஷணி' விலைவிபரம் பற்றிய அறிவிப்பை வெளியிடுங்கள்.

ப்ரியா —ஈச்வர தை முதல் பஹுதான்ய வைகாசி வரை தீபிகை

13. லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டியே ஜகத்காரணபூதை என்று பலவிடங்களில் சொல்லப்படுகிறது; விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலும் அப்படியே, பல ச்லோகங்களைக் கொடுத்திருக்கிறோம். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

லக்ஷ்மீதந்த்ரத்தில் இவர்கள் மேற்கோளாகக்காட்டும் ஐந்தாம் அத்தியாயத்தில் லக்ஷ்மி ஸ்ருஷ்டிக்கும் க்ரமம் விவரிக்கப்படுகிறது. ரஜோகுணமுடைய லக்ஷ்மியினால ப்ரத்யும்னனின் அம்ஶமாகப்பிரமனும் ஸ்ரீதேவியும படைக்கப்பட்டதாகவும், தமோகுணமுடைய லக்ஷ்மியினால் ஸங்கர்ஷணனின் அம்ஶமாக ருத்ரனும் வேதவித்யாரூபிணியான ஸரஸ்வதியும் படைக்கப்பட்டதாகவும், ஸத்வகுணமுடைய லக்ஷ்மியினால் ப்ரத்யும்னனின் அம்சமாக விஷ்ணுவும் கௌரியும் படைக்கப்பட்டதாகவும் பிறகு லக்ஷ்மியின் ஆஜ்ஞையினால் ப்ரஹ்மாவும் ஸரஸ்வதியும், ருத்ரனும் கௌரியும், வாஸுதேவனும் ஸ்ரீதேவியும் தம்பதிகளாக ஆனதாகவும சொல்லப்படுகிறது. அதற்கு மேல் மும்மூர்த்திகளுக்கும மேற்பட்ட லக்ஷ்மி உலகைப்படைத்ததாகச் சொல்லப்படுகிறது. இதை இவர்கள் ஒப்புக்கொள்வதானால் 'மும்மூர்த்திகளையும் படைத்தவள் மஹாலக்ஷ்மீ' என்னும வைஷ்ணவஶாக்த மதத்தை இவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அறிவிக்கவேண்டும்.

விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலிருந்து பல ஶ்லோகங்களை எடுக்கிறார்கள். அத்தியாய ஶ்லோகஎண்களைக் குறிக்கவில்லை. 'அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா" என்னும் பூர்வாசார்யர்கள் மேற்கோள் காட்டும் ஶ்லோகத்தில் "உபயாத்மிகா" என்னும் பதத்திற்கு "உபௌ ஆத்மாநௌ

யஸ்யா:'' என்று பூர்வர்கள் விக்ரஹம் காட்டியுள்ளார்கள் என்றும், இதிலிருந்து "விபூதிக்குப் பிராட்டி எம்பெருமான் ஆகிய இருவருமே ஆத்மாவாக இருக்கிறார்கள்'' என்று தேறுகிறது என்றும் எழுதுகிறார்கள். "உபயாத்மிகா' என்பதற்கு 'இருவரையும் ஆத்மாவாகக் கொண்டது'' என்று பொருள் கொண்டுவிட்டால், ஆத்மாவான இருவருக்கும் சரீரமான விபூதி சேஷம் என்பது தன்னடையே தேறிவிடுமாகையால், அதை ''அஸ்யா மம ச சேஷம்'' என்று தனியாகக் கூறுவது புநருக்தியாகும். ஆகையால், "விபூதிருபயாத்மிகா'' என்பது நித்யவிபூதி, லீலாவிபூதி ஆகிய இரு விபூதிகளைச் சொல்லுவதாகவே கொள்ளவேண்டும். மேலும் விபூதிக்கு இருவரும் ஆத்மாக்கள் என்பது விசிஷ்டாத்வைதிகள் ஏற்கத்தக்கதல்ல; விசிஷ்டாத்வைதிகளை ஏற்கக் கூடியது நிற்க; விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் பத்தாம் அத்தியாயத்தில் 115—வது ச்லோகம்—

யோऽஸௌ விஷ்வக்ஸேந இத்யுக்த: ஸோ ஹி நாராயண: ஸ்ம்ருத: |
வாஸுதேவமயத்வாச்ச வ்யாப்தத்வாந் மஹாமுநே ||
நைவ ஜாநந்தி தத்பேதம் முநயஸ் தத்வதர்சிந:''

[விஷ்வக்ஸேநர் எனப்படுபவர் நாராயணனேயாவர். வாஸுதேவமயராயிருக்கையாலும் வாஸுதேவனால் வியாபிக்கப்பட்டிருக்கையாலும் தத்வதர்சிகளான முனிவர்கள் இருவருக்கும் பேதத்தை அறிவதேயில்லை.] என்று உள்ளது. இத்தகைய இடங்களிலெல்லாம் எம்பெருமான் ஆத்மாவாகையாலே அபேதம் சொல்லப்படுகிறது என்றே கொள்ளவேண்டும். பிராட்டி விஷயத்திலும் ஸ்வதந்த்ர காரணமாக அவளைச் சொல்லுமிடங்களை இப்படியே நிர்வஹிக்கவேண்டும். தேசிகன் ஸம்ஹிதையிலுள்ள இத்தகைய வசனங்களை இப்படியே நிர்வகித்துள்ளார் என்பதை ஸ்ரீதத்வஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ மத தூஷணியிலும் பல தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி நிரூபித்திருக்கிறோம். பிராட்டி விஷயத்தில் இதை மீறினால், எம்பெருமானோடு அபின்னராகச் சொல்லப்படும் விஷ்வக்ஸேநர் ஸுதர்சனர் முதலானோரும் பரப்ரஹ்மம் என்று கொள்ள வேண்டிவரும். அப்போது விசிஷ்டாத்வைதச் ஷண்மதத்தைப் புகவிட்ட அத்வைதம் போலே சிதம்பரமாகிவிடும்.

http://acharya.org

ப்ரியாவின் படுதோல்வியும் பொய்யுரையும்

[பஹுதான்ய ஆனி ப்ரியா 18—6—98 அன்று கிடைத்த பிறகு இது எழுதப்படுகிறது.]

வைகாசி மாதம் வெளிவந்த ஸுதர்சனர் பதில் 12 வது கேள்வி பதிலில்—இவர்களால் மறுக்கப்படும் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷ ஶத தூஷணீ என்னும் நமது நூல்களை ப்ரியா வாசகர்களும் பார்த்து உண்மையைப் புரிந்து கொள்ளலாம்படி (200 பக்கமுள்ள) ஸர்வஸ்வம் ரூபாய் முப்பது விலையிலும், (62 பக்கமுள்ள) ஶத தூஷணி இலவசமாகவும் ப்ரியா வாசகர்களுக்கு அனுப்பப்படும் என்னும் அறிவிப்பை ஆனி ப்ரியாவில் வெளியிடும்படி நாம் நாவல் (சவால்) இட்டு அறைகூவியிருந்தோம். அப்படி வெளியிட்டால் இவர்களுடைய வாதங்கள் விதண்டாவாதங்களே என்பதை ப்ரியா வாசகர்களும் புரிந்து கொண்டு விடுவார்கள் என்று பயந்து ஆனி ப்ரியாவில் இவ்விபரங்களை இவர்கள் வெளியிட வில்லை. மாறாக, அபத்தமாகவும் எவர்க்கும் எதுவும் புரியாமலுமே எழுதக்கற்ற ஓர் அரைகுறை வித்வானால் எழுதப் பெற்றவையாய், ஸர்வஸ்வத்தாலும் ஶததூஷணியாலும்பாறு பாறாக்கப்பட்ட சில சிறுசுவடிகளைப் பாராட்டி எழுதியுள்ளனர். இதிலிருந்து ப்ரியாவின் படுதோல்வி அவர்களாலேயே பறை சாற்றப்பட்டதாகிறது. ஸ்ரீதத்வஸர்வஸ்வமும், ஶததூஷணீயும் எப்படி அமைந்துள்ளன என்பதை நடுநிலைநின்று விமர்சித்துள்ள ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் K ஜகந்நாதன் (ஆடிட்டர் 112/9 ஸீவியூ அபார்ட்மெண்ட்ஸ் 4-வது தெரு, கற்பகம் அவின்யூ, சென்னை-28) என்னும் ஸ்வாமியின் இருகடிதங்களை வெளியிடுகிறோம். இந்தஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயக்ரந்தங்களில், குறிப்பாக ஸ்ரீதேசிக க்ரந்தங்களில் ஆழ்ந்த பரிசயம் உள்ளவர் என்பது ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தில் ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்னும் தலைப்பில் முதல் தீர்ப்பாக வெளிவந்துள்ள இவரது கட்டுரையிலிருந்தே

http://acharya.org

அனைவர்க்கும் விளங்கும். இது தவிர, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா விலும், நா. வரதாசார்யர் முதலானவர்களாலும் எழுதப்படும் விஷயங்கள் அடியோடு பொருந்தாதவை என்று பல கட்டுரைகள் எழுதி அவ்வப்போது அவர்களுக்கே அனுப்பிவரும் நேர்மையாளர் இவர் என்பதையும்குறிப்பிட்டு, கடிதங்களைத் தருகிறோம்.

கடிதம் –1 (29–5–98)

ஸ்ரீ உ. வே புத்தூர் ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் ஜகந்நாதன் அனேக தண்டன் சமர்ப்பித்துச் செய்யும் விஜ்ஞாபனம். தேவரீர் எழுதிய 28-5-98 தேதியிட்ட கார்டு கிடைக்கப்பெற்று விஷயங்களை அறிந்தேன். இம்மாத ஸுதர்சனர் பதில் மிகவும் சுருக்கமாகவும் அதே நேரம் அழுத்தம் திருத்தமாகவும் உள்ளது 'ஏக ஶப்தம் ஒன்று என்கிற பொருளைக் குறிக்கவில்லை என்று வடமொழி நிந்த சிறுவனும் கூறமாட்டான்' என்று தக்கபதில் கொடுத்துள்ளீர்கள். விளக்கம் ப்ரியாவில் யார் எழுதுகிறார்கள் என்பது தெரியவில்லை. தங்களது அஜ்ஞானத்தை உலகறிய வெளிக்காட்டிக் கொள்கின்றனர் என்பதை அவர்களது எழுத்துக்களே நிருபித்துத்தருகின்றன. தேவரீர் கூறியிருப்பதுபோல் அவர்கள் "பஞ்சமடக்ஷ ஶத தூஷணி" புத்தக அறிவிப்பை வெளியிட்டால் தேசிக ஸம்ப்ரதாயத்திலும் பலர் உண்மையைப் புரிந்துகொண்டு விடுவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. தேசிக ஸம்ப்ரதாயத்தில் இருப்பவர்களும் தேவரீருடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்வதை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். ஆதலால் ந்ருஸிம்ஹப்ரியா தேவரீருடைய நூல்பற்றி வெளியிட்டால், ந்ருஸிம்ஹப்ரியா தனது போக்கைப் பிடிவாதமாக மாற்றிக்கொள்ளாவிட்டாலும் உபய ஸம்ப்ரதாயத்திலும் பலர் தேவரீருடைய நூல் மூலமாக உண்மையான, தெளிவான, சஞ்சலத்திற்கு இடமில்லாத ஜ்ஞானத்தைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

ஸ்ரீதத்வ விஷயத்தில் உபய ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்தவர்களும் தேவரீருடைய ஸுதர்சனர்-பதில் பகுதி மூலமாகத் தெளிவடைவார்கள் என்பது உறுதி ஆதலால் ந்ருஸிம்ஹப்ரியா தனது கருத்தை மாற்றிக் கொள்ளாவிட்டாலும் நமக்கு அதனால் எவ்வித நஷ்டமுமில்லை. உதாரணமாக 2வது கேள்விக்கு அவர்கள் அளித்துள்ள விளக்கத்தை உண்மையில் தேசிக ஸம்ப்ரதாயத்தைச்

http://acharya.org

சேர்ந்த வித்வான்களின் மனஸ்ஸாக்ஷி ஒருகாலும் ஏற்றுக்கொள்ளாது இதற்கு உதாரணம் இந்த விவாதத்தைத் தொடங்கக்காரணமாயிருந்த நாவல்பாக்கம் உடதாசார்யவரையே எடுத்துக் கொள்ளலாம் அவரும் பிராட்டிக்கு ப்ரஹ்மத்வத்தை இசையவில்லை. அது போதும் நமது வெற்றிக்கு! [ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு:— பிராட்டி ப்ரஹ்மம் என்னும் பரம அபத்தவாதத்தை ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜநமெழுதிய ஸாக்ஷாத்ஸ்வாமியும், ந்யாயஸித்தாஞ்ஜனவுரை எழுதிய பட்டப்பா ஸ்வாமியும் ஏற்கவில்லை.]

'ஏக' ஶப்தத்திற்கு மனம்போனபடி "உபாதான வஸ்துவைச் சொல்லுகிறது" என்று பொருள் எழுதுவது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதை ஒக்கும். இவர்களது இச்செயல்,

"வாச்யார்த்தா: நியதா: ஸர்வே வாங்மூலா:வாக்விநி:ஸ்ருதா:|
தாம் து ய: ஸ்தேநயேத் வாச்யம் ஸ ஸர்வஸ்தேயக்ருந்நர:||"
[மனு 4-256]

[எல்லாச்சொற்களுக்கும் பொருள் இன்னதென நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அப்பொருளும் சொல்லாலேயே வெளியிடப்படுகிறது. தன் விருப்பப்படி பொருளுக்கும் சொல்லிற்கும் உள்ள தொடர்பை மாற்றுபவன் பெருந்திருடன்] என்ற மனுஸ்ம்ருதி வசனத்திற்கே இலக்காகிறது.

தேவரீருக்கு அளித்துள்ள விருது தகுந்த பாத்திரத்துக்கு அளித்துள்ள விருதேயாகும்.

வைணவத் தொண்டுதொடர்ந்து தொடர தேவரீருக்கு எம்பெருமான் தக்க வலிமையைத்தரப் பிரார்த்தித்துக் கடிதத்தைப்பூர்த்தி செய்கிறேன்.

தாஸன், கி. ஜகந்நாதன்.

கடிதம்—2 (6-6-98)

பஞ்சம பக்ஷ ஶத தூஷணி புத்தகம் அனுப்பியது குறித்து மிக்க சந்தோஷம். அடியேனது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். சத தூஷணியைப் பார்த்த பின்பு ப்ரியாதனது பிடிவாதமான கருத்துகளை மாற்றிக்கொள்ளாவிட்டாலும் அநாவசியமான நிந்தனைகளையாவது அவசியம் குறைத்துக்கொள்ளவேண்டும். தேவரீருடைய பஞ்சமபக்ஷ சத தூஷணி நூல் முழுக்க முழுக்கப் பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள் அனைத்துக்கும் சிறிதுகூட முரண்படாத வகையில் அமைந்துள்ளது. நடுநிலை நிற்கும் உபய ஸம்ப்ரதாயத்திலும் பலர் இந்நாலின் கருத்துக்களை ஆதரிப்பார்கள் என்பதில்

http://acharya.org

சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் ஸம்ப்ரதாய சர்ச்சைக்கு இடமளிக்காமல் விசிஷ்டாத்வைதத்தின் தனித் தன்மைக்கே இந்நூல் முக்யத்வம் அளிக்கிறது என்பது யாராலும் மறுக்க முடியாது. தேவரீருடைய கைவண்ணத்தொண்டு தொடரவும் அதற்கான பூர்ண தேஹ ஆரோக்கியத்தினையும் உறுதியையும் தரவும் திவ்யதம்பதிகளைப் பிரார்த்தித்து இக்கடிதத்தைப் பூர்த்தி செய்கிறேன்.

தாஸன், கி. ஜகந்நாதன்

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

சத தூஷணியைப் பார்த்த பின்பும் ப்ரியா அடியேனைக் குறித்து வசவுகளை அளவு கடந்து பொழிகின்றது. ஆனி ப்ரியாவில் பலமுறை நமக்குசாஸ்த்ர ஜ்ஞாநமில்லை என்று எழுதி 'மூர்க்கர்' முதலான கீழ்மை வசவுகளையும் எழுதுகிறது. இவை கண்டு நாம் இவர்களைக் குறித்து இப்படி எழுதமாட்டோம். 'குற்றம் செய்தவர்கள் பக்கல்பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்' [365]. என்னும் ஸ்ரீவசநபூஷண ஸதுபதேசத்தையே பின்பற்றுவோம். தனது படுதோல்வியை மறைக்கவே ப்ரியா வசவுகளிலும் விதண்டாவாதங்களிலும் இறங்கி வாசகர்களைக் குழப்பி வருகிறது என்பது வெளிப்படை.

தனது தோல்வியை மறைக்க ஒரு பெரும்பொய்யையும் கூறி ப்ரியா வெற்றி பெறப்பார்க்கிறது. ஆனி ப்ரியா தீபிகையில் —"ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில இரண்டாம் அத்தியாயத்தில் "யுஜே வாம் ப்ரஹ்ம" என்னும் மந்திரத்தில் 'பிராட்டியும் எம்பெருமானும்சேர்ந்து ஒரு ப்ரஹ்மமே என்று சொல்லியிருப்பதாக எழுதப்பட்டுள்ளது. இது பெரும் பொய்யாகும் இரு சேதனர்கள் சேர்ந்து ஒரு ப்ரஹ்மமே என்று விசிஷ்டாத்வைதத்தின் அரிச்சுவடி படித்தவன் கூடச் சொல்லமாட்டான். வேதவாக்யம் அப்படிக் கூறுமா? இந்த வேதமந்திரத்தை முழுவதுப் எடுத்துப் பொருள் எழுதி, தான் சொன்னதை நிரூபிக்காமல் வெறும் பொய்யை எழுதி வாசகர்களை அஃது உண்மையென்று நம்பவைக்கப் பார்க்கிறது ப்ரியா. அடுத்த கேள்வி பதிலில் இந்த மந்திரத்தின் முழுவடிவத்தையும் பொருளையும் காட்டி, ப்ரியாவின் பொய்யுரையை உறுதிப் படுத்துவோம்.

http://acharya.org

ப்ரியா பஹுஸ்தாந்ய ஆனி தீபிகை

13. ஶ்வேதாஶ்வதர உபநிஷத்திலுள்ள ஒரு மந்த்ரத்தில் 'யுஜே வாம் ப்₃ரஹ்ம' நீங்கள் இருவரும் ப்ரஹ்மமே. உங்களைத் துதிகளோடு சேர்க்கிறோம். அதாவது உங்களைத்துதிக்கிறோம் என்று உள்ளது. ஆகப் பிராட்டியும் பெருமானும் சேர்ந்து ஒரு ப்ரஹ்மமே என்பது நன்கு விளங்குகிறது.

இந்தக் கூற்றுமுழுப்பொய்என்பது—அந்த முழுமந்திரத்தையும், தேசிக ஸம்ப்ரதாயஸ்தரான ரங்கராமானுஜ முனிவரின் பாஷ்யப்படி அதன் பொருளையும் அறிந்தால் தெளிவாக விளங்கும்.

யுஜே வாம் ப்₃ரஹ்ம பூர்வ்யம் நமோபி₄ர்
விஶ்லோக ஏது பத்₂யேவ ஸூரே: |
ஶ்ருண்வந்து விஶ்வே அம்ருதஸ்ய புத்ரா:
ஆ யே தா₄மாநி தி₃வ்யாநி தஸ்து₂:|| [2-5]

என்பது இம்மந்திரத்தின் முழுவடிவம். இதன் ரங்கராமாநுஜ பா₄ஷ்யம் பின்வருமாறு:—

"(யுஜே வாம்) இதி! தி₃வ்யஸ்தா₂நஸ்தி₂தா: ஸர்வே ப்₃ரஹ்ம புத்ரா: மத்ப்ரார்த்த₂நாம் ஶ்ருண்வந்து | (ஸூரே:) நித்யஸூரிகர்த்ருகா ஸ்துதி யதா₂த் அநபேதத்வேந (பத்₂யா)ஸ்துதி:|(வாம் பூர்வ்யம்) வ: பூர்வம் இத்யர்த்த₂:| வசநவ்யத்யய: சா₂ந்த₃ஸ:|| ஸா தாத்₃ருஶம)ப்₃ரஹ்) யதா₂ ப்ராப்நோதி, ஏவம் (யுஜே) யோகா₃ய—ப்₃ரஹ்மப்ராப்தயே இதி யாவத்—மயா க்ருத; (விஶ்லோக:) விவித₄: ஶ்லோக: ஸ்தோத்ரரூப: (ஏது) ப்ராப்நோது; நித்யஸூரிக்ருதாம் ஸ்துதிர் யதா₂ ப₄க₃வாந் அங்கீ₃கரோதி ஏவம் அங்கீ₁கரோது இத்யர்த்த₂:| ததர்ச யோக₃ ப்ரவ்ருத்தே: ப்ராக் ப₄க₃வத்ஸ்துதி: கர்த்தவ்யா இதி உக்தம் ப₄வதி||"
[(இந்த மந்திரத்தின் பிற்பாதியின் பொருள் பின்வருமாறு) தி₃வ்ய ஸ்தா₂நமாகிற பரமபதத்தில் எங்கும் விளங்குகிற மரணமற்ற பரமாத்மாவின் புத்திரர்களான நித்ய ஸூரிகள் என்னுடைய பிரார்த்தனையைக் கேட்கக்கடவர்கள். (முற்பாதியின் பொருள் பின்வருமாறு;—) (ஸூரே:) நித்யஸூரி

http://acharya.org

களுடைய (பத்யா) துதிக்கும் வழியைவிட்டு விலக்ஷணமான துதி (வாம் பூர்வ்யம்)—'வ: பூர்வம்' என்று கொள்ள வேண்டும். பன்மை மாறியிருப்பது சாந்தஸம். 'உங்களுக்கு முன்னோன' என்று பொருள். (ப்3ரஹ்ம) ப்3ரஹ்மத்தை நித்ய ஸூரிகளின் துதி எப்படி அடைகிறதோ அப்படியே (யுஜே) யோகத்தின் பொருட்டு; ப்3ரஹ்மத்தை அடைவதன் பொருட்டு என்று கருத்து. (நமோபி: விஸ்லோக:) என்னால் செய்யப்படும் நமஸ்ஸப்3கத்தை மிகுதியாகக்கொண்ட விதவிதமான ஸ்லோகமாகிற ஸ்தோத்ரம் (ஏது) அடையட்டும், 'நித்ய ஸூரிகள் செய்யும் துதியை எப்படி ப4கவான் அங்கீகரிக்கிறானோ அப்படியே என்னுடைய துதியையும் அங்கீகரிக்கட்டும்' என்று கருத்து. இதிலிருந்து யோகம் செய்வதற்கு முன் பகவானைத் துதிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டதாயிற்று.] இந்த மந்திரத்தில் பெரிய பிராட்டியைப்பற்றிய ப்ரஸ்தாவமே இல்லை. 'வாம்' என்னும் பதத்தை 'வ:' என்று வசநத்தை மாற்றிப் பொருள்கொண்டு நித்ய ஸூரிகளைக் குறிப்பதாகவே உரையிட்டார் ரங்கராமானுஜ முனிவர். ஆகையால் ப்ரியாவில் "வாம் ப்3ரஹ்ம" என்பதால், பெருமாளும் பிராட்டியும் ஒரே ப்3ரஹ்மம் என்று சொல்லுவதாகக் கூறியது பெரும் பொய் என்று தேறிற்று. இப்படிப் பச்சைப்பொய்யைச் சொல்லிவிட்டு, அதற்கு மேல் பல பக்கங்களில் ப்ரியா ஸாஸ்த்ர விசாரம் செய்துள்ளது வீணானது என்றும் விளங்குகிறது.

பஹுதான்ய ஆனி ப்ரியா—விளக்கம் (14 முதல் 16 வரை)

14 ஸ்ரீவிஷ்ணு புராணம் 1—8—18 எங்களாழ்வான் வ்யாக்யானத்தில் "தயோ: ஸர்வாத்மகத்வம்" என்று ஒரு வாக்யம் தொடங்குகிறது. இதில் ஒருதவறு இருக்கிறது. அதைச்சுட்டிக்காட்டி அதைத் திருத்தி அதற்கு அர்த்தத்தை நீங்கள் விளக்கவேண்டும்.

http://acharya.org

ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் பக்கம் 119, 120 ல் "தயோஸ் ஸர்வாத்மகத்வம்" என்னும் இந்த எங்களாழ்வான் ஸ்ரீஸூக்திக்குப் பொருளைக் காட்டியிருக்கிறோம். இப்பொழுது இந்த ஸ்ரீஸூக்தியில் தவறு இருப்பதாகத் தாம் ஊகிப்பதாக இவர் எழுதுகிறார். அதை நாம் காட்ட வேண்டுமென்று கட்டளையிடுகிறார். இவர் ஊகிப்பதை நாம் எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்? இதில் என்ன தவறு இருப்பதாக இவர் ஊகிக்கிறார் என்று எழுதினால் அது சரியா தவறா என்று நாம் விமர்சிக்கலாம். இவர் ஊகிப்பதை நாம் கண்டு பிடிக்கவேண்டும் என்று கட்டளையிடுவது முறையல்ல. ஸுதர்சனம் வைகாசி [606] இதழில் வெளியான 13 வது கேள்வி பதிலில்—"லக்ஷ்மீ தந்த்ரம் 5 ம் அத்தியாயத்தில், மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட மஹாலக்ஷ்மி அவர்களையும், உலகையும் படைத்ததாகச் சொல்லப்பட்டிருப்பதால அதைக்கொண்டு லக்ஷ்மிக்கு ஐச்வர்யாத்ரூபமாக காரணத்வம் சொல்லும் இவர்கள் வைஷ்ணவ சாக்தமதத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாக அறிவிக்கவேண்டும்" என்று நாம் எழுதியிருந்தோம். இவர்கள் அவசியம் பதிலளிக்க வேண்டிய இந்தக் கேள்விக்கு மஹாதாங்ய ஆனி ப்ரியாவில் எந்த பதிலுமில்லை. "ப்ரமாணமான லக்ஷ்மீ தந்த்ரத்தில் இவவாறு த்ரிமூர்த்தி உத்தீர்ணவாதம் ஏன் செய்யப்பட்டது?" என்று நம்முடைய அன்பர்கள் நம்மைக் கேட்கிறார்கள். நாம் அதற்கு ஒரு காரணத்தை ஊகித்து வைத்திருக்கிறோம். இவர்களைப் போல் நாம் ஊகித்திருப்பதை இவர்களைக் கண்டு பிடிக்கச் சொல்லாமல், நாமே அதை இப்போது இங்கு வெளியிடுகிறோம். அதாவது—"மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவளான பராசக்தியே மும்மூர்த்திகளையும் உலகனைத்தையும் படைத்தாள்—என்று வேதம் முதலான ப்ரமாணங்களுக்கு முரணாகக் கூறும் சைவ சாக்தர்களை ஈர்த்து வைஷ்ணவ சாக்தர்களாக்கி, அதற்குமேல் படிப்படியாக அவர்களை வைஷ்ணவர்கள் ஆக்கவேண்டும் என

http://acharya.org

னும் கருத்தாலேயே லக்ஷ்மீ தந்த்ரம் 5ம் அத்தியாயத்தில் மஹாலக்ஷ்மி மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவள் எனனும் வாதம் செய்யப்பட்டது" என்பது நம் ஊகம். லக்ஷ்மீ தந்த்ரத் தில் மஹாலக்ஷ்மி மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவள் என்று சொல்லப்படுவதற்கு சமாதானம் சொல்லும் பொறுப் பும் கடமையும் அந்த வசனங்களைக் கொண்டு பிராட்டிக்கு உபாதாந காரணத்வத்தை ஸாதிக்கும் இவர்களுக்கும் உண்டு. "சைவ சாக்தர்களை ஈர்ப்பதற்காகச் சொல்லப்பட்ட இந்த வசநங்களால் ஈர்க்கப்பட்டு சைவ சாக்தர்களாயிருந்த பல அத்வைதிகள் பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பின் விசிஷ் டாத்வைத மதத்திற்கு வந்து சேர்ந்தனர் என்றும், அவர்கள் மும்மூர்த்திகளைக் காட்டிலும் மேற்பட்டவள் மஹாலக்ஷ்மி என்று ஐந்தாம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் சொல்லப் பட்டிருப்பது விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதத்தையே வேரறுத்து விடுமாகையாலே, அதைக் கைவிட்டு, பெரு மாளும் பிராட்டியுமாகிற இருவருமே ஜகத்துக்கு மூவகைக் காரணமான ப்ரஹ்மம் என்றும், இருவரும் துல்யமான ஈஶ்வரர்கள் என்றும், சுமார் முந்நூறு வருடங்களுக்குள் ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜநம் முதலான கிரந்தங்களை எழுதத் தொடங்கினர்கள் என்றும் நம்முடைய ஊகம். இந்த ஊகத் தை இவர்கள் ஏற்கப் போவதில்லை. ஆயினும் 'லக்ஷ்மீ தந்த்ரம் ஐந்தாம் அத்தியாயத்தில் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட மஹாலக்ஷ்மி மும்மூர்த்திகளையும் உலகனைத்தை யும் படைத்தாள்' என்று எழுதியிருப்பதற்கு இவர்கள் சமாதானம் சொல்லியே தீரவேண்டும். பஹுதான்ய ஆடி ப்ரியாவில் இதைச் சொல்லுவார்களா? எதுவும் சொல்லாமல் இருந்தார்களானல் நம்முடைய ஊகமே சரியானது என்று நடுநிலையாளர்கள் முடிவு கட்டுவார்கள்.

http://acharya.org

15 ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் பக் 54 ல் ஸுதர்சனம் கேட்டுள்ள 3 வது கேள்வியில், "ஸ்ரீராமாயணம் ஸூர்யனுக்கு ஒளிபோலே பிராட்டி எம்பெருமானுக்கு விசேஷணமாயிருப்பவள் என்று முழங்கியிருக்க, இருவரும் அத்யந்த ஸமர் என்னும் ஐந்தாவது பக்ஷம் எப்படிப் பொருந்தும்?" என்று கேட்டிருக்கிறீர்கள். தாங்கள் பெருமாளையும் பிராட்டியையும் அத்யந்த ஸமர் என்று கூறவில்லையே. ஆகையால் எங்களுக்கு இக்கேள்வி பொருந்தாது.

நா. வ எழுதிய ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜந ஸங்க்ரஹத்தில் பிராட்டியும் பெருமாளும் அத்யந்தஸமர் என்று பல இடங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. அஹோபில மடம் ஆஸ்தான வித்வானான ஸ்ரீ உ வே E. S. V நரசிம்மாசாரிய ஸ்வாமி ஸ்ரீதத்வஸர்வஸ்வம் பக் 39 முதல் 46 வரை எழுதியுள்ள "திருமகள் பற்றிய வாதங்கள்" என்னும் தம் கட்டுரையில், "இவர்களுள் நீசஉச்ச பாவமும் இல்லை" [பக் 42] முதலான பல இடங்களில் திவ்ய தம்பதிகளுக்குள் ஏற்றத்தாழ்வில்லை என்று எழுதியிருக்கிறார். அதன் அடிப்படையிலேயே இந்தக் கேள்வி எழுந்தது. இப்போது 'இருவரும் அத்யந்தஸமர் என்று நாங்கள் கூறவேயில்லை' என்று கூறுகிறீர்கள். ஆனால் ஆனிப்ரியா [பக் 165] விளக்கத்திலேயே "ஜகத்காரணத்வம் உபாயத்வம், உபேயத்வம் முதலானவற்றில் பிராட்டி எம்பெருமானுக்குத் துல்யை ஒத்தவள் ஆகிறாள்" என்றும் எழுதுகிறீர்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட வாதங்களினால் உங்களுடைய உண்மையான கொள்கை என்ன என்பது உங்களுடைய எழுத்துக்களிலிருந்து விளங்கவில்லையே.

16 லக்ஷ்மீ தந்த்ரம் (17—30, 31) எம்பெருமான் பிராட்டிக்கு ஆதாரம் என்று சொல்லியிருக்கும்போது அதை மறுக்கும் ஐந்தாவது பக்ஷம் எப்படிப் பொருந்தும் என்று கேட்டிருக்கிறீர்கள். [ஸ்ரீதத்வ 54] தேசிகன் காட்டிய ஐந்தாவது பக்ஷத்தில் இவ்விஷயம் மறுக்கப் படவேயில்லையே; ஆகையால் இது இல்லாததைக் கூறிப்பழிப்பதேயாகும்.

தேசிகனுடைய 5வது பக்ஷம் மிகச் சுருக்கமாக இரண்டே வாக்யங்கள் அடங்கியது. இது நம்முடைய விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம் ஐந்தாவது பாராவில் பொருளுடன் கொடுக்கப் பட்டுள்ளது. அதை ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனம் எழுதிய

http://acharya.org

ஸாக்ஷாத் ஸ்வாமி "பிராட்டி பகவானுக்கு சரீரமல்ல. பகவான் பிராட்டிக்கு ஆதாரமல்ல, தேவியை பகவான் நியமிக்க முடியாது" என்றெல்லாம் விளக்கியதை நா. வரதாசார்யர் ஸங்க்ரஹ நூலில் வெளிப்படுத்தினர். ஆஸ்தான வித்வானும் தமது கட்டுரையில் "இருவரும் விசேஷ்ய விசேஷண பாவமுள்ளவர்கள் என்பதால் ஆதாராதேயபாவத்தையோ சரீரசரீரிபாவத்தையோ கூறவேண்டியதில்லை" என்று எழுதியிருந்தார் [ஸ்ரீதத்வ பக் 42]. அதை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டதே எமது கேள்வி. தற்போது உங்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் முரணாகப் பேசிக்கொண்டு எங்கள் மீது குற்றம் காண்பது தவறு.

17. ஐந்தாவது கேள்வியில் [ஸ்ரீதத்வ பக் 54] ஆளவந்தார் எம்பெருமானார் முதலான பூர்வாசார்யர்களில் எவரும் ஒரு இடத்திலும் பிராட்டியை ப்ரஹ்ம சப்தத்தால் குறிப்பிடவில்லை. எனவே இருவரும் ப்ரஹ்மம் என்னும் 5-வது பக்ஷம் எப்படிப் பொருந்தும் என்று கேட்டிருக்கிறீர்கள். பூர்வாசார்யர்கள் ஸ்பஷ்டமாக அப்படிக் குறிப்பிடவில்லையாயினும் அவர்கள் அருளிய பலக்ரந்தங்களிலிருந்து பிராட்டியும் ப்ரஹ்மந்தான் என நியாயங்களால் ஸ்பஷ்டமாக அறிய முடிகிறது. தேசிகன் சதுஃச்லோகியின் ஆரம்பத்தில் அருளியுள்ள 'ஸ்வஸேஷாஸேஷார்த்த:' என்று தொடங்கும் ச்லோகத்தில் ப்ரஹ்மஸூத்ரத்தின் நாலு அத்தியாயத்திலும் ப்ரஹ்மத்திற்கு உள்ளதாகக் கூறப்பட்ட பெருமைகள் பிராட்டிக்கும் உண்டு என்று காட்டியிருக்கையால் தேசிகன் அவளையும் ப்ரஹ்மமாகவே கருதினார் என்று விளங்குகிறது.

அந்த ச்லோகத்தில் 'ய: சாரீரகமித: தத் ஸ்த்ரீசிம் ச்ரியம் அதிஷ்டௌதி" [எந்த எம்பெருமான் ப்ரஹ்மஸூத்ரத்தின் நாலு அத்தியாயங்களிலும் நாலு பெருமைகளை உடையவனாகப் பேசப்பட்டானோ அவனுடைய துணைவியான ஸ்ரீதேவியை யாமுன முனிவர் துதிக்கிறார்.] என்றே அருளியுள்ளார் ஸ்ரீதேசிகன். இவ்விஷயம் "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா? என்னும் (ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலுள்ள) நம் கட்டுரையில் 25 வது பாராவில்[பக் 28. 29] விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உங்களுடைய இந்த வாதம் பொய்யானதாகும். பூர்வாசாரியர்கள் ப்ரஹ்மசப்தத்தால் பிராட்டியைக் குறிக்கவில்லை என்பதோடன்றியில், ப்ரஹ்மமா

http://acharya.org

யிருப்பதற்கு நேர்மாறான ப்₃ரஹ்ம ஶரீரத்வம் (ப்₃ரஹ்மத்தால் வ்யாபிக்கப்பட்டு தரிக்கப்பட்டுநியமிக்கப்படுபவளாயிருக்கை) பிராட்டியிடம் உள்ளதாகவே அருளியுள்ளார்கள் என்பதை நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். ஆக, பிராட்டியும் பரப்₃ரஹ்மம் என்பது பொருந்தாது.

ப்ரிய ஶ வைகாசி, ஆனி தீபிகை—

18. எங்களாழ்வான் சிஷ்யரான நடாதூர் அம்மாள் தம்முடைய 'ப்ரபந்த பாரிஜாதம்' என்னும் நூலில் லக்ஷ்மீ தந்த்ரத்தை ஆதாரம் காட்டி 'பரப்ரஹ்மம் லக்ஷ்மீ நாராயண ரூபமாயிருக்கிறது" என்று நிர்ணயித்துள்ளார். ஆகையால் இருவரும் ப்₃ரஹ்மங்களே.

நடாதூர் அம்மாளுடைய தத்வஸாரத்தை தேசிகன் மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசார்யர்கள் அனைவரும் மேற்கோள் காட்டியிருப்பதைப்போலே, இந்த ப்ரபந்த பாரிஜாதத்திலிருந்து ஒருதனுக்கைக்கூட எந்தப் பூர்வாசார்யரும் மேற்கோளாகக்காட்டவில்லை. ஆகையால் இந்நூல் பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் எழுதப்பட்ட நூலாகவே இருக்கவேண்டும் என்பது தெளிவு. இதை ஸித்தோபாய விஜயம் முதலான நம் நூல்களில் பல வருடங்களுக்கு முன்பே காட்டியிருக்கிறோம்.

ப்ரிய ஶ ஆனி தீபிகை—

19. "ப்₃ரஹ்மம் என்ற ஶப்₃த₃ம் ஒருபொருளை அறிவிக்க-போதிக்க, ப்ரவ்ருத்தித்தால்—முற்பட்டால், அது நிரதிஶய ப்₃ருஹத்த்வம், நிரதிஶய ப்ரஹ்மணத்வம்—ஶ்ரிய:பதித்வம் ஆகிய இவற்றைநிமித்தமாகக் கொண்டுதான் ப்ரவ்ருத்திக்கும்-முற்படும். நிரதிஶய ப்ரஹ்மமும் நிரதிஶய ப்₃ரஹ்மணமுமாய், ஶ்ரிய:பதியாயும் இருக்கிற பொருளைத்தான் ப்ரஹ்ம ஶப்தம் குறிக்கும் என்கிறபடி..... இப்போது ஶ்ரிய:பதித்வமும் ப்ரஹ்ம ஶப்தத்திற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் என்று ஏற்பட்டுவிட்டதால் அதுவும் ப்₃ரஹ்மஶப்தத்தின் பொருள்தான். ஶ்ரிய:பதித்வம என்பது பிராட்டிக்குப் பதியாயிருக்கும் தன்மை அதாவது பதி என்ற ஸம்பந்தத்தினால் ஶ்ரியைப் பெற்றிருத்தலேயாகும். அதாவது ஸ்ரீ என்பதே

http://acharya.org

யாகும். ப்ரவ்ருத்திநிமித்தமும் அந்தப்பதத்தின் அர்த்தமே தான். ஆகையால் ஸ்ரீயும் ப்ரஹ்மஶப்தத்தின் பொருள் என் பதில் எந்தவிதமான பாதகமும் கிடையாது.

நிரதிஶய ப்ருஹத்த்வம் (தனக்குமேலில்லாத பெருமை உடையதாயிருக்கை) என்பது ப்ரஹ்ம ஶப்தத்திற்குப்ர வ்ருத்திநிமித்தம் என்பது உண்மையே. ஆனால் பிராட்டியையும் வியாபித்து தரித்து நியமிக்கும் எம்பெருமான் பிராட்டிக்கு மேற்பட்டவனாக இருக்கிறானே! ஆகையால் இந்த ப்ரவ்ருத்தி நிமித்தம் பிராட்டியிடம் பொருந்தாது. நிரதிஶய ப்ருப்ஹ ணத்வம் (பிறரைப் பெரிதாக்குவதிலும் தனக்குமேல் ஒருவர் இல்லாததாய் இருக்கை) என்பது ப்ரஹ்மஶப்தத்திற்கு ப்ர வ்ருத்திநிமித்தம் என்பது உண்மையே. ஆனால்ஜீவனுக்குமுக்தி யளித்துப் பெரிதாக்கும்போது எம்பெருமானைப் பிரார்த் தித்துப் புருஷகாரம் செய்கிறாள் பிராட்டி. அதற்கு எம் பெருமான் இசைந்தபின்பே ஜீவன் முக்தியடைகிறான். ஆகை யால் ப்ருப்ஹணத்வத்திலும் பிராட்டியைவிடப் பெருமான் உயர்ந்தவனாகிறான். ஆகையால் நிரதிஶய (தனக்கு மேலில் லாத) ப்ருப்ஹணத்வமும் பிராட்டிக்கு இல்லை. ஸ்ரிய:பதித் வம் (ஸ்ரீதேவிக்குப் பதியாயிருக்கை) என்பது ப்ரஹ்ம ஶப்தத்திற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் என்பது உண்மையே. ஆனால் அந்த ஸ்ரிய:பதித்வம் ஸ்ரீதேவிக்குக் கிடையாதே. ஆகையால் இந்த ப்ரவ்ருத்திநிமித்தமும் அவளிடம் இல்லை. ஆகையால் 'ஸ்ரீதேவியும் பரப்ரஹ்மமே' என்று கூறுவது பரம அபத்தமானது. 'ஸ்ரிய: பதித்வம்—ஸ்ரீதேவியைப் பதி யாகக் கொண்டிருக்கையான தன்மை—ஸ்ரீதேவியேயாகும்' என் பது தர்மத்திற்குத் தர்மிக்கும் உள்ள வேற்றுமையை அறி யாதார் பேசும்பேச்சேயாகும். கடம் என்னும் ஶப்தத்தால் குடமாகிற பொருளும், கடத்வமாகிற தன்மையும் சொல்லப் படுகின்றன என்பது உண்மையே ஆனால் கடத்தை தர் மியாகவும் கடத்வத்தை தர்மமாகவும் தான் கடஶப்தம் குறிக்கும். அதுபோல் ப்ரஹ்ம ஶப்தமும் அதற்கு நேரே பொருளான தர்மியாக நாராயணனையும், அவன் யாரென்று நிருபித்துத் தரும் தர்மமாகவே ஸ்ரீதேவியையும் குறிக்கும். ஆகையால் நாராயணனிடம் உள்ள ப்ரஹ்மத்வம் ஸ்ரீதேவி யிடம் இருக்க முடியாது.

http://acharya.org

ப்ரியக விவாதம்—ஸுதர்சனர் குறிப்பு

பஹுதாந்ய ஆடி ப்ரியா 22—7—88 வரையில் தபால் மூலம் நமக்குக் கிடைக்கவில்லை. 20—7—88 அன்றே அதைப் பெற்ற நம் நண்பர் மூலம் பெற்று அதைப் பார்த்தோம். அதில் "ஆனி ஸுதர்சனத்தின் விமர்சனம்" என்னும் தலைப்பில் இரண்டே பக்கங்கள் 'எழுதியுள்ளார்கள். முந்திய மாத இதழில் நம்முடைய ஐந்தாவது கேள்வி வரையில் கொடுத்து அதற்கு விதண்டாவாதமாக பதில் எழுதி வந்தவர்கள் மேலேயுள்ள கேள்விகள் எதையும் தொடாமல், "ஆவணி இதழிலிருந்து விளக்கம்—விவாதம் ஏதும் வெளிவராது ஸுதர்சனம் இதற்கு முன்பும் இப்போதும் வெளியிட்ட வெளியிடுகின்ற விஷயங்கள் அனைத்தையும் எடுத்து விமர்சித்து, தக்க பதில்களை எழுதி, தனிப்புத்தகமாகவே வெளியிட நினைத்துள்ளோம். அதில் அக்ஷர அக்ஷரமாக அலசி எழுதி ஸுதர்சனம் வெளியிட்டுவரும் விஷயங்களின் நேர்மையற்ற தன்மை உலகறியச் செய்யப்படும்." என்று எழுதியுள்ளார்கள். இவ்விதழிலும் இவர்கள் மறுக்க முற்படும் 'ஸ்ரீதத்வஸர்வஸ்வம்' ரூ 30 விலையிலும், பஞ்சமபக்ஷஸததூஷணி ரூ 10 விலையிலும் நம்மிடம் கிடைக்கும் என்றும், ப்ரியாவாசகர்களுக்கு 2வது புத்தகம் இலவசமாக அளிக்கப்படுமென்றும், நாம் கோரிய படி ப்ரியாவில் அறிவிப்பு வெளியிடும் நேர்மையும் துணிவும் இவர்களுக்கு அறவேயில்லை. இதிலிருந்தே நம்முடைய நூல்களைப் பெற்றுப் படித்துவிட்டால் இவர்களுடைய வாதங்களின் நேர்மையின்மை ப்ரியாவாசகர்களுக்குப் புரிந்துவிடும் என்று அஞ்சுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே இவ்வாதத்தில் இவர்களுடைய படுதோல்வியை இவர்களே ஒப்புக்கொண்டதாக ஆகிறது. இவர்கள் வெளியிடப்போவதாகச் சொல்லும் தனிப்புத்தகத்தில், தைர்யமும், நேர்மையும் இருந்தால் 'ஸ்ரீதத்வஸர்வஸ்வம்' 'பஞ்சமபக்ஷஸததூஷணி' பற்றிய விலை விபரங்களை முழுவதுமாக வெளியிட்டுவிட்டு அதற்குப் பிறகு எழுதவேண்டும். நிற்க.

http://acharya.org

நம்முடைய ஆனி ஸுதர்சனத்தில் [607] வெளிவந்த 14 வது கேள்விபதிலில் "லக்ஷ்மீதந்த்ரத்தில் ஐந்தாம் அத்தியாயத்தில் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட மஹாலக்ஷ்மி மும்மூர்த்திகளையும் உலகனைத்தையும் படைத்தாள் என்று எழுதியிருப்பதற்கு இவர்கள் சமாதானம் சொல்லியே தீர வேண்டும். பூர்வோத்தர ஆடி ப்ரியாவில் இதைச் சொல்லுவார்களா? ஏதுவும் சொல்லாமல் இருந்தார்களானால் நம்முடைய ஊகமே சரியானது என்று நடுநிலையாளர்கள் முடிவு கட்டுவார்கள்" என்று எழுதியிருந்தோம். ஆடி ப்ரியாவில் இவர்கள் இதற்கு சமாதானம் ஏதும் உரைக்காமையால் இவர்கள் சைவசாக்தர்களாய் இருந்து விசிஷ்டாத்வைத மதத்திற்கு வந்து சேர்ந்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களே என்னும் நம்முடைய ஊகமே சரியானது என்று நடுநிலையாளர்கள் முடிவுகட்டத் தடையில்லை என்று தேறுகிறது.

"யுஜேவாம் ப்ரஹ்ம [ஶ்வேதாஶ்வதரம் 2-5] என்று தொடங்கும் மந்திரத்தில் பெரிய பிராட்டியாரும் பெருமாளும் ஆகிற இருவரும் ப்ரஹ்மம் என்று சொல்லியிருக்கிறது" என்று ப்ரியா எழுதியிருப்பது பூபூப்பொய் என்னும் விஷயத்தை அந்த மந்திரம் முழுவதையும், ஸ்ரீரங்கராமானுஜபாஷ்யத்தின்படி அதன் பொருளையும், அளித்து [14-13] கேள்வி பதிலில் நிலைநாட்டியிருந்தோம். அந்த மந்திரத்திலோ அதற்கு அருகிலுள்ள மந்திரங்களிலோ பெரிய பிராட்டியாரைப் பற்றிய ப்ரஸ்தாவமே இல்லாமையால் இவர்கள் கூறியது பொய்ப்பொருள் என்பது அனைவர்க்கும் விளங்கும். இப்படியிருக்கும்போது ஆடி ப்ரியாவிலும் அதன் முழுப் பொருளை விளக்காமல் "(எவரோ) முன்னோர் ஒருவர் இவ்விதம் உரைசெய்துள்ளார்" என்றும் "இதை ஸுதர்சனம் அறியாது. அறியவைக்கவும் நம்மால் முடியாது" என்றும் எழுதப்பட்டுள்ளது. அந்த முன்னோர் நாம் முன் பாராவில் காட்டியபடி சைவசாக்தராயிருந்து விசிஷ்டாத்வைத மதத்திற்கு வந்து சேர்ந்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவ

http://acharya.org

ராகவே இருக்கவேண்டும் என்பது வெளிப்படை; அவர் உரை உண்மையான விசிஷ்டாத்வைதிகளுக்கு எப்படி ப்ரமாணமாக முடியும்?

"அநயோஸ் ஸர்வாத்மகத்வம்—என்னும் எங்களாழ்வான் ஸ்ரீஸூக்தியில் இவர்கள் ஊகிக்கும் தவற்றைக் கூறினால் நாம் அதை விமர்சிப்போம்" என்று நாம் எழுதியிருந்தபடி அத்தவற்றை விளக்கத் துணிவில்லாமல் இவர்கள் ஊகத்தைப் புரிந்துகொண்டு விளக்கும் பொறுப்பை நம் மீதே சுமத்துகிறது ப்ரியா. இது நேர்மையற்ற வாதமாகும். நிற்க.

ரஹஸ்யத்ரயஸாரவிளக்கப்பகுதியில் விவாதத்தை ஆனி ப்ரியா இதழில் முடித்த ஸ்ரீமதழகியசிங்கர் ஆடி இதழில் அருள்மொழியில் 'பிராட்டியும் பெருமாளும்' என்று தலைப்பிட்டு விவாதத்தைத் தொடருகின்றார். ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்த ஸம்ப்ரதாயத்தை விளக்குவதற்கு மட்டுமே தாம் இதை எழுதுவதாகவும், பிறர் ஸம்ப்ரதாய தூஷணத்திற்காக எழுதவில்லையென்றும் பீடிகையிட்டுக் கொண்டு எழுதுகின்றவர், "ஆஶ்ரயணவேளையோடு போகவேளையோடு வாசியற ஒருமிதுனமே உத்தேஶ்யம்" என்னும் ஈடு முதல் ச்ரிய:பதிவாக்யத்தை எடுத்துக் கொண்டு, அதில் "வாசியற" என்றிருப்பதால், "உபாயமாகும்போது பெருமாள் பிராட்டி இருவரும் சேர்ந்தே உபாயமாகிறார்கள்" என்று கூறப்படுவதாக எழுதுகிறார். ஈட்டில் நூற்றுக்கணக்கான இடங்களில் "பிராட்டிக்குப் புருஷகாரத்வமே உண்டு" என்றும், "அவள் பரமாத்மாவை நிரூபித்துத் தரும் தத்துவமேயொழிய ப்ரஹ்மம் அல்லள்" என்றும் காட்டியிருக்கிறார் நம்பிள்ளை. முதல ச்ரிய:பதியிலேயே "பரஸ்வரூபம்" என்று தொடங்கி பரமாத்ம ஸ்வரூபத்தின் அஸாதாரண தர்மங்களை விவரிக்கும்போது, "ச்ரிய:பதியாய்" என்று அஸாதாரண தர்மங்களில் ஶ்ரிய:பதித்வமும் ஒன்று என்று காட்டியிருக்கிறார். ஶ்ரிய:பதித்வம் நாராயணனுக்குண்டேயொழிய ஸ்ரீதேவிக்குக் கிடையாதே! ஸ்ரீதேவியும் ப்ரஹ்மம் என்று வாதிடும் இவர்கள் பக்ஷத்திற்கு இந்த

http://acharya.org

ஈட்டு வாக்கியம் எப்படி ப்ரமாணமாகும்? "மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" [திருவாய் 1-3-1] என்னும் ஆழ்வாருடைய ஸ்ரீ ஸூக்தியையும் தம் கொள்கைக்கு ப்ரமாணமாக எடுக்கிறாரிவர். அந்தஸ்ரீஸூக்திக்கு உரையிடுபோது நம்பிள்ளை, "பெரிய பிராட்டியார் விரும்பும்படி இருக்கைபோலே காணும் ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணம்" என்று அருளியுள்ளார். இதிலிருந்துபெரிய பிராட்டியார் "ஸர்வாதிகவஸ்து" வல்லள் என்றும், அவளால் விரும்பப்படும் நாராயணன் ஒருவனே ஸர்வாதிகவஸ்து என்றும் மிகத்தெளிவாக விளங்குகிறது. இது எப்படி இவர்களுடைய கொள்கைக்குச் சாதகமாகும்? "தேவதத்தன் இளமைப்பருவத்தோடு, யௌவனப் பருவத்தோடு வாசியறபலமுள்ளவனாகவேயிருந்தான்" என்று ஒருவர் சொன்னால் 'இரண்டு பருவத்திலும் அந்தந்தப்பருவத்துக்குள்ள பலத்தை முழுவதும் பெற்றிருந்தான்" என்று பொருளாகுமேயொழிய இருபருவத்திலுமிருந்த பலம் ஒன்றே என்று தேறுமோ? அப்படியே "ஆச்ரயண வேளையோடு போகவேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்" என்னும் வாக்கியமும், மற்ற ஈட்டு ஸ்ரீஸூக்திகளை ஒட்டிப் பார்க்கும் போது "ஆச்ரயண வேளையில் பிராட்டி புருஷகாரமாகவும் பெருமாள் உபாயமாகவும், போகவேளையில் இருவருமே ப்ராப்யராகவும் உத்தேச்யராகின்றனர்" என்றே பொருள்படும் என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

ஈடுமாத்திரமல்ல, ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி முதலான எல்லா வ்யாக்யானங்களிலும் பலபலவிடங்களிலும் பிராட்டி இயல்வாகவே எம்பெருமானுக்குசேஷபூதையாயிருக்கிறாள் என்று காட்டுவதன் மூலம் 'இரண்டு ப்ரஹ்மங்கள்' என்னும் இவர்களுடைய கொள்கையை எல்லா உரையாசிரியர்களும் தகர்த்திருக்கின்றனர். பஞ்சமபக்ஷதூஷணியில் 81 முதல் 95 வரையுள்ள தூஷணங்களில்இவர்களுடைய கொள்கை திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்களால் வேரறுக்கப்பட்டிருப்பதைக் காட்டியிருக்கிறோம். இப்படி நூற்றுக்கணக்கான இடங்கள் உண்டு. ஆறாயிரப்படியில் பெரிய பிராட்டியின் சேஷத்வத்தை நிலைநாட்டித்தரும் மற்றோர் இடத்தை மட்டும் இங்கே காட்டுகிறோம். "சூழ் விசும்பு" [10-9] திரு

http://acharya.org

வாய்மொழியில் பத்தாம் பாட்டின் பிற்பகுதி "நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுகமடந்தையர் ஏந்தினர்வந்தே' என்பது. இதற்கு உரையிடும்போது ஆறாயிரப்படியில் திருக்குருகைப்பிரான் பிள்ளான், "பெரியபிராட்டியும் ஸ்ரீபூமிப்பிராட்டியும நப்பின்னைப் பிராட்டியும் தங்களுடைய பரிசாரிகைகளோடே கூட, தங்களுக்குப்பரமதனமான ஸ்ரீசடகோபனும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் மற்றும் மங்களமான ஸத்கார உபகரணங்களையெல்லாம் ஏந்திக்கொண்டு வந்து எதிர்கொண்டார்கள் என்கிறார்" என்று வ்யாக்யானம் அருளியிருக்கிறார். இதிலிருந்து ஸ்ரீதேவிக்கும் பெருமாளுடைய திருவடி நிலைகள் [ஸ்ரீசடகோபன்] பரமதனம் என்பதே பிள்ளான் திருவுள்ளம் என்று விளங்குகிறது. ஆறாயிரப்படி எம்பெருமானார் உகந்ததாகையாலே அவருடைய திருவுள்ளமும் இதுவே என்பது வெளிப்படை. இத்தகைய ஆயிரக்கணக்கான ப்ரமாணங்களுக்கு முரணாக, பிராட்டியினுடையஇயல்பான பகூவச் சேஷத்வத்தை அவளுடைய இச்சாஸித்தமாக்கி அழித்து, இருவரையும் ப்ரஹ்மமென்று கூறும் இவர்களுடைய கொள்கையை, உண்மையான விசிஷ்டாத்வைதிகள் நெஞ்சாலும் நினைக்கக் கூசுவர். பலமுறை திருப்பித்திருப்பி 'இருவரும் ப்ரஹ்மங்களே' என்று எழுதும் இவர்கள் விசிஷ்டாத்வைதிகள் அல்லர் என்பதை வருங்காலத்தில் நடுநிலையாளர்கள் அனைவரும் உணர்ந்து தீர்ப்பளிப்பார்கள்.

முடிவுரை

இவர்கள் கைக்கொண்டிருக்கும் கொள்கை விசிஷ்டாத்வைதத்திற்குச் சிறிதும் பொருந்ாது என்றும், விசிஷ்டாத்வைதத்திற்கே பொருந்தும் என்றும் ஸ்ரீமத் பரமஹம்ஸ வ்யான மாமலை ஜீயர் ஸ்வாமி முதலான வித்வத் வரிஷ்டர்களும், உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த பல நடுநிலையாளர்களும் தீர்ப்பு வழங்கியிருப்பதை ஸ்ரீதத்வஸர்வஸ்வத்திலேயே காட்டியிருக்கிறோம். இவர்கள் ப்ரியாவில் எழுதிவருவது ப்ரமாணங்களுக்குப் பொருந்தாது என்பதை தேசிக ஸம்ப்ரதா

http://acharya.org

யத்தைச் சேர்ந்த ஸ்ரீ உ வே K. ஜகந்நாதன் அவர்கள் பல கட்டுரைகள் மூலம் நிரூபித்து இவர்களுக்கு அவ்வப்போது அனுப்பி, அதன் நகல்களையும் நமக்கு அனுப்பியிருக்கிறார். மற்றும் பலரும் இவர்களுக்கு மறுப்புக் கடிதங்கள் எழுதி அவற்றின் நகல்களை நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு இவர்களிடமிருந்து வசவுக் கடிதங்களே பரிசாகக் கிடைத்தன. இம்மாதம் வெளிவந்த 'யதிராஜ பாதுகா' இதழிலும் 'கீதாசார்யன்' இதழிலும் நம்முடைய ஸ்ரீதத்வஸர்வஸ்வமும் பஞ்சமபக்ஷ சததூஷணியும் விமர்சிக்கப்பட்டன. இவ்வாசிரியர்கள் இருவரும், ப்ரமாணங்களுக்கும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் இவர்கள் கைக்கொண்டிருக்கும் ஐந்தாவது பக்ஷம் முரணானதே என்பதை இவ்விரு நூல்களிலும் ப்ரமாண பூர்வகமாக, அசைக்கமுடியாதபடி ஆணித்தரமாக நிலைநாட்டப்பட்டுள்ளதாகத் தீர்ப்பு எழுதியுள்ளார்கள். இவ்வாதம் தொடங்கியதிலிருந்து இன்று வரை—இவர்களிடம் ஆயிரக்கணக்கில் ஸம்பாவனையும் பொற்காசுகளும் சால்வைகளும் பெறும் தேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் தவிர வேறு எவரும் நாம் எழுதுவது சரியல்ல என்று ஒரு கடிதம் கூட நமக்கு எழுதவில்லை.

இந்த தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களிடையேயாவது ஸ்ரீதத்வ விஷயத்தில் ஒரு கருத்தொற்றுமை இருக்கிறதா என்று பார்த்தால், மிகுந்த வேற்றுமையே நிலவிவருவதைக் காண்கிறோம். ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனம் எழுதிய ஸாக்ஷாத் ஸ்வாமியைப் பின்பற்றுகிற முனித்ரய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள், "எம்பெருமானுக்குள்ள ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஜகச்சரீரித்வம் முதலான ஈச்வர லக்ஷணங்கள் எல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு; ஆனால் உலகைப்படைப்பது முதலானவற்றை அவள் செய்யாமையால் அவள் ப்ரஹ்மமல்ல; பகவான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் 'பிராட்டியும் பகவானுக்கு சரீரமல்ல; தேவியை

http://acharya.org

பகவான் நியமிக்க முடியாது. பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து சேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அநுமதியால் செயற்கையாய் விளங்கதேயாகும். பிராட்டிக்கு பகவத் பாரதந்த்ர்யம், செயற்கையானது. ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம்" என்று கூறுகிறார்கள். ஆனால் அஹோபில மடத்தைச் சேர்ந்தவர்களோ, "பிராட்டிக்கு பகவச் சரீரத்வமும் சேஷத்வ பாரதந்த்ரியங்களும் உண்டு. அத்துடன் ஸ்வாதந்த்ரியமும் உண்டு. இருவரும் ப்ரஹ்மமே" என்று முன்னுக்குப்பின் முரணாகச்சாதிக்கிறார்கள். "இப்படி ஸ்ரீதத்வ விஷயத்தில் மிகவும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கும் நீங்கள் 'தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை ஏற்றுக் கொண்டவர்' என்று கொள்வதனால் தான் இப்படி ஸகலப்ரமாணங்களுக்கும் முரணாகவும், ஒருவர்க்கொருவர் முரணாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பேசுகிறீர்கள். அவருடைய நூற்றுக்கணக்கான ஸ்ரீஸூக்திகளையொட்டி 'தேசிகன் நாலாவது பக்ஷத்தையே ஏற்றுக்கொண்டவர்' என்று ஒப்புக் கொண்டால் இந்த இடர்ப்பாடுகள் ஒன்றும் இராது" என்னும் நம்முடைய ஸதுபதேசத்தை, அது ப்ரமாணங்களுக்குப் பொருந்தியது என்று தங்களுடைய மநஸ்ஸாக்ஷிக்குத் தெரிந்தும், 'பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்ட தங்களுடைய முன்னோர்கள் சொன்னதை இவன் சொல்லுவதற்காக மாற்றிக்கொள்வதா?' என்னும் பிடிவாதத்தாலே ஏற்க மறுக்கிறார்கள். இந்தப் பிடிவாதம் இல்லாத நடுநிலையாளர்களான ஸ்ரீமான் K ஜகந்நாதன் போன்ற பல தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் இதை ஏற்றுக்கொண்டு தீர்ப்பு எழுதியிருப்பதிலிருந்தே வருங்காலத்தில் உள்ள நடுநிலையாளர்கள் அனைவரும் உண்மையை உணர்வர் என விளங்கும்.

கடைசியாக ஒருவார்த்தை. வேதாந்ததேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை விளக்கும்போது பின்வரும் விஷயத்தைத்

http://acharya.org

தான் கூறியிருக்கிறார். அதாவது: 'ஈஶ்வரஸ்ஸர்வபூ₄தாநாம்' என்று எம்பெருமானைச் சொன்னதுபோலே 'ஈஶ்வரீம் ஸர்வ பூ₄தாநாம்' என்று பிராட்டியையும் சொல்லியிருக்கையாலே, பிராட்டியின் சேஷித்வம் உபய-இச்சா₂ஸித்₃த₄ம என்பதே அது. "இந்த ஐந்தாவது பக்ஷத்தை அவர் கண்டித்திருக்கிறார். நான்காவது பக்ஷத்தையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்" என்பதை நம் சததூஷணியில் 41 முதல் 80 முடியவுள்ள தூஷணங்களில் பல தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி அசைக்கமுடியாதபடி நிலைநாட்டியுள்ளோம். இவையனைத்திற்கும் நீங்கள் எழுதப்போவதாகக் கூறும் தனிப்புத்தகத்தில் ப்ரமாணங்களைக் காட்டி மறுப்புரைப்பதோடன்றியில், 'இருவரையும் ஸர்வபூ₄தேஶ்வரர்கள் என்று ஶ்ருதி சொல்லியிருப்பதால பிராட்டியின் பூ₄கவச்சேஷித்வம உப₄ய இச்சா₂ஸித்₃த₄மே" என்று தேசிகன் வெளிப்படையாகக் கூறியிருப்பதைக் காட்டவேண்டும். இதைச் செய்யாதவரையில் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தையும், பஞ்சமபக்ஷ சததூஷணியையும் மறுத்து விடலாம என்று நீங்கள் நினைப்பது பகற்கனவாகவே முடியும். தனிப்புத்தகம் வெளிவந்தபின் அதை விமர்சிப்போம்.

"ஏறனைப் பூவனைப் பூமகள்தன்னை
வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேல் தன்னை மிதிட நிமிர்ந்து மண்கொண்ட
மால்தனில் மிக்குமோர் தேவும் உளதே"

[திருவாய் 2-2-3]

என்று ஆழ்வார் அருளியபடியே, ப்₃ரஹ்ம ருத்₃ராதி₃களோடு பெரிய ப்ராட்டியோடு வாசியற அனைவர்க்கும் நாயகன் நாராயணனே என்று நிலைநாட்டுவோம்.

http://acharya.org

கீதாசார்யன் பத்திரிகையின் வேண்டுகோள்—

ஸுதர்சனரின் விளக்கம்

கீதாசார்யன் [பதினாறாம் ஜூலை 98] இதழில் ஸுதர்சனம், ப்ரியா பத்திரிகைகளுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதில், "பிராட்டிஸ்வரூபத்தைப்பற்றிய சர்ச்சைக்குவிஷயமான இந்தக் கருத்து வேற்றுமைகள் நூறு வருடங்களுக்கு மேலாகவே உள்ளனவாகையால் இந்தச் சர்ச்சையை நிறுத்திக்கொள்ளவேண்டும்" என்றும், "இரு கலையாரும் படித்து இன்புறக்கூடிய விஷயங்களை எழுதி ஸ்ரீவைஷ்ணவர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டும்" என்றும் இரு பத்திரிகை ஆசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவ்விஷயத்தில் நம நிலையை விளக்கவேண்டிய கடமை நமக்கு உள்ளது. ஸுதர்சனத்திற்கும் ப்ரியாவிற்குமிடையே கருத்து வேற்றுமைகளும் சர்ச்சைகளும் நெடுங்காலமாகவே நடந்திருக்கின்றன. இவற்றில் சில நம்முடைய "ஸுதர்சன விஜயம்" பக்கங்கள் 24 முதல் 26 வரையிலும், பக்கங்கள் 41 முதல் 44 வரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. சுமார் 46 வருடங்களுக்கு முன் பெரியவாச்சான் பிள்ளையை தூஷித்து ப்ரியாவும் D T தாதாசார்ய ஸ்வாமியும் எழுதிய காலத்தில் எந்தையார் "அப்யர்த ராஜ விஜயம்" என்னும் நூலை வெளியிட்டு, அதில் ஸ்ரீஸூக்தபாஷ்யம் எழுதியவர் நஞ்சீயர் என்னும் வாதத்தை வேரறுத்தார் என்பதும், D T தாதாசார்ய ஸ்வாமியே சிலவருடங்கள் கழித்து ஹிந்து பத்திரிகையின் வாயிலாக ஸ்ரீஸூக்தபாஷ்யம் எழுதியது நாராயணமுனியே யொழிய நஞ்சீயரல்ல என்னும் உண்மையை இசைந்தார் என்பதும் ஸுதர்சன விஜயம் பக்கம் 41 முதல் 44 வரையில் உள்ள நாலாவது அத்தியாயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அந்த அத்தியாயத்தின் இறுதியில் "இந்த விவாதம் முடிந்தபிறகு ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைக் கண்டித்து எந்தக் கட்டுரையும் வெளியிடப்படவில்லை" என்பதும், அண்மைக் காலத்தில் 45 வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்தா

ணத்தை அலங்கரித்த பிறகு, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், மணவாளமாமுனிகள் முதலான எல்லாத் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பூர்வாசார்யர்களும் நிருஸிம்ஹ ப்ரியாவில் கௌரவத்தோடு குறிப்பிடப்படுகிறார்கள் என்பதும், அவர்களுடைய ஸ்ரீஸூக்திகள் மேற்கோளாக எடுக்கப்படுகின்றன என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. நாமும் ஸ்ரீவேதாந்த தேசிகர் விஷயத்தில் அத்தகைய கௌரவப்ரதிபத்தியைத் தொடக்கத்திலிருந்தே காட்டி வருகிறோம் என்பது அனைவரும் அறிந்ததே. ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திலுள்ள அனைவரும் என்றும் இந்த நிலையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நம் ஸம்ப்ரதாயம் சிறப்பாகத் தழைக்க வழிவகுப்பார்கள் என நம்புகிறோம்'' என்று நாம் எழுதியிருந்தோம். இதற்குப் பிறகு நம்முடைய பிரார்த்தனையின் பேரில், சென்னையில் நடைபெற்ற ஸுதர்சனம் ஸ்தாபகர் நூற்றாண்டு விழாவில் வர்த்தமான ஸ்ரீயதழகிய சிங்கர் கலந்துகொண்டு அநுக்ரஹபாஷணம்செய்தார்என்பதும் அனைவரும் அறிந்ததே.

இதற்கிடையில் 1993ம் வருடத்திலேயே ''காஞ்சிப்பேரருளாளன்'' பத்திரிகையில் ஸ்ரீதத்வ விஷயமாக ஒரு கட்டுரைத் தொடர் வெளிவந்தது. அதில் ''பகவான் பிராட்டிக்கு ஶரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு ஶரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்கமுடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது; எம்பெருமான் பிராட்டியைக் குறித்து சேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு பகவத்பாரதந்த்ரியம் செயற்கையானது. ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன'' என்று எழுதப்பட்டிருந்தது. இப்படி எழுதுவது இந்த எல்லாப் பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் முரணானது என்பதை

http://acharya.org

விளக்கி ஸ்ரீஸூக்தி [1993] கார்த்திகை ஸுதர்சனம் [552] இதழில், ''விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம்'' என்னும் கட்டுரையை எழுதி அதில் வித்வான்களின் மநஸ்ஸாக்ஷியைக் குறித்துச் சில கேள்விகளையும் கேட்டு, உபய ஸம்ப்ரதாயத்திலும் உள்ள பலவித்வான்களுக்கு அனுப்பினோம். அஹோபிலமடமாலோல வித்வத் ஸதஸ்ஸுகளிலும் கலந்துகொண்டு ஸமாதானமுறையில் இதற்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டுமென்று ப்ரார்த்தித்தோம்.

இதற்குப் பிறகு காஞ்சிப் பேராளாளன் கட்டுரையை எழுதிய மதுராந்தகம் ஸ்வாமியின் ஜாமாதாவான நா. வரதாசார்யர் ''யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாஞ்ஜனம்'' என்னும் தலைப்போடு 27 பக்கங்கள் கொண்ட ஒரு நூலை எழுதி அதில் தம் விலாசத்தைக்கூடக்குறிப்பிடாமல் நமக்கு அனுப்பினார். 'இவர் எழுதியிருப்பவை விசிஷ்டத்வைதத்திற்குப் பொருந்துமேயொழிய விசிஷ்டாத்வைதத்திற்குப் பொருந்தாது எனபதை ஸுதர்சனம் ஈஶ்வர ஆனி [595] இதழில் நாம் ஓர் கட்டுரை எழுதி நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரியிருந்தோம். ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி முதலான பல வித்வான்களும், தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த நடுநிலையாளர்களான பல அறிஞர்களும் நம்மை ஆதரித்துத் தீர்ப்பு எழுதினார்கள். இந்நிலையில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இவ்விவாதத்தில் தலையிட்டு நமக்கு சாஸ்த்ரஜ்ஞானம் இல்லையென்றும், அஜ்ஞானத்தால் அஹங்காரத்தால பிடிவாதத்தால் எழுதுவதாகவும் எழுதி ப்ரியாவே இந்தச்சர்ச்சையை விரும்பத்தகாத வகையில் வளர்த்தது.

மாமுனிகள் வரையுள்ள பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிறகு உபயஸம்ப்ரதாயத்திலும் இருந்தவர்கள் எவ்வளவு பெரிய வித்வான்களாயிருந்தபோதிலும் இருள் தயக்கு, மயக்கு, மறப்பு (ப்ரமம், ப்ரமாதம், விப்ரலிப்ஸை, விஸ்ம்ருதி) முதலானவற்றுக்கு உட்பட்டவர்களே என்பதை அவர்கள் நூல்களில் பலசான்றுகளின் மூலம் காண்கிறோம். உதாரணமாக திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் பஞ்சாக்ஷநிவிஷ்டயா கிஷ்டனையே கைவல்யநிஷ்டனுக்கக் கொண்டிருந்தார்கள் என்று யதீந்த்ரமததீபிகாகாரர் தொடங்கி இக்காலம் வரை

http://acharya.org

தென்னாசார்ய ஸம்ப்ரதாய வித்வான்கள் அனைவரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாம் (சுமார் 100 பக்கங்கள் கொண்ட) நம் கைவல்ய ஸித்தாஞ்ஜனத்தில் இது தவறென்றும் தென்னாசார்யர்கள் அனைவரும் ப்ராஜாபத்யத்ருத ஜீவோபாஸகனையே கைவல்ய நிஷ்டனாகக் கொண்டிருந்தனர் என்றும் அசைக்க முடியாதபடி நிலை நாட்டிய பின்பு, ஸ்ரீகாஞ்சீமஹாவித்வான் ஸ்வாமி, ந்யாயவேதாந்தவித்வான் வாசூம்ருதவர்ஷி ஸ்வாமி முதலான தென்னாசார்ய ஸம்ப்ரதாய வித்வான்கள் அனைவரும் நம்நிலையை ஏற்றுக்கொண்டனர். இதுவே ப்ராமாணிகர்களின் வழி. நூறு வருஷங்களுக்குமேல் முந்நூறுவருஷங்களுக்குள் விசிஷ்டாத்வைதத்தையே வேறாக்கக்கூடிய இரண்டு ப்ரஹ்மக்கொள்கையையோ, 'பிராட்டி பெருமாளுக்குச் சரியல்லள்' முதலான கொள்கைகளையோ சில வித்வான்களும் மடாதிபதிகளும் எழுதியுள்ளார்கள் என்றும் ஒரே காரணத்திற்காக ப்ராமாணிகர்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? "எம்பெருமானுடைய வ்யாப்தி, க்ருபை வாத்ஸல்யம், கைவல்யம் முதலிய பல விஷயங்களில் கருத்துவேற்றுமைகள் ஸம்பரதாய பேதமாகப் பல நூற்றாண்டுகளாக இசையப் பெற்றவை. அதுபோல் இதையும் கொள்ளலாம்" என்பதும் ஏற்கத்தக்கதன்று. இரண்டுப்ரஹ்மக்கொள்கை முதலானவை அத்தகையவையல்ல. விசிஷ்டாத்வைதத்தையே வேறாக்கக் கூடியவை என்பதை, பல தேசிக ஸ்ரீஸூக்திகளையும், மற்ற பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையும், ப்ரமாணங்களையுங்கொண்டு ஸ்ரீதத்வஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ நிரஸநதூஷணியிலும் நாமும், உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த பல நடுநிலையாளர்களும் எதிர்த்தலையிலுள்ளவர்கள் அசைக்க வொண்ணாதபடி நிலைநாட்டியுள்ளோம்.

ரஹஸ்யத்ரயஸாரம் முதலான க்ரந்தங்களை விவரிக்கும் போது ப்ரியாவிலும் அவர்கள் கொள்கையை வலியுறுத்தாம லிருக்க இயலாது. அதுபோலவே சதுஃஶ்லோகீ விரிவுரை, கத்யவ்யாக்யான விவரணம் முதலான நமது நூல்களிலும், நடுநிலையாளர் பலரும் அடியேனும் நிலைநாட்டிய உண்மையை வலியுறுத்தாமலிருக்க முடியாது. வசவில் இறங்காமல் விஷயங்களை மாத்திரம் விமர்சனம் செய்வதே பண்டிதர்களுக்கு அழகு. எது உண்மையானது, நேர்மையானது என்பதை வருங்காலத்திலுள்ள நடுநிலையாளர்கள் ஐயம் திரிபற நிலைநாட்டுவார்கள்.

http://acharya.org

ஸ்ரீயா:-பதமாத்ய ஆடி அருள்மொழி [கேள்விகள் 20, 21]

20. "பிராட்டி உபாய விரோதியான பாபங்களை மட்டுமே போக்குகிறாள் ஆகையால் புருஷகாரமாக மாத்திரமே ஆகிறாள். அவள் உபேய (பல) விரோதியான பாபங்களைப் போக்குவதில்லை. ஆகையால் உபாயமாவதில்லை" என்பது தென்னாசார்ய ஸம்ப்ரதாயம். "இவள் உபேய விரோதியான பாபங்களையும் போக்குகிறாளாகையாலே உபாயமும் ஆகிறாள்" என்பது தேசிக ஸம்ப்ரதாயம். "வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே" [திருவாய் 4-5-11] என்று நம்மாழ்வார் பொதுவாகப் பிராட்டி எல்லா வினைகளையும் தீர்ப்பதாகக் கூறியிருப்பதும், அதன் ஈடு முதலான வியாக்யானங்களும் தேசிக ஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தும்.

பிராட்டி உபாய விரோதி பாபங்களோடு உபேய விரோதி பாபங்களோடு வாசியற எல்லாப் பாபங்களையும் போக்குகிறாள் எனபது தென்னாசார்ய ஸம்ப்ரதாயமும் ஆகும். ஆனால் அந்தப் பாபங்களை எப்படிப் போக்குகிறாள் என்பதைத் ஆராயவேண்டும். பாபம் என்பது பரமாத்மாவின் கோபம். அதை அவன் தான் 'பொறுத்தேன்' என்று கூறி நீக்கிக்கொள்ள வேண்டும். பிராட்டி உபதேசத்தாலும் அழகாலும் அவனைத் திருத்தி அவனை 'பொறுத்தேன்' என்று சொல்லும்படி செய்கிறாள். "அஜ்ஞாத நிக்ரஹா" யான -அதாவது கோபமென்பதையே அறியாதவளான-பிராட்டி, பாபங்களைப் 'பொறுத்தேன்' என்று கூறமுடியாது. ஆக, பிராட்டி பாபங்களைப் போக்குகிறாள் என்று சொல்லுவது 'அவற்றை எம்பெருமானைப் பொறுக்கச்செய்வதன் மூலம் போக்குவிக்கிறாள்' என்றே பொருள்படும். இது இரண்டு பாபங்களுக்கும் பொருந்தும். எனவே இது புருஷகாரச் செயலில் அடங்குமேயொழிய மோக்ஷபலத்தைக்கொடுக்கும் ஸங்கல்பம் செய்வதாகிற உபாயச்செயலில் அடங்காது. இவ் விஷயத்தில் ஸம்ப்ரதாயபேதம் பின்வருமாறு:— "பிராட்டி கோபமே அறியாதவளாகையாலே முற்கூறியபடி புருஷ

http://acharya.org

காரமாக முடியுமேயொழிய உபாயமாக முடியாது; மோக்ஷ பலத்தைக் கொடுக்கும் ஸங்கல்பத்தையும் எம்பெருமான் ஒருவனே செய்கிறான்; ஆகையால் அவன் ஒருவனே உபாயம்'' என்பது தென்னாசார்யர்கள் திருவுள்ளம். ''மோக்ஷ பலத்தைக் கொடுக்கும் ஸங்கல்பத்தைப் பிராட்டியோடுகூடி நின்றே எம்பெருமான் செய்கிறானாகையாலே மோக்ஷோபாயத்வத்திலும் பிராட்டிக்கு அப்ரதாநமான அந்வயம் உண்டு'' என்பது தேசிகன் திருவுள்ளம். இந்த ஸம்ப்ரதாய பேத விஷயம் தேசிகனாலேயே காட்டப்பட்டிருப்பதை நம்முடைய பஞ்சம பக்ஷ சததூஷணியில் 57 வது தூஷணத்தில் விளக்கியிருப்பதைக் கண்டுகொள்வது. ''வினைதீர்க்குமே'' என்ற இடத்தில் ஈடு முதலான வியாக்யானங்கள் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தும் என்பதை நம்முடைய பஞ்சமபக்ஷ சததூஷணியில் 89 வது தூஷணத்தில் மிகத் தெளிவாக விளக்கியிருப்பதையும் கண்டு கொள்க.

21. 'புருஷகாரம்' என்ற ஶப்தத்தில் புருஷ ஶப்தம் வந்துள்ளதால் புருஷர்கள்தான் புருஷகாரமாக இருக்கலாம். ஸ்த்ரீகள் புருஷகாரமாவது எப்படி? ஆகப் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொள்வது கூடாதே என்ற அளவுக்குக் கேள்வி எழும்.

இந்தக் கேள்வியே சரியானதன்று! இங்கு பிராட்டியைக் குறிக்கும் சொல் 'புருஷ' ஶப்தமாயிருந்தால்தான் இந்தக் கேள்வி பொருந்தும். ஆனால் அப்படியில்லையே! 'புருஷகார' ஶப்தத்தைப் பற்றியல்லவோ ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இங்கு புருஷகார ஶப்தத்தின் பொருளை அவசியம் அறிய வேண்டும். அதாவது—''புருஷம் கரோதி இதி புருஷகார:'' என்பது இந்தச்சொல்லின் வ்யுத்பத்தி. இங்கு புருஷ ஶப்தத்தால் சேதனனாகிற ஜீவன் பரமசேதனனாகிற நாராயணன் ஆகிய இருவருமே குறிக்கப்படுகிறார்கள். புருஷகாரஶப்தம் ''புருஷர்களாகிய இருவரையும் புருஷர்களாக ஆக்குபவள்'' என்று பொருள்படுகிறது. அதாவது இருவரையும் பல வழிகளில் முயன்று திருத்துபவள் என்று கருத்து.

http://acharya.org

இருவரையும் எவ்வாறு திருத்துகிருள் பிராட்டி என்னும் விஷயம் (ஸ்ரீவசனபூஷணம் சூர்ணை 10) "ஸம்ச்லேஷதசையில் ஈச்வரனைத் திருத்தும், விச்லேஷதசையில் சேதநனைத் திருத்தும்", (சூர்ணை 11) "இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே", (சூர்ணை 12) 'உபதேசத்தாலே இருவருடைய வும் கர்மபாரதந்த்ரியம் குலையும்', (சூர்ணை 13)— "உபதேசத்தாலே மீளாதபோது சேதனனை அருளாலே திருத்தும், ஈச்வரனை அழகாலே திருத்தும்" என்னும் சூர்ணைகளிலும் அவற்றின் மாமுனிகளின் வ்யாக்யானத்திலும் விளக்கப்பட்டுள்ளது காணத்தக்கது. ஆகையால் புருஷகார சப்தத்தைப்பற்றி ஆராயும்போது அது ஆண்களைத் தானே குறிக்கும் என்னும் கேள்வியெழ இடமேயில்லையென்று விளங்குகிறது.

ப்ரியா பகுஷாந்த்ய பூரட்டாசி அருள்மொழி

(கேள்வி 22 to 25)

22. பட்டர் "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம்" [ஸ்ரீகுணரத்னகோசம் 31] என்னும் ஸ்லோகத்தில், "எம்பெருமானைக் காட்டிலும் வேருன ஒருவனால் எம்பெருமானுக்கு மஹிமை உண்டாகியிருந்தால் தான்—எம்பெருமான் அந்யாதீநவிபவன்—பிறரால் உண்டான பெருமைகளை உடையவன் ஆவான்; பிராட்டியை 'அந்ய' சப்தத்தினால்—பிறர் என்ற சொல்லால் கொள்ளக்கூடாது; இவள் எம்பெருமானுக்குப்—பண்பாய்—குணமாய்—அப்ருதக் ஸித்ததர்மமாய் இருப்பவள் ஆவாள்" என்று அருளியுள்ளார்.

இது தவறு. ஸ்லோகத்தைத் தொடங்கும்போதே பட்டர் "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி" [ஸ்ரீகுணரத்னகோசம் 31] [ஸ்ரீதேவியே! நீ இயற்கையிலேயே எம்பெருமானுக்கு உடைமைப்பொருளாய் இருக்கிருய்] என்று கூறித்தொடங்குகிருரேயொழிய. "ஸ்ரீதேவியே நீ விஷ்ணுவைக்காட்டிலும் வேறுபடாதவளாய் இருக்கிருய்" என்று தொடங்கவில்லை. எம்பெருமானுக்குப் பிராட்டி எப்படி பண்பாய், குணமாய், அப்ருதக்ஸித்ததர்மமாய் இருப்பவளோ அவ்வண்ணமே எல்லாச்சேதநர்களும் அவனுக்குப்பண்பாய் குணமாய் அப்ருதக்ஸித்ததர்மமாய் இருப்பவர்களே. இப்படி அப்

http://acharya.org

ருதஜக் ஸித்₃த₄த₄ர்மமாய் இருப்பதைக் கொண்டு 'பெருமா ளும் பிராட்டியும் பிரம்மமே' என்று கூறத்தொடங்கினால் அப்ருதஜக் ஸித்₃த₄த₄ர்மமாய் இருப்பதைக் கொண்டு 'எல்லாச் சேதநரும் பிரம்மமே' என்றல்லவா சொல்லவேண்டி வரும். "பிராட்டி எம்பெருமானுக்கு இயற்கையாகவே 'ஸ்வம்' எனப்படும் சொத்தாக—'ஶேஷமாக இருக்கிறாள்'' என்பதை ஒப்புக்கொள்ளும் இவர்கள் அவளும பிரம்மமே என்று பேசுவது முன்னுக்குப்பின் முரணாகும். இந்த முரண் பாட்டைத் தவிர்ப்பதற்காகவே ஸ்ரீ. வரதாசார்யர் தமது புத்தகத்தின் 41 வது பக்கத்தில் ''ஸ்வத: விஷ்ணோ: ஸ்வம் என்பதற்குப் பிராட்டியின் ஸங்கல்பத்தால் அவ னுக்கு விஷ்ணு-ஶேஷத்வம் வந்தது என்பதே பொருள்'' என்று விதண்டாவாதமும் செய்தார். இவரோ ஶ்லோகத்திற்குப் பொருளைச் சரியாக எழுதிவிட்டு முன்னுக்குப்பின் முரணாக வாதிடுகிறார். அஹோபில மடத்தினர் 'பிராட்டிக்கு ப்ரஹ்ம த்வம் உண்டு' என்று கூறுவதை முனித்ரயத்தினர் ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் 'பிராட்டிக்கு எம்பெருமானைக் குறித்து ஶரீரத்வம் ஶேஷத்வம் முதலானவை இல்லை' என்று கூறுவதை இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இதிலிருந்தே இவர்களனைவரும் ப்ரமாணங்களுக்கு முரணாகப் பேசுகிறார் கள் என்பது எளிதில் விளங்கும். நாம் 'ஸ்ரீதத்வ ஸர்வஸ் த்வம்' வி. வி. 17 வது பாராவிலும் [பக்கம் 21. 22], பஞ்சம பக்ஷ ஶததூஷணி 31 வது தூஷணத்திலும் இவர்கள் எழுது வது பிரமாணங்களுக்கு முரணானது என்பதை விரிவாக நிரூ பித்திருக்கிறோம். இதற்கு எந்த பதிலையும் சொல்லாமல் திருப்பித்திருப்பி ப்ரமாண விருத்தமாக எழுதிக் குழப்பத் தையே விளைக்கிறார்கள்.

23 ''பும் ப்ரதா₄நேஶ்வர—ஈஶ்வரீ'' என்பதால் இப்படி மூவகைப்பட்ட தத்துவங்களையும் நியமிக்கும் எம்பெருமா னையும் நியமிப்பவள் பிராட்டி என்பது இந்த ப்ரமாணத் தினால்தான் கிடைக்கிறது.

இந்த வாக்யத்தில் 'நியமிக்கும் எம்பெருமானையும்' என் னும் சொற்கள் இருக்கக்கூடாது. எழுதியவரின் கவனக்குறைவு இந்த ப்ரமாணத்தில் பிராட்டி ஈஶ்வரனையும் நியமிப்பதாகச் சொன்னது, ''நின் அன்பின்வழிநின்று சிலைபிடித்துஎம்பிரான்

http://acharya.org

ஏக" [பெரியாழ்திரு 3-10-7] என்கிறபடி எம்பெருமான் ப்ரே மத்தாலே பிராட்டியால் நியமிக்கப்படுபவனாக இருப்பதையே சொன்னதாகும். எம்பெருமான் பிராட்டிக்கு அந்தர்யாமியாய் நின்று அவளை நியமிக்கிறான். "பித்தர் பனிமலர் மேல் பாவைக்கு" [திருநெடு 18] என்கிறபடியே பிராட்டி தன்னிடம் ப்ரேமத்தாலே தனக்கு வசப்பட்டிருக்கும் அவனை நியமிக்கிறாள். இது எல்லாப்பூர்வாசார்யர்களும் ஒப்புக்கொண்ட விஷயம். தேசிகனும் சது:ஶ்லோகீ பாஷ்யத்தில் "லோகைகேஶ்வரி" (2) என்னுமிடத்தின் வ்யாக்யானத்தில் இந்த "பும்ப்ரதாநேஶ்வரேஶ்வரீ" என்னும் நாமத்திற்கு இவ்வண்ணமே நிர்வாஹம் செய்திருக்கிறார். எம்பெருமான் பிராட்டிக்கு அந்தர்யாமி என்று ஒப்புக்கொள்வது போல் பிராட்டி எம்பெருமானுக்கு அந்தர்யாமி என்று இவர்களால் கூறமுடியுமா? முடியாதே. இந்நிலையில் எம்பெருமானுக்குள்ள ஸர்வாந்தர்யாமித்வத்தையும் பரப்ரஹ்மத்வத்தையும் பிராட்டிக்கு எப்படி இவர்கள் ஏறிட முடியும்? இத்தகைய முக்கியமான விஷயங்களை விளக்காமல் பக்கம்பக்கமாக எழுதுவதால் வாசகர்களைக் குழப்பமுடியுமேயொழிய தத்வ நிஷ்கர்ஷம் விளையமுடியுமா என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்கவேண்டும்.

24 ஆக, பிராட்டிக்கு எவ்வளவு பெரிய பதவி தந்தாலும் எம்பெருமானுக்குத் துல்யையாக—ஸமமானவளாக ஆகமாட்டாள். ஆகையால் பிராட்டிக்கு ஜகத்காரணத்வம் ப்ராஹ்மத்வம் இவற்றை இசைந்தாலும் எந்தவிதமான அநர்த்தமும் வராது என்பது நம்முன்னோர்களுடைய ஸித்தாந்தம். ......பிராட்டி எம்பெருமானுக்கு ஶேஷபூதை என்று அவளுடைய பாரதந்த்ர்யத்தைச் சொல்லும் ப்ரமாணங்களையும் பிராட்டியும் ஜகத்காரணமே, அவளும் ப்ராஹ்மமே என்று கூறும் ப்ரமாணங்களையும் முரண்படாமல நிர்வஹிக்கலாம்.

'பிராட்டி எம்பெருமானுக்குத் துல்யையாக—ஸமமானவளாக—ஆகமாட்டாள்"என்றும், "பிராட்டி எம்பெருமானுக்கு அநந்யார்ஹஶேஷபூதையாக இருக்கிறாள்" என்றும இவர்கள் எழுதுவதால் எவர்க்கும் ஶேஷமல்லாத ஸர்வஶேஷியான பரப்ரஹ்மமாகப் பிராட்டி ஆகமுடியாது என்பதை இவர்

களே ஒப்புக்கொண்டதாக ஆயிற்று. அநங்யார்ஹஶேஷத்வத்தையும் ஒப்புக்கொண்டு ப்ரஹ்மத்வத்தையும் பிராட்டிக்கு இசையலாம் என்று முன்னுக்குப்பின் முரணாக எழுதுவதைப் பார்க்கும் போது சிரிப்புத்தான் வருகிறது. முன்னுக்குப் பின் முரணான பொருந்தாப்பேச்சுக்களுக்கு 'வ்ருஷள விவாஹமந்த்ரம்' என்ற ஒன்றை திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் த்ருஷ்டாந்தமாக எடுப்பதுண்டு. அருள்மொழி வாக்கியங்கள் அதுபோலவே உள்ளன. 'பிராட்டி உலகத்திற்கு மூலகைக் காரணமாக இருக்கிறாள்' என்றோ, 'அவளும் ப்ரஹ்மமே' என்றோ கூறும் ப்ரமாணங்கள் எதுவுமே இல்லை யென்றும், 'ஶ்ருதி முதலான நூற்றுக்கணக்கான ப்ரமாணங்கள் உலகிற்கு மூலகைக் காரணமாகவும் ப்ரஹ்மமாகவும் இருப்பவன் ஒரு பரம சேதனனே என்று கூறுகின்றன' என்றும் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ சதுஷணியிலும், ஸுதர்சனர் பதில்களிலும் விரிவாக நிரூபித்திருக்கிறோம். அவற்றுக்கெல்லாம் எந்த பதிலையும் கூறாமல் இல்லாத வாக்யங்களை இருப்பதாகக்கூறி அவற்றை முரண்படாமல் நிர்வஹிக்கலாம் என்று கூறுவது விலவறச்சிரிக்கத் தக்கது.

25. ஈடு ப்ரவேசத்தின் தொடக்கத்தில் திருவாய்மொழியிலிருந்து சில சந்தைகளை எடுத்து அவற்றிலிருந்து 'ஸ்ரீமானான நாராயணனே பரதத்வம்' என்று நம்மாழ்வார் திருவுள்ளம்பற்றுவதாக நம்பிள்ளை அருளியிருக்கிறார். இதிலிருந்து பெருமாள், பிராட்டி ஆகிய இருவருமே பரதத்வம் என்று விளங்குகிறது.

'ஸ்ரீமானான நாராயணனே பரதத்வம்' என்றால் 'ஸ்ரீதேவியையுடையவனான நாராயணனே பரதத்வம்' என்றே பொருள்படும். இவர் கூறுவது போல், இருவரும் பரதத்வம் என்று நம்பிள்ளை கருதியிருந்தால் 'ஸ்ரீநாராயணர்களே பரதத்வம்' என்று அவர் அருளியிருக்க வேண்டும். ஈட்டில் பலவிடங்களில் 'எம்பெருமான் ஒருவனே ஜகத்துக்கு மூலகைக் காரணமான பரதத்வம்' என்று காட்டப்பட்டுள்ளது. ஆகையால் ஈடு இவர்களுக்கு பாதகமேயொழிய ஸாதகம் ஆகாது.

http://acharya.org

ப்ரியா பஹுதான்ய ஐப்பசி அருள்மொழி
(கேள்வி 26 to 29)

26. நாம் எழுதிவரும் விஷயத்தில் தவறில்லாத போதும் தவறுகள் இருப்பதாக மீண்டும் தன்னுடைய போக்கைச் சற்றும் மாற்றிக் கொள்ளாமல் ஸுதர்சனம் பத்திரிகையில் எழுதி வருவது மிகவும் ஶோகிக்கத் தக்கது.

'விசிஷ்டாத்வைதமதத்தில் இரண்டு ப்ரஹ்மங்கள் உண்டு' என்றும், 'பிராட்டிக்கு அநந்யார்ஹஶேஷத்வமும் உண்டு, ப்ரஹ்மத்வமும் உண்டு' என்றும் எழுதுவது மிகத் தவறு என்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் சிறிது அறிவுள்ளவர்க்கும் விளங்கும். திருப்பித்திருப்பி இப்படி ஸம்ப்ரதாயத்திற்கும் பூருவர்கள் நிரூபணங்களுக்கும் அடியோடு முரண்பட்ட விஷயங்களை எழுதி ஒரு பெரிய ஸ்தானத்திலிருப்பவர் ஸ்ரீவைஷ்ணவர்களைக் குழப்பி வருவதை நாம் எப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமுடியும்? இதே போல் 44 வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கர் "ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு ஶப்தஸ்பர்ஶரூபரஸகந்தங்கள் உண்டு" என்றும், "வேதஶப்தத்திற்கு ஆநுபூர்வீநித்யத்வம் மாத்திரமல்லாமல் ஶப்தநித்யத்வமே உண்டு" என்றும் வாதம் செய்து அது ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகையிலும் வெளிவந்தது. இது பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விருத்தம் என்று எடுத்துக் காட்டி அப்போதே நாம் ஸுதர்சனத்தில் எழுதினோம். அப்போது ப்ரியா ஆசிரியரான திருக்கள்ளம் ஸ்வாமி, "இது தவறு என்பது எங்களுக்கும் தெரியும்; இது பற்றி நாங்களே ஒரு கட்டுரை ப்ரியாவில் எழுதுகிறோம், நீங்கள் சில மாதங்கள் பொறுத்திருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். ஆனால் ப்ரியாவில் அத்தகைய கட்டுரையை வெளியிட அவர்களால் இயலவில்லை. அதற்குப்பின் நாம் ஸுதர்சனத்தில் இதற்கு மறுப்பு எழுதியபின்பு "நேரில்வந்தால் நாம் இதை நிரூபிப்போம்" என்று 44 வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கர் நம்மை நியமித்தார். அப்படியே நாம் பலக்ரந்தங்களை எடுத்துக் கொண்டு கீர்த்திமூர்த்தியான சதாபிஷேகம் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் (கொத்தட்டை) சௌரிராஜய்யங்கார்ஸ்வாமி, திருவெள்ளறை மேலத் திருமாளிகை ஸௌம்யநாராயணாசாரியஸ்வாமி ஆகியோருடன்

http://acharya.org

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியிருந்த தசாவதாரம் ஸந்நிதிக்குச்சென்றோம். ஸ்ரீமதழகிய சிங்கர்ஸாதிப்பது பூர்வாசாரிய ஸ்ரீஸூக்திகளுக்கு விருத்தமானது என்று ம்ருத ப்ரகாசிகையையும் தேசிக க்ரந்தங்களையும் காட்டினோம். அதற்கு ஸ்ரீமதழகியசிங்கர் 'தேசிகன் தாத்தா சொன்னாலும் நான் சொன்னதுதான் அர்த்தம் என்று கர்ஜித்தார். அதற்குமேல் நாம் சிரித்துக்கொண்டே கிரந்தங்களையெல்லாம் மூடிவைத்துவிட்டு அவரிடம் விடை பெற்றுத் திரும்பினோம். இப்போது தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளை 40 இடங்களுக்கு மேல் காட்டி 'அவர் நாலாவது பக்ஷத்தை ஏற்றுக் கொண்டவரேயொழிய ஐந்தாவது பக்ஷத்தை ஆதரிப்பவர் அல்லர்' என்று பஞ்சமப்க்ஷசதூஷணியில் அசைக்க முடியாதபடி நிலைநாட்டிய பின்னர், அதற்கு நேரடியாக எந்த பதிலையும் எழுதாமல், திருப்பித்திருப்பி மூரண்பட்ட விஷயங்களையே வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் எழுதிவருவதைக் கண்டு எப்படி நாம் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? முக்கூர் அழகிய சிங்கர் சொன்னதுபோல் இவரும் வெளிப்படையாகச் சொல்லி விவாதத்தை உடனடியாக முடித்துவிடலாமே!

27. நம்முடைய ந்ருஸிம்ஹப்ரியா வாசகர்கள் இம்மாதிரி விஷயங்களில் சர்ச்சை செய்வதை அடியோடு வெறுக்கிறார்கள். அதனால்தான் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் பதில் அளிப்பதை நிறுத்திக் கொண்டுள்ளோம். இம்மாதிரி ஸுதர்சனம் பத்ரிகை வாசகர்களில் அதன் ஆசிரியருக்கு அறிவுரை கூறுபவர் எவரும் இல்லையோ? "இஹ ஸந்தோ நவா ஸந்தி ஸதோ வா நாநுவர்த்தஸே" என்று பிராட்டி அருளியது போல நாமும் வருந்துகிறோம்.

நம்முடைய நிரூபணங்களுக்கு இவர்கள் எழுதும் பதில்கள் சிறிதும் பொருந்தாமல் இருக்கின்றன என்பதை உணர்ந்தே, சென்னை அடிட்டர் ஜகந்நாதன் போன்ற பல வாசகர்கள் இவர்களுக்குத் தக்க மறுப்புகடிதங்களை அவ்வப்போது நீண்ட நாட்களாக எழுதிவருகிறார்கள். அதற்கு இவர்களிடமிருந்து அவர்கள் வசவுக்கடிதங்களையேபதிலாகப் பெற்றார்கள். 'விசிஷ்டாத்வைதமதத்தில் ஒரு ப்ரஹ்மமா? இரண்டு ப்ரஹ்மங்களா?' என்னும் சர்ச்சையைக கோப

http://acharya.org

தாபமின்றாமல் நடத்துவதை விசிஷ்டாத்வைதிகள் எவரும் வெறுக்கமாட்டார்கள். நம்முடைய வாசகர்கள் அனைவரும் இந்தச் சர்ச்சையில் நாம் வெற்றிக்கொடி நாட்டியிருப்பதைக் கடிதங்கள் மூலமும் நாம்போகுமிடங்களிலெல்லாம் நேரிலும் சொல்லி, தங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கின்றனர். வித்வத் வரிஷ்டரான ஸ்ரீமத்பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி இந்தச்சர்ச்சையில் நாம் வெற்றிக் கொடி நாட்டியதற்காகவே நமக்கு 'விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷகர்' 'ஸ்ரீதத்வ நிர்தாரகர்' என்னும் இருபெரும் விருதுகளை அளித்து உலகமறியக் கொண்டாடியிருக்கிறார். தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீ உ.வே. கே. ஜகந்நாதன் போன்றவர்களும் மற்றும் பல நடுநிலையாளர்களும் பலமுறை எடுத்துக்காட்டியும் பின்பும் அதற்குச் சிறிதும் செவிசாய்க்காமல் பிடிவாதமாகத் தவறான விஷயங்களையே தொடர்ந்து எழுதிவரும் இவர்களைக் குறித்தே நாம் பிராட்டி அருளியது போலே வருந்த வேண்டியுள்ளது.

28. ஸுதர்சனம் ஆசிரியருக்குத் தனியாகக் கடிதம் மூலம் தம்முடைய பக்ஷத்தை எழுதுகிறோம். அவருடைய கேள்விகளையும் அவற்றுக்கு நாம் எழுதும் பதில்களையும் அவர் தம்முடைய பத்திரிகையில் அப்படியே வெளியிடட்டும். அப்போது நடுநிலையாளர்கள் உண்மைநிலையைப் புரிந்துகொள்வார்கள்.

நாம் எழுதியிருக்கும் விஷயங்களுக்கு ஓர் அக்ஷரத்தையும் விடாமல் தனிப்புத்தகத்தில் பதில் எழுதப்போவதாக இவர்களே அறிவித்துள்ளார்கள். அப்படியிருக்கும்போது இவர்கள் எழுதியனுப்பும் விதண்டாவாதங்களை நாம் அச்சிட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் புத்தகத்தின் விலை விபரங்களை இவர்கள் ப்ரியாவில் வெளியிட மறுத்தபோதே இவர்களுடைய படுதோல்வியை நடுநிலையாளர்கள் அனைவரும் புரிந்துகொண்டு விட்டார்கள்; நம்முடைய பஞ்சாம்ருத சதுதூஷணியை ப்ரியாவாசகர்களுக்கு இலவசமாக அனுப்புவதாக நாம் எழுதியும், அவ்வறிவிப்பை இவர்கள் ப்ரியாவில் வெளியிட மறுத்தபோதே இவர்களுடைய படுதோல்வியை நடுநிலையாளர்கள் அனைவரும் புரிந்து கொண்டுவிட்டார்கள்; இனி எழுதப்போவதாக இவர்கள் அறிவித்திருக்கும் தனிப்புத்தகத்திலாவது நம்முடைய ஸ்ரீதத்வ

http://acharya.org

ஸர்வஸ்வம் பற்றியும் பஞ்சமபக்ஷசததூஷணிபற்றியும் குறிப்பிட்டு, அதில் உள்ள விஷயங்களுக்குப் பாரா வாரியாக அவர்களுடைய பதிலை அச்சிட்டுப். அதுபோல நாமும் இவர்கள் தனிப்புத்தகத்தின விலைவிபரங்களை ஸுதர்சனத்தில் அறிவித்து, இவர்கள் அந்தத் தனிப்புத்தகத்தில் எழுதும் பதில்களை ஸாரமாகச் சுருக்கிக்கொடுத்து அவற்றின் பொருந்தாமையை நம்முடைய ஸுதர்சனர் பதில்கள் வாயிலாகவே விளக்குவோம். வருங்கால நடுநிலையாளர்கள் உண்மையை உணர்வர்.

29. ஈடு 4-5-8 ல் 'பிராட்டி நித்யஸூரிகளுக்கு அவ்வருகாயிருப்பவள்' என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படிக் கூறியதால் பிராட்டி நித்யஸூரிகளைக் காட்டிலும் வேறுபட்டவளாய் ஈச்வரவகுப்பிலே நிற்கிறவள் என்று கூறப்பட்டதாயிற்று.

தேசிகன் தம்காலத்திலிருந்த பேரறிவாளர்களான பெரியோர்கள் பிராட்டியைப்பற்றி ஐந்துவிதமான கருத்துக்கள் கொண்டிருந்தனர் என்று தம் சதுஃஸ்லோகீ பாஷ்யத்தில் அருளியுள்ளார். இவர்கள் அனைவருமே பிராட்டி நித்யஸூரிகளைக்காட்டிலும் மேம்பட்டவள் என்று ஒப்புக்கொண்டவர்களே என்றும் காட்டியிருக்கிறார். அப்படியிருந்தபோதிலும் சில ஆசார்யர்கள் "பிராட்டி அணுஸ்வரூபையாகையாலே ஜீவவகுப்பைச் சேர்ந்தவளே" என்றும், சில ஆசார்யர்கள் பிராட்டி விபுஸ்வரூபத்தையுடையவளானாலும் ஜீவவகுப்பைச் சேர்ந்தவளே' என்றும், சில ஆசார்யர்கள் "இவள் சித், அசித், ஈச்வரன் என்னும் மூன்று வகுப்பிலும் சேராதவள்" என்றும் திருவுள்ளம்பற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இம்மூன்று பக்ஷங்களைத்தவிர நான்காவதாக ஒருபக்ஷத்தைக்குறிப்பிடும் போது "இவள் ஈச்வர வகுப்பில் சேர்ந்தவளானாலும் இவளுக்கும் ஈச்வரன் எம்பெருமானாகையாலே ஸர்வேச்வரத்வம் அவன் ஒருவனுக்கே உண்டு" என்று அவர்கள் கூறுவதாக அருளியுள்ளார். "இருவரையும் ஸர்வபூதேச்வரர்களாக வேதம்கூறுகையாலே பிராட்டி எம்பெருமானுக்குத் தாழநிற்பது உபய-இச்சா ஸித்தம்" என்னும் ஐந்தாவது பக்ஷத்தையும் குறிப்பிட்டுள்ளார். தேசிகஸ்ரீஸூக்திகளை 40 இடங்களுக்குமேல் எடுத்துக்காட்டி அவர் இதில் நாலாவது பக்ஷத்தையே தழு

http://acharya.org

ஷியவர் என்பதை, பஞ்சமபக்ஷசதுரூஷணியில் ஐயம்திரிபற நாம நிலைநாட்டியுள்ளோம். அதற்கு எந்த பதிலையும்சொல்ல இயலாமல், ஈட்டில் 'பிராட்டி நிதயஸூரிகளைக் காட்டிலும் மேம்பட்டவள்' என்று கூறியிருப்பதைக்கொண்டு அவள் ஈஶ்வரவகுப்பிலே நிற்கிறவள் என்று நம்பிள்ளை திருவுள்ளம் பற்றினர் என்று எப்படி நிர்ணயிக்கமுடியும்? நம்பிள்ளையின் திருவருளைப் பெற்றவராய், வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை தம்முடைய பரந்த ரஹஸ்யத்தில் தேசிகன் காட்டியுள்ள முதல்பக்ஷத்தை மிகத்தெளிவாக நிலை நாட்டியுள்ளார். ஈட்டை ஏடுபடுத்திய வடக்குத்திருவீதிப்பிள்ளையும் தமது அஷ்டாக்ஷர தீபிகையில் இதே முதல் பக்ஷத்தை நிலைநாட்டியிருப்பதாக அஷ்டச்லோகீ வ்யாக்யானம் பெரியபடியில் முன்னோர்களால் காட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முரணாக இவர்கள் ஈட்டுக்குக் கருத்துரைப்பது இவர்கள் நம்பிள்ளைக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமல்லவா? பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்யபரம்பரையைச் சேர்ந்தவராகப் பெரிய திருமுடியடைவில் ஆதிவண் சடகோபஜீயர் எடுக்கப்பட்டுள்ளார். அவர் மணவாள மாமுனிகளுக்குத் துரீயாஶ்ரமம் அளித்ததாகவும் உள்ளது. அஹோபிலமடத்தில் பல பட்டங்களுக்குப்பின் எழுந்தருளியிருந்த ஸ்ரீமந்நாராயண ஜீயர் தம்முடைய புருஷகார மீமாம்ஸையில் பிராட்டிக்குப் புருஷகாரத்வமே தேறும் என்று நிலை நாட்டியிருக்கிறார். பிற்காலத்தில் அஹோபிலமடம் வடகலையாக மாறிவிட்டது என்பது மடத்தின் சிஷ்யர்களும் அறிந்தவரலாறே. ஈடு காலக்ஷேபம் முதலான பல தென்கலை அனுஷ்டானங்கள் மடத்தில் வழக்கிலிருப்பது இதை உறுதிப்படுத்துகிறது. இதற்காகத் தங்களுடைய நவீனக்கொள்கைகளுக்கேற்ப நம்பிள்ளையின் திருவுள்ளக் கருத்துக் கூவேடே மாற்றப்பார்ப்பது பெரிய அநீதியாகும். இதைக் கண்டு நாம் எப்படிப் பொறுத்திருப்பது?

K. A. தேவராஜன், ஆடிட்டர், 5 ராமஸ்வாமி தெரு, சென்னை 1

30. இப்போது நடக்கும் அஹோபிலமடம் ஸ்தாபன 600 வது ஆண்டு விழா பற்றிய அறிக்கையில் "ஆழ்வார்திருநகரியில் நம்மாழ்வாரைச் சுனையிலிருந்து எடுத்து புனःப்ரதிஷ்டை செய்

வித்து கோபுரமண்டபாதி கைங்கர்யங்களைச் செய்ததற்காக ஆழ்வார் திருவுள்ளம் உகந்து அஹோபில மடஸ்தாபகரான சடகோப ஜீயருக்கு 'ஆதிவண் சடகோப ஜீயர்' என்ற விருதையும் ஹம்ஸமுத்திரையையும் அளித்தார்'' என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. திருவாய்மொழிப்பிள்ளையே திருக்கணாம்பி என்றவிடத்தில் களையிலிருந்து ஆழ்வாரைக்கண்டெடுத்து ஆழ்வார் திருநகரியைக் காடுவெட்டி நாடுதிருத்தி ஆழ்வாரைப் புனஃப்ரதிஷ்டை செய்வித்தார் என்று பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். இவர்கள் எழுதியுள்ளதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டு வர்த்தமான அஹோபில மடாதிபதிக்குக் கடிதம் எழுதினேன். எந்த பதிலும் இல்லை. உண்மையை விளக்க வேண்டுகிறேன்.

திருவாய்மொழிப்பிள்ளையே ஆழ்வார் திருநகரியைக்காடு திருத்தி நாடாக்கி ஆழ்வாரை மறுபடியும் ப்ரதிஷ்டை செய்வித்தார் என்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்குமுற்பட்ட பல க்ரந்தங்களில் ஆதாரம் உள்ளது. அவையாவன:— (1) பிள்ளை லோகம் ஜீயர் அருளிய யதீந்த்ரப்ரவணப்ரபாவம் (யதிராஜ பாதுகா பதிப்பு—பக்கம் 46, 63, 64) (2) மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான அப்பிள்ளை அருளிய ஓராண் வழி ஆசார்யர்கள் வாழித்திருநாமத்தில் திருவாய்மொழிப் பிள்ளையின் வாழித்திருநாமத்தில் "தொல்குருகாபுரியதனைத் துலக்கினான் வாழியே" என்றிருப்பது. (3) பெரிய திருமுடியடைவு திருவாய்மொழிப் பிள்ளை வைபவத்தில் "இவர் செய்தருளின கைங்கர்யம் ஆழ்வார் திருநகரி ஜீர்ணோத்தாரணம்'' என்று உள்ளது. (4) பகவத் விஷயத்தனியன்களுக்குப் பிள்ளை லோகம் ஜீயர் அருளிய வ்யாக்யானங்களில் (நமது பதிப்பில் 43—ம் பக்கத்தில்) திருவாய்மொழிப் பிள்ளையின் தனியன் வ்யாக்யானத்தில் திருவாய்மொழிப் பிள்ளை செய்த திருநகரிஜீர்ணோத்தாரணத்தைவிரிவாகவர்ணித்திருப்பது. அஹோபிலமடத்தார் சுமார் நூறுவருஷத்திற்குள் எழுதியுள்ள தங்கள்குருபரம்பரையில் இவ்வுண்மையைமாற்றி, திருநகரித்திருப்பணியை ஆதிவண் சடகோப ஜீயர் செய்ததாக எழுதியிருப்பதொன்றே மடத்தார் காட்டக் கூடிய ஆதாரம். இதை உண்மையென்று நடுநிலையாளர் எவரும் ஏற்க மாட்டார்கள்.

http://acharya.org

ஸ்ரீயா ஸஹ காரண்ய ஸாக்ஷிகை அருள்மொழி

31 (1) 'அவ-ரக்ஷணே' என்னும் தாதுவிலிருந்து தோன்றிய 'அகாரம்' ரக்ஷகனைக் குறிக்கிறது. அகாரத்திற்குப் பெருமாளும் பிராட்டியும் பொருள் என்று நம்பிள்ளை அருளியுள்ளார். "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ—ரக்ஷக:" என்று பிராட்டியோடு கூடியே பெருமாள் ரக்ஷகராகிறார் என்று பாஞ்சராத்ரமும் கூறுகிறது. இதிலிருந்து இருவருமே ரக்ஷகர்கள் என்று தெரிகிறது. "ஞாலத்தூடே" [திருவாய் 6-9-8] ஈட்டில், "கோலத்திருமாமகளோடு உன்னை என்கையாலே ப்ரஹ்ம ஸ்வரூபம் சொல்லிற்று" என்று நம்பிள்ளை அருளுகையாலே "பிராட்டி பெருமாள் ஆகிய இருவரும் ஸர்வப்ரகார ரக்ஷகர்களே, பிராட்டியும் ப்ரஹ்மஸ்வரூபத்தில் சேர்ந்தவளே" என்று நம்பிள்ளை வலியுறுத்தியிருக்கிறார் என்பதை மத்யஸ்தர்கள் அறிவார்கள். இது நம் ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் ஸித்தாந்தம். ஈட்டின் அரும்பதவுரையில் பிற்காலத்தவர் 'புருஷகாரமாகப் பிராட்டி உடன் இருக்கிறாள்' என்று அர்த்தத்தைக் குறைத்து வியாக்யானம் செய்து விட்டார்கள்.

(2) நான்முகன் திருவந்தாதி 'கல்லாதவரிலங்கை' [53] என்னும் பாசுர வ்யாக்யானத்தில், "(திருவில்லாத்தேவரை) மோக்ஷ ப்ரதனானவன் ஸ்ரிய:பதியன்றோ" என்று பெரியவாச்சான் பிள்ளையும் இந்த அர்த்தத்தையே காட்டியிருக்கிறார். ஆகையால் 'பிராட்டியும மோக்ஷத்திற்கு உபாயமாகிறாள்' என்பதற்கு இந்தப் பெரியவாச்சான் பிள்ளை அருளிய ஸ்ரீஸூக்தியும் இடம் தருகிறது என்பதை மத்யஸ்தர்கள் கவனிக்கவேண்டும்.

(1) அகாரத்திற்குப் பெருமாளும் பிராட்டியும் பொருள் என்று நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர் முதலான எல்லாப் பூர்வாசார்யர்களுமே அருளியுள்ளார்கள்; ஆனால் 'குட' சப்தத்திற்கு குடமும், குடத்தின் ஸ்வரூபத்தை நிருபித்துத்தரும் குடத்வமும் பொருளாவதுபோலே, அகாரத்திற்கும் அனைவரையும் எல்லா ப்ரகாரங்களாலும் ரக்ஷிக்கும் ஸர்வேச்வரனும், அவனுடைய ஸ்வரூபத்தை நிருபித்துத்தரும் பிராட்டியும் பொரு

ளாகிறார்கள் என்றே காட்டியிருக்கிறார்கள். "லக்ஷ்மியோடு கூட எம்பெருமான் ரக்ஷகனாகிறான்" என்று கூறும் பாஞ்சராத்ரவசனமும், 'ஸஹாயுக்தே அப்ரதாநே' என்னும் இலக்கண வழக்கின்படி பார்க்கும்போது பெருமாள் ப்ரதாந ரக்ஷகர் என்றும், பிராட்டி அப்ரதாந ரக்ஷகை என்றும் தெளிவாகக் காட்டித்தருகிறது. பெரியவாச்சான் பிள்ளை தம்முடைய வ்யாக்யானங்களில் பலவிடங்களி லும், 'பரந்தரஹஸ்யம்' என்னும் விரிவான ரஹஸ்யத்திலும் "பிராட்டி புருஷகாரமாயிருந்தே ரக்ஷிக்கிறாள். எம்பெருமான் உபாயமாயிருந்து மோக்ஷபல ப்ரதாந ஸங்கல்பத்தைச் செய்து ரக்ஷிக்கிறான்" என்று நிர்ணயித்திருக்கிறார். ஆக, "பிராட்டிக்குப் புருஷகாரத்வமாகிற அப்ரதாந ரக்ஷகத்வமும், எம்பெருமானுக்கு உபாயத்வமாகிற ப்ரதாந ரக்ஷகத்வமுமே உண்டு" என்பது நம்பிள்ளையின் ப்ரதாந சிஷ்யரான பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளம் என்று தெளிவாக விளங்குகிறது. பட்டர் அஷ்டஶ்லோகியில் த்வயத்தின் பொருளை விவரிக்கும் ஆறுவது ஶ்லோகத்தில், "ஈஶாநாம் ஜகதாமதீஶதயிதாம் நித்யாநபாயாம் ஶ்ரியம் ஸம்ஶ்ரித்ய" [உலகிற்கு ஈஶ்வரியும், ஸர்வலோகேஶ்வரனுக்கு இனிய மனைவியும், அவனை என்றும் விட்டுப்பிரியாதவளு மான பிராட்டியை ஆஶ்ரயித்து] என்று பிராட்டியைப் புருஷ காரமாக ஆஶ்ரயிப்பதைப் பிரித்துச் சொல்லி, "ஆஶ்ரயணோ சிதாகில குணஸ்யாங்க்ரீ ஹரேராஶ்ரயே இஷ்டோபாயதயா" [ஆஶ்ரயிப்பதற்கு உறுப்பான எல்லா குணங்களையும் உடைய எம்பெருமானின் திருவடிகளை உபாயமாக ஆஶ்ர யிக்கிறேன்] என்று உபாயத்வம் எம்பெருமான் ஒருவனி டமே உள்ளதாகத் தெளிவாகக்காட்டியிருக்கிறார். பட்ட ருடைய பரம்பரையில் வந்த நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், நாயனா ராச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வா சார்யர்கள் இந்த விஷயத்தை மிகத்தெளிவாகவும், விரிவாக வும், உறுதியாகவும் தம் நூல்களில் பல இடங்களில் காட்டி யிருக்கிறார்கள். புருஷகாரமீமாம்ஸை எழுதிய அழகியசிங் கர் காலம்வரை மடத்தாரின் கொள்கை இதுவாகவே இருந்

http://acharya.org

தது. அதுவரையில் தென்கலையாயிருந்த அஹோபிலமடம் பின்னர் வடகலையாக மாறிவிட்டது என்பது அனைவரும் அறிந்ததே. இப்படியிருக்கும்போது தங்களுடைய நவீனக் கொள்கைகளை விதண்டாவாதம் செய்து நம்பிள்ளை பெரிய வாச்சான் பிள்ளை முதலான தென்னாசார்யர்கள்மீது ஏறிடுவது மஹாஸ்ஸாக்ஷிக்குமுரணான செயல் என்பதை நடுநிலையாளர் நன்கு உணர்வர்.

"பிராட்டி ப்₄ரஹ்ம ஸ்வரூபத்தில் சேர்ந்தவளே" என்பதை எவரும் மறுக்கவில்லை. ப்₄ரஹ்மத்துக்கு ஸ்வரூபநிரூபக பூ₄தையாய், அவன் ஸ்வரூபம் ரூபம் முதலானவற்றை என்றும் விட்டுப் பிரியாதவளாக அவள் இருக்கிறாள் என்பதையும் எவரும் மறுக்கவில்லை. "பிராட்டி தன் பாரதந்திரியத்துக்குச் சேர எம்பெருமானிடம் புருஷகாரம் செய்தே நம் அனைவரையும் ரக்ஷிக்கிறாள். ஸ்வதந்திரனான எம்பெருமானே மோக்ஷமளிக்கும் ஸங்கல்பத்தைச் செய்து ரக்ஷிக்கிறான்" என்பதே தென்னாசாரியர்களின் முடிந்த முடிவு என்பதை எவராலும் மறுக்க இயலாது. இதில் தேசிகனின் திருவுள்ளம் சிறிது மாறுபடுகிறது. சது:ஶ்லோகீ மூன்றுவது ஶ்லோக பா₄ஷ்யத்தின் இறுதியில், "மோக்ஷப்ரதே₃ ப₄க₃வதி முமுக்ஷூணாம் கூ₄டகதயைஷா திஷ்ட₂தீதி ச ஸர்வஸம்மதம், பரிபூர்ணாநுப₄வ ப்ரதா₃ந ஸங்கல்பஸ்து ப₄க₃வத: ஸ்வஸ்யைவ வா, ஸபத்நீகஸ்ய வேதி யதா₂ப்ரமாணம் ப₄வது|" [எம்பெருமான் மோக்ஷமளிக்கும் போது முமுக்ஷுக்களுக்கு இவள் புருஷகாரமாயிருக்கிறாள் என்பது எல்லா ஆசார்யர்களும் இசைந்தது. பரிபூர்ண ப்₃ரஹ்மாநுப₄வத்தை அளிக்கும் ஸங்கல்பத்தை ப₄க₃வான் தானே செய்கிறானா? அல்லது பத்நியோடு கூடியிருந்து செய்கிறானா என்பது ப்ரமாணங்களின்படி இருக்கட்டும்.] என்று இரண்டு பக்ஷங்களையும் தெளிவாகக் காட்டியிருக்கிறார். ப₄க₃வான் தானே ஸங்கல்பம் செய்கிறான் என்பது தென்னாசாரியர்களின் பக்ஷம். பத்நியோடு

http://acharya.org

கூடியிருந்து செய்கிறான் என்பது தேசிகன் பக்ஷம். ''கூடியிருந்து செய்கிறான்'' என்று ஆழ [illegible] சொல்லும் போதும் ''ப்ராட்டியும் பெருமாளும் சேர்ந்து செய்கிறார்கள்'' என்று சொல்லாமல், ''ஸபத்நீகஸ்ய'' [பிராட்டியோடு கூடிய எம்பெருமான் ஸங்கல்பம் செய்கிறான்.] என்று [illegible] அருளுகையால், பெருமானுடைய ஸங்கல்பமே ப்ரதானமானது என்றும், பிராட்டியின் ஸங்கல்பம் அப்ரதானமானது என்றும் அவர் திருவுள்ளம் என்று தெளிவாக விளங்குகிறது. ''உண்மை இவ்வாறிருக்கும்போது 'பிராட்டியும் பெருமானைப் போலவே ப்ரஹ்மமாயிருக்கிறாள்' — என்று பல பல தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கு முரணாக இவர்கள் கூறுவது தேசிக ஸம்ப்ரதாயமும் அல்ல'' என்று நாம் ஸ்ரீதத்வ ஸாரஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ மததூஷணியிலும் விரிவாக நிலை நாட்டியிருக்கிறோம். அதற்கு எந்த பதிலும் சொல்ல இயலாமல், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி களுக்கு இவர்கள் அபார்த்தம் செய்வதை நடுநிலையாளர்கள் ஒருகாலும் ஏற்க மாட்டார்கள். நம்பிள்ளையின் 6—9—3 ஈட்டு ஸ்ரீஸூக்திக்கு ''கோலத்திருமாமகளோடு கூடிய எம் பெருமான் ப்ரஹ்ம ஸ்வரூபம்'' என்று பொருளாகுமேயொழிய ''கோலத்திருமாமகள் ஒரு ப்ரஹ்ம ஸ்வரூபம்; எம்பெருமான் ஒரு ப்ரஹ்ம ஸ்வரூபம்'' என்று ஒரு நாளும் பொருளாகாது.

(2) 'திருவில்லாத்தேவர் பரம் பொருளாகமாட்டார்கள்' என்று திருமழிசையாழ்வார் அருளியிருப்பதிலிருந்தே, ''திருவும் பரம்பொருளாகமாட்டாள்'' என்பது தன்னடையே ஸித்திக்குமே. மோக்ஷத்தை அளிப்பவன் லக்ஷ்மீபதி என்பதை யார் மறுத்தார்கள்? இதிலிருந்து பிராட்டியும் எம்பெருமானைப்போலே உபாயமாகிறாள் என்று எப்படி ஸித்திக்கும்? பெரியவாச்சான்பிள்ளை பரந்த ரஹஸ்யத்தில் தாமே ஸாதித்திருப்பதற்கு முரணாக அவருடைய ஸ்ரீஸூக்திக்கு இப்படி அவப்பொருள் கொள்வது மநஸ்ஸாக்ஷிக்கு ஒவ்வாத செயலன்றோ. இதை நடுநிலையாளர்கள் எவரும் ஏற்க மாட்டார்கள்.

http://acharya.org

ப்ரியா பஹுதான்ய தை அருள்மொழி

32. சரணாகதி செய்யும் போது, அதாவது ஆத்மஸமர்ப்பணம் பண்ணும்போது பிராட்டி எம்பெருமான் இருவரையும் உத்தேச்யராகக் கொண்டுதான் நாம் ஸமர்ப்பிக்கிறோம். ஆத்ம வஸ்துவைப் பெறக் கடவர்கள் இருவருமே என்று குறிக்கொண்டுதான் ஆத்ம வஸ்துவை பிராட்டி எம்பெருமான் இருவருக்கும் ஸமர்ப்பிக்கிறோம். இது ஸ்வாமி ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ஸித்தாந்தமானது. "ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணும்போது பிராட்டி எம்பெருமானுக்கு விசேஷணமாகையால் அதாவது ஆத்மாவாகிற ஹவிஸ்ஸைப் பெறுதலையாய் அதனால் உத்தேச்யையாய் இராமல் ஒதுங்கி உள்ளாள். ஸ்ரீ வைகுண்டம் சென்று கைங்கர்யம் செய்யும் போதுதான் விசேஷணமாய், நாம் செய்யும் கைங்கர்யங்களுக்குப் பிராட்டியும் எம்பெருமானுமாகிய இருவருமே உத்தேச்யராய் இருக்கிறார்கள். இந்தத் தசையில் மட்டும் பிராட்டி விசேஷணமாய் இருக்கிறாள்" என்று ஆச்ரயண தசையிலும் போக தசையிலும் வாசியுடன் - பேதத்துடன் அர்த்தம் கொள்கிறார்கள் மற்றையோர். நாம் ஆச்ரயண வேளையிலும், போக வேளையிலும் வ்யத்யாஸம் - பேதம் இன்றி ஒரு மிதுனத்தையே உத்தேச்யமாகக்கொள்கிறோம்.

பெரிய வாச்சான் பிள்ளை அருளிய இருபத்து நாலாயிரப் படியில் (7-9-11) உள்ள வாக்யம் பின்வருமாறு :— (இங்கும் அங்கும்) இத்யாதி:- இஹ-பர லோகங்கள் இரண்டிலும் ஸ்ரிய: பதி அல்லது தஞ்சமில்லை என்னுமிடத்தை அநுஸந்தித்து ... ஸாதநாநுஷ்டாந வேளையோடு - ப்ராப்தி வேளையோடு வாசியற இவ்வாத்மாவுக்கு ஒரு மிதுநமே தஞ்சம் என்கை. 'பண்டை நாளாலே' என்கிறபடியே கைங்கர்யம் பண்ணும் இடத்திலும். அவள் முன்னாகப் பண்ண வேணுமிறே. ஆச்ரயண வேளையிலும் அவள் முன்னாக வேணுமிறே" என்று.

வ்யாக்யான ஸ்ரீ ஸூக்திகளில் நம்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் "ஆச்ரயண வேளை

9

http://acharya.org

யோடு போகவேளையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யம்" என்று அருளியிருக்கையால், 'ஶரணாகதி மந்த்ரத்தில் பூர்வ வாக்யத்தில் பிராட்டிக்கு நாம் பண்ணும் ஆத்ம ஸமர்ப்பணத்தில் உத்தேஶ்யத்வம் கிடையாது. ஸ்ரீ வைகுண்டத்தில் முக்தர்களான நாம் செய்யும் கைங்கர்யத்தில் பிராட்டிக்கும் உத்தேஶ்யத்வம் உண்டு' என்றவாசி (பேதம்) இன்றி அதாவது ஶரணாகதி செய்யும் ஸமயத்தில் - நாம் பிராட்டியைக் குறித்து ஆத்ம ஸமர்ப்பணம் செய்யக்கூடாது. எம்பெருமானை மட்டும் உத்தேஶித்துத்தான் ஆத்மஸமர்ப்பணம் செய்யவேண்டும்; மோக்ஷ தசையில் கைங்கர்யம் செய்யும்போது மட்டும் பிராட்டியையும் உத்தேஶித்தே கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற பேதமின்றி இருவரையும் உத்தேஶித்தே ஆத்ம ஸமர்ப்பணத்தையும், கைங்கர்யத்தையும் செய்யவேண்டும் என்ற கொள்கைக்கு இவர்களின் ஸ்ரீ ஸூக்திகள் ஏற்ற ப்ரமாணமாக உள்ளன.

ப்ரியாவின் இந்த நிர்ணயம் — நம்பிள்ளை வடக்குத்திரு வீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை ஆகிய தென்னாசார்யர்கள் தங்களுடைய கிரந்தங்களில் ஶரணாகதி லக்ஷணத்தை நிருபித்திருப்பதற்கும், தேசிகன் தமது கிரந்தங்களில் ஶரணாகதி லக்ஷணத்தைக் காட்டியிருப்பதற்கும் வேற்றுமையை அறியாமையால் விளைந்ததாகும். அதாவது—

"அநந்ய ஸாத்₄யே ஸ்வாபீ₄ஷ்டே மஹாவிஶ்வாஸ
பூர்வகம் ।
ததே₃கோபாயதாயாச்ஞா ப்ரபத்தி: ஶரணாக₃தி: ॥"
[பா₃த₃முனி. விஷ்வக்ஸேநஸம்]

[தன்னுடைய இஷ்டம் வேறொன்றினாலும் ஆகாதபோது மஹாவிஶ்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு, அவனொருவனையே உபாயமாக இருக்கவேண்டுமென்று யாசிப்பது ப்ரபத்தி; அதுவே ஶரணாக₃தி]

http://acharya.org

" அஹமஸ்ம்யபராதா₄நாம் ஆலயோऽகிஞ்சநோऽக₃தி:।
த்வமேவ உபாய பூ₄தோ மே ப₄வேதி ப்ரார்த்த₂நா
மதி:॥
ஶரணாக₃திரித்யுக்தா ஸா தே₃வேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம்॥
[அஹிர்-ஸம்ஹிதை 37-30]

["நான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாயிருக்கிறேன். (என்னை ரக்ஷித்துக்கொள்ள) ஓர் உபாயமுமற்றவனாயிருக்கிறேன்; (உன்னையொழிய) வேறு க₃தியில்லாதவனாக இருக்கிறேன். நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக" என்று பிரார்த்திக்கும் பு₃த்₃தி₄யே ஶரணாக₃தி எனப்படுகிறது. அது இந்த ப₄க₃வான் விஷயத்தில் செய்யப்படட்டும்.] என்கிற லக்ஷண வாக்யங்களில் சொன்னபடியே எம்பெருமானையே உபாயமாக வரிக்கும்நினைவே ஶரணாக₃தியென்றும், இதற்கு உபாயத்வம் இல்லையென்றும் அதி₄காரி விஶேஷணத்வமே உண்டு என்றும், இத்துடன் சேர்ந்திருக்கும் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான ஐந்தும் 'அவகா₄தஸ்வேதம்' (நெல் குத்தினால வியர்வை வடிவது) போலே தன்னடையே நிகழும் ஸம்பா₄விதஸ்வபா₄வங்கள் என்றும பரந்தரஹஸ்யத்தில் பெரிய வாச்சான்பிள்ளையால் நிர்ணயிக்கப்பட்டது.

ஷோட₄ஹி வேத₃விது₃ஷோ வத₃ந்த்யேநம் மஹாமுநே।
ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்॥
ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸோ கோ₃ப்த்ருத்வ வரணம் ததா₂।
ஆத்மநிக்ஷேபகார்ப்பண்யே ஷட்₃விதா₄ ஶரணாக₃தி:॥
[அஹிர் ஸம 37-27, 28]

[மஹரிஷியே! வேத₃மறிந்தவர்கள் இந்த ஶரணாக₃தியை ஆறு வகைப்பட்டதாகச் சொல்லுகின்றனர். அவையாவன— 1 (ப₄க₃வத் பா₄க₃வத விஷயத்தில்) அநுகூலனாயிருப்பதாக ஸங்கல்பித்துக்கொள்வது. 2 (அவர்களுக்கு) ப்ரதிகூலமாயிருப்பவற்றை விடுவது. 3. உடையவன் உடமையைக் காப்பாற்றுவான் என்னும் நம்பிக்கை. 4. 'நீயே என்னை உபாயமாயிருந்து ரக்ஷிக்க வேண்டும்' என்று எம்பெருமானை வேண்டுவது. 5. தன்னுடைய ஆதமாவை அவனிடத்திலே அடைக்கலமாகவைப்பது. 6. அவனை

http://acharya.org

யடையத் தன்னிடம் ஒரு கைம்முதலுமில்லாமலிருப்பது என்று ஆறுவிதமான (தானே விளையும்) தன்மைகளோடு கூடியது ஶரணாகதி] என்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் சரணாகதி ஆறுவிதமாகச் சொல்லப்பட்ட போதிலும் "என்னை ஒருவனையே உபாயமாகப் பற்றுவாய்" என்று சரம ஶ்லோகத்தில் எம்பெருமான் விதிக்கையாலும் "ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்று அநுஸந்தாந ரஹஸ்யமான த்வயமும் உபாயமாகப் பற்றுவதையே காட்டுகையாலும் ஆழ்வார்களும் சரணமடையும்போது பலவிடங்களில் உபாயமாக வரிப்பதையே சரணாகதியாகக் கூறுகையாலும், 'கோப்த்ருத்வவரணமே சரணாகதி என்றும், மற்ற ஐந்தும் ஸம்பாவித ஸ்வபாவங்கள் என்றும் பரந்த ரஹஸ்யத்திலும், "கண்ணுதவாளவுணர்" [பெரிய திருமொழி 2-6] ப்ரவேசத்திலும் பெரியவாச்சான்பிள்ளையும், 'தனித்வய ரஹஸ்யத்தில் பிள்ளைலோகாசார்யரும் நிர்ணயித்தனர்: இதை அநுஸரித்து கோப்த்ருத்வ வரணமாகிற உபாயஸ்வீகாரத்தையே சரணாகதி என்றும் மற்ற ஐந்தும் ப்ரபந்நனுக்குப் பிறக்கும் ஸம்பாவித ஸ்வபாவங்களாகிற அங்கங்கள் என்றும் பட்டர் நம்பிள்ளை வழிவந்த தென்னாசார்யர்கள் அனைவரும் நிர்ணயித்தார்கள்.

வேதாந்ததேசிகன் "நிக்ஷேபாபரபர்யாய: ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத: । ஸந்யாஸ: த்யாக இத்யுக்த: ஶரணாகதிரித்யபி॥" [லக்ஷ்மீதந்த்ரம் 17-75] ['நிக்ஷேபம்' என்னும் மறுபெயரையுடைய ந்யாஸம் ஐந்து அங்கங்களை உடையது. அதுவே ஸந்யாஸம் என்றும் த்யாகம் என்றும ஶரணாகதி என்றும் சொல்லப்படுகிறது.] என்கிற வசனத்தை ஶரணாகதி லக்ஷணமாகக்கொண்டு "ஆத்மாத்மீய பரந்யாஸ." [தன்னையும் தன் உடைமைகளையும்எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பது] என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்படும் ஆத்ம ஸமர்ப்பணமே சரணாகதி என்றும் 'ஆநுகூல்ய ஸங்கல்பம்' முதலான மற்ற ஐந்தும் அதற்கு அங்கங்கள் என்றும் இந்த சரணாகதி ஒரு ஸாத்யோபாயமே என்றும் நிர்ணயித்தார்.

http://acharya.org

மணவாளமா முனிகள் ஸ்ரீவசநபூஷணவ்யாக்யானம் முதலானவற்றிலும், ஸ்ரீவசநபூஷண அரும்பதவுரைகள், ஸ்ரீவசநபூஷண மிமாம்ஸா பாஷ்யம் முதலானவைவற்றில் பல தென்னாசார்ய மஹாநீயர்களும் — "ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:" என்னும் சொல்லப் ப்ரபத்தியில் உபாயபுத்தி வைக்கும் ஸ்வகத ஸ்வீகார நிஷ்டையைக் காட்டுகிறது. உபநிஷத் ஸித்தமான அந்த 'ந்யாஸம்' ஸர்வாதிகாரமல்ல—என்று நிர்ணயித்தார்கள். "எனதாவி தந்தொழிந்தேன்" [திருவாய் 2-3-4] என்று ஆத்மஸமர்ப்பணம் செய்த ஆழ்வார் அதே பாட்டில் "எனதாவியார்? யான் ஆர்" என்று அதற்கு அநுதாபத்தைத் தெரிவிக்கையாலும், "அஹம் அத்யைவ மயா ஸமர்ப்பித:" [ஸ்தோ-ர 52] [இவ்வாத்ம வஸ்து இன்றே என்னால் ஸமர்ப்பிக்கப்பட்டது] என்று ஆத்ம ஸமர்ப்பணம் செய்த ஆளவந்தாரும் அடுத்த ஶ்லோகத்தில், "அதவா கிம்நு ஸமர்ப்பயாமி தே" [உனக்கு அடியேன் எதை ஸமர்ப்பிக்கமுடியும்?] என்று அதற்கு அநுதாபத்தைக் காட்டுகையாலும் ஆத்ம ஸமர்ப்பணம் ஶரணாகதி ஆகாது என்பதை நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை முதலான திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்களும், ஸ்தோத்ரரத்ந வ்யாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளையும் மிகத் தெளிவாகக் காட்டியிருக்கின்றனர். தேசிகன் அவ்விடத்தில் தம் ஸ்தோத்ர பாஷ்யத்தில் தம் கருத்து வேற்றுமையைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இவை எதையும் புரிந்துகொள்ளாமல் 'நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை முதலான தென்னாசார்யர்களும் தேசிகனைப்போலே ஆத்மஸமர்ப்பணத்தையே ஶரணாகதியாகக்கொண்டார்கள்' என்று இவர் எழுதுவது தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தை அறியாத பாமரர்களைக் குழப்புமேயொழிய அறிவாளிகளைக் குழப்பமுடியாது.

http://acharya.org

திருவாய் (7-9-11) வ்யாக்யானங்களில் நம்பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் "ஸாதநாநுஷ்டான வேளையோடு ப்ராப்தி வேளையோடு வாசியற இவ்வாத்மாவுக்கு ஒரு மிதுநமே தஞ்சம் என்கை" என்று அருளியிருப்பது தேசிக ஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தும் என்று இவர் எழுதுவதும் அடியோடு பொருந்தாது. இவரே எடுத்திருக்கும் அடுத்த வாக்யம், "கைங்கர்யம் பண்ணும் இடத்திலும் அவள் முன்னாகப் பண்ண வேணுமிறே. ஆச்ரயண வேளையிலும் அவள் முன்னாக வேணுமிறே" என்பது இவருக்கு மிகவும் பாதகமாகுமே யொழிய ஸாதகமாகாது. "பகவத் கைங்கர்யம் பண்ணுமவர்களில் தலைவியான பெரியபிராட்டியார் 'திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்' [திருவாய் 8-1-1] என்கிறபடியே மற்றவர்கள் கைங்கர்யம் செய்யுமிடத்தில் அவர்களைக் கைங்கர்யம் செய்ய நியமிக்கையாலே அவள் முன்னாகவே — அவளை முன்னிட்டுக் கொண்டே கைங்கர்யம் பண்ணவேண்டும். ஆச்ரயண வேளையில் எம்பெருமானை உபாயமாகப் பற்றும்போதும் அவளைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டே பற்றவேண்டும்" என்பதே இவ்வாக்யத்தின் தெளிவான பொருள். இவர் கூறுகிற படி ஆத்ம ஸமர்ப்பணத்தையே ப்ரபத்தியாக இந்த ஆசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருந்தால், "ஆச்ரயண வேளையிலும் மிதுநத்தை உத்தேசித்தன்றோ பரஸமர்ப்பணம் செய்யவேண்டும்" என்றல்லவோ இங்கு வாக்யம் இருக்க வேண்டும். "அவள் முன்னாக வேணுமிறே" என்று அருளியிருப்பது இக்கருத்தை எப்படித் தெரிவிக்க முடியும்? ஆகையால் 'ஸாதநாநுஷ்டான வேளையோடு ப்ராப்தி வேளையோடு வாசியற இவ்வாத்மாவுக்கு ஒரு மிதுநமே தஞ்சம்' என்னும் முன் வாக்யத்திற்கு "எம்பெருமானை உபாயமாகப் பற்றும்போது இவளைப் புருஷகாரமாகப்

http://acharya.org

பற்றியே அவனை உபாயமாகப் பற்றவேண்டும். ஆகையால் ஸாதநாநுஷ்டான வேளையிலும் ஒரு மிதுநமே தஞ்சம்: கைங்கர்யம் செய்யும்போது இவளால் நியமிக்கப் பெற்றுக் கைங்கர்யம் செய்யவேண்டுமாகையாலே ப்ராப்தி வேளையிலும் ஒரு மிதுநமே தஞ்சம். எனவே இரண்டு வேளைகளிலும் ஒரு மிதுநமே தஞ்சம் என்பதில் எந்த வாசியும் (வித்தியாசமும்) இல்லை'' என்றே பொருள் கொள்ளவேண்டும். இவர் கூறுகிறபடி பொருள் கொண்டால் முன்வாக்கியத்திற்கும், பின்வாக்கியத்திற்கும் பொருத்தமில்லாமல் போய்விடும். ஆகையால் ஈட்டு ஸ்ரீஸூக்திகளும் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளும் தமக்கு ஸாதகம் என்று இவர் எழுதியது வெறும் பகற்கனவாக முடிந்தது.

பல மாதங்களாக நாம் எழுதிவரும் நம்முடைய பதில்களுக்கு எந்த பதிலையும் கூறாமல், ஆங்காங்கு சில தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை எடுத்து அவற்றுக்கு மனம்போனபடி பொருளுரைத்து "இது எங்கள் ஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தும்'' என்று எழுதுவது ஒரு பெரிய ஆஸ்தானத்தை வகிக்கும் இவருக்குத் தகுமா? என்பதை நடுநிலையாளர்களே நிர்ணயிக்கவேண்டும். இப்படி இவர் தமக்குப் பரிசயமில்லாத தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை எடுத்துக்கொண்டு அவர்களின் திருவுள்ளத்திற்கு மாறாக அவப்பொருளுரைப்பது-மநஸ்ஸாக்ஷியில்லாத சில ஆசிய வாதிகளும், பத்திரிகைகளும் "முனியே நான்முகனே முக்கண்ணப்பா'' [திருவாய் 10-10-1] "அரியை அயனை அரனை அலற்றி'' [திருவாய் 10-10-11] "சிவனாய் அயனாய்'' [திருவாய் 6-9-1] முதலான சில பாசுரங்களை எடுத்துக்கொண்டு ஆழ்வாரை சிவவிஷ்ணு ஸாமயவாதி யென்று பிதற்றுவதையே ஒக்கும்.

http://acharya.org

K. ரகுநாதன், ஆமூர்.

33. 3-12-98 வியாழக்கிழமை தினமணியில் "கல்கி அவதாரக் காட்சிதரும் சந்நதி" என்ற தலைப்பில் ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதி பற்றிய சிலசெய்திகள் கொடுக்கப் பட்டுள்ளன. அதில் பத்தாம் பாராவில், "இந்த அவதாரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகத்தின் அதிபதி என்பதால் தசாவதார ஸன்னிதி நவக்கிரகத்தலமாக அறியப்படுகிறது" என்றும், 11ம் பாராவில் நவக்கிரகங்கள் எந்தெந்தஅவதாரம் என்பது பற்றிய விபரமும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன். தசாவதார சன்னிதியின் உண்மை வரலாறுபற்றி ஸ்ரீ உ வே கோயிலண்ணன் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஒரு அறிக்கை வெளியிட்டு, ஸ்ரீரங்கம் அத்யயன உத்ஸவத்தில் ஸேவார்த்திகளுக்கு விநியோகித்தார். இதன் பிரதிகளை ஸுதர்சனத்தில் வெளியிடக் கொடுத்திருக்கிறேன்: இணைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அஹோபில மடத்தின் ஸ்ரீரங்கம் பிரதிநிதியால் வெளியிடப்பட்ட தினமணிக்கட்டுரையில் ஒவ்வொரு கிரகத்தையும் எம்பெருமானின் அவதாரமாகக் குறிப்பிட்டுள்ளதும், தசாவதார ஸன்னிதியை நவக்கிரகத்தலம் என்று எழுதியுள்ளதும் வைணவர்கள் அனைவராலும் ஒருமுகமாகக் கண்டிக்கத் தக்கது. ஷை கூற்றினை வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் ஏற்றுக் கொள்கிறாரா? என்பது உலகிற்குத் தெரியவேண்டும். மௌனமாயிருந்தால் ஏற்றுக்கொள்கிறார்என்றே உலகம் நினைக்கும். அன்பர்கள் உண்மையை உணர்வதற்காக, கோயிலண்ணன் ஸ்வாமியின் மறுப்பு அறிக்கை தைமா [614] ஸுதர்சனத்திலும், ஸுதர்சனர் பதில் 14-வது சதகத்திலும் இணைக்கப்படுகிறது.

http://acharya.org

வித்வான் ஸ்ரீ உ. வே D. ஸ்ரீநிவாஸாசாரியர், 5 லக்ஷ்மீநிவாஸ், ஸுதர்சன் காலனி, தானே (E) 400 603 [34, 35 கேள்விகள்]

34 என்னுடைய 'விப்ரஸந்தேஶம்' காவியம் பற்றி ஸுதர்சனத்தில் விமர்சனம் எழுதியதற்கு நன்றி. எனக்கு 85 வயது ஆகிறது. எப்போதுமே கலாத்வேஷம் இருந்த தில்லை. சிலர் தனக்கு சரி என்று தோன்றும் விஷயத் தைக்கூடச் சிலகாரணங்களால் வெளிப்படையாக எழுதத் துணிவதில்லை. எனக்கு இனி புகழோ பணமோ வேறு சௌகரியமோ தேவையில்லை. ஆகையால் பின்வரும் விஷயத்தை வெளிப்படையாக எழுதுகிறேன். முடியு மானல் தேவரீர் பத்திரிகையிலும் பிரசுரிக்கலாம்:— சிகை யில் இரண்டு வகை வழக்கத்தில் இருந்துவருகிறது. ஸ்ரீவைஷ்ணவர்களிடமும், சிதம்பரம் தீக்ஷிதர்களிடமும் 'முன்குடுமி' வைத்துக்கொள்ளும் வழக்கம் உள்ளது. அந்த முறைதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. 'சிகை' மேல்நோக்கி இருப்பதைத்தான் குறிக்கும். அக்னிக்கு 'ஶிகீ' 'ஶிகாவாந்' என்று பெயர்உள்ளது. மேல் நோக்கிச்செல்லும்ஜ்வாலைதான் அங்குகுறிப்பிடப்படுகிறது. அதுபோல் தேங்காயின் குடுமிக்கும் 'ஶிகா' என்று பெயர். 'சிகா' என்பதற்குப் பர்யாயமாக 'ஶிகர' என் கிற சொல்லும் வழங்குகிறது. மேல்நோக்கி இருப்பதைத் தான் சிகரம் என்கிறோம். ஆகவே முன்குடுமி ஸம்ப்ர தாயமே சிறந்தது. இதை நான் இதரவைணவப் பத் திரிகைகளுக்கு எழுதினல் அவர்கள் வெளியிடமாட் டார்கள். வெளியிட்டு 'இதற்குத் தங்களுடைய உடன்பாடு இல்லை' என்று குறிப்பு எழுதலாம். அவ்வளவு பெருந் தன்மை அவர்களிடம் இல்லை. தாங்கள் ஸுதர்சனத்தில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிகைகளில் சிறந்தது பூர்வசிகை என்பது மறுக்கமுடி யாத உண்மை. அது உயரநோக்கியிருப்பதால் ஊர்த்வ

http://acharya.org

ஶிகை என்றும் பெயர் பெற்றுள்ளது. உயிரினங்களில் உயர நோக்கி வளரும் மனிதன் சிறந்தவன். புண்ட்₃ரங்களில் (நெற்றிக்குறிகளில்) மேல்நோக்கி இடப்படும் ஊர்த்₄வ புண்ட்₃ரம் சிறந்தது.

உத்₃த₄ரத்யுபரி ப₄க்த ஜநாநிதி
ஊர்த்₄வதாஶ்ரயண ஸூசித ஶக்தி|
ஊர்த்₄வபுண்ட்₃ரதிலகம் ப₃ஹுமாநாத்
கிம் பி₃ப₄ர்ஷி வரத₃! ஸ்வலலாடே||
[வரதராஜஸ்தவம் 26]

[வரதனே! ப₄க்த ஜனங்களை உயர்கதிக்கு அழைத்துச் செல்லுகிறது என்பதை உயரநோக்கி அமைந்திருப்பதின் மூலம் உணர்த்துகின்ற ஊர்த்₄வபுண்ட்₃ரதிலகத்தை உன் நெற்றியிலும் ப₃ஹுமாநத்தாலே (சிறந்தது என்னும் அபிமாநத்தாலே) தரிக்கிறாயோ?] என்று கூரத்தாழ்வான் ஊர்த்₄வபுண்ட்₃ரத்திற்குக் கூறியிருக்கும் ந்யாயம் ஊர்த்₄வ சிகை₂யாகிற பூர்வசிகைக்கும் ஒக்கும். இதனாலேயே பூர்வ சிகையையுடைய ஆழ்வார்களுடைய தனியன்களில் அந்த சிகை சிறப்பித்துக்கூறப்படுகிறது. பெரியாழ்வார் திருநக்ஷத்ர தனியனில் "விஷ்ணுசித்தம் புரஶ்ஶிக₂ம்" [பூர்வசிகையை உடைய விஷ்ணுசித்தரை] என்றும், தொண்டரடிப் பொடியாழ்வார் தனியனில் "ரங்கே₃ஶ கேளிஸக₂ம் ஊர்த்₄வ ஶிக₂ம் த்₃விஜேந்த்₃ரம்" [ஸ்ரீரங்கநாதனுக்கு இனிய தோழராய், ஊர்த்₄வ புண்ட்₃ரத்தைப்போல உயரநோக்கிய பூர்வ சிகையை உடையவராய்] என்றும், மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரத்தனியனில் "சைத்ரஸ்த₂ சித்ரோத்₃ப₄வம் ஊர்த்₄வசூட₃ம்" [சித்திரை மாதத்தில் சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவரும் உயரநோக்கிய பூர்வசிகையை உடையவரும்] என்றும் பூர்வசிகை சிறப்பிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மற்ற சிகை இப்படி எந்தத் தனியனிலும் சிறப்பிக்கப்படவில்லை. தனியன் என்பது சிறப்பைக் கூறவந்தது என்பது நிர்விவாதம்.

http://acharya.org

சோலைமலைக் குறவஞ்சி என்னும் நமது வெளியீட்டை இயற்றிய ஜம்பிலி புத்தூர் கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி என்பவர் எல்லா தர்ம சாஸ்திரங்களையும் ஆராய்ந்து ஶிகாநிர்ணய ஶாஸ்த்ரம் என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார் என்றும், அதில் பூர்வசிகை தெய்வங்களுக்குரிய ஶிகையாகையாலே தெய்வ ஶிகை என்றும், பிராம்மணர்களுக்குரிய சிகையாகையாலே ப்ரஹ்மஶிகை என்றும் ஶாஸ்த்ர ப்ரமாணங்கள் காட்டியிருக்கிறார் என்றும் அடியேனுடைய தந்தையார்கூறக் கேட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டில் சிகைகளைப் பற்றிய வரலாறு இங்கு குறிக்கொள்ளத்தக்கது. வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு முதன் முதலில் வந்த பிராம்மணர்கள் 3700 பேர் திருவெள்ளறையில் குடியேறினார்கள் என்று திருவெள்ளறைத் தலபுராணம் கூறுகிறது. இவர்கள் தமிழ்நாடெங்கும் பரவி, பூர்வசிகையுடனும் "திருவெள்ளறையார்" என்னும்பெயருடனும் விளங்கி வருகிறார்கள். எம்பெருமானார் திருவெள்ளறையில் இருந்து ஐம்பத்திரண்டுபூர்வசிகைக்குடும்பங்களை மேலக்கோட்டைக்குத் திருநாரணனை ரக்ஷிப்பதற்குக் குடியேற்றினார் என்று வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஐம்பத்திருவர்களில் பலர் பூர்வசிகையுடனே ஸமீபகாலம் வரை விளங்கினார்கள் என்பதும், சதுஸ் ஶாஸ்த்ர வித்வானான குப்பண்ணா ஸ்வாமியும் அவர்களில் ஒருவர் என்பதும் மேலக்கோட்டையிலுள்ளவர்கள் அனைவரும் அறிந்ததே. சோழதேசத்திற்கு முதன்முதலில் வந்தவர்களாகையாலே இவர்கள் 'சோழியர்கள்' என்ற சிறப்புப்பெயருடன் இன்றளவும் விளங்கி வருகின்றனர். இதுபோலவே ஆழ்வார்கள் காலத்தில் திருநாங்கூரில் குடியேறிய நாலாயிரம் பூர்வசிகை அந்தணர்களும், 'நாங்கூர் நாலாயிரவர்' என்று அழைக்கப்பட்டார்கள். (மலைநாட்டில் (கேரளாவில்) திருச்செங்குன்றூர் திவ்யதேசத்தில் பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவர்கள் மூவாயிரம் குடும்பங்கள் வாழ்ந்ததை நம்மாழ்வார் 'மனைக்கொள் சீர் மூவாயிரவர்' [திருவாய் 8-4-6] என்று பாடியுள்ளார். அவர்களின் வழிவந்தவர்

களே அங்குரப் பூதிரிகளாக முன் குடுமியுடன் விளங்குகிறார்கள். தில்லைச் சித்ர கூடத்திலும் மூவாயிரப் பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவக் குடும்பங்கள் கோவிந்தராஜனுக்கு அர்ச்சகர்களாயிருந்தனர். "தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் அந்தணர்களொரு மூவாயிரவர் ஏத்த" [பெருமாள் திருமொழி 10-2] என்று குலசேகர ஆழ்வாரும்,

மூவாயிரர் நான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே
[பெரியதிரு 3-2-8]

என்று திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளனர். இவர்கள் கிருமிகண்டன் முதலான சோழ மன்னர்களால் துன்புறுத்தப்பட்டுச் சைவர்களாக மாற்றப்பட்டது வரலாற்று நூல்களில் பிரசித்தமானது. ஆயினும் அவர்கள் பூர்வசிகையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றிலிருந்து ஆதிகாலத்தில் தமிழ்நாட்டிலிருந்த அந்தணர்கள் அனைவரும் பூர்வசிகையுடையவர்கள் என்று தெளிவாகிறது.

அண்மைக் காலம் வரை ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்திருந்த நமது நண்பர் கோகுலம் தாதாசார்யர் ஸ்வாமி ஆகம சாஸ்திரங்களில் மிகவும் வல்லவராக வாழ்ந்து வந்த ஒப்பிலியப்பன் கோவில் நவநீதம் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, 'ஆகம சாஸ்திரங்களில் 'பூர்வசிகையை உடைய அந்தணரே தெய்வபிம்பங்களைத் தொட்டுப் பூஜை செய்யலாம்' என்று கூறியிருப்பதாகத் தம்மிடம் கூறியதாக எம்மிடம் தெரிவித்தார். தெய்வங்களைப் பூஜை செய்துவரும் நம் பூதிரிகள், தில்லை மூவாயிரவர், திருவெள்ளறை, திருமோகூர் அர்ச்சகர்கள் இன்றளவும் பூர்வசிகையுடன் இருப்பது இதை வலியுறுத்துகிறது. மற்ற அர்ச்சகர்கள் பிற்காலத்தில் சிகை மாறியிருக்கவேண்டும்.

http://acharya.org

ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு வடநாட்டிலிருந்த அந்தணர்களுக்குக் காலத்தின் வேறுபாட்டால் சிகை சிறிது பின்தள்ளிப் போய்விட்டது. அந்தக் காலத்தில் தமிழ் நாட்டின் வட பகுதியில் குடியேறியவர்கள் "வடமர்கள்" என்றும், பெரிய கூட்டமாக வந்து குடியேறியவர்கள் "ப்ருஹச் சரணர்" என்றும், எண்ணாயிரம் குடும்பங்களாக வந்து குடியேறியவர்கள் "அஷ்டஸஹஸ்ரம்" என்றும் பெயர்பெற்றார்கள். எம்பெருமானாரும், கூரத்தாழ்வான் பட்டர் முதலானோரும் வடமர்குடியில் வந்தவர்கள் என்பதும், பெரியநம்பி முதலானோர் ப்ருஹச் சரணக் குடியில் வந்தவர்கள் என்பதும், யஜ்ஞேசர் எனப்பட்ட எச்சான் முதலானோர் எண்ணாயிரம் குடியில் வந்தவர்கள் என்பதும் குருபரம்பரை நூல்களில் காணக்கிடக்கிறது. "கண்ணி நுண் சிறுத்தாம்பு" வ்யாக்யானத்திலிருந்தும் அரும்பதவுரையிலிருந்தும், அக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களனைத்தும் பூர்வ சிகை ஸ்ரீவைஷ்ணவர்களான சோழியர்கள் வசம் இருந்த தென்றும், மற்ற சிகையுடைய அந்தணர்கள் ஸாமான்யர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் என்றும், இவர்கள் கோயில்களை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள் என்றும், அதனால் (பிற்காலத் தென்கலை, வடகலைச் சண்டையைப் போல) அக்காலத்தில் சோழியர் ஸாமான்யர் சண்டை திருமாலிருஞ்சோலை முதலான கோயில்களில் நடந்து வந்ததென்றும் தெரியவருகிறது. ஜ்ஞானிகளான நம்முடைய பூர்வாசார்யர்கள் 'ஶிகா யஜ்ஞோபவீதங்களையிட்டு அஹங்காரம் கொள்வது ஸ்வரூபத்தை அழித்துவிடும்' என்று உணர்த்தி, சோழியர்களைச் சமாதானப்படுத்தி, கோயில்களில் ஸாமான்யர்களுக்கும் உரிமை கொடுத்ததோடல்லாமல் அவர்களோடு சிஷ்ய ஆசார்ய ஸம்பந்தமும் கொண்டார்கள். நாதமுனிகளின் சிஷ்யரான உய்யக்கொண்டார் புரஶ்ஶிகர் என்

பதும், எம்பெருமானுருடைய ஆசார்யர்களான திருக்கோட்டியூர் நம்பியும், திருமாலையாண்டானும், சிஷ்யரான எங்களாழ்வானும் பூர்வசிகையை உடையவர்கள் என்பதும், மாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை பூர்வசிகையையுடையவர் என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆழ்வார்கள் காலத்திலிருந்தே திவ்யப்ரபந்தங்களிலேயே ஆழ்ந்து கிடந்த பூர்வசிகையினர் ஆசார்யர்கள் காலத்திற்குப் பிறகு ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் அதிக பரிசயம் இல்லாதவர்களாகி விட்டார்கள். ஸந்நிதி கைங்கர்யங்களிலேயே மிகவும் ஈடுபட்டிருந்து விட்டார்கள். இவற்றையிட்டு அபரசிகையினரில் பலர் சோழியர்களைத் தாழ்வாக எண்ணவும், நடத்தவும் தொடங்கிவிட்டார்கள். அதனால் திருநாங்கூர் மற்றும் தமிழ்நாடெங்கும் பல பூர்வசிகையினர் தங்கள் சிகையை மாற்றிக்கொண்டுவிட்டனர். இன்றும் இந்த மனப்பான்மை முற்றிலும் மாறவில்லை. விகடன் போன்ற பொதுஜனப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், சில வைணவப் பத்திரிகைகளிலும், பெரியாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய ஆழ்வார்களையும், திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டான் முதலான பூர்வசிகை ஆசார்யர்களையும் அபரசிகையுடன் சித்திரிப்பது இதை வலியுறுத்துகிறது. அண்மைக்காலத்தில் வெளிநாட்டு யோகத்தினால் பெரும்பாலோர் கிராப்புடன் காட்சியளிப்பதனால், இருவிதமான சிகைகளுமே மறைந்து வருகின்றன. இந்நிலையில் இது பற்றிச் சர்ச்சையை வளர்த்துக் கொண்டு போவதில் அர்த்தமில்லை. பூர்வசிகையினர் மற்ற சிகையினரை என்றுமே தாழ்வாக நினைத்ததோ நடத்தியதோ கிடையாது என்பது குறிக்கொள்ளத்தக்கது. சிகையையிட்டுப் பரஸ்பரம் தாழ நினைப்பது ஆத்ம ஸ்வரூபத்தை அழித்து விடும் என்பதை வைணவர்கள் அனைவரும் உணர்ந்து ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்.

http://acharya.org

85. ஶாஸ்த்ரங்களில் சரணாகதி மோக்ஷஸாதநம் என்று சொல்லப்பட்டது. எம்பெருமானாரும் கத்₃யத்ரயத்தில் ஶரணாகதியை அநுஷ்டித்துள்ளார். இந்தசரணாகதி தேவையில்லை ஶேஷத்வாநுஸந்தாநமே போதுமென்று தென்கலையார்கள் கூறுவது எப்படிப்பொருந்தும்? விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சஸம்ஸ்காரகாலத்தில் ஆசார்யன் உபதேசிக்க, சிஷ்யன் திருமந்த்ரம், த்₃வயம், சரம ஶ்லோகம் ஆகியவற்றைத் திரும்பச் சொல்லும் போதே ஶரணாக₃தி அநுஷ்டானம் தொடங்கி விடுகிறது என்றே பூர்வாசார்யர்கள் அனைவரும் திருவுள்ளம்பற்றியிருக்கிறார்கள். எம்பெருமானாருக்குப் பெரிய நம்பி மதுராந்தகத்தில் பஞ்சஸம்ஸ்காரம் செய்வித்தார் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன. அவருக்கோ வேறு எந்தப் பூர்வாசார்யருக்கோ இதைத்தவிரத் தனியாக ஒரு சரணாகதி அநுஷ்டானம் நடந்ததாக எந்த வரலாற்று நூலிலும் இல்லை. ஆனால் சரணாகதி ஸ்வரூபம் எது என்பதைப் பற்றிப் பூர்வாசார்யர்களிடையே தேசிகன் காலத்தில் அபிப்ராயபேதம் விளைந்து விட்டது. "எம்பெருமானே உபாயம்" என்னும் உறுதியாகிற கோ₃ப்த்ருத்வ வரணமே சரணாகதி என்று பூர்வாசார்யர்கள் கொண்டார்கள். ஆனால் இது உபாயமன்று என்றும் அதிகாரி விசேஷணமே என்றும், ஆநுகூல்யஸங்கல்பம் முதலானவை ப்ரபந்நருக்குத் தன்னடையே நிகழும் தன்மைகள் என்றும் கொண்டார்கள். ஆனால் தேசிகன் "ஆத்மாத்மீய ப₄ரந்யாஸம்" [தன்னையும் தன் உடைமைகளையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பது.] என்று சொல்லப்படும் ப₄ரஸமர்ப்பணமே ஶரணாகதி என்றும், அது ஒரு ஸாத்₄யோபாயம் என்றும், ஆநுகூல்யஸங்கல்பம் முதலானவை அதற்கு அங்கங்கள் என்றும் கொண்டார். இதுபற்றி தைமாதம் [614] ஸுதர்சனத்தில் 32-வது கேள்வியின் பதிலில் விரிவாக எழுதியிருக்கிறேன். பெரியவாச்சான் பிள்ளை கத்₃யத்₃ரயத்திற்கு வ்யாக்யானம் செய்தி

http://acharya.org

ருப்பதால் சரணாகதி வேண்டாம் என்று எந்த ஆசார்யரும் கூற வேயில்லை என்பது தெளிவு. சரணாகதியின் ஸ்வரூபத்தைப் பற்றியே தேசிகன் காலத்திலிருந்து கருத்து வேற்றுமை விளைந்தது. தேசிகனுடைய திருவுள்ளத்தைப் பின்பற்றி பஞ்சஸம்ஸ்காரத்திற்குப் பின் பரஸமர்ப்பணம் என்னும் அநுஷ்டானம் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களிடையே உண்டாகியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இதில் மேலும் விரிவு பெரியவாச்சான் பிள்ளையருளிய கத்யத்ரய வ்யாக்யானத்திற்கு நாம் எழுதிவரும் எளிய நடை விவரணத்தில் கண்டு கொள்ளலாம்.

நிற்க. அண்மைக் காலத்தில் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களில் சிலர் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் பெருமாளும், பிராட்டியும் இரண்டு பிரம்மங்கள் என்றும், மற்றும் சிலர் பிராட்டி பிரம்மமல்லாவிடிலும் எல்லாவிதத்திலும், பிராட்டி பெருமாளுக்குத்துல்யையே என்றும், பிராட்டி பெருமாளுக்குச் சரீரமல்ல என்றும், அவளைப் பெருமாள் உள்நுழைந்து நியமிக்க முடியாது என்றும் எழுதிவருகிறார்கள். இவ்விருவாதங்களும் விசிஷ்டாத்வைதத்தையே வேரறுத்து விடும் என்றும், தேசிகன் முதலான ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டவை என்றும் நம்முடைய ஸ்ரீதத்வஸர்வஸ்வம் பஞ்சம பக்ஷ சததூஷணி என்னும் நூல்களில் நிலைநாட்டியிருக்கிறோம். இவ்விரு நூல்களையும் இந்த ஸ்வாமிக்கும் அனுப்பியுள்ளோம். ஸுதர்சனர் பதில்கள் 14-வது சதகத்தில் 32-வது கேள்வி வரையில் இவ்விசாரம் மேலும் வளர்ந்துள்ளது. நடுநிலையாளராக அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள இந்த ஸ்வாமி இது பற்றி ப்ரமாணங்கள் காட்டித் தம் கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். இதனால் அவருக்குத் தர்மசங்கடங்கள் விளையுமென்று எண்ணினால் மற்ற தேசிக ஸம்ப்ரதாயவித்வான்களைப் போல் இவரும் வாளாவிருந்து விடுவது நல்லது.

http://acharya.org

A. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, ஸ்ரீரங்கம்.

36. "ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமியின் நூருவது திரு நக்ஷத்ர மஹோத்ஸவப் பத்திரிகை" என்னும் தலைப்பிட்ட பத்திரிகையும் அத்துடன் இணைக்கப்பெற்று மதுராந்தகம் ஸ்வாமியின் வாழ்க்கைக் குறிப்புக்களைக் கூறும் ஆங்கில அறிக்கை ஒன்றும் எனக்கு வந்தது. அதில், "He had gone thoroughly (the?) through the scriptures of Thengalai Samporadayam and was able to give fitting replies for the writings of Late Shri UVe PB. Annangarachariar Swamy and also to the articles which appeared in "SRI VAISHNAVA SUDARSANAM" என்று அச்சிடப்பட்டுள்ளது. இதுபற்றிய உண்மைகளை நடுநிலையாளர்களுக்கு வெளியிட வேண்டு கிறேன்.

மறைந்த ஒரு ஸ்வாமியின் நூற்றாண்டு விழா பற்றிக் குறிப்புகள் எழுதும்போது மற்றவர்களைத் தாக்கி எழுதுவது அநாகரிகமானது என்பதைக்கூட உணராமல் இப்படி எழுதி யிருப்பது மதுராந்தக ஸ்வாமி சிஷ்யர்களின் தரமின்மை யையே காட்டுகிறது. இந்த ஆங்கில வாக்கியத்தின் பொருள் பின்வருமாறு :— "மதுராந்தகம் ஸ்வாமி தென்கலை ஸம்ப்ர தாயத்தின் கிரந்தங்களைப் பரிபூர்ணமாகப் படித்தவர். அதனு லேயே மறைந்த ஸ்ரீ உவே. P அண்ணங்கராசாரியர் ஸ்வாமி யின் எழுத்துக்களுக்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தில் வெளிவந்த கட்டுரைகளுக்கும் தக்க மறுப்புரைகள் அவரால் எழுத முடிந்தது". இந்த வாக்கியம் உண்மை சிறிதும் கலப் பற்ற பொய்யையே உண்மைபோல் கூறுவதாகும். ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ஸ்வாமி, மதுராந்தகம் ஸ்வாமியின் விதண்டா வாதங்களுக்கு மறுப்பாக நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதி வெளியிட்டுள்ளது உலகமறிந்தது. அவற்றில்,

http://acharya.org

"மதுராந்தகம் ஸ்வாமியின் எழுத்துக்களிலிருந்து அவர் தர்மத்திற்கும் தர்மிக்கும் உள்ள வேற்றுமையைக் கூட அறியாதவர் என்று விளங்குகிறது" என்று பல சான்றுகளைக் காட்டி எழுதியுள்ளார் காஞ்சீ ஸ்வாமி. இதற்கு மதுராந்தகம் ஸ்வாமி எந்த ஸமாதானமும் கூறியதில்லை. நிற்க. ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்திற்கும்,மதுராந்தகம்ஸ்வாமிக்கும் இடையில ஏற்பட்ட விவாதக் கட்டுரைகள் அனைத்தையும். "ஸித்தோபாயவிஜயம்" என்னும் சுமார் 300 பக்கங்கள் கொண்ட நூலாக அடியேன் வெளியிட்டிருக்கிறேன். மதுராந்தக ஸ்வாமியும், DT தாதாசார்யஸ்வாமியும் ஒருபுறமும், அடியேனும், வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியும் ஒருபுறமுமாக இருந்து இந்த விவாதம் நடைபெற்றது. அதில் மதுராந்தகம் ஸ்வாமியின் 'ஸாரதமநிஷ்கர்ஷம்' என்னும் 31 பக்கங்கள் கொண்ட சிறுநூலும் அடங்கியுள்ளது. அதில் ஒவ்வொரு அதிகாரத்தையும் ஒரு வரி விடாமல் மறுப்புரைத்து வரதாசார்யஸ்வாமியும் அடியேனும் எழுதிய "நிஷ்கர்ஷ நிகஷம்" "வரவரமுநி ஸித்தாந்தம்", "நிர்ஹேதுக க்ருபையும் ஸஹேதுகப் படிக்கட்டுக்களும்" 'நிஷ்கர்ஷ நிகஷ விஜயம்" முதலான நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்கள் அடங்கிய நூல்களும் கட்டுரைகளும் அடங்கியுள்ளன. DT தாதாசார்ய ஸ்வாமியின் "யதார்த்த ராமாநுஜன்" என்னும் சிறுகட்டுரையும் எங்களுடைய கட்டுரைகளில் முழுவதுமாக மறுக்கப்பட்டுள்ளது. தென்னாசார்ய க்ரந்தங்களிலிருந்து இங்கொன்றும் அங்கொன்றுமாக வாக்கியங்களை எடுத்து 'தென்னாசார்யர்கள் தேசிக ஸம்ப்ரதாயத்தையே தழுவியவர்கள்' என்று வாதம் செய்தார் மதுராந்தகம் ஸ்வாமி. நூற்றுக்கணக்கான தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணமாக எடுத்துக் காட்டி, தென்னாசார்ய ஸம்ப்ரதாயமும் தேசிக ஸம்ப்ரதாயமும் வேறுபட்டவை என்று நாங்கள் நிலைநாட்டினோம். வாதஸதஸ் நடத்தவேண்டும் என்று விடாப்பிடியாகச் சொல்லிவந்தார் மதுராந்தகம் ஸ்வாமி. கீர்த்தி மூர்த்தி

http://acharya.org

யான் வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி தமது நல்லுரையில், "ஸம்ப்ரதாய விஷயங்களில் வாதஸபை உதவாதஸபையாகவே முடியும்" என்று எழுதினர். முதலில் வாத ஸபைக்கான நியமங்களை ஒப்புக்கொண்ட மதுராந்தகம் ஸ்வாமி சிலநாட்களில் அவற்றை ஏற்க மறுத்து விட்டார். பல கடிதங்கள் வாயிலாக கடமீது நிந்தா பரிஹாஸங்களைப் பொழிந்து கொண்டிருந்தார். இறுதியில் பிரதிஜ்ஞை செய்து வாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முறையில் "யார் தவரான விதண்டாவாதங்களைச் செய்து வருகிறார்களோ அவர்களை வெகுவிரைவில் எம் பெருமான் திருவடி சேர்த்துக் கொள்ளட்டும்" என்று இருவரும் பிரதிஜ்ஞை செய்வது என்று தீர்மானித்து ஸ்ரீரங்கம் தாயார் ஸந்நிதியின் எதிரிலுள்ள கம்பர் மண்டபத்தில் கீர்த்தி மூர்த்தியான சதாபிஷேகம் ஸ்வாமி முதலான பலர் முன்னிலையில் அடியேன் பிரதிஜ்ஞை செய்து முடித்தேன். மதுராந்தகம் ஸ்வாமி அவ்வாறு தான் ப்ரதிஜ்ஞை செய்யமுடியாது என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். இத்துடன் விவாதம் ஓய்ந்தது. இவ்விஷயங்கள் அனைத்தும் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே ஸுதர்சனத்தில் வெளிவந்தவை.

அதுமுதல் இரண்டு ஸம்ப்ரதாயங்களும் எந்தெந்த முறையில் பிரிந்து நிற்கின்றன என்பதை ஆசார்ய ஸ்ரீஸூக்திகளைக் காட்டி எனது நூல்களில் நிர்ணயிப்பதையே அடியேன் வாழ்க்கைக்குறிக்கோளாகக்கொண்டு எழுதி வருகிறேன். அந்த ரீதியில் கீதா வ்யாக்யானத்தில் இரு ஸம்ப்ரதாயங்களுக்கிடையே உள்ள பலபல வேற்றுமைகளைக்காட்டியிருக்கிறேன். குறிப்பாக, சுமார் நூறு பக்கங்கள் கொண்ட கைவல்யஸித்தாந்தஜனத்தில் கைவல்யம் பற்றி இரு ஸம்ப்ரதாயங்களிலும் உள்ள வேற்றுமையையும், அதில் எந்த ஸம்ப்ரதாயக் கருத்துகள் ப்ரமாணங்களுக்கு ஒத்தவை என்றும் நிலைநாட்டி அதை கீதா வ்யாக்யானத்திலும், யதீந்த்ரமத தீபிகா விவரணத்திலும் இணைத்திருக்கிறேன். தீபிகா விவரணத்தைப் பல தேசிக

ஸம்ப்ரதாய வித்வான்களுக்கும் அளித்திருக்கிறேன். தென்னாசார்யர்கள் தேசிக ஸம்ப்ரதாயத்தைத் தழுவியவர்களே என்னும் மதுராந்தகம் ஸ்வாமியின் விதண்டாவாதத்தை ஏற்று நிலைநாட்ட எந்த தேசிக ஸம்ப்ரதாய விதுவானும் முன் வரவில்லை. அவர் எழுதிய அபட்டமான பொய்களை எப்படி நிரூபிக்க முடியும்? 'ஸித்தோபாய விஜயம்' வெளிவந்து சில வருடங்களுக்குப் பின் மதுராந்தகம் ஸ்வாமிக்கும் அஹோபில மடத்தாருக்கும் பூர்ந்யாஸ விஷயமாக க்ரூரதரூபமான விவாதம் ஒன்று ஏற்பட்டது. அது பற்றி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் எழுதும்போது, 'மதுராந்தகம் ஸ்வாமியின் வாதங்கள் எத்தகையவை என்பதை காஞ்சி அண்ணங்கராசாரிய ஸ்வாமியும ஸுதர்சனம் ஆசிரியரும் நன்கு காட்டியிருக்கிறார்கள்'' என்று ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவின் ஸம்பாதகர்கள் எழுதியிருக்கிறார்கள்.

> யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோபி ஸஹாயதாம்।
> அபந்தாநம் து கச்சந்தம் ஸோதரோபி விமுஞ்சதி ||

[நியாய வழியில் செல்பவனுக்கு (ராமனுக்கு வானரர்கள் துணை நின்றது போல்) விலங்குகளும் துணைபுரியும். தவறான வழியில் செல்பவனை (ராவணனை விபீஷணன் விட்டது போல்) ஸஹோதரனும் விட்டுவிடுவான்.] என்னும் ச்லோகத்தின் உத்தரார்த்தத்திற்கு (பிற்பாதிக்கு) மிகவும் பொருத்தமான எடுத்துக்காட்டாக இருந்தவர் மதுராந்தகம் ஸ்வாமி என்று இதிலிருந்து அனைவர்க்கும் விளங்கிற்று. மதுராந்தகம் ஸ்வாமி வாழ்க்கைக் குறிப்பில் கையெழுத்திட்டிருக்கும ஸ்ரீ உ வே அனந்தநரசிம்மாசாரியர் ஸ்வாமி ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷ மததூஷிணி ஆகிய இருபுத்தகங்களின் பிரதிகளை 'வித்வான்கள் இதற்குப் பதிலளிப்பார்கள்' என்று கூறி, சென்ற ஆண்டு பெற்றுச் சென்றார். அது நடைபெறுமையாலே இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயத்தைத் தற்போது திரித்துக் கூறித் திருப்திப்பட்டுக் கொள்கிறார் போலும்!

http://acharya.org

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா விவாதம்

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடந்து வரும் ஸ்ரீதத்வ விவாதத்தில் இதுவரை நடந்ததின் சுருக்கத்தை ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே இங்கு கொடுக்கிறோம். காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகையில் "ஸ்ரீ தத்வம்" பற்றி வெளிவந்த "ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜந ஸங்க்ரஹம்" என்னும் கட்டுரைத் தொகுப்பை சில ஆண்டுகளுக்கு முன் ஓர் அன்பர் விமர்சனத்திற்காக நமக்கு அனுப்பினார். அது தேசிகன் உள்ளிட்ட பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் நூற்றுக்கணக்கானவற்றுக்கு முரண்பட்டதாகவும், விசிஷ்டாத்வைதத்தையே வேரறுக்கக் கூடியதாகவும் இருந்தபடியால், "விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்" என்னும் கட்டுரையை ஸ்ரீமுக [1993] கார்த்திகை [552] ஸுதர்சனம் இதழில் அச்சிட்டு, அதில் வித்வான்களின் மநஸ்ஸாக்ஷியைக் குறித்து எட்டு கேள்விகளையும் கேட்டு, காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகைக்கும் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்கள் பலருக்கும் அனுப்பினோம். பல வருடங்கள் ஆனபின்பும் எவரும் அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முன் வரவில்லை. தேசிகன் தாம் காட்டிய ஐந்து பக்ஷங்களில் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர் என்பது அவருடைய பல ஸ்ரீஸூக்திகளிலிருந்து தெளிவாவதாலும், ஐந்தாவது பக்ஷத்தை அவர் ஆதரித்தார் என்று சொல்லுவதற்கு ஒரு இடத்தில் கூட அவரது கிரந்தங்களில் ஆதாரம் இல்லாமையாலும் அனைவரும் வாய்மூடி மௌனிகளாய் நின்றார்கள். இதற்குக் காரணம் விசிஷ்டாத்வைதத்தையே வேரறுக்கும் படி ஐந்தாவது பக்ஷத்தை விரிவுபடுத்தி அதை இவர்களுடைய முன்னோர்கள் முந்நூறாண்டுகளாக ஆதரித்து வந்தமையேயாகும்.

http://acharya.org

இவ்விஷயத்தில் எப்படியாவது ஸமாதானமான முறையில் தேசிகஸம்ப்ரதாய வித்வான்களின் நியாயமான நிர்ணயத்தைப் பெறவேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலே, 44 வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கரின் நூற்றாண்டு விழாவின் போது நடந்த மாலோல வித்வத்ஸதஸ்ஸில், இது பற்றி ஓர் நிர்ணயத்தைச் செய்யவேண்டும் என்று 45 வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரிடம் பிரார்த்தித்தோம். அவரும் இசைந்து ஸதஸ்ஸில் வித்வான்களை இவ்விஷயம் பற்றிக் கருத்துக்களைக் கூறுமாறு பணித்தார். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசியபடியாலே, ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயம் இரண்டிலும் புலமை பெற்ற தேசிக ஸம்ப்ரதாய வித்வானை ஸ்ரீ உ வே அண்ணாதூர் வரதாசாரிய ஸ்வாமி ஒருகட்டுரையாக எழுதி அடியேனிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அந்த ஸ்வாமியும் ஸ்ரீமதழகிய சிங்கரும் இதற்கு இசைந்தனர். விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணத்தின் பிரதிகளை அங்கு குழுமியிருந்த தேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் ஒவ்வொருவருக்கும் அளித்தேன். பலமாதங்களாகியும் அந்த ஸ்வாமி பதில் எழுதியனுப்பாமல் சில காரணங்களைச் சொல்லிக் காலம் கடத்தி வந்தார். அடுத்த வருடம் மதுராந்தகத்தில் நடந்த மாலோல வித்வத்ஸதஸ்ஸுக்கும் அடியேன் சென்று அந்த ஸ்வாமியையும் 45 வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரையும் இதில் பிரமாணங்களைக் காட்டி எழுத்து மூலமாக நம்முடைய கேள்விகளுக்குப் பதிலை அச்சிட்டு ஓர் நியாயமான நிர்ணயத்தைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். இந்த சந்தர்ப்பங்களில் தனியாகவும் ஸ்ரீமதழகியசிங்கரிடம் நம்முடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்துப் பலமுறை பிரார்த்தித்தேன். அப்போதே, "எங்களுடைய முன்னோர்கள் சுமார் மூந்நூறு வருடங்களாக இதில் திடமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். ஆகையால் நாங்கள் இதற்கு மாறாக எழுதமுடியாது. எனவே இதை இப்படியே விட்டுவிடுவது நல்லது" என்று ஸ்ரீமதழகிய சிங்கர் சாதித்திருந்தால், அப்போதே

http://acharya.org

இந்தச் சர்ச்சையை விட்டிருப்பேன். ஆனால் ஸ்ரீமதழகிய சிங்கர் அவ்வாறு செய்யாமல் ஸ்ரீரங்கம் வித்வத்ஸதஸ்ஸில் தாம் அன்னூர் வரதாசாரியஸ்வாமியைப் பதிலெழுதுமாறு கூறியதையும் மறந்து, "இவருக்கு (அடியேனுக்கு) ஶாஸ்த்ரஜ்ஞாநம் இல்லாமையால் எவரும் பதிலெழுதாதீர்கள்" என்று கடுங்கோபத்துடன் அனைவர்க்கும் உத்தரவிட்டார். பதிலெழுத இயலாதாகையாலே இப்படிக் கோபத்தைக் காட்டுகிறார் என்று உணர்ந்த அடியேன் அதுபற்றிக் கவலைப்படவில்லை. அன்னூர் ஸ்வாமியும் விரைவில் பரம பதித்து விட்டார்.

அடுத்தபடி, ஸ்ரீமதழகிய சிங்கர் திருவஹீந்திர புரத்தில் வசிப்பவரும், ஸ்ரீதத்வ ஸித்தாந்ஜந ஸங்க்ரஹத்தைப் பெயர் வெளியிடாமல் எழுதியவரும், மதுராந்தகம் ஸ்வாமியின் ஜாமாதாவுமான நா-வரதாசாரியரைத் தூண்டிவிட்டு, "யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாஞ்ஜநம்" என்னும் நிந்தைகள் நிறைந்த சிறுசுவடியை எழுதச்செய்து, அப்புத்தகத்தில் அவரது விலாசத்தையும், நம்முடைய விலாசத்தையும் கொடுக்காமல் வெளியிடுவித்திருந்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு உயிர் நாடியான பகவத் பரத்வத்தையும் சரீரசரீரி பாவத்தையும் வேரறுக்கக் கூடிய இப்புத்தகம் பற்றி நடுநிலையாளர்களின் தீர்ப்பைக்கோரி, "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா" என்னும் கட்டுரையை ஸுதர்சனம் (595) ஈச்வர ஆனி இதழில் வெளியிட்டிருந்தோம். அதற்குப் பின்னர் உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த நடுநிலையாளர்கள் பலர் தேசிகன் தாம் அருளிய ஐந்து பக்ஷங்களில் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர் என்றும், பிற்காலத்தவர்கள் ஆதரித்த ஐந்தாவது பக்ஷத்தை விபுலமான தம் நூல்களில் எங்குமே ஆதரிக்கவில்லை என்றும் தீர்ப்பு வழங்கினார்கள். இத்தீர்ப்புகள் ஸுதர்சனம் 596 முதல் 600 வரை இதழ்களில் வெளியிடப்பெற்றன.

http://acharya.org

இதற்கிடையில், ஈச்வர வருடம் ஐப்பசிமாத ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவிலிருந்து ஒவ்வொரு மாதமும் இவ்விமாஸத்தில் 45-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரே தொடரில் பல ப்ரச்னைகளுக்குத் தொடங்கினார். 'ஸ்ரீதத்வதீபிகை' என்னும் தலைப்பில் தாம் விதண்டாவாதங்கள் செய்துகொண்டு நூல் பரப்பல். எழுதியது யார் என்று பெயர் குறிப்பிடாமல் ந்ருஸிம்ஹப்ரியா வில் வெளியான பல கட்டுரைகளில் நம்மைப் பலமாக தூஷிக்கச்செய்தார். "ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்" என்னும் தலைப்பில், நாம் ந்ருஸிம்ஹப்ரியாவின் வாதங்களுக்கு ஸாத்விகமான முறையில் பதிலளித்து வந்தோம். ப்ரியா வாசகர்களும் நம் வாதங்களை உணரலாம்படி நம் விலா சத்தை ப்ரியாவில் கொடுக்கவேண்டும் என்ற நம் வேண்டுகோளையும் முதலில் மறுத்துவிட்டார். இதுவரையில் வெளிவந்த வாதவிவாதங்கள் அடங்கிய "ஸ்ரீதத்வஸர்வஸ்வம்" என்னும் நமது நூல் ரூ. 30 விலையில் நம்மிடம் கிடைக்கும் என்ற அறிவிப்பையும் ப்ரியாவில் வெளியிட மறுத்துவிட்டார். இவர்கள் ஆதரிக்கும் ஐந்தாவது பக்ஷத்தின் மீது நூறு தூஷணங்கள் கொண்ட "பஞ்சமபக்ஷசததூஷணி" எனும் நூலை ப்ரியாவாசகர்களுக்கு இலவசமாக அளிக்கிறோம் என்னும் அறிவிப்பையும் ப்ரியாவில் வெளியிட மறுத்துவிட்டார். ப்ரியாவைக்குறித்து நாம் கேட்டிருந்த பதினாறு கேள்விகளில் சிலவற்றுக்கு மட்டும் விதண்டாவாத மாகப் பதிலளித்து வந்தவர், அந்தப் பதில்களையும் அரை குறையாக விட்டுவிட்டு, இனி இவ்விவாதம் ப்ரியாவில் தொடராது என்று அறிவித்து நிறுத்திவிட்டார். நம்முடைய வாதங்களில் ஒவ்வொரு அக்ஷரத்தையும் மறுத்துத் தனிப் புத்தகமாகத் தாம் வெளியிடப் போவதாகவும் ப்ரியாவில் அறிவித்தார். இவ்வறிவிப்பிலும் நிலைநிற்காமல் மறுமாதமே ப்ரியாவில் தம் அருள்மொழியில் விவாதத்தைத் தொடர்ந் தார். இவற்றின் மூலம் முரண்பாடுகளின் மொத்த உருவ மாகத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டார். தம் படுதோல்வி யையும் உலகறியக் காட்டிக்கொண்டார்.

http://acharya.org

"பிராட்டி எம்பெருமானுக்கு ஶரீரமாகவும் இருக்கிருள்; ஆனால் பரப்ரஹ்மமாகவும் இருக்கிருள். பிராட்டிக்கு எம்பெருமானைக் குறித்து ஶேஷத்வபாரதந்த்ரியங்கள் உண்டு; ஆனால் அவள் எம்பெருமானைப்போலே பரப்ரஹ்மம் தான்; உலகிற்கு அவனைப்போலே உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருப்பவள் தான்" முதலான பல முரண்பட்ட வாதங்களையும் ஒவ்வொரு மாதமும் அருள் மொழியில் எழுதிவருகிருர். காண்பவர்களுக்கு இது அருள்மொழியா அல்லது மருள்மொழியா எனும் ஐயமே விளைகிறது. இந்த முரண்பாடுகளுக்குக் காரணத்தை நாம் ஆராயவேண்டியுள்ளது.

அஹோபில மடம் ஆதியில் சில பட்டங்கள் வரை தென்கலையாக இருந்து, பிறகு வடகலையாக மாறியது என்பது அனைத்துலகும் அறிந்ததே. அதனால் இவர்களுக்குக் காலக்ஷேப க்ரந்தமாக நம்பிள்ளையீடு உள்ளது. நம்பிள்ளையையும், வடக்குத் திருவீதிப்பிள்ளையையும் ஆசார்யர்களாக இவர்கள் கொண்டாடுகிருர்கள். பிற்காலத்தில் அஹோபிலமடம் வடகலையாக மாறிவிட்டதால் தேசிகக்ரந்தங்களையும் ஆதரிக்க வேண்டியுள்ளது. அதனால் ஏற்பட்டதே இந்த முரண்பாடு. இதனால் விஶிஷ்டாத்வைத வைஷ்ணவ தர்ஶனத்தின் அரிச்சுவடியறிந்தவர்கள் கூட எழுதக் கூசும் பல பொய்களை எழுதவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டு விட்டார் ஸ்ரீமதழகிய சிங்கர்.

நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளைகளின் ஈடும் பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படியும் ஒன்றுக்கொன்று விவரண விவரணிகளாக அமைந்தவை என்பதும், தேசிகனால் தம் நூல்களில் கண்டிக்கப்பட்ட தென்னாசார்யக் கொள்கைகள் பலவற்றை இவை நிலைநாட்டுபவை என்பதும் இந்நூல்களில்

http://acharya.org

நூற்றுக்கணக்கான இடங்களில் விளங்குகிறது. நமது நூல்களிலும், கட்டுரைகளிலும் பல இடங்களைக் காட்டியிருக்கிறோம். அப்படியிருக்க, நம்பிள்ளை ஈடு, பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானம், நாயனாராச்சான் பிள்ளையின் சது:ஶ்லோகீ வ்யாக்யானம் முதலானவை தேசிக ஸம்ப்ரதாயத்திற்கே சாதகமானவை என்று சிறிதுகூட மனம் கூசாமல் பொய் எழுதுகிறார். பெரியவாச்சான் பிள்ளையும் நாயனாராச்சான் பிள்ளையும் பிராட்டிக்கு ஜகத்காரணத்வம் உண்டென்னும் ஐதிஹ்யத்தைஎடுத்திருப்பது பிராட்டியும் எம்பெருமானைப்போல் ஜகத்திற்குக் காரணமாகிறாள் என்னும் இவர்களுடைய கொள்கையை ஆதரிப்பதாக 'ப்ரியா' பஹுதாந்ய பங்குனி இதழில் கை கூசாமல் எழுதியிருக்கிறார். "பிராட்டி ஜீவகோடியில் சேர்ந்தவளே" என்று நிலைநாட்டிய நாயனாராச்சான் பிள்ளை இவர்களுடைய கொள்கைகளை எப்படி ஆதரிக்க முடியும்? "ஆழ்வான், பட்டர், பெரியவாச்சான் பிள்ளை, நாயனாராச்சான் பிள்ளை முதலானோர் மட்டுமல்ல, ஸ்ரீவேதாந்த தேசிகரே பிராட்டிக்கு அப்ரதானமான ஜகத் காரணத்வத்தையே இசைந்திருக்கிறார்" என்பதையும், "ஜகத்திற்கு நிமித்த காரணமாகவும், உபாதாநகாரணமாகவும் இருக்கும் ப்ரதான ஜகத் காரணத்வத்தை இவர்களைப் போல் இசையவில்லை" என்பதையும், ப்ரதாந ஜகத் காரணத்வத்தைப் பிராட்டிக்கு ஏற்றிட்டு இயற்றப்பட்ட ஸ்ரீஸூக்த பாஷ்யம் நஞ்சீயர் பேரில் இவர்களால் கற்பிக்கப்பட்ட ஒரு மோசடி நூல் என்பதையும், தேசிகன் மணவாள மாமுனிகள் முதலிய பூர்வாசார்யர்களாலே "தத்வஸாரம்" போலே மேற்கோளாகக் காட்டப்படாமையாலே, 'ப்ரபந்நபாரிஜாதம்' என்

http://acharya.org

னும் நூலும் பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் இருந்தவ ரால் எழுதப்பட்டதாகத் தேறுகையால் ப்ரமாணமாக ஏற்கத் தக்கதல்ல என்பதையும் நாம் நம்முடைய ஸ்ரீதத்வஸர்வஸ் வத்திலும், பஞ்சமபக்ஷ ஶததூஷணியிலும் விரிவாக நிலை நாட்டியிருக்கிறோம். இவற்றுக்கு எந்த பதிலையும் சொல்லாமல் நம்முடைய நூல்கள் பற்றிய விவரத்தையும் கொடுக்காமல் சொன்னதையே திருப்பித் திருப்பி இவர் எழுதுவது பொய் யைப் பலமுறை சொல்வதன் மூலம் ப்ரியா வாசகர்களை உண்மை என்று நம்பவைக்க முயல்வதாகவே ஆகிறது.

தேசிகன் தமது சது:ஶ்லோகீ பாஷ்யத்தின் தொடக்கத்தி லுள்ள "ஸ்வஶேஷாஶேஷார்த்த:" என்னும் ஶ்லோகத்தில் தாங்கள் கருதும் ஐந்தாவது பக்ஷத்தையே ஆதரித்திருக் கிறார் என்னும் இவர்களுடைய வாதத்தை நாம் "விசிஷ்டாத் வைதமா? விசிஷ்டத்வைதமா" என்னும் கட்டுரையில் 28, 29 பக்கங்களிலும், பஞ்சமபக்ஷ ஶததூஷணியில் 45-வது தூஷணத்திலும் விரிவாக நிரஸித்திருக்கிறோம். அதற்கு ஸமாதாநமாகப் பங்குனி இதழில் இவர் எழுதியிருப்பதை ஒரு கேள்வியாகக் கொடுத்து, நமது பதிலில் "ஶாஸ்த்ர மறிந்தவராயிருந்தும், ஶாஸ்த்ர விருத்தமாக இவர் எழுதி யிருக்கிறார்" என்று நிலைநாட்டுவோம்.

ப்ரியா — பஹுதாந்ய பங்குனி — அருள்மொழி

37. தேசிகனுடைய சது:ச்லோகீ பாஷ்யத்தின் முதல் ஶ்லோ கத்தில் 'ஸத்ரீசீ?' என்னும் பதம் எம்பெருமானுக்கு எல்லா

http://acharya.org

விதத்திலும் ஒப்பானவள்தான் பிராட்டி என்பதைத் தான் காட்டுகிறது.

''ஸத்₄ரீசீ' என்னும் இந்தப் பதத்தின் பொருள், ''ஸஹஸ்ய ஸத்₄ரி:' [பாணினி 6-3—95] என்னும பாணினி ஸூத்ரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அமரகோசத்திலும், ''ய: ஸஹாஞ்சதி ஸத்₄ர்யங் ஸ:'' (அமர 3—1—34) (யார் கூட இருந்து துணைபுரிகிறாரோ அவர் 'ஸத்₄ர்யங்' எனப்படுவார்.) என்று விளக்கப்பட்டிருக்கிறது. அதன் வ்யாக்யானமான வ்யாக்₂யாஸுதை₄யில் ''ஸ்த்ரியாம் ஸத்₄ரீசீ' [ஸத்₄ர்யங்' என்பதற்கு ஸ்த்ரீலிங்கபதம் 'ஸத்₄ரீசீ' என்பது] என்று ஸத்₄ரீசிபதம் துணைவியைக் காட்டுவது என்று தெளிவாக விளக்கப்பட்டது. 'ஸஹயுக்தே அப்ரதா₄நே' என்னும் ஸூத்ரத்தோடு சேர்த்துப் பார்க்கும் போது, ''எம்பெருமானுக்கு ப்₃ரஹ்மஸூத்திரத்தில் நாலு அத்தியாயங்களிலும் சொல்லப்படும் பெருமைகள் ஸித்திப்பதற்குப் பிராட்டி அப்ரதானையாய் நின்று துணைபுரிபவள்'' என்னும் பொருளையே அந்த ஶ்லோகத்தில் தேசிகன் திருவுள்ளம் பற்றினார் என்பது தெளிவாக விளங்குகிறது. உண்மை இப்படி இருக்கும் போது, நாம் 'ஸத்₄ரீசீ' என்னும் பதத்திற்குத் தவறாக 'துணைவி' என்று பொருள் எழுதிவிட்டதாகவும் ''எல்லா விதத்திலும் ஒப்பானவள் பிராட்டி'' என்பதே இதற்குப் பொருள் என்றும் இவர் எழுதுவது ஶாஸ்த்ரஜ்ஞானம் இல்லாதவர்களை வஞ்சிப்பதற்காகவே என்று விளங்குகிறது. வைஜயந்தீநிகண்டுவிலும். ''ய:ஸஹாஞ்சதி ஸத்₄ர்யங் ஸ:' [வைஜயந்தீ ஸாமாந்ய கண்டம அர்த்தவல்லிங்காத்யாயம் ஶ்லோகம் 93] [யார் கூட இருந்து துணைபுரிகிறாரோ அவர் 'ஸத்₄ர்யங்' எனப்படுவார்] என்று உள்ளதும் நாம் எழுதியிருப்பதை வலியுறுத்துகிறது. எதற்குமே நேர்மையாக பதிலெழுதத் துணியாத இவர் இதற்கு மட்டும் எங்கே பதில் உரைக்கப் போகிறார்?

http://acharya.org

இனி எங்களாழ்வான் திருநக்ஷத்திரமான சித்திரை ரோஹிணி (13—4—99) அன்று நமக்குக் கிடைத்த

ப்ரியா—ப்ரமாதி அருள்மொழி

ஆராயப்படுகிறது. (கேள்விகள் 38—42)

38. 'தத்ஸத்₄ரீஶம்' — எம்பெருமானுக்கு எல்லா விதத்திலும் ஒப்பானவள் என்று பிராட்டியும் ஶாரீரக ஶாஸ்த்ரத்தில் கூறப்பட்டவளேயாவாள் என்பதைக் காட்டுகிருர் ஸ்வாமி தேசிகன்.

'ஸத்₄ரீசீ' என்னும் பதம் கூடியிருந்து துணை புரிபவளைக் காட்டுமேயொழிய 'எல்லா விதத்திலும் ஒப்பானவள்' என்று பொருள்படாது என்று பாணினி ஸூத்ரத்தையும், அமர கோஶவைஜயந்திகண்டுக்களையும் கொண்டு நாம் காட்டியுள்ள 37-வது கேள்வியின் பதிலைப் பார்த்த பின்பும், அதற்கு எந்த பதிலையும் கூருமல், ஸத்₄ரீசீ பதத்திற்குத் தாம் கூறும் பொருளுக்கு ஆதாரம் எதையும் காட்டாமல் சொன்னதையே திருப்பி எழுதுவது வாசகர்களை ஏமாற்றுவதேயாகும்.

39. ஸ்ரீபாஷ்யத்தில் இரண்டாம் அத்யாயத்தில் நான்காவது பாதத்தில் உள்ள ப்ராணுணுத்வாதி₄கரணத்தில் "ஆநீத்அவாதம் ஸ்வதₓயா ததே₃கம்" என்னும் விஷய வாக்யத்திற்கு ஶ்ருதப்ரகாஶிகையில் "ஸ்வத₄ாஶப்₃த₃த்தால் சொல்லப்பட்ட பிராட்டியோடு கூடிய எம்பெருமான் ஒருவனே இருந்தான்" என்று பொருள் கூறியிருக்கையால் பிராட்டி பெருமாள் இருவருமே ஜகத்காரணமானவர்கள் தான் என்பது ஶாரீரகத்திலேயே கூறப்பட்டதாகிறது.

http://acharya.org

அவ்வதிகரணத்தில் ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீ ஸூக்தியையும் காட்டி, இந்த வேத வாக்யத்தில் ஸ்வதந்த்ர ப்ரஹ்மத்தால் பிராட்டி கூறப்படவில்லை என்றும், கூறப்படுவதாகக் கொண்டாலும் 'அவள் ப்ரஹ்மத்தோடு கூட இருந்தாள்' என்றே ஸித்திக்கும் என்றும் ஸ்ரீதேசிகன் சதுஃஸ்லோகீ இரண்டாவது ஸ்லோகபாஷ்யத்தில் அருளியிருப்பதை நமது ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தில் பக்கம் 92 முதல் 94 வரையிலும், பஞ்சமதபக்ஷ ஸததூஷணி 7-வது, 52-வது தூஷணங்களிலும் காட்டி இந்த வாதம் தள்ளப்பட்டது. இவ்விருநூல்களையும் இன்றளவும் ப்ரியாவில் ப்ரஸ்தாபிக்கவே நடுங்கி, இவற்றில் தள்ளப்பட்ட வாதங்களைத் திருப்பித் திருப்பி எழுதுவது வாசகர்களை ஏமாற்றுவதேயாகும். ''அருள்மொழி' பக்கம் 8, 9-ல் இந்த வேத வாக்யத்திற்குப் பொருள் எழுதும்போது ''பிராட்டியோடு கூடிய ப்ரஹ்மம்'' என்று ஸ்ரீமதழகிய சிங்கரை நான்கு முறை எழுதவைத்து, அந்தர்யாமியான சிங்கப்பிரான் ப்ரஹ்மமான தன்னைக் காட்டிலும் பிராட்டி வேறுபட்டவள் என்று வெளிப்படுத்திவிட்டதை அனைவரும் கண்டுகளிக்கவேணும்.

40. ''எம்பெருமானைச் சொல்லுமிடமெங்கும் பிராட்டியையும் சொல்லிற்றுப் - என்னுமிடத்தை 'ததந்தர்பாவாத்' என்று ஸமர்த்தித்தார்கள்'' என்று தேசிகன் அருளிச் செய்துள்ளார். ஆகையால் இருவரும் துல்யரே.

இவ்வாக்யத்திற்குப் பொருத்தமான பொருள் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் (வி.வி.) 24-வது கேள்வியிலும், பஞ்சமதபக்ஷ ஸததூஷணி 36-வது தூஷணத்திலும் காட்டப்பெற்று இந்த வாதம் தள்ளப்பட்டது. நமது நிரூபணங்களை ப்ரியா வாசகர்களுக்கே காட்டாமல் பொய்யையே திருப்பி எழுதி மெய்யாக்கப் பார்க்கும் வேலையே இது. ''நிரூப்யத்தைச் சொல்லுமிடமெல்லாம் நிரூபகத்தைச் சொன்னதாகும். ஆனால் நிரூப்யத்திலுள்ள பெருமைகளெல்லாம் நிரூபகத்துக்கு வராது'' என்று தெரிந்தும், பொய் சொல்லும் இவர்களை எவரும் திருத்தமுடியாது.

http://acharya.org

41. ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸித்தாந்தத்தில் அவஶ்யம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் இவை:— ஒரு மிதுனமே தத்த்வம். ஒரு மிதுனமே ஜகத்காரணம். ஸர்வ ஜகத்துக்கும் ஒரு மிதுநமே ஆதாரம். ஒரு மிதுநமே நியாமகம். ஒரு மிதுநமே ஶேஷி, ஒரு மிதுநமே ஶரண்யம், ஸித்தோபாயம். ஒரு மிதுநமே உபேயம் என்பவை.

தேசிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநம் ஈஶ்வர பரிச்சேதம் இறுதியில் "பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஜ்ஞாநம் ஆநந்தம் முதலானவற்றில் அத்யந்தஸாம்யம் உண்டு" என்றும், "ஜகஜ்ஜநகத்வம் ஶேஷித்வம், ஶரண்யத்வம், ப்ராப்யத்வம், (உபாயத்வம்) முதலானவற்றில் (அத்யந்தஸாம்யம் இல்லை,) ஸாம்யமே உண்டு" என்றும் அருளுகையால் பிராட்டியின் ஜகத்காரணத்வம் முதலானவை அப்ரதானம் என்று தெளிவாகக் காட்டியுள்ளார். ரஹஸ்ய த்ரயஸாரம், ப்ரதான ஶதகம் முதலானவற்றிலும் இவளுடைய ஜகத்காரணத்வம் முதலானவை அப்ரதானமானவை எனக்காட்டியிருப்பதை பஞ்சமபக்ஷ ஶததூஷணி 70. 71, 72. 73, 74 75, 76, 77 முதலான தூஷணங்களில் விரிவாகக் காட்டியுள்ளோம். ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் "லக்ஷ்ம்யா: ஸமஸ்த சிதசித்ப்ரபஞ்ச: வ்யாப்ய: ததீயஶஸ்ய து ஸாபி ஸர்வம்" என்னும் பாஞ்சராத்ரவசனத்தைக் கொண்டு 'எல்லாவுலகையும் வியாபித்திருக்கும் பிராட்டியையும் எம்பெருமான் வியாபித்திருக்கிறான்' என்று அருளியுள்ளார். 'எல்லாவுலகமும் தங்கள் ஸ்வரூபம் ஸ்திதி முதலானவற்றுக்காகப் பிராட்டியை ஆஶ்ரயித்திருப்பதுபோல், பிராட்டி தன் ஸ்வரூபம் ஸ்திதி முதலானவற்றுக்காக எம்பெருமானை ஆஶ்ரயித்திருக்கிறாள்' என்று பல இடங்களில் தேசிகன் அருளியிருப்பதைக் காட்டியுள்ளோம். (இது எல்லா ஆசார்யர்களும் இசைந்தது) இதிலிருந்து

http://acharya.org

எம்பெருமான் பிராட்டிக்கு அந்த: ப்ரவிஶ்ய (உள்நுழைந்து) வ்யாபிக்கும் ஆத்மாவாயிருப்பதுபோல் பிராட்டி எம்பெருமானுக்கு அப்படி இல்லை என்று தேறுகிறது. "ஏகோநவ்யாபகத்வம், ஏகோநநியந்த்ருத்வம், ஏகோநசேஷித்வம் முதலானவையே பிராட்டிக்கு உண்டு. ஸர்வ வ்யாபகத்வம், ஸர்வநியந்த்ருத்வம், ஸர்வசேஷித்வம் முதலானவை எம்பெருமானுக்கே உண்டு" என்று தேசிகன் தம் க்ரந்தங்களில் பலவிடங்களில் காட்டியுள்ளார். இப்படியிருக்கும்போது "இருவரும் பரப்ரஹ்மமே எல்லாவிதத்திலும் துல்யரே" என்று இவர் திருப்பித் திருப்பி எழுதுவது சிறுவர்களாலும் சிரிக்கத்தக்கதாயிருக்கிறது. இவர் ப்ரமாணமாக எடுக்கும் ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜநத்துக்கு ஸங்க்ரஹம் எழுதிய மதுராந்தகஜாமாதா "பிராட்டி பெருமானை வ்யாபிக்கவில்லை, நியமிக்கமுடியாது; அதேபோல் பெருமாள் பிராட்டியை வ்யாபிக்கவில்லை நியமிக்கமுடியாது" முதலான அபத்தவாதங்களைத் தம்நூலில் எழுதியிருப்பதை இவர் ஏற்கிறாரா இல்லையா என்பது உலகிற்குத் தெரியவேண்டும். அடுத்த ப்ரியாவில் இதை விளக்கும் நேர்மை இவர்க்கு வருமா?

42. அஹோபில மடத்தார் க்ரந்தலிபியில் வெளியிட்ட விஷ்ணுசித்தீய வ்யாக்யானத்திற்கு முன் 1858-1859-ல் ஸ்மார்த்தர்கள் அச்சிட்ட தெலுங்கு லிபிப்பதிப்பில் க்ரந்த லிபிப்பதிப்பில் உள்ளது போலவே பாடம் காண்கிறதே?

பூர்வாசார்யர்களில் ஒருவரான வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் தம் ரஹஸ்யத்ரய காரிகாவளியிலும், தெலுங்கு லிபிப்பதிப்பிற்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட ஈட்டின் அரும்பதவுரைகளிலும் பம்பாய் வேங்கடேச்வர அச்சகத்தில் நாகராக்ஷரத்தில் அச்சிடப்பெற்ற பாடமே உள்ளபடியாலும், பட்டரது ச்லோகத்தைச் சேர்த்திருப்பதன் மூலம் மற்ற பதிப்பு க்ருத்ரிமமானது என்று விளங்குகிறபடியாலும் தெலுங்குப் பதிப்பைக் காட்டுவதால் எப்பயனுமில்லை. இதன் விரிவு ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் ஸாத்விக ஸம்வாதம் பக்கம் 108 முதல் 120 வரை காணத்தக்கது.

http://acharya.org

ப்ரமாதி வைகாசி ப்ரியா விமர்ஶம்

இன்று (19—5—99) வந்த ப்ரமாதி வைகாசி ப்ரியா அருள்மொழியில் சதுஃச்லோகியின் முதல் ச்லோகத்தை, பெரியவாச்சான்பிள்ளை, நாயனாராச்சான்பிள்ளை ஆகியோரது வ்யாக்யானங்களைக் கொண்டு அனுபவித்திருக்கிறார். பொதுவாக நம்முடைய பூர்வாசார்யர்கள், குறிப்பாகப் பெரியவாச்சான்பிள்ளையும், நாயனாராச்சான்பிள்ளையும் சில விஷயங்களில் பெருமாளும், பிராட்டியும் ஒத்திருப்பதையும், ஸ்வரூபம், ரூபம், குணம், முதலான அனைத்திலும் பெருமாளைக் காட்டிலும் பிராட்டிக்குச் சிறப்பு இருப்பதையும் விரிவாகக் காட்டுகின்றனர். உண்மையில் பெருமாளின் பெருமைகள் எல்லாம் பிராட்டியின் ஸம்பந்தத்தால் வந்தவையே என்றும் அருளிச்செய்கிறார்கள். இதைப் பார்க்கும் மந்தமதிகளுக்கு "இப்படிப் பெருமாளைக் காட்டிலும் பிராட்டி பல விஷயங்களில் பெருமை பெற்றவளானால், உண்மையில் அவனுடைய பெருமைகள் எல்லாம் இவளாலேயே வந்ததானால் அவன் எப்படிப் பரப்ரஹ்மம் ஆகமுடியும்" என்னும் சந்தேகம் ஏற்படக்கூடும். 'ஸ்வதஃஶ்ரீஸ்த்வம்' (ஸ்ரீகுண 31) என்னும் ச்லோகத்தில் பட்டர் அருளிச்செய்தபடியே "இப்படிப் பிராட்டி பெருமாளைக் காட்டிலும் பல விஷயங்களில் பெருமை பெற்றவளானாலும், உண்மையில் அவனுடைய பெருமைகளெல்லாம் அவளாலேயே வந்தவையானாலும் 'விஷ்ணோஃஶ்ரீ' என்று விஷ்ணுபுராணத்திலும், 'உன் திரு' (திருவாய் 10-10-2) என்று திருவாய்மொழியிலும் சொல்லப்பட்டபடியே பிராட்டியானவள் பெருமாளுடைய உடைமையாகையாலே அவளுடைய பெருமைகள் அனைத்தும் பெருமாளுடைய பெருமைகளாகவே முடியும். ஆகையால் பெருமாளுடைய பரப்ரஹ்மத்வத்துக்கு எந்தக் குறையுமில்லை" என்று இந்த சந்தேகத்திற்கு தேசிகனுள்ளிட்ட நம்முடைய பூர்வாசார்யர்கள் அனைவரும் பரிஹாரம் காட்டியுள்ளார்கள். இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தாமல் ஸ்ரீமதழகியசிங்கர் சதுஃச்லோகிக்குப்

http://acharya.org

பொருள் எழுதிக்கொண்டு போவது சரியல்ல. ஸ்ரீமதழகிய சிங்கர் வைகாசி அருள்மொழியிலுள்ள முதல் ச்லோகத்தில் "எம்பெருமான் ஹரிக்குப்போல் லக்ஷ்மீதேவிக்கும் சதுஃச்லோகி முதல் ச்லோகத்தில் ஆளவந்தார் ஸர்வஶேஷித்வத்தைக் கூறிஞர்" என்று எழுதியுள்ளார். ஸர்வ சப்தத்திற்கு உபய விபூதி என்று பொருள் கொண்டால்தான் இவ்வாக்யம் பொருந்தும். உபயவிபூதி சேஷித்வமே எம்பெருமானைப்போல் பிராட்டிக்குமுள்ளது. உபயவிபூதிக்கும், அவளுக்கும் ஶேஷியாயிருக்கையாகிற ஸர்வஶேஷித்வம் எம்பெருமான் ஒருவனுக்கேயுள்ளது. அவனைத் தவிர மற்றவர்களுக்கு ஶேஷியாயிருக்கையாகிற ஏகோநஶேஷித்வமே இவளுக்குள்ளது. தேசிகன் சதுஃஶ்லோகி முதல் ச்லோகத்தில் 'ப்₃ரூம: கத₂ம் த்வாம் வயம்' என்னுமிடத்துக்கு வ்யாக்யானம் செய்கையில் 'தத்₃ இதர ஸர்வ ஶேஷித்வேந ப்ரஸித்₃தா₄ம்' [எம்பெருமானைத்தவிர மற்ற அனைவருக்கும் ஶேஷியாக ப்ரஸித்தி பெற்ற பிராட்டியாகிற உன்னை] என்று அருளிச்செய்கையாலே, தேசிகனும் பிராட்டிக்கு ஏகோநஶேஷித்வத்தை இசைந்துள்ளாரேயன்றி ஸர்வ ஶேஷித்வத்தை இசையவில்லை என்று விளங்குகிறது. டீகலபூர்வாசார்யர்களும் இப்படிப் பலவிடங்களில் இருவருக்குமுள்ள வாசியைக் காட்டியிருப்பதை மறைத்து "இருவரும் ஸர்வஶேஷிகளே", "இருவரும் பரப₃ரஹ்மமே" என்று ஸ்ரீமதழகியசிங்கர் அடிக்கடி எழுதுவது வாசகர்களை ஏமாற்றுவதாகிற விப்ரலிப்ஸை என்னும் தோஷத்தின்பாற் படாதா என்பதை ஸ்ரீமதழகியசிங்கர் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் 'பிறர் எழுதும் கட்டுரைகளில் பல பிழைகள் உள்ளன. உதாரணமாக வைகாசி ப்ரியா அருள்மொழியையும், பஞ்சாங்க ஸங்க்ரஹத்தையும் ஒட்டி வெளிவந்துள்ள மூன்று பக்கங்கொண்டதொரு கட்டுரையின் தலைப்பில் பல எழுத்துக்கள் விடுபட்டுவிட்டன. இதை அச்சுப்பிழை என்று மன்னித்துவிடலாம். ஆனால் அக்கட்டுரையில் (1) தந்நலம் (2) யக்ன (3) ஆபாதஸமடம்

http://acharya.org

(4) ஶாத்விஹம் (5) ஶோடஶோஶாரத்துடன் (6) திணரினுர்க்ள் (7) மூத்தாபிஷேகராய் (8) விஸாரிக்கும் (9) க்ருஹஸ்தாஸ்தரமத்தை (10) அரச பத்தனி (11) நகம் எறிவதோடு (12) கொள்ளையில்லா அன்பு (13) வார்த்தைகளாகவது முதலான பலபல பிழைகள் காணப்படுகின்றன. எழுதுபவர் இப்படி எழுதினாலும் பிழைதிருத்துபவர்கள் அவற்றைத் திருத்தாமலிருப்பதை எப்படி மன்னிப்பது? இவையாவது எழுத்துப் பிழைகள் என்று அவைகளைப் பெரிதுபடுத்தாது விட்டுவிடலாம். ஒரு பெரிய ஆஸ்தானத்தை அலங்கரிப்பவரும், கோடிகோடியாகப் பணம் திரட்டிப் பல நற்பணிகளைப் புரிபவரும், சிறந்த வித்வானுமான ஸ்ரீமதழகியசிங்கர் எழுதும் அருள்மொழியில் விப்ரலிப்ஸை (வாசகர்களை ஏமாற்றுவது) என்னும் குற்றம் தலைகாட்டுவது மன்னிக்கக் கூடியதல்லவே. இதை ஸ்ரீமதழகியசிங்கரும், ந்ருஸிம்ஹ ப்ரியா நிர்வாஹிகளும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைகாசி அருள்மொழியின் இறுதியில் ஸ்ரீமதழகியசிங்கர் ஆனி இதழில் தேசிகனுடைய சது:ச்லோகீ வ்யாக்யானத்திலுள்ள விசேஷங்களை விளக்கப்போவதாக ஸாதித்திருக்கிறார். ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு நாம் அனுப்பியிருக்கும் பஞ்சமபக்ஷ சததூஷணியில் நாற்பத்தைந்து முதல் ஐம்பத்தேழு வரையுள்ள 13 தூஷணங்களில் 45-வது தூஷணத்தில் 'ஸத்₄ரீசீ' என்னும் தேசிக ஸ்ரீஸூக்திக்கு, பாணினி ஸூத்ரத்தையும் அமரகோஶ வைஜயந்தீ நிகண்டுக்களையும் கொண்டு 'துணைவி' என்றே பொருள் எழுதியிருக்கிறோம். இதை ஸுதர்சனர் பதிலிலும் (பதிலாவது ஶதகம் 37-வது பதில்) விளக்கியிருக்கிறோம். ஸ்ரீமதழகியசிங்கர் ஒரு ப்ரமாணமும் காட்டாமல் 'ஸத்₄ரீசீ' என்னும் பதத்திற்கு 'எல்லாவிதத்திலும் ஒப்பானவள்' என்று பொருள் எழுதியிருக்கிறார். தாம் எழுதியிருப்பதற்கு ப்ரமாணம் காட்டாமல் நாம் காட்டியிருக்கும் ப்ரமாணங்களுக்கும் பதில் சொல்லாமல் மேலேமேலே எழுதிக்கொண்டு போவது விப்ரலிப்ஸை ஆகாதா? நிற்க.

http://acharya.org

பஞ்சமபக்ஷ சததூஷணியில் 46 முதல் 57 வரையுள்ள 12 தூஷணங்களில் தேசிகனுடைய சது:ச்லோகீ பாஷ்யத்திலிருந்து பலபல இடங்களை எடுத்துக்காட்டி, தேசிகன் தாம் பிராட்டி பற்றிக் காட்டிய நாலாவது பக்ஷத்தைத் தழுவியிருக்க முடியுமேயொழிய ஐந்தாவது பக்ஷத்தைத் திருவுள்ளம் பற்றியிருக்க முடியாது என்று நிரூபித்திருக்கிறோம். இந்த நிரூபணங்களுக்கெல்லாம் தக்க ஸமாதானமுரைக்காமல் ப்ரியா ஆனி இதழிலிருந்து ஸ்ரீமதழகியசிங்கர் தேசிகனுடைய சது:ச்லோகீ வ்யாக்யானத்தை விளக்கிக்கொண்டு போவாரானால் விப்ரலிப்ஸா தூ₃ஷணம் தமக்கு உறுதிப்பட்டு விடும் என்பதை உணர்ந்து, சது:ச்லோகீக்கு தேசிகன் அருளிய வ்யாக்யானத்தை நடுநிலைநின்று விளக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ வி. ராமமூர்த்தி, அட்வகேட், துறையூர்.

43. 15—5—99 ஹிந்து பத்திரிகையில் பக்கம் 3-ல் நம்மாழ்வாருடைய கி.பி. 9-வது நூற்றாண்டு சிலை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதைப் பற்றி, பாளையங்கோட்டை அருங் காட்சியகம் அதிகாரி S. கிருஷ்ணம்மாள் எழுதிய கட்டுரையில் நம்மாழ்வார் சிதம்பரத்தில் அவதரித்ததாகவும், அவருடைய பெற்றோர் அவரை ஆழ்வார் திருநகரிக்குக்கொண்டு வந்ததாகவும் எழுதியிருக்கிறார். ஆழ்வார் திருநகரி ஆழ்வார் அவதரித்த தலம் என்று அனைவரும் அறிந்துள்ள செய்திக்கு இது முரணாயிருக்கிறதே; விமர்சிக்க வேண்டுகிறேன்.

ஆழ்வார் தம்முடைய திருவிருத்தம், திருவாய்மொழி என்னும் இரு திவ்ய ப்ரபந்தங்களிலும் தம்மைக் குருகூர்ச்சடகோபன் என்றே குறிப்பிடுகிறார். நம்மாழ்வாருடைய சீடரான மதுரகவியாழ்வாரும் தம்முடைய கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் நூலில் 7 பாட்டுக்களில் அவரை 'குருகூர் நம்பி' என்றே குறிக்கிறார். கம்பர் பாடிய சடகோபரந்தாதியிலும் அப்படியேயுள்ளது. ஆசார்யர்கள் அருளிய வ்யாக்யான நூல்களிலும், குருபரம்பரை நூல்களிலும், தேசிகன் மணவாளமாமுனிகள் அருளிய பாடல்களிலும் ஆழ்வார் குருகூரில் அவதரித்ததாகவே காணப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம் இது. அப்படியிருக்கும்போது ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள பாளையங்கோட்டை அருங் காட்சியக அதிகாரி ஆழ்வார் சிதம்பரத்தில் அவதரித்ததாக எழுதுவது விசித்திரமாயுள்ளது. மிகவும் தரமுள்ள பத்திரிகை என்று பெயர் பெற்ற ஹிந்து பத்திரிகை இதை வெளியிடுவது அதைவிட விசித்திரமாயுள்ளது.

http://acharya.org

ப்ரமாதி ஆனி ப்ரியா - அருள்மொழி பற்றிய விமர்சம்
[17—6—1999]

வைகாசி ஸுதர்சனத்தில் [618] நாம் பிராட்டியைப் பற்றி எழுதியிருக்கும் விஷயங்களை ஆனி ப்ரியா அருள்மொழி யில் ஏற்றுக்கொண்டுள்ளார் ஸ்ரீமதழகிய சிங்கர்.

“உபய விபூதிகள் பிராட்டி ஆகிய அனைத்துக்கும் ஶேஷி எம்பெருமான். எம்பெருமானைத் தவிர்ந்த மற்றைய விபூதி கள் அனைத்துக்கும் ஶேஷிணி பிராட்டி. ஆகையால் எம்பெரு மானை ஸர்வஶேஷி என்றும், பிராட்டி, பெருமாள் ஆகிற ஒன்று குறைந்த அனைத்துக்கும் ஶேஷிணி (ஏகோநஶேஷிணி) என்றும் கூறுவார்கள். இது தத்த்வஸ்திதி—உண்மை நிலை” என்று ஸ்ரீமதழகிய சிங்கர் எழுதியது ஸாரமான வார்த்தை. இதை ஏற்றுக்கொண்டபிறகு, “பெருமாளும் பிராட்டியும் பரப்ரஹ்மங்களே, பிராட்டி பெருமாள் ஆகிய இருவரும் எல்லாவிதத்திலும் ஸமமானவர்கள்” என்று எழுத இடமே யில்லை.

பிராட்டி தத்வ விஷயத்தில் தென்னாசார்யர்களுக்கும் ஸ்ரீதேசிகனுக்கும் உள்ள கருத்து வேறுபாடு மூன்று விஷயங் களைப்பற்றியே. (1) ஈஶ்வரன் ஒருவனே என்று ஸகல ஶாஸ்த் ரங்களும் முழங்குகின்றன. மற்ற சேதனர்களைப்போல் பிராட் டியும் எம்பெருமானுக்கு அத்யந்த பரதந்த்ரையாயிருப்பவள். ஆகையால் அவளை ஜீவ வகுப்பில் சேர்ப்பதே உசிதம் என்று தென்னாசார்யர்கள் திருவுள்ளம் பற்றினார்கள். மற்ற ஜீவர் களைக் காட்டிலும் பிராட்டிக்குப் பல பெருமைகள் இருக்கை யால், அவளை ஈஶ்வர வகுப்பில் சேர்ப்பதே உசிதம்; ஆயி னும் அவள் எம்பெருமானுக்கு ஶரீரமாய் அத்யந்த பரதந்த்

16

http://acharya.org

ரையாய் இருப்பவளே; ஜீவர்கள் நித்யர்முக்தர்பத்தர் என்று மூன்று வகைப்பட்டிருப்பதுபோலவும், அசித்து ஶுத்தஸத்வம், (நித்ய விபூதி), மிஶ்ரஸத்வம் (மூலப்ரக்ருதி), ஸத்வஶூந்யம் (காலம்) என்று மூன்று வகைப்பட்டிருப்பதுபோலவும், ஈஶ்வரதத்வம் பரப்ரஹ்மமான ஸர்வேஶ்வரன் என்றும், ஈஶ்வரியான பெரிய பிராட்டியார் என்றும் இருவகைப்பட்டது என்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் பற்றினர். (2) ஜீவகோடியில் சேர்ந்தவளாகையாலே பிராட்டியின் ஸ்வரூபம் அணுவே; ஆயினும் அவள் எம்பெருமானுக்கு ஸ்வரூபநிரூபக பூதையாகையாலே அவன் ஸ்வரூபம் இருக்குமிடமெங்கும் இவள் ஸ்வரூபம் இருக்கவேண்டுமாகையாலும், இவள் ஸர்வ வ்யாபிநீ என்று ப்ரமாணங்கள் கூறுகையாலும் இவள் அகடிதகடநா ஶக்தியாலே பகவத் ஸ்வரூபம் இருக்குமிடமெங்கும் வ்யாபித்திருக்கிருள் என்று தென்னுசார்யர்கள் திருவுள்ளம் பற்றினர்கள். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் க்ருத்ஸ்நப்ரஸக்தி— அதிகரணத்தில் [2-1-9] 'எம்பெருமான் விபுவாயிருந்த போதிலும், அணுப்பொருள்களிலும் தன் ஸ்வரூபம் முழுவதும் கொண்டு வ்யாபித்திருக்கிருன். ஶ்ருதி இப்படிச்சொல்லுகையால் இதை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டும்'' என்று ஸூத்ரகாரர் நிர்ணயித்துள்ளார். "நீர் தொறும் பரந்துளன் பரந்த அண்டமிதென" [திருவாய் 1-1-10] என்று ஆழ்வாரும் இதை ஒப்புக்கொண்டுள்ளார். எம்பெருமானுக்குள்ள இந்த வ்யாப்தியை "**பரிஸமாப்ய வர்த்தித்வம்**" (ஒவ்வொரு பொருளிலும் முழு ஸ்வரூபத்துடன் வ்யாபித்திருக்கை) என்பார்கள். இப்பெருமை எம்பெருமானுக்குள்ள அகடிதகடநா ஶக்தியாலே பொருந்துகிறது என்று தென்னுசார்யர்கள் திருவுள்ளம் பற்றினர்கள். அதுபோலவே பிராட்டி அணுஸ்வரூபை

http://acharya.org

யாய் இருந்தபோதிலும் ஸர்வவ்யாபிநியாயிருப்பது அக₄டித க₄டநா ஶக்தியாலே பொருந்தும் என்று (வாதிகேஸரி ஜீயர், அரும்பதவுரைகள் ஆகியவற்றில் மேற்கோளாக எடுக்கப்பெற்ற) விஷ்ணு சித்தீய வ்யாக்யானத்திலும், பெரியவாச்சான்பிள்ளை யின் பரந்தரஹஸ்யத்திலும், நாயனாராச்சான்பிள்ளையின் சது:ஶ்லோகீ வ்யாக்யானத்திலும் நிரூபிக்கப்பட்டது. ஸ்ரீதேசிகன் பகவத்ஸ்வரூபம் அக₄டிதக₄டநா சக்தியாலே ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்ய வ்யாபித்திருக்கும் என்பது க்ருத்ஸ்நப்ரஸக்தி-அதிகரணத்தின் [2-1-9] அர்த்தமல்ல என்று திருவுள்ளம்பற்றினராகையாலே பிராட்டி அணு ஸ்வரூபை யாய் இருந்த போதிலும் அக₄டிதக₄டநா ஶக்தியாலே எங்கும் வ்யாபித்திருக்கிறாள் என்பதை ஏற்கவில்லை. "இயல்வாகவே பிராட்டி விபு₁ ஸ்வரூபத்தை உடையவள்; ஆனாலும் அவளு டைய ஸ்வரூபத்தையும் அந்தர்யாமியான எம்பெருமான் உள் நுழைந்து நியமிக்கிறான்" என்று கொண்டார். (3) "மோக்ஷ விஷயத்தில் பிராட்டிக்குப் புருஷகாரத்வமே உண்டு. உபாயத் வம் இல்லை. புருஷகாரத்வம் இருக்குமிடத்தில் உபாயத்வம் இருக்கவும் முடியாது" என்று தென்னாசார்யர்கள் திருவுள்ளம் பற்றினார்கள். "பிராட்டி புருஷகாரம் செய்வதோடு கூட, மோக்ஷ மளிக்கும் ஸங்கல்பத்தை எம்பெருமான் செய்யும்போது பிராட்டியோடு கூடியிருந்தே செய்கிறானாகையாலே அவளுக்கு அப்ரதா₄நமான மோக்ஷோபாயத்வமும் உண்டு என்று தேசிகன் திருவுள்ளம் பற்றினார். இந்த மூன்று விஷயங்கள் தவிர பிராட்டியைப் பற்றிய மற்ற எல்லா விஷயங்களிலும் தேசிகனும் மற்ற பூர்வாசார்யர்களும் ஒத்த கருத்தையுடையவர்களே.

http://acharya.org

"இவ்விஷயத்தின் விரிவான விளக்கம் அடுத்த ஸஞ்சிகைகளில் ஸமயம் வரும் இடத்தில் வெளியாகும்" என்று ஸ்ரீமதழகிய சிங்கர் ஸாதித்துள்ளார். அப்படி விளக்கும்போது மேடி மூன்று விஷயங்கள் தவிர வேறு ஏதாவது விஷயங்களில் தேசிகனுக்கும் மற்ற பூர்வாசார்யர்களுக்கும் ஸ்ரீதத்வ விஷய மாகக் கருத்து வேற்றுமை உண்டென்று ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் பற்றினால் அதைத் தெளிவாக ப்ரமாணங்காட்டி விளக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன். நிற்க.

அருள்மொழி பக்கம்-25-ல் "வயல்கள் நிறைந்துள்ள திருப்புளியங்குடி என்ற க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் காசினிவேந்தன் என்ற எம்பெருமானை ஸ்வாமி நம்மாழ்வார் மங்களாஶாஸனம்" செய்வதாக ஸ்ரீமதழகியசிங்கர் ஸாதித்துள்ளார். அந்த திவ்யதேசத்தை "திருப்புளிங்குடி" என்றே ஆழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளாராகையால் அங்குள்ள பாமர ஜனங்கள் வழங்குவதுபோல் 'திருப்புளியங்குடி' என்று எழுதுவது பிழை. மேலும் அத்திருவாய்மொழியிலேயே "**காய்சினவேந்தே**" [9-2-6] என்று நம்மாழ்வார் பெருமாளின் திருநாமத்தைக் குறித்துள்ளார். நம்பிள்ளை சிஷ்யர்கள் இருவரும் வ்யாக்யானத்தில் 'இப்பதம் எம்பெருமானுடைய திருநாமம்' எனக்குறித்துள்ளனர். "காயும் சினத்தையுடைய நிர்வாஹகனே" என்று பொருளையும் விளக்கியுள்ளனர். இவ்விஷயத்தை அறியாத அவ்வூர்மக்கள் பெருமாள் திருநாமத்தைக் 'காசினிவேந்தன்' என்று மாற்றி, "பூமிபாலன்" என்று வடமொழியிலும் மொழிபெயர்த்து விட்டனர். "காசினிவேந்தன்" என்று தங்களுக்குப் பெயரும் வைத்துக்கொள்கின்றனர். அருளிச் செயலை அறிந்த நாம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு முரணான அத்திருநாமத்தால் எம்பெருமானைக் குறிக்கக் கூடாது என உணர்த்தி நிற்கிறேன்.

http://acharya.org

ஸுதர்சனர் ஆசிரியரின் குறிப்பு

ப்ரமாதி ஆடி ப்ரியாவில் [ஜூலை-99] சது:ஶ்லோகியின் முதல் ஶ்லோகம் நாயனாராச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்தை அனுஸரித்து அனுபவிக்கப் பெற்றுள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் ஸ்ரீதத்வ விஷயமான சர்ச்சையில் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவில் ஸ்ரீதேசிகன் பிராட்டி விஷயத்தில் தாம் காட்டியுள்ள ஐந்து பக்ஷங்களில் ஐந்தாவது பக்ஷத்தைப் பின்பற்றியவர் என்பதற்கோ, புருஷகார மீமாம்ஸை இயற்றியவரும், அஹோபில மட ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தவருமான நாராயண ஜீயருடைய நிர்ணயத்திற்கு முரணாக ஸமீப காலத்திலிருந்த ஸ்ரீமதழகிய சிங்கர்கள், "பிராட்டியும் பரப்ரஹ்மமே" என்று எழுதியிருப்பதை நிரூபிக்கவோ இதுவரையில் எந்த ப்ரமாணத்தையும் "ப்ரியா"வால் காட்ட இயலவில்லை. தேசிகன் தாம் காட்டிய நாலாவது பக்ஷத்தையே தழுவியவர் என்பதற்கும், ஐந்தாவது பக்ஷத்தை மறுத்தவர் என்பதற்கும், "பிராட்டி பரப்ரஹ்மம்" என்றோ, "எம்பெருமானோடு எல்லா விதத்திலும் துல்யமானவள்" என்றோ கருதாதவர் என்பதற்கும் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ ஶத தூஷணியிலும், ஸுதர்சனர் பதில் பதினுலாவது ஶதகத்திலும் நாம் காட்டியிருக்கும் நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களில் எதற்கும் தக்க பரிஹாரம் உரைக்கவுமில்லை. நேர்மாறாகப் பிராட்டிக்கு எம்பெருமானைக் குறித்து ஶேஷத்வ பாரதந்த்ரியங்கள் உண்டு என்றும், அவளுக்குள்ளது ஏகோந ஶேஷித்வமேயொழிய ஸர்வஶேஷித்வமல்ல என்றும் மிகத்தெளிவாகக் கூறுவதன் மூலம் நம்முடைய நிரூபணங்களை ப்ரியா வெற்றிபெறச் செய்திருக்கிறது. நம்மை சந்திக்கும் உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த எல்லா அறிவாளிகளும் ஸுதர்சனத்தின் இந்த வெற்றி வயிர எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்று என்று உளமாரப் பாராட்டுகிறார்கள். ப்ரக்ருத விஷயத்தில் பதில் சொல்லுவதற்குத் தனது இயலாமையை மறைப்பதற்காக ப்ரமாதி வைகாசி [618-25—5—99] ஸுதர்சனத்தில் "ஸ்ரீவைஷ்ணவத்தை வளர்க்கும் வழிகள்" என்னும் கட்டுரையில்,

http://acharya.org

வைணவத்தில் பெரும்பாலானவர்கள் புறந்தொழாமைக் கொள்கை யைக் கைவிட்டு விட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீமத ழகிய சிங்கரும் நாமும் பேசிக்கொண்டிருந்தபோது நடந்த நிகழ்ச் சியைக் குறிப்பிட்டிருந்தது 'அக்ரமமான செயலாகும்' என்று நம்மீது ப்ரியா குற்றம் சாட்டியுள்ளது. [ப்ரியா ஆடி, பக்கம் 95, 96 காண்க] இந்தக் குற்றச்சாட்டை ஓர் கேள்வியாகக் கொடுத்து அதற்குப் பதி லுரைக்கிறோம்.

ப்ரியா ஆடி [ஜுலை-99] ஸஞ்சாரச் செய்திகள் பக். 95-96

44. ஸுதர்சனம் [618] கட்டுரையில் குறிக்கப்பட்ட பக்தர் மறுநாள் பஞ்சஸம்ஸ்காரத்திற்கு வந்தபோது விரிவாக உப தேசித்து அவரைப் புறந்தொழா மாந்தரின் தலைவராக ஆக்கி விட்டார் ஸ்ரீமதழகியசிங்கர். இதைப்போல் மற்றும் பலரையும் ஆக்கியிருக்கிறார். ஆகையால் ஸுதர்சனத்தின் குற்றச்சாட்டு அக்ரமமானதாகும்.

நாம் எவரையும் குறை கூறுவதற்காகவோ அல்லது குற்றம் சாட்டுவதற்காகவோ இந்த விஷயத்தை எழுதவில்லை. ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தில் பெரும்பாலானவர்கள் உயிர்நாடியான புறந்தொழாமைக் கொள்கைப்படி நடப்பதில்லையென்பதற்கும், ஆசார்யர்களுக்கு சிஷ்யர் களைக் கண்டித்துத் திருத்தும் உறுதியில்லை என்பதற்கும் ஒரு சிறு எடுத் துக் காட்டாகவே அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டோம். மறுநாளே அந்த பக்தரைத் திருத்திவிட்டார் என்று ப்ரியா எழுதுவது இதற்குத் தக்க பதில் ஆகாது. மேலும் பலரையும் புறந்தொழாமையில் அவர் நிலை நிறுத்தி வருகிறார் என்று காட்டுவதும் இதற்குத் தக்க பதிலாகாது. இன்று ஸ்ரீமடத்தில் பஞ்சஸம்ஸ்காரம் செய்துகொண்டவர்களில் எத் தனை சதவிகிதத்தினர் புறந்தொழாமையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று எழுதி, பெரும்பாலானவர்கள் கடைப்பிடிக்கிறார்கள் என்று காட்டுவதே தக்க பதிலாகும். சில வருடங்களுக்குமுன் ப்ரியா ஆசிரியர் ஸ்ரீ உ வே புரிசை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, "உபய ஸம்ப்ரதாயஸ்தர்களிலும் பெரும்பாலான ஸ்ரீவைஷ்ணவர்கள் புறந்

http://acharya.org

தோழாமையைக் கைவிட்டு விட்டார்கள். இவ்விஷயத்தில் தென்னுசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் நம் சிஷ்யர்களைக் காட்டிலும் சிறிது மேலான நிலையில் இருக்கிறார்கள்'' என்று பொருள்பட ப்ரியாவில் எழுதியுள்ளார். இதுவே நம்முடைய கருத்தை நிரூபிப்பது. நிற்க.

ஆசாரவிஷயத்தில் சிரத்தைகொண்டு ஆலயங்களில் ப்ராசீன ஆசாரங்கள் நிலைபெறுமாறு திட்டங்கள் வகுத்து எழுதும்படி ப்ரியா நம்மை நியமிக்கிறது. லோகாயதம் மிகப்பரவி வேரூன்றிவிட்டதால் ஆயிரக்கணக்கான அநாசாரங்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹம் முழுவதும் பரவி விட்டது. இதன் எதிரொலி ஆலயங்களிலும், எல்லா மடங்களிலும், ஆசார்யர்கள் திருமாளிகைகளிலும், ஸகல ஸ்ரீவைஷ்ணவ க்ருஹங்களிலும் நிறைந்து காணப்படுகிறது. ஸமூஹமே ஒட்டுமொத்தமாகத் திருந்தினலொழிய அரசாங்க ஆட்சியிலுள்ள ஆலயங்களில் புகுந்துள்ள இந்த நூற்றுக்கணக்கான அனுசாரங்களை எவராலும் திருத்த முடியாது. ஆசாரங்களைக் காட்டிலும் பதின்மடங்கு முக்கியமானதாய் வைஷ்ணவத்திற்கே உயிர்நாடியானதான புறந்தொழாமைக் கொள்கையை எல்லா மடாதிபதிகளும் ஆசார்ய புருஷர்களும் வைணவப் பத்திரிகைகளும் வித்வான்களும் பெருமுயற்சிசெய்து, பிரசாரம்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களில் பாதிப்பேராவது இக்கொள்கையை உறுதியுடன் அநுஷ்டிப்பவர்கள் என்னும் நிலையை உருவாக்கினலதான் ஆசாரங்களும் தன்னடையே முன்னேற்றமடையும் என்பது நம்நிலை.

ஸ்ரீஅஹோபில மடத்தின் ஆசாரங்களும் காலக்ரமத்தில் மிகவும் மாறுதலடைந்துவிட்டன என்று விளக்கும் "மணிவண்ணன்" [(1) ஸ்ரீ விஷ்ணுசித்தர் வாசகர் வட்டம் 4, ஸௌந்தரராஜ அய்யங்கார் தெரு ரங்கநகர், ஸ்ரீரங்கம் (2) ஸ்ரீ அ. ஸ்ரீநிவாஸன், 7,ராமகிருஷ்ணபுரம் முதல் தெரு, சென்னை-33] என்னும் விலாசங்களில் கிடைக்கும் புத்தகம் இன்று [17—7—99] தபாலில் நமக்குக் கிடைத்துள்ளது. இப்புத்தகத்தை வெளியிட்ட "ஸ்ரீரங்கம் ஸ்ரீவிஷ்ணுசித்தர் வாசகர் வட்டம் செயலர்"

http://acharya.org

இப்புத்தகத்தில் எழுதியிருக்கும் முகவுரையிலிருந்து அவர் திருக்குடந்தை ஆண்டவன் சிஷ்யர் என்று விளங்குகிறது. அவர் தம் முகவுரையில், "ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குப் பலவகை சேர்க்கும் ஸஞ்சிகைகளில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. பாராட்டப்படவேண்டிய அம்சங்கள் பல இருந்த போதிலும் இந்த ஸஞ்சிகையில் சர்ச்சைக்குரிய விஷயாம்சங்கள் மேலோங்கி விட்டதைச் சுட்டிக்காட்டும் வகையில் இந்த "மணிவெள்ளான்" என்ற புத்தகம் அமைந்திருக்கிறது. விஷயத்தில் ந்யாயம் இருந்தாலும் தங்களுக்குப் பாதகமான கடிதங்களை அவர்கள் ஸஞ்சிகையில் வெளியிடமாட்டார்கள். இந்த அனுபவம் அடியோங்களுக்கு உண்டு. உண்மைக்குப் புறம்பான விஷயங்களை இவர்கள் இவ்வளவு நாட்கள் தடையில்லாமல் வெளியிட்டு வருகின்றனர் என்பது பற்றி ஆராய்ந்தபோது ஒரு சில காரணங்கள் புலப்பட்டன. மக்களின் மறதியைப் பயன்படுத்திக் கொண்டு எப்படி அரசியல் கட்சிகள் தங்கள் வியாபாரத்தை நடத்திக் கொள்கின்றனவோ அதுபோல இவர்களும் வாசகர்களின் மறதியைப் பயன்படுத்திக்கொண்டு நாளொரு பொய்யும் பொழுதொரு ஐதிஹ்யமுமாக எழுதி ஸ்ரீஅஹோபில மட குருபரம்பரைக்கு அப்போதைக்கப்போது ஒரு புதிய போலிவை ஏற்படுத்துவதில் உத்ஸாகமாக இருக்கிறார்கள். இதனால் தேசிக ஸம்ப்ரதாயம் எப்படி பாதிப்புக்குள்ளாயிருக்கிறது என்பதையும் புத்தகத்தில் விரிவாகத் தந்துள்ளோம். உண்மைக்குப் புறம்பான வாதங்களை நிராகரித்து தேசிக ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றுவதில் பெரியோர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் எதிர்கால சந்ததியர்க்கு துரோகம் செய்தோமாவோம். சர்ச்சைக்குரிய விஷயாம்சங்களில் ஒரு சிலவற்றைத்தான் இப்போது கையாண்டுள்ளோம்" என்று எழுதியுள்ளார். ஸ்ரீமதஹோபில மடத்தைச் சேர்ந்தவராய் சென்னையில் வாழும் சுரண்டை கோபாலதாஸர் என்பவர் இந்நூலுக்கு மற்றொரு முகவுரை கொடுத்திருக்கிறார். அது பின்வருமாறு :—

http://acharya.org

"அடியேனுக்கு பூர்வீகம் சுரண்டை கிராமம். திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது. 40-வது பட்டம் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் பெரிய காருகுறிச்சி அழகிய சிங்கர் பூர்வாச்ரமத்தில் கோயில் பிரதிஷ்டை கைங்கர்யத்தால் பாக்கியம் பெற்ற ஸ்ரீ கிராமங்களில் சுரண்டையும் ஒன்று. ஷ ஸ்ரீமத் அழகிய சிங்கர் பற்றிய ஒரு ஸ்ரீகோஶம் காருகுறிச்சி வங்கீபுரம் ஸ்ரீஸுந்தர ராஜாச்சார்யார் வெளியிட்டுள்ளார். அந்த ஸ்வாமி அடியேனுடைய திருமாமனாரின் தமையனார். இதைப் பெருமையாக எழுதிக்கொள் கிறேன். அடியேன் கேள்விப்பட்டது ப்ராசீனமாக ஸ்ரீமத் அழகிய சிங்கர்கள் ப்ரதோஷகாலத்தில் மௌனத்தைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்தனர். அவர்கள் ஸ்வதர்மங்களை அனுஷ்டிப் பதற்கு இடையூறுகள் இல்லாததால் தபோபலம், ஞானபலம் அளவிட முடியாதபடி இருந்தது. காலக்ஷேபங்களும் சிஷ்ய வ்ருத்தியும் குறைவில்லாமல் இருந்தன. கால மாறுதல் தோற்று வித்த பாதிப்புகளைப் பற்றித் தான் நாம் கவலைப்படவேண்டும். பணபலம், மனிதபலம் இல்லாமலும் சம்பிரதாய ஏற்றத்திற்கு நாவல்பாக்கம் போன்ற ஸ்ரீகிராமம் உதாரணமாக இருக்கும்போது, நம் ஸ்ரீமடத்தில் ப்ரபுக்களின் ஆதிக்கம், அன்றாட விவகாரங் களில் அதிக தலையீடு அவசியமில்லை என்பது பலருடைய கருத்து. இதில் மாறுதல் ஏற்பட்டால் ஸ்ரீமடத்தின் ஶ்ரேயஸ் இன்னும் அதிகமாக வாய்ப்பிருக்கிறது. இந்தப் புத்தகம் அநேக ஸ்ரீவைஷ்ணவர்களின் கவனத்தைக் கவர்ந்துவிடும். சரியான ஸமா தானம் சொல்லவேண்டிய பொறுப்பு ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு இருக்கிறது. மேலும் இதுமாதிரியான புத்தகம் வெளிவராமல் இருப்பதற்கும் வழி செய்யவேண்டும்" — சுரண்டை கோபால தாஸன், சென்னை. [19–6–99].

22 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் உள்ளே ஸ்ரீ அஹோபிலமடத்தார் தாங்கள் முன்பு கடைப்பிடித்து வந்த ஆசாரங்களில் பலவற்றைக் கைவிட்டு விட்டதைப்பற்றியும், அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட அஹோபில மட குருபரம்பரை நூலில்

http://acharya.org

600 ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஆதிவண் சடகோப ஜீயரைப் பற்றிப் பல பொய்க்கதைகள் புனைந்து எழுதியுள்ளதைப் பற்றியும் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முதலில் நடைப்பயணமாகச் சென்ற ஜீயர்கள் பல்லக்கில் ஏறுவதற்கு ஒரு ஐதிஹ்யத்தைக் கற்பித்திருக்கிறார்கள் இவர்கள் என்று இப்புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளது. எந்த ஒரு ஐதிஹ்யமும் இல்லாமல் தற்காலத்தில் டிராக்டரில் ஊர்ஊராக பவனி வருவது எந்த ஆசாரத்தில் சேர்ந்தது? ஆகையால் காலப்போக்கில் தங்கள் மடத்திலும் புகுந்துவிட்ட அநாசாரங்களைத் திருத்திவிட்டு, பின்னர் மற்றவர் களின் ஆசாரங்களை ஆராயப் புகுவதே அஹோபில மடத் தாருக்கு நலம்.

K A தேவராஜன், சென்னை-1.

45. ஸ்ரீமதழகியசிங்கர் சென்னை ஸர்வகலாசாலையில் நவம் பர்-98-ல் நிகழ்த்திய உபந்யாஸத்தில், தங்கள் மடத்திற்கும் ஸ்ரீநம்மாழ்வாருக்கும் அத்யந்த சம்பந்தம் இருப்பதாகவும் தாங்கள் மட்டுமே "ஸ்ரீசடகோபஸ்ரீ" என்று கையொப்பம் செய்வதாகவும், "தேசிகனுடைய சிஷ்யர் பரகால ஜீயர், அவருடைய சிஷ்யர் ஸ்ரீ ஆதிவண்சடகோபஜீயர், அவருடைய சிஷ்யர் ஸ்ரீமணவாள மாமுனி கள்" என்றும் கூறினார். இதை விமர்சிக்கக் கோருகிறேன்.

ஆதிவண் சடகோபஜீயர் பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்ய வம்சத்தில் வந்தவர் என்று கோயில் கந்தாடை அண்ணன் குமாரரான கந்தாடைநாயன் இயற்றிய பெரியதிருமுடியடைவு கூறுகிறது. ஐநூறு வருடங்களுக்கு முற்பட்ட நூலான இதற்கு முரணாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த பரந்தூர் ஸ்ரீமதழகியசிங்கர் அஹோபிலமட குருபரம்பரையிலும், அவருக்குப்பின் வந்தவர்களின் நூல்களிலும் எழுதியிருப்பதைக் கொண்டு வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் கூறியிருப்பது நடுநிலையாளர்களுக்கு ப்ரமாண மாகாது.

http://acharya.org

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

ப்ரமாதி ஆவணி ப்ரியாவில் [ஆகஸ்ட் 99] நாயனாராச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளை எடுத்துக்கொண்டு அவர் மூன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறார் என்று அருள்மொழியில் எழுதப்பட்டுள்ளது. சென்ற ஸுதர்சனம் இதழ்க்குறிப் பில் நாம் காட்டியபடி "பிராட்டி பரப்₃ரஹ்மம்" என்று, இவர்கள் தேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் முரணாகவும், அவளுக்குத் தாங்களே இசையும் ஏகோஙஶேஷித்வம், ப்₄க₃வச்சே₂ஷத்வ பாரதந்த்ரியங்களுக்கு முரணாகவும கூறிவருவதற்கு எந்தப்ரமாணத்தையும் இவரால் காட்ட இயலாமை யாலே, விதண்டாவாதம் செய்து நாயனாராச்சான் பிள்ளையை தூஷிக்க முற்பட்டுள்ளார். அந்த தூ₃ஷணத்தை ஒரு கேள்வியாகக் கொடுத்து அதற்கு பதிலுரைக்கிறோம் அடுத்தபடியாக.

ப்ரமாதி ஆவணி ப்ரியா - அருள்மொழி (46 & 47)

46. "மிதுநஶேஷத்வம் ஸர்வஸாதாரணம் என்னுமிடத்தை தத்த்வவித்துக்களான நம்ஆழ்வார்களும் அருளிச் செய்தார் களிறே" என்று நாயனாராச்சான்பிள்ளை சதுஃஶ்லோகீ முதல்ஶ்லோக வ்யாக்யானத்தில் [பக் 11-12] அருளியுள்ளார். இதிலிருந்து மிதுந ஶேஷத்வம் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவானது என்று விளங்கு கிறது. ஆனல் பிராட்டிக்கு மிதுநஶேஷத்வம் கிடையாது. ஈஶ்வர ஶேஷத்வம் மட்டுமே உள்ளது. ஆகையால் நாயனாராச்சான்பிள்ளை யின் வாக்யப்படியே அவள் ஜீவவகுப்பில் சேர்ந்தவள் அல்லள் என்றும், ஈஶ்வர வகுப்பையே சேர்ந்தவளாகிறுள் என்றும் விளங்கு கிறது. இதற்கு முரணாக நாலாவது ஶ்லோகத்தின் வ்யாக்யானத் தில் அவர் பிராட்டி ஜீவவர்க்கத்தைச் சார்ந்தவள்தான் என்பதை ப்ரமாணங்களைக் கொண்டு ஸ்தாபித்துள்ளார். இது எப்படிப் பொருந்தும் ?

"மிதுநஶேஷத்வம் ஸர்வஸாதாரணம்" என்று கூறியிருக்கும் நாயனாராச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியிலுள்ள "ஸர்வ" ஶப்₃த₃ம் யாரைக் குறிக்கிறது என்பது சதுஃஶ்லோகியின் முதல் ஶ்லோகத்தி லிருந்தே விளங்கும். அந்த முதல் ஶ்லோகத்தில் மிதுநஶேஷமாகக்

http://acharya.org

குறிக்கப்படுகிறவர்கள் :— 1. ஆதிசேஷன், 2. கருடன், 3. மூலப்ரக்ருதி, 4. பத்நிகளோடு கூடிய ப்3ரஹ்ம ருத்3ராதி3 தே3வர்கள். வ்யாக்யானத்திலும் மிதுநசேஷமாயிருப்பவர்கள் இவர்களே என்று விளக்கப்பட்டுள்ளது. ஆகையால் "ஸர்வ" ஶப்3த3த்திற்கு 'ஸர்வ ஜீவர்கள்' என்று பொருள் கொள்ளவே முடியாது. அசேதனமான மூலப்ரக்ருதி ஜீவவகுப்பில் சேர்ந்ததல்லவே! ஆகையால் ஸர்வ ஶப்தம் இங்கு மிதுநஶப்தத்தால் குறிக்கப்பட்ட திவ்ய தம்பதிகளைத் தவிர்ந்த ஸகல சேதநாசேதநங்களை மட்டுமே குறிக்கும். எனவே இந்த ஸ்ரீஸூக்திக்கும், நாயனாராச்சான்பிள்ளை பிராட்டி ஜீவவகுப்பில் சேர்ந்தவளே என்று ப்ரமாணங்களைக் காட்டி நிருபித்துள்ளதற்கும் எந்த முரண்பாடுமில்லை.

உண்மையில் தேசிக ஸ்ரீஸூக்திகளே இவர்கள் கூறிவரும் கொள்கைக்கு முரண்பட்டவை என்பதைப் பஞ்சமபக்ஷ ஶததூ3ஷணியில் 40 முதல் 80 வரையில் உள்ள தூ3ஷணங்களில் பலபல தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி விரிவாக நிருபித்திருக்கிறோம். அவற்றில் எதற்கும் எந்த பதிலும் எழுத இயலாமல், நாயனாராச்சான்பிள்ளையை இவர் தூ3ஷிக்க முற்பட்டது அதிஸாஹஸமான செயலாகும்.

ந்யாய ஸித்3தா4ஞ்ஜனத்தில் ஈஶ்வர பரிச்சே2த3த்தின் தொடக்கத்தில், "ஸ்வஜ்ஞாநஸ்வேதரஸமஸ்த த்3ரவ்ய ஶரீரகத்வம்" [தன்னுடைய ஜ்ஞாநமும் தானும் தவிர்ந்த மற்ற எல்லா த்3ரவ்யங்களையும் ஶரீரமாகக் கொண்டிருக்கை] என்று ஈஶ்வர லக்ஷணத்தைக் காட்டினார் தேசிகன். பிராட்டி ஸர்வேஶ்வரனையும் அவனுடைய ஜ்ஞாநத்தையும் காட்டிலும் வேறுபட்டதொரு சேதநத்3ரவ்யமாயிருப்பவள் என்பதை எவராலும் மறுக்க இயலாது. ஆகையால் பிராட்டியும் எம்பெருமானுக்கு ஶரீரம் என்றும், முக்யமான ஈஶ்வர லக்ஷணத்தைப் பிராட்டிக்கு தேசிகன் திருவுள்ளம் பற்றவில்லையென்றும், நாலாவது பக்ஷத்தில் சொன்னபடி உபயவிபூ4தி ஶேஷியாகையாலே பிராட்டி எம்பெருமானுக்கு அடங்கியவளாய் ஈஶ்வர வகுப்பில் சேர்க்கப்படவேண்டியவள் என்றே தேசிகன் திருவுள்ளம் பற்றினார் என்றும் விளங்குகிறது. தேசிகன் காட்டிய மற்ற ஈஶ்வர லக்ஷணங்களும் பரப்3ரஹ்மமாயிருக்கைக்கு உரிய முக்2யேஶ்வரத்வம் பிராட்டிக்கு இல்லை என்பதை வலியுறுத்துகின்றன. "ஸர்வேஶ்வரத்வம்" என்னும் லக்ஷணம் எம்பெரு

http://acharya.org

-மானைத் தவிர்ந்த மற்றவர்களுக்கே ஈஶ்வரியாயிருக்கும் இவளுக்குப் பொருந்தாது என்பது வெளிப்படை. "ஸர்வஶேஷித்வம்" [அனைவர்க்கும் ஶேஷியாயிருக்கை] "ஸர்வாதா₄ரத்வம்" [அனைவர்க்கும் ஆதா₄ரமாயிருக்கை] என்னும் லக்ஷணங்களும் அப்படியேயாம். இதுபோலே மற்ற முக்யேஶ்வர லக்ஷணங்கள் பலவும் இவளுக்குப் பொருந்தாது என்பது நமது சததூ₃ஷணி 40-வது தூ₃ஷணத்தில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. "வ்யாபகத்வே ஸதி சேதநத்வம்" [உலகை வ்யாபித்திருக்கும் சேதநவஸ்து] என்னும் ஒரு லக்ஷணம் மட்டும் "முக்யேஶ்வரியாயிராமல் ஈஶ்வர வகுப்பில் சேர்ந்தவள்" என்று தாம் திருவுள்ளம் பற்றும் பிராட்டிக்கும் பொருந்தும்படியாக அமைத்தார் தேசிகன். இதிலிருந்து தேசிகன் நாலாவது பக்ஷத்தையே பின்பற்றியவரேயொழிய ஐந்தாவது பக்ஷத்தைக் கனவிலும் கருதியவரல்லர் என்பது வைர உருக்காயிற்று.

ஸித்தாஞ்ஜநம் ஜீவபரிச்சே₂த₃த்தின் தொடக்கத்தில் ஜீவலக்ஷணத்தைச் சொல்லும்போது "ஶேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம்" [ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாயும் ஜ்ஞாதா—(அறிபவன்) ஆகவும் இருக்கும் வஸ்து] என்று லக்ஷணமுரைத்தாரேயொழிய இவர்கள் கற்பனை செய்வது போல் "மிது₂நஶேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம்" [பெருமாளும் பிராட்டியுமாயிருக்கிற மிதுநத்திற்கு ஶேஷமாயும் ஜ்ஞாதா—(அறிபவன்) ஆகவும் இருக்கும் வஸ்து] என்று லக்ஷணம் உரைக்கவில்லை தேசிகன்.

"திவ்ய தம்பதிகளுக்கு உபயவிபூதிகளும் அப்ருதக் ஸித்த விஶேஷணங்கள் ஆகின்றன. எம்பெருமானார் ஸ்ரீப₄ாஷ்யத்தில் அருளிச்செய்த மூன்றுவகைப்பட்ட ஶரீரலக்ஷணங்களும் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிய நான்காவதான ஶரீரலக்ஷணமும் எம்பெருமான் பிராட்டி இவர்களைப்பற்றி உப₄யவிபூ₄திகளுக்கும் பொருந்துவதால் உப₄யவிபூ₄திகளும் தி₃வ்யத₃ம்பதிகள் இருவருக்கும் ஶரீரங்களாகின்றன" என்று இவர் எழுதியுள்ளது ஆதாரமற்ற ஆகாயக் கோட்டையே தவிர, ப்ராமாணிகமானது அன்று என்பது சற்றுமுன் காட்டியுள்ள லக்ஷண வாக்கியங்களிலிருந்தும், ஸ்ரீதத்வஸர்வஸ்வம் பஞ்சமபக்ஷஶததூ₃ஷணி ஆகியவற்றில் நாம் காட்டிய ப்ரமாணங்களிலிருந்தும் கையிலங்கு கனியாக விளங்குகிறது.

http://acharya.org

47. "உபய விபூதி சேஷித்வம் எம்பெருமானுக்கு இயல் வானது—(காரணம் பற்றி வந்ததன்று). ஆனால் பிராட்டிக்கு உள்ள அந்த உபயவிபூதி சேஷித்வம் எம்பெருமானுக்குப் பத்தினி என்ற காரணத்தினால் வந்ததாகையாலே ஔபாதிகம். (செயற்கையானது)" என்பது நாயனாராச்சான் பிள்ளையின் திரு வுள்ளம். "உபயாதிஷ்டாநம் ச ஏகம் சேஷித்வம்"—என்ற ப்ரமா ணத்தின்படி இருவருக்கும் சேஷித்வம் ஒன்றே என்று கிடைப்ப தால் இருவருக்குமுள்ள சேஷித்வம் நிருபாதிகம்—இயற்கையா னது என்பது தேசிகனின் திருவுள்ளம். ப்ரமாண வாக்யத்தில் காரணம் பற்றி வந்தது என்று குறிப்பிடவில்லை. ஆகையால், ப்ரமாண வாக்யத்தை அனுஸரித்து உள்ள தேசிகன் திருவுள்ளமே பொருத்தமானது.

இவர் ப்ரமாணவாக்யம் என்று எடுத்திருப்பது ஸோமாசியாண் டான் என்னும் ஸ்ரீராமாநுஜ சிஷ்யரின் **"ஷடர்த்தஸங்க்ஷேப"** வாக்யமேயாகும். முன்பின் வாக்யங்களோடு அதை ந்யாய ஸித்தாஞ் ஜநம்—ஈச்வர பரிச்சேதத்தில் தேசிகன் எடுத்திருக்கிறார். ப்ரக்ருத வாக்யத்திற்கு முன் வாக்யத்தில் **"பதியின் சொத்து பத்தினிக்கும் உரியதாகிறது"** என்னும் லோகந்யாயத்தைக் கொண்டு ஸோமாசியாண் டான் ஏகசேஷித்வத்தை நிரூபித்திருக்கிறார். ஆக, பிராட்டியின் சேஷித் வம் எம்பெருமானுக்குப் பத்தினியாய் இருப்பதால் வந்ததாகையால், எம் பெருமானுடையது போல் இயல்வானதன்று என்று இதிலிருந்தே தெளி வாக விளங்குகிறது. இந்த வாக்கியம் முழுவதையும் பொருளோடு ஸ்ரீதத்வஸார்வஸ்வத்தில் (விசிஷ்டாத்வைதமா, விசிஷ்டத்வைதமா பக்கம் 12-13-ல், காட்டியுள்ளோம். இதிலிருந்து பிராட்டியின் உபய விபூதி சேஷித்வம், விஷ்ணுபத்னியாயிருக்கும் காரணத்தால் வந்ததே என்று தேசிகன் எடுத்த ப்ரமாணத்திலிருந்தே விளங்குகையால், பிராட்டியின் சேஷித்வம் நிருபாதிகமானது (இயல்வானது) என்பது தேசிகனின் திருவுள்ளமுமன்று என விளங்குகிறது.

http://acharya.org

மேலும் விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம் முதல் கேள்வியில் தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில், விஷ்ணுபத்நியாய் இருப்பதாலேயே பிராட்டி அனைவருக்கும் ஈஶ்வரியாய் இருக்கிறாள் என்று அருளியிருப்பதையும், நம் ஶததூஷணி — 20-வது தூஷணத்தில், தேசிகன் ஸ்தோத்ர ரத்ன வ்யாக்யானத்தில் பிராட்டியின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் எம்பெருமானை ஆஶ்ரயிப்பதாலேயே உண்டாகின்றன என்று காட்டியிருப்பதையும் விரிவாக விளக்கியிருக்கிறோம். ஆகையால் பிராட்டியின் உபய விபூதி ஶேஷித்வம் பத்நியாய் இருக்கும் காரணத்தாலேயே வந்தது என்பதே ஸகல பூர்வாசார்ய ஸித்தாந்தம். தேசிகனின் திருவுள்ளமும் இதுவே என்று விளங்குகிறது.

ப்ரமாதி புரட்டாசி ப்ரியா — அருள்மொழி
[கேள்விகள் 48, 49, 50, 51]

48. நாம் நாயனாராச்சான்பிள்ளையை தூஷிப்பதாக (ஸுதர்சனர்) எழுதியுள்ளது தவறு. தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த எந்த ஆசார்யரையும் என்றுமே நாம் தூஷித்தது இல்லை.

''மிதுந ஶேஷத்வம் ஸர்வஸாதாரணம்'' என்று நாயனாராச்சான்பிள்ளை ஸாதித்திருப்பதை எடுத்துக்கொண்டு, அதற்கு **'ஸர்வ ஜீவ ஸாதாரணம்'** என்று அவர் சொன்னதாக இவரே தம் கற்பனையால் நீட்டிக்கொண்டு, இதிலிருந்தே பிராட்டி ஜீவகோடியில் சேர்ந்தவளல்லள் என்று நாயனாராச்சான்பிள்ளை இசைந்து விட்டதாகக் கற்பித்துக்கொண்டு 'இதற்கு முரணாக நாலாவது ஶ்லோக வ்யாக்யானத்தில் நாயனாராச்சான் பிள்ளை பிராட்டி ஜீவகோடியைச் சேர்ந்தவளே என்று ஸாதிக்கிறார்' என்று ப்ரமாதி ஆவணி ப்ரியாவில் விரிவாக எழுதியுள்ளார் இவர். இப்படி நாயனாராச்சான் பிள்ளை அருளியதைத் தம் இஷ்டத்திற்கு மாற்றிக்கொண்டு அவர் முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிறார் என்று இவர் கூறியது தூஷணமல்லாமல் வேறென்ன! நாயனாராச்சான்பிள்ளை **'ஸர்வ'** ஶப்தத்தால் குறிப்பிட்டது ஸர்வ ஜீவர்கள் அல்ல. மிதுநத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஸகல சேதநாசேதநங்களே என்று நாம் ஶ்லோகத்திலிருந்தும், வ்யாக்யானத்திலிருந்தும் தெளிவாக விளங்குகிறது என்பதைக் காட்டி, இவருடைய தூஷணம் நாயனாராச்சான்பிள்ளையின் மேல் ஏறுது என்று

http://acharya.org

தெளிவாக நிரூபித்திருக்கிறோம். இப்போது இவர் தாமே முன்பு எழுதியதற்கு முரணாக, 'தூஷிக்கவேயில்லை' என்று பொய்யுரைக்கிறார்; விதண்டாவாதங்களும், குழப்பவாதங்களும் செய்கிறார்.

49. ''உப₄யாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் ஶேஷித்வம்'' [மிதுநத்தைத் தவிர்ந்த மற்ற அனைத்துப் பொருள்களுக்கும் ஶேஷியாயிருக்கும் தன்மை இருவரிடமும் சேர்ந்தே உள்ளது] என்று தேசிகன் ப்ரமாணம் காட்டி நிரூபிக்கையால் பெருமாளுடைய ஶேஷித்வம் போலே பிராட்டியினுடைய ஶேஷித்வமும் இயல்வானது என்பது தேசிகனின் பக்ஷம். பிராட்டியின் ஶேஷித்வம் அவள் விஷ்ணு பத்நியாய் இருப்பதால் உண்டானது என்பது நாயனாராச்சான் பிள்ளையின் பக்ஷம். இந்த அபிப்ராய பேதம் இருவருடைய க்ரந்தங்களிலிருந்தும் தெளிவாக விளங்குகிறது. ''விரோத பரிஹாரம்'' என்னும் ரஹஸ்யத்தில் ''எம்பெருமானுடைய அடியார்களுக்கு ஒருவர்க்கொருவர் உள்ள ஶேஷித்வம் போலே பிராட்டிக்குள்ள ஶேஷித்வம் ஸோபாதிகம் அன்று'' என்று தேசிகன் நிரூபித்துள்ளார். இதுவும் பிராட்டியின் ஶேஷித்வம் நிருபாதிகம் என்னும் கருத்து வேற்றுமையைக் காட்டுகிறது.

''உப₄யாதி₄ஷ்டா₂நம்'' என்று தொடங்கும் வாக்கியத்திற்கு முன் வாக்யம், **''பத்யு: பத்ந்யா அபீதி லோகஸித்₃த₄ம்''** [கணவனுக்கு உரிய பொருள் மனைவிக்கும் உரியதாகிறது என்பது லோகஸித்₃த₄மானது] என்பது. இந்த ஷடர்த்₂த₂ ஸங்க்ஷேப வாக்யத்தை தேசிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநம் ஈஶ்வர பரிச்சே₂த₃த்தில் எடுத்துக் காட்டியிருப்பது ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தில் பொருளோடு விளக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து விஷ்ணு பத்நியாய் இருப்பதாலேயே பிராட்டி உப₄யவிபூ₄தி ஶேஷியாகிறாள் என்று தேசிகன் திருவுள்ளம் பற்றினார் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. ஆகையால் இவ்விஷயத்தில் இரு ஆசார்யர்களுக்கும் கருத்து வேற்றுமை சிறிதளவும் கிடையாது. பிராட்டிக்குள்ள ஶேஷித்வத்திற்கும் பாகவதர்களுக்கிடையே பரஸ்பரம் உள்ள ஶேஷித்வத்திற்கும் வேற்றுமை உண்டு என்பது எல்லா ஆசார்யர்களும் இசைந்ததேயாகும். 'பதியின் சொத்தில் பத்நிக்கும் உரிமை உண்டு' என்பது பாகவதர்களின் விஷயத்தில் பொருந்தாது. அதனாலேயே ''ஏகம் ஶேஷித்வம்'' என்னும் பெருமை பாகவதர்களுக்குக் கிடையாது. இதையிட்டுப் பார்க்கும்

http://acharya.org

போது பாகவதர்களுடைய ஶேஷித்வம் ஸோபாதிகம் (செயற்கையானது) பிராட்டியின் ஶேஷித்வம் நிருபாதிகம் (இயற்கையானது) என்றும் சொல்லலாம். பெருமாள் பிராட்டி ஆகிய இருவரை மட்டும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எம்பெருமானுடைய ஶேஷித்வம் பிராட்டி ஸம்பந்தத்தால் விளைந்ததல்லாமையாலும், பிராட்டியின் ஶேஷித்வம் அவள் எம்பெருமானுக்குப் பத்தினியாய் இருப்பதாலேயே விளைந்ததாகையாலும் எம்பெருமானுடைய ஶேஷித்வம் நிருபாதிகமானது. பிராட்டியின் ஶேஷித்வம் ஸோபாதிகமானது என்றும் சொல்லலாம். இவ்விஷயத்திலும் இரு ஆசார்யர்களிடையே கருத்து வேற்றுமை கிடையாது. எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே பிராட்டியுள்ளிட்ட அனைவருடைய பெருமைகளும் விளைந்தவை என்று ஸகல ப்ரமாணங்களும் தேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்யர்களும் முழங்குவதை **ஸ்ரீ** தத்வ ஸர்வஸ்வத்திலும் பஞ்சமபக்ஷ ஶததூஷணியிலும் நாம் மிக விரிவாகக் காட்டியிருக்கிறோம். அதற்கெல்லாம் யாதொரு பதிலும் சொல்லாமல், இவ்வளவு நாட்களாகப் பிராட்டிக்கு ஶேஷத்வ பாரதந்த்ரியங்கள் உண்டு என்று எழுதிவந்த இவர், அதற்கு முரணாக, "பிராட்டி எம்பெருமானைக் குறித்து ஶேஷமாயிருப்பது **'ஸ்வத:'** (இயல்பானது) அன்று" என எழுதத் தொடங்கியிருப்பது **ஸ்வாதீநத்ரிவித, சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதனன்** பரப்ரஹ்மம் புருஷோத்தமன் ஒருவனே என்று ஸகல ப்ரமாணங்களும், ஸகல பூர்வாசார்யர்களும் நிலைநாட்டியிருக்கும் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு வேறுபட்டதேயாகும்.

50. "அஸ்யா: குணபாவ: உபயேச்சா ப்ரயுக்த:" பிராட்டி ஶேஷபூதையாயிருக்கை பிராட்டி எம்பெருமான் இருவருடைய இச்சையினால் விருப்பத்தினால் உண்டானது என்று அருளியிருப்பதால் இவ்வளவு விஷயங்கள் கிடைக்கின்றன.

இந்த வாக்கியம் தேசிகன் சது:ஶ்லோகீ (4) பாஷ்யத்தில் காட்டியிருக்கும் ஐந்தாவது பக்ஷத்தில் உள்ளது. இதையும் **"கேசிதாஹு:"** [சிலர் கூறுகிறார்கள்] என்றுதான் தேசிகன் அருளியிருக்கிறாரே யொழிய, தம்முடைய கருத்தாகவோ, நிர்ணயமாகவோ கூறவில்லை. இந்தப்பக்ஷத்தை தேசிகனே பலவிடங்களில் மறுத்திருப்பதையும், பல ப்ரமாணங்கள் பூர்வாசார்ய வசநங்கள் ஆகியவற்றுக்கு முரண்பட்டது இந்த ஐந்தாவது பக்ஷம் என்பதையும் பஞ்சமபக்ஷ ஶததூஷணியிலும், ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும் மிகவிரிவாகக் காட்டியிருக்கிறோம்.

http://acharya.org

"ப4ட்டர் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் முதலானோர் உகந்தபக்ஷம் இதுவே என்பதை அடுத்த இதழில் விளக்குவோம்" என்று எழுதியிருக்கிறார் இவர். பஞ்சமபக்ஷதூ3ஷணியில் நாம் காட்டியிருக்கும் தூ3ஷணங்களனைத்துக்கும் பதில் கூறிவிட்டால் இவர் இப்பக்ஷத்தை நிலைநாட்ட எண்ணுவது பயனற்றதாகவே முடியும். அடுத்த இதழில் இவர் எழுதுவதைப் பார்த்தபின் விமர்சிப்போம்.

51. ப்3ருஹதா3ங்ய பங்குனி ப்ரியாவில் "ஸத்4ரீசீம்" என்பதற்கு எம்பெருமானுக்கு எல்லாவகையிலும் ஒப்பானவள் பிராட்டி என்று பொருள் எழுதியிருந்தோம். நிகண்டுவையெல்லாம் காட்டிவிட்டு இப்பதம் துணைவியைக் காட்டுகிறது என்று எழுதுகிறார். இதற்கு "ஸஹத4ர்மசரீ" [த4ர்மங்களை உடனிருந்து அனுஷ்டிப்பவள்] என்பது பொருள். "ஸத்3ருசம்" என்ற அர்த்தத்தில் தேசிகன் இந்த சப்33த்தைப் பிரயோகித்திருக்கிறார்.

37-வது கேள்வியின் பதிலில் நாம் **"ஸஹஸ்ய ஸத்4ரி:"** [பாணினி 6-3-95] என்னும் பாணினி ஸூத்ரத்தையும், **"யஸ் ஸஹாஞ்சதி ஸத்4ர்யங் ஸ:"** [யார் கூட இருந்து துணைபுரிகிறாரோ, அவர் **"ஸத்4ர்யங்"** எனப்படுவார்.] என்றும் அமரகோச வைஜயந்தீ நிகண்டுக்களையும் காட்டி **"ஸத்4ரீசீ"** பதம் அப்ரதா4னையாய் நின்று துணைபுரிபவளைக் காட்டுமேயொழிய இவர் கூறுவதுபோல் எல்லா விதத்திலும் ஒப்பானவளைக் காட்டாது என்று அசைக்கமுடியாதபடி நிரூபித்திருக்கிறோம். நாம் காட்டியிருக்கும் பாணினி ஸூத்ரத்திலும் நிகண்டுகளிலும் **"ஸஹ"** சப்33ம் உள்ளது. இவர் எந்த ப்ரமாணத்தையும் காட்டாமல் கூறும் "ஸஹத4ர்மசரீ" என்னும் பொருளிலும் ஸஹ சப்3தம் உள்ளது. ஆக, **"ஸஹயுக்தே அப்ரதா4னே"** [பாணினி 2-3-19] என்னும் பாணினி ஸூத்ரத்தின்படி பிராட்டி அப்ரதானமாய் நின்று துணைபுரிபவள் என்ற பொருளே ஸத்4ரீசீபதத்திற்குத் தேறும். **"ஸத்3ருசம்"** என்று பொருள் கொண்டாலும், இவர் காட்டும் **"ஸுதா4 ஸத்4ரீசிபி4:", "ராகாசந்த்3ரத்3யுதிஸஹசரம் ராஜஹம்ஸம் த33ர்ச"** [பூர்ணசந்த்ரனையொத்த ராஜஹம்ஸத்தைக் கண்டான்] என்னும் தேசிக ப்ரயோகங்களில் ஒப்பானது என்று கூறியது வெண்மை முதலான ஒருசில தன்மைகளில் ஒப்பானதைக் காட்டுமேயொழிய எல்லாவிதத்திலும் ஒப்பாயிருப்பதைக் காட்டாது. ஆகையால் இவர் **'ஸத்4ரீசீ'** பதத்திற்கு 'எம்பெருமானுக்கு எல்லாவிதத்திலும் ஒப்பானவள்' என்று பொருள் கொண்டது முற்றிலும் அபத்தப் பொருளேயாகும்.

http://acharya.org

நடுநிலையாளரின் கடிதம்

(இவர் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்)

[K. ஜகந்நாதன், (ஆடிட்டர், 8, ராஜா தெரு, மந்தைவெளி, சென்னை - 600 028) அவர்கள் எழுதிய 20—9—1999 தேதியிட்ட கடிதம்]

''ப்ரியா புரட்டாசி (செப்டம்பர்-99) இதழில் ஸ்ரீமதழகியசிங்கர் 'பிராட்டியின் ஶேஷத்வம் இயல்வானது அன்று' என்று எழுதியுள்ளார். கடந்த இதழ்களில் பட்டருடைய ''ஸ்வத:ஸ்ரீஸ்த்வம்'' என்னும் ஶ்லோகத்தை எடுத்து ''ஸ்வத:'' என்கிற பதத்திற்கு ''பிராட்டியின் ஶேஷத்வம் இயல்வானது'' என்று பொருள் கொண்டவர், தற்போது புரட்டாசி இதழ் பக். 25-ல், ''பிராட்டியினிடம் உள்ள ஶேஷத்வம் உபய இச்சையினுல் உண்டானதாகையால் 'ஸ்வத:' ஏற்பட்டதன்று என்று ஸ்வவசந விரோதமாக எழுதியுள்ளார். மாதந் தோறும் எழுதி அனுப்புவதுபோல் இதற்கும் என்னுடைய மறுப்பை 'ப்ரியா' ஆசிரியருக்கு எழுதியனுப்பி, அதன் நகலைத் தங்களுக்கு அனுப்புகிறேன். கி. ஜகந்நாதன்.

ஆ. சத்யநாராயணன், திருக்கண்ணங்குடி.

52. டாக்டர் ஜெகத்ரக்ஷகன் தன்னுடைய 'செந்தமிழ் இலக்கியத்தில் திருமால்' என்னும் நூலில், ''வேதங்களைவிடப் பழைமையானது திருமால் வழிபாடு. ஆரிய நாகரீகமும், தமிழர் நாகரீகமும் ஒன்றுகக் கலந்தபோது திருமால், நாராயணன் விஷ்ணு எனவும் பல பேராயிரங்கள் பெற்று வளர்ந்தது ஒரு தனி ஆய்வுக்குரியது'' என்று குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி விமர்சிக்கவும்.

ஆரியர் தமிழர் (திராவிடர்) இனங்கள் நாகரிகம் வேறு என்பது நம் நாட்டை ஆண்ட வெள்ளையர்கள் கிளப்பிவிட்ட பொய்யான கற்பனையாகும். அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. இவ்விதழில் இணைக்கப்பட்டிருக்கும் ''வேதம் தமிழ் செய்த ஆழ்வார்களும் தமிழ் வேத பாஷ்யகாரரும்'' என்னும் (பெரியவாச்சான்பிள்ளை பற்றிய) கட்டுரையில், தமிழில் மிகப்பழைமையான சங்கநூல்களில் 'வேதங்கள்

http://acharya.org

எவராலும் இயற்றப்படாத நித்யமான நூல்கள்' என்றும், 'அந்தணர் ஓதும் அவ்வேதங்களில் முழுமுதல்வனாக முழங்கப்படும் திருமாலே பரம்பொருள்' என்றும் எழுதியிருக்கும் பல இடங்களைக் காட்டியிருக்கிறோம். ஜகத்ரக்ஷகன் போன்றவர்கள் வெள்ளையர்கள் கிளப்பிவிட்ட பொய்யைப்பற்றிக்கொண்டு நம் பாரத தேசத்தில் அநாதிகாலமாகத் தென்னாட்டிலும், வடநாட்டிலும் நிலவிவரும் ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கிறார்கள். இவர் கூறியிருப்பதற்கு மேல்நாட்டவர்களின் பிதற்றலைத்தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது.

T. வரதராஜன், வேளச்சேரி, சென்னை - 600 042.

53. வைணவத்தை வளர்ப்பதற்காக மாநாடுகளும், புத்தக வெளியீடுகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, "குமுதம் பக்தி ஸ்பெஷல்" போன்ற பொதுஜனப் பத்திரிகைகளில் எழுதும் வாய்ப்புப்பெறும் சுஜாதா போன்ற எழுத்தாளர்கள் "ஆழ்வார்கள் சிவனும் விஷ்ணுவும் ஒன்றே என்று சொல்லியிருக்கிறார்கள்." (ஜூன், ஜூலை இதழ்கள்) என்று எழுதுகிறார்கள். இந்த அவல நிலையை எப்படிப் போக்குவது?

நம் நாட்டில் மக்களில் பெரும்பாலானவர்கள் வைணவர்கள் அல்லாதவர்களாகவும், வைணவக்கொள்கைகளில் விரோதம் பாராட்டுபவர்களாகவுமே இருக்கிறார்கள். ஆகையால் பல ஆண்டுகளாகவே திருமாலுக்குரிய தனிப்பெருமைகளை இருட்டடித்து "அரியும் சிவனும் ஒன்று" என்னும் பொய்க்கொள்கையைப் பரப்புகிறவர்களாலேயே பொதுஜனப் பத்திரிகைகள் நடத்தப்பெறுகின்றன. இந்தக் கொள்கைகளை ஆதரித்தாலொழிய சுஜாதா போன்றவர்களின் எழுத்துக்கள் பொதுஜனப் பத்திரிகைகளில் விலை செல்லாது. ஆகையால் அவர்கள் மனஸ்ஸாக்ஷிக்கு முரணாக ஆழ்வார்களின் ஸூக்திகளுக்கு அவப்பொருள் கூறுகிறார்கள். நமது அன்பர் பார்த்தசாரதி என்பவர் சுஜாதாவுக்கே அவருடைய கூற்றுக்களைக் கண்டித்துக் கடிதம் எழுதியுள்ளார். "திருமாலே பரம்பொருள்" என்னும் கொள்கையை வலியுறுத்தும் ஸுதர்சனம் போன்ற பத்திரிகைகள் சில ஆயிரம் பிரதிகளே அச்சேறுகின்றன. குமுதம்—பக்திஸ்பெஷல் போன்றபொழுது போக்குப் பொய்ப் பிரசாரப் பத்திரிகைகள் லக்ஷக்கணக்கில் அச்சடிக்கப்படுகின்றன. வைணவத்தில் ஈடுபாடுள்ளவர்கள் தீவிரப் பிரசாரம் செய்து, வைணவக் குடும்பத்தினர் இப் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரத்தால் திசை மாறிப்போகாமல் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். இதுதவிர வேறுவழியில்லை.

http://acharya.org

பழமுதிர்சோலை பற்றிய ஒரு விளக்கம்

[தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-2 (பக்கங்கள் 110-111)-ல் 'ஆறுபடை வீடு கள்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள குறிப்பினை சென்னை 'ராமா நுஜவாணி' ஆசிரியர் Dr. J. பார்த்தசாரதி அவர்கள் அனுப்பியுள் ளார். அதை அன்பர்கள் அறிவதற்காகக் கீழே தருகிறோம்.]

ஆறுபடை வீடுகள்

[வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-2, பக். 110-111]

சக்தி (பார்வதி)க்குரிய ஆறுபீடங்கள், சிவனுக்குரிய ஐந்து அம்பலங்கள், அட்டவீரட்டானங்கள், திருமாலுக்குரிய நவதிருப் பதிகள், எட்டு சுயம்வியக்த தலங்கள் போன்று முருகன் தொகைத் தலங்கள் ஆறுபடை வீடுகள்; பரங்குன்றம், அலைவாய் (திருச் செந்தூர்), ஆவினன்குடி (பழனி), ஏரகம், குன்று தோருடல், பழமுதிர்சோலை (அழகர் கோவில்) ஆகிய ஆறும். குன்று தோரு டலை விடுத்துத் திருத்தணியைச் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. முதல் மூன்று ஸ்தலங்களும் இன்றும் முருகன் கோயிலை உடையவை. குன்று தோருடல், பழமுதிர்சோலை ஆகிய ஸ்தலங்கள் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. .... குன்று தோருடல் என்னும் ஸ்தலம் எங்கு இருக்கிறது என்று இதுவரை யாராலும் கண்டறியப்படவில்லை.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையே ஆறுபடை வீடுகள் என்னும் கருத்துக்கு முதற்சான்ருகும் என்பதை ஆராய்ந்த டாக்டர் மா. ராசமாணிக்கம் பழமுதிர்சோலை எனப்படும் அழகர் மலையில் முருகன் கோயில் இருந்ததில்லை என்றும், 'பழமுதிர் சோலை மலை கிழவோனே' என்ற தொடர் திருமுருகாற்றுப்படை யில் எழுவாயாகவே வந்துள்ளது என்றும் கருத்துரைத்துள்ளார். அதுபோலவே 'குன்று தோருடல்' என்பதற்கு 'முருகன் மலை தோறும் ஆடல் கொண்டவன்' என்பது அவர் கொண்ட பொரு ளாகும். 'குன்று தோருடல்' என்ற தலைப்பில் அமைந்த திருப் புகழ்ப்பாடல்கள் ஐந்தும் 'பல குன்றிலும் அமர்ந்த பெருமாளே', 'பல மலையுடைய பெருமாளே', 'மலையாவையும் மேவிய பெரு மாளே', 'குன்று தோருடல் மேவு பெருமாளே' என்றே முடி கின்றன. இவற்ருல் 'குன்று தோருடல்' என்ற ஒரு முருகன் தலம் இருந்தது என வாதிட இயலாது. ....

http://acharya.org

முருகன் ஆறுபடை வீடுகளுக்குரியவன் என்ற கருத்துக்கு கி.பி. 14-ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் இல்லை. (திருச்செந்தூர் பற்றிப் புறம் 55, பொதினி (பழனி) பற்றி அகம் 61. செந்தில், செங்கோடு, வெண்குன்றம், ஏரகம் (சிலப்பதிகாரம்-குன்றக்குரவை) பரங்குன்று (பரிபாடல், அகம் 59, முருகாற்றுப்படை—இம்மேற்கோள்கள் தனித்தனியே வந்தவை.)

படைவீடு-பாடிவீடு. போர்வீரர் தங்கியிருக்குமிடம். முருகன் அலைவாய் என்ற திருச்செந்தூரில் சூரபத்மனை அழித்ததால் அது படைவீடு என்னும் பெயர்க்குத் தகுதி பெற்றது. ஆனால் பரங் குன்று, ஆவினன்குடி, ஏரகம் ஆகிய இடங்களில் போர் பற்றிய புராணச் செய்தியே இல்லை. படைவீடு என்ற பெயர் இவற்றிற் குப் பொருந்தாது.

நக்கீரர் பாடிய ஆற்றுப்படையில் பரங்குன்றம், அலைவாய், ஆவினன்குடி, ஏரகம் ஆகிய நான்கும் அவர் காட்டிய ஆற்றுப் படைவீடுகளாகும். 'ஆற்றுப்படைவீடு' என்னும் சொல்லே வழக் கில் 'ஆறுபடை வீடு' எனத் திரிந்தது. அதனால் முருகாற்றுப் படையில் வரும் குன்று தோருடல், பழமுதிர்சோலை என்னும் இரண்டினையும் இரண்டு முருகத் தலங்களின் பெயர்களாகக் கருதும் நிலை ஏற்பட்டது. 'கந்தபுராண' ஆசிரியரின் காலமாகிய கி.பி. 14-ம் நூற்றாண்டில் இக்கருத்து உருவாகி, கி.பி. 15-ம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் ஏற்கப்பட்டு மக்கள் நம்பிக்கை யோடு இணைந்து வளர்ந்து விட்டது. சங்க இலக்கிய காலந் தொட்டே தமிழ்நாட்டில் தொன்மையான முருகத் தலங்கள் பல உள்ளன; ஆனால் 'ஆறுபடை வீடுகள்' என்னும் கருத்து வர லாற்று அடிப்படையில் ஆனதன்று; மக்களின் நம்பிக்கையில் பிறந்ததாகும். 'கடவுளருக்குத் தொகைத் தலங்கள்' குறித்துப் போற்றும் பக்தி இயக்க மரபை ஒட்டியே இது எழுந்ததாகும்.

[இந்த நடுநிலையாளர்களின் இத்தீர்ப்பின்படி அழகர்மலையில் இரவோடிரவாக முருகன் கோயிலைக்கட்டி, அதற்குப் பழமுதிர் சோலை என்று பெயர்வைத்து, இன்றும் பரப்பிவருவது ஆக்ரமிப்பு மனப்பான்மையாலேயே என அனைவர்க்கும் விளங்கும். —ஸு்தர்சனம் ஆசிரியர்]

http://acharya.org

ஸுதர்சனரின் குறிப்பு

மைசூர் பரகால மடத்தின் சார்பில் நடத்தப்படும் பத்திரிகையான ஹயக்ரீவ க்ருபா — ப்ரமாதி புரட்டாசி-மீ இதழில் நாவல்பாக்கம் வரதாசார்யர் "ஸ்ரீமானுன நாமே பரதத்வம்" என்னும் தலைப்பில், தாம் ஏற்கனவே காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகையில் எழுதிய ஸ்ரீதத்வ ஸித்தாந்தஜ்ஞான ஸங்க்ரஹத்தைச் சுருக்கிக் கொடுத்திருக்கிறார். அதில் இவர் தேசிகன் காட்டிய ஐந்தாவது பக்ஷத்தைப் பின்பற்றி எழுதியுள்ளது பொருந்தாது என்று சென்னையில் வசிப்பவரும், தேசிக ஸம்ப்ரதாய நடுநிலையாளருமான ஸ்ரீ K. ஜகந்நாதன் (3, ராஜா தெரு, மந்தைவெளி சென்னை-20) அவர்கள், "பெரிய பிராட்டியாரின் ஏகாந்த ஶேஷித்வமும் பகவத் — ஶேஷத்வமும்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி 30—9—99 அன்று ஹயக்ரீவ க்ருபா பத்திரிகைக்கு அதைப் பிரசுரிக்கும்படி பிரார்த்தித்து அனுப்பியுள்ளார். அதன் நகலையும் நமக்கு அனுப்பியுள்ளார். அதை அடுத்தபடி அச்சிட்டுள்ளோம். இக்கட்டுரையை வெளியிடும் நேர்மை "ஹயக்ரீவ க்ருபா" பத்திரிகைக்கு இருக்கும் என்று நம்புகிறோம்.

பெரிய பிராட்டியாரின் ஏகாந்த ஶேஷித்வமும் பகவத்—ஶேஷத்வமும்

[ஸ்ரீ கி ஜகந்நாதன், 3, ராஜா தெரு, மந்தைவெளி, சென்னை-28]

ப்ரமாதி புரட்டாசி ஸ்ரீ ஹயக்ரீவ க்ருபா இதழில் "ஸ்ரீ உ வே மஹாவித்வான் திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் வரதாசார்யார் ஸ்வாமி, திருவஹீந்த்ரபுரம்" எழுதியுள்ள "ஸ்ரீமானுன நாமே பரதத்வம்" என்னும் கட்டுரையை ஸேவித்தேன். அக்கட்டுரையில் ஸ்வாமி தேசிகன் சதுஃஶ்லோகீ பாஷ்யத்தில் ஸாதித்த பிராட்டி பற்றிய ஐந்தாவது பக்ஷத்தை இந்த ஸ்வாமி பின்பற்றியிருக்கிறார். இப்படிக் கொள்வதில் பல அநுபபத்திகளும் ஸ்ரீதேசிக ஸ்ரீ ஸூக்தி விரோதங்களும் வருகின்றன என்று அடியேனுடைய சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது. அவற்றில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

http://acharya.org

1. தேசிகன் தமது ந்யாய ஸித்தாஞ்ஜனம் ஈஶ்வர பரிச்சேதத்தில், பெருமாளும் பிராட்டியும் ஜகத்தைக் குறித்து ஏக ஶேஷித்வத்தை உடையவர்கள் என்று நிரூபிக்கும் ஸோமாசியாண்டானின் ஸ்ரீ ஸூக்திகளை எடுத்திருக்கிறார். அதில் பிராட்டிக்கு உலகைக் குறித்து ஶேஷித்வம் பொருந்தாது என்னும் ஆக்ஷேபத்தை எழுப்பி, அதற்கு மேலும்

"கிஞ்ச மஹிஷ்யாதி₃கம் பரஸ்ய ஶரீரம்;
அந்யதா₂ 'ஏகமேவ' இதி விருத்₄யதே"

[மேலும் பிராட்டி முதலானோர் பரமாத்மாவுக்கு ஶரீரம், பிராட்டியை ஶரீரமாகக் கொள்ளாவிடில், 'தன்னை யொழிந்த அனைத்தையும் ஶரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே' என்று ஶ்ருதி கூறுவது பொருந்தாது.] என்னும் ஆக்ஷேபத்தையும் எழுப்பி,

"மைவம்; பத்யு: பத்ந்யா அபீதி லோக ஸித்₃த₄ம்;
உப₄யாதி₄ஷ்ட₂ாநம் ச ஏகம் ஶேஷித்வம்"

[இந்த ஆக்ஷேபம் பொருந்தாது. கணவனுடைய உடைமை மனைவிக்கும் உடைமை என்னும் உலக ந்யாயத்தோடு முரண்படுகிறதன்றோ; ஆகையால் பிராட்டியிடமும், பெருமாளிடமும் உலகைக் குறித்து உள்ள ஶேஷித்வம் ஒன்றே என்று கொள்ளவேண்டும்] என்று ஸமாதானம் உரைக்கிறார்; இந்த ஸமாதானத்தை மேலும் விளக்கிவிட்டு,

"ந ச லோகே ஶரீரஸ்ய அபத்நீத்வாத் மாநாந்தரா
கோ₃சரே விரோத₄: ।
அசித்வாச்ச அபத்நீத்வம் லோகே ॥"

[உலகில் ஶரீரம் பத்நியாயிருப்பதில்லையே; இங்கு ஶரீரமான பிராட்டி எப்படி பத்னியாயிருக்க முடியும்? என்று ஆக்ஷேபம் எழுந்தால், "பிராட்டியானவள் வேதமாகிற ஶப்த ப்ரமாணத்தாலேயே அறியப்படுபவள். மற்ற ப்ரமாணங்களால் அவளை அறிய இயலாது. வேதத்தால் அவள் பத்நியாகவும், ஶரீரமாகவும் ஸித்திக்கிறாள்" என்பது அதற்கு ஸமாதானமாகும். 'அசித்தாகையாலே நம் ஶரீரம் நமக்கு

http://acharya.org

பத்னியாயில்லை] என்று ஸோமாசியாண்டான் பிராட்டி பெருமாளுக்குப் பத்னியாகவும், ஶரீரமாகவும் வேதத்திலிருந்தே ஸித்திக்கிறுள் என்று நிரூபிக்கிறுர். இந்த ஸோமாசியாண்டான் வாக்கியத்தை தேசிகன் மேற்கோளாக எடுத்ததால் 'பிராட்டி பெருமாளுக்கு ஶரீரம்' என்பதே ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் என்று விளங்குகிறது. ஸ்ரீபாஷ்யகாரர் ஶரீரத்தின் லக்ஷணத்தை [ஸ்ரீபாஷ்யம் 2-1-9] விலக்ஷணத்வாதிகரணத்தில்

"யஸ்ய சேதநஸ்ய, யத்₃த்₃ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே₂ நியந்தும், த₄ாரயிதும் ச ஶக்யம், தச்சே₂ஷைதைகஸ்வரூபம் ச தத் தஸ்ய ஶரீரம் இதி ஶரீரலக்ஷணமாஸ்தே₂யம் ॥"

[எந்தச் சேதனனுக்கு எந்த த்ரவ்யம் அந்த த்ரவ்யம் இருக்கும் வரையில் அந்த த்ரவ்யத்தால் நடக்கும் காரியங்களை நியமிப்பதற்கும், தரிப்பதற்கும் கூடியதாய் இருக்கிறதோ, அந்தச் சேதனனுக்குத் தான் இருக்கும் வரையில் ஶேஷமாய் (உடைமையாய்) இருப்பதையே இயல்வாகக் கொண்டிருக்கிறதோ, அந்த த்ரவ்யம் அந்தச் சேதனனுக்கு ஶரீரமாய் இருக்கிறது.] என்று அருளிச்செய்திருக்கிறுர். இதிலிருந்து பிராட்டி எம்பெருமானுக்கு ஶரீரமாய் இருப்பவள் என்றும், இயல்வான சேஷத்வத்தை உடையவள் என்றும் எம்பெருமானுர், தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கிறுர்கள் என்று விளங்குகிறது.

2. தேசிகன் சதுஃஶ்லோகி முதல் ஶ்லோக பாஷ்யத்தின் இறுதியில் "த்தி₃தரஸர்வ ஶேஷித்வேந ப்ரஸித்₃த₄ாம்" [எம்பெருமானைத் தவிர மற்ற அனைவர்க்கும் ஶேஷியாக ப்ரஸித்தி பெற்ற பிராட்டியாகிற உன்னை] என்று அருளியிருக்கையால் "பிராட்டிக்கு ஏகோந ஶேஷித்வமே உண்டு; ஸர்வ ஶேஷித்வம் கிடையாது" என்று விளங்குகிறது. இவற்றிலிருந்து ஸ்ரீதேசிகன் பிராட்டிக்கு ஏகோந ஶேஷித்வத்தையும், இயல்வான பகவத் ஶேஷத்வத்தையும் ஒப்புக்கொள்ளும் நான்காவது பக்ஷத்தை ஆதரிக்கிறுரேயொழிய, அவற்றை மறுக்கும் ஐந்தாவது பக்ஷத்தை ஆதரிக்கவில்லை என்று தெளிவாகிறது.

http://acharya.org

3. சதுஃஶ்லோகீ இரண்டாவது ஶ்லோகத்தில் "லோகைகஈஶ்வரி" என்னும் பதத்திற்கு வ்யாக்யானம் செய்கையில் "லோகைகேஶ்வர: ப்ரமாண ஸித்3தா4நாம் ஸர்வேஷாம் அத்3விதீய ஈஶ்வர:" [ப்ரமாணங்களால் அறியப்படும் எல்லாப் பொருள்களுக்கும் ஒப்பற்ற ஈஶ்வரன் லோகைகேஶ்வரன் ஆகிறான்] என்று லோகைகேஶ்வர ஶப்தத்தாலே எம்பெருமானைக் கூறுவதாகச் சொல்லி, அதற்கு ஶ்ருதி கீதை முதலான ப்ரமாணங்களைக் காட்டி, "ஈத்3ருஶ-ஈஶ்வரபத்நீத்வாதி3ஹ லோகைகேஶ்வரி இத்யுக்தம்" [இப்படிப்பட்ட ஈஶ்வரனுடைய பத்னியாகையாலே இங்கு இவளை லோகைகேஶ்வரி என்று அழைத்தார்] என்று பாஷ்யமிட்டார் தேசிகன். ஸர்வ பூதேஶ்வர வசந ஸாம்யத்தாலே இருவரும் முக்யேஶ்வரர்கள் என்னும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் தழுவியிருந்தால் "இருவரையும் ஸர்வ பூதேஶ்வரர்களாக ஶ்ருதி சொல்லுகையாலே இவளும் முக்யேஶ்வரியே" என்றல்லவோ இங்கு வ்யாக்யானம் செய்திருக்க வேண்டும்? அப்படிச் செய்யாமல், 'உலகிற்கு ஒப்பற்ற ஈச்வரன்' என்று எம்பெருமானைச் சொல்லி, "அவனுடைய பத்னியாகையாலே இவள் லோகைகேஶ்வரியாகிறாள்" என்று வ்யாக்யானமிட்டிருப்பதிலிருந்து தேசிகன் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர் என்பதும், ஐந்தாவது பக்ஷத்தை ஆதரிக்கவில்லை என்றும் விளங்குகிறது.

4. ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் தேசிகன் ஜ்ஞானம், ஆனந்தம் முதலான குணங்களில் பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் இடையே அத்யந்த ஸாம்யம் உண்டு என்றும், ஜக3த்காரணத்வம், ஶேஷித்வம், ஶரண்யத்வம், ப்ராப்யத்வம் ஆகியவற்றில் ஸாம்யமே உண்டு என்றும் அருளினார் ஆகையால் ஜகத்காரணத்வம் முதலானவற்றில் தம்பதிகளிடையே வேற்றுமையும் உண்டென்று விளங்கும். இதிலிருந்து ஜகத்காரணத்வம் முதலானவற்றில் இருவருக்கும் அத்யந்த ஸாம்யத்தைச் சொல்லும் ஐந்தாவது பக்ஷம் தேசிகன் உகந்தது அல்ல என்றும், ஸாம்யத்தைச் சொல்லும் நான்காவது பக்ஷமே அவர் உகந்தது என்றும் விளங்குகிறது.

http://acharya.org

முடிவுரை : நமது விலக்ஷணமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு எந்தவித விரோதமும் இல்லாதபடியான நான்காவது பக்ஷமே நடுநிலையாளர்களால் ஆதரிக்கக் கூடியது. அதனாலேயே அடியேன் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவனாயினும், ந்ருஸிம்ஹ ப்ரியா பத்திரிகைக்கு அவர்கள் ஆதரிக்கும் ஐந்தாவது பக்ஷத்தை மறுத்து, தொடர்ந்து மறுப்புக் கட்டுரைகள் எழுதி வருகிறேன். சதுஃஶ்லோகீ பாஷ்யத்தில் ஸ்ரீதேசிகன் ஐந்து பக்ஷங்களை விவரித்து, 'இந்த ஐந்து பக்ஷங்களில் ஏதோ ஒன்று ப்ரமாணத்துடன் கூடியது' என்றே முடித்திருக்கிறார். அவருடைய மற்ற ஸ்ரீஸூக்திகளை நடுநிலை நின்று ஆராயும்போது அவர் நான்காவது பக்ஷத்தையே ஆதரித்தவர் என்பது நன்கு புலனாகிறது. ஆகையால் நான்காவது பக்ஷமே தேசிகன் உகந்தபக்ஷம் எனக்கொள்ள எவ்விதத் தடையுமில்லை.

தினமலரின் நேர்மையின்மை

தினமலர் (திருச்சி) 30—9—1999 இதழில் "தோப்புக் கரணத்தின் மகிமை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. இக்கட்டுரையில் உள்ள அபத்தங்கள் முன்பே பத்திரிகைகள் வாயிலாகக் கூறப்பட்டு, பலமுறை மறுக்கப்பட்டுள்ளன. மீண்டும் வெளியிட்டுள்ள இதை மறுத்து, திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி தினமலருக்குக் கடிதம் எழுதி, பத்திரிகை தர்மத்தின் பெயரால் அதைப் பிரசுரிக்குமாறு தினமலரைக் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் இதுவரை வெளியிடப்படவில்லை. விஷ்ணு வைஷ்ணவ த்வேஷத்தில் ஊறிய "தினமலர்" போன்ற பத்திரிகைகளிடம் பத்திரிகை தர்மத்தையோ, நேர்மையையோ எதிர்பார்ப்பதில் பயனில்லை. நம் வாசகர்களின் பார்வைக்கு மறுப்புக் கடிதம் அடுத்துத் தரப்பட்டுள்ளது.

http://acharya.org

கடிதம்

அனுப்புநர் : அம்மாள் திருவேங்கடாசார்யர்
(Retd. Sr. Accounts Officer / S.Rly. / Ponmalai)
43, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம் - 620 006.

பெறுநர் :
ஆசிரியர், தினமலர் (இது உங்கள் இடம்) பகுதி,
161-ஏ, அண்ணசாலை, சென்னை - 600 002.

அன்புள்ள ஆசிரியருக்கு,

அறிவோமா ஆன்மீகம்—தோப்புகரணத்தின் மகிமை
(தினமலர், திருச்சி. 30—9—99)

அறிவோமா ஆன்மீகம் (30—9—99) பகுதியில் மஹாவிஷ்ணுவின் ஸுதர்சன சக்கரத்தை அவரது மருமகனை பிள்ளையார் பிடுங்கித் தம் வாயில் போட்டுக்கொண்டார் என்றும், அவரிடமிருந்து திரும்பப் பிடுங்க முடியாமல் மகாவிஷ்ணு காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினார் என்றும், அதனால் விநாயகர் சிரிக்க, சக்கரம் கீழே விழுந்தது என்றும் எழுதப்பட்டுள்ளது. குட்டிக்கரணம் என்பதைப்போல் தோப்புக்கரணம் என்னும் தமிழ்ச்சொல் வென்றவர்முன் தோற்பவர் செய்யும் கரணம் (செயல்) என்னும பொருளையுடையது. இதில் 'தோ(ற்)ப்பு' என்னும் தமிழ்ச்சொல்லை வடமொழியாகத் திரித்து 'தோர்பி:' என்றும், கரணம் என்பதைக் கர்ணம் என்றும் மாற்றி இந்தப்பொய்க்கதை புனையப் பட்டுள்ளது. இதன் நோக்கம் வேத முதல்வனை மஹாவிஷ்ணுவை இழிவுபடுத்துவதேயாகும். விஷ்ணுவை த்வேஷிக்கும் சிலரால் ஒரு சில ஆண்டுகளாகக் கிளப்பிவிடப்பட்ட இந்தப் பொய்க்கதைக்குப் பண்டைத் தமிழ் நூல்களிலோ, இதிஹாஸ புராணங்களிலோ எந்த ஆதாரமும் கிடையாது. கோடி ஸூர்ய ப்ரகாசமுடைய ஸ்ரீஸுதர்சன சக்கரத்தைப் பிள்ளையார் வாயில் போட்டுக்கொண்டார் என்னும் பொய்க்கதையைப் பிரசுரித்ததன் மூலம் பிள்ளையார் ஸுதர்சன சக்கரத்தின் மகிமையை அறியாத அறிவிலி என்னும் சிறுமைதான் அவருக்கு வருமேயொழிய, வேறு எந்தப் பெருமையும் ஏற்படாது. திருமால் பக்தர்களின் உள்ளத்தைப் புண்படுத்திய கதைக்கு மறுப்பான இக்கடிதத்தைப் பிரசுரிக்குமாறு பத்திரிகை தர்மத்தின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன். — அம்மாள் திருவேங்கடாசார்யர்

http://acharya.org

ஸுதர்சனரின் குறிப்பு

சென்ற இதழ் (25—10—99) ஸுதர்சனர் பதில் பக்கம் 111-ல் வெளியாகியுள்ள ''பெரியபிராட்டியாரின் ஏகோபாக்ஷித்வமும் புருஷவத்ஸோஷத்வமும்'' என்னும் கட்டுரை 30—9 99 அன்று கி. ஜகந்நாதன் அவர்களால் ''ஸ்ரீஹயக்ரீவ க்ருபா''-வுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் 5—11—99 அன்று கிடைத்த ஹயக்ரீவ க்ருபா அக்டோபர்-99 ப்ரமாதி ஐப்பசி இதழில் அக்கட்டுரை வெளியிடப்படவில்லை. எனவே அவர்களால் கட்டுரையில் எடுத்துக் காட்டப்பெற்ற விஷயங்களுக்குப் பதிலுரைக்க இயலவில்லையென்று விளங்குகிறது. இதைக் குறிப்பிட்டு 'க்ருபா' ஆசிரியருக்கு நாம் எழுதிய 5—11—99 கடிதத்தை அடுத்துத் தருகிறோம்.

To ஸ்ரீ உ. வே T. C. ஸ்ரீநிவாஸன், ஆசிரியர், ஸ்ரீஹயக்ரீவ க்ருபா
S B S P Mutt Development Trust,
16-II Main Road, A V M Avenue, Chennai - 600 092.

ஸ்ரீ உ வே ஸ்வாமி ஸந்நிதியில் தண்டன் ஸமர்ப்பித்த விஜ்ஞாபனம். புரட்டாசி ஹயக்ரீவ க்ருபாஇதழில் ஸ்ரீ உ வே நா. வ. அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் உள்ள அனுபபத்திகளை ப்ரமாணங்களை மேற்கோள் காட்டி, மறுத்து சென்னை மங்தைவெளி ராஜர் தெரு, நிர்3-ல் உள்ள ஸ்ரீ உ வே கி. ஜகந்நாதன் அவர்கள் ஹயக்ரீவ க்ருபாவுக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்பி, அதன் நகலையும் நமக்கு அனுப்பியிருந்தார். மேற்படி கட்டுரையில் விஷய விசாரம் ஸாத்விகமான முறையில் செய்யப்பட்டிருந்ததால் அதை அடியேன் ஸுதர்சனம் [623] ஐப்பசி [25 – 10 – 99] இதழில் வெளியிட்டிருந்தேன். நேர்மை மிக்கவரான தேவரீரும் ஹயக்ரீவ க்ருபா (ஐப்பசி அக்டோபர்-99) இதழில் ஷெ கட்டுரையை வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இன்று (5—11—99) தபாலில் கிடைத்த (க்ருபா) இதழில் ஷெ கட்டுரை வரவில்லை. அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவற்றைப் பிரசுரித்துப் பதிலளிப்பதே பத்திரிகா தர்மமாகும். அவ்வாறு செய்யவில்லையெனில் ஷெ கட்டுரையில் எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்குத் தக்க பதிலளிக்க இயலவில்லை

http://acharya.org

என்றே அல்லது உண்மை வெளியாகி நிலைநாட்டப்படுவதில் ஆர்வமில்லையென்றேதான் பொருள்படும். இவ்விஷயத்தை ஸுதர்சனம் 624 கார்த்திகை இதழில் குறிப்பிட வேண்டியுள்ளது.

தாஸன், கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

இக்கடிதத்திற்கும் 'க்ருபா' ஆசிரியரிடமிருந்து இன்று (20—11—99) வரை எந்த பதிலுமில்லை. அடுத்துவரும் 'க்ருபா' இதழிலும் எந்த பதிலுமில்லாவிடில் பிராட்டியின் ஏகோநகஷேஷித்வமும், பகவச்சேஷத்வமும் ஐயத்திற்கு இடமின்றி நிலைநாட்டப்பட்டதென்று நடுநிலையாளர் நிர்ணயிக்கலாம்.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீதிருவேங்கடாசார்ய ஸ்வாமி, 42, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம் - 620 006.

54. குமுதம் பக்தி ஸ்பெஷல் நவம்பர்-99 இதழில சுஜாதா அவர்கள் எழுதிவரும் "ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம்" கட்டுரைத் தொடர் 7-ல், புரட்டாசி ஸுதர்சனம் இதழில் வெளியான ஸுதர்சனர் பதில் 53-ஐப் பிரசுரித்துவிட்டுத் தமது பதிலாக கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். "இந்தக் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை என்பது இந்தத் தொடரின் வாசகர்களுக்கே தெரியும். ஒரு வைணவனாக நான் வைணவர்களிடம் காணும் முக்கியமான பலவீனங்கள் தம்முடைய உண்மையான நண்பர்களை அறிந்து கொள்ளாததும், சகிப்புத்தன்மை இன்மையும் (Intolerence). இந்தக்குலம் எண்ணிக்கையில் குறைந்து வருவதற்கும், அடையாளம் இழந்து வருவதற்கும் இவைதான் காரணங்கள். மிகவும் படித்தவரும், என் பெருமதிப்பிற்குரியவருமான, ஸுதர்சனர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களிடம் என் ஒரே வேண்டுகோள் தயை கூர்ந்து இந்தக் கட்டுரைத் தொடரில் இதுவரை வந்த எல்லாக் கட்டுரைகளையும், முழுவதும் படித்துவிட்டு அதன் பின்னும் ஷெ கருத்துக்கள் நியாயமானவையா என்று தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று. இவை பற்றிய ஸுதர்சனரின் நிலையை விளக்கக் கோருகிறேன்.

ஸுதர்சனர் பதில் 53 ஓர் அன்பர் எழுதியனுப்பிய கேள்வியின் அடிப்படையில் எழுதப்பட்டது. குமுதம் பக்தி ஸ்பெஷல் போன்ற

http://acharya.org

பத்திரிகைகளில் நாம் விமர்சிக்கப்பட்டாலும் அவை நமக்கு அனுப்பப் படுவதில்லை. எனினும் திரு சுஜாதா அவர்கள் வேண்டுகோளின்படி அக்கட்டுரைத் தொடரின் பிரதிகளைப் பெற்றுப் படித்தோம். அதற்குப் பின்னரும் நாம் தெரிவித்த கருத்துக்கள் நியாயமானவையே என்பதை நம் மதிப்புக்குரிய நண்பருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவரது கட்டுரைத் தொடரில் ஆழ்வார் பாடல்களுக்கு இதுகாறும் வெளிவந்துள்ள தவறான விளக்கங்களை மறுத்தும், சகிப்புத் தன்மை பற்றிய அவரது கருத்தை மறுத்தும் ஒரு விரிவான கட்டுரை எழுதி, அதை "குமுதம் பக்தி ஸ்பெஷல்" வரும் மாத இதழில் வெளியிடச் செய்யுமாறு வேண்டுகோளுடன் அவருக்கும் அவ்விதழுக்கும் 22–11–99 அன்று அனுப்பியுள்ளோம். அவரது கட்டுரைத் தொடர் வாசகர்களும் ஆழ்வார்கள் பாடல்களின் உண்மைப் பொருளை உள்ளபடி அறிந்து கொள்ளுவதற்காக நமது கட்டுரை பிரசுரிக்கப்படும் என்று நம்புகிறோம். குமுதம் பக்தி ஸ்பெஷல் இதழில் கட்டுரை வெளியான பின்னர் ஸுதர்சனத்திலும் அது வெளியிடப்படும்.

S. ஜகந்நாதன், பெங்களூர்-8.

55. "மங்கையர் மலர்" என்னும் பெண்களுக்கான (நவம்பர்-97, ஜனவரி-98, ஏப்ரல்-98) இதழ்களில் நரசிங்கப் பெருமானை சிவன் சரப ரூபமெடுத்துக் கிழித்தெறிந்ததாகவும், அதிலிருந்து மீண்டும் நரசிங்கன் அண்ட பேரண்டப் பறவையாக உருவெடுத்ததாகவும், அப்போது காளி 'ப்ரத்யங்கரா" என்ற ஆயிரம் சிங்க முகங்களுடன் கூடிய உக்ர தேவதையாக உருவெடுத்து அண்ட பேரண்டப் பறவையான நரசிம்மனைக் கொன்றொழித்தாள் என்றும், கேட்பார் செவி சுடும்படியான ஒரு புதிய கதையைக் கிளப்பியுள்ளதே! இதன் பின்னணியில் உள்ள உண்மைகள் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேணுமாய் தேவரீரைப் பிரார்த்திக்கிறேன்.

சிவனைச் சமமாக்கி அவன் மேல் காளி நர்த்தனமாடியதாகப் பொய்க்கதை கற்பித்த சாக்தர்கள் இக்கதையையும் கிளப்பி விடுகிறார்கள். இக்கதைகளுக்கு வேத சாஸ்திரங்களில் எந்த ஆதாரமும் இல்லை. பழைய இலக்கியம் எதிலும் இத்தகைய கதைகள் இல்லாததிலிருந்தே இவை அப்பட்டமான பொய்க்கதைகள் என்பதை நல்லோர்கள் உணரலாம். விஷ்ணு த்வேஷத்தாலே சைவர்களாகவும்,

http://acharya.org

சாக்தர்களாகவும் மாறிவிட்ட அத்வைதிகளின் பிதற்றல்கள் இவை என உணர்ந்து, இத்தகைய பத்திரிகைகளைக் கண்டுமெடுத்தும் பாராமலிருப்பது நல்லது. சாக்தத்திற்கு இடங்கொடுத்ததால் இன்று அத்வைதிகள் அடைந்துள்ள இப்பரிதாப நிலையை உணர்ந்து, ஸ்ரீவைஷ்ணவர்கள், "பெருமாளும் பிராட்டியும் இரு பரப்ரஹ்மங்கள், துல்யேச்வரர்கள்" என்று பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விருத்தமாகப் பிடிவாதம் பிடிக்குமவர்களின் மாய வலையில் விழாமல் இருக்கவேண்டும்.

S. ஸ்ரீநிவாஸன், சென்னை-33.

56. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் நவம்பர்-97 இதழில், "வேத தேவதை ருத்திரத்தால் சிவனையும், புருஷ சூக்தத்தால் விஷ்ணுவையும் ஸ்தோத்திரம் செய்திருக்கிறாள். அவளாலேயே இந்த சுப்பிரமண்யத்தை அணுக முடியவில்லை, எனவே உரத்த குரலில் "சுப்ரமண்யோம்" என்று மூன்று முறை கூவியழைப்பதுடன் நிறுத்திக்கொள்கிறாள். முருகனின் எல்லையில்லாச் சிறப்புகளை வேத தேவதையால்கூட சொல்ல முடியவில்லை. — தே. ம. பூதலிங்கம்" என்னும் துணுக்கு காணப்படுகிறது. இதில் உண்மை உள்ளதா?

காடகத்தில் உள்ள இம்மந்திரத்தில் "ஸுப்ரஹ்மண்யோம்" என்று உள்ளதற்கு "நான் ப்ரஹ்மத்திற்கு அடிமைப் பட்டவன் என்று ஓங்காரம் சொல்லுகிறது" என்பதே பொருள். இங்கு ஒரு தேவதை சொல்லப்படுகிறது என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. சாஸ்த்திரங்களில் முருகன் 'ஸ்கந்தன்' என்றும், 'குமாரன்' என்றுமே குறிக்கப்படுகிறான். ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் முதலான பழைய இதிஹாஸங்களிலும், குமார ஸம்பவம் முதலான காவியங்களிலும், கந்தனைக் குறிக்க இப்பதங்களே வழங்கப்படுகின்றன. 'ஸுப்ரஹ்மண்யன்' என்னும் பதம் இல்லை. ஸ்ரீராமாயணத்திலும், பரிபாடலிலும் சிவபார்வதிகள் புணர்ந்து விழுந்த வீர்யத்திலிருந்து உண்டான ஜீவனாகவே முருகன் குறிக்கப்படுகிறான். முருக பக்தர்கள் பிற்காலத்தில் 'ஸுப்ரஹ்மண்யன்' என்னும் பெயரை அவனுக்கு வைத்துவிட்டனர். ஆகையால் காடக மந்திரம் கந்தனைக் குறிப்பதல்ல.

http://acharya.org

ஸுதர்சனரின் குறிப்பு

சென்ற இதழில் (624) ஒரு குறிப்பையும் 'ஹயக்ரீவ ப்ரியா' ஆசிரியருக்கு நாம் எழுதிய கடிதத்தையும் வெளியிட்டிருந்தோம். பிராட்டி விஷயமான இந்தச் சர்ச்சை நா. வரதாசார்யரால் 'காஞ்சிப் பேரருளாளன்' பத்திரிகையில் தொடங்கப்பட்டது. பெருமாளையும் பிராட்டியையும் துல்யமான ஈஶ்வரர்கள் என்று கொள்வது தேசிகன் உள்ளிட்ட எல்லாப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டதாய், விசிஷ்டாத்வைதத்தையே வேரறுப்பதாய் இருந்தபடியாலே நாம் இந்தச் சர்ச்சையில் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா பத்திரிகையும் பிராட்டியும் பெருமாளும் இரண்டு பரப்ரஹ்மங்கள் என்னும் அடிப்படைக் கொள்கையோடு நம்மை எதிர்க்க முற்பட்டது. நாம் இவர்களைக் குறித்துப் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறோம். உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த பல நடுநிலையாளர்களின் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கிறோம். "பஞ்சமபக்ஷ ஶததூஷணி" என்னும் தலைப்பில் இவர்களது கொள்கைகளின் மேல் நூறு தூஷணங்களைக் காட்டியிருக்கிறோம். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இன்று வரை எதற்கும் நேர்மையான பதில் எழுதவில்லை. ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷ ஶததூஷணி ஆகிய நமது வெளியீடுகளின் விவரங்களை வெளியிடக்கூட ப்ரியா அஞ்சுகிறது. விஷய விசாரத்தில் இழியாமல் நம்மைத் தாக்குவதிலேயே ஈடுபட்டு வந்தது. இங்கிலையில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஹயக்ரீவ க்ருபா (ப்ரியா) பத்திரிகையில் நா. வரதாசார்யர் நம்முடைய கேள்விகள் எதற்கும் எந்த பதிலையும் எழுதாமல் அடிபட்டுப்போன தம்முடைய பழைய வாதங்களையே நிரப்பி ஒரு கட்டுரையை வெளியிட்டார். தேசிக க்ரந்தங்களில் மிகுந்த பரிசய முள்ளவரும் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவரும் ந்ருஸிம்ஹ ப்ரியாவின் வாதங்களை ஒவ்வொரு மாதமும் கண்டித்து அப்பத்திரிகைக்குத் தொடர்ந்து எழுதி வருபவருமான சென்னையில் வாழும் K. ஜகந்நாதன் அவர்கள் நா. வரதாசார்யரின் கட்டுரையிலுள்ள அநுபபத்திகளில் ஒரு சிலவற்றைச் சுருக்கமாக ஸாத்விகமான முறையில் எழுதி, அதை ஹயக்ரீவப்ரியா பத்திரிகைக்கு அனுப்பி நமக்கும் அதன் நகலை அனுப்பியிருந்தார். இரண்டு

22

http://acharya.org

வருடங்களுக்கு மேலாக நடந்துவரும் விவாதத்தோடு தொடர்புள்ளதா கையால், ஹயக்ரீவப்ரியா ஆசிரியர் ஒருதலைப்பக்ஷமாக நா. வரதா சார்யரின் கட்டுரையை மட்டும் வெளியிடுவதோடு நில்லாமல், மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கும் கட்டுரையையும் வெளியிடவேண்டும் என்று உணர்த்தி நாமும் கடிதம் எழுதியிருந்தோம். ஆனால் ஹ. ப்ரியா வின் ஆசிரியர் நேர்மையான அந்த வழியைப் பின்பற்றாமல் "கர்வம் பிடித்தவர்" என்பது போன்ற வசவுகளை நம்மீது பொழிந்து, இந்த விஷயத்தோடு எந்தத்தொடர்பும் இல்லாத 'கல்ப்ரஹ்மதேசக்' கதையை எழுதி "ஸுதர்சனம் பத்திரிகையில் இந்த பிரம்ம ராயர்களைப் பற்றாகக் கொள்ளவும். உபஜீவனம் நடக்கட்டும்" என்பன போன்ற முறை யற்ற, பரிஹாஸச் சொற்களைப் பெய்து "கல்பிரம்மதேசத்திலே" என் னும் கட்டுரையை வெளியிட்டுத் திருப்தியடைந்திருக்கிறார். நாம் சென்ற இதழில் எழுதியபடி ஸ்ரீ உ வே கி. ஜகந்நாதன் அவர்களின் கட்டுரையில் ஸாத்விகமான முறையில் எழுதப்பட்டிருந்த விஷயங் களுக்கு இவர்களால் பதிலெழுத இயலவில்லை என்று இதிலிருந்து மிகத் தெளிவாக விளங்குகிறது. இதுபற்றி ஸ்ரீ உ வே கி ஜகந்நாதன் அவர்களும் ஹ. ப்ரியாவுக்கு 4—12—99 தேதியிட்ட ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், "தங்களிடமிருந்து ஒரு கார்டு கூட எனது கட்டுரை வந்து சேர்ந்ததற்கு (ACKnowledgement) வரவில்லை. தற்போது வெளியிட்டுள்ள 'கல் பிரம்ம தேச' கட்டுரையில் "இவற் றைப் பரிசீலித்துக் கொண்டிருந்தோம் என்று குறிப்பிட்டுள்ளீர் களேயொழிய உண்மையில் அவ்வாறு இருந்தால் ஒரு கார்டு அடியே னுக்கு எழுதி 'மேற்படி விஷயம் பரிசீலனையில் உள்ளது' என்றாவது தெரிவித்திருக்கலாமே! அல்லது அக்கட்டுரை வெளியிட விருப்பம் இல்லை என்றால் அப்படியே உடன் எனக்குத் திருப்பி அனுப்பியிருக்க லாமே! 23—10—99 வரை எந்தவித பதிலும் இல்லாததால் எனது கட்டுரையைத் தங்களுடைய பத்திரிகையில் வெளியிட்டு உண்மையை நிலைநாட்டத் தங்களுக்கு ஊற்றமில்லை என்றே முடிவுசெய்தேன். அதன்படியே தற்போது நடந்துள்ளது" என்று எழுதியுள்ளார். இதி லிருந்து உண்மையை இருட்டடிப்புச் செய்யவேண்டும் என்னும் ஹயக்ரீவ ப்ரியாவின் மனப்பான்மை நன்கு விளங்குகிறது. பதிலெழுத இயலாமையை மறைப்பதற்கு தூஷண பரிஹாஸங்களில் ஹயக்ரீவ ப்ரியா ஈடுபடுவதை விமர்சித்து தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த

http://acharya.org

இளம் எழுத்தாளரான ஸ்ரீ உ. நரசிம்மன் என்பவரும், ஸ்ரீரங்கத்தில் வாழும் எங்களாழ்வான் வம்சஸ்தரான திருவெள்ளறை அம்மாள ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமியும் நமக்கு நகலுடன் ஹயக்ரீவ ப்ரியாவுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து சிலபகுதிகள் அன்பர்கள் உண்மையை உணருவதற்காகக் கீழே தரப்படுகின்றன.

1. ஸ்ரீ உ. நரசிம்மன், 1/84, இசையகம், தேப்பெருமாள் நல்லூர், கும்பகோணம் - 612 206 அவர்களின் கடிதம்.

ஸ்ரீஹயக்ரீவ ப்ரியா இதழின் ஆசிரியர் ஸ்ரீ T C ஸ்ரீநிவாஸன் அவர்களுக்கு நமஸ்காரம். நவம்பர்-99 இதழில் தங்களது 'கல் ப்ரஹ்ம தேசத்திலே'' எனும் கட்டுரையைக் கண்ணுற்றேன். படித்து முடித்தபோது ''யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு'' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறள்தான் நினைவுக்கு வந்தது. வார்த்தைகள் ஒரு சமயம் இல்லாவிடினும் ஒரு சமயம் மனதைப் புண்படுத்திவிடலாம். இது எல்லோர்க்கும் பொதுவானது. தவறுன புரிந்துகொள்ளுதலால் சில சமயங்களில் உயர்வான மனிதர்களிடம் கூட பிரச்சனை ஏற்படுவது வருத்தத்தை அளிக்கின்றது.

பொதுஜன பத்திரிகைகள் பல வருடங்களாக வைணவத்தைப் பற்றித் தரக்குறைவாகவும், திருமண்ணை ''பட்டை நாமம்'' என்றும், சமரச வாதத்தால் ''ஹரியும், சிவனும் ஒண்ணு'' என்றும், 'விஷ்ணுவுக்குத் தமோகுணமுண்டு' என்றும், ஸ்தல புராணம் என்னும் பெயரால் நரசிம்மரை சரபம் அடக்கியதாகவும் இராமாயணத்தில் இல்லாத சிவலிங்க பூஜையைப் பற்றி எழுதியும் வைணவத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இத்தகைய அநாகரிக விபச்சார பத்திரிகைகளின் செயல்களைக் கடந்த 50 வருடங்களாக, தனி மனிதராய், அஞ்சா நெஞ்சராய் ஆண்மையுடன் எதிர்த்து வருகிறுர் ஸுதர்சனர். ம.பொ.சி., ராஜாஜி. கிருபானந்தவாரியார். காமகோடி மற்றும் பலப்பல சமூக அங்கீகாரம் பெற்ற வைஷ்ணவ எதிர்ப்பாளர்களிடமிருந்து வைணவத்தைக் காக்கப் போராடியும் ஸுதர்சனம் பத்திரிகையின் வாயிலாக வைணவ விரோத பொய்ப் ப்ரசாரங்களை ஆதாரபூர்வமாகக் கண்டித்தும் வரும் ஒரே வைணவப் பெருந்தகை யார்? எனில் புத்தூர் ஸ்ரீ கிருஷ்ண

http://acharya.org

ஸ்வாமி அய்யங்கார் (ஸுதர்சனர்) ஒருவரே. "ந்ருஸிம்ஹ ப்ரியா" போன்ற இதழ்களோ, 'ஹயக்ரீவக்ருபா (ப்ரியா)' இதழோ இதை இதுகாறும் செய்ததில்லை என்பது தெளிவு. இந்தக் கருத்தை எழுதுவதனால் என்னை தென்கலைக்காரர் என்று எண்ணிவிடவேண்டாம். மத உலகில் சுய சிந்தனையாளராகத் திகழ்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகனின் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவனே நானும்.

எல்லா மதமும் ஒன்று என்னும் சமரசவாதத்தில் சிக்கி "ஹரியும் சிவனும் ஒண்ணு" என நம்பி வைணவத்தின் புகழ் அறியாப் பாமரனாய் "தேடிச்சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறு கதைகள் பேசி" வாழ்ந்துவந்த என்னை திசைதிருப்பியது ஸுதர்சனரின் எழுத்துக்களே. இன்றைக்கு என்போன்ற இளைஞர்கள் பலரை மத வாழ்க்கையில் திருப்பி நமது மதத்தின் பெருமையை உணர்த்தி வருவது ஸுதர்சனரின் எழுத்துக்கள் தாம். இந்தப் பணியை 'ந்ருஸிம்ஹப்ரியா', 'ஹயக்ரீவப்ரியா' போன்ற இதழ்கள் செய்யவில்லை. பாமரர்களின் மயக்கத்தைத் தீர்க்காது பண்டிதர்களுக்காகவே எழுதும் இவ்விதழ்கள் செய்யத் தவறிய செயல் இது. 50 ஆண்டு காலம் இந்தப்பெரும் பணியை அயராது செய்துவருபவரும் வைணவ மதத்திற்காகவே தன்னைத் தியாகம் செய்துகொண்டவருமான ஸுதர்சனரைத் தாங்கள் "கர்வம் கொண்டவர்" என்றும், "ப்ரஹ்மராயர்களின் எழுத்துக்களை வெளியிடுபவர்" என்றும் எழுதுவது பண்பல்ல, அழகல்ல, நாகரிகமுமல்ல.

பிராட்டி விஷயத்தில் ஸ்ரீவேதாந்த தேசிகனின் திருவுள்ளம் பற்றிச் சான்றோர்கள் விவாதிப்பது நல்லது. மத வரலாற்றில் இத்தகைய விவாதங்கள் முக்கிய மைல்கல்கள் ஆகும். எதிர்காலத்திற்கான "காலப் பெட்டகங்கள்". உண்மையை வெளிக்கொணர வாதங்கள் தேவை. பிடிவாதங்கள் அல்ல.

திரு. ஸுதர்சனர் அவரது சீரிய பணியில் வைணவத்தை வளர்க்க, நீசர்களாய் நடந்துகொள்ளும் பத்திரிகைகளுக்கு, பல முறை நாங்கள் எழுதிய மறுப்புகள் அப்பத்திரிகைகளில் வெளிவருவதில்லை. மாற்றுக் கருத்துக்களை மதிப்பதே பண்பாகும்; பத்திரிகை தர்மமும் கூட. மற்ற எல்லா இதழ்களையும் போல

http://acharya.org

'ஹயக்ரீவ ப்ரியா'வும் மாற்றுக் கருத்துக்களை மதிக்காமல் இருக்கலாம் என்னும் எண்ணத்தில் ஸுதர்சனர் எழுதி இருக்கலாம். ஒருவேளை இந்த விஷயம் தங்களது மனதைப் புண்படுத்தி இருப்பினும்கூட இவ்வளவு பெரிய தாக்குதலை எழுத்து பூர்வமாய் ஸுதர்சனர்மேல் நிகழ்த்தியிருக்கவேண்டாம்.

இன்றைய நிலையில் வைணவத்தைத் திரித்தும், பழித்தும் பேசும் பலர் உள்ளனர். நம்மிடையேகூட பல "நாலூரான்கள்" உள்ளனர். அவர்களை எதிர்த்துப் போராடவும், அவர்களது மயக்கும் வாக்கியங்களில் வைணவர்கள் (என்போன்ற பாமரர்கள்) மயங்காதிருக்கவும் "தென்கலை, வடகலை" இரு பிரிவினரும் இணைந்து செய்யவேண்டிய பணிகள் பல உள்ளன. இதற்காக இருபிரிவினரும் சமரசம் செய்துகொள்ளவேண்டும் என நான் கூறவில்லை. பரஸ்பர சகிப்புத் தன்மையுடன் மாற்றுக் கருத்துக்களைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாமே. மத விஷயங்களை ஆரோக்கியமான விவாதங்கள் மூலம் விவாதித்துத் தீர்வு கண்டு வைணவத்தை வளர்க்கும் பணியில் மட்டும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என்பது சமூகத்தின் கடைக்கோடியில் உள்ள ஒரு பாமர வைணவனின் எனது வேண்டுகோள்.

தங்களைப் போன்ற சான்றோர் இச்சிறியேனது கருத்தைச் செவிமடுத்து ஆதரிப்பீர்கள் என எண்ணுகின்றேன். இனியாவது "ஹயக்ரீவ ப்ரியா" வைணவத்தை எதிர்க்கும் வெகுஜனப் பத்திரிகைகள், அத்வைத சைவ சாக்தர்கள் இவர்களை எதிர்க்கும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.

தங்கள் கட்டுரையில் ஸ்ரீ கி ஜகந்நாதன் அவர்களது மறுப்புக்கு பதில் ஏதும் தராதது ஏன்? அவரது மறுப்பை உண்மையென ஏற்கிறீர்களா? தயை கூர்ந்து விளக்கவும்.

வைணவத்தை வளர்க்கும் பணியில் 'ஸ்ரீஹயக்ரீவ ப்ரியா' பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ஈடுபடவேண்டும் என உலகிற்கே கடவுளான திருவேங்கடமுடையானைப் ப்ரார்த்திக்கிறேன். தங்களது சீரியபெரும் பணிக்கு என்போன்ற பாமரனின் ஆதரவு என்றும் உண்டு.

கருத்து மோதல்கள் உண்மையை வெளிக்கொணரும்; தனிமனிதத்தாக்குதல் உண்மையை வெளிக்கொணராது.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்
இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

http://acharya.org

2. திருவெள்ளறை அம்மாள் ஸ்ரீதிருவேங்கடாசார்ய ஸ்வாமி (மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்) அவர்களின் 3—12—99 தேதியிட்ட கடிதத்திலிருந்து சில பகுதிகள்.

ஸ்ரீ உ வே ஹயக்ரீவ ப்ரியா ஆசிரியர் ஸ்வாமி சன்னிதியில் தெண்டன் ஸமர்ப்பித்த விஜ்ஞாபநம். நவம்பர்-99 இதழில் தாங்கள் எழுதி வெளியிட்டுள்ள "கல்ப்ரஹ்ம தேசக்" கட்டுரையில், "...... அவர் (ஸுதர்சனர்) கற்றறிந்தவர். ஆனால் கர்வம் பிடித்தவர் என்று எம்மிடம் ஓர் அன்பர் சொன்னார்" என்றும், "வயதாகிவிட்டதாலேயே மற்றவர்க்கு உபதேசக(?)ம் பண்ணக் காத்திருக்கும் பெரியவர்" என்றும் ஸுதர்சனர் ஸ்வாமியைக் குறித்துத் தாங்கள் தரக்குறைவான முறையில் வசைபாடியிருப்பதே என்னை இக்கடிதத்தை எழுதத் தூண்டிற்று. "எங்களுக்கு வழித்தடம் காட்டும் ஆன்றோர்கள ஐந்தாவது பக்ஷத்தையே தம் பக்ஷமாகக் காட்டியிருக்கிறார்கள். எனவே எங்களால் அதை மாற்றிக்கொள்ள இயலாது. நீங்கள் வேண்டுமானால் நாலாவது பக்ஷமே தேசிகனின் பக்ஷம் என்று கூறிக்கொள்ளுங்கள். இனி இருதரப்பினரும் தர்க்கையைத் தொடரவேண்டாம்" என்று தாங்கள் எழுதியிருக்கலாம். இது உபதேசமோ அல்லது சர்வாதிகாரமோ அல்ல. பணிவான வேண்டுகோள், யோசனை. அல்லது மறுப்புக்களைக் கண்டு கொள்ளாமலே இருந்திருக்கலாம். இந்த இரண்டு நேர் வழிகளையும் விட்டுவிட்டு ஸுதர்சனரின் மீது குற்றம் சாட்டுவது நியாயமல்ல. ஹயக்ரீவ (ப்ரியா) ப்ரியாவைப்போல் எழுத்துப் பிழைகளோ அல்லது கருத்துப் பிழைகளோ ஒன்றுகூட இல்லாமல் கடந்த ஐம்பது ஆண்டுகளாக 624 இதழ்களையும், மற்றும் ஏராளமான பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையும், அவற்றுக்கு எளிய தமிழில் விவரணமும் ஒரு பிழைகூட இன்றி எழுதி அச்சிட்டுப் பதிப்பித்துள்ள ஸுதர்சனர் ஸ்வாமிக்குத் தம் சாதனையை எண்ணி கர்வம் இருப்பதில் ஆச்சர்யம் என்ன? இல்லாமல் இருந்தால்தான் தவறு. "ஆழ்வார்கள், நாதமுனி, ஆளவந்தார், எம்பெருமானார், வேதாந்ததேசிகர், மணவாள மாமுனிகள் ஆகியோர் பேணிவளர்த்து ஸ்தாபித்த இந்த வைணவ மதத்தில் பிறக்கும் பேறு பெற்றேனே" என்ற (ஸாத்விக) கர்வம் ஸ்ரீவைஷ்ணவனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. அத்தகைய கர்வம் வைணவப் பணியிலேயே அல்லும் பகலும் ஆழ்ந்திருக்கும் ஸுதர்சனர் ஸ்வாமிக்கும் கட்டாயம் இருக்கும். இந்தப் பேருண்மையைத் தங்களிடம் சொன்ன அநாமதேயப் பேர்வழிக்கும், அதைக் கட்டுரையில் பிரசுரித்து பகிரங்கப்படுத்திய தங்களுக்கும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

http://acharya.org

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, 43, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம் - 620 006.

57. ஸுதர்சனர் பதில் 54-வது கேள்விக்குப் பதிலாக [624] சுஜாதா அவர்கள் குமுதம் பக்தி ஸ்பெஷலில் எழுதி இதுவரை வெளிவந்த "ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம்" கட்டுரைத் தொடர் முழுவதையும் படித்துவிட்டு, தங்களுடைய மேலான கருத்தை திரு. சுஜாதாவுக்கும் குமுதம் பக்தி ஸ்பெஷல் பத்திரிகைக்கும் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதற்கு அவர்களிடமிருந்து ஏதேனும் பதில் வந்ததா?

ஷை பதிலில் குறிப்பிட்டபடி நாம் "ஆழ்வார்கள் மதம்" என்னும் தலைப்பில் எழுதி சுஜாதாவுக்கும், குமுதம் பக்தி ஸ்பெஷல் பத்திரிகைக்கும் அனுப்பிய நமது கட்டுரை இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் பக்தி ஸ்பெஷலிலும் வெளியிடப்படவில்லை. சுஜாதாவிடமிருந்தும் யாதொரு பதிலும் வரவில்லை. இதிலிருந்து ஆழ்வார்களின் உண்மையான மதம் என்ன என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் அக்கறை குமுதம் பக்தி ஸ்பெஷலுக்கோ, சுஜாதாவுக்கோ இல்லை என்று விளங்குகிறது. மேலும் நாம் முன்னமேயே சுஜாதாவின் கட்டுரை பற்றித் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலும் நியாயமானவையே என்பது உறுதியாகிறது. நம் வாசகர்கள் உண்மையை அறிந்து கொள்வதற்காக, அவர்களுக்கு அனுப்பிய கட்டுரையை அடுத்தபடி அச்சிடுகிறோம். இனியாவது சுஜாதாவும், குமுதம் பக்தி ஸ்பெஷலும் ஆழ்வார்கள் பாசுரங்களுக்குத் தவறான பொருள் உரைப்பதை நிறுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

"கல்கி" பத்திரிகையில் "முதல் மூவர்" முதலான தொடர்களில் பல வருடங்களுக்கு முன்பே திரு. ராஜாஜி அவர்கள் இதே வாதங்களைச் செய்தபோது நம் மறுப்பைப் பெற்று, தம் அறியாமையை ஒப்புக்கொண்டது நம் ஸுதர்சனத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. இந்த வாதங்கள் பொதுஜனப் பத்திரிகைகளில் இப்போதும் தொடர்வது மிகவும் வருந்தத்தக்கது.

http://acharya.org

ஆழ்வார்களின் மதம்

எழுதியவர் :

ஸ்ரீ உ வே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L., [ஸுதர்சனர்]. ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் 3-B, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

குமுதம் பக்தி ஸ்பெஷல் நவம்பர்-99 இதழில் "ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம்" என்னும் தலைப்பில் திரு சுஜாதா அவர்கள் எழுதிவரும் கட்டுரைத் தொடரில் ஸுதர்சனர் பதிலில் வெளிவந்த அவரது கட்டுரை பற்றிய கருத்துக்களுக்குப் பதிலளிக்கையில், "கட்டுரைத் தொடரில் இதுவரை வெளிவந்த எல்லாக் கட்டுரைகளையும் முழுவதும் படித்துவிட்டு ஸுதர்சனர் தம் கருத்துக்கள் நியாயமானவையா? என்று தெரிவிக்கவேண்டுகிறேன்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வண்ணமே அவரது எல்லாக் கட்டுரைகளையும் படித்துவிட்டு அவைபற்றிய நம்முடைய ஆய்வினையும், சமயத்துறையில் நம்நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகள் மேற்கொள்ளவேண்டிய நிலைபற்றியும் இக்கட்டுரையில் இனித் தருகிறோம்.

நம் தமிழ்நாட்டில் இந்துமதம் என்னும் பொதுப்பெயரில் வழங்கப்பட்டு வரும் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்களில், வேதாந்த அடிப்படையில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மதங்களும், தெய்வக்கொள்கை அடிப்படையில் விஷ்ணுவைப் பரம் பொருளாகவும் மற்ற தெய்வங்களை அவனுள் அடங்கியவர்களாகவும் கொள்ளும் வைஷ்ணவ மதம் என்றும், சிவனைப் பரம்பொருளாகவும் மற்ற தெய்வங்களை அவனுள் அடங்கியவர்களாகவும் கொள்ளும் சைவமதம் என்றும் உள்ள பிரிவுகளும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வருகின்றன. இந்த மதங்களைப் பின்பற்றி வருபவர்கள் பரஸ்பர சகிப்புத்தன்மையுடனும், ஒற்றுமையுடனும் இருக்கவேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை இருக்க இடமேயில்லை. ஆனால், இந்த மதங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிறோம் என்ற பெயரில், நம்நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகளில் "எல்லா மதங்களும் ஒன்று" என்று நீண்ட காலமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. முற்கூறிய மதங்களுக்கிடையே அடிப்படைக் கொள்கைகளில் மிகுந்த வேற்றுமை இருக்கையால் இத்தகைய பிரசாரம் உண்மைக்குப் புறம்பான நிலையை மேற்கொண்டதேயாகும்.

http://acharya.org

கட்டுரைத் தொடர் (2)ல் "முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் சைவ வைணவப் பிணக்குகள் பண்டிதர்களிடம் அதிகமாக இருந்தன. இரண்டு தெய்வங்களும் ஒன்றே என்று கூறும் முதல் குரல் பொய்கையாருடையது. இந்தக் கருத்தைப் பொய்கையார் பலவிடங்களில் வலியுறுத்துகிறார்" என்று எழுதி அதற்குச் சான்றாகப் "பொன் திகழும் மேனி" [முதல் திருவ-98] என்ற பாட்டையும் காட்டியுள்ளார்.

"பொன் திகழுமேனிப் புரிசடைஅம் புண்ணியனும்

நின்றுலகம்தாய நெடுமாலும்—என்றும்

இருஅரங்கத்தால் திரிவரேலும்—ஒருவன்

ஒருவனங்கத்து என்றும் உளன்" என்னும் இந்தப்பாட்டில், "சிவனும் விஷ்ணுவும் ஒன்றே" என்று எங்கே சொல்லியிருக்கிறது? "ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன்" என்று தானே சொல்லியிருக்கிறது. இதற்கு, "முதலில் சொல்லப்பட்ட சிவன் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நெடுமாலுடைய திருமேனியில் என்றும் இருக்கிறான்" என்றுதானே பொருள் கொள்ளமுடியும். முதல் திருவ 28-ம் பாட்டில் இவ்வாழ்வாரே "மாமதிள் மூன்றெய்த இறையான் நின்னாகத்திறை" என்று சிவன் திருமாலின் திருமேனியில் ஒரு சிறு பகுதியைப் பற்றி நிற்கிறான் என்றுதானே பாடியிருக்கிறார். இதிலிருந்து "இருவரும் ஒன்று" என்று எப்படித் தேறும்? அப்படித் தேறுவதாயிருந்தால் 28-ம் பாட்டில் திருமாலின் திருமேனியின் ஒவ்வொரு பகுதியிலிருக்கும் சங்கு, சக்கரம், திருமகள், பிரமன் ஆகிய அனை வருமே திருமாலோடு ஒன்று என்று சொல்லவேண்டி வருமே? இது சிறிதும் பொருந்தாதே. மேலும் இப்பாட்டில், "பொன் திகழு மேனிப் புரிசடை அம்புண்ணியன்" [98] என்று "சிவனை சடைமுடி தரித்து, புண்ணியச் செயலாகிற தவம் புரிபவன்" என்று குறிப்பிடுகிறார். "நின்றுலகம் தாய நெடுமால்" என்று திருமாலை உலகிலுள்ள எல்லார் தலையிலும் காலைவைத்து அளந்த பெருமையையுடையவனாகக் குறிப்பிடுகிறார். இதனாலும், "இரு அரங்கத்தால் திரிவரேலும்" அல்லது "இருவர் அங்கத்தால் திரிவரேலும்" என்னும் தொடராலும் இருவருக்கும் உள்ள வேற்றுமையையன்றோ ஆழ்வார் வெளிப்படுத்துகிறார். பாட்டு முழுவதையும் காணும்போது, "இப்படிப் பல வேற்றுமைகள் இருந்

http://acharya.org

தாலும், இருவருக்கும் பகையிருப்பதாக எண்ணவேண்டாம். ஒருவன் ஒருவனுடைய சரீரத்திலேயே அடங்கியிருக்கிறுன்'' என்னும் கருத்து விளங்குமேயொழிய, இருவரும் ஒன்றே என்னும் கருத்து எங்கே உள்ளது?

''தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும்'' [முதல் திருவ 44]

என்னும் பாட்டை எடுத்துக்கொண்டு ''பொய்கையாழ்வார் உருவம் பேர்கூட முக்கியமில்லை என்கிறுர்'' என்று நண்பர் சுஜாதா எழுதியுள்ளார். ''அடியார்கள் எந்த உருவத்தை உகக்கிறுர்களோ அந்த உருவத்தையே எம்பெருமான் ஏற்றுக்கொள்கிறுன்'' என்னும் பொருளே இப்பாட்டில் தெளிவாக விளங்குகிறது. இது அடியார் வழிபடும் அர்ச்சாவிக்ரஹத்தைப் பற்றியது என்று உரையாசிரியர்கள் உரையிட்டிருப்பதில் எந்தத் தவறுமில்லை. இதிலிருந்து 'உருவம் பேர்கூட முக்கியமில்லை' என்று எப்படித்தேறும்?

கட்டுரை (3)ல், ''வைணவம் என்பது விஷ்ணுவின் பரத்துவத்தைப் பற்றிப்பேசுவது. பரத்துவம் என்ருல் கடவுள் தன்மை'' என்று எழுதியுள்ளார். ''பரத்வம் என்ருல் மற்ற தெய்வங்களைக் காட்டிலும் மேலானவனுய் இருக்கை'' என்றே பொருள்படும். எல்லா ஆழ்வார்களும் இப்படியே பல பாடல்களில் முழங்கியுள்ளார்கள். பொய்கையாழ்வாரும் ''முதலாவார் மூவரே—அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர்வண்ணன்'' [முதல் திருவ 15] என்றும், ''திருமாலையல்லது தெய்வம் என்று ஏத்தேன்'' [முதல் திருவ-64] என்றும் மிகத்தெளிவாக இவ்விஷயத்தைக் கூறியிருக்கிறுர். ''மாதவன்பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு'' [இரண்டாம் திருவ-39] என்னும் பாசுரத்தை எடுத்துக்கொண்டு, ''பூதத்தாழ்வார் வேதமே வேண்டாம் என்கிறுர்'' என்று எழுதுகிறுர். ''மாதவன் பேர் சொல்லுவதே வேதத்தின் சுருக்கம்'' என்று கூறினுல் வேதமே வேண்டாம் என்று பொருள் தேறுமோ?

'சைவவைணவ சமய நல்லிணக்கத்திலும் முதலாழ்வார்களிடம் கருத்து ஒற்றுமை இருக்கிறது'' என்று எழுதிவிட்டு ''அம்

http://acharya.org

மூவருள்ளும் முதலாவான் மூரி நீர் வண்ணன்'' [முதல் திருவ-15] என்னும் பொய்கையாழ்வாரின் சைவ மறுப்புப் பாடலை உடனே எழுதிவிட்டு,

ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல் மணிவண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான்—நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. [முதல் திருவ 74]

என்னும் பாட்டில், சிவன் விஷ்ணு ஆகிய இருவரையும் மாற்றி மாற்றிச் சொல்லுகையால் அதை சைவ வைணவ நல்லிணக்கத் திற்குச் சான்றாக எடுக்கிறார். இப்பாட்டை ''ஏற்றான் எயிலெரித் தான் நீற்றான் கூற்றொருபால் மங்கையான் வார்சடையான் கங்கை யானுனவன், புள்ளூர்ந்தான் மார்விடந்தான் நிழல் மணிவண்ணத் தான், பூமகளான் நீள்முடியான், நீள்கழலான் காப்பு'' என்று கூட்டியே பொருள்கொள்ளவேண்டும். இப்படிப்பொருள் கொள் ளும்போது முதலில் சொல்லப்பட்ட சிவன் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட திருமாலால் காக்கப்படுபவன் என்னும் வைணவ மதக்கொள்கை விளங்குகிறதேயொழிய சைவ வைணவ மத நல் லிணக்கக் கொள்கை எங்கிருந்து கிடைக்கும்?

கட்டுரைத் தொடர் (2)ல்

''அரன் நாரணன் நாமம் ஆன்விடைபுள்ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையது வேல்நேமி
உருவம் எரிகார்மேனி ஒன்று.'' [முதல் திருவ-5]

என்னும் பாட்டை எடுத்துக்கொண்டு, ''உடல் ஒன்றே'' என்று முடிக்கிறார். இப்பாட்டில் ''உரைநூல் மறை'' என்று சொல்லி யிருக்கையாலே, சிவனைப் பரம்பொருளாகச் சொல்லுவது குறை கள் நிறைந்த மனிதரால் நூற்கப்பட்ட ஆகமங்களும் புராணங் களுமே என்றும், திருமாலைப் பரம்பொருளாகச் சொல்லுவது எவ ராலும் இயற்றப்படாததாய் அதனால் குற்றமற்றதான வேதம் என்றும் கூறுவதன் மூலம், திருமாலே பரம்பொருள் என்றும், சிவன் பரம்பொருள் அல்லன் என்றும் மிகத்தெளிவாகக் காட்டி யிருக்கிறார் ஆழ்வார். ''அரன் நாரணன்'' முதலானவையும் திரு மாலின் முதன்மையையும் சிவன் ஒரு சீவனே என்பதையும் காட் டும் சொற்கள் என்று உரையாசிரியர்கள் உரையிட்டிருக்கிறார்கள்.

http://acharya.org

"மேனி ஒன்று" என்றதற்கு 'சிவன் சரீரம்' என்றும், நாரணன் அவனுக்கு ஆத்மா என்றும் மற்ற பாசுரங்களையொட்டிப் பொருள் கொண்டிருக்கிறார்கள். முன் பின் பாசுரங்களோடு முரண்படாதபடி பாசுரங்களின் பதங்களை ஆழ்ந்து சிந்திக்காமல் நுனிப்புல் மேய்ந்து மனம்போனபடி பொருள் எழுதுவது சரியல்ல. திரு ராஜாஜி கல்கியில் "முதல் மூவர்" கட்டுரையில் இப்படி எழுதியபோது, நாம் அதைச் சுட்டிக்காட்டினோம். அவர் தம் அறியாமையை ஒப்புக்கொண்டார்.

"முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் சைவ வைணவப் பிணக்குகள் பண்டிதர்களுக்குள் அதிகமாக இருந்தன" என்று எழுதுவது தமிழகத்தின் தத்துவ சமய வளர்ச்சியை நடுநிலை நின்று ஆராய்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பரிபாடல் முதலான சங்க நூல்களை ஆராய்ந்தால், சங்ககாலத்தில் "திருமாலே வேதத்தால் முழங்கப்படும் முழு முதல்வன் என்று சான்றோர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்" என்றும், சிவன் முதலான தெய்வங்களை அப்படிக்கொள்ளவில்லை என்றும் விளங்கும். இதை நாம் நம்முடைய "சங்ககாலத் தமிழர் சமயம்"* என்னும் நூலில் விரிவாக நிலைநாட்டியிருக்கிறோம். (இந்நூலை ரூ 4 விலையில், 5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி - 620 017 என்னும் நம் விலாசத்தில் பெறலாம்) சங்க காலத்திற்குப் பின் முதலாழ்வார்கள் காலம் வரையில் சிவனைப் பரம்பொருளாகக் கூறும் சைவமதம் சிறிது சிறிதாக வளர்ந்தது. அதனாலேயே முதலாழ்வார்கள் சைவத்தைக் கடுமையாகக் கண்டிக்கவில்லை. திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவத்திற்குப் போட்டியாக சைவம் மிகவும் வளர்ந்துவிட்டபடியால், அவரும், அவருக்குக் காலத்தால் பிற்பட்ட ஆழ்வார்களும் சைவத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். பரிபாடலை கிபி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக, கட்டுரைத் தொடர் (8)ல் நண்பர் எழுதியிருப்பதையும் "கடைச்சங்ககாலம் கி.பி. 575-க்கு மேலும் பரவியிருந்தது" என்று கட்டுரைத் தொடர் 2-ல் எழுதியிருப்பதையும் நடுநிலை நிற்கும் ஆராய்ச்சியாளர் எவராலும் ஏற்க இயலாது. 2000 வருடங்களுக்கு முற்பட்ட கடைச்சங்ககாலத்தைச் சேர்ந்த எட்டுத்

---

* இந்நூலின் பிரதியை, பக்தி ஸ்பெஷலுக்கும், சுஜாதாவுக்கும் அனுப்பியுள்ளோம்.

http://acharya.org

ஸுதர்சனம் வாசகர்களுக்கு ஓர் உண்மையை உணர்த்த விரும்புகிறோம். ஹ. ப்ரியா ஆசிரியர் ப்ரக்ருத விவாத விஷயத்திற்கு எந்த பதிலும் எழுதுவது இயலாதாகையால் அதற்குத் தொடர்பேயில்லாத பலபல பிரச்சினைகளைக் கிளப்பி, விவாதத்தைத் திசை திருப்பிவிடப் பார்க்கிறார். ஸ்ரீ P B A ஸ்வாமியுடன் நடந்த திரௌபதீ ப்ரபத்தி விவாதத்தில் நாம் "பிறருடைய அபிப்ராயப் பத்திரிகைகளை வெளியிட்டு வெற்றிபெற முயற்சிக்கக்கூடாது" என்று அப்போது எழுதியதற்கு மாறாக இப்போது அபிப்ராயப் பத்திரிகைகளை வெளியிடுவதாகக் கூறுகிறார். விவாத விஷயத்தில் வெற்றிபெற விரும்பி இக்கடிதங்கள் வெளியிடப்படவில்லை என்பதும், ஹ. ப்ரியா ஆசிரியர் செல்லும் வழி தவறானது என்று உலகுக்குத் தெரியப்படுத்தவே வெளியிடப்பட்டன என்பதும் அனைவரும் அறியக்கூடிய வெளிப்படையான விஷயம். ஹ. ப்ரியா ஆசிரியர் இப்படிப் பொருத்தமற்ற கதைகளையும், ப்ரக்ருத விவாதத்திற்கு சம்பந்தமில்லாத விதண்டாவாதங்களையும், தூஷணபரிஹாஸங்களையும் எழுதுவாரேயொழிய முக்கிய விஷயத்தைத் தொடவேமாட்டார் என்று விளங்குவதால் இவருடன் விவாதத்தை இத்துடன் நிறுத்துகிறோம். ஒருவேளை ப்ரக்ருத விவாதத்தில் நம்மால எடுத்துக்காட்டப்பட்டுள்ள விஷயங்களுக்கு இவர் மறுப்பு வெளியிட முற்பட்டாரேயானால் அப்போது நாமும் இவருடன் விவாதத்தைத் தொடருவோம்.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை, அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்யர், 43, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்-620 006.

58. 3—1—2000 தினமலரில் "வாழ்க்கையை மோட்சமாக்க வழிகாட்டுகிறது திருக்குறள்" என்னும் தலைப்பில் செய்தி வந்துள்ளது. அதில், குமரிமுனையில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழறிஞர் பொன். சத்தியநாதன் பின்வருமாறு பேசியதாக உள்ளது:—

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். பரிமேலழகரின் உரையை சிறந்ததாக ஏற்று, அதனைப் பின்பற்றிப் பலர் உரை எழுதியுள்ளனர். பரிமேல் அழகரின் உரையில் தவறு உள்ளது. காரணம், அவர் சார்ந்திருந்த மதமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் குறளான "அகர முதல எழுத்தெல்லாம்

http://acharya.org

''மேனி ஒன்று'' என்றதற்கு 'சிவன் சரீரம்' என்றும், நாரணன் அவனுக்கு ஆத்மா என்றும் மற்ற பாசுரங்களையொட்டிப் பொருள் கொண்டிருக்கிறார்கள். முன் பின் பாசுரங்களோடு முரண்படாதபடி பாசுரங்களின் பதங்களை ஆழ்ந்து சிந்திக்காமல் நுனிப்புல் மேய்ந்து மனம்போனபடி பொருள் எழுதுவது சரியல்ல. திரு ராஜாஜி கல்கியில் ''முதல் மூவர்'' கட்டுரையில் இப்படி எழுதியபோது, நாம் அதைச் சுட்டிக்காட்டினோம். அவர் தம் அறியாமையை ஒப்புக்கொண்டார்.

''முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் சைவ வைணவப் பிணக்குகள் பண்டிதர்களுக்குள் அதிகமாக இருந்தன'' என்று எழுதுவது தமிழகத்தின் தத்துவ சமய வளர்ச்சியை நடுநிலை நின்று ஆராய்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பரிபாடல் முதலான சங்க நூல்களை ஆராய்ந்தால், சங்ககாலத்தில் ''திருமாலே வேதத்தால் முழங்கப்படும் முழு முதல்வன் என்று சான்றோர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்'' என்றும், சிவன் முதலான தெய்வங்களை அப்படிக்கொள்ளவில்லை என்றும் விளங்கும். இதை நாம் நம்முடைய ''சங்ககாலத் தமிழர் சமயம்''* என்னும் நூலில் விரிவாக நிலைநாட்டியிருக்கிறோம். (இந்நூலை ரூ 4 விலையில், 5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி - 620 017 என்னும் நம் விலாசத்தில் பெறலாம்) சங்க காலத்திற்குப் பின் முதலாழ்வார்கள் காலம் வரையில் சிவனைப் பரம்பொருளாகக் கூறும் சைவமதம் சிறிது சிறிதாக வளர்ந்தது. அதனாலேயே முதலாழ்வார்கள் சைவத்தைக் கடுமையாகக் கண்டிக்கவில்லை. திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவத்திற்குப் போட்டியாக சைவம் மிகவும் வளர்ந்துவிட்டபடியால், அவரும், அவருக்குக் காலத்தால் பிற்பட்ட ஆழ்வார்களும் சைவத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். பரிபாடலை கிபி ஏழாம் நூற்றுண்டைச் சேர்ந்த தாக, கட்டுரைத் தொடர் (3)ல் நண்பர் எழுதியிருப்பதையும் ''கடைச்சங்ககாலம் கி.பி. 575-க்கு மேலும் பரவியிருந்தது'' என்று கட்டுரைத் தொடர் 2-ல் எழுதியிருப்பதையும் நடுநிலை நிற்கும் ஆராய்ச்சியாளர் எவராலும் ஏற்க இயலாது. 2000 வருடங்களுக்கு முற்பட்ட கடைச்சங்ககாலத்தைச் சேர்ந்த எட்டுத்

---

* இந்நூலின் பிரதியை பக்தி ஸ்பெஷலுக்கும், சுஜாதாவுக்கும் அனுப்பியுள்ளோம்.

http://acharya.org

தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதேயாகும். பரிபாடலின் சொற்களை ஆராய்ந்தாலே இது விளங்கும். ஆழ்வார்கள் வழங்கும் கேசவன் நாராயணன் முதலான பன்னிரு நாமங்களும் மற்றும் பல வடமொழிச் சொற்களும் பரிபாடல் முதலான சங்கநூல்களில் வழங்கப்படாததிலிருந்தே ஆழ்வார்கள் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை சங்கநூல்கள் என்று விளங்குகிறது.

வைணவத்தின் உயிர் நாடியான திருமாலின் முதன்மையையும் மேன்மையையும் ஆழ்வார்கள் ஆதரிக்கவில்லை என்றும், சிவவிஷ்ணு சமரசவாதம் செய்தார்கள் என்றும் ஒரு பொதுஜனப் பத்திரிகை உண்மைக்கு மாறாக எழுதும்போது அதைப் படித்துக் கொண்டு வாளாவிருப்பதுதான் சகிப்புத்தன்மை என்று வைணவரான நமது நண்பர் கருதுகிறார் போலும்! விமர்சிக்கப் படவேண்டிய மற்றும் பல தவறான விஷயங்களும் கட்டுரைத் தொடரில் உள்ளன. விரிவுக்கஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்.

ஸுதர்சனரின் குறிப்பு

சென்ற மாத [625] ஸுதர்சனர் பதிலில் நாம் ஹயக்ரீவ ப்ரியாவின் நேர்மையற்ற செயலை விரிவாக விளக்கி, அவர்கள் எழுப்பிய அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலுரைத்து ப்ரக்ருத விவாதத்தில் ஹ. ப்ரியாவில் வெளிவந்த நா. வரதாசார்யரின் கட்டுரையில் இரண்டு வருடங்களாக ஸுதர்சனத்தில் வெளிவந்த ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷஶததூஷணி என்னும் நமது நூல்களுக்கு எந்த பதிலையும் சொல்லாமல் அடிபட்டுப்போன வாதங்களையே திருப்பி எழுதுவது உண்மையை இருட்டடிப்புச் செய்யும் முயற்சியேயாகும் என்று எடுத்துக் காட்டியிருந்தோம். ஸம்ப்ரதாயத்தின் முக்கியமான விஷயத்தில் இப்படி ஒரு விவாதம் நடைபெறுவதையே தம் வாசகர்கள் அறிந்து கொள்ளக்கூடாது என்னும் நோக்கத்திலும், பிராட்டி எம்பெருமானுக்கு சரீரம் என்று தேசிகனே திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்று தெளிவாகக் காட்டும் ஸ்ரீ உ. வே. சே. ஜகந்நாதன் அவர்களின் கட்டுரையை வெளியிட்டால் "பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமல்ல; பெருமாள் பிராட்டிக்கும் சரீரமல்ல" என்பது போன்ற, தம் சகோதரப் பத்திரிகையான "காஞ்சிப்பேரருளாளன்" பத்திரிகையில் வெளிவந்த நா. வரதாசார்யரின் பிதற்றல்களின் சாயம் வெளுத்துவிடும் என்னும் அச்சத்தா-

http://acharya.org

லும் ப்ரக்ருத விஷயத்தையே தொடாமல் தாம் ஏதோ இரண்டு அடிப் படைக் கேள்விகளை எழுதியுள்ளதாகவும் நாம் அதற்கு பதிலளிக்க வில்லை என்றும் ஹ. ப்ரியா ஆசிரியர் [ஜனவரி 2000] இதழில் எழுதி யுள்ளார்.

அவர் எழுதியுள்ள முதல் கேள்வியில், "எந்த விதமான PROVOCATION-ம் இல்லாத சூழ்நிலையில் ஹ. ப்ரியாவின் நேர் மையை சந்தேகிக்கும் ஒரு குறிப்பை ஸுதர்சனம் ஐப்பசி [623] இதழில் வெளியிட்டது நேர்மையல்ல" என்று கூறுகிறார். இதற்குப் பதில் பின்வருமாறு:— இரண்டு வருடங்களாக நாமும் ஸ்ரீ கி. ஜகந் நாதன் போன்ற மற்றும் பலரும் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களில் பலர் பிராட்டி விஷயமாக எழுதியுள்ள பல தவறான விஷயங்களை, குறிப் பாக நா. வரதாசார்யர் காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகையில் வெளி யிட்டவற்றை மறுத்து "ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்", "பஞ்சமபக்ஷமத தூஷணி" என்னும் இருநூல்களிலும் வெளியிட்டிருப்பது ஸுதர்சனத் தின் சந்தாதாரராயிருக்கும் ஹ. ப்ரியா ஆசிரியருக்கும் தெரிந்திருக்க, அவற்றுக்கு எந்த பதிலும் சொல்ல இயலாமல், அடிபட்டுப்போன வாதங்களையே கொண்ட நா. வரதாசார்யர் எழுதிய கட்டுரையை ஹ. ப்ரியாவில் வெளியிட்டதே "PROVOCATION" ஆகும். அதற்கு மேல் நா. வரதாசார்யர் கட்டுரையை ஸாத்விகமான முறையில் மறுத்து ஸ்ரீ கி. ஜகந்நாதன் எழுதிய கட்டுரையை இன்றுவரை வெளியிட மறுப்பதும் விவாதத்தைத் திசைதிருப்பிவிட முயற்சிப்பதும், ஹ. ப்ரியா ஆசிரியருக்கு நேர்மையே இல்லை என்று உறுதிப்படுத்துகிறது.

5—11—99 கடிதத்தில் "நம் வரம்புகளைக் கடந்து ஒரு குறிப் பிட்ட கட்டுரையை ஹ. ப்ரியா வெளியிடவேண்டும் என நாம் வற் புறுத்துவது சரிதானா?" என்பது இவரது இரண்டாவது கேள்வி? இதற்கு பதில் பின்வருமாறு:— இரண்டு வருடங்களாக நா. வரதா சார்யரின் அபத்த வாதங்களை மறுத்து நாமும் ஸ்ரீ கி. ஜகந்நாதனும் எழுதியிருப்பவற்றைக்கண்டு கொள்ளாதது போல் ஹ. ப்ரியாவில் தேசிகன் முதலான ஸகல பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் விருத்தமான ஒரு கட்டுரையை நா. வரதாசார்யர் எழுதியதை ஹ. ப்ரியா வெளியிட்டு அவருடைய வாதங்கள் உண்மையே என்னும் மயக்கத்தை வாசகர்களுக்கு விளைத்தபடியால் கி. ஜகந்நாதன் கட்டுரை யை வெளியிடுமாறு வற்புறுத்தும் உரிமை நமக்கு உண்டு.

http://acharya.org

ஸுதர்சனம் வாசகர்களுக்கு ஓர் உண்மையை உணர்த்த விரும்புகிறோம். ஹ. ப்ரியா ஆசிரியர் ப்ரக்ருத விவாத விஷயத்திற்கு எந்த பதிலும் எழுதுவது இயலாதாகையால் அதற்குத் தொடர்பேயில்லாத பலபல பிரச்சினைகளைக் கிளப்பி, விவாதத்தைத் திசை திருப்பிவிடப் பார்க்கிறார். ஸ்ரீ P B A ஸ்வாமியுடன் நடந்த திரௌபதீ ப்ரபத்தி விவாதத்தில் நாம் "பிறருடைய அபிப்ராயப் பத்திரிகைகளை வெளியிட்டு வெற்றிபெற முயற்சிக்கக் கூடாது" என்று அப்போது எழுதியதற்கு மாறாக இப்போது அபிப்ராயப் பத்திரிகைகளை வெளியிடுவதாகக் கூறுகிறார். விவாத விஷயத்தில் வெற்றிபெற விரும்பி இக்கடிதங்கள் வெளியிடப்படவில்லை என்பதும், ஹ. ப்ரியா ஆசிரியர் செல்லும் வழி தவறானது என்று உலகுக்குத் தெரியப்படுத்தவே வெளியிடப்பட்டன என்பதும் அனைவரும் அறியக்கூடிய வெளிப்படையான விஷயம். ஹ. ப்ரியா ஆசிரியர் இப்படிப் பொருத்தமற்ற கதைகளையும், ப்ரக்ருத விவாதத்திற்கு சம்பந்தமில்லாத விதண்டாவாதங்களையும், தூஷணபரிஹாஸங்களையும் எழுதுவாரேயொழிய முக்கிய விஷயத்தைத் தொடவேமாட்டார் என்று விளங்குவதால் இவருடன் விவாதத்தை இத்துடன் நிறுத்துகிறோம். ஒருவேளை ப்ரக்ருத விவாதத்தில் நம்மால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விஷயங்களுக்கு இவர் மறுப்பு வெளியிட முற்பட்டாரேயானால் அப்போது நாமும் இவருடன் விவாதத்தைத் தொடருவோம்.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை, அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்யர், 48, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்-620 006.

58. 3—1—2000 தினமலரில் "வாழ்க்கையை மோட்சமாக்க வழிகாட்டுகிறது திருக்குறள்" என்னும் தலைப்பில் செய்தி வந்துள்ளது. அதில், குமரிமுனையில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழறிஞர் பொன். சத்தியநாதன் பின்வருமாறு பேசியதாக உள்ளது:—

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். பரிமேலழகரின் உரையை சிறந்ததாக ஏற்று, அதனைப் பின்பற்றிப் பலர் உரை எழுதியுள்ளனர். பரிமேல் அழகரின் உரையில் தவறு உள்ளது. காரணம், அவர் சார்ந்திருந்த மதமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் குறளான "அகர முதல எழுத்தெல்லாம்

http://acharya.org

ஆதி பகவன் முதற்றே உலகு'' என்ற குறளுக்கு உரை எழுதும் போது, எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாவதாக இருப்பது போல் உலகத்திற்கு இறைவன் முதலானவன் என்று கூறுகிறுர். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள "போல" என்ற சொல்லைக் குறிக்கும் வார்த்தை குறளில் இல்லை. மேலும் "முதற்றே" "ஆதி" இரண்டு சொற்களும் தொடக்கத்தைக் குறிக்கின்றன. குறளைத் தந்த வள்ளுவர் ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் இரண்டு சொற்களைப் பயன்படுத்தி இருப்பாரா? சிந்திக்கவேண்டும். எனவே இந்தக் குறளைப் படிக்கும்போது "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி" என்று நிறுத்தி வாசித்தால் பொருள் விளங்கும். மொழி - இயல் இசை நாடகம் என்ற மூன்று வகைப்படும். மிருகத்திலிருந்து மனிதன் உருவானபோது தோன்றியது இயல் மொழி. இதற்கு அடிப்படை 'அகரமுதல' எழுந்துக்கள். எனவே இந்தக் குறளுக்கு நான் கொள்ளும் விளக்கம், "அகர முதல எழுத்துக்களைக் கொண்டதுதான் இயல்மொழி" அதனுல்தான் நாம் இன்று மனிதர்களாக உயர்ந்து வாழமுடிகிறது— என்பது அப்பேச்சு. இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

திருக்குறளில் முதல் குறளான இது 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தின் முதல் குறளாக அமைந்துள்ளது. "ஆதி பகவன் முதற்றே உலகு" என்பதற்கு ஆதி பரம்பொருளைக் காரணமாகக்கொண்டது உலகம் என்னும் பொருள் தெளிவாக விளங்குகிறது. இது கடவுள் வாழ்த்துக்கு மிகப் பொருத்தமானது. "ஆதி" என்பது "பகவான்" முதலில் இருந்தான் என்பதைக் குறிக்கிறது. "முதற்றே உலகு" என்பது அந்த பகவானைக் காரணமாகக் கொண்டது, அதாவது அவனிடமிருந்து தோன்றியது உலகு என்று வெளிப்படையாகப் பொருள்படுகிறது. ஆகையால் இரண்டு சொற்களும் தொடக்கத்தைக் குறிப்பது என்று இவர் கூறுவது சிறிதும் பொருந்தாது. தைத்திரீய நாராயணவல்லி உபநிஷத்தில் "யத்₃ வேதா₃தௌ₃ ஸ்வர: ப்ரோக்த:" என்னும் மந்திரத்தில், சொற்களுக்கெல்லாம் காரணமான அகாரத்தால் சொல்லப்படுபவன் சொற்களால் சொல்லப்படும் பொருள்களுக்கெல்லாம் காரணமான ஸர்வேஶ்வரனேயாவான்" என்று கூறியிருப்பதை உட்கொண்டு திருவள்ளுவர் இக்குறளில் கடவுள் வாழ்த்தை மிக அழகாக அமைத்திருக்கிறுர். ஆகையால்

http://acharya.org

இதைத் தாறுமாருகச் சிதைத்து, கடவுள் வாழ்த்துக்குப் பொருந்தாத இயல்மொழியைக் கொண்டு வந்து இதில் புகுத்தி, "அகர முதல எழுத்துக்களைக் கொண்டதுதான் இயல்மொழி" என்று இவர் கூறும் பொருள் எவராலும் ஏற்கத் தக்கதல்ல. "பகவன் முதற்றே உலகு" என்பதற்கு, இவர் எந்தப்பொருளும் கூறவில்லை. வேறுபொருள் கூறவும் முடியாது. இக்குறளிலுள்ள இரண்டு வாக்கியங்கள் ஒன்றுக் கொன்று திருஷ்டாந்தம் என்று வெளிப்படையாக விளங்குவதால் 'போல' என்னும் சொல் தன்னடையே வரும்.

பரிமேலழகர் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இருந்தவர். இருப தாம் நூற்றாண்டின் முற்பாதி வரையில் அவருடைய உரையே மிகச் சிறந்ததாக எல்லாச் சான்றோர்களாலும் ஏற்கப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் அரசியல் வாதிகளும் வடமொழியை வெறுப் பவர்களும் தங்கள் கொள்கைகளைப் புகுத்தித் திருக்குறளுக்கு மனம் போனபடியெல்லாம் உரை எழுதிவருவது நடுநிலை நிற்கும் நல் லோர்களால் ஏற்கத்தக்கதன்று. வள்ளுவர், "வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" [346] "தாமரைக் கண்ணான் உலகு" [1103] முதலான இடங்களில் வடமொழி வேதங்களையும், அவற்றைப் பின்பற்றி, பரிபாடல் முதலானவற்றில் சங்ககாலச் சான் றோர்கள் எழுதியதையும் ஏற்றுக்கொண்டு, தாமரைக் கண்ணனை திரு மால் உலகம் புகுவதே மோக்ஷம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக் கிறார். இவர் கூறுவதுபோல் வாழ்க்கையே மோட்சம் என திருவள்ளு வர் கூறவில்லை. வாழ்வாங்கு வாழ்ந்தால் வாழ்க்கை மோக்ஷத்திற்கு ஒப்பாகும் என்றே கூறியிருக்கிறார்.

V. செல்வநாரண ராமாநுஜதாசர் (செல்வராஜ்), 151 மிஷன் தெரு பாண்டிச்சேரி - 605 001.

59. விஜயபாரதம் 14—1—2000 இதழில் "மகாபாரதப் போரில், குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கீதா உபதேசம் செய் திருப்பதற்கு வாய்ப்பே இல்லையென சுவாமி விவேகானந்தர் கூறி யிருப்பது குறித்து" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு விவேகானந் தரின் கருத்தை ஆதரித்துப் பதிலெழுதப்பட்டுள்ளது. இதை விமர்சிக்கக் கோருகிறேன்.

http://acharya.org

கீதையிலுள்ள அத்தனை விஷயங்களும் கண்ணனால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டவையே என்பதை ஏற்றுக்கொண்டு ஆயிரக்கணக்கான வருடங்களாக ஆதிசங்கரர், பகவத் ராமாநுஜர், மத்வர் முதலான மதாசார்யர்கள் பாஷ்யம் எழுதி அதில் கீதையிலுள்ள ஒவ்வொரு பதத்தையும் விளக்கியிருக்கிறார்கள். வேதத்தை ஒப்புக்கொள்ளும் அனைவரும் இன்றளவும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்களுக்கு ப்ரமாணமான ப்ரஸ்தான த்ரயத்தில் பகவத் கீதையும் ஒன்றாகும். இதை ஏற்க மறுக்கும் விவேகானந்தருடைய கருத்து—வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்பவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

V R எதிராஜ ராமாநுஜதாசர், திருவண்ணாமலை.

60. தற்போது லௌகிக வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் சில கஷ்டங்களைப் போக்க எந்த எந்தப் பாசுரங்களைச் சேவிக்கலாம், அல்லது எந்த திவ்யதேச எம்பெருமானைச் சேவிக்கலாம்?

லௌகிக வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்க சில பாசுரங்களை அல்லது சில எம்பெருமான்களை ஸேவிப்பது என்னும் பழக்கம் வைஷ்ணவ மதத்தில் ஆதரிக்கப்படவில்லை. அப்படி ஸேவித்த பின்பும் அக்கஷ்டங்கள் வலிய கர்மம் காரணமாக நீங்கவில்லையானால் நமக்கு அவநம்பிக்கை ஏற்படக்கூடும். எம்பெருமானிடம் சென்று லௌகிக பலன்களை யாசிப்பது பக்குவமுடைய ஜ்ஞானிகள் செய்யக் கூடியது அல்ல. அவ்வளவு பக்குவம் இல்லாதவர்கள் "ஆழியெழ" [திருவாய் 7-4-1] என்று தொடங்கும் வென்றி தரும் பத்தையும், "ஏழையேதலன்" [பெரிய திருமொழி 5-8-1] என்று தொடங்கும் பதிகத்தையும் அனுசந்திக்கும் வழக்கம் பழங்காலத்தில் இருந்து வந்தது என்று பூர்வாசார்யர்களின் கிரந்தங்களிலிருந்து விளங்குகிறது. இக்காலத்திலும் அவற்றை அனுசந்திக்கலாம். எல்லா திவ்யதேசத்து எம்பெருமான்களுமே எல்லாப்பலன்களையும் கொடுக்க வல்லவர்களே. ஆகையால் எந்த எம்பெருமானையும் ஸேவிக்கலாம். ஆனால் ஸேவித்தும் கஷ்டம் நீங்கவில்லையென்றால், "நம்முடைய வலிமைமிக்க கர்மமே காரணம்" என்று சமாதானம் செய்துகொள்ள வேண்டும்.

http://acharya.org

ஸ்ரீ உ. வே கி. ஜகந்நாதன், 9, May Flower Garden, Srinivasa Avenue Road, R. A. Puram, Chennai - 600 028.

61. ஸுதர்சனம் ப்ரமாதி ஐப்பசி [25—10—99] இதழில் வெளியிடப்பட்ட "பெரிய பிராட்டியாரின் ஏகோந ஶேஷித்வமும் பகவத்-சேஷத்வமும்" என்னும் தலைப்பில் அடியேன் எழுதிய நாலு பக்கங்கள் கொண்ட கட்டுரையிலிருந்து சில பகுதிகளைச் சுருக்கமாக அநுவாதம் செய்து நா. வரதாசார்யர் ஹ. ப்ரியா ப்ரமாதி பங்குனி [மார்ச் 2000] இதழில் "பிராட்டிக்குப் பட்டர் கூறிய பாரமைச்வர்யாதி நிரூபணம்" என்ற கட்டுரையில் தமது விடைகளை எழுதியுள்ளார். அந்தப் பத்திரிகையை அடியேனுக்கு அனுப்பும் நேர்மையும் ஹ. ப்ரியாவுக்கு இல்லை. சில நாட்கள் கழித்தே ஒரு நண்பர் மூலம் அறிந்து அதைப் படித்தேன். 3—4—2000 அன்று அவருடைய விடைகளுக்கு மறுப்பு எழுதி ஹ. ப்ரியாவுக்கு அனுப்பினேன். ஒரு மாதத்திற்கு மேலாகியும் அந்தக் கட்டுரையைப் பெற்றுக்கொண்டதற்கு ஒரு ஒப்புதலும் வரவில்லை. ஹ. ப்ரியா ஏப்ரல் 2000 (விக்ரம-சித்திரை) இதழிலும் அக்கட்டுரை வெளியிடப்படவோ அல்லது அதைப் பற்றிய ஒரு சிறு குறிப்போ இல்லை. இதிலிருந்து ஹ. ப்ரியா ஆசிரியருக்கு உண்மை வெளி வருவதில் விருப்பம் இல்லை என்று விளங்குகிறது. அக்கட்டுரையின் நகலை தேவரீருக்கு அனுப்பியிருக்கிறேன். அதை ஸுதர்சனம் இதழில் வெளியிட்டு வாசகர்கள் உண்மை உணரும்படி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

ஸுதர்சனரின் குறிப்பு : நம்முடைய **ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷ ஶததூஷணி, ஸுதர்சனர் பதில் பதினேலாவது சதகம்** ஆகியவற்றில் நூற்றுக்கணக்கான பக்கங்களில் எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்கு இவ்விவாதத்தை ஆரம்பித்து வைத்த நா. வரதாசார்யரோ அதைத் தொடர்ந்து நடத்திய **ஸ்ரீ**ந்ருஸிம்ஹப்ரியாவினரோ இப்போது இவ்விவாதத்தில் நுழைந்திருக்கும் ஹ. ப்ரியாவினரோ இதுகாறும் எந்தப்பதிலும் சொல்லவில்லை. இப்போது ஹ. ப்ரியா [மார்ச் 2000]-வில் நா. வரதாசார்யர் **ஸ்ரீ** உ. வே K. ஜகந்நாதன் அவர்களின் கட்டுரைக்குப் பதிலாக எழுதியிருப்பதும் விதண்டாவாதங்கள் நிறைந்ததாகவும், வாசகர்களுக்கு எதுவும் புரியாத முறை

http://acharya.org

யிலும் எழுதப்பட்டுள்ளது. அவருடைய விதண்டாவாதக்கட்டுரையை விரிவாக மறுத்திருக்கும் ஸ்ரீ உ வே K. ஜகந்நாதன் அவர்களின் கட்டுரை அடுத்து அச்சிடப்படுகிறது. இதுகொண்டு வாசகர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளலாம். —ஸுதர்சனர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

"பிராட்டிக்கு பட்டர் கூறிய பாரமைச்வர்யாதி நிருபணம்" என்னும் தலைப்பில் நாவல் பாக்கம் வ. தாசார்ய ஸ்வாமியின் கட்டுரை [ஸ்ரீஹயக்ரீவ ப்ரியா இதழ் பங்குனி-மார்ச் 2000]-யில் வெளியாகியுள்ள விஷயங்களுக்கு மறுப்பு.

ஹ. **ப்ரியா - பக்கம்-11 :** தேவீ சரீரமன்றேல் ஏகமேவ என்று ச்ருதி விரோதம் அர்த்தாபத்தியாகக் காட்டப்பட்டுள்ளதே எனில் அதனால் இறைவனோடு அநபாய விசேஷணமல்லாததே ஏதுமில்லை யென்றே தேறுமேயன்று சரீரமல்லாதது ஏதுமில்லை என்பதைக் கூறுது.

மறுப்பு : வேதார்த்த ஸங்க்ரஹம் மங்கள ஶ்லோகத்திலேயே இதுபற்றித் தெளிவாக எம்பெருமானாரால் அருளிச்செய்யப்பட்டுள்ளது.

அஶேஷ சித₃சித்₃ வஸ்து ஶேஷிணே ஶேஷஶாயினே ।
நிர்மலானந்த₃ கல்யாண நித₄யே விஷ்ணவே நம: ॥

[தன்னையொழிந்த அனைத்துச் சேதநாசேதநங்களுக்கும் சேஷியானவனும், ஶேஷஶாயியும், அளவற்ற ஆனந்தத்திற்கும், கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவனுமாகிற விஷ்ணுவிற்கு நமஸ்காரம்.]

இதற்கு ஸுதர்சன பட்டர் தமது தாத்பர்ய தீபிகையில் அளித்துள்ள விளக்கம் பின்வருமாறு :

அஶேஷேதி — சேதன ப₃ஹுத்வம், வஸ்து ஶப்₃தே₃ன பரமார்த்த₂த்வம் ச த₃ர்ஶிதம் ।

ஶேஷிணே — இத்யநேந சித₃சித்₃ வஸ்தூநாம் ஈச்வரம் ப்ரதி அநந்யார்ஹ **ஶேஷத்வ ரூபம் ஶரீரத்வம் ப₄க₃வத:** தத் ப்ரதிஸம்ப₃ந்தி₄த்வ ரூபம் ஆத்மத்வம் சேதி ஸித்₃த₄ாந்தார்த்த₂: ஸூசித:

விஷ்ணு ஶப்₃த₃: — த₄ர்மி நிர்தே₃ஶக:। ருட்₄யா தே₃வதா விஶேஷ நிர்ணயஶ்ச ।

மேற்கண்ட விளக்கத்தில் 'பகவத்' சப்தமும், 'விஷ்ணு' சப்தமும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இப்படியிருக்க, எம்பெருமானுக்கு சேஷமாய், சரீரமாய், தர்மமாய் இருக்கும் பிராட்டியும் துல்யமான ஈச்வரியே என்னும் வாதம் மேற்கண்ட ஸ்ரீ ஸூக்திகளுக்குச் சிறிதும் பொருந்தாது.

பரமாத்ம ஸ்வரூபத்தை எம்பெருமானர் தமது வேதார்த்த ஸங்க்ரஹத்தில் பின்வருமாறு காட்டுகிறார்—"ஏவம்வித₄ சித₃சித₃ாத்மக ப்ரபஞ்சஸ்ய உத்₃ப₄வ ஸ்தி₂தி ப்ரளய ஸம்ஸார நிவர்த்தனைக ஹேது பூ₄த: ஸமஸ்த ஹேய ப்ரத்யநீகதயா கல்யாணைகதாநதயா ச, **ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண ஸ்வரூப: அநவதி₄காதிஶயாஸங்க்₂யேய கல்யாண கு₃ண: ஸர்வாத்ம பரப்₃ரஹ்ம பரஜ்யோதி: பரதத்வ பரமாத்ம ஸத₃ாதி₃ ஶப்₃த₃ பே₄தை₃:** நிகி₂ல வேத₃ாந்த வேத்₃ய: ப₄க₃வான், நாராயண: புருஷோத்தம: இதி அந்தர்யாமி ஸ்வரூபம்"

மேற்கண்ட ஸ்ரீஸூக்தியில் எம்பெருமான் ஒருவனுக்கே முக்₂ய ஜக₃த்காரணத்வத்தையும், அவனுக்கே உரித்தான பகவத் ஶப்தத்தையும், 'நாராயண' **ஶப்தத்தையும், 'புருஷோத்தம'** ஶப்தத்தையும் ப்ரயோகித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கு ஸுதர்சன பட்டர் தமது விளக்கத்தில் 'உத்₃ப₄வேத்யாதி₃நா ஜக₃த் காரணத்வ மோக்ஷப்ரத₃த்வே உக்தே, **ஸ்வேதர வைலக்ஷண்யம்** த்ருணதே₃ரப்யஸ்தி தத்₃வ்யாவ்ருத்த்யர்த்த₂ம் ஸமஸ்தேதி **ஶோத₄க வாக்யோக்தோப₄ய லிங்க₃த்வேந வைலக்ஷண்யம்** உச்யதே। **ஸ்வரூபஶப்₃தே₃ந விஶேஷ்யாம்ஶோऽபி₄ப்ரேத:।** அநவதி₄கேத்யாதி₃—உபாஸ்யத்வ ப்ராப்யத்வோபயோகி₃ கு₃ண ஜாதாபி₄ப்ராயேண । **பகவத் ஶப்₃தே₃ந —** ஹேய ப்ரத்யநீகத்வம், கல்யாண கு₃ணஸ்பத₃த்வம் ச விவக்ஷிதம் । **நாராயண ஶப்₃தே₃ந —** உப₄ய விபூ₄திமத்த்வம். **புருஷோத்தம ஶப்₃தே₃ந — விபூ₄திபூ₄தசித₃சித்₃ வைலக்ஷண்யம்** என்று அருளியுள்ளதால், பிராட்டி எம்பெருமானுக்கு விசேஷணமாகவே இருப்பதால் மேற்படி **'ஸ்வரூப'** ஶப்தம் விசேஷ்யமான எம்பெருமானையே அபிப்ராயத்தில் கொண்டது என்றும் தெளிவாகக் காட்டியுள்ளதால் பிராட்டிக்கு எம்பெருமானைப்போலே **முக்ய ஜகத்காரணத்வம் இல்லை** என்பதும் அறிவிக்கப்படுகிறது.

http://acharya.org

கூரத்தாழ்வான் தமது ஸ்ரீவைகுண்டஸ்தவம் ஶ்லோகம்-37-ல் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார்.

விச்வஸ்ய விச்வவித₄காரணம் அச்யுத! த்வம்
கார்யம் ததே₃தத₃கி₂லம் சித₃சித் ஸ்வரூபம் ।
த்வம் நிர்விகார இதி வேத₃ஶிரஸ்ஸு கோ₄ஷோ
நிஸ்ஸீமம் ஏவ தவ தா₄ர்ஶ்யதீசித்ருத்வம் ॥

[அடியார்களை நழுவ விடாதவனே! எல்லாவற்றிற்கும் எல்லாவிதமான காரணமும் நீயே. சேதனம், அசேதனம் ஆகிய இவையனைத்தும் உனக்குக் கார்யமாயிருப்பவை. தேவரீர் யாதொரு மாறுபாட்டையும் அடையாதவர் என்பதாக உபநிஷத்துக்களில் முழக்கம்—தேவரீருக்கே ஆள்கின்ற நிலை அளவு கடந்தபடியைக் காட்டுகின்றது.]

ஸ்ரீவேதவ்யாஸரும் தமது ப்ரஹ்ம ஸூத்ரம் முதல் அத்யாயம் மூன்று பாதங்களில் முறையே **ஸர்வம் ப்ரஹ்மகார்யம், ப்ரஹ்ம ஶரீரம், ப்ரஹ்மாத்மகம்** என்றே நிர்ணயித்தார்.

ஸ்வாமி தேசிகன் தமது தத்வ டீகையில் லீலா ஶப்தத்திற்கு விளக்கம் அருளுகையில் "லீலா ஸ்வஸங்கல்பா₃தி₄பூர்வக: ஸ்வப்ரீத்யர்த்த₂ வ்யாபார:" [தன்னுடைய ஸங்கல்பத்தால் தன்னுடைய ப்ரீதியை உத்தேசித்துச் செய்யும் காரியம்] என்று எம்பெருமானுக்கே முக்ய ஜகத்காரணத்வத்தை இசைந்துள்ளார். 'எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு எல்லாக் கருமங்களும் செய்' [திருவாய்மொழி 4-10-8] என்றார் ஸ்வாமி நம்மாழ்வார். இருப்பினும் பிராட்டியிடம் தான் கொண்ட ப்ரேம பாரதந்த்ர்யத்தால் அவள் முகக்குறிப்பு அறிந்து எம்பெருமான் செயல்படுகிறான். ஆகையால் பிராட்டிக்கும் ஜகத் காரணத்வத்தில் அப்ரதானமான அந்வயம் உண்டு என்பதைக் கருத்தில் கொண்டே ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் 'அத்யந்தஸாம்யம்' பதத்தையிடாமல் 'ஸாம்யம்' என்று மட்டும் பதத்தையிட்டார். இது நாண்காவது பக்ஷத்திற்கே முழுக்க முழுக்கப் பொருந்தும். அதுமட்டுமல்ல. சது:ஶ்லோகீ பாஷ்யத்திலும் பின்வருமாறு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"ஆகாரஸாம்யேऽபி க்வசித் வ்யாபாரோ பி₄த்₃யதே । ஸர்வ கர்த்துர் வல்லபா₄ ப்ரீத்யுத்₃தே₃ஶேன தத்தல்லீலா ப்ரவ்ருத்தேஸ் தஸ்யா அபி தத₃ங்வயோக்திரவிருத்₃த₄ா। ஸம்ஹாரப்₃தே₄ऽபி கார்யே

http://acharya.org

லௌகிக பதி ந்யாயேந பதி ப்ராதாந்ய வ்யபதேஶ: பதி கர்த்ருகத்வ மாத்ர வ்யபதேஶஸ்ய சோபபந்ந: ।"

[ஆகாரங்கள் ஸமமாக இருந்தபோதிலும் வ்யாபாரம் வித்தியாஸப் படுகிறது. எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தவராகிய பகவான் தன்னுடைய பிரியமான பத்னியின் ப்ரீதியை உத்தேசித்து அந்தந்த லீலைகளில் ப்ரவர்த்திக்கின்றபடியால் இந்தப் பிராட்டிக்கும் அந்தந்த லீலைகளில் ஸம்பந்தமுண்டு என்று சொல்லியிருப்பதும் விருத்தமல்ல. இருவரும் சேர்ந்து ஆரம்பித்த கார்யத்திலும் லோகத்திலுண்டாகிய பர்த்தாக்களைப் போலவே பர்த்தாவையே முக்கியமாகச் சொல்லியிருப்பதும், பர்த்தாவையே காரணமாகச் சொல்லியிருப்பதும் பொருந்தும்.]

மேற்கண்ட ஸ்ரீ ஸூக்தியில் ஸ்வாமி தேசிகனும் எம்பெருமானுக்கே முக்ய ஜகத் காரணத்வத்தை இசைகிறாரேயொழிய பிராட்டிக்கு அல்ல என்பதும் தெளிவாகிறது.

ஹ. ப்ரியா : பக்கம்-13 : லக்ஷ்ம்யா: நித்ய ஸ்வயம் வரபதி: ஸ்ரீபதி: என்று பகவத் குண தர்ப்பணத்தில் ஸஹஸ்ர நாமத்தில் ஒன்றான ஸ்ரீபதிநாம வ்யாக்யானம். இப்படி பரமனை உனது ஸங்கற்பத்தால் பதியாக்கிக் கொண்டதால் அவன் சேஷியாய் (பதி) நின்று பரிகரமாகிறான் என்று இதற்குப் பொருள். இதனால் இவளுக்கு சேஷபாவம் இவளுடைய ஸங்கற்பாதீனமேயன்றி இயல்பானதன்று என்று ஸ்ரீபட்டரும் கூறியபடி.

மறுப்பு : இப்படிக்கொள்வது பட்டர் அருளியுள்ள "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி" என்று தொடங்கும் ஸ்ரீகுணரத்நகோஶ ஶ்லோகத்திற்கும், மற்றும் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் அவர் காட்டியுள்ள பல நிர்வாஹங்களுக்கும் முரண்பட்டதாகையாலே அநாதரிக்கத் தக்கது. பட்டர் திருவுள்ளத்திற்குச் சேராது. இதை 'ஸ்ரீத: ஸ்ரீஶ: ஸ்ரீநிவாஸ:' என்று தொடங்கும் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஶ்லோகம் 65-ன் பாஷ்யத்தை முழுவதுமாக எடுத்துக்காட்டி, பின்வரும் பகுதிகளில் விளக்கியுள்ளேன். ஆதலால் பதி பாரார்த்யம் செயற்கையானது என்று கூறுவது பட்டருடைய ஸ்ரீஸூக்திகளுக்குச்சேராது. 'பதியினுடைய பத்னி விசிஷ்டத்வமும ஸர்வஸ்வாமிநியினுடைய பதி பாரார்த்யமும் நித்யமாய் நிற்கையாலே' என்று தேசிகன் அருளியுள்ளதற்கும் விருத்தமாகும்.

ஹ.ப்ரியா பக்கம்-14: பகவத்குண தர்ப்பணத்தில் ஸஹஸ்ரநாமங்களில் ஒன்றான ஈஶாந பதத்திற்கு வ்யாக்யானத்தில் 'ஈச்' பதத்தின்மீது

http://acharya.org

தாச்சில்யே சாக்ஷ் ப்ரத்யயம் வந்து 'ஈசான' என்று உருவாகியிருப்பதால் இயல்வான ஐச்வர்யமுடையது என்பது பொருள். அநந்யாதீனத்வம் சொன்னதாகிறது என்று பட்டர் கூற்று. இதன்படி மாதவ பத வ்யாக்யானத்தில் ஈசாந ச்ருதியைக் கொண்டு 'அஸ்யா: நிருபாதிக பாரமைச்வர்யாதி' என்று அவளுடைய ஸம்ருத்தியை நிஷ்கர்ஷித்தார்.

மறுப்பு : 'மாதவ' நாம வ்யாக்யானத்தில் 'அஸ்யேசானா த்வஜதோ விஷ்ணுபத்நீ' 'ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்னும் ப்ரமாணங்களை உதாஹரித்து 'அஸ்யா: ஸ்வரூபவத் நித்ய-நிர்மல-ருபத்வம் நிருபாதிக பாரமைச்வர்யாதி ஜகந் மாத்ருத்வம்' என்று கூறிய பட்டர் அதற்கான காரணம் யாது என்பதற்கும் அதிலேயே தொடர்ந்து "ஔத்பத்திகோ பகவத் ஸம்பந்தோ நித்யாநபாயஸ்ச இத்யாதி தத்வபரேஷு சாஸ்த்ரேஷு அமர்யாதம்" [இயல்பான பகவத் ஸம்பந்தத்தினால் பகவானைவிட்டு என்றும் பிரியாமல் இருப்பவள் என்று சாஸ்த்ரங்களில் கூறப்படுகிறது.] என்று அருளிச் செய்துள்ளதால் பதி-பத்நீ ஸம்பந்தம் செயற்கையானது என்று கூறும் வாதம் அடியோடு தள்ளப்படுகிறது. ஸ்வாமி தேசிகனும் தமது ஸ்ரீஸ்துதியில் "அஸ்யேசானா த்வமஸி ஜகத: ஸம்ச்ரயந்தீ முகுந்தம்" [நீ எம்பெருமானை அடைந்தவளாயிருக்கையாலே, இந்த ப்ரபஞ்சத்திற்கு ஈச்வரியாக இருக்கின்றாய்] என்று அருளியிருப்பதால் பகவானுக்கு வசப்பட்டவள் என்றும் அவனை ஆச்ரயித்து ஸத்தை பெற்றிருப்பவள் என்றும் உணர்த்தியுள்ளார்.

இனி பிராட்டி விஷயமாக பட்டரின் உண்மையான அபிப்ராயம் என்ன என்பதை விவரிக்கின்றேன்.

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்—65-வது ச்லோகம் :

ஸ்ரீத₃: ஸ்ரீச: ஸ்ரீநிவாஸ: ஸ்ரீநிதி₄: ஸ்ரீவிபா₄வந: ।
ஸ்ரீத₄ர: ஸ்ரீகர: ச்ரேய:ஸ்ரீமாந் லோகத்ரயாச்ரய: ॥

612-வது திருநாமம்: ஸ்ரீத₃:

பிராட்டிக்கும் **'ஸ்ரீ'** என்னும் பெருமையைக் கொடுப்பவர். பிராட்டிக்கு உயிரானவர். 'நித்யநூதன-நிர்வ்யாஜ ப்ரணயரஸச்ரியம் தஸ்யை த₃தா₃தீதி ஸ்ரீத₃:தஸ்யா: ஜீவாது: இத்யர்த்த₂:' [எப்போதும் புதுமையுடனும், எந்தக் காரணமும் இல்லாமலும் தனது அன்பாகிற செல்வத்தைப் பிராட்டிக்கு அளிப்பவர். பிராட்டியினுடைய ஸத்தைக்குக் காரணமானவர்.]

http://acharya.org

தச்ச்₁ரயணோந ஹி ஸா ஶ்ரீ: நிருச்யதே।
'ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ₄!
முஹூர்த்தமபி ஜீவாவ: ஜலாத் மத்ஸ்யாவிவோத்₃த்₄ருதௌ॥

இதி தஸ்யா: ப்ரக்ருதி—என்று பட்டர் பாஷ்யம்.

"ந ச ஸீதா" என்ற ஶ்ரீராமாயண ஶ்லோகத்திற்குப் பொருள்:—[ரகு குலத் தோன்றலே! உம்மோடு கூடியிருக்கப்பெறாத ஸீதாதேவி பிழைக்கமாட்டாள். (உம்மைப்பிரிந்த) நானும் பிழைக்கமாட்டேன். ஒருகால் பிழைத்தோமாகில் ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மீன்கள் போலே சிறிதுநேரமே உயிர் வாழ்வோம்.] இதற்குப் பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை தமது தனிஶ்லோக வ்யாக்யானத்தில் "தேவரையொழிந்தவன்று பிராட்டியும் உள்ளாகாள். அடியேனும் உளனுகேன். தேவரையொழிந்தவன்று ஜீவிக்குமதுதானில்லை" என்று வ்யாக்யானம் அருளியுள்ளதால் பிராட்டி பகவானை ஆச்ரயித்து ஸத்தை பெறுபவள் என்பது காட்டப்பட்டது.

613. **ஶ்ரீஶ:**— பிராட்டிக்கும் ஈச்வரன். 'ஶ்ரிய: ஶ்ரீஶ்ச ப₄வே த₃க்₃ர்யா கீர்த்தி:' (**ஶ்ரீராமாயணம்**) (திருவுக்கும் திருவாக விளங்குபவன்) 'தஸ்யா அபி தத₃த்வ நித₃நாத்: **ஶ்ரீஶ:**' லக்ஷ்மீதேவிக்கும் செல்வமளிப்பவளாயிருப்பதற்குக் காரணமாயிருப்பதால் **ஶ்ரீஶ:** எனப்படுகிறான்.

இதனையே கூரத்தாழ்வானும் தமது **ஶ்ரீ**வைகுண்டஸ்தவம் ஶ்லோகம் 29-ல்,

யஸ்யா; கடாக்ஷம் அனுக்ஷணம் ஈச்வராணும்
ஐச்வர்ய ஹேதுரிதி ஸர்வ ஜனீனமேதத்।
தாம் ஶ்ரீரிதி த்வது₃பஸம்ச்ரயணாத் நிராஹு:
த்வாம் ஹி ச்ரிய: ச்ரியம் உதா₃ரஹுருதா₃ரவாச:॥

[எந்தப் பெரியபிராட்டியின் திருக்கண் நோக்கானது ஈச்வரன் என்று பெயர் பெற்றவர்களுக்கு ஒவ்வொரு கணமும் செல்வச் செழிப்புக்குக் காரணம் என்று இது எல்லோரும் அறிந்ததோ. அந்தப் பெரியபிராட்டியார் உம்மை ஆச்ரயித்ததன் காரணமாக '**ஶ்ரீ**' எனப்படுவதாக விளக்கிக் கூறுகின்றனர். மஹாத்தான வாக்குவன்மை படைத்தவர்கள் உம்மையே திருவுக்கும் திருவாகக் கூறுகின்றனர்.] என்று இவ்வர்த்தத்தை நிலை நாட்டினர்.

614. **ஶ்ரீநிவாஸ:** பிராட்டிக்கு ஆதாரமானவன். 'தி₃வ்யவல்ல்யா இவ கல்பத்₃ரும: தஸ்யா நித்யோபக்₄ந: ஶ்ரீநிவாஸ:' [கொடியானது

http://acharya.org

கற்பக மரத்தைத் தழுவி நிற்பதுபோல் பிராட்டிக்கு எப்போதும் ஆதாரமாக விளங்குபவர் ஆதலால் ஸ்ரீநிவாஸன் எனப்படுகிறான்.]

615. ஸ்ரீநிதி₄: பிராட்டிக்கு இருப்பிடமானவன் 'ரத்நமஞ்ஜூஷ இவ மஞ்ஜூஷாயாம் ஸ்ரீ: அஸ்மின் நிஹிதா இதி ஸ்ரீநிதி₄:' [விலையுயர்ந்த ரத்னமானது எப்படிப் பேழையில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறதோ அதுபோல் பிராட்டிக்கு இருப்பிடமானவன் பகவான். ஆதலால் ஸ்ரீநிதி₄: எனப்படுகிறான்.]

616. ஸ்ரீவிபூ₄ாவந: பிராட்டியினுல் பெருமை பெறுபவன். 'ஸைவ அஸ்ய விபூ₄ாவநீ: ப்ரகர்ஷோபப்₃யா ஹேது: இதி ஸ்ரீவிபூ₄ாவந:' 'அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா' [ஸ்ரீராமா] [ஜநகராஜன் திருமகளான அந்த ஸீதை எவனுடையவளோ, அந்த ராமனுடைய தேஜஸ்ஸானது அளவிடமுடியாதது.] என்று கூறுவதன் மூலம் பிராட்டி எம்பெருமானுடைய உடைமை என்பதும், பகவானுக்கு இயல்பான ஶேஷபூதை என்பதும், ஸ்வரூபநிரூபகபூதையாய்க் கொண்டு எம்பெருமானுக்கு அதிஶயத்தை உண்டு பண்ணுபவள் என்பதும் அறிவிக்கப்படுகிறது.

617. ஸ்ரீத₄ர: பிராட்டியைத் தாங்குபவன் (தரிப்பவன்). 'தாம் ரத்நமிவ அர்சிஷம், புஷ்பமிவ ஸௌரப்ரம், இந்துமிவ சந்த்ரிகாம், அம்ருதமிவ ஸ்வாது:தாம் ஔத்பத்திகேந ஸம்பந்தே₄ந த₄ரதீதி ஸ்ரீத₄ர:' [ரத்நம் ஒளியைப் போலவும், புஷ்பத்தை நால் போலவும், சந்திரன் நிலவொளியைப் போலவும், அம்ருதம் இனிமையைப் போலவும் தனது இயற்கையான ஸம்பந்தத்தினுல் பிராட்டியை தரிக்கிருனகையாலே ஸ்ரீதரன் எனப்படுகிறான்.]

மாத₄வ: என்கிற திருநாமத்திலும் 'ஔத்பத்திகோ பகவத் ஸம்பந்த₄:' (இயற்கையான பகவத் ஸம்பந்தம்) என்றே அருளிச் செய்து இருப்பதால் பதி-பத்நீ ஸம்பந்தம் செயற்கையானது என்கிற வாதம் பட்டரால் அடியோடு புறக்கணிக்கப்படுகிறது.

618. ஸ்ரீகர: தனக்கேற்றவாறு பிராட்டியையும் தனது ஸங்கல்பத்தால் வ்யூஹாவதாரங்களில் அவதரிக்கச் செய்பவன் 'தாம் பரத்வே இவ வ்யூஹாவதாரேஷ்வபி ஸ்வாநுரூபாம் கரோதி இதி ஸ்ரீகர:' [வ்யூஹாவதாரங்களில் தனக்கு அநுரூபமாகப் பிராட்டியையும் அவதரிக்கச் செய்பவன். ஆதலால் பகவான் ஸ்ரீகர: எனப்படுகிறான்.] இதனுல் எம்பெருமானுல் நியமிக்கப்படுபவள் பிராட்டி என்பது அறிவிக்கப்படுகிறது.

http://acharya.org

619. ஶ்ரேய:ஸ்ரீமான் ஶ்ரேயஸ் எனப்படும் பிராட்டியைத் தன்னிடம் கொண்டவன். '**ஶ்ரேயஸே—ஸர்வ புருஷார்த்தாய ஶ்ரயணீயா ஸ்ரீ: ஶ்ரேயஶ்ஸ்ரீ:** ஸா அஸ்ய நித்ய யோகி₃னீ இதி **ஶ்ரேய: ஸ்ரீமான்'** எல்லா புருஷார்த்தங்களையும் அடைவதற்கு ஆஶ்ரயிக்கத் தக்கவள் பிராட்டி. அப்படிப்பட்ட பிராட்டி பகவானை விட்டுப் பிரியாமல் அவனை ஆஶ்ரயித்து இருக்கிறாள். '**ஶ்ரியம்** லோகே தே₃வஜுஷ்டாம் உதா₃ராம்' [**ஸ்ரீ**ஸூக்தம்] [தேவனை **ஹ**ரியோடு சேர்ந்திருப்பவளும், வண்மை மிக்கவளுமான **ஸ்ரீ**தேவியை.]

920. லோகத்ரயாஶ்ரய: மூவுலகத்தினராலும் ஆஶ்ரயிக்கப்படுபவன். '**ஸஹ** தயா ஜக₃ன்மாத்ரா பித்ருவத்-**ஸர்வாஶ்ரயோ** லோகத்ரயாஶ்ரய:' யதா₂—'த்வம் மாதா ஸர்வ லோகானாம் தே₃வ தே₃வோ **ஹ**ரி: பிதா ॥ [வி.பு.] [எல்லா லோகங்களுக்கும் நீ தாய்; தேவதேவனான **ஹ**ரி தந்தை]

இவற்றில் '**ஸ்ரீ**த₃:' என்னும் திருநாமத்தால் விசேஷணமான பிராட்டி எம்பெருமானை ஆஶ்ரயித்து ஸத்தை பெறுபவள் என்பதும், '**ஸ்ரீஶ:**' என்னும் திருநாமத்தால் பிராட்டிக்கும் ஸ்வாமியாய் விளங்குபவன் என்பதும், '**ஸ்ரீ**நிவாஸ:' என்னும் திருநாமத்தால் பிராட்டி பகவானை எப்போதும் ஆஶ்ரயித்து இருப்பவள் என்பதும், 'ஸ்ரீநிதி₄:' என்னும் திருநாமத்தால் பிராட்டிக்கு இருப்பிடமானவன் என்பதும், '**ஸ்ரீ**விபா₄வந:' என்னும் திருநாமத்தால் ஸ்வரூப நிரூபக பூ₄தையாய் இருந்து கொண்டே அதிஶயத்தை ஏற்படுத்துபவள் என்பதும், பிராட்டி எம்பெருமானுக்கு உடைமையாய், சேஷபூதையாய் இருப்பவள் என்பதும், '**ஸ்ரீ**த₄ர:' என்னும் திருநாமத்தால் பிராட்டியை எம்பெருமான் தனது ஸங்கல்பத்தால் தரிப்பவன் என்பதும், '**ஸ்ரீ**கர:' என்னும் திருநாமத்தால் பிராட்டியையும் நியமிப்பவன் எம்பெருமான் என்பதும், 'ஶ்ரேயஶ்**ஸ்ரீ**மான்' என்னும் திருநாமத்தால் பிராட்டியைத் தனது செல்வமாகக் கொண்டவன் என்பதும், லோகத்ரயாஶ்ரய: என்னும் திருநாமத்தால் எம்பெருமான் முக்ய உபாயமாயிருப்பவன் என்பதும் பட்டரால் விளக்கப்பட்டது.

எம்பெருமானார் வகுத்த ஶரீர லக்ஷணத்தையே பிராட்டியிடமும் உள்ளதாக பட்டரும் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்பது இனி நிரூபிக்கப்படுகிறது. திருவாய்மொழி முதல்பத்து 1-1-7 பதிகத்தில் அடையவளைந்தான் அரும்பத உரையில்,

http://acharya.org

"1. யஸ்ய சேதநஸ்ய யத்₃த்₃ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே₂ நியந்தும் ஶக்யம் தத் தஸ்ய ஶரீரம். 2. யஸ்ய சேதநஸ்ய யத்₃ த்₃ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே₂ த₄ாரயிதும் ஶக்யம் தத்தஸ்ய ஶரீரம். 3. யஸ்ய சேதநஸ்ய யத்₃த்₃ரவ்யம் தச்சே₂ஷதைக ஸ்வருபம் தத் தஸ்ய ஶரீரம் என்று மூன்றும் தனித்தனியே—ஒரொன்றே ஶரீர லக்ஷணமாகையாலே இங்ஙனே அந்வயித்துக்கொள்வது. ப்ருத₂க் ஸ்தி₂த்யநர்ஹாத₄ாராதே₄ய ப₄ாவ: நியந்த்ரு நியாம்ய ப₄ாவ: ஶேஷ ஶேஷிப₄ாவஶ்ச என்கிறது "யஸ்ய சேதநஸ்ய" இத்யாதி வாக்யத்தி னுடைய விவரணம்" என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இதன்படி இந்த மூன்று லக்ஷணங்களும் பிராட்டிக்குப் பொருந் தும். எங்ஙனேயெனில், 1. ஸ்ரீநிவாஸ: ஸ்ரீத₄ர: என்னும் திருநாமங் கள் பிராட்டிக்கு எம்பெருமான் ஆதாரமாக விளங்குகிறன் என்பதை வலியுறுத்துகின்றபடியால் ஆத₄ார ஆதே₄ய ப₄ாவம். 2. ஸ்ரீகர: என் னும் திருநாமம் எம்பெருமானுல் நியமிக்கப்படுபவள் பிராட்டி என் பதை வலியுறுத்துகின்றபடியால் நியந்த்ரு நியாம்ய பாவம். 3. ஸ்ரீஶ: ஶ்ரேயஶ் ஸ்ரீமான் என்னும் திருநாமங்கள் பிராட்டிக்கும் ஸ்வாமியாக விளங்குபவன் என்பதை வலியுறுத்துகின்றபடியால் சேஷசேஷி ப₄ாவம். ஆக பிராட்டி எம்பெருமானுக்கு சரீரம் என்று மிகத்தெளி வாகக் காட்டினுர் பட்டர்.

ஆக பிராட்டியினுடைய ஈச்வரத்வம் பத்நீத்வ ப்ரயுக்தம் என்பதே அனைத்துப் பூர்வாசார்யர்களுடைய ஒருமித்த கருத்து என்பது நன்கு நிருபிக்கப்பட்டது.

[ஸுதர்சனர் குறிப்பு :— இக்கட்டுரையால் நா. வ. வின் கட் டுரையின் பொய்ம்மை நன்கு விளக்கப்பட்டது. மனச்சாட்சியிருந்தால் ஹ.ப்ரியா இதைவெளியிட்டு பதில் உரைக்கட்டும். இதுபோன்ற பல கட்டுரைகளை ஜகந்நாதன் ஸ்வாமி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவுக்கும் எழுதி யுள்ளார். தேசிக ஸம்ப்ரதாயஸ்தராயிருந்தும் தம் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்கள் செய்யும் அக்ரமத்தை, பலப்ரமாணங்களைக் காட்டி அஞ்சாமல் கண்டிக்கும் இவருக்கு "மத்₄யஸ்த₂மஹநீயர்" என்னும் விருதை அளித்து மகிழ்கிறோம்.]

http://acharya.org

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா—விக்ரம-வூ ஆனி-மீ அருள்மொழி

62. இதில் (கத்யத்தில்) ஸ்வாமி எம்பெருமானுர் தன்னை ரக்ஷித்தருள வேண்டும் என்று எம்பெருமானைப் பிரார்த்திக்க அவனும் இதற்கு உரிய காரணம் ஏதாவது உண்டா? என்று கேட்க, ஸ்வாமி எம்பெருமானுரும் கடைசியில் தக்கதொரு (காரணம்?) காட்ட அதுவே காரணமாகக் கொண்டு எம்பெருமான் ஸ்வாமி எம்பெருமானுரை ரக்ஷித்தருள்கிறுன் என்பதால் நிர்ஹேதுகமாக எம்பெருமான் ரக்ஷிக்கமாட்டான்—காரணமின்றி எம்பெருமான் ரக்ஷிக்க மாட்டான்—காரணம் கொண்டுதான் ரக்ஷிப்பான் எம்பெருமான் என்ற ஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்பட்டதாகிறது இங்கு என்பதை நல்லோர் அறியவேண்டும். இதுவரை பெரியவாச்சான்பிள்ளை அருளிய உரையில் உள்ள விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

"வக்தாரம் மாம் தாரய" என்னும் தொடரால், "வெறும் வார்த்தையே என்னிடம் உள்ளது" என்று எம்பெருமானுர் தெளிவாக அருளிச்செய்கையால், "ஶரணுகதி உபாயமாகாது அதிகாரி விஶேஷணமே ஆகும்" என்று அவருடைய கத்ய ஸ்ரீஸூக்தியிலிருந்தே விளங்குகிறது. ஒருவன் மற்றொருவனுக்குப் பலனளிப்பது இரண்டு காரணங்களால் ஆகலாம். வேலை செய்பவனுக்குக் கூலி கொடுக்குமிடத்தில் அவன் செய்தவேலை உபாயமாகிறது. கூலி அந்த உபாயமாகிற காரணத்தாலே பெற்ற பயன் ஆகிறது. ஒருவன் பசியுடையவனுயிருப்பதைப் பார்த்து ஒரு தார்மிகன் அவனுக்குச் சோறு போடுகிறுன். இங்கும் பசியுடைமையே அவன் பெறும் சோற்றுக்குக் காரணமாகிறது. ஆனுலும் அது அவனுக்குச் சோற்றைப்பெறும் தகுதியைக் காட்டும் அதிகாரி விஶேஷணமாகுமேயொழிய, அவன் பெறும் சோற்றுக்கு உபாயமாகாது என்று எவர்க்கும் விளங்கும். ஆகையால், காரணம் என்று வருமிடங்களிலெல்லாம் உபாயம் என்று பொருள் கொள்வது தவறு. பெரியவாச்சான்பிள்ளை தமது திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களிலும், ஸ்தோத்ர கத்ய வியாக்யானங்களிலும், பரந்த ரஹஸ்யம், மாணிக்கமாலை முதலான ரஹஸ்ய நூல்களிலும், 'ஶரணுகதி உபாயமாகாது—அதிகாரி விஶேஷணமேயாகும்' என்று

http://acharya.org

மிகத்தெளிவாக நிரூபித்திருக்கிறார். அப்படியிருக்கும்போது அவருடைய ஸ்ரீஸூக்திகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு, அவருடைய மற்ற பல ஸ்ரீஸூக்திகளுக்கு முரணாக, அவப்பொருள் கூறுவது மாநஸஸாக்ஷியுள்ளவர்கள் செய்யும் காரியமல்ல. நம்முடைய ஶரணாகதி கத்3ய வ்யாக்யானத்தில் "வக்தாரம் மாம் தாரய" என்ற இடத்தின் வ்யாக்யானத்திற்கு விவரணம் செய்யும்போது 12-வது சூர்ணையின் இறுதியிலும் (பக்கம்-185), 15-வது சூர்ணையின் அவதாரிகையிலும் (பக்கம் 194-195) இந்த வாதம் விரிவாகக் கண்டிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

திருக்கோட்டியூர் மாதவன் ஸ்வாமி, சென்னை-4.

63. விக்ரம-ஆடி ஹயக்ரீவப்ரியா (15—7 - 2000) இதழில் திருமலையில் பரகால மடம் நிர்மாண வேலை பற்றிய செய்தியில், "லக்ஷ்மீ ஹயக்ரீவன் ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸந்நிதி" என்று தலைப்புக் கொடுத்து, "இந்த ஸந்நிதி தி. தி. தேவஸ்தானத்தாரால் கட்டப்பட்ட உள்ளது. திருமலை கோயி(லி)ல் பலகாலம் பரகால மடத்தின் வைதீக நிர்வாகம் இருந்ததாக நிர்வாக அதிகாரி பேசினார்" என்று செய்தி வந்துள்ளது. தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பெரிய கேள்வி அப்பன் ஜீயர் ஸ்வாமி, சின்ன ஜீயர் ஸ்வாமி ஆகியவர்கள் மட்டுமே திருமலைக்கோயில் வைதிக நிர்வாஹத்தைச் செய்து வந்ததாக உள்ள வரலாற்று நூல்களில் கண்ட உண்மைக்கு மேற்படி செய்தி முரணாகவுள்ளது. இது குறித்து விமர்சிக்கக் கோருகிறேன்.

திருமலையில் ஸேவார்த்திகளின் ஸௌகர்யத்திற்காக, பரகாலமடம், அஹோபிலமடம், மத்வமடங்கள், சங்கரமடம் போன்றவை நிறுவப்பட்டு அவற்றில் அவரவர்களுடைய திருவாராதன விக்ரஹங்களும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் சாலைகளை விரிவுபடுத்தும்போது இடிக்கப்பட்ட இந்த மடங்களை வேறு இடங்களில் கட்டித் தருகிறார்கள். அவற்றில் முன்பிருந்த ஆராதன விக்ரஹங்களும் இடம் பெறுகின்றன. எனவே இவற்றை

http://acharya.org

மடங்களின் பெயரால் குறிப்பிடவேண்டுமேயல்லாமல் "லக்ஷ்மீஹயக்ரீவன் ஸந்நிதி, வேதாந்த தேசிகன் ஸந்நிதி" என்று குறிப்பிடக்கூடாது. இல்லையெனில் "சந்த்ரமௌலீச்வர ஸந்நிதி" போன்ற வியவகாரங்களும் எழக்கூடும். இதுபற்றியும் திருமலை வைதிக நிர்வாகத்தில் பெரிய ஜீயர், சின்ன ஜீயர் ஆகியோருக்கு மட்டுமே தொன்று தொட்டுப் பங்கிருப்பதையும், திருமலைகோயில் விஷயங்களில் பழுத்த அனுபவமுள்ளவரும், பரம ப்ராமாணிகருமான ஸ்ரீ உ வே T A கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி விரிவாக விளக்கி எழுதியுள்ள கட்டுரை பாஞ்சசன்னியம், விக்ரம-ஆவணி (ஆகஸ்ட்-2000) இதழில் வெளியாகியுள்ளது. அன்பர்கள் அங்கு கண்டு கொள்வார்களாக.

K ஸௌந்தரராஜன். நிர் 2, கரியமாணிக்கம், திருச்சி.

64. திருவானைக்கோவில் ஜம்புகேஶ்வரரை ஸ்ரீராமபிரான் மற்றும் பராசர முனிவர் வழிபட்டதாக ஹிந்து (7—7—2000) வில் வெளியான கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரம் ஏதேனும் உண்டா?

'ஸ்ரீராமன் இராமேஶ்வரத்தில் லிங்க பூஜை செய்தான்' என்று, வால்மீகி ராமாயணத்திலோ, கம்பராமாயணத்திலோ மற்ற பழைய இலக்கியங்களிலோ காணப்படாத ஒரு கட்டுக்கதையைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இவ்விஷயத்தை "ராமலிங்க ப்ரதிஷ்டை" என்னும் நமது வெளியீட்டில் ராமேச்வரம் தேவஸ்தான வழக்கறிஞராக இருந்த ஸ்ரீ S T சடகோபன் என்ற இராமநாதபுரம் அட்வகேட் விரிவாக நிரூபித்திருக்கிறார். இதேபோல் ராமன் கும்பகர்ணனைக் கொன்ற பாபம் போவதற்காக, திருவானைக்கோயிலில் வழிபட்டான் என்றதொரு பொய்யையும் கூறி வருகிறார்கள். தாங்கள் வழிபடும் சிறுதெய்வங்களுக்குப் பெருமை சேர்ப்பதற்காக இவர்கள் கூறிவரும் இத்தகைய பொய்

களுக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. நல்லறிவு படைத்தோர் இவை போன்ற பொய்ச்செய்திகளைப் பொருட்படுத்தாமலிருப்பதே சாலச் சிறந்தது.

K A தேவராஜன், சென்னை.

65. "ஹிந்து" பத்திரிகையில் ஸ்ரீகாமகோடி சங்கரமட வ்யாஸ பூஜை பற்றிய விளம்பரத்தில் வெளியிட்டுள்ள ஸ்லோகங்களில் பின்வரும் ஸ்லோகமும் அச்சிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ சிவாசார்ய வர்யாத்யாம் சங்கராசார்ய மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

இந்த ஸ்லோகம் தொன்றுதொட்டு நாம் அநுஸந்தித்து வரும் குரு பரம்பரா ஸ்லோகத்தைக் காப்பியடித்து எழுதியுள்ளதாகத் தோன்றுகிறது. சங்கராசார்யருக்கும் ஸ்மார்த்தர்களுக்கும் நமது பஞ்ச ஸம்ஸ்காரம் மந்த்ரோபதேசம் போன்ற தொடர்பு உண்டா? அவர்களுக்கு ஒரு குருபரம்பரை உண்டா என்பதைத் தெளிவுபடுத்தக் கோருகிறேன்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் உள்ளது போன்ற விலக்ஷணமான குருபரம்பரை சங்கராசார்யர்களுக்குக் கிடையாது. மேலும் வைணவ ஆசார்யர்களும் மடாதிபதிகளும் செய்து வருவதுபோல் பஞ்சஸம்ஸ்காரம் மந்த்ரோபதேசம் போன்ற க்ரியைகளை சங்கராசார்யர்கள் தங்களிடம் வருபவர்களுக்குச் செய்யும் வழக்கமும் இல்லை. ஒ ஸ்லோகமும் பழைய நூல்கள் எதிலும் காணப்படவில்லை. இதிலிருந்து, புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொள்வதைப்போல் வைணவ குருபரம்பரை ஸ்லோகத்தைக் காப்பியடித்து இவர்களும் இப்போது புதிதாக ஒன்றைக் கல்பித்திருக்கிறார்கள் என்பது தெளிவு.

http://acharya.org

திருவெள்ளறை கீழத் திருமாளிகை அம்மாள் ஸ்ரீதிருவேங்கடாசார்ய ஸ்வாமி, 48, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்-620 006.

66. சென்னையிலிருந்து வெளிவரும் "நாவல்லீடர்" இதழ்-77-ல் திரு. பாலகுமாரன் எழுதிய 'காதல் அரங்கம்' என்னும் நாவல் வெளியிடப்பட்டுள்ளது. இது ஜுலை-99-ல் தனிப்புத்தகமாகவும் வந்துள்ளது. "உறங்காவில்லிதாசன் என்கிற இராமானுசரின் சீடனைப் பற்றியது இந்தக் காதல் அரங்கம்" என்னும் அறிமுகத்துடன் உள்ள இந்நூலில் அபத்தக் கருத்துக்களே நிரம்பியுள்ளன. உதாரணத்திற்கு ஒரு சில :— "அரங்கன் கோயிலுக்குள் நான்கு பெண் பதுமைகளால் சூழப்பட்ட கருப்பண்ணசாமி சன்னிதி அரங்கனுக்குக் காவலாய் உள்ளது" (பக்.-24). (2) "திருவானைக்கோவில் அகிலாண்டேஸ்வரியை நேசிப்பதுபோல, தாயுமானஸ்வாமியை நேசிப்பது போல, வெக்காளியம்மனின் கருணை மிகுந்த முகத்தை நேசிப்பதுபோல, வயலூர் சுப்ரமணியனை நேசிப்பது போல, அரங்கரே! உம்மையும் நேசிக்கிறேன் என்றான் பிள்ளையுறங்காவில்லிதாசன்" (பக்.-58). (3) "அரங்கன் சிலைக்குக் கீழ் உள்ள கல்லை நகர்த்தினால் கீழே படிகள் போகின்றன. அங்கே சட்டை முனியின் சமாதி உள்ளது. அதனால்தான் திருவரங்கம் பொலிவோடு விளங்குகிறது; அவர் சூட்சும ரூபத்தில் ஸ்ரீரங்கம் முழுவதும் அலைகிறார்" (பக். 81) இதற்கு ஆதார நூல்களில் ஒன்றாகத் தங்களுடைய நாலாயிரதிவ்யப்ரபந்தமும், எழுத உதவியவர்களாக ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யர், ஸ்ரீரங்கம் B H E L முரளிபட்டர் ஆகியோருடைய பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இது பற்றி விளக்க வேண்டுகிறேன்.

இந்த நூலில் காணப்படும் விஷயங்கள் பலவும் பொய்யானவையாகவும், வரலாற்று உண்மைகளுக்கு முரண்பட்டவையாகவும் உள்ளன. ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், வார்த்தாமாலை, திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள் முதலான பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பூர்வாசார்ய க்ரந்தங்களிலும், 'ப்ரபந்நாம்ருதம்' போன்ற பிற்கால நூல்

http://acharya.org

களிலும், பிள்ளையுறங்காவில்லி தாசரின் வரலாறு விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் அவர் மறந்தும் புறந்தொழாத பரம ஸ்ரீவைஷ்ணவராய், புலால் மறுப்பு முதலான அடிப்படை வைணவ நெறிகளைப் பின்பற்றியவராய், ஸ்ரீராமாநுஜருக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவராகவே காட்டப்படுகிறார். இவரது நூலில் அவர் கண்ட கண்ட தெய்வங்களையும், அக்காலத்தில் இல்லாத வெக்காளியம்மன் போன்ற கோயில்களிலும் வழிபட்டதாகவும் புலாலுண்பதாகவும் எழுதியிருப்பது பிரம்மாண்டப் பொய்யாகும். இவர் எழுதியுள்ள ஸ்ரீரங்கம் கோயிலைப் பற்றிய மற்ற அனைத்து விஷயங்களும் பொய்யானவையே என்பதை இன்றும் திருவரங்கம் கோயிலுக்கு வரும் எவரும் எளிதில் உணரலாம். ஆயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த வரலாற்று நாயகரான பிள்ளையுறங்காவில்லிதாஸரைப் பற்றி இப்படி இவர் பொய்ந்நூலை எழுதியதற்கு இவர் நிபந்தனையற்ற மன்னிப்புக்கேட்டுத் தம் இதழில் வெளியிடவேண்டும்; அல்லது நம்முடைய இந்த விமர்சனத்தைத் தம் மாத நாவலில் வெளியிட்டு, தக்க ஆதாரங்களைக் காட்டிப் பதிலுரைக்க வேண்டும். இவருடைய பொய்களுக்கு நம்முடைய நூலை ஆதாரமாகக் காட்டியிருப்பதும், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யரையும், திருவரங்கம் முரளிபட்டரையும் இந்நூல் எழுத வழிகாட்டியாகக் குறித்திருப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் தமது "பாஞ்சசன்னியம்" பத்திரிகை 16-வது இதழில் இவரது நூலைக் கண்டித்திருக்கிறார். ஸ்ரீமுரளிபட்டரும் இவரது பொய்யுரைகளைக் கண்டிப்பார் என்று நம்புகிறோம். பாலகுமாரன் மௌனமாயிருந்தால், நம் அன்பர்களில் சிலர் நேரில் சென்று இவரிடம் விளக்கம் கேட்டு நமக்கு எழுதலாம்.

K சௌந்தரராஜன், No. 2, கரியமாணிக்கம்.

67. 12—10—2000 ஹிந்து பத்திரிகை (பக். 10) யில் ராம நாமத்தைப் பற்றி திரு. B. சுந்தர்குமாரின் சொற்பொழிவுச் சுருக்கம் வெளியாகியுள்ளது. அதில், அவர் 'ரா' என்னும் எழுத்து அஷ்டாக்ஷரத்திற்குப் பொருளைத் தருகிறது என்றும், 'ம' என்னும்

http://acharya.org

எழுத்து பஞ்சாக்ஷரத்தில் முக்கியமானது என்றும், அதனால் 'ராம' என்னும் மந்திரம் சைவர்களுக்கும், வைஷ்ணவர்களுக்கும் மந்திர மாகிறது என்றும் உள்ளது. இதை விமர்சிக்கவும்.

அஷ்டாக்ஷரத்தில் உள்ள 'ரா' மட்டுமல்லாமல் ஒவ்வொரு எழுத்துமே அதற்குப் பொருளைத் தருகிறது என்பதை ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்கள் விரிவாகத் தங்கள் கிரந்தங்களில் வெளியிட்டிருக்கிறார்கள். அதுபோலவே பஞ்சாக்ஷரத்திலும் சைவர்களின் கருத்துப்படி 'ம' மட்டுமல்லாமல் எல்லா எழுத்துக்களும் முக்கியமானவையே. ஆகவே 'ம' என்னும் எழுத்து மட்டும் முக்கியமானது என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை. அஷ்டாக்ஷரத்தை உண்மையான சைவர்களும் பஞ்சாக்ஷரத்தை உண்மையான வைஷ்ணவர்களும் ஆதரிப்பதில்லை. ஆகையால், இக்காரணத்தால் சைவர்களும் வைஷ்ணவர்களும் 'ராம' மந்திரத்தை ஆதரிக்கிறார்கள் என்று கூறுவது தவறு. உண்மையான சைவர்கள் ராம மந்திரத்தை ஆதரிப்பதேயில்லை. வைஷ்ணவத்திலும் சேராமல், சைவத்திலும் சேராமல் இரண்டுங்கெட்டான் நிலையிலிருக்கும் சமரசவாதிகளாக மாறிவிட்ட அத்வைதிகளே இப்படிக் கூறி வருகின்றனர். இது பொருந்தாது என்பது நமது ஸுதர்சனர் பதிலில் முன்னமே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் 'இவர் ஆதிசங்கரர் ஆறு மதங்களை ஸ்தாபித்தார்' என்று பேசியுள்ளது சங்கரருடைய பாஷ்யங்களுக்கு விருத்தமானது. இதை நாம் நம்முடைய "சங்கரரும் வைணவமும்" என்னும் நூலில் அசைக்கமுடியாதபடி நிலைநாட்டியிருக்கிறோம். அதற்கு இன்றளவும் எவரும் பதிலளிக்க இயலவில்லை.

T. V. நந்தகுமார், 154, மேலச்சித்திரை வீதி ஸ்ரீரங்கம்-620006.

68. 11—10—2000 துக்ளக் இதழில் அதன் ஆசிரியர் சோ. ராமசாமி எழுதிவரும் 'வால்மீகி ராமாயணம்' கட்டுரையில் பின்வருமாறு வந்துள்ளது—"ராமரின் வேண்டுகோளுக்கு முதலில் செவி சாய்க்காத ஸமுத்ரராஜன் ராமர் அவன் மீது அம்புவிட முற்பட்ட போது அவரைச் சரணமடைந்து 'உன்னுடைய படை கடந்து செல்ல

http://acharya.org

வழி சொல்கிறேன்' என்று கூறியதாகவும் அதன்பின் ஈஸன் உதவி யோடு சேது பந்தனம் பண்ணி, படைகளை இலங்கைக்கு நடத்திச் சென்றதாகவும் வால்மீகி இராமாயணத்தில் உள்ளது. துளசிதாஸர் தம்முடைய இந்தி ராமாயணமான ராமசரிதமானஸத்தில் இந்நிகழ்ச் சியை வால்மீகி ராமாயணத்தில் உள்ளதுபோலவே சொல்லிவிட்டு 'ராமர் அந்த இடத்தில் சிவலிங்கப்ரதிஷ்டை செய்ய விரும்பி மஹ ரிஷிகள் சிலரை அழைத்து வரச்சொல்லி அவர்களைக் கொண்டு அவர்கள் முன்னிலையில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்கி றார்' என்று கூறுகிறார். துளஸிதாஸர் ராமாயணத்தில் கூறுவது போல் வால்மீகி ராமாயணத்தில் கூறப்படவில்லை. ஆனால், யுத்தம் முடிந்து ஸீதையின் அக்னி பிரவேசமும் முடிவடைந்து அவளை யும் அழைத்துக்கொண்டு ராமர் புஷ்பக விமானம் ஏறி அயோத் திக்குத் திரும்பும்போது ஸமுத்திரத்தில் அணைகட்டிய நிகழ்ச்சி யைக்கூறி, 'அதோ அங்கேதான் என்னுடைய படைகள் நிறுத்தப் பட்டிருந்தன. அங்குதான் பாலம் கட்டுவதற்கு முன்பாக பரமசிவன் அருள் புரிந்தார். சேதுபந்தம் என்ற பெயரோடு மூவுலகிலும் பெயர்பெற்று விளங்கப்போகிற இந்த இடம், மிகவும் புனிதமான தாகக் கருதப்படும். எல்லாப் பாபங்களையும் நாசம் செய்யக் கூடிய க்ஷேத்திரமாக இது இருக்கும்' என்று வால்மீகியின் ராமா யணத்தில் ராமர் கூறுவதாக விவரிக்கப்பட்டிருக்கிறது'' என்று. இதுபற்றிய உண்மை நிலையை விளக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீராமபிரான் ராமேச்வரத்தில் சிவலிங்க ப்ரதிஷ்டை செய்தார் என்பதற்கு ஆதி காவியமான வால்மீகி ராமாயணத்திலோ, கம்பராமா யணத்திலோ, ராமனின் வரலாற்றைக் கூறும் ரகுவம்சம் போன்ற பழைய காவியங்களிலோ எந்த ஆதாரமும் கிடையாது. நாயன்மார்

http://acharya.org

கள் காலத்திற்கு அண்மைக் காலத்திலேயே இந்தக் கோயில் கட்டப் பட்ட்து என்பதற்கு, இந்தக் கோயிலைப்பற்றிய குறிப்பு எந்தப்பழைய நூலிலும் இல்லாதிருப்பதே சான்று. ராமநாதபுரம் வழக்கறிஞர் திரு S.T. சடகோபன் எழுதி நம்மால் வெளியிடப்பட்டுள்ள "ராமலிங்க ப்ர திஷ்டை" என்னும் நூலில் இவ்விஷயத்திற்குப் பல ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல் ரூ. 8 விலையில் நமது காரியாலயத் தில் கிடைக்கும். துளசிதாஸர் ஒருசில நூற்றாண்டுகளுக்குள் இருந் தவர். அவர் கூறுவது ராமேச்வரம் ராமரால் பிரதிஷ்டை செய்யப் பட்டது என்பதற்கு ஆதாரமாகாது.

வால்மீகி ராமாயணத்தில் **"அத்ரபூர்வம் மஹாதே₃வ: ப்ரஸாத₃ம் அகரோத் ப்ரபு₄:"** [ரா. யு. 126-22] [முன்பு இந்த இடத்தில்தான் மஹாதே₃வர் எனக்கு அணைகட்ட அனுமதித்து) அருளினர்.] என்று யுத்தம் முடிந்து அயோத்திக்குத் திரும்பும்போது ராமன் புஷ் பக விமானத்திலிருந்து கூறுவதாக உள்ளது. 'சோ' கூறுவதுபோல் பரமசிவன் என்னும் பதம் இந்த ஶ்லோகத்தில் இல்லை. கோவிந்தரா ஜர் தம்முடைய ஸ்ரீராமாயண வ்யாக்யானத்தில் இங்கு மஹாதே₃வ ஶப்₃த₃ம் சிவனைக் குறிக்க முடியாது என்பதற்குப் பல காரணங்களைக் காட்டியிருக்கிறார். அணைகட்டுவதற்கு முன்பு சிவன் அருள் புரிந்ததாக ராமாயணத்தில் இல்லையாகையாலும், ஸமுத்ரராஜன் அணைகட்ட அனுமதித்த விருத்தாந்தமே உள்ளதாகையாலும் இங்கு **"மஹாதே₃வ"** ஶப்₃த₃ம் சிவனைக் குறிக்க முடியாது என்பது வெளிப்படை. மஹேஶ் வர தீர்த்தர் தம்முடைய ஸ்ரீராமாயண வ்யாக்யானத்தில், **"மஹத்"** என்னும் ஶப்₃த₃ம் ஜலத்தைக் குறிக்கும் என்பதற்கு வைஜயந்தீ நிகண்டுவை எடுத்துக்காட்டி, "ஆகையால் இங்கு **'மஹாதே₃வ'** ஶப்₃ த₃ம் கடலரசனாகிய ஸமுத்₃ரராஜனையே குறிக்கும்" என்று நிர்ணயித்திருக் கிறார். இராவணனை வதம் செய்ததால் ஏற்பட்ட ப்ரஹ்மஹத்தி பாபத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காக ராமன் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தான் என்று சைவர்களால் ராமேச்வரத் தல புராணத்தில் கற்பித்து எழுதப்

http://acharya.org

பட்டுள்ளது. அணை கட்டுவதற்கு முன்பே ராவணை வதைத்தால் ஏற பட்ட பாபத்திற்குப் பரிகாரமாக லிங்க ப்ரதிஷ்டை செய்ய முடியா தாகையால் சைவர்களின் கற்பனைக்கு இந்த ஶ்லோகம் ஆதாரமாகாது. பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபா பொன்விழா மலரில் "மஹாதேவ ஶப்தார்த்தம்" என்னும் கட்டுரையில் ஸ்ரீ உ வே சதாபிஷேகம் கோவிந்த நரசிம்மாசார்ய ஸ்வாமி, இங்கு மஹாதேவ ஶப்தம் ஸமுத்ர ராஜனைக் குறிக்குமேயொழிய சிவனைக் குறிக்காது என்பதற்குப் பல ஆதாரங்களைக் காட்டியிருக்கிறார். ஆகையால் "சோ" தனக்கு சிவனிடமுள்ள அபிமானத்தால் 'மஹாதேவ" சப்தத்திற்கு 'பரம சிவன்' என்று பொருள் எழுதியது பொருந்தாது. இந்த மறுப்பு அடங்கிய இதழ் துக்ளக் ஆசிரியருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன், நமது மறுப்புக்களைப் பல சமயங்களில் காணா மலிருந்ததுபோல் இப் பாதம் இருக்கமாட்டார் என்று நம்புகிறோம்.

ஆ. சத்தியநாராயணன். திருக்கண்ணங்குடி.

69. ப்ரபன்னர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் சோதிடத்தில் பற்றுவைக்கலாமா? விவாஹ விஷயங்களில் அதில் முனைப்புக் காட்டுதல் அவசியமா? விளக்கவேண்டுகிறேன்.

சோதிடம் என்பது ஒரு சாத்திரம். ப்ரபன்னர்களுக்கு சாத்திரத்தில் நம்பிக்கை வேண்டுமென்பதால் அவர்கள் அதன்படி நடப்பதில் தவறேதுமில்லை. விவாஹ விஷயங்களில் குடும்ப வழக்கப்படி ஜாதகப் பொருத்தம் பார்ப்பது சாத்திர நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைந்ததாகையால் அதுவும் தவறில்லை. சிலர் ஜாதகம் பார்க்காமல் மனப்பொருத்தத்தைக் கொண்டோ, அல்லது தாயார் பெருமாள் முன்பு பூக்கட்டிப் போட்டு எடுத்து உத்தரவு பெற்றோ விவாஹம் உண்டு.

http://acharya.org

திருவெள்ளறை ஸ்ரீமேலத்திருமாளிகை ஸௌம்ய நாராயணு சார்யர், திருவெள்ளறை.

70. சென்னையிலிருந்து வெளிவரும் "ஹயக்ரீவப்ரியா" [15—11—2000] இதழில் "பிள்ளான் காட்டும் அபூர்வ அநுபவங்கள்" என்னும் கட்டுரையில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது— "பொதுவாக, பிள்ளான் வாக்யவரிகளைச் சிலர் மேற்கோளாக எடுப்பதற்குப் பிரஸக்தி, அவர் பெருமாளுடைய நிர்ஹேதுக க்ருபை பற்றிக் குறிப்பிடுவதுதான். "அவன் நிர்ஹேதுக க்ருபையாலே..." என்ற வரி வரும். இதுகொண்டு பிள்ளானையும் நிர்ஹேதுக க்ருபைக் கக்ஷியில் சேர்த்து விடுவார்கள். ஸ்வாமி தேசிகரே, அவர் வழிவந்தவர்களோ நிர்ஹேதுக க்ருபைக் கக்ஷிக்கு முழுதும் எதிரிகளல்லர். மற்றையோர் தாம் ஸஹேதுக க்ருபையை இல்லை செய்கின்றனர். அது பஹுப்ரமாண விருத்தம் மட்டுமல்ல. இங்கே நன்ருகக் காணலாம்.—"எனக்கு இந்த பாக்யம் கிடைக்க என்ன காரணம் என்ருல் நான் திருமாலிருஞ்சோலைத் திசை நோக்கிக் கைகூப்பினேன்" என்கிருர். பெருமாளுக்கு இருவகை க்ருபைகளும் உண்டு. ஸ்வாமி தேசிகன் ஏற்றதுதான். "பெருமாளுக்கு நிர்ஹேது க்ருபை மட்டுமே. அவன் க்ருபைபெற நாம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை; அப்படிச் செய்ய வேணுமென்ருல் க்ருபை ஸஹேதுகம் என்ருகிவிடும்." இந்த ரீதியில் வாதிடுவது தான் பொருத்தமல்ல. ஆழ்வார் ஏற்க மாட்டார். பிள்ளான் ஏற்கமாட்டார். பின் பிள்ளான் ஆழ்வார் பாசுர உரை வரிகளில், "நிர்ஹேதுக க்ருபையாலே" என்று பிரயோகிக்கிருரே என்று கேட்கலாம்....நமக்குப் பொழியும் பகவத் க்ருபை நம் நோக்கில் என்றுமே நிர்ஹேதுகம்தான். பெருமாள் நோக்கில் அது என்றைக்கும் ஸஹேதுகமாகவே இருக்க வேண்டிவரும்." இதனை விமர்சிக்கக் கோருகிறேன்.

"நமக்குப் பொழியும் பகவத் க்ருபை நம் நோக்கில் என்றுமே நிர்ஹேதுகம் தான். பெருமாள் நோக்கில் அது என்றைக்கும் ஸஹேதுகமாகவே இருக்கவேண்டிவரும்" என்று இவர் எழுதுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஒருபொருள் அனைவர் நோக்கிலும் ஒரு

http://acharya.org

விதமாகவே இருக்க முடியுமேயொழிய ஒருவருடைய நோக்கில் ஒரு விதமாகவும், மற்றவருடைய நோக்கில் அதற்கு நேர் மாருகவும் இருக்கமுடியாது. இரண்டில் ஒன்றுதான் உண்மை நிலேயாக இருக்க முடியும். இவர் சொல்லுவதற்கு நேர் மாருக, பிள்ளான் திருவாய் மொழி "உற்றேன் உகந்து" [10-8-10] பாசுர வ்யாக்யானத்தில் பின்வருமாறு அருளியுள்ளார் :— "எம்பெருமான், ஓர் உத்தரம் காணுமை, "உம்முடைய திறத்தில் நான் செய்த செயலெல்லாம் நீர் சொன்னபடியே நிர்ஹேதுகமாகவே செய்தேன்; அது நிற்க. இனி நான் செய்யவேண்டுவதென்? என்ன" —என்று எம்பெருமானே ஆழ் வார் விஷயத்தில் அவன் செய்த செயலெல்லாம் அவர் சொன்ன படியே நிர்ஹேதுகமாகவே செய்தது—என்று ஆழ்வாருடைய நிர் ஹேதுக க்ருபா ஸித்தாந்தத்தை எம்பெருமான் பரிபூர்ணமாக ஒப்புக் கொண்டதாகவே பிள்ளான் அருளியுள்ளார். ஆகையால் மோக்ஷத் தின் பொருட்டான எம்பெருமானுடைய க்ருபை எம்பெருமானுடைய நோக்கிலும் ஆழ்வாருடைய நோக்கிலும் நிர்ஹேதுகமானதே என்று பிள்ளானுடைய ஸ்ரீஸூக்தியிலிருந்தே கல்வெட்டாக விளங்குகிறது.

"ஶாஸ்த்ரங்களில் கர்மஜ்ஞாந பக்தி யோகங்கள் முதலான மோக்ஷ ஸாதநங்களை அனுஷ்டிப்பவர்களுக்கு எம்பெருமான் மோக்ஷ மளிப்பதாகக் கூறப்படுகிறதே; நீங்கள் சொல்லும் நிர்ஹேதுக க்ருபா ஸித்தாந்தம் இதற்கு முரணுயிருக்கிறதே" என்னும் கேள்வி எழுகிறது. இதற்குப் பிள்ளான், நம்பிள்ளை முதலான தென்னு சார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கும் ஸமாதானம் பின்வருமாறு :— எம்பெருமான் அநாதிகாலமாக, சேதனர்கள் அனைவருமே தன்னை அடைவதற்கு உறுப்பாக ஸ்ருஷ்டி, அவதாரம் முதலான பல முயற்சி களைச் செய்து வருகிருன். ஆனால் பெரும்பாலான ஸம்ஸாரி ஜீவர் கள் எம்பெருமான் கொடுத்திருக்கும் ப்ரதம ப்ரவ்ருத்தி ஸ்வாதந்த்ரி யத்தை (முதல் முயற்சியில் சுதந்திரமாகச் செயல்படும் திறமையை)ப் பயன்படுத்தி அவன் திருவடிகளில் அவன் உகப்புக்கான கைங்கர்யம் தவிர்ந்த மற்ற பயன்களையே விரும்பி அதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். இந்த முயற்சிகள் ஶப்தாதி விஷயங்களைப் பற்றிய தானுல் அது ஶாஸ்த்ர விருத்தமல்லாத முயற்சியாயிருக்கும்போது புண்யமாகவும், ஶாஸ்த்ர விருத்தமான முயற்சியாய் இருக்கும்போது பாபமாகவும் ஆகி, அந்த ஜீவனுக்கு அந்த இருவினைப் பயனுக ஒவ்

http://acharya.org

வொரு பிறப்பைக் கொடுத்து ஸம்ஸாரத்தில் உழலும்படி செய்து விடுகிறது. அந்த முயற்சி ஜீவாத்மாவான தன் ஸ்வரூபத்தைப் பெற்று அநுபவிப்பதற்காக ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ஸாதனங்களை அனுஷ்டிப்பதாம்போது, அது நிறைவடைந்தவுடன் கேவலாத்மாநுபவம், கைவல்யம் என்று சொல்லப்படும் தாழ்ந்த மோக்ஷத்தைக் கொடுத்து விரஜைக்கு அக்கரையில் உள்ளதோர் இடத்தில் இவன் என்றுமே ஆத்மாநுபவம் செய்து கொண்டிருக்கும் கைவல்ய மோக்ஷத்தை அடையும்படி செய்துவிடுகிறது. அதற்குமேல் மோக்ஷத்தை விரும்பும் சில ஜீவர்கள் அந்த மோக்ஷத்தில் தாம் அடையும் ஆனந்தத்தை விரும்பி ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படும் ஸாதனங்களை அனுஷ்டித்தார்களானால் பரம பதத்திலேயே அவர்கள் விரும்பிய படி அந்த ஸாதனங்கள் நிறைவடைந்தவுடன் பகவதநுபவ கைங்கர்யங்களைத் தம் ஆனந்தத்திற்காக அநுபவிக்கும் ஸ்வார்த்த மோக்ஷத்தை அவர்களுக்கு எம்பெருமான் அருளுகிறான். எந்த ஜீவர்கள் அவன் உகப்புக்கேயான அநுபவ கைங்கர்யங்களையே விரும்பி அவனையே ப்ராப்தாவாகவும், ப்ராபகனாகவும், ப்ராப்திக்கு உகப்பானாகவும் கொண்டு வாழ்கிறார்களோ அவர்களுக்கு நிர்ஹேதுகமாக (ஓர் உபாயத்தையும் எதிர்பாராமல) பரமபதத்தில், "உன்றன்னோடுற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்" [திருப்பாவை 29] என்று அருளிச்செய்யப்பட்ட பரார்த்தமாநுபவ கைங்கர்ய ரூபமான பரம மோக்ஷத்தை அளிக்கிறான் எம்பெருமான். இது தென்னாசார்யர்களின் ஸித்தாந்தம்.

இவ்விஷயத்தில் ஸ்ரீதேசிகனுடைய ஸித்தாந்தம் வேறுபடுகிறது. "ஜீவர்களுக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியம் எம்பெருமானால் அளிக்கப்படவில்லை; அநாதிகாலமாக முன்முன் கர்மங்களுக்கு அனுகுணமாக எம்பெருமானே ஸம்ஸாரி ஜீவர்களை ஓரோர் செயல்களைச் செய்யும்படி தூண்டிவிடுகிறான். அப்படித் தூண்டிவிடும்போது எந்த ஜீவர்கள் மோக்ஷ ஸாதனமான பக்தியையோ ப்ரபத்தியையோ அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்குப் பரமபதத்தில் ஒரே விதமான மோக்ஷத்தையே அளிக்கிறான். பரமபதத்தில் ஸ்வார்த்தமும் பரார்த்தமும் கைவல்யம் என்னும் மோக்ஷ வேறுபாடுகள் கிடையாது. கேவலாத்மாநுபவமாகிற கைவல்ய மோக்ஷம், ஐஶ்வர்யங்களில் ஒரு வகையேயாகும். அது ப்ரக்ருதி மண்டலத்திலேயே அனுபவிக்கப்படுகிறது. அதை

http://acharya.org

அடைந்தவர்களும் மோக்ஷ ஸாதனத்தை அநுஷ்டித்துப் பரம மோக்ஷத்தைப் பெறலாம்" என்பது ஸ்ரீதேசிகனுடைய ஸித்தாந்தம்.

இதிலிருந்து தென்னாசார்யர்கள் ஸஹேதுக க்ருபையாலும் எம்பெருமான் மோக்ஷம் உள்ளிட்ட பல பலன்களை அளிக்கிறான் என்பதை மறுக்கவில்லை என்பது விளங்கும். ஆனால் அந்த ஸஹேதுக க்ருபைகளும் எம்பெருமான் ஜீவாத்மாக்களைத் தான் பெறுவதற்காக நிர்ஹேதுகமாகச் செய்துவரும் முயற்சிகளின் பலன்களேயாகும். எம்பெருமானுடைய விருப்பத்தைப் புரிந்து கொள்ளாமல் தான் ஒரு விருப்பத்தைக் கொண்டு இவன் மோக்ஷத்தையே விரும்பி அதற்குரிய ஸாதனங்களை அநுஷ்டித்துத் தாழ்ந்த மோக்ஷத்தைப் பெற்றாலும் அது உண்மையில் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையின் பலனேயாகும். 'எம்பெருமானே உபாயம், நமது முயற்சிகளோ மற்றொன்றோ உபாயமல்ல" என்பதை உணராமல், இவன் மோக்ஷ ஸாதனம் அல்லாதவற்றை ஸாதனமாக எண்ணிச் செயல்படுகிறானாகையாலே எம்பெருமானும் ஸஹேதுக க்ருபைக்கே பலன் கொடுக்கும்படி நேருகிறது. நிர்ஹேதுக க்ருபா பூலமான பரம மோக்ஷத்தை அளிக்க முடிவதில்லை. இவ்வண்ணமாக ஸஹேதுக க்ருபையான் நிர்ஹேதுக க்ருபையை ஜீவன் அடைவதற்குப் படிக்கட்டாய் அமைகின்றன. இது தென்னாசார்யர்களின் திருவுள்ளம். இவ்விஷயங்கள் நம்முடைய 'ஸித்தோபாயவிஜயம்', 'கைவல்ய ஸித்தாந்தம்', 'தென்கலையும் வடகலையும்' முதலான நூல்களிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்து, "பெருமானுக்கு நிர்ஹேதுக க்ருபை மட்டுமே. அவன் க்ருபைபெற நாம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. அப்படிச் செய்ய வேணுமென்றால் க்ருபை ஸஹேதுகம் என்றாகிவிடும்" என்று தென்கலை ஸம்ப்ரதாயத்தினர் வாதிடுவதுபோல் ஹ.ப்ரியா கட்டுரையில் எழுதுவது தென்கலை ஸம்ப்ரதாயத்தைப் புரிந்து கொள்ளாமையால் விளைந்தது என்பது விளங்கும். "பக்தி, ப்ரபத்தி முதலானவற்றை மோக்ஷோபாயமாக நினைப்பது மயக்கமே. அந்த நினைவுடன் பெறும் பரமமோக்ஷமும் ஒரு மாற்றுக் குறைந்ததாகவே இருக்கும். அந்த நினைவு இல்லாமல் எம்பெருமான் உகப்புக்கேயான் மோக்ஷத்தை விரும்பி "சாதகம் போல் நாதன் தனது அருளையே பார்த்திருக்கும் சோதிலடியார்களுக்கு" [ஞானஸாரம் 2] மாற்றுக்குறையாத அனுகப்புக்கேயான பரமமோக்ஷம் கிடைக்கிறது என்பது தென்கலை ஸம்ப்ர

http://acharya.org

தாயம். சுருங்கக் கூறினல், "பக்தி ப்ரபத்தி ஆகிய மோக்ஷோபாயங்களால் பெறுவது பரமமோக்ஷம்" என்பது வடகலை ஸம்ப்ரதாயம். "பக்தி ப்ரபத்தி முதலானவற்றை உபாயமாக நினைக்காமல் அவற்றை ஸ்வயம் ப்ரயோஜனமாகவும் அதிகாரி விசேஷணமாக (மோக்ஷத்தைப் பெறுவதற்குத் தகுதியாக)வும் நினைத்து எம்பெருமான் ஒருவனையே உபாயமாகக் கொள்பவர்களுக்கு அவனுகப்புக்கேயான கைங்கர்யம் (பரமமோக்ஷம்) ஸித்திக்கிறது" என்பது தென்கலை ஸம்ப்ரதாயம். இதைத் தெளிவாக உணர்ந்தால் முன் எடுத்த திருவாய்மொழி [10-8-10] ஸ்ரீஸூக்திகளை அருளியிருக்கும் பிள்ளான் தென்கலை ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவரே என்பது கல்வெட்டாகத் தேறி நிற்கும்.

இப்படி இரு ஸம்ப்ரதாயங்களின் வேற்றுமையை உணர்ந்து சகிப்புத் தன்மையுடன் ஹ.ப்ரியா எழுத்தாளர் ஆறியிருப்பது தக்கது. இதை உணராமல் மேலும் இதே ரீதியில் ஏதாவது எழுதினல் அவற்றுக்கும் விளக்கங்கள் ஸுதர்சனர் பதிலில் வெளிவரும்.

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, திருவெள்ளறை கீழத்திருமாளிகை, ஸ்ரீரங்கம்.

71. சென்னைத் தொலைக்காட்சியில், "ராமன் வாலிவதம் செய்தது குற்றமே" என்னும் தலைப்பில் கம்பராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்காடுமன்றம் பலமுறை ஒளிபரப்பப்பட்டுள்ளது. கடைசியாக 10—12—2000 ஞாயிறு இரவு 7-30 முதல் இது ஒளிபரப்பப்பட்டது. இதில் நடுவராக இருந்த நெல்லை கண்ணன் என்பவர், "ராமன் வாலி வதம் செய்தது குற்றமே" என்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறார். இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சியை நாமும் பலமுறை பார்த்தோம். இந்த வழக்காடு மன்றத்தில் வழக்குத் தொடுத்தவர் நமது நண்பரும் புதுக்கோட்டை கம்பன் கழகச் செயலாளருமான தி. சு. மலையப்பன் ஆவார். இவர் புதுக்கோட்டைக் கம்பன் கழக மலர்களில் 'கம்பன் வைஷ்ணவனே' என்று நிலைநாட்டி எழுதப்பட்ட நம்முடைய கட்டுரைகளைப் பலமுறை வெளியிட்டிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை எதிர்த்து வாதிட்டவர்

நமது நண்பர் தா. கு. சுப்பிரமணியம் ஆவார். வாலிவதம் செய்தது குற்றமல்ல என்பதற்கு இவர் மிகச் சிறந்த முறையில் கம்பராமாயணத்திலிருந்து பல ஆதாரங்களைக் காட்டி வாதிட்டார். இவருடைய வாதங்களில் பெரும்பாலானவற்றைக் கருத்தில் கொள்ளாமலே, நடுவர்—நெல்லை கண்ணன், "வாலி வதம் செய்தது குற்றமே" என்று தாம் முன்னரே முடிவுசெய்து கொண்டு, அதற்கேற்பக் கம்பராமாயணப் பாடல்களுக்கு வலிந்தும் நலிந்தும் பொருள்கூறி இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். இது மிகவும் பொருத்தமற்ற தீர்ப்பு. வழக்காடு மன்றத்தில் மூன்று விதமான குற்றச்சாட்டுக்கள் வாலிவதம் செய்த இராமன் பேரில் — பின்வருமாறு சுமத்தப்பட்டன :— 1. இராமன் தனக்குச் சம்பந்தமில்லாத சகோதரர் குடும்பச் சண்டையில் உட்புகுந்து தன்னிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த வாலியைக் கொன்றது முறையற்றது. 2. ஒரு குற்றமும் செய்யாத நிராயுதபாணியான வாலியை அவன் தம்பியுடன் சண்டை செய்து கொண்டிருக்கும் போது கொன்றது மிகவும் முறையற்றது. 3. வாலிக்கு நேரே நிற்காமல் மறைந்து நின்று கொன்றது இராமனின் வீரத்திற்கே இழுக்காகையால் மிகமிக முறையற்றது—என்பதே குற்றச்சாட்டுக்கள்.

"வாலி சுக்ரீவனின் மனைவியைக் கவர்ந்தான்—என்று அனுமன் சொன்னதை உண்மை என நம்பி இராமன் தனக்குச் சம்பந்தமில்லாத சகோதரர்கள் சண்டையில் உட்புகுந்து வாலிக்குத் தண்டனையளித்து விட்டது தவறு. அதிலும் இராமனிடம் பெருநம்பிக்கை வைத்துத் தாரையோடு பேசுகையில், 'குணக்கடலான இராமன் எங்கள் சண்டையில் புகுரமாட்டான்' என்று சொன்ன வாலியை, அவனுடைய பலத்தில் நம்பிக்கையில்லாமல் மராமரங்களை அம்பினால் துளைப்பது முதலான சோதனைகளை அவனுக்கு வைத்த சுக்ரீவனுக்காகக் கொன்றது மிகத் தவறு" என்பது நடுவர் நெல்லைக் கண்ணனின் வாதம்.

கம்பராமாயணத்தில் கம்பன் அனுமனுக்குக் கொடுத்திருக்கும் சிறப்புக்களைப் பார்த்தால் அனுமன் ஒரு போதும் பொய் சொல்லவேமாட்டான் என்பது அனைவர்க்கும் விளங்கும். அனுமப்படலத்தில் இராமன் வாயிலாக அனுமனைப் புகழும்போது,

http://acharya.org

"இல்லாத உலகத்தெங்கும் ஈங்கு இவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொல் இச்சொல்லின்
செல்வன்?
வில் ஆர்தோள் இளையவீர! விரிஞ்சனே விடைவல்லானே"

என்று அனுமனை வேதம் முதலான எல்லாச் சாத்திரங்களையும் கற்ற சான்றோன் எனப் புகழ்கிறான் கம்பன். பாலகாண்டம் திருவவதாரப் படலத்திலேயே, "புராரி மற்று யானே வாத சேய் எனப்புகன்றான்" என்று அனுமன் மும்மூர்த்திகளில் ஸம்ஹார மூர்த்தியான சிவனின் அவதாரமே எனக்காட்டுகிறான் கம்பன். சம்பராமாயணத்தில் மற்றும் பலவிடங்களிலும் இதை உணர்த்துகிறான். அனுமன் சுக்ரீவனுக்கு இராமனை அறிமுகப்படுத்தும் பாடலில்,

"சங்கு சக்கரக்குறி உள தடக்கையில் தாளில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் விற்கரத்து இராமன் அத்திரு நெடுமாலே
இங்கு உதித்தனன் ஈண்டு அறம் நிறுத்துதற்கு இன்னும்"

என்று கூறியதாகக் காட்டுகிறான் கம்பன். இவ்வண்ணமாக இராமன் பரமாத்மாவின் அவதாரம் என்பதையும், அவன் அறத்தை நிலை நிறுத்துவதற்கே இங்கு அவதாரம் செய்தவன் என்பதையும் அறிந்தவனாய், சிவனின் அவதாரமான அனுமன் இராமனிடம் போய் கூறித் திசை திருப்பிவிட்டு மறச் செயல்புரியத் தூண்டியிருப்பானா என்பதை நடுநிலையாளர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். மேலும் வாலியும் சுக்ரீவனும் போர்புரிந்ததை வர்ணிக்கும்போது,

"தம் தோள் வலிமிக்கவர் தாம் ஒருதாய் வயிற்றின்
வந்தோர் மடமங்கை பொருட்டு மலைக்கலுற்றார்"
[கிஷ்கிந்தா காண்டம் - வாலிவதைப்படலம் 274]

என்னும் பாடலில் ஒரு பெண் பொருட்டு வாலியும் சுக்ரீவனும் போர் புரிந்தார்கள் எனக் கம்பன் கவிக்கூற்றாகக் கூறுகிறான். இதிலிருந்தும் வாலி சுக்ரீவன் மனைவியைக் கவர்ந்தான் என்று அனுமன் கூறியது உண்மையென்றே விளங்குகிறது.

http://acharya.org

இனி, 'எக்குற்றமும் செய்யாத வாலியை இராமன் கொன்று விட்டான்' என்னும் நடுவர் நெல்லைக் கண்ணனின் வாதத்தை மேலும் ஆராய்வோம். வாலி மாயாவியைத் தொடர்ந்து குகைக்குள் சென்ற பின் நடந்த செய்திகளை ராமன் வாயிலாகக் கம்பன் வாலிவதைப் படலம் 326-ம் பாடலிலிருந்து கூறுகிறான். அதன் சுருக்கம் பின் வருமாறு :— குகைக்குள் வாலி புகுந்தபின் நீண்டகாலம் வெளியே வராமல் இருந்ததால் அந்த குகைக்குள்ளே சுக்ரீவன் செல்லத் தொடங்கினான். அவனை நோக்கி வானர குல மூதியவர்கள், "இனி வாலி வருவதற்கு வாய்ப்பில்லாமையால் நீயே எங்களுக்கு அரசனுவாயாக" என்று கூறினர்; அதனை மறுத்துச் சுக்ரீவன், "என் தமையனான வாலியைக் கொன்ற மாயாவியையும் அவன் சுற்றத்தாரையும் அழிப்பேன். அதன்பின் நானும் இறப்பேன். அண்ணன் இறந்தபின் உயிருடன் இருந்து அரசு செய்யேன. நீங்கள் தகாத சொற்களைக் கூறினீர்கள்" என்று சொன்னான். அதற்குப்பின் அமைச்சர்கள் பெரியவர்கள் முதலான அனைவரும், சுக்ரீவன் அந்த குகைக்குள் புகாமல் பிடித்துக்கொண்டு, "தாங்கள் அரசை ஏற்க வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். அதனாலேயே மாயாவி முதலான அசுரர்கள் வரமுடியாதபடி குகை வாயிலை மூடிவிட்டு சுக்ரீவன் அரசை ஏற்றுக்கொண்டான். மாயாவியைக் கொன்று விட்டுத் திரும்பிவந்த வாலியைப் பார்த்து சுக்ரீவன் மனமகிழ்ந்து வணங்கி, "பெரியவர்கள் வற்புறுத்தித் தந்த அரசாட்சியை உன்னிடமே விடுகிறேன்" என்று சொன்னபோதும், அவனிடம் குற்றமில்லை என்பதை உணர்ந்திருந்தும், "நான் நின் அடைக்கலம், என் குற்றத்தைப் பொறுத்தல் வேண்டும்" என்று சுக்ரீவன் வாலியைச் சரணமடைந்த பின்பும் அவனை ஏற்காமல் வாலி அவனைக் கொல்லத் தொடங்கினான். அவன் பயந்து ஓடியபின்பும் அவன் தன் தம்பி என்பதையும் எண்ணாமல் ஓடஓட விரட்டித் துன்புறுத்தினான். தம்பியின் மனைவியின் கற்பையும் வாலி அழித்தான். இவ்வளவு குற்றங்களை இராமன் வாயிலாகக் கம்பன் வாலியின்மேல் கூறியிருக்கிறான். இராமன் பொய் சொல்லாதவன் என்று கம்பராமாயணத்தில் பலவிடங்களில் வலியுறுத்தப் பட்டுள்ளது. "இப்படியெல்லாம் நீ தவறு செய்தாயாகையாலும், சுக்ரீவன் எனக்கு உயிர் நண்பன் ஆகையாலும், நான் எளியவர்களைக் காப்பது என்னும் விரதம் கொண்டவனாகையாலும், நீ அவனைக் கொல்லமுற்பட்டபோது அதைத் தடுப்பதற்காகவும், உனக்குத் தண்டனை அளிப்பதற்காகவும் உன்னைக் கொன்றேன்" என்று வாலியிடம் இராமன் கூறினான்.

http://acharya.org

அதற்கு வாலி, "நீ சொன்ன கற்பு நெறியெல்லாம் உங்களுக்குத் தானேயொழிய வானரங்களான எங்களுக்குக் கிடையாது. மனம் போனபடி நடப்பதே எங்களுடைய அறம்" என்று பதில் கூறினான். இதை மறுத்து இராமன், "நீங்கள் வெறும் வானரங்களல்ல. தேவர்களுக்கு மக்களாகப் பிறந்தவர்கள். அறவழியை நன்கு உணர்ந்தவர்கள். நல்ல நெறியையும் அதன் தன்மையையும் உணர்ந்த நீ பிழைகளைச் செய்துவிட்டு, 'நான் செய்தது பிழையன்று' என்று சாதிக்கின்றாய்" என்று கூறினான். அதற்குப்பின் வாலி, "நான் குற்றம் செய்தவனாகவே இருந்தாலும், போர்க்களத்தில் எதிரில் நின்று அம்பை எய்யாமல் மறைந்து நின்று அம்பை எய்தது ஏன்?" என்று கேட்டான்.

அதற்கு இராமன் நேரே பதில் சொல்லுவதானால் பல தேவ ரஹஸ்யங்களை வெளியிட நேரிடுமாகையாலும், அது மனிதனாகப் பிறந்த இராமனுக்குத் தகாததாகையாலும், இராமன் பதில் சொல்லுவதற்கு முன்பாக, இலக்குவன் முக்கியமான காரணத்தைக் கூறுகிறான். அதாவது—"நேரில் தோன்றினால் நீ இராமனைச் சரணமடைந்து விடுவாய். அப்போது தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்த உன்னை தண்டிக்க முடியாமல் போய்விடும். அதனால் சரணமடைந்த சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்கையும் மீறவேண்டி நேரிடும். அதனாலேயே மறைந்து நின்று கொன்றது" என்பதாகும். இதைக் கேட்டபின் வாலியும் இதை ஏற்றுக்கொண்டு, 'இராமன் அறவழி அழியும்படி ஒரு செயலைச் செய்ய மாட்டான்' என்று உணர்ந்து, அவனைத் தலையால் வணங்கி, "நாய் போன்ற எங்களால் நன்மை தீமைகளை அறியமுடியுமோ? என் தீமைகளைப் பொறுத்துக்கொள்வாயாக" என்று வேண்டி முடித்திருக்கிறான். "என் தம்பி பயனற்ற அரசாட்சியை அடைந்து, எனக்கு இராமனைக் கொண்டு பரமபதத்தில சிறப்புற வீற்றிருக்கும் வீட்டரசைக் கொடுத்து விட்டான்" என்று வாலி ஆனந்தப்படுகிறான். "என் மேல் அம்பு எய்தது போல், தவறு செய்யும்போது என் தம்பியின் மேலும் அம்பு எய்து விடாதே" என்று வாலி இராமனை வேண்டிக் கொள்ளுகிறான். "அனுமனை உன் கையிலேந்திய வில்லாக எண்ணுவாயாக" என்று அனுமனையும் வாலி புகழ்ந்து பேசுகிறான்.

http://acharya.org

இவற்றிலிருந்து, "வாலி தஞ்சமடைந்தவனைக் கொல்ல முற்பட்டதும், தமபியின் மனைவியைக் கவர்ந்ததும் ஆகிய இருபெரும் பிழைகளைச் செய்தவன். ஆகையால் இராமன் அவனைக் கொன்றது நியாயமே" என்று எவர்க்கும் விளங்கும்.

இவை தவிர வாலி குற்றவாளியே என்பதையும் அவனை மறைந்து நின்று இராமன் கொன்றது சரியே என்பதையும் விளக்கும் தேவ ரஹஸ்யங்கள் இரண்டு உண்டு. (1) திருவவதாரப் படலத்தில் இராவணனைக் கொல்ல வேண்டுமென்று தேவர்கள் திருமாலைப் பிரார்த்திக்கிறார்கள். அப்போது ஒவ்வொரு தேவரும் இராமனுக்குத் துணை புரிவதற்காக ஒவ்வொரு வானரமாகப் பிறப்பதாக உறுதி கூறுகிறார்கள். இந்திரன் வாலியாகப் பிறப்பதாக ஒப்புக்கொள்கிறான். இப்படி இராவணனைக் கொல்லுவதற்குத் திருமாலுக்குத் துணை புரிவதற்காகப் பிறந்த வாலி, தன் வாக்குறுதியை மறந்து இராவணனோடு அக்னி சாட்சியாக நட்புக்கொள்கிறான். இது நம்பிக்கை துரோகமாகும். இதனாலும், "வாலி கொல்லத் தக்கவனே" என்று விளங்குகிறது. (2) இராமன் மறைந்து நின்று கொன்றதற்கும் தேவ ரஹஸ்யமான காரணம் ஒன்று உண்டு. அதாவது—"வாலியோடு நேர் நின்று எவன் போர் புரிந்தாலும் அவனுடைய வலிமையில் பாதி வாலியை வந்து அடையும்" என்று தேவர்கள் வாலிக்கு வரமளித்துள்ளனர். இதை வாலிவதைப்படலம் 225 ம் பாடலில் வாலியே கூறியிருக்கிறான். அதையும் மீறி நேர் நின்று அம்பை எய்திருந்தாலும் அந்த வரம் பரமாத்மாவான இராமனிடம் செல்லுபடியாகாது. ஆனால் தேவர்கள் அளித்த வரம் பழுதுபட்டுப்போகும். அப்படி அது பழுது பட்டுப் போகாமல் இருக்கைக்காகவும் இராமன் மறைந்து நின்று கொன்றான். தண்டனைக் குரியவனை, அவன் நிராயுதபாணியாய் இருந்தாலும் கொல்லலாம் என்பது அரசநீதி. ஆகையால் இதுவும் குற்றமாகாது. தண்டனைக் குரியவனை இராமன் தண்டித்தானேயொழிய குடும்பச் சண்டையில் நடுவில் புகுந்தவனல்லன்.

இறுதியாக, நடுவர் நெல்லை கண்ணனின் மற்றொரு வாதத்திற்குப் பதில் கூறுகிறோம். வாலிவதைப் படலத்தின் 385-ம் பாட்டில் வாலியின் மகன் அங்கதனுக்கு இராமன் தன்னுடைய உடைவாளைப் பரிசாகக் கொடுத்ததாகக் கம்பன் கூறுகிறான்.

http://acharya.org

"தன்னடி தாழ்தலோடும் தாமரைத் தடங் கண்ணும்
பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்"

என்பது அப்பாடல். இப்பாடலில் "பொறுத்தி" என்னும் பதத்தால் தான் வாலியைக் கொன்றதற்கு அவன் மகனான அங்கதனிடம் இராமன் மன்னிப்பு வேண்டுகிறான் என்று கூறுகிறார் நெல்லைக் கண்ணன். "சில பெரியவர்கள் இதற்குப பத்திரமாக வைத்துக்கொள் என்று பொருள் கூறியது தவறு" என்று பரிகசிக்கிறார்.

இது சிறிதும் பொருந்தாது. "பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி" என்பது இங்கு வாக்கிய அமைப்பு. 'இது' என்னும் சொல் அருகிலுள்ளதைக் குறிக்குமே யொழிய, பல பாடல்களுக்கு முன் வந்ததொரு செயலைக் குறிக்காது. இந்த நியமத்தைப் பற்பல காப்பியங்களில் பல்லாயிரக்கணக்கான இடங்களில் பார்க்கலாம். ஆகையால் "பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி" என்ற தொடரில் 'இது' என்னும் சொல் அருகிலுள்ள உடைவாளையே குறிக்கும். ஆகையால் "நீ இது பொறுத்தி" என்னும் தொடருக்கு, "நீ இவ்வுடை வாளைத் தாங்குவாய்" என்னும் பொருளே பொருத்தமாகும். நம்முடைய "கம்பனின் சமயம்" அநுபந்தத்தில் பொறுத்தி என்னும் சொல்லைக் கம்பன் இப்பொருளிலேயே பலவிடங்களில் வழங்கியிருப்பதைக் காட்டியிருக்கிறோம். 'பொறுத்தி' என்னும் சொல்லுக்கு இவர் கூறுவதுபோல், 'பத்திரமாக வைத்துக்கொள்' என்று பொருள்கொள்ள இயலாது, எவரும் கூறவுமில்லை. மேலும் இப்பாடலில் இராமனை "தாமரைத் தடங்கணான்" எனக் குறிக்கிறான் கம்பன். "மலர்ந்த தாமரைபோல் விரிந்த கண்ணை உடையவன்" என்று இதற்குப் பொருள். மன்னிப்புக் கேட்கும் பாடலாயிருந்தால் இச்சொல் பொருந்தாது. ஆகையால் அங்கதனுக்கு அருள்புரியும் பாடல் இது என்றே கொள்ளவேண்டும்.

ஆக இவற்றிலிருந்து "வாலி கடுமையான குற்றம் செய்தவனே" என்றும், "இராமன் வாலியைக் கொன்றதில் எக்குற்றமும இல்லை" என்றும், நடுவர் "நெல்லைக் கண்ணனின் பட்டிமன்றத் தீர்ப்பு முறையற்றது, மாற்றப்படவேண்டியது" என்றும் விளங்குகிறது.

http://acharya.org

S. வேங்கடம், சமயபுரம்.

72. தினமலர் திருச்சி 14-12-2000 இதழில் "அறிவோமா ஆன்மீகம்" பகுதியில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது : "கணபதி என்னும் சொல்லில், 'க' என்ற எழுத்து ஞானத்தைக் குறிக்கிறது. 'ண' என்பது மோட்சத்தைக் குறிக்கிறது. 'பதி' என்பது தலைவன் எனப் பொருள்படுகிறது. பரப்பிரம்ம சொருபமாக இருப்பவன் கணபதி. ஞானத்துக்கும் மோட்சத்துக்கும் அவனே தலைவன்" என்று தொடங்கி எழுதப்பட்டுள்ளவைகளுக்கு ஆதாரம் உண்டா?

இவற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை. 'க' என்னும் பதமும் 'ண' என்னும் பதமும் முறையே ஞானத்தையும் மோட்சத்தையும் குறிக்கும் என்பதற்கு இதை எழுதியவர் எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை. காட்டவும் முடியாது. பூதகணங்களுக்குத் தலைவன் என்னும் பொருளிலேயே 'கணபதி' சப்தம் சைவர்களாலும் வழங்கப்படுகிறது. இடையூறில்லாமல் காரியங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே சைவர்கள் கணபதியை வணங்குகிறார்களேயொழிய ஞானத்திற்காகவோ மோட்சத்திற்காகவோ கும்பிடுவதில்லை. ஆகையால் கணபதியைப் பரபிரம்மம் என்பது பிதற்றலே. "உதாம்ருதத்வஸ்ய ஈஶாந:" [மோக்ஷத்தைப் புருஷ சப்தத்தால் சொல்லப்படும் நாராயணனே அளிக்கவல்லவன்] "தமேவம் வித்₃வாந் அம்ருத இஹ ப₄வதி நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே । [பரம புருஷனை இவ்வண்ணம் அறிபவனே மோக்ஷமடைகிறான். மோக்ஷமடைய வேறு வழியில்லை] என்று புருஷ ஸூக்தமும் "தத்₃விஷ்ணோ: பரமம்பத₃ம் ஸதா₃பஶ்யந்தி ஸூரய:" [விஷ்ணுவினுடைய மேலான உலகத்தில் நித்ய ஸூரிகள் என்றும் ப்₃ரஹ்மாநுப₄வம் செய்து கொண்டிருக்கிறார்கள்] என்று எல்லா வேதங்களிலும் காணப்படும் விஷ்ணு ஸூக்த மந்திரங்களும், "மோக்ஷமிச்சே₂த் ஜநார்த₃நாத்" [மோக்ஷத்தை ஜனார்த்தனனிடமிருந்தே பெறவேண்டும்] என்று புராணங்களும் முழங்குகின்றன. "நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்" [பரிபாடல்] என்று சங்ககாலச் சான்றோர்களும், துழாய் மாலை தரித்த திருமால் அளித்தாலல்லது தலைசிறந்த மோக்ஷ லோகத்தை எவனும் அடையமுடியாது என்று முழங்குகிறார்கள். இவற்றுக்கு முரணாக "தினமலர்" போன்ற செய்திப் பத்திரிகைகள் வெளியிடும் இத்தகைய பிதற்றல்கள் காற்கடைக் கொள்ளத்தக்கவை.

http://acharya.org

S. நரசிம்மன், ஸ்ரீரங்கம்.

73. தினமலர் சண்டே ஸ்பெஷல் [17–12—2000] இதழில், "வைணவத்தலத்தில் விநாயகர்" என்னும் தலைப்பில், "ஸ்ரீராம பிரான் தலைமையில் 4 ஆயிரம் முனிவர்கள் அசுவமேத யாகம் செய்தனர். ஆனால் யாகத்தைத் தொடங்கும்முன் விநாயகரை வழிபட முனிவர்கள் மறந்தனர். இதனால் அவர்களுக்கு யாக மந்திரம் மறந்து போனது. பின்னர் நடந்த தவறை உணர்ந்து விநாயகரை வழிபட்டனர். யாகத்தில் விநாயகரும் கலந்துகொண்டார். அதுமுதல் அவர் நாலாயிரத்தொரு விநாயகர் என்று அழைக்கப்பட்டார். இந்த நாலாயிரத்தொரு விநாயகர் எழுந்தருளியுள்ள தலம் தான் திருமணிமாடக் கோயில். 108 வைணவத் திருத்தலங்களில் இதுவும் ஒன்று. வைணவத் திருத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக நாலாயிரத்தொரு விநாயகர் எழுந்தருளியுள்ளார்" என்னும் செய்தி வெளியாகியுள்ளது. இச்செய்தி உண்மையா? அதற்கு ஸ்ரீராமாயணத்தில் ஏதேனும் ஆதாரம் உண்டா?

இது உண்மை சிறிதும் கலப்பற்ற பிரம்மாண்டப் புளுகாகும். கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முற்பட்ட எந்தத் தென்மொழி வடமொழி நூலிலும் காணப்படாத விநாயகரைப் பிற்காலத்தில் கற்பித்து அவர் பாரதத்தை எழுதினார் என்பது போன்ற இடைச்செருகல்களையும் சிலர் செய்தார்கள். ஸ்ரீராமாயணத்திலோ, மஹாபாரதத்திலோ, ஸ்ரீவிஷ்ணுபுராணம் பாகவதம் போன்ற பழைய புராணங்களிலோ, காளிதாஸன் போன்ற பழம்பெரும் கவிகளின் காவியங்களிலோ, சங்க இலக்கியம், திவ்ய ப்ரபந்தம் போன்ற பழம் தமிழ் நூல்களிலோ விநாயகரைப் பற்றி எந்தச் சிறு குறிப்பும் இல்லை. கி.பி. ஏழாவது நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நாயன்மார்கள் காலத்திலேயே பிள்ளையாரைப் பற்றிய கதைகள் கற்பிக்கப்பட்டன. நூற்றெட்டு வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான மணிமாடக் கோயிலைப்பற்றி இப்படி ஒரு பொய்க்கதையை எந்த ஆதாரமும் காட்டாமல் தினமலர் வெளியிடுவது மிகவும் அருவருக்கத் தக்கதாகும். கஜாநநர் என்னும் விஷ்வக்ஸேநரின் தளபதி விஷ்ணு கோயில்களில் எழுந்தருளியிருப்பதைப் பற்றிக்கொண்டு மனம்போனபடி பொய்க்கதைகள் புனைகிறார்கள்.

http://acharya.org

த. இராசேந்திர ராமாநுச தாசர், சிலம்பூர்.

74. நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் 1. ஸாலோக்யம், 2. ஸாமீப்யம், 3. ஸாரூப்யம், 4. ஸாயுஜ்யம் என்னும் நாலு வகைப்பட்ட மோக்ஷம் உண்டா?

ஸ்ரீவேதாந்த தேசிகர் மோக்ஷத்தில் முற்கூறியபடி நாலுவகை உண்டு என்பதற்கு இரண்டு பிரமாண ஸ்லோகங்களை எடுத்து "அவை அப்ராக்ருதமான பரமபதத்தில் உள்ளவை ஆகமாட்டா. இந்தப்ரக்ருதி மண்டலத்திற்குள் இருக்கும் விஷ்ணு லோகத்தில் நாலுவகைப்பட்ட மோக்ஷத்தைக் குறிப்பவையே அந்த ஸ்லோகங்கள்" என்று தம்முடைய ந்யாயஸித்₃தா₄ஞ்ஜநத்தில் ஜீவபரிச்சே₂த₃த்தில் அருளியுள்ளார். அந்த ஸ்லோகங்கள் பின்வருமாறு:—

1. மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்த்த₂யே ந கதா₃சந।
இச்சா₂ம்யஹம் மஹாபா₃ஹோ! ஸாயுஜ்யம் த்₃வ ஸுவ்ரத ॥

[தடந்தோள்களை உடையவனும் அடியார்களைக் காக்கும் விரதமுடையவனுமான எம்பெருமானே! அடியேன் உன்னோடு ஒரே உலகத்தில் இருக்கையாகிற ஸாலோக்ய மோக்ஷத்தையும், அத்துடன், உன்னைப் போன்ற உருவத்தையும் உடைத்தாயிருக்கையாகிற ஸாரூப்ய மோக்ஷத்தையும் ஒருபோதும் வேண்டுகின்றேனல்லேன். உன்னுடைய ஸாயுஜ்ய மோக்ஷத்தையே விரும்புகிறேன்.]

2. லோகேஷு விஷ்ணோர் நிவஸந்தி கேசித்
ஸமீபம் ருச்ச₂ந்தி து கேசித₃ந்யே।
அந்யே து ரூபம் ஸத்₃ருஶம் ப₄ஜந்தே
ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த: ॥

[1. விஷ்ணுவினுடைய லோகங்களில் சிலர் வாழ்கிறார்கள் (இது ஸாலோக்ய மோக்ஷம்); 2. மற்றும் சிலர் அவனுக்கு ஸமீபத்தில் வாழ்கிறார்கள் (இது ஸாமீப்ய மோக்ஷம்); 3. வேறு சிலர் அவனையொத்த உருவத்தை உடையவர்களாகவும் ஆகிறார்கள் (இது ஸாரூப்ய மோக்ஷம்); 4. பிறிது சிலர் (அவன் திருவுள்ளத்தை ஒத்திருக்கும்) ஸாயுஜ்ய மோக்ஷத்தை அடைகிறார்கள். அதுவே தலைசிறந்த மோக்ஷம்.]

http://acharya.org

மோக்ஷத்தில் அவனவன் உபாஸிப்பதற்குத் தக்கபடி வேறுபாடு கள் உண்டு என்று ஸ்ரீவேதாந்த தேசிகருக்கு முன்னிருந்த பட்டர் நம்பிளை முதலான ஆசார்யர்கள் திருவுள்ளம் பற்றினர்கள். ஸ்ரீபாஷ்யத்தில் பராயத்தாதிகரணத்தில் நிர்ணயித்தபடி எம்பெரு மான் ஜீவனுடைய ஒவ்வொரு செயலிலும் ஓரளவுக்கு ஸ்வாதந்த்ர யம் கொடுத்திருக்கிறானுகையாலே, அந்த ஸ்வாதந்த்ரியத்தைப் பயன் படுத்தி, அவன் விரும்பும் மோக்ஷத்தை அதற்கு அவன் பற்றும் ஸாத னத்தின் பலனைக் கொடுக்கிறுன் எம்பெருமான் என்பது இவர்கள திருவுள்ளம். அந்த ரீதியில் (1) ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து நீங் கிய தன் ஆத்மாவை அநுபவிக்க வேண்டும் என்று விரும்பும் கைவல்ய மோக்ஷார்த்திக்கு எம்பெருமான் பரமபதத்தில் விரஜைக்கு அக்கரையில் வைகுண்ட திவ்ய நகரத்திற்கு வெளியே ஓர் ஸ்தானத் தில் தன் ஆத்மாவை மாத்திரம் அநுபவிப்பதாகிற அக்கைவல்ய மோக்ஷத்தை அவன் விருப்பப்படி அளிக்கிறான். இதுபற்றி கீதை உரையில் நம்முடைய "கைவல்ய ஸித்தாந்ஜநத்தில்" விரிவாக விளக் கப்பட்டது. இவனுக்குப் பரமபதமாகிற லோகத்தை அடைவது உண்டேயொழிய ப்ரஹ்மாநுபவம் என்றும் கிடையாது. இதுவே ஸாலோக்ய மோக்ஷம் எனத் தக்கது. (2) உபநிஷத்துக்களில் சொல் லப்பட்ட ப்ரஹ்ம வித்யைகளில் ஒன்றை உபாயமாகப் பற்றி நின்று கல்யாண குணங்களோடு கூடிய எம்பெருமானை உபாஸிக்கும் பக்தி நிஷ்டர்களுக்கு அவர்கள் உபாஸித்தபடியே ஸகல கல்யாண குணங் களோடு கூடிய ப்ரஹ்மத்தை அநுபவித்து ஆனந்தமடைவதை முக்ய மாகக் கொண்ட மோக்ஷத்தை அளிக்கிறுன் எம்பெருமான். இவர் களுக்கு அவர்கள் உபாஸித்த குணாநுபவம் முக்யமான பலமாகவும், கைங்கர்யம் அப்ரதாநமான பலமாகவும் அமைகிறது. இவர்கள தாங்கள் விரும்பியபடியே குணாநுபவத்தை அடைகிறார்களேயொழிய எம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்வதில் ஈடுபடுவதில்லை. ஆகையால் இவர்களுக்கு, கைங்கர்யத்துக்கே அவசியமான உருவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் நிர்பந்தமில்லை. இவர்கள் எம் பெருமானுக்கு ஸமீபத்தில் இருந்து ப்ரஹ்மாநுபவம் செய்கிறார்களே யொழிய, திருமேனி எடுத்துக்கொண்டு அந்தரங்க கைங்கர்யம்செய்வதில்

http://acharya.org

படுவதில்லை. இவர்கள் அடைவது ஸாமீப்ய மோக்ஷம் எனத்தக்கது. (3) ரஹஸ்யத்ரயத்தில் சொன்னபடி, பகவதநுபவத்தோடு பகவத் கைங்கர்யத்தையும் விரும்பி அநுபவ கைங்கர்யங்களைப் பெற்றுத் தாம் ஆனந்தமடையவேண்டும் என்னும் எண்ணத்தாலே சிலர் ப்ரபத்தியை உபாயமாக அநுஷ்டிக்கிறார்கள். அவர்கள் கைங்கர்யம் செய்வதற்கு அவசியமான அப்ராக்ருதத் திருமேனியையும் எடுத்துக்கொண்டு, ப்ரஹ்மத்தை அநுபவிப்பதோடு மாத்திரமல்லாமல், அந்தரங்க கைங்கர்யங்களையும் முக்கிய பலமாகக் கொண்டு ஆனந்தமடையும் மோக்ஷத்தைப் பெறுகிறார்கள். ஆகையால் இவர்களுக்கு அப்ராக்ருதத் திருமேனியும் உண்டு. இது ஸாரூப்ய மோக்ஷம் எனத்தகுந்து. (4) இறுதியாக, ஜீவாத்மாவைப் பெற்றுத்தான் ஆனந்தமடைய வேண்டும் என்று அநாதி காலமாக முயற்சி செய்யும் எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் பின் சென்று, தாம் பற்றும் பற்றுகிற ஸ்வகத ஸ்வீகாரத்தையும் உபாயமாகக் கருதாமல் எம்பெருமானையே மோக்ஷோபாயமாகக் கொண்டு, சாதகம் போல் அவன் அருளையே எதிர் நோக்கி நிற்கும் பரகத ஸ்வீகார நிஷ்டர்களான உத்தம ப்ரபந்நர்களுக்கு, எம்பெருமான் அவர்களும் தானும் விரும்பியபடி, பரார்த்த அநுபவ கைங்கர்ய ரூபமான (தன் முகமலர்த்திக்கே உறுப்பான) பரம மோக்ஷத்தை நிர்ஹேதுகமாக அருள்கின்றான். நித்ய ஸூரிகள் அநாதி காலமாகப் பெற்றிருக்கும் இந்த மோக்ஷமே ஸாயுஜ்யம் எனப் படுவது. இவ்விஷயங்கள் ஸ்ரீவசந பூஷணத்திலும், அதன் வ்யாக்யானத்திலும், "சதுர்விதமான... மோக்ஷ" [16] என்னும் ஆசார்ய ஹ்ருதய சூர்ணை வ்யாக்யானத்திலும், வார்த்தாமாலையிலுள்ள பல வார்த்தைகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீவேதாந்த தேசிகர் ஜீவனுடைய முதல் முயற்சிகளில் ஸ்வா தந்த்ரியத்தை எம்பெருமான் அளிப்பதாக ஒப்புக்கொள்ளவில்லையா கையால், "முக்தர்கள் அனைவர்க்கும் கிடைப்பது ஸாயுஜ்ய மோக்ஷமே" என்றும், "கைவல்யம் மோக்ஷமன்று. இவ் வுலகில் அடையப்படும் ஓர் ஐச்வர்யமே" என்றும் திருவுள்ளம் பற்றி னார். இவ்விஷயங்கள் ஸமீபத்தில வெளியிடப்பட்டுள்ள நம்முடைய "தென்கலையும் வடகலையும்" என்னும் நூலில் தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன.

http://acharya.org

T. M. ஸ்ரீநிவாஸன், 3, சர்மா தெரு, சென்னை-59.
[75 — 78 கேள்விகள்]

75. கம்பன் தனது காவியமான கம்பராமாயணத்தை ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன் நிறைவு செய்து, உத்தர காண்டத்தைப் பாடாதது ஏன்?

இதுபற்றி ஒரு கதை வழங்குகிறது. அதாவது—அரசன் கமபரையும் ஒட்டக் கூத்தரையும், ராமாயண காவியம் பாடும்படி கேட்டுக் கொண்டானும். அதன்படி இருவரும் ராமாயணம் எழுதினுர்களாம். கம்பர் யுத்த காண்டம் வரையில் எழுதி முடித்த சமயத்தில், ஒட்டக் கூத்தர் முழுவதும் எழுதி விட்டார். கம்பர் எழுதிய ராமாயணத்தைப் பார்த்த ஒட்டக் கூத்தர் இதன்முன் தாம் எழுதிய ராமாயணம் நிற்க முடியாது என்று உணர்ந்து, தம்முடைய ராமாயணத்தைக் கிழிக்கத் தொடங்கினுர். யுத்த காண்டம் முடியக் கிழித்தும் விட்டார். அப்போது அங்கு வந்த கம்பர், 'இப்படிச் செய்து விட்டீரே' என்று வருந்தி, 'உத்தர காணடத்தைக் கிழிக்கவேண்டாம். நான் அதைப் பாடப்போவதில்லே. உம்முடைய உத்தரகாண்டமே ராமாயணத்தை நிறைவு செய்யும் பகுதியாக இருக்கட்டும்' என்று கேட்டுக்கொண்டாராம். இந்த வரலாற்றை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது ஒட்டக் கூத்தரின் உத்தர காண்டம் மட்டும் எஞ்சியிருக்கிறது.

76. சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில், தீய நிமித்தங்களேக் கண்ட ஆயர் மகளிர் திருமாலின் திருப்பெயர்களேக் கூறி, குரவைக் கூத்து ஆடுகின்றனர். நூலின் அமைப்பின்படி பூர்வ ஜன்ம வினேப் பயனுல் அதற்கு முன்பே கோவலன் கொலேயுண்டதாகத் தெரிகிறது. ஆய்ச்சியர் குரவையை எழுதியதன் மூலம் இளங்கோவடிகள் கூறவந்த செய்தி என்னவாக இருக்கும் என்று விளக்கவேண்டுகிறேன்.

சங்க காலத்தில் பரிபாடல் முதலான நூல்களில் திருமால் ஒருவனேயே வேதங்களில் கூறப்படும் முழு முதல்வனுகச் சங்ககாலச் சான்றேர்கள் பாடியிருக்கும் பாடல்களில் இளங்கோவடிகள் மிகவும் ஈடுபட்டிருக்கின்றுர். அதனுலேயே, சங்க காலத்தையொட்டி வாழ்ந்த இளங்கோவடிகள் தாம் சமணராய் இருந்த போதிலும், திருமாலின்

http://acharya.org

பெருமைகளிலே மிகவும் ஈடுபட்டு, அந்த ஈடுபாட்டுக்குப் போக்கு வீடாகவே ஆய்ச்சியர் குரவையைப் பாடியிருக்கிறார் என்றே கொள்ள வேண்டும்.

77. செய்யாத தவறுக்குத் தண்டனை பெறும்போதும், அதை அனுபவிக்கும்போதும் ஸ்ரீவைஷ்ணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

நாம் முன்பொரு ஜன்மத்தில் செய்த பெரும் பாவத்திற்குப் பலனாகவே இந்த தண்டனையும், அனுபவமும் ஏற்பட்டிருக்கின்றன என்று எண்ணி ஆறியிருக்கவேண்டும்.

78. திவ்ய தேசயாத்திரையின்போது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய க்ரமங்கள் என்ன? மானசிகமான திவ்ய தேச யாத்திரை நேரடியான யாத்திரைக்கு நிகரான அனுபவத்தைக் கொடுக்க இயலுமா?

திவ்யதேச யாத்திரையின்போது ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் நன்மைகளை வேண்டிக் கொள்வதை விடுத்து அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு இன்று நேர்ந்து வரும் தீங்குகளி லிருந்து திவ்ய தேசங்கள் விடுபடவேண்டும் என்றும், நம் தரிசனம் வளரவேண்டும் என்றும் மங்களாசாஸனம் செய்வதே முக்கியமான அனுஷ்டானம். அந்தந்த திவ்யதேசப் பாசுரங்களை அனுஸந்திக்கலாம். எம்பெருமானைச் சேவிக்கும்போது நாம் கடைப் பிடிக்கவேண்டிய விதிகளான ஸ்நாநம் ஊர்த்வ புண்ட்ரதாரணம் முதலானவற்றையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டும். பல வருடங்கள் நேரில் சென்று திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்து விட்டு, இப்போது செய்ய இயலாத அடியேனைப் போன்றவர்கள் மானசிகமாக முன் செய்த யாத்திரைகளை நினைத்து ஆறுதலடையலாம். தொலைக்காட்சி மூலம் திருமலை ப்ரஹ்மோத்ஸவம் முதலானவற்றைக் கண்டு களிக்கும்போது முன்பு நேரில் சென்றபோது ஏற்பட்ட அனுபவத்திற்கு நிகரான அனுபவம் ஏற்படுகிறது.

(1) U. நரசிம்மன், தேப்பெருமாநல்லூர்.
(2) S. கோதை, கரியமாணிக்கம்,

79. சில வாரங்களாக, சென்னைத் தொலைக்காட்சி பொதிகை அலைவரிசையில் சனிக்கிழமை தோறும் இரவு 7-00 மணி முதல் 7-30 வரை ராமாநுஜரின் வாழ்க்கை வரலாறு தொடராகச் சித்திரிக்கப்படுகிறது. இதை விமர்சிக்க வேண்டுகிறோம்.

http://acharya.org

கடந்த பல வாரங்களாக நாம் இதைப் பார்த்து வருகிறோம். ராமாநுஜருடைய வரலாற்றைக் கூறும் ஆறுயிரப்படி குருபரம்பராப்ரபாவம், ப்ரபந்நாம்ருதம், கோயிலொழுகு முதலான நூல்களைப் பின்பற்றி ராமாநுஜர் வரலாற்றை அமைத்ததாகக் கூறிக்கொள்ளும் இவர்கள், ஷெ நூல்கள் எதிலுமே கூறாத விஷயங்களை இதில் புகுத்தியுள்ளார்கள். அவற்றில் ஒரு சில பின்வருமாறு :— (1) ராமாநுஜர் திருக்கோட்டியூரில் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் சேரிகளுக்கு அனுப்பி சேரி மக்களை ஒன்று கூட்டி, அவர்களைத் திருமண் கூட இட்டுக் கொள்ளச் சொல்லாமல் "ஓம் நமோ நாராயணாய" என்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தைத் தாம் சொல்லி அவர்களைத் திருப்பிச் சொல்லச் செய்கிறார். (குருபரம்பரை முதலான நூல்களில் இந்த மந்திரத்தின் பொருளைக் கற்பதில் ஆசையுள்ள சில வைஷ்ணவர்களுக்கு மந்திரத்தின் அர்த்தத்தை உபதேசித்தார் என்று தான் உள்ளதேயொழிய இவர்கள் சித்திரிப்பது போல் இல்லை.) (2) ராமாநுஜர் இளம் வயது முதலே திருமண் கூட இட்டுக்கொள்ளாத சேரி மக்கள் மேல் தோள்மேல் கை போட்டுக்கொண்டு பழகுகிறார். (3) அவர்களில் ஒருவர் பிச்சையெடுக்க வந்தபோது அவரது காலை அலம்பி வணங்குகிறார். (4) அவர்களில் ஒருவருக்குப் பாம்பு கடித்தபோது கடிவாயில் வெட்டி, தம் வாயால் இரத்தத்தை உறிஞ்சி முதலுதவி செய்து காப்பாற்றுகிறார். (5) அவர்களில் ஒருவன் நீர் நிலையில் விழுந்து தத்தளித்தபோது அவனைத் தூக்கிக் கரையேற்றுகிறார். (6) இக்காரியங்களை எல்லாம் செய்ததால் ராமாநுஜருடைய தந்தையான கேசவ ஸோமயாஜியை ஊரிலுள்ள வைஷ்ணவர்கள் கோயிலிலிருந்து விலக்கி வைக்கிறார்கள். ஸந்நிதி வீதிகளில் நடக்க முடியாதபடி செய்கிறார்கள். இதனால் அவர் மனமுடைந்து இறந்து போகிறார். (7) எம்பாரின் பெற்றோரும் இதற்காகக் கேசவஸோமயாஜியைக் கண்டிக்கிறார்கள். இப்படி மற்றும் பல, எந்த நூலிலும் ஆதாரமில்லாத காட்சிகள் இதில் காட்டப்படுகின்றன. மொத்தத்தில், வேதத்திற்குப் புறம்பாகவும், அதற்கு அவப்பொருளுரைத்தும் மக்களைக் கலக்கிய மதங்களை ப்ரமாணங்கள் கொண்டு மறுத்து, விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே வைதிக மதம் என்று நிலை நிறுத்துவதற்காக அவதரித்தவராகப் பழையவரலாற்று நூல்களால் சித்திரிக்கப்படும் ஸ்ரீராமாநுஜரை, சாதிகளை ஒழிக்க முயலும் தற்கால அரசியல்வாதியாகச் சித்திரித்திருக்கிறார்கள்.

http://acharya.org

ஸ்ரீராமாநுஜருடைய ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலான க்ரந்தங்களைப் படித்தால் அவர் நாலு வர்ணங்களும் எம்பெருமானால் ஸ்தாபிக்கப்பட்டவை என்றும், அந்தந்த வர்ணங்களைச் சேர்ந்தவர்கள் அவரவர்க்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட தர்மங்களின்படியே ஒழுக வேண்டும் என்றும், இப்படி நடப்பது தான் எம்பெருமானுக்கு ஆராதனம் என்றும், இப்படி நடப்பவர்கள் தான் அவனை அடையமுடியும் என்றும் மிகத்தெளிவாகப் பல விடங்களில் கூறியிருக்கிறார்.

ஆனால் சாத்திரங்களில் உள்ள இந்தப் பொதுவிதிக்கு ஒரு விதி விலக்கு உண்டு. அதாவது—"தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவன் உண்மையான மறந்தும் புறந்தொழாத வைஷ்ணவனாக மாறினால் அவனுக்குத் தாழ்ந்த சாதியால் விளைந்த தாழ்வு போய்விடும். அவன் மிகவுயர்ந்த தொண்டக் குலத்தையடைகிறான். அவனை வைஷ்ணவர்களனைவரும் பூஜிக்கலாம்" என்பதே அந்த விதிவிலக்கு. இந்த விதி விலக்கைப் பின்பற்றி ஸ்ரீ ராமாநுஜர் பல்லாயிரக்கணக்கான தாழ்ந்த சாதியினரை வைஷ்ணவர்களாக்கி உயர்த்தினார். அத்தகையவர்களில் ஒருவரான பிள்ளையுறங்காவல்லி தாஸரைத் தாம் நீராடிய பின்பு கையைப் பிடித்து வருவதன் மூலம் தம்மையே புனிதப்படுத்துபவராகக் கூறினார். அவர்களில் சிலரைத் 'திருக்குலத்தார்' எனத்திருநாமமிட்டு ஆலயப்ரவேசம் செய்வித்தார். அவருடைய ஆசார்யரான பெரிய நம்பி தாழ்ந்த சாதியைச் சேர்ந்த உத்தம வைஷ்ணவரான மாறனேர் நம்பிக்கு பிரம்மமேத ஸம்ஸ்காரம் செய்ததும் இந்த விதி விலக்கைப் பின்பற்றியேயாகும். ராமாநுஜர் வழிவந்த பல ஆசார்யர்களும் சிறந்த வைஷ்ணவர்களாக மாறிவிட்ட தாழ்ந்த சாதியினரை மிகவுயர்ந்த மதிப்புக் கொடுத்து ஆசார்யர்களாகவும் கொண்டிருக்கிறார்கள். பிராம்மணோத்தமரான மதுரகவியாழ்வார் நாலாவது வர்ணத்தைச் சேர்ந்த நம்மாழ்வாரை ஆசார்யராகக் கொண்டதும், தாழ்ந்த சாதியில் பிறந்த திருப்பாணாழ்வாரை ரங்கநாதன் லோகசாரங்க மாமுனிவரின் தோளிலே சுமந்து வரச்செய்ததும் இந்த விதிவிலக்கை நடைமுறைப்படுத்தியதேயாகும். இவையொன்றையும் உணராமல் இந்தத் தொலைக்காட்சித் தொடரை உருவாக்கியவர்கள் இராமாநுஜரை நவீன அரசியல்வாதியைப் போல்படம் பிடித்திருப்பது மிகவும் கண்டனத்துக்குரிய செயலாகும். அடுத்த இதழில் மேல் வரும் காட்சிகளில் உள்ள குறைகளை விமர்சிப்போம்.

http://acharya.org

திருவெள்ளறை மேலத் திருமாளிகை ஸௌம்ய நாராயணுசார்யர், திருவெள்ளறை.

80. ஹயக்ரீவ ப்ரியா — 2000 நவம்பர் இதழில் "பிள்ளான் காட்டும் அபூர்வ அனுபவங்கள்" என்னும் கட்டுரையில், "நிர்ஹேதுக க்ருபையாலேயே மோக்ஷம் கிடைக்கிறது" என்று பிள்ளான், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை முதலான மஹாசார்யர்கள் மிகத் தெளிவாகக் காட்டியுள்ள அர்த்தத்தைக் கண்டித்து எழுதியிருந்தார் வ. ந. வேதாந்த தேசிகன். அதுபற்றி அடியேன் ஸுதர்சனர் பதில் இந்த சதகம் 70-வது கேள்வியில் விமர்சிக்கக் கோரியிருந்தேன். தேவரீரும் விரிவாக (சுமார் நான்கு பக்கங்களில்) பதில் எழுதியிருந்தீர்கள். அதற்கு எந்த பதிலையும் கூருமல், ஹ.ப்ரியா 2001 ஏப்ரல் மே இதழ்களில் "வெறிதேயருள் செய்வர் செய்வார்கட்குகந்து" [திருவாய் 8-7-8] என்னும் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திக்கு "இப்படி அபிநிவிஷ்டனாய்க் கொண்டு தன்னுடைய ஸர்வைஶ்வர்யத்தோடுங்கூட என்னுள்ளே புகுந்திருந்தருளுகைக்கு ஹேதுவென்? என்றால், ஒரு ஹேதுவின்றியே வெறிதே செய்தருளினனென்கிருர்" என்று பிள்ளான் நிர்ஹேதுக க்ருபையை நிலைநாட்டிச் செய்திருக்கும் வ்யாக்யானத்தை எடுத்துக்கொண்டு விதண்டாவாதம் செய்து ஸஹேதுக க்ருபையையே பிள்ளான் காட்டுகிருர் என்று எழுதியிருக்கிருர். இதை விமர்சிக்கக் கோருகிறேன்.

'பிள்ளான் வ்யாக்யானம் தெளிவாய் இல்லை' என்று அடிக்கடி எழுதுகிருர் இவர். தன் நெஞ்சில் உள்ள தெளிவின்மையைப் பிள்ளான் மேல் ஏறிடுகிருர். "சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும் தன் நெறியா வயிற்றில் கொண்டு நின்றொழிந்தாரே" என்று இப்பாட்டின் பிற்பாதியை எடுத்துக் கொண்டு "ஆழ்வார் பெருமாளைச் சிந்தையில் இருத்தி வைக்கிருரே, அது அவர் செய்த உபாஸனம் தானே" என்று எழுதுகிருர் இவர். இதிலிருந்து இவர் ஆழ்வார் ப்ரபந்நர் என்று எல்லாப் பூர்வாசார்யர்களும் ஒப்புக் கொண்டிருக்கும் உண்மையை மாற்றி ஆழ்வாரை உபாஸகர் ஆக்கப் பார்க்கிருர் என்று விளங்கு

http://acharya.org

கிறது. மேலும் "சிறியேனுடைச் சிந்தையுள் (பெருமாள்) நின்றொழிந்தார்" என்று ஆழ்வார் தெளிவாக எம்பெருமான் தானே மேல் விழுந்து நிர்ஹேதுகமாக ஆழ்வாருடைய சிந்தையில் வந்து சேர்ந்ததைக் குறிப்பிடுகிறார். இவர் அதை மாற்றி 'ஆழ்வார் பெருமாளை சிந்தையில் இருத்தி வைக்கிறார்' என்று எழுதுவது வேண்டுமென்றே பொய் கூறுவதையோ அல்லது நெஞ்சில் தெளிவின்மையையோ காட்டுகிறது. "நாம் ஏதும் செய்ய வேண்டாம். செய்யக் கூடாது. பெருமாள் வெறுமனேயே மோக்ஷம் தருவார்' என்று கூறுவது அதிகப்ரஸங்கம் தானே!" என்று தென்னாசார்ய ஸித்தாந்தத்தைப் புரிந்து கொள்ளாமலேயே கேலி செய்கிறார். 'இப்படி வாதம் செய்தால் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் ஏற்படும்' என்றும் கூறுகிறார். இதிலிருந்து தென்னாசார்ய ஸம்ப்ரதாயம் என்னவென்றே புரிந்து கொள்ளாமல் அதைக் கண்டிக்கத் தொடங்கி விட்டார் என்று விளங்குகிறது. இவ்விஷயத்தில் தென்னாசார்ய ஸம்ப்ரதாயம் என்ன சொல்லுகிறது என்பதை இவருக்குப் புரிய வைப்போம்.

உலகில் வல்லமை உடைய ஒருவர் மற்றவரைக் காப்பாற்றுவது இரண்டு விதத்தில் நடக்கிறது. (1) ஒரு குடும்பத் தலைவன் தனது மனைவியையும், பிள்ளைகளையும் ரக்ஷிப்பது அவர்களோடு தனக்குள்ள உறவைப் பார்த்தேயாகும்; பெண்டு பிள்ளைகள் தனக்கு என்ன கைம்மாறு செய்கிறார்கள் என்பதைக் கருதி ரக்ஷிப்பது இல்லை. இது ஒரு வகை ரக்ஷணம். (2) ஒரு எஜமானன் தன்னிடம் வேலை செய்யும் வேலைக்காரனுக்கு அவன் செய்யும் வேலைக்குக் கூலியாகவே பணம் முதலானவற்றைக் கொடுத்து அவனை ரக்ஷிக்கிறான். இது இரண்டாவது வகை ரக்ஷணம் ஆகும். பக்தி, ப்ரபத்தி முதலானவற்றை உபாய புத்தியுடன் அநுஷ்டித்து மோக்ஷத்தை அதற்குப் பலனாகப் பெறுவது வேலை செய்து கூலி பெறும் வேலைக்காரனுக்குக் கிடைக்கும் ரக்ஷணம் போலே தாழ்ந்தது என்பது எவருக்கும் விளங்கும். "ஸ்வயம் ப்ரயோஜனமான பக்தியை மோக்ஷத்திற்கு ஸாதனம் ஆக்குவது ஒரு மனைவி தான் புருஷனுக்குக் கொடுக்கும் கலவி இன்பத்திற்குக் கூலி வாங்குவது போன்றது" (புத்ரபேரக்ஷத்தை விலைக்குறுப்பாக்குமாபோலே) என்று தென்னாசார்யர்கள் பக்தியை உபாயமாக்குவதிலுள்ள தாழ்வைக் காட்டியிருக்கிறார்கள். 'நீயே உபாயம் ஆவாயாக' எனப் பிரார்த்

http://acharya.org

திக்கும் சரணாகதியும் 'உபாயம்' என்னும் நினைவுடன் செய்யத் தகாதது. தகுதியைக் காட்டும் அதிகாரி விசேஷணமே அது. உறவைக் கொண்டு ரக்ஷணத்தைப் பெறும் மனைவி மக்களைப் போன்றே ப்ரபந்நர்கள் உறவை அநுஸந்திக்கும் அதிகாரி விசேஷணமான ப்ரபத்தியினாலே மோக்ஷத்தைப் பெறுகிறார்கள் என்பது தென்னாசார்யர்களின் தேர்ந்த முடிவு. உறவைக்கொண்டு பெண்டு பிள்ளைகளை ரக்ஷிக்கும் குடும்பத் தலைவன் அவர்களை நிர்ஹேதுகமாக ரக்ஷிக்கிறான் என்று சொல்வதில் தவறு இல்லை. உறவைப் பார்த்து ரக்ஷிக்கிறான் என்றே அதற்குப் பொருள். இவர் கூறுவதுபோல் "நாம் ஏதும் செய்ய வேண்டாம்; செய்யக்கூடாது. பெருமாள் வெறுமனேயே மோக்ஷம் தருவார்" என்று தென்னாசார்யர்களோ அவர்கள் வழியைப் பின்பற்றும் தென்கலையினரோ எவருமே கூறவில்லை. எம்பெருமானையே தஞ்சமாகக் கொள்ளும் சரணாகதி நமக்கும் அவனுக்கும் உள்ள ரக்ஷ்யரக்ஷகபாவம், பிதாபுத்ர ஸம்பந்தம், சேஷ சேஷி பாவம், பர்த்ருபார்யா ஸம்பந்தம் முதலான (எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள) உறவுகளை அநுஸந்திப்பதே ஆகையால் அத்தகைய சரணாகதியை த்வயத்தை அநுஸந்திப்பதன் மூலம் செய்யும் ப்ரபந்நர்களுக்கு நிர்ஹேதுகமாக (அதாவது ஓர் உபாயத்தை எதிர்பாராமல்) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்கிறான்—என்றே அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் ஸர்வ முக்திப்ரஸங்கம் வராது. இவர்கள் வேலை செய்து கூலி வாங்குவது போலே 'ப்ரபத்தியை உபாயமாகச் செய்து மோக்ஷத்தைப் பெறுகிறோம்' என்று தாராளமாகக் கூறிக் கொள்ளட்டும். 'ஸஹேதுக க்ருபைக்கு இலக்காக்கி இவர்களுக்கும் எம்பெருமானே மோக்ஷம் கொடுக்கிறான்' என்பதை நாம் ஏற்கிறோமேயொழிய மறுக்கவில்லை. இவர்கள்தான் எம்பெருமானுக்கு "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" [பெரிய திருவ. 56] "ஓர் எண்தானும் இன்றியே வந்து இயலும்" [திருவாய் 1-10-5] முதலான பலவிடங்களில் ஆழ்வார் அநுஸந்திக்கும் உண்மையான நிர்ஹேதுக க்ருபையை மறுக்கிறார்கள். விதண்டாவாதம் செய்து எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையை ஸஹேதுக க்ருபையாக்கப் பார்க்கிறார்கள். இவ்விஷயம் பற்றி "தென்கலையும், வடகலையும்" என்னும் நூலில் நாம் விரிவாக விளக்கியிருக்கிறோம். அந்நூலையும் இவருக்கு அனுப்பியிருக்கிறோம். இதனைப் பெற்றுத் தெளிவடைந்து, தென்னாசார்யர்களை தூஷிப்பதையும் அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்குத் திரித்துப் பொருளுரைப்பதையும் இவர் நிறுத்துவார் என நம்புகிறோம்.

http://acharya.org

இல. சீனிவாசன், சென்னை-59.

81. ஹோமியோபதி மருத்துவ முறையின் நிறுவனர்களான டாக்டர்கள் சாமுவேல் ஹானிமன், ஜேம்ஸ் டைலர் கெண்ட், நாஷ், எம். எல். டைலர், ஹெரிங் ஆகியோர் ஹோமியோபதி மருந்துக்களைப் பயன்படுத்தும் போது மட்டுமன்றி பொதுவாகவே வெங்காயம், வெள்ளைப்பூண்டு போன்ற தாவர உணவுகளையும் அவைஷ்ணவ உணவுகளையும் (தாவர உணவல்லாதனவையையும்) அறவே விலக்க வேண்டுமென்றும், தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும் கூறுகின்றனர். இந்திய வேத சாஸ்த்திரங்களில் வேத விஞ்ஞானத்தில் இதற்கு ஆதாரமுள்ளதென்றும் கூறுகின்றனர். இதனால் சாமுவேல் ஹானிமனை கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஜெர்மனி நாட்டை விட்டே விரட்டி அவர் தயாரித்த மருந்துகளை சர்ச் வளாகத்தில் புதைத்து அழித்துச் சீறினார்கள். தாவர உணவை மட்டுமே உண்பதையும், அதிலும் பூண்டு, வெங்காயம் முதலியவற்றை நீக்கச் சொல்லும் ஆகார நியமத்துக்கு நமது வேத சாஸ்திரங்களில் ஆதாரமுள்ளதா? ஸ்ரீவைஷ்ணவர்களுக்கென்று தனியே ஆகார நியமம் உண்டா?

உணவு வகைகள் கீதையிலும், ஸ்ம்ருதிகளிலும்; ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ராஜஸம் கோபத்தையும், தாமஸம் காமம், தூக்கம், சோம்பல் முதலானவற்றையும் உண்டாக்குமென்றும் சொல்லப்படுகிறது. ஸாத்விகரான வைஷ்ணவர்கள் ஞானத்தை வளர்க்கும் ஸாத்விக ஆகாரத்தை மட்டுமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது தானே விளங்கும். க்ஷத்ரியர் முதலானவர்ணங்களுக்கு மாம்ஸ உணவு ஸ்ம்ருதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், வைஷ்ணவத்தில் மாம்ஸ உணவு அறவே விலக்கப்பட்டுள்ளது. "கொல்வன முதலா அல்லன" [திருவாசிரியம்] முதலான இடங்களில் ஆழ்வாரும் மாம்ஸ உணவு தகாதது என்று வலியுறுத்தியிருக்கிறார். திருக்குறளிலும் கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீவேதாந்த தேசிகர் ஆகாரநியமம் என்னும் நூலில் வைணவர்கள் ஏற்கத்தக்க ஸாத்விக உணவு வகைகளைக் காட்டியிருக்கிறார். சென்ற நூற்றாண்டு வரையில் வைணவ சமூகத்தில், வெங்காயம், முருங்கை, முள்ளங்கி முதலான

http://acharya.org

தாமஸ உணவுகள் விலக்கப்பட்டே வந்தன. நாடு சுதந்திரமடைந்த பின் இந்த நியமம் மிகவும் குறைந்து விட்டது. இப்போதும் தாமஸ மான உணவு வகைகளை விலக்கியிருக்கும் வைஷ்ணவர்கள் சிலர் காணப்படுகின்றனர். மற்றவர்கள் 'மாம்ஸ உணவுகளை விலக்கினால் போதும், தாவர உணவுகளில் எதையும் விலக்க வேண்டாம்' என்ற எண்ணத்துடன் செயல்படுகின்றனர். அடியேனுக்கு 40 வயதிற் குள்ளேயே ஏற்பட்ட சிறுநீரக வியாதி (NEFRITES) ஹோமியோபதி மருத்துவத்தின் மூலமே குணமாயிற்று. 'உம்மைப்போல் காபி சாப்பி டாமல் இருப்பவர்களுக்கு ஹோமியோபதி மருத்துவம் நன்கு பலிக்கும்' என்று என்னுடைய ஹோமியோபதி மருத்துவர் [(லேட்) டாக்டர் ஸ்ரீராம்] கூறியிருக்கிறார். காபிப் பழக்கம் உள்ளவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவார். வெளிநாட்டிலிருந்து இந்த நூற்றாண்டில் வந்து சேர்ந்த காபிப் பழக்கம் சமூகம் முழுவதும் பரவி விட்டது. ஆகார நியமங்கள் பழைய நிலையை சமூகத்தில் அடையும் என்றும் தோன்றவில்லை.

S. வாசுதேவன், கூத்தனூர், பூந்தோட்டம்-609 503.

82. அடியேனுடைய ஊருக்கு அருகில் உள்ள முடிகொண் டான் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகோதண்டராமன் ஸந்நிதி யில் 1—6—2001 வெள்ளியன்று மஹா ஸம்ப்ரோக்ஷணம் வைகா நஸ ஆகம முறைப்படி நடந்தது. செவ்வாய்க்கிழமை 29—5—2001 அன்று தொடங்கிய அதில் ஒவ்வொரு வேளையும் அருளிச்செயல் ஸேவை சாற்றுமுறையும் நடைபெற்றது. ஸேவாகாலம் தொடங்கு வதற்கு முன்னதாக வைகாநஸ பட்டர்கள் "பெருமாளைத் தீர்த் தத்தில் ஆவாஹனம் செய்வதால் எங்கள் வைகாநஸ ஆகமத்தில் யாக சாலையில் தீர்த்த கோஷ்டி கிடையாது" என்று கூறி சாற்று முறைக்குப் பிறகு தீர்த்தம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அத னால் ஸேவிக்க வந்த ஸ்வாமிகள் ஸேவிக்காமல் திரும்பிச்சென்று விட்டார்கள். இதே கோயிலில் 1970 ஸம்ப்ரோக்ஷணத்திலும் 1999.ல் ஸ்ரீஆஞ்சநேயருக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்தபோதும் தீர்த்தம் வழங்கப்பட்டது. இதுபற்றி விமர்சித்துப் பரிஹாரம் உரைக்க வேண்டுகிறேன்.

மூலஸ்தானத்தில் மஹா ஸம்ப்ரோக்ஷணமாகி, சாத்துமுறையான பின்பு தீர்த்த கோஷ்டி நடப்பதே பல திவ்யதேசங்களில் காணப்படு கிறது.

http://acharya.org

S. ஜகந்நாதன், ஸ்ரீரங்கம்.

83. "ஸ்ரீபெரும்பூதூர் எம்பெருமானுக்குப் பாலபிஷேகம் செய்வது ராகு கேது கிரகங்களால் ஏற்படும் தோஷத்திற்குப் பரிகாரம்" என்னும் வாதம் சென்னை ஜோதிட ஆராய்ச்சி மையத்தை நடத்தும் A M ராஜகோபாலன் என்னும் ஜோதிடரால் கிளப்பி விடப்பட்டு, ஸமீப காலத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் பாலபிஷேகம் ஓர் வியாபாரம் போல் நடந்து வருகிறது. இது தவறு என்று பலர் சுட்டிக் காட்டியும் தேவஸ்தான நிர்வாகிகள் ராகு கேது தோஷ பரிகாரமாக எம்பெருமானார் திருமேனியில் மிகுதியாகப் பாக்கெட் பால் அபிஷேகம் செய்து வருகின்றனர். இது பற்றிய சர்ச்சையில் தினமணி 8—6—2001 இதழில் ஜோதிடர் A M ராஜ கோபாலன் "எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை சரணம் அடைவதே தோஷங்கள் நிறைந்த இப்பிறவிக்குச் செய்யும் பரிகாரம் அல்லது பிராயச்சித்தம் ஆகும்" என்று தொடங்கி விதண்டா வாதங்களை வெளியிட்டிருக்கிறார். இதனை விமர்சிக்கும்படி வேண்டுகிறேன்.

சரணாகதி என்றால் என்ன என்றே அறியாத ஜோதிடர் அதனைப் பிறவி நோய்க்குப் பரிகாரம் என்று வர்ணித்து, பாமரமக்கள் தங்களுடைய ராகு கேது தோஷ பரிகாரத்திற்கு எம்பெருமானார் திருமேனியின் மேல் பாக்கெட் பால் அபிஷேகம் செய்வதை நியாயப்படுத்துவது முறையற்றது. சரணாகதியைப் பற்றி இந்த சதாம் 80-வது பதிலில் காட்டியபடி "அது எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள உறவுகளை அநுஸந்திப்பதேயான சையால் சேதனன் மோக்ஷத்தைப் பெறுவதற்குத் தகுதியைக் காட்டும் அதிகாரி விசேஷணமே ஆகும்" என்று தென்னாசார்யர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். வேதாந்த தேசிகர் 'சரணாகதி மோக்ஷத்தைப் பெறுவதற்கு ஓர் உபாயம் ஆகும்' என்று திருவுள்ளம் பற்றியிருக்கிறார். எந்த ஆசார்யரும் அது பிறவி நோய்க்குப் பரிகாரம் அல்லது பிராயச்சித்தம் என்று கூறவில்லை. வாதத்திற்காக அப்படி ஒப்புக் கொண்டாலும், ராகு கேது தோஷங்களால் இவ்வுலகில் பிள்ளையில்லாமல் போவது முதலான தடைகள் நீங்குவதற்காக எம்பெருமானார் திருமேனியில் பாலபிஷேகம் செய்வது அவருக்கு இழைக்கும் அபசாரம் ஆகும். அவர் தமது கத்யத்ரயத்தில் "பிதரம் மாதரம்" எனத் தொடங்கும் ஶ்லோகத்தில் "உற்றார் உறவினர் ஆகிய அனைவரையும்

http://acharya.org

எல்லாச் செல்வங்களையும், எல்லாச் சாதனங்களையும், எம்பெருமானை அடைவதைத் தவிர மற்ற எல்லாப் பயன்களையும் கைவிட்டு உலகளந்த திருவடியை உபாயமாகக் கொள்கிறேன்'' என்று சரணாகதி செய்திருக்கிறார். இவ்வுலகப் பயன்களைப் பெறுவதற்குத் தடையான ராகு கேது தோஷங்களுக்குப் பரிகாரமாக அவர் திருமேனியிலேயே பாக்கெட் பாலைக் கொட்டுவது அருக்கும், அவர் நிலைநிலைநாட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கும் இழைக்கப்படும் பெரிய துரோகம் ஆகும். ஜோதிடர் தம் பிழைப்புக்காக இதை நியாயப்படுத்த முயல்வது கண்டிக்கத்தக்கது.

உ. நரசிம்மன், தேப்பெருமாள்நல்லூர்.

84. பிரபல சினிமா நடிகர் டைரக்டரான திரு. ''விசு'' அவர்கள் பல ஊர்களில் நடத்தும் அரட்டை அரங்கத்தை ''சன்'' டிவியில் ஞாயிறு தோறும் காட்டுகிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு சீர்காழி அருகில் உள்ள கொள்ளிடத்தில் நடத்தப்பட்ட அரட்டை அரங்கத்தில் பைனான்ஸ் கம்பெனிகளைக் கிண்டல் செய்யும் பொழுது ஒருவர் ''பைனான்ஸில் போடப்பட்ட பணம் கோவிந்தாவாகிவிட்டது'' எனக் கிண்டல் செய்தார். மற்றொருவர் ''பைனான்ஸ் கம்பெனியில் பணம் போடுபவர்களுக்குப் பட்டை நாமம்'' என்றார். இதைக் கண்டித்து ''இதைப்போன்று மற்ற மதச் சின்னங்களைக் கிண்டல் செய்திருந்தால் வன்முறை வெடித்திருக்கும்'' என்று விசுவிற்குக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் ''வைணவர்கள் மனத்தைப் புண்படுத்துவது அறிந்து வேதனைப்படுகிறேன். இதை ஏதாவது ஒரு அரட்டை அரங்கத்தில சொல்கிறேன்'' என்று 2-4-2001 கடிதத்தில் பதில் எழுதினார். இதுபோலவே தினமலர் திருச்சி பதிப்பில் ''அண்ணா விருது பெற்றவர்களுக்குப் பட்டை நாமம்'' என்னும் செய்தி வந்தது. தினமலர் திருச்சி அலுவலகத்தோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மதச் சின்னம் அவமதிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டினேன். தினமலர் துணை ஆசிரியரான 'ராஜன்' என்பவர் வருத்தத்தைத் தெரிவித்ததோடு இனி இவ்வாறு தவறு நடக்காமல் பார்த்துக் கொள்வதாகக் கூறினார். மற்ற பத்திரிகைகளிலும் தொடர்ந்து நடந்து வரும் இத்தவறைத் திருத்த, தொலைபேசி மூலமோ, நேரிலோ கண்டனத்தைத் தெரிவித்தால் நல்ல பலனைத்தரும் என்பது எனது எண்ணம். இதை ஸுதர்சனர் பதிலில் வெளியிட வேண்டுகிறேன்.

http://acharya.org

தினமலர் 3 – 6 – 2001 வாரமலர் திண்ணைப் பகுதியில் தியாகராஜரே தம் கீர்த்தனையில் பட்டை நாமம் சாத்துவதைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காட்டி இதை நியாயப்படுத்த முயன்றுள்ளது. ஸ்மார்த்தர்களால் தியாகராஜர் காலத்திலேயே இந்தப் பரிஹாஸ வழக்கு ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்று இதிலிருந்து தெரிகிறது. ஸ்மார்த்தர்களாலும், சைவர்களாலும் நடத்தப்படும் பத்திரிகைகள் இது விஷயத்தில் திருந்துவது கடினம். பல வருடங்களாகப் பலர் சுட்டிக் காட்டிய பின்பும், இத்தவறைப் பிடிவாதமாகத் தொடர்ந்து செய்து வரும் "துக்ளக்—சோ" போன்றவர்கள் திருந்துவார்கள் என்று தோன்றவில்லை. நமது அன்பர் அவரை நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டு எழுதலாம். இவ்விதழில் வெளிவரும் ராமபாணத்தைப் பார்க்கவும். திருமண் காப்பை அவமதிப்பது தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் கர்நாடகத்திலும் நடப்பதை அன்பர் ஒருவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பெங்களூர் பதிப்பில் ஜூன் 3-ந் தேதியன்று "V S சர்மா" என்னும் ஸ்மார்த்தர் "Wearing One's faith on the forehead" (ஒருவருடைய மத நம்பிக்கையை நெற்றியில் அணிந்து காட்டுவது) என்னும் கட்டுரையில் திருமண் காப்பைப் பற்றியும், வைணவத்தைப் பற்றியும் பொய்யாகவும் அவதூறாகவும் பல விஷயங்களை எழுதியுள்ளார். அதில் "முஸ்லிம் கலவரத்தின்போது முஸ்லிம் படை வீரர்கள் வைஷ்ணவர்கள் நெற்றியில் இருந்த திருநாமத்தை நாக்கால் நக்கி அழித்தார்கள். இதை நிறுத்துவதற்காக வைஷ்ணவகுரு ஒருவர் திருமண்ணில் விஷத்தைக் கலந்து இடும்படி செய்து நக்கியவர்கள் அழியும்படி செய்தார்" என்னும் பொய்க்கதை ஒன்றை எழுதியிருக்கிறார். வைணவர்கள் கோயில் பிரசாதத்தைக் கொடுத்து மதமாற்றம் செய்து விட்டார்கள் என்றும் பிதற்றியிருக்கிறார். இப்படி மற்றும் பல. இதனைக் கண்டித்து நமது அன்பர் திரு. "T. பார்த்தசாரதி, பெங்களூர்-75" அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ், பெங்களூர் பதிப்பு ஆசிரியர் சுரேஷ்மேனனுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இத்தகைய அக்கிரமங்களை நிறுத்துவதற்கு வைணவர்கள் ஸாத்விகப் போராட்டங்கள் (அறப்போர்கள்) நடத்த வேண்டும்.

http://acharya.org

K. K. சுந்தரராஜன், ஸ்ரீரங்கம். [85, 86 கேள்விகள்]

85. ஹயக்ரீவப்ரியா, விஷு-வூ ஆடி-மீ [ஜூலை 2001] இதழில், ''ஸ்ரீவேதாந்த தேசிக மங்களம்'' என்னும் கட்டுரையில், பையம்பாடி சேட்டலூர் வித்வான் வா. ஸ்ரீவத்ஸாங்காசார்யர் 'தேசிகன் கண்டையாகிற மணி அம்சம்' என்பதை விவரித்து வரும்போது, ''திருமலையில் எந்த ஆழ்வார் ஆசார்யர்களும்(?) கோவில் உள்ளே ஸன்னிதி இல்லாமலிருக்க, ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு மட்டிலும் ஸந்நிதி அமைந்திருப்பதும், இந்த வ்ருத்தாந்தம் மிகவும் ஆப்தரானவர்களின் வாக்யமாகும். ஸ்ரீஸ்வாமி தேசிகன் கண்டாவதாரர் என்பது பற்றியே சில ஏகதேசிகள் த்வேஷத்தால் திருவாராதன காலத்தில் கண்டையை ஸேவிப்பதில்லை என்பர். 'கண்டா கோஷம் த்யஜந்தோ ஹரிபரிசரணே ஸர்வலோகாவிகீதம்' என்று அரசாணிபாலை ஸ்ரீவேங்கடாத்வரியும் இதை விச்வகுணாதர்சத்தில் குறித்து வைத்தார்'' என்று எழுதியுள்ளார். இதை விமர்சிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

அநந்விதமான இவரது வாக்யத்திலுள்ள சொற்பிழைகளைக் கருத்தில் கொள்ளாமல், இதில் சொல்லப்பட்ட பின்வரும் இரண்டு கருத்துக்களை விமர்சிக்கிறோம். (1) எந்த ஆழ்வார் ஆசார்யர்களுக்கும் திருமலைக் கோயிலின் உள்ளே ஸந்நிதி இல்லாமலிருக்க ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு மட்டும் ஸந்நிதி அமைந்திருக்கிறது. (2) ஸ்ரீஸ்வாமி தேசிகன் கண்டாவதாரர் (திருமலைமணியின் அவதாரம்) என்பது பற்றியே சில ஏகதேசிகள் (தென்கலையினர்) த்வேஷத்தால் திருவாராதன காலத்தில் கண்டையை (மணியை) ஸேவிப்பதில்லை. இதை அரசாணிபாலை வேங்கடாத்வரி விச்வகுணாதர்சத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (இவற்றை விமர்சிக்கிறோம்.)

1. திருமலைக் கோயிலுக்குள் அப்பனுக்குச் சங்காழி அளித்து அவரை நிலைநாட்டியவராய், ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி எம்பெருமானார் ஒருவருக்கே ஸந்நிதி உள்ளது என்பது எல்லாவுலகும் அறிந்த உண்மை. இப்போதும் கண்குளிர ஸேவிக்கலாம். எந்தக் காலத்திலும் அங்கு தேசிகன் ஸந்நிதி இருந்ததாக எந்த ப்ரமாணமும் கூறவில்லை. இப்படி இருக்கும்போது, சிருங்கேரி சங்கராசார்யரின் ஆஸ்தான வித்வானாக இருந்தவரும், சில வருடங்களுக்குமுன் மறைந்தவருமான ஸந்தான கோபாலாசார்யர் தம்முடைய உபந்யாஸங்களில் முற்கூறிய எம்பெரு

http://acharya.org

மாஞூர் விக்ரஹத்தை தேசிகன் விக்ரஹம் என்னும் பொய்ப்பிரசாரத்தைச் செய்து வந்தார். உடனே புகழுடம்பாளரான காஞ்சி மஹா வித்வான் ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியிடமிருந்து தக்க மறுப்பைப் பெற்று வாய் மூடி நின்றார். 'காஞ்சி மஹா வித்வான் இப்போது இல்லை' என்னும் தைரியத்திலே இவர் அப்பொய்யை மீண்டும் எழுதுகிறார் போலும்! எந்த ஆதாரமும் காட்டாமல் எழுதுவதிலிருந்தே இவர் எழுதுவது முழுப் பொய் என்பது அனைவர்க்கும் விளங்கும்.

2. 'தேசிகன் கண்டாவதாரர் என்பது பற்றியே தென்கலையினர் த்வேஷத்தால், திருவாராதன காலத்தில் கண்டை (மணி) ஸேவிப்பதில்லை' என்று எழுதுகிறார். பரார்த்தமான ஆலயங்கள் அனைத்திலும் திருவாராதன காலங்களில் தென்கலையினர் மணி ஸேவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. வீட்டில் திருவாராதன காலங்களிலே அவர்கள் மணி ஸேவிப்பது இல்லை. "க்ருஹார்ச்சந விதாநேது ஸங்ககண்டாரவம் த்யஜேத்" [பராசர ஸ்ம்ருதி] [வீட்டில் திருவாராதனம் செய்யும்போது மணிஸேவிப்பதையும், சங்கூதுவதையும் விடவேண்டும்.] என்னும் ஸ்ம்ருதி வசனத்தை அதற்கு ஆதாரமாகக் கொள்ளுகிறார்கள். "கோயில்களில் தேவர்கள் அசுரர்கள் முதலான அனைவரும் ஸேவிக்க வருவார்களாகையாலே ஆஸுரப்ரக்ருதிகளை விரட்டுவதற்காக மணி ஸேவிக்கப்படுகிறது" என்றும், "ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகைக்குள் ஆஸுரப்ரக்ருதிகள் வர இடமில்லையாகையால் மணி ஸேவிப்பதில்லை" என்றும் இதற்குக் காரணத்தையும் கூறுகிறார்கள். 'த்வேஷத்தால் ஸேவிப்பதில்லை' என்று இவர் கூறுவது உண்மையெனில் கோவில்களிலும் ஸேவிக்கக் கூடாதே! ஆகையால் இவர் இப்படி எழுதுவது தென்கலையினரிடம் த்வேஷத்தாலேயே என்பது வெளிப்படை. மேலும், "ஆழ்வார்களை எம்பெருமானின் அல்லது ஒவ்வொரு நித்ய ஸூரியின் அம்சாவதாரமாகக் கூறுவது அவர்களுடைய பெருமையைக் கருதிச் செய்யப்பட்ட உல்லேகமே. உண்மையில் பத்தஜீவர்களாயிருந்து எம்பெருமானாலே நிர்ஹேதுகமாக மயர்வற மதி நலம் அருளப் பெற்றவர்களே அவர்கள்" என்று ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டி நம்பிள்ளை முதலான திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் நிர்ணயித்துள்ளனர். அதை ஏற்கும் தென்கலையினர் திருமலைமாலின் திருமணி அம்சமாக தேசிகனைக் கூறுவதும் ஒரு உல்லேகமாகக் கொள்வார்களேயொழிய, அதை உண்மையாக நினைத்து மணி ஸேவிப்பதின்மீது த்வேஷம் கொள்ளமாட்டார்கள். இவர்கள் தேசிகன் கண்டாவதாரம் என்பதற்கு ப்ரமாணமாக எடுக்கும்

http://acharya.org

வேங்கடேஶாவதாரோऽயம் தத்₃க₄ண்டாம்ஶோऽத₂வா ப₄வேத் ।
யதீந்த்₃ராம்ஶோऽத₂வேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்க₃ளம் ॥

[இவர் வேங்கடேசனின் அவதாரமோ? அல்லது அவரது மணியின் அம்சமோ? அல்லது யதிராசரின் அம்சமோ? என்று ஊகம் செய்யப் படுபவரான தேசிகனுக்கு மங்களம்] என்னும் ஶ்லோகத்திலும் இது தேசிக பக்தர்களின் ஊகமே என்று காட்டியிருக்கிறது. தேசிகனும் தம் ஸங்கல்ப ஸூர்யோதய ப்ரஸ்தாவனையில், "...உத்ப்ரேக்ஷயதே பு₃த₄ ஜனை: உபபத்தி பூ₄ம்நா க₄ண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதா₃த்மநேதி" என்று 'அறிவாளிகள் பல காரணங்களைக் காட்டித் தம்மை எம்பெருமானின் மணியாக உத்ப்ரேக்ஷிக்கிறார்கள்' என்றே அருளிச் செய்துள்ளார். இப்படி உத்ப்ரேக்ஷை செய்யப்பட்டிருப்பது காரணமாக யாராவது எம்பெருமானுடைய திருமணி மீது துவேஷம் கொள்ளுவார்களா? இப்படிக் கொண்டால், வேங்கடேசனின் அவதார மாக தேசிகனை உத்ப்ரேக்ஷித்திருப்பதால் வேங்கடேசனின் மீதும் த்வேஷம் கொள்ளவேண்டி வருமே! ஆகையால் துவேஷத்தாலே மணி ஸேவிப் பதில்லை என்று இவர் எழுதுவது வித்வானின் பேச்சாக விளங்கவில்லை; சிறுபிள்ளைத் தனமான பேச்சாகவே உள்ளது. உண்மையில் இவர் நமக்கு மிகவும் தெரிந்தவர். அடியேனை உருவாக்கியவர்களில் ஒருவ ரான கோழியாலம் ரங்கநாதாசார்யஸ்வாமி இவருக்கு மாதுலர். தென் கலை வடகலை ஒற்றுமைக்கு மிகச்சிறந்த சான்றாக நாங்கள் இருவரும் முப்பது வருடங்களுக்குமேல் கூடி வாழ்ந்தோம் என்பதை அறிந்தவர். காமகோடி சங்கராசார்ய சிஷ்யர்களால் நிர்வஹிக்கப்படும் சென்னை மயிலையிலுள்ள ஸம்ஸ்க்ருதக் கல்லூரியில் வடமொழிப் பேராசிரியரா யிருந்து, முதல்வராக வரவேண்டியிருந்த பதவி நீண்டகாலம் அவர் களால் தடுக்கப்பட்டு இறுதியில் அவர்களை அநுவர்த்தித்து அப்பதவி யையும் பெற்றவர். இப்படி வித்வானாயிருக்கும் இவர் தென்கலை வட கலை த்வேஷத்தை வளர்க்கும் இத்தகைய வாக்கியங்களை எழுதியது மிகவும் வருந்தத்தக்கது.

தென்கலை வடகலை த்வேஷத்தை வளர்ப்பதற்காகவே பத்திரிகை நடத்தி, இத்தகைய கட்டுரைகளையே வெளியிடும் 'ஹயக்ரீவப்ரியா' ஆசிரியர் உபயகலையினரிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்காக, அண்மையில் நடைபெற்ற யதிகள் ஸம்மேளனத்தினால் உருவாக்கப் பட்ட குழுவில் ஓர் அங்கத்தினராக இருக்கிறார். இவர் தொடர்ந்து இப் படித் தென்கலை வடகலை ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் கட்டுரைகளை வெளியிடாதவாறு அக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லை யெனில் அக்குழு பயனற்ற ஓர் அமைப்பு என்றே கருதப்படும்.

http://acharya.org

86. ஹயக்ரீவப்ப்ரியா விஷ்ணு-ஹ்ருதய ஆடி-மீ [ஜூலை 2001] இதழில் "பிள்ளான் காட்டும் அபூர்வ அனுபவங்கள்" என்னும் கட்டுரையில், "பெருமாள் இப்படி ஏன் செய்கிறான்? நான் ஆசைப் பட்டேனே அதனால்! (வெறிதே அருள் செய்வர்—கிடையாது!)" என்று எழுதப்பட்டுள்ளது. இதை விமர்சிக்கவும்.

70-வது, 80-வது கேள்வி பதில்களில் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையைப் பற்றி நாம் பல பக்கங்களில் விளக்கியிருந்த போதிலும் அவற்றுக்கு எந்த பதிலையும் கூறாமல், நாம் அனுப்பியுள்ள "தென்கலையும் வடகலையும்" என்னும் நூலிலுள்ள நிருபணங்களையும் கண்டு கொள்ளாமல், திருப்பித் திருப்பி இக்கட்டுரையாளர் எழுதுவதிலிருந்து இவர் மனஸ்ஸாக்ஷியே இல்லாதவர் என்று தெளிவாகிறது. "நான் ஆசைப்பட்டேனே அதனால் (வெறிதே அருள் செய்வர் கிடையாது)" என்று ஆழ்வார் ஆசைப்பட்டதைக் காரணம் காட்டி, 'வெறிதே அருள் செய்வர்' என்று ஆழ்வார் அருளிச் செய்ததைக் கிடையாது என்று மறுக்கிறார். பல பக்கங்களில் விளக்கிய பின்பும், எம்பெருமானின் க்ருபை நிர்ஹேதுகம் என்று நாம் சொல்லுவதின் பொருளைப் புரிந்துகொள்ளாமலே எழுதுகிறார். "நிர்ஹேதுகக்ருபை" என்பது "ஓர் ஸாதநாநுஷ்டானம் செய்யாமலிருக்கும்போது அவனுக்கும் நமக்கும் உள்ள உறவைப் பார்த்து ஆசைப்பட்டவர்களுக்கு எம்பெருமான செய்யும் க்ருபையேயாகும். 'ஆசைப்படுவது உபாயாநுஷ்டானமாகாது; ஸ்வரூபத்தில் சேர்ந்தது' என்பதைக்கூட கட்டுரையாளர் புரிந்து கொள்ளவில்லை. 'வாதத்திற்கு மருந்து உண்டு, பிடிவாதத்திற்கு மருந்து இல்லை' என்னும் வார்த்தை இவர்களுக்கே பொருந்தியது. இவர்களுடைய அறிவுக்கண் திறப்பதற்காக நம்முடைய **"தென்கலையும், வடகலையும்"** என்னும் நூலைப்பற்றி "ஸ்ரீராமாநுஜ வாணி" ஆங்கிலப் பத்திரிகையில் அண்மையில் வெளிவந்த விமர்சனத்தைக் கீழே அளிக்கிறோம்.

TENGALAI & VADAGALAI

Sri U. Ve. Krishnaswami Ayyangar, M.A., B.L.,
Editor, "Sri Vaishnava Sudarsanam" Trichy.

Publishers : 1. Sri Sudarsanar Trust,
8-B, Puthur Agraharam, Trichy-620 017.
2. Sri Vaishnava Sri
214, East Uthara Street, SriRangam-620 006.

Pages : VI & 68. Price Rs. 20.

Sri U. Ve. S. Krishnaswami Ayyangar in his Seventies is uow a celebrated expounder and teacher-editor-activist of Sri

http://acharya.org

Vaishnavism and an acknowledged successor to the late Sri U. Ve. P. B. Annangaracharya Swami of Underlying renoun, whose manifold services to the fore stand incomparably high in popularising and expounding the Sri Vaishnava Sampradaya works, specially the Arulicheyal of the Alvars and the Tamil works of post-Ramanuja-Acharyas and in combating over the years the misconceptions and flippant criticisms of Sri Vaishnava doctrines and practices through his journal. Krishnaswami Ayyangar is doing a service which no one else can do so well and with such effect.

The present publication from his pen touches the rather sensitive field of Tengalai and Vadagalai on which passions are easily roused and minds get befuddled owing to long-cultivated attachments. It is a sad chapter of our history that what started as differences of interpretations of texts got hardened into social splits and that two separate sects, often at logger heads with each other at different levels, came into being.

The age of western materialism is tending to engulf all our ancient religious institutions and even overthrow the foundations of our beliefs. In this alarming situation, it is a prime necessity for members of the two sects to understand with love and sympathy theological framework of their two sects with their essential unities and their differences in certain view points within the over-all set-up of the doctrines of the religion. Such a sympathetic understanding, cultivated with love reaching out to each other as a common bond will surely be effective in spreading the Sri Vaishnava spiritual vision's appeal to more and more populations.

We find a dispassionate exposition in this book oi the agreements and the differences of the two sects on Tatva, Hita, and Purusharthe (Moksha). Briefly the points discussed are:

1. Isvara the Highest Master, or Narayana the supreme and sole Lord, the unique position of His Consort Sri (or

http://acharya.org

Lakshmi) as established by Sri Vedanta Desika without upsetting the basic stand of 'one only supreme Isvara' of Sri Vaishnavism. 2. The jiva's classes, characteristics, dharma-bhuta-jnana and kartrutva as in Brahma-sutras and explained in Sri Bhashya and Tatva-sara of Nadadur Ammal and the Southern Acharyas and Sri Vedanta Desika's difference of opinion. 3. The Siddhopaya or the Lord ever intent on getting the jivas into His World eternal bliss and his Nirhetuka-kripa (causeless beneficence), as the basis of the southern formulation of prapatti. 4. The Sadhyopayas and their effectiveness in the views of the two sects. 5. The types of moksha in the Southern and Northern views. 6. The historical aspect of the prevalance of no differences and the evidence of the antiquity of the southern school and Tirunamam.

There are many other points deserving detailed study and thinking dispassionately on their theoretical aspects.

இதன் விளக்கம் : எழுபத்தேழு பிராயம் நிறைந்த ஸ்ரீ உ வே கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் வைஷ்ணவத்தை நிலைநாட்டும் புகழ்மிக்க ஆசார்யரும், பத்திரிகாசிரியரும் ஆகச் செயல்படுபவர். வைணவத்திற்கு ஒப்பற்ற தொண்டுகள் புரிந்த ஸ்ரீ உ வே ப்ர. ப. அண்ணங்கராசார்யஸ்வாமியின் ஞானவழித் தோன்றலாக மதிக்கப்படுபவர். பல்வேறு துறைகளில் இவர் வைணவத்திற்கு ஆற்றிவரும் பணி இணையற்றதாகும். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்களைப் பரப்புவதில், குறிப்பாக ஆழ்வார்களின் அருளிச்செயல்கள், எம்பெருமானார் காலத்திற்குப் பிற்பட்ட ஆசார்யர்களின் தமிழ் நூல்களைப் பதிப்பித்தல், பரப்புதல், வைணவத்தைப் பற்றிய தவறான கருத்துக்களைக் கண்டனம் செய்தல் ஆகிய பணிகளை ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் திறமையாகவும், பயனளிக்கும் முறையிலும் தம் பத்திரிகையின் வாயிலாகச் செய்வதுபோல் வேறு எவராலும் செய்ய இயலாது.

அவருடைய பேனாவிலிருந்து வந்துள்ள இந்நூல் நுண்ணிய உணர்வுகளைக் கொண்ட தென்கலை வடகலை ஸம்ப்ரதாயங்கள் பற்றியது. அவரவர் ஸம்ப்ரதாயத்தில் ஊறிய ஈடுபாட்டால் உணர்ச்சி வசப்படக்கூடிய விஷயம் இது. ப்ரமாண விளக்கங்களில் கருத்து வேறுபாடாகத் துவங்கியது — இருவேறு ஸம்ப்ரதாயங்களாக நிலைபெற்று, பரஸ்பரம் மோதல்கள் விளையக் காரணமானது வருந்தத் தக்கதேயாகும்.

http://acharya.org

இக்காலத்தில் மேனாட்டு நாகரிகம் நமது நாட்டின் தொன்மை மிக்க மதங்களின்மீது பாதிப்பை விளைத்து, மதநம்பிக்கைகளின் அடிப்படைகளையும் குலைக்கத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழ் நிலையில் வைணவத்தின் இரு பிரிவினரும் பரஸ்பர நல்லுணர்வுட னும், அன்புடனும் ஸம்ப்ரதாய அடிப்படைகளை, அதாவது—தத் தம் ஸம்ப்ரதாயக் கொள்கைகள், இரு ஸம்ப்ரதாயத்தினிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமை, வைணவ மதத்தின் பொதுக்கருத் துக்கள் ஆகியவைகளை அறிந்து கொள்வது அவசியமாகும். இதுவே வைணவம் சிறப்பாக வளரும் வழியாகும்.

இந்நூலில் நூலாசிரியர் விருப்பு வெறுப்பின்றி நடுநிலையில் நின்று தத்வம், ஹிதம், புருஷார்த்தம் (மோக்ஷம்) ஆகியவற்றில் இரு ஸம்ப்ரதாயங்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவையாவன :—

1. பரம்பொருளாகிற நாராயணனே ஒரே உயர்ந்த தெய்வம். அவனது பிராட்டியான ஸ்ரீ எனப்படும் மஹாலக்ஷ்மிக்கு உள்ள தனிச்சிறப்பு என்னவென்பதை ஸ்ரீவேதாந்ததேசிகர் வைணவத் தின் ஒருதெய்வக் கொள்கைக்கு முரண்படாமல் விளக்கியுள் ளார். 2. ஜீவர்களின் வகுப்புகள், தன்மைகள், தர்மபூதஜ்ஞா நம் பற்றியும் விளக்கியுள்ளார். ப்ரஹ்மஸூத்ரத்தின் விளக்க மான ஸ்ரீபாஷ்யத்திலும், நடாதூர் அம்மாள் அருளிய தத்வ ஸாரத்திலும் ஜீவனின் கர்த்ருத்வத்தின் சுதந்திரத் தன்மைபற்றிக் காணப்படும் தென்னாசார்யர்களின் கருத்துக்களுக்கும், ஸ்ரீவேதாந்த தேசிகரின் கருத்துக்களுக்கும் உள்ள வேறுபாடு. 3. ஸித்தோ பாயமான எம்பெருமான் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே ஜீவர்களுக்கு மோக்ஷமளிக்கிறான் என்று தென்னாசார்யர்களால் கொள்ளப்பட்டிருக்கும் ப்ரபத்தியின் அடிப்படை. 4. இரு ஸம் ப்ரதாயக் கோட்பாடுகளின்படி ஸாத்யோபாயங்களும் அவற்றின் பயனும். 5. தென்னாசார்யர்கள், வேதாந்த தேசிகரிடையே மோக்ஷத்தில் தாரதம்யம் பற்றிய கருத்து வேறுபாடுகள். 6. வைணவர்களிடையே பூர்வாசார்யர்கள் காலத்தில் வகுப்புப் பிரி வினை இருந்ததாக வரலாற்றுச் சான்று கிடையாது. தென்கலைப் பிரிவு அவர்களுடைய திருமண்காப்பு ஆகியவற்றின் தொன்மை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இதுபோல் மற்றும் பல விஷ யங்கள் விளக்கப்பட்டுள்ளன. இவை நடுநிலை நின்று ஆழ்ந்து விளக்கமாகச் சிந்திப்பதற்குரியன.

http://acharya.org

திருமதி கமலா ரங்கன், அந்தராமம், திருவெள்ளறை.

87. சென்னையிலிருந்து வெளிவரும் 'அகஸ்திய விஜயம்' என்னும் மாதப் பத்திரிகையின் பிப்ரவரி 2001 இதழில் "ஸ்ரீருத்ராம்சத்தை உணர்த்துவதே ஸ்ரீராமாவதாரம், சிவாம்சம் பூண்டவரே ஸ்ரீராமர். ஸ்ரீராமராய் அவதரித்த சிவன்" என்னும் தலைப்பிட்ட கட்டுரையில் "ராமன் ஸ்ரீதசரதர் சிவபூஜைகளைச் செய்து பெற்ற சிவப்பரிசு" என்பது போன்ற செய்திகள் காணப்படுகின்றன. அவ்விதழையும் அனுப்பியுள்ளேன். இதுபற்றித் தங்கள் மேலான விமர்சனத்தைக் கோருகிறேன்.

சிவன் முதலான தேவர்களால் ராவண வதத்திற்காகப் பிரார்த்திக்கப்பட்ட விஷ்ணுவே, புத்ர காமேஷ்டி யாகம் செய்த தசரதருக்குப் பிள்ளையாக அவதரித்தார் என்று ஆதி காவியமான வால்மீகி ராமாயணம், கம்பராமாயணம் முதலான எல்லா ராமாயணங்களிலும் உள்ளது. வால்மீகி ராமாயணத்தில் "விஷ்ணுவின் ஹுங்காரத்தால் சிவனுடைய வில் சிறிது முறிந்தது, சிவன் மூர்ச்சையடைந்தார்" என்ற வரலாறும் கூறப்பட்டுள்ளது. இவற்றுக்கு முரணாக விஷ்ணு வைஷ்ணவ த்வேஷம் கொண்ட சிலர், சில பொய்க்கதைகளை இட்டுக்கட்டி இப்படித் தாறுமாறாக எழுதுபவை அறிவாளிகளால் காற்கடைக் கொள்ளத்தக்கவை. "அகஸ்திய விஜயம்" போன்ற பத்திரிகைகளை நல்லறிவு படைத்தவர்கள் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது. தப்பித் தவறிப் பார்க்க நேர்ந்தால் குப்பைக் கூடையில் போட வேண்டும்.

S. கோதை, கரியமாணிக்கம்.

88. வைஷ்ணவரிடையே சிலரிடம் குலதெய்வ வழிபாடு என்ற பெயரில் மற்ற தெய்வங்களைப் பூஜிக்கும் வழக்கம் உள்ளது. இது எப்போது உண்டானது? இவ்வழக்கத்தை நிறுத்த முடியுமா?

வைஷ்ணவர்களுக்குக் குலதனமாகவும் குலதெய்வமாகவும் இருப்பவன் செந்தாமரைக் கண்ணனே என்று ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் [6] அருளிச் செய்திருக்கிறார். ஆகையால் வைஷ்ணவர்கள் மற்ற தெய்வங்களைக் குலதெய்வமாக ஏற்பது அறிவின்மையால் விளைந்ததாகும். ஸ்மார்த்த சைவர்களின் நெருக்கத்தாலும், கிராம தேவதைகளிடம் பயத்தாலும் இவ்வழக்கம் ஒரு சில நூற்றுண்டுகளுக்குள் தோன்றியிருக்கக் கூடும். ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களையும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளையும் எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்தவேண்டும். உங்கள் ஊரைச் சேர்ந்த V V ஐயங்கார் ஸ்வாமி அப்படிப் பலரைத் திருத்தியிருக்கிறார். அப்படியும் திருந்தாதவர்களைப் பற்றி நாம் கவலைப்பட்டுப் பயனில்லை.

http://acharya.org

89. "ஆதிப்பிரான்" 1—9—2001 புரட்டாசி இதழில் திருமங்கையாழ்வார் பற்றிய விமர்சனம்.

ஸுதர்சனம் 645-646 இதழில் "ஆதிப்பிரான்" பத்திரிகையை விமர்சனம் செய்யும்போது அதன் 1-4—2001 இதழில் "கற்பனை" என்னும் தலைப்பில் தொண்டரடிப் பொடியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், ஆழ்வார்கள் ஆவதற்குமுன் விஷய ப்ரவணராய் இருந்தனர் என்றும், திருமங்கையாழ்வார் பாகவத ததீயாராதனத்திற்காகத் தீய தனிகர்களின் பொருள்களை வெற்றிகொண்டு பறித்தவராக இருந்தார் என்றும் பழைய குருபரம்பரை நூல்களில் கூறியிருப்பது கற்பனை என்று எழுதியிருப்பது நுனிப்புல் மேயும் ஆராய்ச்சி என்று நாம் விமர்சனம் செய்திருந்தது பற்றி "ஆதிப்பிரான்" 1—9—2001 இதழில் 'விமர்சனங்கள்' என்னும் தலைப்பில் விமர்சனம் செய்யப்பட்டிருந்தது. இரண்டு ஆழ்வார்களும் ஆழ்வாராவதற்குமுன் விஷய ப்ரவணராய் இருந்தனர் என்பதற்கு அவர்களது ஸ்ரீஸூக்திகளையே ப்ரமாணமாகக் காட்டியிருந்தோம். அதுபற்றி 'ஆதிப்பிரான்' மௌனமாய் இருப்பதால் அதை ஏற்றுக்கொண்டுவிட்டது என்று எண்ணுகிறோம். ஆனால் 'திருமங்கையாழ்வார் (ஆழ்வாராவதற்குமுன்) பாகவதாராதனத்திற்காக வழிப்பறி செய்தார் என்பது மட்டும் கற்பனையே' என்று கூறி, "இன்றைய காலம் வேறு, அன்றைய காலம் வேறு" என்று சில விஷயங்களை எழுதியுள்ளது. இதற்கு பதில் பின்வருமாறு: திருமங்கையாழ்வார் பூட்டை உடைத்து வீடுகளில் புகுந்து திருடினார் என்று நாம் கூறுவதுபோல் ஆதிப்பிரான் எழுதியிருப்பது தவறு. அவர் ஆலிநாட்டுச் சிற்றரசராய் இருந்தவர். 'ஆடல்மா' என்னும் குதிரையையும், 'கடமாகளியானை' என்னும் யானையையும் நடத்தவல்ல பெரிய வீரர். ஜைன விக்ரஹம் பௌத்த விக்ரஹம் முதலானவற்றை வெற்றிகொண்டு பறித்து அவற்றைக்கொண்டு திருவரங்கத்தில் மணிமண்டபங்களையும் மதிள்களையும் கட்டினார் என்று ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் சாதித்திருப்பதுபோலே, அவர் தீய வழிகளில் பொருள் சேர்த்த தனிகர்களின் பொருள்களைத் தன் வீரத்தாலே வெற்றிகொண்டு பறித்து அதுகொண்டு தினமும் ஆயிரம் பேருக்குத் ததீயாராதனம் செய்தது நாம் ஏற்கனவே விமர்சனத்தில் காட்டியிருக்கும் ப்ரமாணங்களுக்குப் பொருந்தியதே ஆகும். மேலும், அவர் இப்படிச் செய்து வரும்போதே எம்பெருமான் ஒரு தனிகன் வேஷத்தில் வரும்போது

http://acharya.org

அவரைத் தன்னிடம் கொள்ளையடிக்கச் செய்து அதை வியாஜமாகக் கொண்டு அவருக்குத் திருமந்த்ரோபதேசம் செய்தான் என்றும், அவர் உடனே மயர்வற மதிநலம் அருளப்பெற்று, "வாடினேன் வாடி" என்று தொடங்கி நாராயண நாமத்தின் பெருமையைப் பாடினார் என்றும் வழங்கும் வரலாறு அவருடைய பூர்வாவஸ்தையை உறுதிப் படுத்தும் முக்கியமான சான்றாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் அநுஸந்தித்து வரும் (எம்பெருமானர் அருளிச் செய்த) பெரியதிரு மொழித் தனியனிலும், "மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்" என்று அருளிச் செய்திருப்பது திருமங்கையாழ் வாரின் முற்கூறிய வரலாற்றை உறுதிப்படுத்துகிறது. அவர் எம்பெரு மானை வழிபறித்து மந்த்ரோபதேசம் பெற்ற இடமான திருமணங் கொல்லையும், அதிலுள்ள திருவரசும் இப்போதும் காணப்படுகின்றன. மணவாள மாமுனிகள "இதுவோ திருமணங்கொல்லை. இதுவோ திரு வரசு" என்று இவற்றைப் பாடியுள்ளதாக ஒரு தனிப்பாடலும் உள் ளது. இந்த வரலாற்றை உறுதிப்படுத்துவதற்காக, திருநகரி எம்பெரு மான் வருடந்தோறும் திருவாலியில் திருமணம் புரிந்துகொண்டு திரு நகரிக்கு எழுந்தருளும் வழியில் திருமணங் கொல்லையிலே திருவரசின் அடியிலே திருமங்கையாழ்வார் நள்ளிரவில் வேடுபறி செய்தபின் மந்த்ரோபதேசம் செய்யும் உற்சவம் இன்றும் மிகச் சிறப்பாக நடை பெறுகிறது. இவை ஒன்றையும் அறியாமலோ, ஆராயாமலோ இந்த வரலாற்றைக் 'கற்பனை' என்று எழுதியது நுனிப்புல்மேயும் ஆராய்ச் சியே என்பது நடுநிலையாளருக்கு நன்கு விளங்கும்.

இல. ஸ்ரீநிவாஸன், சென்னை-17. [90, 91 கேள்விகள்]

90. ஸாஹித்ய அகாடமி வெளியீடான "அசோக் சாட்டர்ஜி சாஸ்திரி" எழுதிய 'சைதந்யா' என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூலில் 'வெளிப்பாட்டின் பின்னணி' என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது :— "தென்னிந்தியாவில் ஸ்ரீ யமுனாசார்யர் மற்றும் இராமானுஜாசார்யர் ஆகியோரால் போதிக் கப்பட்ட மதம் எங்கும் பரவிய செல்வாக்குமிக்க தனித்தன்மை யான மாயாவாதக் கோட்பாடாகப் பறை சாற்றப்படுகிறது. ஸ்ம் ருதி புத்தகங்களில் வழங்கப்பட்டுள்ள சடங்குகளை விஞ்சும் வண்ணம் இராமானுஜ தொழிற்கூட சடங்குகள் அமைந்தன. இராமானுஜ சீடர்களுக்கு இடையே ஒரு குறுகிய சாதி அமைப்பு நிலவியது" என்று தொடங்கி மனம் போனபடி எழுதப்பட்டுள் ளது. இதுபற்றிய கருத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

http://acharya.org

சங்கரரின் அத்வைத மதமே "நிர்விசேஷ சின்மாத்ரமான பிரம் மத்தை மாயை மறைக்கையால் உலகமாகிற பொய்த்தோற்றம் உண் டாகிறது" என்று மாயாவாதம் செய்கையாலே "மாயாவாத மதம்" என்று பெயர் பெற்றது. இந்நூலை எழுதியவர் இதைக்கூட அறிய வில்லை என்று விளங்குகிறது. இதைத் தமிழில் மொழி பெயர்த்த கே. எஸ். பிரணதார்த்திஹரன் இவ்விஷயத்தை அவசியம் அறிந்தி ருக்கவேண்டும். நேர்மையானவராக இருந்தால் அவர் இவ்விடத்தில் 'இது தவறு' என்று குறிப்பு எழுதியிருக்கவேண்டும். இந்நூலில் இராமானுஜர் பற்றிய மற்ற கருத்துக்களும் மனம் போனபடி தவறாக எழுதப்பட்டுள்ளவை என்பது வெளிப்படை. இத்தகைய நூலை ஸாஹித்ய அகாடமி வெளியிட்டிருப்பது வியப்பையளிக்கிறது. அகாடமியில் உள்ளவர்களும் சங்கரரைப் பற்றியோ ஸ்ரீராமானுஜரைப் பற்றியோ எதும் அறியாதவர்கள் என்று விளங்குகிறது.

91. குமுதம் பக்தி ஸ்பெஷல்—பிப்ரவரி 2001 இதழில் 'ஆழ்வார்கள் ஓர் அறிமுகம்' என்னும் தொடரில் எழுத்தாளர் சுஜாதா "திருமங்கையாழ்வாரின் திருமொழி — என்பதிலிருந்து வேறுபடுத்துவதற்கும் திருவாய்மொழி எனப்பட்டது என்றும் சொல்லுகிறார்கள்" என்று எழுதியுள்ளார். "அவரவர் தமதமது" என்னும் முதல் திருவாய்மொழிப் பாசுரத்திற்கு, "அந்தந்த தெய் வங்களும் குறைவில்லாதவர்கள்தான்" என்று மனம் போனபடி பொருள் எழுதி, "இந்த நேரடியான அர்த்தத்தை வைணவ ஸம்ப்ர தாயம் ஒத்துக் கொள்வதில்லை" என்று எழுதுகிறார். "வீடுமின் முற்றவும்" பாசுரத்திற்கு, "எல்லாவற்றையும் விட்டு விடுங்கள். அப்படி விட்டுவிட்டு உங்களுடைய உயிரை சொர்க்கத்தில் உள்ள வனிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று பொருள் கூறுகிறார். இவற்றை விமர்சிக்க வேண்டுகிறேன்.

"வாய்மொழி" என்று சங்க இலக்கியங்களில் வடமொழி வேதம் குறிப்பிடப்படுகிறது. அதனாலேயே தமிழ் கூறும் நல்லுலகம் தமிழ் வேதமான நம்மாழ்வார் அருளிய ஆயிரம் பாட்டுக்கள் கொண்ட நாலாவது ப்ரபந்தத்திற்கு 'திருவாய்மொழி' என்று பெயரிட்டது. இதை சுஜாதா அறியவேண்டும். "திண்ணன் வீடு" திருவாய்மொழி யில் மற்ற தெய்வங்களுக்குப் பூவும் பூசனையும் தகாது என்கிறார் நம்மாழ்வார். "ஒன்றும் தேவும" திருவாய்மொழியிலும் மற்ற பல இடங்களிலும் தெய்வங்கள் பல குறைகள் உடையவை என்று

http://acharya.org

காட்டுகிறார் நம்மாழ்வார். இதற்கு முரணாக "மற்ற தெய்வங்கள் குறையில்லாதவர்கள் தான்" என்று நம்மாழ்வார் கூறுவதாகவும், அதுவே நேரடியான பொருள் என்றும் சுஜாதா எழுதுவது நேர்மையான செயலாகாது. "வீடுடையான் "என்பதற்கு உரையாசிரியர்கள் பல பொருள்கள் காட்டியுள்ளனர். "பரமபதத்தில் உள்ளவன்" என்பது அவற்றில் ஒரு பொருள். பரமபதத்தை 'சொர்க்கம்' என்று எழுதுவது சரியல்ல. "குடிமன்னுமின் சுவர்க்கம் எய்தியும் மீள்வர்கள்" [திருவாய் 4-1-9] என்று ஆழ்வார் அருளிச்செய்திருக்கையாலே சுவர்க்கம் என்பது ஒரு காலத்தில் அழியக்கூடிய இந்திரன் முதலானோர் வாழும் உலகத்தையே குறிக்கும். "வீடு" என்னும் பதம் என்றும் அழியாத பரமபதத்தையே குறிக்கும்; சொர்க்கத்தைக் குறிக்காது. மத விஷயங்களில் ஆழமான அறிவில்லாதவர்களைக் கொண்டு பொது ஜனப்பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதச்சொல்லி வெளியிடுவதால் இத்தகைய அவப்பொருள்கள் நாட்டில் பிரசாரமடைகின்றன. இதற்கு விமோசனகாலம் என்று வருமோ தெரியவில்லை.

R. சுந்தரராஜகண்ணன், சென்னை-78.

92. 2001 செப்டம்பர் மஞ்ஜரி இதழில் 'யோகிராஜ் வேதாத்திரி மஹரிஷி' என்பவர் நாமம் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்: "நாம்—அம் என்பது நாமம் ஆயிற்று. பிரணவப் பொருளாக உள்ளதுதான் அம். அதைக் கண்டு கொண்டோம். நாம் அம் ஆனோம். அதுதான் நாமம். நெற்றியில் இரண்டு நரம்புகள் சிலருக்கு வெளிப்படையாகவே தெரியும். அவற்றில் குளிர் காற்றுப்பட்டால் உடல் நலம் கெடும். அதை உணர்ந்து அந்த நரம்புகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக நாமக் கட்டியை இழைத்துப் போட்டுக்கொண்டார்கள். மனத்தை மேலே கொண்டு போகச் சிவப்புப் பொடியால் மேல் நோக்கித் துரியம் வரை இழுத்துவிட்டார்கள்" இதை விமர்சிக்கவும்.

எம்பெருமானின் கேசவன் முதலான திருநாமங்களை அநுஸந்தித்துக் கொண்டு உடலில் இட்டுக்கொள்வதால் "திருநாமம்" என்று பெயர் ஏற்பட்டது. எம்பெருமானின் இரு திருவடிகளுக்கு இடையில் ஸ்ரீசூர்ணமாக ஸ்ரீதேவி எழுந்தருளியிருக்கிறாள். இதுவே சரியான விளக்கம். திருநாமம் தரிக்காதவர்கள் மனம் போனபடி விளக்கம் கூறுவதைப் பொருட்படுத்த வேண்டாம்.

http://acharya.org

98. ஹயக்ரீவப்ரியா, சென்னை.

அக்டோபர் 2001 [2-12] இதழில் வெளியாகியுள்ள ஸ்ரீ உ. வே V S கருணாகராசார்ய ஸ்வாமியின் கட்டுரை.

நமது நண்பரான கருணாகராசார்யஸ்வாமி நம்முடைய 'ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்', 'பஞ்சமபக்ஷ ஶததூஷணி' ஆகியவற்றில், "ஸ்ரீ தேசிகன் தாம் உரையிட்ட ஐந்து பக்ஷங்களில் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர், ஐந்தாவது பக்ஷத்தை விலக்கியவர்" என்று நிலை நாட்டியிருப்பதற்கு பதிலுரைக்க முற்பட்டுள்ளார். "தேசிகன் தம் கிரந்தங்களில், பிராட்டிக்கு ஸ்வாபாவிகமான (இயல்வான) ஈஶ்வரத்வத்தையே அருளியுள்ளார். ஆகையால் அதை மறுக்கும் நாலாவது பக்ஷத்தை அவர் ஏற்றுக்கொண்டவராயிருக்க முடியாது. அதை ஏற்கும் ஐந்தாவது பக்ஷத்தையே அவர் தழுவியவர்" என்பது நண்பரின் முக்யமான வாதம். இந்த அடிப்படையே தவறு. தேசிகன் எடுத்த நாலாவது பக்ஷத்தில், "பிராட்டியின் ஈஶ்வரத்வம் செயற்கையானது. இயற்கையானது அன்று" என்று கூறவேயில்லை. "எம்பெருமான் பிராட்டியையுள்ளிட்ட அனைவரைக் குறித்தும் ஶேஷித்வம், ஈஶ்வரத்வம் முதலானவற்றை உடையவன். பிராட்டியோ எனில்—அவனைத் தவிர்ந்த மற்றவரைக் குறித்தே ஶேஷித்வம் முதலானவற்றை உடையவள். ஆனால் பிராட்டியின் இப்பெருமைகளெல்லாம் எம்பெருமானுடைய நித்யேச்சையால் ஏற்பட்டது." என்றே கூறியிருக்கிறது. ஐந்தாவது பக்ஷத்தை விளக்கும்போது, "பிராட்டி எம்பெருமானுக்கு அடங்கியவளாயிருப்பது உபயேச்சாஸித்தம். (இருவரின் விருப்பத்தாலும் ஏற்பட்டது)" என்பதை அப்பக்ஷத்தின் முக்கியமான கொள்கையாக எடுத்திருக்கிறார். இந்த ஐந்தாவது பக்ஷத்தைப் பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் வந்த 'ஸாக்ஷாத் ஸ்வாமி' முதலானவர்கள் ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜனம் முதலான நூல்களில் தம் மனம் போனபடி விரிவுபடுத்தி, 'தேசிகன் அப்பக்ஷத்தையே தழுவியவர்' என்று எழுதினார்கள். "எம்பெருமானுக்குள்ள ஜகத் காரணத்வம், மோக்ஷ ப்ரதத்வம், ஸர்வ ஜகச் சரீரித்வம், ஸர்வ ஜகந் நியந்த்ருத்வம் முதலான ஈஶ்வர லக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. பகவான் பிராட்டிக்கு ஶரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு ஶரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்க முடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்

http://acharya.org

திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து சேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு பத்நீத்வத் பாரதந்த்ரியம் செயற்கையானது. ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானர், பட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன'' என்பதே அவர்களுடைய கருத்து. "இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டால் ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண ஆகமங்களுக்கும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கும், ஆளவந்தார், எம்பெருமானர், கூரத்தாழ்வான், ஸோமாசியாண்டான், எங்களாழ்வான், பட்டர், பெரிய ஜீயர் என்னும் நாராயண ஜீயர், தேசிகன், திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்களான பிள்ளான், நஞ்சீயர், ஈடு அருளிய நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை ஶ்ருதப்ரகாசிகாசார்யர் முதலான பல பூர்வாசார்யர்களின் பற்பல ஸ்ரீஸூக்திகளுக்கும் யுக்திகளுக்கும் மிகவும் முரண் படும்'' என்று நூற்றுக்கணக்கான வாக்கியங்களை எடுத்துக் காட்டி நம்முடைய ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ மததூஷணியிலும் நிலைநாட்டினேம். அவற்றுக்கு இன்றளவும் எந்த வித்வானும் பதில்கூற முற்படவில்லை. கருணாகரன் ஸ்வாமி மட்டும் நம்முடைய பெயரைக் குறிப்பிட்டு, தம் கட்டுரையில் பதிலெழுத முற்பட்டிருக்கிருர். மததூஷணியில் நாம் இவர்களுடைய பக்ஷத்திற்கு பாதகம் என்று காட்டியிருக்கும் ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண ஆகம வாக்யங்கள், ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள் ஆகியவற்றில் எதையும் எடுத்து இவர் அவற்றுக்கு ஸமாதானம் சொல்லவில்லை. "தேசிகன் திருவுள்ளப்படி பிராட்டிக்கு இயல்வான ஈஶ்வரத்வம் உண்டு. நாலாவது பக்ஷத்தில் அது ஏற்கப்படவில்லை. ஐந்தாவது பக்ஷம் ஒன்றில்தான் அது ஏற்கப்படுகிறது. ஆகையால் அதுதான் தேசிகன் உகந்த பக்ஷம்'' என்பதையே திருப்பித் திருப்பி எழுதி அதற்குச் சில ப்ரமாணங்களையும், தம் முன்னோர் வாக்யங்களையும் காட்டியிருக்கிருர்.

பிராட்டிக்கு இயல்வான ஈஶ்வரத்வம் நாலாவது பக்ஷத்தில் மறுக்கப்படவில்லை என்பதை நாம் முன்னமே காட்டியிருக்கிறோம். "நாம் ஒன்றைத்தான் பரதேவதையாகக் கூறுகிறோம். அந்த ஒன்று ஒரு மிதுனம். அதாவது லக்ஷ்மீ நாராயணன். இவர்கள் இருவரும் சேர்ந்த

http://acharya.org

மிதுநம். இந்த மிதுநத்திற்கு அத்வைதம் கூறுவதால் நமது ஸம்ப்ர தாயம் விசிஷ்டாத்வைதம்'' என்று எழுதுகிறார். **''சேதநாசேதந விசிஷ்டமான ப்₃ரஹ்மம் ஒன்றே''** என்றே நாம் ஶததூஷணியில் எடுத்த நூற்றுக்கணக்கான ப்ரமாணங்கள் அனைத்தும் தெளிவாகக் காட்டுகின்றன. அது ஒரு மிதுநம் எனறல் அந்த ஸம்ப்ரதாயம் விஶிஷ்டாத்வைதமேயாகும். திரிமூர்த்தி ஸாம்யவாதிகளும் இதே ந்யா யப்படி ''சேதநாசேதந விஶிஷ்டமான ப்₃ரஹ்மம் மும்மூர்த்திகளுமான த்ரிகமே' என்று கூறமுற்பட்டால் அதை இவர் ஏற்பாரா? பெருமாளும் பிராட்டியும் இருவேறு சேதனர்கள் என்பதை இவரால் மறுக்கமுடியுமா?

ப்ரபன்ன பாரிஜாதம் பற்றிய விசாரத்தை எழுதிப் பல பக்கங் களை நிரப்பியிருக்கிறார். பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் வந்த உபய ஸம்ப்ரதாய வித்வான்கள் பலர் அதை நடாதூர் அம்மா ளுடையதாக எடுத்திருப்பதாகக் கூறுகிறார். நம்முடைய முக்கியமான கேள்வி இதுவே - '''ப்ரபன்ன பாரிஜாதம்' என்னும் நூலிலிருந்து ஒரு சிறு துணுக்கைக் கூட மாமுனிகளும் அவருக்கு முற்பட்ட எந்த ஆசார்யரும் எடுக்கவில்லை. அம்மாளுடைய தத்வ ஸாரத்தை தேசிகன் மாமுனிகள் முதலான பலர் மேற்கோளாகக் காட்டியுள்ளனர். தேசி கன் தமது ரஹஸ்யத்ரய ஸாரத்தில் பிராட்டிக்கு விபுத்வம், ஈஶ்வரத் வம், உபாயத்வம் முதலானவற்றை ஸாதிக்குமிடத்தில் பல ஆசார்யர் களைத் தம் கருத்துக்கு ஆதரவாக மேற்கோள் காட்டுகிறார். 'பெரிய ஜீயர் ஶ்ரீஸூக்தபா₄ஷ்யத்திலே அபேக்ஷிதார்த்தங்களை விளக்கினர்' என்கிறார். 'ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்ஜீயர் ஒரு வார்த்தையை ஸங்க்ரஹித்தார்' என்கிறார். இப்படியெல்லாம் எழுதுகிறவர் பிராட் டிக்கு ஈஶ்வரத்வம் முதலானவற்றை விரிவாக ஸாதிக்கும் ப்ரபன்ன பாரிஜாதம் அவர் காலத்தில் இருந்திருந்தால் அதை அவர் காட்டாமல் இருப்பாரா? அவர் மட்டுமல்ல; வேறு எந்தப் பூர்வாசார்யரும் அதிலி ருந்து ஒரு துணுக்கைக்கூட எடுக்கவில்லையே! ஏன்?'' என்பதே நமது கேள்வி. இதற்கு சரியான பதில் கூற இயலாததால், ''ப்ர பன்ன பாரிஜாதத்தில் ஸ்வ வாக்யங்கள் குறைவு. ப்ரமாணங்கள் மிகுதி. அதனுல் எடுக்கவில்லை'' என்கிறார். இது நேர்மையான பதி லாகுமா? என்பதை நடுநிலையாளர்களே நிர்ணயிக்கவேண்டும்.

பிற்பட்டவர்கள் அதை நடாதூர் அம்மாளுடையதாக எடுப்பதை மட்டும் கொண்டு அதை அம்மாளுடையதாக ஏற்கமுடியாது. ஓர் உதார

http://acharya.org

ணம்: முகுந்தமாலையைப் பிற்பட்டவர்கள் பலர் குலசேகராழ்வார் அருளியதாக எடுக்கிறார்கள். "ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் அனைத்துக்கும் வ்யாக்யானம் செய்தவரும், ஆசார்யர்களுடைய ஸ்தோத்ர க்ரந்தங்களுக்கும் வ்யாக்யானம் செய்தவருமான பெரியவாச்சான்பிள்ளை இது குலசேகராழ்வார் அருளியதாக இருந்திருந்தால் இதற்கு வ்யாக்யானம் செய்யாமல் விட்டிருப்பாரா? மாமுனிகளுக்கு முற்பட்ட பூர்வாசார்யர்கள் எவரும் இதிலிருந்து ஒரு ச்லோகத்தைக்கூட மேற்கோளாகக் காட்டவில்லையே. மாமுனிகளும் முகுந்தமாலை என்று இதனைப் பெயரிட்டு எடுக்கிறாரேயொழிய குலசேகராழ்வார் அருளியது என்று எடுக்கவில்லையே?" என்னும் கேள்விகளுக்குப் பதிலுரைக்க முற்பட்டால், ப்ராமாணிகர்கள், "முகுந்தமாலை குலசேகராழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதன்று. மாமுனிகளுக்குச் சற்றுமுன் இருந்த குலசேகரர் என்னும் பெயர் கொண்ட பரம விஷ்ணு பக்தரான ஓர் கேரள அரசரால் இயற்றப்பட்டதே" என்னும் ஒரு முடிவுக்கே வரமுடியும். அதுபோலவே "ப்ரபன்ன பாரிஜாதமும் அம்மாள வம்சத்தில் வந்த பிற்பட்டவர் ஒருவர் எழுதியதே" என்னும் முடிவுக்கே ப்ராமாணிகர்கள் வரமுடியும்.

ப்ரபன்ன பாரிஜாதம் அம்மாளுடையதே என்று இவர் பிடிவாதம் பிடித்தாலும், அதிலிருந்து பிராட்டிக்கு விபுத்வம் ஈச்வரத்வம் முதலானவற்றை ஏற்கும் நாலாவது பக்ஷத்தைத் தான் இவர் ஸாதிக்க முடியுமேயொழிய, 'பிராட்டியின் பகவச் சேஷத்வ பாரதந்த்ரியங்கள் பகவச்சரீரத்வம் முதலானவை உபய—இச்சாஸித்தம்' என்னும் ஐந்தாவது பக்ஷத்தை இவர் ஸாதிக்க முடியாது. ப்ரபன்னபாரிஜாதம் ஒருபுறம் இருக்க, தேசிகனுள்ளிட்ட எந்தப் பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களிலும் 'பிராட்டியின் சேஷத்வ பாரதந்திரியங்கள், சரீரத்வம் முதலானவை உபய—இச்சாஸித்தம்' என்று எங்கும் சொல்லப்படவில்லையே. முக்கியமாக, தேசிக ஸ்ரீஸூக்திகளிலிருந்து இந்த விஷயத்தைக் காட்டினாலன்றோ அவர் ஐந்தாவது பக்ஷத்தைத் தழுவியவர் என்பது ஸித்திக்கும். நேர்மாறாக, தேசிகனுள்ளிட்ட எல்லாப் பூர்வாசார்யர்களும், "பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமாய் சேஷபூதையாய் இருப்பவள்" என்றன்றோ பலவிடங்களில் காட்டியிருக்கிறார்கள். அது உபயேச்சாஸித்தமென்று எங்கும் காட்டவில்லையே.

http://acharya.org

ஹ. ப்ரியா 122-ம் பக்கம் தொடக்கத்தில் இவர் நமக்கு ப்ரதி கூலமான ப்ரமாணங்களை ஏதோ காட்டிவிட்டது போலவும், அந்த ப்ர மாணங்களை நிர்வஹிக்க இயலாமையால் 'அவை ப்ரமாணங்களே அல்ல' என்று நாம் அடித்துக் கூறுவதாகவும் எழுதுகிறார். இப்படி எழுதுவ தோடல்லாமல், ஒரு தந்தை இறுதிப்படுக்கையில் படுத்திருந்தபோது அவருடைய மகன்கள் அவர் தனக்கு வரவேண்டிய கடன்களைச் சொல்லும்போது எழுதிக்கொண்டு, அவர் திருப்பித்தரவேண்டிய கடன் களைச் சொல்லும்போது (குமாரர்கள்) அவர் ஜன்னி கண்டு பிதற்றுவ தாகக் கூறிய கதையை நம்மைக் குறித்து எழுதுகிறார்.

நாம் ஶததூஷணியில் காட்டியிருக்கும் நூற்றுக்கணக்கான ப்ரமா ணங்கள் எதற்கும் பதிலுரைக்க இயலாமல், பிராட்டிக்கு ஈஶ்வரத்வம் விபுத்வம் முதலானவை எம்பெருமானுக்குத் துல்யமானவை என்று திருப்பித்திருப்பி எழுதும் இவருக்கும் இவருடைய முன்னோர்களுக்குமே இக்கதை சாலப் பொருந்தும். இவர் மனஸ்ஸாக்ஷி உள்ளவராயிருந் தால், நாம ஶததூஷணியில் காட்டியுள்ள நூற்றுக்கணக்கான ப்ரமா ணங்களை அடைவே எடுத்து, அவை ஐந்தாவது பக்ஷத்திற்கு முரண் பட்டவையல்ல என்று ஹ. ப்ரியாவிலேயே எழுதட்டும். இதைச்செய் யாவிட்டால், "ஶததூஷணிக்குப் பதில் எழுதமாட்டாமல், ஏதேதோ எழுதிப் பக்கங்களை நிரப்புகிறார் இவர்" என்றே நடுநிலையாளர்கள் முடிவு கட்டுவார்கள்.

"பிராட்டியினுடைய ஈஶ்வரத்வம் விபுத்வம் முதலானவற்றை நாலாவது பக்ஷத்தில் ஒப்புக் கொண்டிருந்த போதிலும் 'அவையெல் லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டவை' என்று அப் பக்ஷம் சொல்லுகிறதாகையால், இப்பக்ஷத்தில் பிராட்டிக்கு இயல்வான ஈஶ்வரத்வம் இல்லையென்றே தேருதா?" என்று இவர் கேட்கக்கூடும். ஜீவனுடைய ஶேஷத்வம் முதலானவை எம்பெருமானுடைய ஸங்கல் பத்தால் ஏற்பட்டிருந்த போதிலும் அவை இயல்வானவை என்றே நாம் அனைவரும் கொள்கிறோம். அக்னி, ஜலம் முதலானவற்றின் வெம்மை குளிர்ச்சி முதலானவை எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டி ருந்த போதிலும், அவற்றை இயல்வானவை என்றே கொள்கிறோம். அதுபோலே, பிராட்டியின் ஈஶ்வரத்வம் எம்பெருமானுடைய நித்ய ஸங்

http://acharya.org

கல்பத்தால் ஏற்பட்டிருந்த போதிலும், அது இயல்வானதே என்று கொள்ளத் தடையில்லை. எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டதாய் இருந்தபோதிலும், சில ஆசார்யர்கள், 'அவளுக்கு அணுத்வமும் ஜீவத்வமும் இயல்வானவை' என்று கொண்டார்கள். நாலாவது பக்ஷத்தை ஆதரித்த தேசிகன் முதலான ஆசார்யர்கள் 'அவளுக்கு விபுத்வம், ஈஶ்வரத்வம் முதலானவை இயல்வானவை' என்று கொண்டார்கள். **''ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்:''** [தனக்கு வசப்பட்ட மூன்று வகையான சேதனர்கள், மூன்று வகைப்பட்ட அசேதனங்கள் ஆகியவற்றின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை உடையவன்.] என்று எம்பெருமான் ஒருவனுக்கே எம்பெருமானாரால் பெருமை சொல்லப்பட்டது. இதை ஏற்றுக்கொள்ளாமல், இந்தப்பெருமையுடையவர்கள் ஒரு மிதுநமாகிற இருவர் என்று கூறுகிறவர்கள் எம்பெருமானார் தரிசனத்தைச் சேர்ந்தவர்களாக முடியாது. இதை ஏற்றுக்கொள்பவர் எவரும் எம்பெருமானுடைய நித்ய ஸங்கல்பத்தால் பிராட்டி முதலானார்க்கு அமைந்த தன்மைகள் செயற்கையானவை என்று வாய் திறக்க வழியில்லை.

ஹ. ப்ரியா பக். 116 :— எங்களாழ்வான் விஷ்ணுபுராண வ்யாக்யானத்தில், ''பிராட்டிக்கு அகடித கடநா ஸாமர்த்யத்தினால் வ்யாப்தி'' என்று எழுதியிருப்பதை, சிலர் பாடபேதம் செய்து மாற்ற முற்பட்டனர். 'ஈட்டின் அரும்பதவுரை முதலானவற்றில் எடுக்கப்பட்ட இதுவே சரியான பாடம்' என்று நாம் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தில் நிலைநாட்டியிருப்பதை இவர் ஏற்றுக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் ''இந்த இரண்டாம் யோஜனையில் எங்களாழ்வானுக்கு ஆதரம் இல்லை. முதல் யோஜனையில் பிராட்டிக்கு ஸர்வகதத்வத்தைச் சொல்லியிருப்பதே அவர் ஏற்ற பக்ஷம்'' என்று எழுதியிருக்கிறார். முதல் யோஜனையில், இந்த ப்ரகரணத்தில் காணப்படும் விக்ரஹ வ்யாப்தியே சொல்லப்படுகிறது என்பதே உண்மை. அது ஸ்வரூப வ்யாப்தியைச் சொல்லுவதாய் இருந்தால், **''ஸர்வகதத்வ ஸத்ய ஜ்ஞாநாதி ஸ்வரூப கல்யாண குணாதீநாமதிதேஶ:''** [ஸர்வ வ்யாப்தியும் ஸத்யம், ஜ்ஞானம் முதலான ஸ்வரூப கல்யாண குணங்கள் முதலானவையும் பிராட்டிக்கும் உண்டென்று சொல்லப்படுகிறது.]என்று ஸ்வரூப கல்யாண குணங்களில் ஒன்றான ஸ்வரூப வ்யாப்தியிலிருந்து வேறுபடுத்தி, **''ஸர்வ கதத்வ''** என்று முன்னால் சொல்லியிருப்பது ஒட்டாது. ஆகையால் எங்களாழ்வான் முதல் யோஜனையில் மைத்ரே

http://acharya.org

யர் கேட்ட கேள்விக்குப் பொருத்தமான அவதார வ்யாப்தியைச் சொல்லி, "ஸ்வரூப வ்யாப்தியைச் சொல்லுவதாகக் கொண்டால், அது அகடிதகடநா சக்தியாலேயே" என்றே இரண்டாவது யோஜனையில் அருளியிருக்கிறார் என்பது தெளிவு.

ஹ. ப்ரியாவின் இவ்விதழில் மற்றும் பலரும் நம்முடைய ஶத தூஷணியைத் தொடாமலே மனம் போனபடி எழுதியுள்ளார்கள். அவற்றில் நாவல்பாக்கம் ஸ்ரீ உ வே ராமாநுஜதாதாசார்ய ஸ்வாமி "நஞ்ஜீயருடைய ஸ்ரீஸூக்தபாஷ்யம்" என்று எழுதியது பற்றி மட்டும் அவரைக் குறித்து ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம் :— "தேசிகன் ஸ்ரீஸூக்தபாஷ்யம் அருளியவரை "நாராயணமுனி" என்றும், "பெரிய ஜீயர்" என்றுமே குறிப்பிடுகிறார். நஞ்ஜீயர் 'ஒரு வார்த்தையை ஸங்க்ரஹித்தார்' என்று மட்டுமே குறிப்பிடுகிறார். இதிலிருந்தே இந்த ஸ்ரீஸூக்த பாஷ்யம் எழுதியவர் நஞ்ஜீயரைக் காட்டிலும் பெரியவராய், பட்டர் சிஷ்யராயிருந்த ஸுதர்சன ஶதக கர்த்தாவான கூரநாராயண ஜீயரே என்று விளங்கவில்லையா? சென்னை ஓரியண்டல் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரி ஓலைச்சுவடிகளிலிருந்து 'கோமட ரங்கநாதர்' என்பவர் எழுதிய ஒரு ஸ்ரீஸூக்தபாஷ்யச் சுவடியை எடுத்து, தேசிகனின் ஐந்தாவதுபக்ஷ வாக்யங்களை உட்கொண்ட ஒரு நீண்ட வாக்யத்தை அதில் நுழைத்து, அதற்கு "நஞ்ஜீயர் ஸ்ரீஸூக்தபாஷ்யம்" என்று பெயரிட்டு, 'அதற்குரிய சுவடி ஒன்று திருவஹீந்திரபுரம் கடிலநதியில் அகப்பட்டது' என்று கதை விட்டிருப்பது தேசிகனுடைய ஐந்தாவது பக்ஷத்தை நஞ்ஜீயர் தலையில் சுமத்துவதற்காகச் செய்யப்பட்ட மோசடிச் செயல் என்பதை உங்களால் மறுக்கமுடியுமா?" நேர்மையுள்ளவராய், அவர் இக்கேள்விகளுக்குப் பதிலளித்தால் மற்ற விஷயங்கள் பற்றி வரும் இதழில் ஆராயப்படும். 'ப்ரபந்நபாரிஜாதம் நடாதூர் அம்மாளுடையதே' என்று திருப்பித்திருப்பி எழுதியிருக்கும் V. S. கருணாகராசார்ய ஸ்வாமிக்கும் இக்கேள்விககு பதிலளிக்கவேண்டிய பொறுப்புண்டு.

94. திருச்சி—தினமலர் 19—10—2001 இதழ் பக்கம்-2ல் "அறிவோமா ஆன்மீகம்" பகுதியில் "நவராத்திரி நாயகியர்" என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள 'காஞ்சிப் பெரியவர்' கூற்றுக்கு மறுப்பு.

காமகோடிப் பெரிய பீடாதிபதி, "குழந்தையாக வந்த காத்யாயனியைத் தமிழ்நாட்டு கிராமமக்கள் கூட நீண்டகாலமாக வழிபட்டு

http://acharya.org

வந்திருக்கிறார்கள். காத்தாயி என்று சொல்லுகிற கிராமதேவதை 'காத்யாயனி' தான். 'பட்டாரிகை' என்று பெரிய ஸ்ரீ வித்யோபாஸகர்கள் குறிப்பிடும் அம்பிகையைத்தான் நம் கிராமமக்கள் 'பிடாரி' என்று சொல்லிப் பூஜிக்கின்றனர். இவ்வாறே ஸரஸ்வதியையும கிராமமக்கள் வழிபட்டு வந்துள்ளனர். 'பேச்சாயி' என்று சொல்லுகிற கிராமதேவதை பேச்சுக்கு ஆயியான ஸரஸ்வதியைத்தான் குறிப்பிடுகிறது'' என்று கூறியுள்ளார். கிராமமக்கள் அடியோடு வடமொழி அறிவு இல்லாதவர்கள. அவர்கள் காத்தாயி, பிடாரி, பேச்சாயி என்னும் பெயர்களில் வழிபடும் தேவதை காளியே ஆவாள். சங்ககாலத்திலேயே இவள் சுடுகாட்டைக் காக்கும் தேவதையாகையால் "காடுகாள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிருள். பாகவதத்திலும், கண்ணனுக்கு உதவியதால், "உன்னைப் பல பெயர்களில் மக்கள் வழிபட்டு பலிகளும் கொடுப்பார்கள்" என்று எம்பெருமான் இவளுக்கு வரம் கொடுத்திருக்கிறுன் என்று உள்ளது. ஊரைக் காத்த ஆயியே 'காத்தாயி' எனப்படுகிருள். 'காத்யாயனி' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாக இது இருப்பதற்கு இடமேயில்லை. அதுபோலவே பட்டாரிகை என்பதற்கும் பிடாரி என்னும் சொல்லுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பிடாரி என்பது தமிழ்ச் சொல்லே. 'பிடார்' என்னும் சொல் வலிமையை, குறிப்பாகப் பிராணிகளை அடக்கும் வலிமையைக் குறிக்கிறது. பாம்பை அடக்குகிறவன் 'பாம்புப் பிடாரன்' எனப்படுவது காண்க. அதுபோலவே ஆடு கோழி எருமை முதலானவற்றைப் பலி கொள்வதில் தன் வலிமையைக் காட்டுகிறவளாகையால் இவள் பிடாரி எனப்படுகிருள். 'அடங்காப்பிடாரி' என்னும் பொதுஜன வழக்கையும் காணலாம். 'பேயன்' என்பது சுடுகாட்டில் பேய்களோடு நடமாடும் சிவனுக்குப் பெயர். அவனுடைய மனைவியாகையால் 'பேய்ச்சி ஆயி' என்று வழங்கப்பட்ட காளியின் பெயர் 'பேச்சாயி' என்று மருவியிருக்கிறது. 'பேச்சாயி' என்று ஸரஸ்வதியை கிராமமக்கள் எவரும் வணங்குவதில்லை. தோற்றவன் வென்றவனைக் குறித்துச் செய்யும் செயலாகையாலே தோற்(ப்)புக்கரணம் என்று வழங்கும் தமிழ்ச் சொல்லை "தோ₂ர்பி₄: கரணம்" [நாலு கைகளாலே செய்யப்படும் செயல்.] என்று வடமொழியாக்கி, விஷ்ணுவை இழிவுபடுத்துவதற்காகப் பீடாதிபதி கற்பனையாகக் கதை கட்டியது போலவே, இங்கும் இச்சொற்களுக்கு மனம் போனபடி திரித்துப் பொருள் கூறியுள்ளார்.

http://acharya.org

9ு. ஹயக்ரீவ ப்ரியா (சென்னை) விஷு-வுஸ கார்த்திகை-மீ நவம்பர் 2001 இதழ் "14, 93-க்கு விடை".

ஸுதர்சனம் விஷு-வுப ஐப்பசி, கார்த்திகை [647 & 648] இதழில் ஹ.ப்ரியா அக்டோபர் 2001 இதழில் வெளியான ஸ்ரீ உ வே V S கருணாகராசார்ய ஸ்வாமியின் கட்டுரைக்குப் பதில் அளித்திருந் தோம். அதற்குப் பதிலாக நம் நண்பர் "14-93-க்கு விடை" என் னும் தலைப்பில் விடையளித்துள்ளார். "நாலாவது பக்ஷம் தேசிகன் உகந்தது அல்ல. ஐந்தாவது பக்ஷமே தேசிகன் உகந்தது" என்று காட்ட முற்பட்டுளளார். ஹ.ப்ரியா வாசகர்களுக்கு நாலாவது பக்ஷம் இன்னது, ஐந்தாவது பக்ஷம் இன்னது என்று அவர் சரியாக விளக்க வில்லை. அதனால் வித்வான்கள் தவிர மற்ற வாசகர்களுக்கு அவர் எழுதுவது இன்னதென்றே புரியாது. நாம் இந்த இரண்டு பக்ஷங்களை யும் தேசிகனின் ஸ்ரீஸூக்திகளை மொழி பெயர்ப்புடன் கொடுத்தே ஸுதர்சனத்தில் வெளிவந்த ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம், பஞ்சமபக்ஷ ஶத தூஷணி, ஸுதர்சனர் பதில் பதினுலாவது ஶதகம், சது:ஶ்லோகீ விரிவுரை ஆகியவற்றில் பலமுறை விளக்கியுள்ளோம். அதுபோல் தேசிகனின் ஐந்து பக்ஷங்களையும் கொடுத்து அதற்குத் தமிழ்மொழி பெயர்ப்பையும் அளித்து ஹ.ப்ரியாவில் விளக்கினலொழிய ஸாமான்ய ஜனங்களுக்கு இவர் எழுதுவது எதுவும் புரியாது.

இங்கும் விளக்குகிறோம் :— தேசிகன் காட்டியிருக்கும் முதல் இரண்டு பக்ஷங்களிலும், "பிராட்டி இயல்வாக ஜீவ வகுப்பைச் சேர்ந் தவளே" என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் பக்ஷத்தில், "அவள் அணு ஸ்வரூபையாய் இருந்த போதிலும், எம்பெருமானைப் போலே அசூழ்த கடநா ஶக்தியுடைய ஐஶ்வரியாகையால் புகூவத் ஸ்வரூபம் உள்ள இடமெங்கும் வியாபிக்கக் கூடியவள்" என்று ஒப் புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவே எங்களாழ்வான், பெரியவாச் சான்பிள்ளை, நாயனாராச்சான் பிள்ளை முதலிய தென்னாசார்யர்களின் பக்ஷம் ஆகும். இரண்டாவது பக்ஷத்தில், "அவள் இயல்வாக ஜீவ வகுப்பைச் சேர்ந்தவளாய் இருந்த போதிலும், மற்ற ஜீவர்களைப் போலல்லாமல் அவள் மட்டும் விபு ஸ்வரூபத்தை உடையவள்" என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பூர்வாசார்ய

http://acharya.org

க்ரந்தங்களிலிருந்து இந்தப் பக்ஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் யார் என்று விளங்கவில்லை. மூன்றாவது பக்ஷத்தில், "அவள் சித், அசித், ஈஶ்வரன் என்னும் மூன்று வகுப்பிலும் சேர்ந்தவள் அல்லள்" என்றும், "ஸ்வரூபத்தில் விபுவானாலும், எம்பெருமானுக்குப் பரதந்த்ரையானவள்" என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பூர்வாசார்ய க்ரந்தங்களிலிருந்து இந்தப் பக்ஷத்தையும் எந்தப் பூர்வாசார்யர்கள் கைக் கொண்டிருந்தார்கள் என்று விளங்கவில்லை.

இனி, நாலாவது பக்ஷத்தில், "பிராட்டி இயல்வாகவே ஈஶ்வர வகுப்பைச் சேர்ந்தவள்" என்றும், "உபயவிபூதி ஶேஷியாய் இருப்பதே ஈஶ்வர லக்ஷணத்திற்குப் போதும்" என்றும், இப்படி விபுஸ்வரூபம் உடைய ஈஶ்வரியாய் இருந்த போதிலும், பிராட்டி எம்பெருமானைத் தவிர்ந்த மற்றவர்களுக்கே ஶேஷி என்றும், எம்பெருமான் பிராட்டியையுள்ளிட்ட அனைவருக்கும் ஶேஷி என்றும், அதனாலேயே அவன் ஸர்வேஶ்வரனாய், ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாகிறான் என்றும், இவ்வுலகிற்கு மூவகைக் காரணமாகவும் அவனே ஆகிறான் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி பக்ஷங்களை வர்ணிப்பதோடு நில்லாமல், "இந்த மூன்று பக்ஷங்களும் ஒன்றுக்கொன்று அதிகம் வேற்றுமை அற்றவை. பிராட்டியை ஜீவ வகுப்பில் சேர்ப்பதா, ஈஶ்வர வகுப்பில் சேர்ப்பதா என்பதிலேயே விவாதம். இந்த நாலு பக்ஷங்களிலுமே 'எம்பெருமான் ஸ்வதந்த்ரன் என்றும், 'பிராட்டி பரதந்த்ரை' என்றும், 'எம்பெருமானுடைய நித்யேச்சையாலேயே பிராட்டியினுடைய பெருமைகள் அனைத்தும் அமைந்திருக்கின்றன' என்றும், "இதற்குக் காரணம் 'ந தஸ்யேஶே கஶ்சந' [இவனை நியமிக்கும் ஈஶ்வரன வேறுயாரும் இல்லை.] முதலான வேத வாக்கியங்களே ஆகும்" என்றும், தமக்கு இப்பக்ஷத்தில் ஈடுபாடு இருப்பது தோற்ற ப்ரமாணங் காட்டி இப்பக்ஷத்தை தேசிகன் விவரிக்கிறார். ஆக, நாலாவது பக்ஷத்தில் பிராட்டிக்கு இயல்வான ஈஶ்வரத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்த அளவுக்கு இதில் ஈடுபாடு காட்டினதோடு மட்டுமல்லாமல், மேலும் சில வாக்கியங்களை எழுதி இதுவே தம் பக்ஷம் என்று உணர்த்துகிறார் தேசிகன். அவற்றின் பொருள் பின் வருமாறு :— "'நரஸம்பந்தீநோ நாரா:' [நரனென்கிற எம்பெருமானுக்கு (தேஹமாய் இருக்கும்) ஸம்பந்தத்தை உடைய

http://acharya.org

பொருள்கள் நாரங்கள்.] என்கிற 'நார' ஶப்தத்தில் இவளும் சேர்ந்தவளாய் இருந்த போதிலும், எம்பெருமானைப்போலே இவளும் அவனுடைய ஸங்கல்பத்தாலே ப்ரதாநன ப்ராப்யையாய் இருப்பது இக்காரணத்தாலேயே முரண்படாது. தன்மைகள் ஒத்திருந்த போதிலும், இருவருக்கும் செயலில் சிறிது வேற்றுமை உண்டு. அனைத்தையும் படைப்பது முதலானவற்றைச் செய்யும் எம்பெருமான் இவளுடைய உகப்புக்காகவே அவற்றைச் செய்கிருபைகையாலே இவளுக்கும் ஜகத்காரணத்வத்தில் அப்ரதானமாகத் தொடர்பு இருப்பதாகக் கூறுவது முரண்படாது. இருவரும் சேர்ந்தே உலகைப் படைக்கும் காரியத்தைத் தொடங்கினாலும், உலகில் காணும் பதிகள் விஷயத்திற்போலே 'பதியே ப்ரதான கர்த்தா' என்று கூறுவதும், 'பதியே செய்தான்' என்று கூறுவதும் பொருந்தி விடுகிறது. பத்தினியினுடைய ஶேஷத்வம் முதலான அப்ராதாங்யங்கள் பதியின் ஸங்கல்பத்தால் ஏற்பட்டவையாய் இருந்தபோதிலும், 'அவை இருவருடைய விருப்பத்தாலும் அமைந்தது' என்று சில வாக்யங்கள் கூறுவதும் பதியின் விருப்பப்படியே பத்நியும் விரும்புகிருளாகையாலே பொருந்தி விடுகிறது'' என்று இவ்வளவும் நாலாவது பக்ஷத்தை நிலை நிறுத்துவதற்காக தேசிகன் அருளிய வாக்கியங்கள். தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ''ஸ்ரீபாஷ்யகாரருடைய ஶிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை. வாக்ய யோஜநா பேதமே உள்ளது'' என்று அருளியிருப்பதோடு சற்றுமுன் எடுத்த வாக்கியங்கள் மிகப் பொருந்தியுள்ளன. மேலும், பஞ்சமபக்ஷ ஶத தூஷணியில் நாற்பதாவது தூஷணம் முதல் 80-வது தூஷணம் ஈருக நாற்பத்தொரு பாராக்களில் தேசிக ஸ்ரீஸூக்திகளை எடுத்துக்காட்டி, அவை நாலாவது பக்ஷத்திற்கே மிகப் பொருந்தியவை என்றும், ஐந்தாவது பக்ஷத்தை அடியோடு தள்ளியவை என்றும் நிரூபித்திருக்கிறோம். இவற்றை அடைவே எடுத்து அச்சிட்டு, ''அந்த ஸ்ரீஸூக்திகள் ஐந்தாவது பக்ஷத்தையே நிலைநிறுத்துகின்றன. நாலாவது பக்ஷத்தைத் தள்ளுகின்றன'' என்று நிரூபித்தாலொழிய, நமது நண்பர் ஸாக்ஷாத் ஸ்வாமியின் ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜநத்தை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று செய்யும் குழப்பவாதங்கள் பலனளிக்கமாட்டா.

இனி ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் எப்படி விவரித்திருக்கிறார் என்பதைக் காண்போம். நாலாவது பக்ஷத்தின் இறுதியில் ''பிராட்டி

http://acharya.org

யின் ஶேஷித்வம் முதலான அப்ராதா₄ந்யங்கள் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே விளைந்தவையாய் இருந்த போதிலும், அவை பிராட்டியும் விரும்பியவையாகையால், சில வாக்கியங்கள், 'அவை இருவருடைய விருப்பத்தாலும் ஏற்பட்டவை' என்று கூறுகின்றன" என்று கூறியதோடு கருத்து வேற்றுமை தெரிவிப்பதாகவே தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை அமைத்திருக்கிறார். அதாவது—"எம்பெருமானை 'ஈஶ்வர: ஸர்வ பூ₄தாநாம்' [எல்லாப் பொருள்களுக்கும் ஈஶ்வரன்.] என்று உபநிஷத்து கூறுவதுபோலே, பிராட்டியையும் ஸ்ரீஸூக்தம் 'ஈஶ்வரீம் ஸர்வ பூ₄தாநாம்' [எல்லாப் பொருள்களுக்கும் ஈஶ்வரியை] என்று கூறுகிறது. ஆகையால் பிராட்டிக்குள்ள ஶேஷித்வம் முதலான அப்ராதா₄ந்யங்கள் இருவருடைய விருப்பத்தாலும் ஏற்பட்டவையே" என்பதே ஐந்தாவது பக்ஷம் என்கிறார் தேசிகன். "இப்படி இருவர் ஈஶ்வரர்கள் என்று கொண்டால் பரஸ்பரம் விருப்பங்கள் முரண்படுமே" என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு ஒரு ஶ்லோகத்தில் "ஐந்தாவது பக்ஷக்காரர்கள், (மனமொத்த தம்பதியாகையாலே) பரஸ்பரம் விருப்பங்கள் மாறுபடாது. இப்படிக்கொண்டால்தான் இருவரையும் ஈஶ்வரர்களாகச் சொல்லும் வேத வாக்கியங்கள் பொருந்தும் என்று ஸமாதானம் கூறுகிறார்கள்" என்கிறார் தேசிகன். ஐந்தாவது பக்ஷத்தைப் பற்றி தேசிகன் அருளியிருப்பது இவ்வளவுதான். ஸாக்ஷாத்ஸ்வாமி இந்த ஐந்தாவது பக்ஷத்தை ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனத்தில், "எம்பெருமானுக்குள்ள ஜக₃த் காரணத்வம், மோக்ஷப்ரத₃த்வம், ஸர்வ ஜக₃ச்சரீரித்வம், ஸர்வ ஜக₃ந்நியந்த்ருத்வம் முதலான ஈஶ்வர லக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. ப₄க₃வான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் ப₄க₃வானுக்கு சரீரமல்ல; தேவியை ப₄க₃வான் நியமிக்கமுடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து ஶேஷியாய் இருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்குப் பாரதந்த்ர்யம் செயற்கையானது. ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும், எம்பெருமானார், ப₄ட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன" என்று தம் மனம் போனபடி நீட்டி விவரித்துள்ளார். இந்த ஐந்தாவது பக்ஷம் ஶ்ருதி,

http://acharya.org

ஸ்ருதி இதிஹாஸங்கள், புராணங்கள், ஆகமங்கள், அருளிச்செயல் கள், ஆளவந்தார், எம்பெருமானார், கூரத்தாழ்வான், ஸோமாசியாண் டான், எங்களாழ்வான், பட்டர், பெரிய ஜீயர் என்னும் நாராயண முனி, தேசிகன், பிள்ளான் நஞ்ஜீயர் நம்பிள்ளை முதலான திவ்யப்ர பந்த வ்யாக்யாதாக்கள், ஶ்ருதப்ரகாசிகாசார்யர் முதலான ஆசார்யர் களின் ஸ்ரீஸூக்திகள், யுக்திகள் ஆகியவற்றுக்கு முரண்பட்டது என்று பஞ்சமபக்ஷ ஶததூஷணியில் 62 பக்கங்கள் கொண்ட நூறு பாராக் களில் விரிவாக நிரூபித்திருக்கிறோம்.

சென்ற [647, 648] ஸுதர்சனம் இதழில் பதினாலாவது சதகம் 93-வது ஸுதர்சனர் பதிலில் இந்த ஶததூஷணியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களை அடைவே எடுத்து நண்பரை அவற்றுக்கு பதில் எழுதச் சொல்லியுளளோம். இவரும் அதை நிறைவேற்றுவதாகச் சொல்லி நம்மிடமிருந்து ஶத தூஷணியைக் கேட்டார். ஶததூஷணியையும், அதை விளக்கியிருக் கும் ஸ்ரீதத்வஸர்வஸ்வத்தையும் உடனே இவருக்கு அனுப்பினோம். அவற்றுக்கு பதிலளிக்காமல், "14-93-க்கு விடை" என்னும் தலைப்பில் குழப்பவாதங்களைச் செய்துள்ளார். ஆகையால் கருணாகராசார்ய ஸ்வாமியைக் குறித்துச் சில கேள்விகளை அடுத்தபடி வெளியிடு கிறோம். அந்தக் கேள்விகளிலேயே இவருடைய வாதங்களுக்கு பதில்களும் அடங்கியுள்ளன.

"நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு"
[திருக்குறள் 784]

என்னும் முறையில் கேட்கப்படும் இக்கேள்விகளை நம் நண்பர் அடைவே எடுத்து அவற்றுக்குப் பதில்றுக்க முற்படுவாராக. இவர் மட்டுமே பதிலெழுத வேண்டும் என்பதில்லை. ஹப்ரியா அக்டோபர் 2001 இதழில் 'திருமகள்' பற்றிக் கட்டுரை எழுதியிருக்கும் காவல் பாக்கம் ராமாநுஜதாதாசார்யர், காவல்பாக்கம் டாக்டர் வாஸுதேவன், பெருமாள்கோவில் பாஞ்சராத்ரம் ஸம்பத் பட்டர், சங்கேந்தி முத்து பட்டர், சென்னை தி. ஈ. ரங்கநாதாசார்யர், காவல்பாக்கம் வரதாசார் யர், திருப்பதி டாக்டர் தேவநாதாசார்யர், ஸ்ரீரங்கம் அனந்த நரசிம்மா சார்யர், கொத்திமங்கலம் கோபாலசக்ரவர்த்தியாச்சார், மன்னார்குடி ராஜகோபாலாசார்யர், ஸ்ரீவத்ஸாங்காசார்யர் ஆகிய ஸ்வாமிகளில் எவர் வேண்டுமானாலும் நம் கேள்விகளை அச்சிட்டுப் பதிலெழுதி ஐந்தாவது பக்ஷத்தை நிலைநிறுத்த முற்படலாம்.

http://acharya.org

கருணாகராசார்ய ஸ்வாமியைக் குறித்துச் சில கேள்விகள்

1. "தேசிகன் கத்ய பாஷ்யத்தில் முதல் சூர்ணையில் 'அநவதிகாதிசய' என்னுமிடத்தின் பாஷ்யத்தில் 'பும்ப்ரதாநேஶ்வரேஶ்வரீ' என்னும் நாமத்தைப் பற்றிய விசாரத்தில் ஐந்தாவது பக்ஷத்தை ஸாதித்திருக்கிறார்" என்று எழுதுகிறீர். ஐந்தாவது பக்ஷத்துக்கே அஸாதாரணமான "பிராட்டியின் குணபூர்வம் (ஶேஷத்வம் முதலானவை) "உபயேச்சா ஸித்தம்" என்னும் கருத்து இந்த நிரூபணத்தில் ஒரு சிறிதும் இல்லையே. இந்த நிரூபணத்திற்குச் சற்று முன பிராட்டிக்கும் பெருமாளுக்கும் உள்ள ஆநுருப்யத்தை விளக்கும் போது, "ஏவம் பதி பாரார்த்ய யுக்த ததிதர ஸர்வஶேஷித்வாங்கிதாநாம் அந்யேஷாமபி குணாநாம் ஆநுருப்யம் ஸூக்ஷ்மம்" [இவ்வண்ணமாக (பிராட்டிக்குள்ள) பதி பாரதந்த்ரியத்தோடு கூடியவையாய், அவனைத் தவிர மற்ற பொருள்களுக்கு (இவள்) ஶேஷியாய் இருக்கையோடு தொடர்புடையவையான (பிராட்டியின்) மற்ற குணங்களும் எம்பெருமானுக்கு அனுருபமாய் இருப்பதை எளிதில் அறியலாம்.] என்று அருளியிருக்கிறார் தேசிகன். இந்த ஸ்ரீஸூக்தி ஐந்தாவது பக்ஷத்தை அடியோடு தள்ளுவதாய், நாலாவது பக்ஷத்தை வலியுறுத்துவதாகவன்றோ இருக்கிறது. ஆகையால நீர் எடுத்த 'பும்ப்ரதாநேஶ்வர-ஈஶ்வரீ' விசாரத்திலுள்ள ஸ்ரீஸூக்திகள் பிராட்டி ஈஶ்வர கோடியைச் சேர்ந்தவளாகையாலே, இயல்வான ஈஶ்வரத்வம் உடையவள் என்னும் நாலாவது பக்ஷத்தை ஸாதிக்குமேயொழிய, 'உபய இச்சாஸித்தமான ஶேஷத்வத்தை உடைய ஈஶ்வரி' என்னும் ஐந்தாவது பக்ஷத்தை எப்படி ஸாதிக்கும்?

2. "ஸர்வபூதேஶ்வரீ" என்று ஸமஸ்தபதமாயிராமல், "ஸர்வ பூதாநாம் ஈஶ்வரீ" என்று வ்யஸ்த பதமாயிருப்பதால், ஸர்வபூதேஶ்வரனுடைய பத்னி என்ற பொருள் கொள்ளமுடியாது. ஆகையால், "ஸர்வபூதாநாம் ஈஶ்வர:" என்று படிக்கப்பட்ட எம்பெருமானைப் போலே, "ஸர்வபூதாநாம் ஈஶ்வரீ" என்று ஸ்ரீஸூக்தத்தில் படிக்கப் பட்டிருப்பதால், ஈஶ்வரனுக்குப்போலே இவளுக்கும் முக்யமான ஸர்வேஶ்வரத்வம் கொள்ளவேண்டும் என்கிறது ஐந்தாவது பக்ஷம். இந்தப் பக்ஷத்தைத் தாத்பர்யசந்த்ரிகையில் கண்டித்துள்ளார் தேசிகன். எங்கே? எனில்—கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் பிராட்டியைப் பற்றிய "அநவதிகாதிஶய-அஸங்க்யேய கல்யாண குணகண-ஸ்ரீவல்லப:" என்னும் தொடரில் "அநவதிகாதிஶய" என்னும் பதத்தை விவரிக்கும்போது, "அநவதிகாதிஶயத்வவசநாத் ஈஶ்வர வ்யதிரிக்த அஶேஷகோசரஸ்யாபி ததைஶ்வர்யஸ்ய ஈஶ்வராபிமதத்வாத் ந த்வைராஜ்யாதி தோஷ: । 'அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' இதி விஷ்ணு பத்நீத்வவேஷேண ஹி ஸர்வஸ்ய

http://acharya.org

ஜக₃த: இயம் ஈஷ்டே । 'ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்' இத்யத்ர து, யத்₃யபி ஸர்வபூ₄தாநாம் இதி ப்ரதிஸம்ப₃ந்தி₄ நிர்த்தே₃ஶாத் ஸ்த்ரீ ப்ரத்யயாநுஸாரேண ஈஶ்வரபத்நீதி விவக்ஷா ந ஶக்யா, தத₂ாऽபி வாக்யாந்தரப₂லாத் அர்த்த₂ஸ்ய தத₂ாத்வ ஸித்₃தி₄: ।'' [(பிராட்டியின் கல்யாண குணங்கள்) எல்லையற்ற மேன்மையை உடையவை என்று கூறியதால், 'ஈஶ்வரனைத் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல இவளுடைய நியமனஸாமர்த்₂யம் ஈஶ்வரனுக்கு இஷ்டமாகையால் 'இரண்டு ஈஶ்வரர்கள்' முதலான தோ₃ஷம் இல்லை; 'விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈஶ்வரியாயிருக்கிருள்' என்னும் வேதவாக்யத்தின்படி 'விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பதனலன்றே இவள் அனைத்துலகையும் நியமிக்கிருள். 'ஸர்வபூ₄தங்களுக்கும் ஈஶ்வரி' என்னும் ஸ்ரீஸூக்த வாக்யத்தில், (யாருக்கு ஈஶ்வரி என்னும் கேள்வியெழ) 'ஸர்வ பூதங்களுக்கும்' என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச் சொல்லியிருப்பதால், ஈஶ்வரபத்னியென்று பொருள்கொள்ள முடியாது என்பது உண்மையாலும், முன் எடுத்த ('அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ' எனும்) வாக்யத்தின் ப₂லத்தாலே இவ்வாக்கியத்திலும் விஷ்ணு பத்னியாயிருப்பதாலேயே இவள் ஈஶ்வரியாகிருள் என்று கொள்ளவேண்டும்] என்று ஸர்வ பூ₄தேஶ்வரத்வஸாம்யத்தைக்கொண்டு பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸமமான முக்₂யேஶ்வரத்வத்தைச் சொல்லும் ஐந்தாவது பக்ஷத்தை மிகத் தெளிவாகக் கண்டித்திருக்கிருர் தேசிகன். இவர் ஐந்தாவது பக்ஷத்தையே தழுவினர் என்று நீங்கள் கூறுவது இந்த ஸ்ரீஸூக்திக்கு முரண்பட்டதல்லவா?

3. ஶரணுக₃தி க₃த்₃யத்தில் பிராட்டியைப் பற்றிய முதல் சூர்ணையில், 'அநவதி₄காதிஶய' என்னும் பத₃த்தை விவரிக்கும்போது பிராட்டிக்கு எம்பெருமானேடுள்ள பலவகையான ஸாம்யத்தை விவரித்துவிட்டு, ''ந 'ச ஏதாவதா ப₄க₃வதோ நிஸ்ஸமாப்₄யதி₄கத்வ விரோத₄: । ப்ரத்யுத தத்ப்ரதிஷ்டாபநமேவ । ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ' இதி ஶ்ருதே: । ந ஹ்யேவம்வித₄பத்நீ விஶிஷ்டத்வம் கஸ்யசித₃ந்யஸ்யாஸ்தி, யேந தத்ஸாம்யாதி₃ ஶங்கா ஸ்யாத் । உபப்₃ரும்ஹிதம் ச அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா' இதி । ஏவம் அஸ்யா: ஶீலாதீ₃நாம் அநவதி₄காதிஶயத்வேऽபி அவிரோத₄: ।'' [பிராட்டிக்கு எம்பெருமானேடு பல வகையில் ஸாம்யம் கூறுவது, எம்பெருமான் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதோடு முரண்படாது; நேர்மாருக, அவன் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதையே உறுதிப்படுத்தும்; எப்படியெனில்; இவ்வண்ணமாகப் பல பெருமைகளில் தன்னேடு ஒத்த பத்னியோடு கூடியிருக்கை (பிராட்டியையுள்ளிட்ட) வேறு எவர்க்கும் இல்லையே;

http://acharya.org

அப்படியிருந்தால்தானே 'இவனுக்கு ஒத்தாரோ மிக்காரோ உண்டோ' என்று ஐயுற முடியும். ஸ்ரீராமாயணத்திலும் 'ஜனகராஜன் திருமகளைத் தனக்கென்று இட்டுப்பிறந்த (ஸ்ரீராமப்ராணகிற) தத்துவத்தின் பெருமை அளவிடவொண்ணாததன்றோ'' என்று இவ்விஷயம் விளக்கப்பட்டதன்றோ; இவ்வண்ணமாகப் பிராட்டியின் ஶீலாதி₃ குணங்கள் எல்லையற்ற மேன்மையை உடையவையானாலும் 'ஒத்தாரும் மிக்காருமில்லாதவன் எம்பெருமான்' என முழங்கும் ஶ்ருதி விரோத₄ம் வராது.] என்று ஸாதித்திருக்கிறார் ஸ்ரீதேசிகன். அவர் ஐந்தாவது பக்ஷத்தைத் தழுவியிருந்தால், ஆக்ஷேப ஸமாத₄ானங்கள் இப்படி அமைய இடமேயில்லையென்பதை மறுக்கமுடியுமா?

4. ஸ்ரீதத்வஸித்₃தா₄ஞ்ஜனத்தில் ஜக₃த்₃வ்யாபாரமாகிற ப்₃ரஹ்மலக்ஷணம் எம்பெருமானுக்கேயிருந்தபோதிலும், முக்தர்களுக்கில்லாத ஜக₃த்₃வ்யாபாரஶக்தி இவளுக்கும் இருக்கையால் இவள் ப்₃ரஹ்மமல்லாவிடிலும் ஈஶ்வரதுல்யையான ஈஶ்வரியேயாகிறாள் என்று வாத₃ம் செய்யப்படுகிறது. சது:ஶ்லோகி 2-வது ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில், "ஸாத்வதோக்தம் தே₃வ்யாஸ் தாத்₃ருக்த்வமபி ஶ்ருதிஸ்ம்ருதி பூர்வாபராதி₃ப்ரஸித்₃த₄ பத்நீத்வாத்₃யநு₃கு₃ணம் யோஜ்யம் । கிஞ்ச யதா₂ முக்தஸ்ய பு₄க₃வதா பரமஸாம்யே ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி₃ஸித்₃தே₄ऽபி 'ஜக₃த்₃வ்யாபாரவர்ஜம்' இதிலக்ஷணபூ₄தை: ஆகாரை: வைஷம்யம் ஸ்த₂ாப்யதே ததே₃ஹாபி ப₄வதி; 'பி₄ந்நலக்ஷணம்' இதி ச தத்ரைவோக்தம் ।" [ஸாத்வத ஸம்ஹிதையில் பிராட்டி பெருமானோடு ஒத்தவள் என்று கூறியிருப்பது ஶ்ருதிஸ்ம்ருதிகள், (ஸம்ஹிதையின்) முன்பின் பாகங்கள் முதலானவற்றில் பிரசித்தமான பத்நீத்வம், (பாரதந்த்ர்யம்) முதலானவற்றுக்கு அனுகு₃ணமாகவே நயனம் செய்யத்தக்கது. மேலும், முக்தாத்மாவுக்கு ஶ்ருதி, ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்தபோதிலும், 'ஜக₃த்₃வ்யாபார வர்ஜம்' என்னும் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணமாயிருக்கும் தன்மைகளில் வேறுபாடு எப்படி நிலைநிறுத்தப்படுகிறதோ, அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு. 'பெருமானும் பிராட்டியும் வேறு லக்ஷணமுடையவர்' என்று (ஸாம்யத்தைக் கூறும்) அந்த ஸாத்வத ஸம்ஹிதா வாக்யத்திலேயே சொல்லப்பட்டதன்றோ.] என்னும் ஸ்ரீஸூக்தியோடு உங்கள் வாத₃ம் முரண்படவில்லையா?

http://acharya.org

5 to 104. இனி "பஞ்சமபக்ஷ ஶததூஷணீ"யில் உள்ள நூறு பூர்வபக்ஷங்களையும் நூறு கேள்விகளாக அமைத்துக்கொண்டு அவற்றுக்கு முறையே விடையளிக்கவும்.

105. "யதா$_2$ ஸர்வக$_3$த:" [வி. பு. 1-8-17] என்னும் ஶ்லோகத்திற்கு எங்களாழ்வானுடைய முதல் நிர்வாஹத்தில் பிராட்டியினுடைய ஸ்வரூப வ்யாப்தியையே பொருளாகக் கொள்ள வேண்டும் என்று எழுதுகிறீர். இந்த ஶ்லோகத்திற்கு மூலமான முந்தின ஶ்லோகத்தில் மைத்ரேயர் கேட்ட கேள்வி — "திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது ஸ்ரீதேவி உண்டானாள் என்று கேள்விப்படுகிறோம்; 'ப்$_4$ருகு$_3$ மஹரிஷிக்கு க்$_2$யாதி என்னும் பத்நியிடம் உண்டானாள்' என்று எப்படிக் கூறுகிறீர்" என்பது. இதற்குப் பதிலாகப் பராசரர் அடுத்துள்ள பதினேழாவது ஶ்லோகத்தில், "ஸர்வலோக பிதாவான விஷ்ணுவை விட்டுப் பிரியாத ஸர்வலோக மாதாவான இவள் அவரைப் போலவே என்றும் இருப்பவள். அவரைப் போலவே (அவதாரங்களில்) இவளும் தோன்றுவதும் மறைவதும் உண்டு. அவள் முதலில் ப்$_4$ருகு$_3$மஹரிஷிக்கு க்$_2$யாதியிடம் பெண்ணாகத் தோன்றினாள். அதற்குப்பின் இந்திரனுக்கு துர்வாஸருடைய சாபம் ஏற்பட்டதினாலே மறைந்து அமுதம் கடையும்போது மறுபடியும் தோன்றினாள். எங்கும் இருக்கும் விஷ்ணு எத்தன்மைகளோடு இருக்கிறாரோ, இவளும் அத்தன்மைகளோடேயே இருக்கிறாள்" என்று பதில் கூறுகிறார். கேள்வியை யொட்டிப் பார்க்கும்போது அவதார வ்யாப்தியை "ஸர்வக$_3$த" ஶப்$_3$த$_3$த்திற்கு முக்யார்த்த$_2$மாகக் கொண்டால்தான் பதில் ஒட்டும். ஸ்வரூப வ்யாப்தியைப் பற்றிக் கேள்வியே இல்லையே! பதிலில் ஸ்வரூப வ்யாப்தியைப் பொருளாகக் கொள்வது கேள்விக்கு அடியோடு பொருந்தாதே. அதனாலேயே எங்களாழ்வான் அவதார வ்யாப்தியைக் கூறும் ஸர்வ க$_3$தத்வத்தை முதலில் எடுத்து, ஸத்ய ஜ்ஞாநாதி$_3$ ஸ்வரூப கல்யாண கு$_3$ணங்களைப் பிறகு எடுக்கிறார். இங்கு ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் முதலான ஸ்வரூப நிரூபக கல்யாண குணங்களைக் கூறுவதாக நீர் கூறுகிறீர். ஸர்வக$_3$தத்வத்தை முதலில் எடுக்கையாலும், "அநந்த" ஶப்$_3$த$_3$த்தை இடாமையாலும், 'ஸ்வரூப நிரூபக கல்யாண கு$_3$ணாநாம்' என்று எங்களாழ்வான் அருளாமையாலும் இங்கு சொல்லுவது ஸ்வரூப நிரூபக குணங்கள் அல்ல,

http://acharya.org

நிரூபித ஸ்வரூப விஶேஷணங்களே என்று தெளிவாகிறது. மேலும், ஶ்ரிய:பதித்வமும் ஸ்வரூப நிரூபக குணங்களில் ஒன்றுகையாலே ஸ்ரீதேவி விஷயத்தில் அது பொருந்தாது. ஆகையால் பரப்₃ரஹ்மத்திற்கேயுரிய ஸ்வரூப நிரூபக குணங்கள் ஸ்ரீதேவிக்கும் உண்டு என்று எங்களாழ்வான் அருளுவதாக நீர் கூறுவது எப்படிப் பொருந்தும்?

106. மைத்ரேயர் கேட்ட கேள்விக்கு பராசரர் விக்₃ரஹ வ்யாப்தியையே முக்யமான பதிலாகக் கூறினர் என்பது அடுத்ததான ஒன்பதாம் அத்தியாயத்தில் உள்ள ஶ்லோகங்களாலும் தெளிவாகிறது. ஒன்பதாம் அத்தியாயத்தில் மைத்ரேயரின் இந்தக் கேள்விக்குப் பதிலை நிறைவுபடுத்தும்போது,

ப்₄ருகோ₃: க்₂யாத்யாம் ஸமுத்பந்நா ஸ்ரீ: பூர்வமுத₃தே₄: புந: ।
தே₃வதா₃நவ யத்நேந ப்ரஸூதாம்ருதமந் த₂நே ॥
ஏவம் யதா₂ ஜக₃த்ஸ்வாமீ தே₃வதே₃வோ ஜநார்த₃ந: ।
அவதாரம் கரோத்யேஷா தத₂ா ஸ்ரீ: தத்ஸஹாயிநீ ॥

[வி. பு. 1-9-141, 142]

[ஸ்ரீதேவி முதலில் ப்₄ருகு₃ மஹரிஷிக்கு க்₂யாதி என்னும் மனைவியிடம் பெண்ணாகப் பிறந்தாள். மறுபடியும் தேவாசுரர்களின் முயற்சியால் அமுதம் கடையும்போது திருப்பாற்கடலிலிருந்து அவதரித்தாள். இவ்வண்ணமாக லோகநாதனும் தேவதேவனுமான ஜனார்த்தனன் அவதாரம் எடுக்கும்போது அவனுக்குத் துணையாக இவளும் அவதரிக்கிறாள்.] என்று தொடங்கி, "ராகவனாக அவதரித்தபோது சீதையானாள், கிருஷ்ணனாக அவதரித்தபோது ருக்மிணியானாள்" என்று தொடர்ந்து அவதாரங்களையே விவரிக்கிறார். இதிலிருந்து பராசரரின் பதிலின் தொடக்கத்திலுள்ள, "**யதா₂ ஸர்வக₃த:**" என்னும் ஶ்லோகத்திற்கு அவதார வ்யாப்தியே நேரானதாய் முக்கியமானதான பதில் என்று விளங்குகிறது. இதையே எங்களாழ்வான் முதல் நிர்வாஹத்தில் "**ஸர்வக₃தத்வ**" ஶப்₃த₃த்தால் முதலில் விளக்கி, அடுத்தபடி ஸ்வரூப கல்யாண குணங்களையும் அதிதேசம் செய்வதாக வ்யாக்யானமிட்டார். இனி இரண்டாவது நிர்வாஹம் எதற்காக? எனில்—பிராட்டியினுடைய ஸ்வரூப வ்யாப்தி இங்கு முக்₂யார்த்த₂மாக முடியாவிடிலும், உபலக்ஷண முறையில் அதையும் குறிக்கலாகாதோ? என்னும் கேள்வியெழ, இரண்டாவது நிர்வாஹம் அதற்கு பதில் கூறுகிறது. அதாவது—ஈஶ்வரர்கள் இருவரைக் கொள்வது "**ஈஶதே தே₃வ ஏக:**" [ஒரு

http://acharya.org

தேவியை உலகனைத்தையும் நியமிக்கிறான்.] முதலான ப்ரமாணங்களோடு முரண்படுமாகையாலே ஸ்வரூப வ்யாப்தியை இந்த பொருளாகக் கொள்ளவேண்டுமானால், "பகவான் விபுஸ்வரூபத்தையுடையவனாய் எங்கும் பரந்து நிற்கிறான். இவள் அணு ஸ்வரூபத்தையுடையவளாய் இருந்தபோதிலும் அகடிதகடநா ஶக்தியாலே அவன் உள்ளவிடமெங்கும் (ஸ்வரூபத்தை நிரூபிப்பவளாய்) வ்யாபித்திருக்கிறாளாகையாலே, இவளையும் எல்லாவிடத்திலும் வ்யாபித்திருப்பவளாகக் கூறலாம் என்பது இரண்டாவது நிர்வாஹத்தின் கருத்து. ஆகையால் இப்படி இரண்டு நிர்வாஹங்களுமே எங்களாழ்வான முக்யமாக ஸாதிக்கும்போது, "இரண்டாம் யோஜனையில் எங்களாழ்வானுக்கு ஆதரமில்லை" என்று இவர் எழுதுவதை நடுநிலையாளர்கள் ஏற்கமாட்டார்கள். ஆக, முதல் நிர்வாஹத்தில் ஸ்வரூப நிரூபக குணங்களை அதிதேஶம் செய்வதாகக் கொண்டால் ஸ்வரூப நிரூபக குணங்களில் ஒன்றான "ஶ்ரிய: பதித்வம்" [ஸ்ரீதேவிக்குப் பதியாயிருக்கை] பிராட்டிக்குப் பொருந்தாதது என்பதையும், மைத்ரேயரின் கேள்விக்கு நேரே பதிலான அவதார வ்யாப்தியை முதல் நிர்வாஹத்திலுள்ள "ஸர்வகதத்வ" ஶப்தத்திற்குப் பொருளாகக் கொண்டே தீரவேண்டும் என்பதையும், எங்களாழ்வான் இரண்டாவது நிர்வாஹத்தில் இவளுக்கு அகடிதகடநா ஶக்தியாலேயே ஸ்வரூப வ்யாப்தியைக் கொண்டாராகையால் தேசிகன் எடுத்த ஐந்து பக்ஷங்களில் முதலாவது பக்ஷத்தையே ஏற்றுக்கொண்டவர் எங்களாழ்வான் என்பதையும் உம்மால் மறுக்கமுடியுமா?

107. ஐந்தாவது பக்ஷம் "பெருமாளும் பிராட்டியும் துல்யமான (ஸமமான) ஈஶ்வரர்கள்" என்று கூறுகிறது. ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனத்தில் ஸாக்ஷாத் ஸ்வாமி, "பகவான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு சரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்க முடியாது. பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது; அவளுக்கு பகவத் பாரதந்த்ரியம் செயற்கையானது. ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு ஸ்வரூபம்" என்று விவரித்திருக்கிறார். நாலாவது பக்ஷம் இதற்கு நேர்மாறாக, "எம்பெருமான் ஸர்வேஶ்வரன்; பிராட்டி ஈஶ்வர கோடியிலே சேர்ந்தவளாகையாலே இயற்கையான ஈஶ்வரத்வம் உடையவளாய் இருந்தபோதிலும்,

http://acharya.org

அவனைத் தவிர்ந்த மற்றவர்களுக்கே ஈச்வரி; பிராட்டி பகவானுக்கு சரீரமாய் இருப்பவளே; எம்பெருமான் பிராட்டிக்கு ப்ரேமத்தால் பரதந்த்ரனாய் இருப்பவனேயொழிய, ஸ்வரூபத்தால் பரதந்த்ரனாய் இருப்பவனல்லன்; பிராட்டியின் பத்நீத்வம் பாரதந்த்ர்யமேயானாலும் விக்ரஹத்தில் மாத்திரமேயல்லாமல ஸ்வரூபத்திலும் உண்டு" என்று கூறுகிறது. ஐந்தாவது பக்ஷம் பிராட்டியும் எம்பெருமானைப்போல உலகிற்கு மூவகைக் காரணமாயிருப்பவள் என்று கூறுகிறது. நாலாவது பக்ஷம் பிராட்டி உலகைப் படைக்கும்படி எம்பெருமானைத் தூண்டுகிறவளாகையாலும், உலகைப் படைப்பதால் ஏற்படும் உகப்பில் அவளும் அந்வயிக்கிறவளாகையாலும் அவள் அப்ரதானமான ஜகத்காரணத்வத்தையே உடையவள் என்று கூறுகிறது. நம்முடைய மததூஷணியில் 40 முதல் 80 ஈறான பாராக்களில் நாலாவது பக்ஷத்திலுள்ள கொள்கைகள் அனைத்தையும் தேசிகன் தழுவியிருக்கிறார் என்பதையும், ஐந்தாவது பக்ஷத்தை அறவே புறக்கணித்திருக்கிறார் என்பதையும் அவருடைய ஸ்ரீஸூக்திகளைக் கொடுத்து எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதுபோல் "பிராட்டியின் சேஷத்வம் முதலானவை உபாயேச்சா ஸித்தமும்; பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமல்ல; ஸ்வரூபத்தில் பத்னி அல்ல; பிராட்டியை எம்பெருமான் நியமிக்க முடியாது"; முதலான ஐந்தாவது பக்ஷக் கொள்கைகளை தேசிகனோ அல்லது வேறு எந்தப் பூர்வாசார்யரோ அருளியிருப்பதை நீர் எடுத்துக்காட்ட முடியுமா? "ஈசானா" என்று பிராட்டியைக் குறிப்பதனாலேயே முற்கூறிய பல ப்ரமாணங்களுக்கு முரணாக, அவளுக்கு ஐந்தாவது பக்ஷக்காரர்கள் கூறிய தன்மைகள் எல்லாம் வருமா?

108. 'ப்ரபந்ந பாரிஜாதம்' அம்மாளுடையது என்று ஸ்தாபிப்பதற்காக "பிள்ளான், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை ஆகிய அருளிச்செயல் வ்யாக்யாதாக்கள் யாருமே அமுதனார் அருளிய இராமாநுச நூற்றந்தாதியை மேற்கோளாகக் காட்டவில்லை. எனவே அவ்வாசார்யர்கள் காலத்தில் அந்நூல் இருந்திருக்கவில்லை என்றல்லவா கொள்ளவேண்டும். இதில் நம் புத்தூர் ஸ்வாமிக்கு உடன்பாடா?" என்று கேட்டிருக்கிறீர்; இதற்கு பதில்: இராமாநுசநூற்றந்தாதியைப் பல பூர்வாசார்யர்கள் மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள் :—

http://acharya.org

(1) பாசுரப்படி ராமாயணத்தில், பாலகாண்டத்தில் "குணந்திகழ் கொண்டல்" [60] என்னும் நூற்றந்தாதித் தொடரைப் பெரியவாச்சான் பிள்ளை கையாண்டிருக்கிறார். (2) ஆசார்ய ஹ்ருதயம் [3-155] சூர்ணையில் அந்த தொடரை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் கையாண்டிருக்கிறார். இது இராமாநுச நூற்றந்தாதித் தொடர் என்று அதன் வ்யாக்யானத்தில் மாமுனிகள் காட்டியிருக்கிறார். (3) நம் பிள்ளையின் சீடரான பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் [நம் பதிப்பு பக்கம் 299 to 301] நூற்றந்தாதிப் பாசுரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. (4) பெரியவாச்சான் பிள்ளையின் குமாரரான நாயனாராச்சான் பிள்ளை தமது சரமோபாய நிர்ணயத்தில் [நமது பதிப்பு பக்கம் 541 to 544] நூற்றந்தாதிப் பாசுரங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். (5) மாமுனிகளின் ஆசார்யருக்கு ஆசார்யரான நாலூராச்சான்பிள்ளையும் தமது "சரமோபாய தாத்பர்யம்" என்னும் நூலில் இராமாநுச நூற்றந்தாதியை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். (6) நாயனாராச்சான் பிள்ளை தமது சது:ஶ்லோகீ வ்யாக்யானத்தில் [நமது பதிப்பு பக்கம் 37] நூற்றந்தாதிப் பாசுரத்தை மேற்கோள் காட்டியிருக்கிறார். (7) எம்பெருமானாருடைய அந்தரங்க சீடரான வடுகநம்பி, எம்பெருமானாருடைய சரித்திரத்தைக் கூறும் யதிராஜ வைபவம் என்னும் நூலில் நூற்று ஐந்தாவது ஶ்லோகத்தில் இராமாநுச நூற்றந்தாதியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூல்களில் இவருக்குப் பரிசயமில்லாததால் இவற்றை இவர் அறியாமல் இருந்தது வியப்பல்ல. ஆனால் எப்படியாவது ப்ரபந்ந பாரிஜாதத்தை நடாதூர் அம்மாளுடையதாக ஆக்கவேண்டும் என்னும் அபிநிவேசத்தாலே, ஸ்ரீவேதாந்த தேசிகர் தம்முடைய ப்ரபந்த ஸாரத்தில், "முத்தி தரும் எதிராசர் பொன்னடிக்கே மொழிந்த அமுதர் பாடல் நூறும் எட்டும்" [14] என்று பாடியதை மறைத்தாரா? அல்லது மறந்தாரா? என்பதை நடுநிலையாளர்களே நிர்ணயிக்கவேண்டும். எனவே "நடாதூர் அம்மாளின் தத்வ ஸாரத்தைப் பல பூர்வாசார்யர்கள் மேற்கோள் காட்டியிருப்பதுபோல், ப்ரபன்ன பாரிஜாதத்தின் ஒரு துணுக்கைக்கூட தேசிகன் மாமுனிகள் முதலான பூர்வாசார்யர்கள் எவருமே எடுக்காததிலிருந்தே அது பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்டகாலத்தில்இயற்றப்பட்ட நூல் என்பதை மறுக்கமுடியுமா?" என்னும் நம் கேள்விக்கு 'மறுக்க இயலாது' என்றே இவர் பதிலளிக்கவேண்டும்.

http://acharya.org

முடிவுரை

நமது நண்பர் (ஸ்ரீ உ. வே கருணாகராசார்யஸ்வாமி) 5—11—01 கடிதத்தில் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் 647,648-ல் தேவரீருடைய மத தூஷணியில் காட்டியுள்ள நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களை அடைவே எடுத்து அவை ஐந்தாவது பக்ஷத்துக்கு முரண்பட்டவை அல்ல என்று எழுதவேண்டும் என்று அடியேனுக்குக் கட்டளையிட்டுள்ளது. பாகவத நியமனத்தை சிரஸா ஏற்றுச்செய்ய முற்படுகிறேன். அடியேனிடம் தேவரீர் அருளிச்செய்துள்ள மததூஷணி இல்லை. ஒரு ப்ரதி க்ருபையுடன் உடனே அனுப்பியருள ப்ரார்த்திக்கிறேன்" என்று எழுதினார். உடனே மததூஷணியையும், அதை விளக்கியிருக்கும் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தையும் அனுப்பி, கடிதமும் எழுதினோம். ஆனால் ஹயக்ரீவ ப்ரியா கார்த்திகை இதழிலும், 21—12—2001 அன்று வெளிவந்த மார்கழி இதழிலும் மததூஷணிக்கு நண்பர் பதில் எழுத முற்படவில்லை. 1998 மார்ச் மாதமே மததூஷணியை வெளியிட்டு, அதை ப்ரபல தேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் பலருக்கும் அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பதில் எழுதுவதாகப் பலர் வாங்கிச் சென்றார்கள். ஆனால் இன்றுவரை எவரும் பதில் அளிக்கத் துணியவில்லை. ஏனெனில், அந்த தூஷணங்களை அச்சிட்டாலே, 'இவர்களுடைய ஐந்தாவது பக்ஷம் ஸகல ப்ரமாணங்களுக்கும் ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டது. தேசிகன் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர்" என்பது ஸாமான்ய ஜனங்களுக்கும் புரிந்துவிடும். இவரும் அக்காரணத்தாலேயே தயங்கி நிற்கிறார் என்று தோன்றுகிறது. இராவணன் ஸீதாப் பிராட்டியை அபஹரித்துப் பெரிய அபசாரத்தைச் செய்தான். தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்கள் அனைவரும் பிராட்டியினுடைய பகவத் பாரதந்த்ரியப் பெருஞ்செல்வத்தை அபஹரித்து, அவளிடம் அஸஹ்யாபசாரத்தைத் தாங்கள் செய்வதை உணராமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சென்னை ஆடிட்டர் K. ஜகந்நாதன் ஸ்வாமி நூற்றுக்கணக்கான தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி ஐந்தாவது பக்ஷம் தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கு முரண்பட்டது என்று ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவுக்கு எழுதினார். 13—11—2001-ல் ஹயக்ரீவப்ரியாவிற்கும் இதுபற்றிக் கட்டுரை எழுதி அனுப்பி உள்ளார். இவருக்கும் அதன் நகலை அனுப்பியுள்ளார். மத்₄யஸ்த₂ மஹனீயரான அவரைப்போல், தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மத்₄யஸ்த₂ வித்₃வத்₃வரிஷ்ட₂ர் ஒருவராவது இதுவரை உண்மையை ஒப்புக்கொள்ள முன்வராமல் இருப்பது, மிகவும் வருந்தத்

http://acharya.org

தக்கது. "ஸாக்ஷாத்ஸ்வாமி" போன்ற பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்ட வித்வான்கள் தவறு செய்யக் கூடியவர்கள் என்பது அவர்களுடைய க்ரந்தங்களைப் பார்த்தாலே தெரியும். ஸ்ரீதத்வ ஸித்₃தா₄ஞ்ஜனத்தில் அது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. இதேபோல் "தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்ட வித்₃வத்₃ வரிஷ்டர்களான யதீந்த்ரமத தீ₃பிகாகாரர், புரிசை ஸ்ரீரங்காசார்யஸ்வாமி முதலானவர்கள் கைவல்ய விஷயத்தில் தவறு செய்துவிட்டார்கள்" என்று நாம கைவல்ய ஸித்₃தா₄ஞ்ஜனத்தில் எடுத்துக் காட்டியபோது மஹாவித்₃வான் ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ந்யாய வேதாந்த வித்வான் வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி முதலான தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த எல்லா வித்₃வத்₃ வரிஷ்டர்களும் அதை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டனர். அந்த நேர்மை தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களிடமும் ஏற்பட வேண்டும். பிற்பட்டவர்களுடைய எழுத்துக்களை ஸ்தாபிப்பதற்காகப் பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்திகள் பலவற்றுக்கு முரண்பட எழுதி, பிராட்டியினுடைய ஸ்வாபா₄விகமான பாரதந்த்ரியப் பெருஞ் செல்வத்தைப் பறிக்க முயல்வதும், விசிஷ்டாத்வைதத்தை விசிஷ்டத்வைதமாக்க அரும்பாடு படுவதும் அறிஞர்களுக்கு அழகல்ல. வெறும் வைதிகராக மட்டும் அல்லாமல் லௌகிகத்திலும் பெரிய பதவி வகிக்கும் நமது நண்பர், பஞ்சமபக்ஷ ஶததூஷணியில் காட்டியுள்ள தூஷணங்கள் பஞ்சமபக்ஷத்தை அடியோடு தகர்க்கின்றன என்னும் உண்மையை ஏற்பாரானால் அது அவருக்குச் சிறப்பே ஒழியத் தாழ்வு அல்ல. இதை உணர்ந்து, பிராட்டியை இயல்வாகவே ஈஶ்வரி என்று ஒப்புக்கொண்டு, அவளுடைய பாரதந்த்ரியப் பெருஞ் செல்வத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கும் நான்காவது பக்ஷமே தேசிகனுடைய பக்ஷம் என்பதை நண்பர் இசைவார் என்று நம்புகிறோம்.

96. ஆதிப்பிரான்—விஷு - கார்த்திகை, மார்கழி [I—8, 9]

சென்ற இதழில் ஸுதர்சனர் பதில் 14-89-ல் 'திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் சரித்திரங்கள் கற்பிதங்கள்' என்று ஆதிப்பிரானில் எழுதப்பட்டது தவறு என்பதை நாம் அவ்வாழ்வார்களின் க்ரந்தங்களிலுள்ள அகச் சான்றுகளைக் கொண்டே நிரூபித்திருந்தோம். இதற்கு பதிலெழுவதாக முற்பட்டு ஸம்பந்தமில்லாத பல விஷயங்களை எழுதிப் பக்கங்களை நிரப்பியிருக்கிறது ஆதிப்பிரான். அந்தப் பதிலில் ஸாரமான விஷயம் பின்வருமாறு:— "ஆழ்வார்கள் தம் திவ்யப்ரபந்தங்களில் தம்மைப் பற்றித் தாழ்வாகக் கூறிக்கொண்டது நைச்யாநுஸந்தானமாகையாலே உண்மையல்ல" என்பது. இதற்குப்

http://acharya.org

பதில் :— சாஸ்திரங்களில் ப்ரபன்னர் "அஹமஸ்மி, அபராதா₄நாம் ஆலய: அகிஞ்சந:" [நான் குற்றங்களுக்கெல்லாம் கொள்கலனுயிருப்பவன்; கைம்முதல் ஒன்றும் இல்லாதவன்.] என்று அநுஸந்திக்க வேண்டுமென்று விதித்திருக்கிறது. அதன்படி ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அநுஸந்தித்திருக்கிருர்கள். நைச்யாநுஸந்தானம் என்பது உள்ள தாழ்வை அநுஸந்திப்பதேயொழிய, இல்லாத தாழ்வை ஏறிட்டுக்கொண்டு அநுஸந்திப்பதல்ல. பிறந்தது முதற்கொண்டு எக்குற்றமும் செய்யாத நம்மாழ்வார் போன்றவர்களும் அநுஸந்தித்திருக்கிருர்களே; அது எப்படிப் பொருந்தும்? என்னும் கேள்வியெழுகிறது. "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" [திருவாய் 2-6-8] என்று அவரே அநுஸந்தித்தபடி அவர் அநாதிகாலமாகப் பல பிறப்புக்கள எடுத்த ப₃த்₃த₄ ஜீவரேயாகையாலே அப்பிறப்புக்களில் செய்த குற்றங்களை அநுஸந்திக்கிருர் என்று கொள்ளத் தடையில்லை. "ஆழ்வார்களை ஒவ்வொரு நித்ய ஸூரியின் அவதாரமாகக் கூறுகிருர்களே. அவர்களுக்கு ப்ராக்ருதமான பிறப்பு ஏது?" என்னும் கேள்வி எழுகிறது. "அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளையொட்டிப் பார்க்கும்போது, அவர்களை நித்ய ஸூரிகளின் அவதாரமாகவும், எம்பெருமானின் அவதாரமாகவும் கூறுவது அவர்களுடைய வைபவத்தைக் கண்டு சொல்லப்படும் வார்த்தையே என்று கொள்ளவேண்டும். அதை உண்மையென்று கொண்டாலும், ஒரு ப₃த்₃த₄ ஜீவனிடம் நித்யஸூரிகளின் அல்லது பகவானின் அம்சம் உள்ளது என்று கொண்டால்தான் அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளோடு முரண்படாமலிருக்கும்" என்று நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் நிர்ணயித்துள்ளார்கள். "ஆழ்வாராலும் ஜாதி போகாது" என்று அருளிய தேசிகனும் அவர்கள் ப₃த்₃த₄ ஜீவர்கள் என்றே கருதியவர் என்பது தெளிவாகிறது. இக்காரணத்தாலேயே அவர்களை அபூ₄ர்வதசாவதாரமாக அவர் கூறியதும் அம்சாவதாரம் என்னும் கருத்திலேயே ஆகும். "யத்₃யத்₃விபூ₄திமத் ஸத்த்வம்......மம தேஜோம்ஸ ஸம்ப₄வம்" [கீதை 10-4] என்று கீதையில் கண்ணனும் சிறப்புள்ளவர்களிடமெல்லாம் தன் அம்சம் இருப்பதாகக் கூறினன். ஆகையால் ஆழ்வார்களுடையவும், ஆசார்யர்களுடையவும் நைச்யாநுஸந்தானத்தை, உள்ள நைச்யத்தை அவர்கள் அநுஸந்தித்ததாகவே கொள்ளமுடியும். இல்லாவிடில் அவர்கள் பொய் கூறினர்கள் என்னும் பெரிய தோஷம் வரும்.

தொண்டரடிப் பொடியாழ்வார் "மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்துவேனை, போதரே என்று சொல்லிப் புந்தியுள் புகுந்து—தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகனூர் அரங்கம்'

http://acharya.org

[திருமாலை 16] என்று அப்பிறவியிலேயே அரங்கன் தன் அழகைக் காட்டி அவருடைய ஸ்த்ரீசாபல்யத்தைப் போக்கினன் என்று தெளிவாக அருளியிருக்கிறார். திருமங்கையாழ்வாரும் பலபல பாசுரங்களில் ஆழ்வாராவதற்கு முன் தாம் பலபல குற்றங்களைச் செய்ததைப் பன்னிப்பன்னியுரைக்கிறார். மேலும் அவரைப் பற்றிய தனியன்களில் "மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்" என்றும், "மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று, கோலிப்பதிவிருந்த கொற்றவனே!" என்றும் மிகத்தெளிவாக அவர் எம்பெருமானைப் பதுங்கியிருந்து வழிப்பறி செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருமணங்கொல்லையாகிற அந்த இடத்தில் திருவரசின் அடியிலே இப்போதும் ஒவ்வொரு வருடமும் வேடுபறி உத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. திருவரங்கம் உள்ளிட்ட பல திவ்யதேசங்களிலும் இந்த வேடுபறி உத்ஸவம் நடைபெறுகிறது. ஆகையால் இந்த இரு ஆழ்வார்களைப் பற்றி வழங்கும் சரித்திரங்களுக்கு இவை சான்றுகளாக அமைகின்றன. "ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்" என்பது நம்பிள்ளையின் சிஷ்யரான பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிச்செய்தது. அதைப் பின்பற்றிப் பிற்காலத்திலும் ப்ரபந்நாம்ருதம் முதலான நூல்கள் எழுந்துள்ளன. ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களிலுள்ள அகச்சான்றுகளால் வலியுறுத்தப்படும் இந்தச் சரித்திரங்களை விதண்டாவாதங்களும் குழப்பவாதங்களும் செய்து மாற்றுவதற்கு இக்காலத்திலுள்ள எவருக்கும் தகுதியில்லை. இப்படி மாற்ற முற்பட்டால் ஸ்ரீவேதாந்த தேசிகனைப் பற்றி, 'அவர் பாம்பாட்டியை அடக்கினர், கிணறு வெட்டினர்' முதலான (நீங்கள் நம்பும்) சரித்திரங்களையும் இல்லைசெய்யவேண்டிவரும். *பரமதபங்கத்தில் தேசிகனும், "ப்ரஸஹ்ய வித்தாஹரணம் ந கல்க:" [ஆதிபர்வம் 1-301] [பலாத்காரம் செய்து பணத்தை அபஹரிப்பது தோஷமல்ல] என்கிறபடி க்ஷத்ரியாதிகளுக்குப் பரகாலாதி ந்யாயத்தாலே "தர்மோபயுக்தமாக ப்ரவ்ருத்தம்" என்று அருளியிருப்பதை இவரே எடுக்கிறார். "திருமங்கையாழ்வார் சோழநாட்டுக்கே அரசர். அதனால் அவர் பாகவத ததீயாராதனைக்காகத் திருடவேண்டிய அவசியமில்லை" என்கிறது ஆதிப்பிரான். சோழநாட்டின் ஒரு பகுதியான ஆலிநாட்டுக்குச் சிற்றரசராய் இருந்தவர் அவர் என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்தே தெரிகிறது. குலசேகரரைப்போலே அவர் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவரும் அல்லர். நாலாவது வர்ணமான கள்ளர் குடியைச் சேர்ந்தவர்.

---

* ஆதிப்பிரானில் பரமபதபங்கம் என்று எழுதியிருப்பது தவறு; இப்படிப்பட்ட பிழைகள் ஆதிப்பிரானில் ஏராளம்.

http://acharya.org

ஆகையால் அவர் ஆழ்வாராவதற்கு முன் சோழ மன்னனுக்குக் கப்பம் செலுத்த மறுத்தாரெனறும், பாகவத ததீயாராதனம் செய்வதற்காகத் தம் குலத் தொழிலை மேற்கொண்டு அஸத்துக்களிடமிருந்த தனத்தைப் பறித்து பாகவதர்களுக்குத் ததீயாராதனம் செய்தார் என்றும் கூறுவதில் எக்குறையுமில்லை. ஆனால், வாதத்திற்கு மருந்துண்டு. பிடிவாதத்திற்கு மருந்து இல்லை. ஆதிப்பிரான் விதண்டாவாதமாகப் பல பக்கங்களை எழுதிக் குழப்ப முற்படுகிறது. ஸுதர்சனத்தின் பக்கங்கள் பொன்னனவை. எனவே இனி ஆதிப்பிரான் என்ன எழுதினாலும் அதைக் கணிசிக்கமாட்டோம். நடுநிலையாளர்களுடைய தீர்ப்புக்கு இதை விட்டு விடுகிறோம்.

B. R. ராஜஹம்ஸன், 484, காவேரி தெரு, பவானி.

97. துக்ளக் டிசம்பர்-18 2001 இதழில், "நாமம் (திருமண் காப்பு) போடுதல் என்றால் ஏமாற்றுதல் என்னும் கருத்து வெகு காலமாக இருந்து வருகிறது அதனால் இது குற்றமல்ல" என்று அதன் ஆசிரியர் சோ ஒரு கேள்விக்குப் பதிலளித்துள்ளார். அதைக் கண்டித்து "அப்படியானால் எந்தப்புளுகும் கந்தபுராணத்தில்", "பட்டை அடித்தான் (சாராயம் குடித்தான்)" "அரோகரா (ஏமாற்றி விட்டான்)" என்ற வழக்குச் சொற்கள் பன்னெடுங்காலமாக வழங்கி வருகின்றன. இதற்காக 'பட்டை தரித்த சங்கராசார்யரை 'பட்டை அடித்திருக்கிறார்' என்றும், கந்தபுராணத்தைச் சொற்பொழிவாற்றிய வாரியார் போன்றோர்களைப் "புளுகர்கள்" என்றும் உங்கள் பதிலில் கூறுவீர்களா? என்று எழுதியுள்ளேன். தங்கள் விமர்சனத்தை வேண்டுகிறேன்.

'படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்' என்ற ரீதியில் இராமாயணக் கதையையும் தன் பத்திரிகையில் வெளியிட்டுக் கொண்டு விஷ்ணுவின் திருவடிகளான திருமண் காப்பையும், திருப்பெயரான கோவிந்த நாமத்தையும் கிண்டல் செய்து வரும் 'சோ' போன்றவர்களிடம் அதைக் கண்டிக்கும் கேள்விகளுக்கு நேர்மையான பதிலை எதிர்பார்க்க முடியாது. 'விபூதி தரிப்பது மூடநம்பிக்கை' என்று ஒரு நாத்திகர் கூறியதற்குக் கூக்குரலெழுப்பும் இவர்கள் அதைவிடப் புனிதமான திருமண் காப்பைக் கிண்டல் செய்வதும்; அதை நியாயப்படுத்துவதும் இவர்கள் நாத்திகர்களைக் காட்டிலும் மட்டமானவர்கள் என்று காட்டுகிறது.

http://acharya.org

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீதிருவேங்கடாசார்ய ஸ்வாமி, 48, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

98. 96-வது கேள்வியில் ஆதிப்பிரானுக்குத் தாங்கள் தின வடங்க பதில் சொல்லி நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விட்ட பின்பும், முன்னுக்குப்பின் முரணாகவும், குழப்பவாதமாகவும், விதண்டாவாதமாகவும் செய்து பல பக்கங்களை வீணடித்திருக்கிறது ஆதிப்பிரான் பிப்ரவரி 2002 இதழில். "ஆழ்வாரானாலும் சாதி போகாது" என்று தேசிகர் கூறியதாகத் தாங்கள் எழுதியதை மறுக்க இயலாமல், "ஆழ்வாரானாலும் சாதி போகாது — என்று தேசிகர் கூறியதாக ஸுதர்சனர் கருத்து தெரிவித்தது அவருடைய பாணி. இதை அடிப்படையாகக் கொண்டு ஆழ்வார்கள் பத்த ஜீவர்கள் (நித்யஸூரிகள் அல்லர்) என்ற கருத்தில் தேசிகர் உடன்பாடு கொண்டவர் என்று ஸுதர்சனர் கூறுவதை ஏற்க முடியாது" என்று எழுதப்பட்டுள்ளது. "ஆழ்வார்கள் ப₃த்₃த₄ ஜீவர்கள்" என்னும் தேசிகருடைய நிருபணத்தையே ஆதிப்பிரான் மாற்றப் பார்ப்பதால், அவருடைய ஸ்ரீஸூக்திகளைக் காட்டி அவரது கருத்தை உறுதிப்படுத்த வேண்டுகிறேன்.

"ஆழ்வார்கள் ப₃த்₃த₄ ஜீவர்கள்" என்பதில் தென்னாசார்யர்களுக்கும் தேசிகருக்கும் எந்தக் கருத்து வேற்றுமையும் கிடையாது. ஆனால், "ஆழ்வாரானபின்பு அவர்களுடைய தாழ்ந்த ஜாதி போய்விடும். அதனாலேயே நம்மாழ்வாருக்கு மதுரகவியாழ்வார் சிஷ்யரானார். திருப்பாணாழ்வாரை லோக ஸாரங்க மாமுனிவர் தோளில் ஏற்றி வந்தார்" என்று தென்னாசார்யர்கள் திருவுள்ளம் பற்றினார்கள். தேசிகரோவெனில், "ஆழ்வார்களுக்கும் அவரைப் போன்ற உத்தம ப்ரபன்னர்களுக்கும் தாழ்ந்த ஜாதி போகாது" என்று ரஹஸ்யத்ரய ஸாரம் ப்ரபூ₄ாவ்யவஸ்த₂ாதி₄காரத்தில் விரிவாக நிருபித்து, "திருஸுரபி₄ (காமதே₄னு) ஆனாலும் கோ₃த்வம் கழியாதிறே" என்று ஜாதி போகாமைக்கு த்₃ருஷ்டாந்தம் காட்டியிருக்கிறார். "பவிஷ(?)த் புராணத்தை ஆதாரமாகக்கொண்டு ஆழ்வார்கள் நித்ய ஸூரிகளின் அவதாரம் என்று ஶததூஷணியில் ஸ்ரீவேதாந்த தேசிகர் திருவுள்ளப்பட்டார் என்று நாம் அறிகிறோம்" என்று (ஆ.பி.) எழுதுகிறார். இதிலிருந்து இவர்

http://acharya.org

தேசிக க்ரந்தங்களை எதையும் காலக்ஷேபமாகக் கேட்டவரல்லர் என்றும், யாரோ சிலர் சொல்வதைக் கேட்டு எழுதுகிறுர் என்றும் தெரிகிறது!, ஶததூஷணியில் "ஆழ்வார்கள் போன்ற உத்தம ப்ரபன்னர்களிடம், அவர்கள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அவர்கள் உயிரோடு இருக்கும்போது, **"ஸ்த்ரீதர்மிண்யாம் ஆத்ம ஜநந்யாமிவ"** [விட்டுக்கு விலக்காயிருக்கும் தன் தாயாரிடம் நடந்து கொள்வதைப்போலே] நடந்து கொள்ளவேண்டும் என்று ஸாதித்திருக்கிறுர் என்பது ஸர்வ வித்வத்கோஷ்டீ ப்ரஸித்தம். பரமத பங்கத்தை பரமபத பங்கம் என்று அச்சிடும் இவருக்கு சததூஷணியைப் பற்றிய பெயர் அறிவு மட்டுமே இருப்பதில் வியப்பில்லை. இவருடைய அறிவுக்கும் எட்டக்கூடிய மற்றொரு ப்ரமாணத்தைக் காட்டுகிறோம். தேசிகன் அமலனுதிபிரான் வ்யாக்யானமான முனிவாஹன போகத்தின் ப்ரவேசத்தில் திருப்பாணுழ்வாரைப் பற்றி எழுதி வரும்போது, **"அநாதிகால** ப்ரவ்ருத்தங்களான க்ஷுத்ர புருஷார்த்தஶ்ரவணாதிகளையும், க்ஷுத்ர புருஷஸ்தோத்ராதிகளையும், க்ஷுத்ர புருஷார்த்த ப்ரவ்ருத்திகளையும் தப்பின **தம்முடைய காணத்ரயமும்** இப்போது ப்ராப்தமான ஏக விஷயத்திலே அநந்ய ப்ரயோஜநாநுகூல்ய வ்ருத்தியை உடைத்தானபடியைக் கண்டு ஸந்தோஷயுக்தரான திருப்பாணுழ்வார்" என்று ஸாதித்திருக்கிறுர். அநாதிகாலமாகத் திருப்பாணுழ்வார் பத்த ஜீவராக இருந்தார் என்றே தேசிகன் கருதியிருக்கிறுர் என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும்? இதைக் கண்டபின்பும் உண்மையை ஏற்காமல், ஆதிப்பிரான் சட்டுரை ஏதாவது எழுதுவதாய் இருந்தால், எமக்கு ஆதிப்பிரான் பத்திரிகையை இனி அனுப்பத்தேவையில்லை. எமது பொன்னுன நேரத்தை வீணடிக்க நினைக்கும் இவருடைய விதண்டாவாதங்களை இனி நாம் கண்ணெடுத்தும் பார்ப்பதாக இல்லை. அன்பர்கள் எவரும் அவற்றை நம் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

A. கிருஷ்ணமாசார்யர், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, ஸ்ரீரங்கம்.

99. சமீபத்தில் மேல்கோட் ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சி அகாடமியின் ஆதரவில் பெங்களூரில் நடைபெற்ற உரைக்கோவையில் உரையாற்றிய ஸ்ரீரங்கம் அனந்த நரசிம்மாசார்ய ஸ்வாமி, "பிள்ளை லோகாசார்யர் தேசிகனிடம் காலக்ஷேபம் கேட்டவர்" என்று பேசினுர். இதன் பொய்ம்மையை நடுநிலை நின்று விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

http://acharya.org

பிள்ளைலோகாசார்யர் தேசிகனைக் காட்டிலும் நாற்பது வருடங்களுக்குமேல் வயதில் மூத்தவர். அவர் தம் திருத்தகப்பனாரான வடக்குத் திருவீதிப்பிள்ளையிடம் ஸகலார்த்தங்களையும் கேட்டவர். "திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களும் ஈடு முதலான வ்யாக்யானங்களும், ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும் இவருக்கு ஸாதித்தருளினவர் திருத்தகப்பனாரான வடக்குத் திருவீதிப்பிள்ளை" என்று பிள்ளைலோகாசார்யரைப்பற்றி மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான கோயிலண்ணன் ஸ்வாமியின குமாரரான கந்தாடைநாயன் அருளிய பெரிய திருமுடியடைவில் உள்ளது. இப்படி இருக்கும்போது எந்த ஆதாரத்தையும் காட்டாமல், ஒரு பெரிய ஸதஸ்ஸில் இப்படிப் பேசியிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியதாகும். தேசிகனுடைய க்ரந்தங்களையும், பிள்ளைலோகாசார்யருடைய க்ரந்தங்களையும் ஆராயும்போது, கருத்து வேற்றுமைகள் பல க்ரந்தங்களில் காணப்படுகின்றன. அந்தக் கருத்து வேற்றுமைகளை மாற்றிக்கொண்டதற்கு அந்நூல்களில் எந்த அடையாளமும் இல்லை. அப்படியிருக்கும்போது ஒருவர் மற்றொருவர் திருவடிகளில் ஆஶ்ரயித்தார் என்று சமீபகாலக் கற்பனை நூல்களை ஆதாரமாகக் கொண்டு பேசுவதையும், எழுதுவதையும் நடுநிலையாளர்கள் ஏற்கமாட்டார்கள்.

S. வேங்கடம், சமயபுரம்.

100. செய்திப் பத்திரிகைகளிலும், விவாஹ பத்திரிகைகளிலும், காலண்டர்களிலும் எம்பெருமான், ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய வண்ணத் திருவுருவப் படங்கள் அச்சிடப்படுகின்றன. அவை சிறிது நாட்கள் கழித்து குப்பைகளோடு சேர்ந்து அவமதிக்கப்படுகின்றன. அச்சிட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதனால் பாபம் உண்டாகாதா?

கோயில்களில் தீர்த்தம் ப்ரஸாதம் பெற்றுக்கொள்கிறோம். அதில் உட்கொண்டதுபோக ஒரு பகுதி கீழே தரையில் விழுகிறது. அதைப் பலர் மிதிக்க நேரிடுகிறது. இதனால் பாபம் உண்டாகாதா? என்னும் கேள்விக்கு என்ன பதிலோ அதுவே உங்கள் கேள்விக்கும் பதில். அதாவது — பெருமாள் தீர்த்தமாயிருந்த போதிலும் அது தரையில் சிந்தியவுடன் ஸாமான்ய ஜலமாகிவிடுகிறது. அதில் கால் படுவதால் எந்த தோஷமும் ஸம்பவிக்காது. அதைப்போலவே கௌரவிக்கத்தக்க படங்களும் குப்பைக் கூடையில் சேரும்போது சாதாரணக் காகிதம் ஆகிவிடுகிறது. எனவே அதை அச்சிட்டவர்களுக்கோ மற்றவர்களுக்கோ எந்த தோஷமும் விளையாது.

பதினொலாவது ஶதகம் நிறைவுற்றது.

http://acharya.org

சென்னையிலிருந்து புதிதாக வெளிவரத் தொடங்கியிருக்கும் "வைணவம்" அறிமுக இதழில் ஸுதர்சனரைப் பற்றி, பாண்டிச்சேரி கல்விக்கடல் கோபாலய்யர் எழுதிய கட்டுரை :—

புனிதர்கள் போற்றும் புத்தூர்ப் புண்ணியர்

விழுப்புரத்தில் நிகழ்ந்த வைணவ மாநாட்டில் சொற்பொழிவு ஆற்ற வந்திருந்த புத்தூர் ஸ்வாமிகளை முதல் முறை சந்தித்தேன். அப்போது அவர் உருவம் எனக்கு அச்சத்தை விளைவித்தது.

வைணவத்தில் பெரிதும் ஆழங்காற்பட்ட அவர் பேசிய அவையிலே அடியேனும் பேசும்போது என்னென்ன பிழைகள் நேரிடுமோ சுவாமிகளின் திருவுள்ளம் எப்படி இருக்குமோ என்றெல்லாம் அஞ்சினேன். ஆனால் என் பேச்சு முடிந்தவுடன் தம் இன்சொற்களால் என்னை ஆசீர்வதித்து வைணவ நூல்களில் நன்கு ஆழங்காற்படுமாறு அறிவுறுத்தினர்.

பிறகு புத்தூருக்குச் சென்று அவருக்குத் தண்டன் ஸமர்ப்பித்து அவர் விவரணம் எழுதியுள்ள அருளிச்செயல்களை எல்லாம் வாங்கி வந்து படித்துக் கொண்டிருப்பேன்.

ஒரு சமயம் சைவர்கள் இராமாயணத்தில் திருமாலைப் பற்றித் தவறாகக் குறிப்பிட்ட செய்திகளுக்கு ஒரு மறுப்பு எழுதுமாறு அடியேனைப் பணித்தார். அந்த மறுப்பினையும் தமது ஸுதர்சனத்தில் வெளியிட்டார்.

பொதுவாக, இவருடைய ஸுதர்சன இதழில் வேதபுராண இதிஹாஸங்கள் போன்ற சிறந்த நூல்களில் குறிப்பிடப்படாமல், பிற்காலத்து எழுந்த அரைகுறை நூல்களில் காணப்படும் செய்திகளை உண்மை நிகழ்ச்சிகளைப்போலப் புனைந்துரைக்குமவற்றைப் போலிச் செய்திகள் எனவும், சான்றோர்கள் கொள்ளத்தக்கன அல்ல எனவும் பிரமாண நூல்களின் சான்று காட்டி இவர் மறுத்துரைப்பார். மறுத்துரைக்கும் செய்தியின் உண்மையை உணராமல் இவர் சிவபெருமானை வெறுப்பவர் சிவனைக் குறை கூறுபவர் என்று சிற்சில இளஞ்சைவர் ஏசுவர்.

http://acharya.org

பொதுமக்கள் கவர்ச்சிக்காகச் சமய உண்மைகளை மறைத்து ஏதோ சுவை பயப்பதாகக் கூறப்படும் இழி செய்திகளை நம் ஸ்வாமி காரணம் காட்டி மறுப்பதனைக் கொண்டு சமய நுண்மைகள் அறியாதார் இவரைச் சிவத்துவேஷி என்ற பெயரால் குறிப்பிட்டு இவரிடம் வெறுப்புக் காட்டுவர்.

ஆனால், இவர் திருமாலுடைய பரத்துவத்தில் அழுத்தமான எண்ணம் கொண்டாலும் ஏனைய தெய்வங்களுக்கு உரிய பெருமைகளை வேதம் முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டவற்றைத் தாமும் ஒத்துக்கொண்டு மகிழும் இயல்பினர் என்பது இவரிடம் பழகினவர்க்குத்தான் புலப்படும்.

எல்லாச் சமயங்களும் தத்தம் எல்லையைக் கடவாது இந்நாட்டில் சிறப்பாக விளங்கவேண்டும் என்பதே இவர் வேணவா.

வழக்கறிஞராவதற்குக் கல்வி பயின்ற இவர் அத்துறையை விடுத்து உள்ளம் உரை செயல் யாவும் வைணவத்தைப் பாதுகாப்பதற்காகவே செலவிடுபவராய் அருளிச்செயல்கள் பலவற்றிற்கு எல்லாரும் உணர்ந்துகொள்ளும் வகையில் விவரணம் எழுதிப் பதிப்பித்தும் ஸ்ரீகீதைக்குப் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட விரிவான விளக்க உரை ஸ்ரீவைணவ பரமாக வரைந்தும் வைணவத்துக்குப் பெருந்தொண்டுகள் செய்துள்ளார்.

உரையில் மேற்கோளாக வரும் வடமொழி ஶ்லோகங்களுக்கு அகர வரிசையில் இடம் குறிப்பிட்டுப் பொருள் வரைந்து இவர் செய்து வரும் பேர் உதவி இவரது பரந்த வடமொழிப் புலமையை வெளிப்படுத்தும்.

சில ஆண்டுகளுக்குமுன் அடியேனிடம் திருவாய்மொழியின் பல உரைகளிலும் பல அரும்பதங்களிலும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள வடமொழி மேற்கோள்களின் அகரவரிசையைத் தொகுத்து வழங்குமாறு திருவுள்ளம் பற்றினார்.

அங்ஙனம் தொகுக்கப்பட்ட மேற்கோள் அகராதி எம்பெருமான் திருவருளால் விரைவில் வெளிவரும் என நம்புகிறோம்.

http://acharya.org

பொதுமக்கள் கவர்ச்சிக்காகச் சமய உண்மைகளை மறைத்து ஏதோ சுவை பயப்பதாகக் கூறப்படும் இழி செய்திகளை நம் ஸ்வாமி காரணம் காட்டி மறுப்பதனைக் கொண்டு சமய நுண்மைகள் அறியாதார் இவரைச் சிவத்துவேஷி என்ற பெயரால் குறிப்பிட்டு இவரிடம் வெறுப்புக் காட்டுவர்.

ஆனல், இவர் திருமாலுடைய பரத்துவத்தில் அழுத்தமான எண்ணம் கொண்டாலும் ஏனைய தெய்வங்களுக்கு உரிய பெருமைகளை வேதம் முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டவற்றைத் தாமும் ஒத்துக்கொண்டு மகிழும் இயல்பினர் என்பது இவரிடம் பழகினவர்க்குத்தான் புலப்படும்.

எல்லாச் சமயங்களும் தத்தம் எல்லையைக் கடவாது இந்நாட்டில் சிறப்பாக விளங்கவேண்டும் என்பதே இவர் வேணவா.

வழக்கறிஞராவதற்குக் கல்வி பயின்ற இவர் அத்துறையை விடுத்து உள்ளம் உரை செயல் யாவும் வைணவத்தைப் பாதுகாப்பதற்காகவே செலவிடுபவராய் அருளிச்செயல்கள் பலவற்றிற்கு எல்லாரும் உணர்ந்துகொள்ளும் வகையில் விவரணம் எழுதிப் பதிப்பித்தும் ஸ்ரீகீதைக்குப் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட விரிவான விளக்கவுரை ஸ்ரீவைஷ்ணவ பரமாக வரைந்தும் வைணவத்துக்குப் பெருந்தொண்டுகள் செய்துள்ளார்.

உரையில் மேற்கோளாக வரும் வடமொழி ஶ்லோகங்களுக்கு அகர வரிசையில் இடம் குறிப்பிட்டுப் பொருள் வரைந்து இவர் செய்து வரும் பேர் உதவி இவரது பரந்த வடமொழிப் புலமையை வெளிப்படுத்தும்.

சில ஆண்டுகளுக்குமுன் அடியேனிடம் திருவாய்மொழியின் பல உரைகளிலும் பல அரும்பதங்களிலும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள வடமொழி மேற்கோள்களின் அகரவரிசையைத் தொகுத்து வழங்குமாறு திருவுள்ளம் பற்றினர்.

அங்ஙனம் தொகுக்கப்பட்ட மேற்கோள் அகராதி எம்பெருமான் திருவருளால் விரைவில் வெளிவரும் என நம்புகிறேம்.

http://acharya.org

ஆண்டாளின் கவிதை நயம்

By

ஸ்ரீ உ. வே. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L.,

[ஸுதர்சனர்]. ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

3-B, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

தமிழ் வேதங்கள் என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே வைணவச் சான்றோர்களால் கொண்டாடப்படும் நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தை அருளியவர்களுள் பதினொரு ஆழ்வார்களும் ஆண்டாளும் அடங்குவர்.

"இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
வன்றோ இங்காண்டா ளவதரித்தாள் — குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்து
ஆழ்வார் திருமகளா ராய்" [22]

"அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப் — பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து" [24]

என்று மணவாள மாமுனிகள் தம் உபதேச ரத்தினமாலையில் அருளியபடியே ஆண்டாள் திருமாலின் வீட்டுலகமாகிற வைகுந்தத்திலிருந்து அத்திருமாலின் தேவியருள் ஒருத்தியான பூமிப் பிராட்டியின் அவதாரமாக இந்நிலவுலகில் அவதரித்தவள் என்றும், மற்றை ஆழ்வார்களின் ஞான பக்திகளையும் விஞ்சி நிற்பவள் என்றும், சிறுவயதிலேயே கண்ணனிடம் பெருங்காதலுற்று ப்ரபந்தங்கள் பாடினவள் என்றும் வைணவவுலகம் அன்று முதல் இன்று வரை ஆண்டாளைப் பாராட்டி வருகிறது. அவள் பாடிய இரண்டு ப்ரபந்தங்களில் முப்பது பாட்டுக்கள் கொண்ட திருப்பாவை முதலாவது. 143 பாட்டுக்களும் பதினான்கு பதிகங்களும் கொண்ட நாச்சியார் திருமொழி இரண்டாவது. இவற்றில் முதலாவதான திருப்பாவையை பிஞ்சாய்ப்பழுத்தவளான ஆண்டாள் மிகச் சிறுவயதிலேயே பாடினாள் என்பர். ஆண்டாள் பாடிய பாடல்கள் பெரும்பாலும், ஓர் ஆயர் குலச் சிறுமியின் நிலைமையை அடைந்து கண்ணனைக் காமுற்றுப் பாடப்பெற்றவையேயாகும்.

http://acharya.org

இதுபோல அடியேன் தொகுத்
கோள்களும் அகரவரிசையில் விரை
மேற்கோள்களுக்கு எல்லாம் உரை
அச்சுப்பிழைகள் திருத்தியும் சுவ
கருதாத்தொண்டு நம்மால் வியந்து

சாய்ந்த உடலிலும் சாயா உள்
களைக்கொண்டு அரங்கத்தம்மான் இ
நிறைவேற்றுவாராக.

ஸுதர்சனரின் குறிப்பு :—
னுலும், அதற்றை விமர்சித்து உண்மை
இயல்பு. சைவர்கள் கூறும்போது
போதும் அவர்கள் எவ்வளவு பெ
களுடன் அந்தத் தவறுகளை எடுத்
படுத்தியிருக்கிறேன் என்பதற்கு இ
மதகத்தின் பெருமபாலான கேள்வி
ளன. வைணவர்களிலும் தென்கலை
மல், எவர் தவருகப் பேசினாலும், எழு
உண்மை விளக்கமளிப்பது ஸுதர்ச
கடைப்பிடிக்கும் கொள்கையாகும்.
தூற்றினாலும் நாம் கவலைப்படல்
வேண்டுமென்பதே நமது குறிக்கோ

முதல் மூன்று பத்துக்களு
திரட்டு எழுதப்பட்டு வருகிற
குள் வெளிவரும்.

http://acharya.org

...ந்த பெரிய திருமொழியின் மேற்
...வில் வெளிவர இருக்கிறது. இவ்
... எழுதியும் இருப்பிடம் குறிப்பிட்டும்
...ாமிகள் செய்துவரும் தன்னலம்
...ம் நயந்தும் பாராட்டத்தக்கது.

...ாளத்தொடு வாழும் நம் ஸ்வாமி
...ன்னும் பல வைஷ்ணவ நற்பணிகளை

அடியான் கோபாலையன்.

...தவருன விஷயங்களை எவர் எழுதி
...மையை வெளியிடுவது அடியேனது
... மட்டுமல்ல, வைணவர்கள் கூறும்
...ரியவர்களாயினும் தக்க ஆதாரங்
...துக்காட்டி உண்மையை வெளிப்
...ந்த ஸுதர்சனர் பதில் 14-வது
... பதில்கள் சான்ருக அமைந்துள்
...லை வடகலை என்னும் வாசியில்லா
...திலும் தவறுகளை எடுத்துக்காட்டி
...னத்தில் நாம் பல வருடங்களாகக்
... இதைக்கண்டு சிலர் நம்மைத்
...வில்லை. உண்மை வெற்றிபெற
...ள்.

...க்கு பகவத்விஷய ப்ரமாணத்
...து. சித்ரபானு வருடத்திற்

— ஸுதர்சனர்.

http://acharya.org

ஆண்டாளின்

ஸ்ரீ உ. வே. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி

[ஸுதர்சனர்]. ஆசிரியர் :

3-3, புத்தூர் அக்ரஹாரம்,

தமிழ் வேதங்கள் என்று ஆ
வைஷ்ணவப் சான்றோர்களால் கொ
ப்ரபந்தத்தை அருளியவர்களுள்
ஆண்டாளும் அடங்குவர்.

"இன்றோ திருவாடிப் பூரம்
வென்றோ இங்காண்டா ள
வாழ்வான வைகுந்த வா
ஆழ்வார் திருமகளா ராய்

"அஞ்சு குடிக்கொரு சந்ததி
உஞ்செயலை விஞ்சிநிற்கும்
பழுத்தாளை யாண்டாளைப்
வழுத்தாய் மனமே மகிழ்ந்

என்று மணவாள மாமுனிகள்
அருளியபடியே ஆண்டாள் திரு
தத்திலிருந்து அத்திருமாலின்
பிராட்டியின் அவதாரமாக இந்
றும், மற்றை ஆழ்வார்களின்
வள் என்றும், சிறுவயதிலேயே
ப்ரபந்தங்கள் பாடினவள் என்று
இன்று வரை ஆண்டாளைப் பாரா
இரண்டு ப்ரபந்தங்களில் முப்பது
பாவை முதலாவது. 143 பாட்டு
கொண்ட நாச்சியார் திருமொழி
லாவதான திருப்பாவையை பிஞ்
மிகச் சிறுவயதிலேயே பாடினா
பாடல்கள் பெரும்பாலும், ஓர் ஆ
அடைந்து கண்ணனைக் காமுற்

http://acharya.org

கவிதை நயம்

By
...ஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L.,
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
புத்தூர், திருச்சி - 620 017.

...யிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே
...ாடப்படும் நாலாயிர திவ்ய
...ர பதினொரு ஆழ்வார்களும்

... எமக்காக
...வதரித்தாள் — குன்றாத
...ன்போகந் தன்னையிகழ்ந்து
...'' [22]

...யாய் ஆழ்வார்கள்
தன்மையளாய்ப் — பிஞ்சாய்ப்
பத்திபுடன் நாளும்
...த்து'' [24]

...தம் உபதேச ரத்தினமாலையில்
...மாலின் வீட்டுலகமாகிற வைகுந்
...தேவியருள் ஒருத்தியான பூமிப்
...நிலவுலகில் அவதரித்தவள் என்
...ானை பக்திகளையும் விஞ்சி நிற்ப
...கண்ணனிடம் பெருங்காதலுற்று
...ம் வைணவவுலகம் அன்று முதல்
...ட்டி வருகிறது. அவள் பாடிய
பாட்டுக்கள் கொண்ட திருப்
...க்களும் பதினான்கு பதிகங்களும்
இரண்டாவது. இவற்றில் முத
...சாய்ப்பழுத்தவளான ஆண்டாள்
...ர் என்பர். ஆண்டாள் பாடிய
...யர் குலச் சிறுமியின் நிலைமையை
...றுப் பாடப்பெற்றவையேயாகும்.

http://acharya.org

ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வாரின் பெண்பிள்ளையாக வளர்ந்தவளாகையாலே, ஆண்டாள் வேத ஸாரமான வைணவ மதக்கொள்கைகளில் ஊறித்திளைத்திருந்தவள் என்பது அவளது பாட்டுக்களிலிருந்து தெரிகிறது. வைணவம் ஐந்து விஷயங்களை மிக முக்கியமான வேதஸாரக்கொள்கைகளாக கொண்டுள்ளது. அவை யாவன (1) இறைவன் யார் என்பதை விளக்கும் மிக்க இறைநிலை. (2) பரமாத்மாவாகிற அவ்விறைவனை அடையவேண்டிய ஜீவாத்மாவின் நிலை. (3) இந்த ஜீவன் அந்தப் பரமனை அடைவதற்குத் தகுந்தவழி என்ன என்பதை விளக்கும் தக்க நெறியின் நிலை. (4) இந்த ஜீவாத்மா அந்தப் பரமாத்மாவை அடைவதற்கு இவ்வளவு காலம் தடையாயிருந்தவை யாவை என்பதை விளக்கும் தடை நிலை. (5) இந்த ஜீவாத்மா அந்தப் பரமாத்மாவை அடைந்து பெறும் பயன் என்ன என்பதை விளக்கும் வாழ்வு நிலை. இந்த ஐந்து விஷயங்களும் அர்த்த பஞ்சகம் எனப்படும். இவற்றை முதல் ப்ரபந்தமான திருப்பாவையில் மிகச் சிறப்பாக விளக்குகிருள் ஆண்டாள்.

1. இறை நிலை : "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று பரம்பொருளான நாராயணனே பரமபதத்தில் பர நிலையில் எழுந்தருளியிருக்கிருன் என்று முதல் பாட்டிலேயே காட்டுகிருள். "பாற்கடலில் பையத்துயின்ற பரமன்" என்று அப்படிப் பர நிலையில் எழுந்தருளியிருக்கும் நாராயணன் தன்ஞல் படைக்கப்பட்ட தேவர்களின் குறைகளை நீக்குவதற்காக, திருப்பாற்கடலில் வியூஹ நிலையில் எழுந்தருளியிருப்பதைக் காட்டுகிருள் இரண்டாம் பாட்டில். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி உயிர்களை உய்விப்பதற்காக இந்நிலவுலகில் பல அவதாரங்கள் எடுப்பதாகிற விபவ நிலையை மூன்ரும் பாட்டுத் தொடங்கி, "ஓங்கி உலகளந்த உத்தமன்" [3] "மன்னுவட மதுரை மைந்தன்" [5] "தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்" [12] "பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தான்" [13] முதலான பல பாடல்களில் பாடியுள்ளாள். மனிதர்களின் இதயக் கமலத்தில் வாழும் அந்தர்யாமி நிலையை "உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்" [6] என்று பாடியுள்ளாள். "புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கு" [6] என்று அர்ச்சாவதார நிலையையும் பாடியுள்ளாள். இவ்வண்ணமாக மிக்க இறைநிலை ஆண்டாளால் மிக விரிவாக விளக்கப்பட்டது.

http://acharya.org

2 உயிர் நிலை: நாராயணனுகிற பரமாத்மாவுக்கே எல்லாவகையிலும் வசப்பட்டதாயிருப்பது ஜீவாத்மாவாகிற உயிர்கள். உயிர்களும் பரமாத்மாவும் ஒன்று என்னும் அத்வைதக் கோட்பாடு வைணவச் சான்றோர்களால் ஏற்கப்படவில்லை. இதை முதல் பாட்டிலேயே "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று காட்டினுள் ஆண்டாள். தன்னையொத்த சிறுமிகளை எழுப்பும் பாட்டுக்களிலும் ஒவ்வொரு சிறுமிக்கும் ஒரு தனித்தன்மையைக் காட்டி ஜீவாத்மாக்கள் ஒவ்வொருவரும் வெவ்வேருனவர் என்று காட்டுகிருள். "சிற்றஞ் சிறுகாலே" என்னும் 29-வது பாட்டில் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம்" என்று ஜீவனுக்கும் பரமனுக்கும் உள்ள ஆண்டவன் அடிமை என்னும் உறவை வலியுறுத்திஞள். இது உயிர் நிலையை ஆண்டாள் வெளியிட்டபடி ஆகும்.

3. தக்கநெறி: எம்பெருமானை அடைவதற்கு உபாயமாய்-வழியாய் இருப்பவனும் அந்த எம்பெருமானே என்பதை "நாராயணனே பறை தருவான்" என்று முதற்பாட்டிலும், "நாம் செய்யும் முயற்சிகளாலோ பிறராலோ அவனை அடையமுடியாது" என்பதை "கறவைகள் பின் சென்று... இறைவா நீ தாராய் பறை" என்று 28-ம் பாட்டிலும் காட்டினுள். இது நெறி நிலையை ஆண்டாள் விளக்கியபடி.

4. தடை: ஐந்தாம் பாட்டில், "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்று முற் பிறப்பில் நாம் செய்த கருமங்களாகிற வினைகள் தடையாகும் என்று தடை நிலையையும் ஆண்டாள் காட்டினுள்.

5. வாழ்வு: எம்பெருமானை அடைந்து பெறும் பயனுவது அவனிடம் செய்யும் கைங்கர்யமே என்றும், அதுவும் அவனுடைய உகப்புக்காகவே ஆகவேண்டுமேயொழிய நம்முடைய உகப்புக்காக ஆகக்கூடாது என்பதையும், சிற்றஞ்சிறுகாலே என்னும் 29-வது பாட்டில் "இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா... உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று உய்த்துணர வைத்தாள். இந்த பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் பாகவத கைங்கர்யமே என்பதை, சிறுமிகளையும் மற்றவர்களையும் எழுப்பும் பாட்டுக்களில் காட்டினுள். இது வாழ்வு நிலையை ஆண்டாள் காட்டியபடியாகும்.

http://acharya.org

வேதமனைத்துக்கும் வித்தான திருப்பாவையிலும், அவ்வண்ணமே நாச்சியார் திருமொழியிலும் வேத ஸாரமான இந்த ஐந்து அர்த்தங்களையும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் வேதக்கோனான பட்டர் பிரான் பெண்ணான ஆண்டாள் விளக்கியிருக்கிறாள் என்பது வியப்பல்ல. ஆனால் அதை ஒப்பற்ற கவிதை நடையிலே, கவிதைக்குள்ள சிறப்பெல்லாம் தோன்றுமாறு எளிய இனிய சொற்களாலே விளக்கியிருக்கிறாள் என்பதே மிகவும் வியத்தற்குரிய செய்தியாகும். ஆழ்வார்களும் பெண்ணுடை உடுத்து நாயகி நிலையில் நின்று தங்களுடைய பக்தியைக் காதலாக வெளிப்படுத்தியிருந்த போதிலும் அது ஆண்கள் பெண்ணுடை உடுத்துச் செய்த செயலாகையாலே செயற்கையாகிறது. இவள் பெண்ணாகவே பிறந்து அவரைப் பிராயம் தொடங்கிக் கண்ணனைக் காமுற்று மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லாத தன்மையளாய்ப் பாடிய பாடல்களாகையாலே இவை இயற்கையாய் இருக்கும்.

திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் ஆண்டாள் திருவாய்ப் பாடியிலுள்ள ஆயர் சிறுமிகளில் ஒருத்தியாக மாறி விடுகிறாள். தன்னையொத்த ஆயர் சிறுமிகளை எழுப்பும் பாடல்களிலும் அனைவரும் கூடி மற்றவர்களை எழுப்பும் பாடல்களிலும் ''பிள்ளாய்'' [6], ''பேய்ப்பெண்ணே'', ''நாயகப்பெண் பிள்ளாய்'' [7], ''கோதுகலமுடைய பாவாய்'' [8], ''மாமான் மகளே'' [9], ''சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்'' [10], ''கோவலா தம் பொற்கொடியே'' [11], ''நற்செல்வன் தங்காய்'' [12], ''போதரிக் கண்ணினாய்'' [13], ''நாணாதாய்! நாவுடையாய்'' [14], ''இளங்கிளியே'' [15], ''கோயில் காப்பானே'' ''வாயில் காப்பானே'' [16] ''அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா'' [17], ''நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்! கந்தம் கமழுங்குழலீ!'' [18], ''மைத்தடங்கண்ணினாய்'' [19], ''அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே'', ''செப்பமுடையாய் திறலுடையாய்'', ''செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா'', ''செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறு மருங்குல் நப்பின்னை நங்காய் திருவே'' [20], ''பெரும் பசுக்கள் ஆற்றப் படைத்தான் மகனே'', ''ஊற்றமுடையாய் பெரியாய் உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே'' [21], ''பூவைப் பூவண்ணா'' [23]

http://acharya.org

"அன்றிவ்வுலகம் அளந்தாய், சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்", "பொன்றச் சகடமுதைத்தாய்", 'கன்று குணிலா எறிந்தாய்". "குன்று குடையா எடுத்தாய்" [24], 'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே" [25], "மாலே மணிவண்ணு", "ஆலினிலையாய்" [26], 'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா" [27], "குறையொன்றும் இல்லாத கோவிந்தா" [28], "இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா" [29] என்னும் விளிகளையே மிக்க கவிநயம் தோன்ற கருத்துச் செறிவோடு ஆண்டாள் அமைத்திருப்பது படித்துப்படித்து இன்புறத்தக்கது. நாச்சியார் திருமொழியிலும் கண்ணனுக்கு இட்டிருக்கும் நாமங்களும், அடைமொழிகளும் மிகவும் சுவையானவை.

திருப்பாவையில், கண்ணனைப் பெறுவதற்காக ஆயர் சிறுமியர் நோற்ற நோன்பைப் பின்பற்றி ஆண்டாளும் ஆயர் சிறுமியாகமாறி நோன்பு நோற்றதுபோலே, நாச்சியார் திருமொழியிலும் ஆயர் சிறுமியாகவே மாறி, திருமொழிகளை அமைத்திருக்கிருள் ஆண்டாள். திருப்பாவைக்கும், நாச்சியார் திருமொழிக்கும் அத்திருமொழியில் ஒவ்வொரு பதிகத்திற்கும் அழகிய தொடர்பு அமையும்படி பாடல்களைப் பாடியிருக்கிருள்.

திருப்பாவையில் நோன்பு நோற்ற பின்பும் எம்பெருமானைப் பெருமையாலே அவனைப் பெறவேணும் என்று மிகுந்த வேட்கை உண்டாகி அதனுல் அறிவு கலங்கி நாச்சியார் திருமொழியின் முதல் பதிகமான "தையொரு திங்க"ளில் பிரிந்தாரைக் கூட்டும் இயல்புடைய காம தேவனைக் குறித்து "அனங்கதேவா வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே" [நாச். திரு. 1-1] என்று வேண்டுகிருள்.

இப்படித் தன்னையல்லது வேறு எவரையும் தொழாத ஆண்டாள் காமதேவனைத் தொழும் நிலை ஏற்பட்டதைப் பொறுக்காமல் எம்பெருமான் விரைந்து வந்து முகம் காட்ட, ஊடலாலே தான் சிற்றில் இழைத்துக் கொண்டிருந்ததையும், கண்ணன் வலிந்து வந்து அக்கோலத்தை அழித்து அவனைப்பற்றி அணைத்ததனையும் பேசினுள் இரண்டாம் திருமொழியான 'நாமமாயிர'த்தில்.

http://acharya.org

இப்பதிகத்தில் நடைபெற்ற கூடல் தொடர்ந்து நடந்தால் இவளால் தரிக்கமுடியாத நிலை ஏற்படும் என்று பயந்த உறவினர்கள், கண்ணனையும் ஆய்ச்சியரையும் பிரித்துவைக்க, அப்பிரிவாற்றாமையினாலே இவர்களுக்கு உயிர் பிரியும் நிலை ஏற்பட, அது கண்ட உறவினர்கள் பெண்கள் நல்ல கணவனைப் பெறுவதற்குச் செய்யும் பனி நீராடுதல் என்னும் நோன்பைச் செய்வதற்காக இவர்களை வெளியில் விட, இவர்களும் கண்ணனைக் கூடியும் பிரிந்தும் படுகிற வருத்தங்களைத் தவிர்ப்பதற்காக, அவன் அறியாதபடி ஒரு பொய்கைக்குச் சென்று, ஆடைகளைக் களைந்து கரையில் வைத்துவிட்டு, பிரிவுத் துன்பம் மாறும்படி பொய்கையிலே குளித்திருந்ததையும், அவனும் இவர்கள் அறியாதபடி அங்கு வந்து இவர்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு கரையிலிருந்த குருந்த மரத்தின் மீதேறி வீற்றிருந்ததையும், இவர்களும் குளித்துக் கரையேறிப் பார்த்தவுடன் ஆடையாபரணங்களைக் காணாமல் இவனை மரத்தின் மேலே கண்டு இவனை இரப்பார், ஏத்துவார், வாழ்த்துவார், சிறுவராய்ப் பலவிதமாகக் கெஞ்சிக் கேட்க, அவனும் ஆடையாபரணங்களைக் கொடுத்து இவர்களோடு கூடியதைப் பேசினாள் மூன்றாம் திருமொழியான 'கோழியழைப்ப'தில்.

கூடல்கள் அனைத்தும் பிரிவிலேயே முடியுமாகையாலே இந்தக் கூடலும் பிரிவிலே முடிய, "மறுபடியும் ஒருகால் அவனைக் கூடவல்லோமோ?" என்று கூடலிழைத்ததைப் பேசினாள் நாலாம் திருமொழியான 'தெள்ளியார்'ரில்.

அறிவற்ற கூடல் மறுமொழி கூறாமையாலே அறிவுள்ள குயிலைப்பார்த்து எம்பெருமான் வரும்படி கூவவேண்டுகிறாள் ஐந்தாம் திருமொழியான 'மன்னுபெரும்புக'ழில்.

குயில் கூவியும் அவன் வராமையாலே மிகவும் வருத்தமுற்ற இவளை உயிர்தரிக்கச் செய்வதற்காக அவள் விரும்பியிருந்தபடிகளில் ஒன்றும் குறையாதபடி பாணிக்ரஹணம் ஈறாக, கனவிலே அவன் இவளை அனுபவிக்கச்செய்ய, அவ்வனுபவத்தைத் தோழிக்குச் சொல்லித் தரித்திருந்தபடியைச் சொல்லுகிறாள் ஆறாம் திருமொழியான 'வாரணமாயிர'த்தில்.

http://acharya.org

வாரணமாயிரத்தில் கனுக் கண்டவுடன் அவனோடு ஏற்பட்ட தொடர்பு நீடிக்கப்பெருமையாலே, அவனோடு எப்போதும் சேர்ந்திருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, பகவதநுபவம் இருக்கும்படியைப் பலவாறு கேட்கிருள் ஏழாம் திருமொழியான "கருப்பூரம் நாறுமோ"வில்.

கண்ணன் வருவதாகச் சொல்லிப்போன மழைகாலத்தில் அவன் வாராமையாலே, மேகங்களைத் திருவேங்கடமுடையானுக்குத் தூதாக விட்டமையைப் பேசினுள் எட்டாம் திருமொழியான "விண்ணீலமேலாப்"பில்.

மேகங்களும் தூதுசெல்லாமல், நின்றவிடத்திலே நின்று மழை பொழிய. அதனுலே மழை காலத்தில் உண்டாகும் இந்திர கோபங்கள், முல்லைகள், காயா முதலிய மலர்கள், களங்கனி முதலான கனிகள், வண்டினங்கள், பூஞ்சுனைகள் முதலானவை உண்டாகி, எம்பெருமானுடைய திருமேனியையும் அவயவங்களையும் நினைவுபடுத்தித் தன்னை நலிவதைப் பேசினுள் ஒன்பதாம் திருமொழியான "சிந்துரச் செம்பொடி"யில்.

இப்படி இவற்றுலே நலிவுபட்டு "நமக்கு உயிர் தரிக்க வழி உண்டோ?" என்று ஆராய்ந்து "மற்றவையெல்லாம் தப்பினுலும் பெரியாழ்வாரோடு நமக்குண்டான உறவு தப்பாது. அவன் ஸ்வாதந்த்ரியத்தையும் மாற்றி நம்மை அவன் திருவடிகளில் சேர்த்தேவிடும்" என்று உறுதி பூண்டமையைப் பேசினுள் பத்தாம் திருமொழியான "கார்க்கோட"வில்.

இப்படி உறுதியோடு இருந்த பின்பும், தனக்கு முகம் கொடுக்கக் காணுமையாலே, இவள் மிகவும் நோவுபட்டுக் கிடக்கிற நிலையைக்கண்டு தாய்மார் தோழிமார் முதலான பெண் பிள்ளைகள் இவளைக் காணவந்து திரண்டுகிடக்க, 'அவன் நம்மை வைத்த பரிசைப் பார்த்தீர்களா?" என்று வெறுத்து வார்த்தை சொல்லி, பின்பு நம்மைப்போன்ற சில பெண்களுக்கு உதவினவன் பெரியாழ்வார் பெற்றெடுத்த நமக்கும் உதவாதொழியான்" என்று ஒருபடி தரித்தமையைப் பேசினுள் பதினேராம் திருமொழியான "தாமுகக்கும் தம் கை"யில்.

http://acharya.org

இப்படி உறுதி பூண்டிருந்தும் முகம் காட்டாமையாலே, நடக்கவும் இயலாத நிலையை அடைந்து அருகில் இருப்பாரைப் பார்த்து 'அவன் இருக்கும் தேசத்திலே என்னைக் கொண்டுபோய்ச் சேருங்கள்' என்கிறாள் பன்னிரண்டாம் திருமொழியான ''மற்றிருந்தீர்''களில்.

இவள் நிலையை நினைந்து வருந்தியிருக்கையாலே அருகிலிருந்தவர்களும் இவளைக் கொண்டுபோய் அவனோடு தொடர்புள்ள தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க முடியாமையாலே, ''அவனோடு தொடர்புள்ள ஏதாவதொன்றைக் கொண்டுவந்து என்னைத் தொடச்செய்து உயிர்தரிக்கச் செய்யுங்கள்'' என்று அவர்களைப் பிரார்த்தித்ததைப் பேசினாள் பதின்மூன்றும் திருமொழியான 'கண்ணனென்னும் கருந்தெய்வ'த்தில்.

இவளுக்குப் பரமபக்தி பர்யந்தம் விளையச் செய்வதற்காக, இவ்வளவிலும் அவன் காலதாமதம் செய்ய அதனால் ஆற்றாமை கரைபுரண்டு பெருவிடில் முடியும் நிலை ஏற்பட்டவளவிலே, அவன் வந்து முகங்காட்டி இவளுக்குக் காட்சி கொடுக்க, அப்போது பிறந்த விடாயும், அதற்கு அனுகுணமாகப்பெற்ற பேறும், ஒருவரிடத்தில் வைத்துப் பேசவொண்ணாதபடி அளவிறந்திருக்கையாலே கண்டீரே'' என்று கேட்கிறவர்கள் பாசுரத்தால் தனக்குப் பிறந்த விடாயையும், 'கண்டோம்'' என்று பதில் சொல்லுகிறவர்கள் பாசுரத்தால் தான் பெற்ற பேற்றையும் பிறர் பேச்சாலே சொல்லித் திருமொழியை நிறைவுபடுத்துகிறாள் பதினாலாம் திருமொழியான ''பட்டிமேய்ந்''தில்.

திருப்பாவை நாச்சியார் திருமொழி ஆகிய இரு பிரபந்தங்களும் ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதில் உண்டாகும் அநுபவங்களையும் பல நிலைகளையும், அழகிய கவிதை நயத்தோடு கூடிய பாட்டுக்களாக அமைந்துள்ளன என்பது நினைத்து நினைத்து இன்புறத்தக்கது.

[தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இலக்கியத் துறையின் சார்பில் தி. மு. நாராயணசாமிப்பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு 24—2—2000 வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் திருச்சி புத்தூர் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.]

http://acharya.org

ஸ்ரீ:

'காமகோடி'க்குத் தெரியுமா கர்ப்பூர வாஸனை

By

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி

(திருவெள்ளறை, கீழத்திருமாளிகை)

❋❋ ❋

'கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாஸனை' என்பது பழமொழி. அதற்கு எடுத்துக்காட்டாக, வெங்கட், விராஜ் ஆகியோரை முறையே ஆசிரியர், உதவி ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளி வரும் "காமகோடி" பத்திரிகை ஜூன் 2001 இதழ், பக்கம் 34, 35-ல் வெளியாகியுள்ள 'கிணற்றுத் தவளைகள்' என்னும் அநாமதேயக் கட்டுரை அமைந்திருக்கிறது. இக்கட்டுரையில் ஸுதர்சனரைப் பற்றி மட்டரகமாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக ஒருவரைப் பற்றி விமர்சனம் செய்வதானால் அந்த இதழை விமர்சனம் செய்யப் படுபவருக்கு அனுப்ப வேண்டியது பத்திரிகை தர்மம். இந்தக் 'காம கோடி' பத்திரிகையைப்பற்றி ஹோரா சாஸ்திரக் கலைஞர் ஸ்ரீ எஸ் பத்மநாபன் எழுதிவரும் இராமபாணக் கட்டுரை அடங்கிய ஸுதர்சனம் இதழ்கள் அவ்வப்போது 'காமகோடி' ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அவற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு எந்தப் பதிலையும் எழுத இயலாமல், ஸுதர்சனரைத் தரக்குறைவாக வசைபாடு கிறது காமகோடிப் பத்திரிகை. பத்திரிகை தர்மப்படி இந்த விமர்சனக் கட்டுரை ஸுதர்சனருக்கு அனுப்பப்படவும் இல்லை. அனுப்பினால் ஸுதர்சன ஜ்வாலையில் காமகோடி எரிந்து போகும் என்னும் பயம் போலும்! ஓர் அன்பர் மூலம் இதைப் பெற்றோம்.

'அபத்தப் பஞ்சாங்கத்தில் அறுபது நாழிகையும் தியாஜ்யம்' என்னும் இலக்கணத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டுள்ள காமகோடி விமர்சனத்திலிருந்து உதாரணத்திற்காக ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது:

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது—என்பது பழமொழி. அதற்கு எடுத்துக்காட்டு, ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தை நடத்துகின்ற ஸ்ரீமான் 'ஸுதர்சனர்' என்பது அப் பத்திரிகையைப் படிக்கும்போது தெரியவருகிறது. இந்த ஸுதர்சனர் தம்மை 'வீர வைஷ்ணவர்' என்று கருதிக்கொண்டிருக்கி றார். 'வைணவம்' என்றால் கூட, தென்கலை வைணவத்தை மட்டும்

http://acharya.org

தான் இவர் ஏற்றுக்கொள்வாராம். பெருமாளுக்கு வடகலை நாமம் போடப்பட்டிருக்குமானல் அவரைப் பெருமாளாகவே ஒப்புக் கொள்ளமாட்டார் இந்தத் தீவிரவாதி... மற்றவர்கள்மீது குறை கண்டுபிடிப்பதையும் குற்றம் சாட்டுவதையுமே தொழிலாகக் கொண்டிருக்கும் குறுகிய குணம் படைத்த இந்த ஸுதர்சனரை 'வைஷ்ணவர்' என்று பகவத் கீதை அருளிய பரந்தாமனே ஏற்றுக் கொள்வாரா என்பது சந்தேகமே! காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமி மீது சொல்லம்புகளை, தமது எழுத்துக்கள் மூலம் வீசும் இவர் ஆதி சங்கரரை அத்வைதியானலும் வைணவர் என்று சாயம் பூசுகிருர். ஷண்மதங்களை இணைத்த ஆதிசங்கரர்... அனைத்தையும் கடந்த அத்வைத சித்தாந்தியுமாவார்'' இதே ரீதியில் மேலும் எழுதப்பட்டுள்ளது இந்த அநாமதேயக் கட்டுரையில்.

1958-ம் ஆண்டு காமகோடி முன்னுள் பீடாதிபதியான சந்திரசேகர சரஸ்வதி அவர்கள் சென்னையில் முகாமிட்டு, பொதுஜனப் பத்திரிகைகள் அனைத்திலும் 'விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு' என்று பேசி வெளிவரச் செய்து, வைணவவுலகம் முழுவதையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர். உடனே ஸுதர்சனர் 'ஸாத்விக விஜயம்' என்னும் நூலை எழுதி ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களைக் காட்டி விஷ்ணுவுக்குத் தமோ குண லேசமும் கிடையாது என்பதை நிலைநாட்டி, அதைக் காமகோடி பீடாதிபதிக்கும் அனுப்பினர். அதைப் பெற்ற பீடாதிபதி அதற்கு பதில் கூற முற்பட்டு பத்திரிகைகளில் சிறு உபந்யாஸத்தை வெளியிட்டார். ஸுதர்சனம் ஆசிரியர் 'ஸாத்விக விஜய ஸந்தேஹ பரிஹாரம்' என்னும் கட்டுரையில் தக்க ப்ரமாணங்களைக் காட்டி அதற்குத் தக்க பதிலளித்தார். ஸாத்விக விஜயத்திற்கும் ஸந்தேஹ பரிகாரத்திற்கும் பதிலுரைக்க முடியாது என்று உணர்ந்த பீடாதிபதி அத்துடன் இந்த விஷயத்தை விட்டுவிட்டு, ''ராமனுக்கு ராவணனைக் கொன்றதால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. வீரஹத்தி தோஷம் ஏற்பட்டது. கண்ணனுக்கும் இவ்வாறு பல தோஷங்கள் விளைந்தன'' என்று தொடர்ந்து பல வருடங்கள் விஷ்ணு வைஷ்ணவ தூஷணங்களைச் செய்து அவைகளைப் பொது ஜனப்பத்திரிகைகளில் வெளியிடும் படி செய்து வந்தார். இவற்றுக்கு அவ்வப்போது ஸுதர்சனர் பதில் பகுதி வாயிலாக ஸுதர்சனர் தக்க பதிலுரைத்தார். அவற்றுக்கு எந்த

http://acharya.org

பதிலேயும் கூற இயலாத பீடாதிபதி மேன்மேலும் விஷ்ணு வைஷ்ணவ தூஷணங்களைச் செய்து அதற்குத்தக்க பதில்களைப் பெற்று வந்தார். ஜெயந்திரரும் தன் பங்குக்கு ஸ்ரீராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தை விஷ பாஷ்யம் என்று துஷ்பிரசாரம் செய்து ஸுதர்சனரின் பதிலேப்பெற்று பதில் கூற முடியாதவரானார். சமீபத்தில் இவர் செய்த விஷ்ணு தூஷ ணங்களுக்கு ராமபாணப் பகுதியில் பதிலுரைக்கப்பட்டது. நாற்ப தாண்டுகளுக்கு மேலாக வைணவத்தைப் படிப்படியாக நலிவு படுத்து வதற்கு இவர்கள் செய்த முயற்சிகளை முறியடிப்பதையே ஸுதர்சனம் இதுகாறும் செய்து வருகிறது. 'ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகர்' என்ற காமகோடிகளின் போய்ப் பிரசாரத்தையும் ஸுதர்சனர் தம்மு டைய ஆராய்ச்சி நூலான "ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகரா?" என் னும் நூலில் கண்டித்து அத்வைதிகளைக் குறித்துச் சில கேள்விகளைக் கேட்டார். இந்தச் சர்ச்சை விரிவடைந்து "சங்கரரும் வைணவமும்" என்னும் நூலாக வெளியிடப்பட்டு, அத்வைதிகள் எவராலும் பதில ளிக்க இயலாமல் வெற்றிக்கொடி நாட்டி நிற்கிறது.

வடகலே தென்கலே விவகாரத்தை ப்ரஸ்தாபித்துப் பிதற்றியுள் ளது 'காமகோடி' பத்திரிகை. ஸுதர்சனர் வடகலே தென்கலே ஸம்ப்ர தாயங்களோடு மட்டுமல்லாமல், சைவம், வைணவம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான எல்லா மதங்களும் பரஸ்பர நல்லுறவுடனும் சகிப்புத் தன்மையுடனும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றே கடந்த ஐம்பதாண்டுகளாகப் பிரசாரம் செய்து அதில் பெருவெற்றியும் கண் டுள்ளார். இவர்கள் கூறுவதுபோல் வடகலேத் திருமண் காப்புடன் கூடிய பெருமாளே ஸேவிக்கக் கூடாது என்று ஸுதர்சனர் எழுதியதோ, சொன்னதோ கிடையாது. மனஸ்ஸாக்ஷியிருந்தால் எங்கு சொல்லி யிருக்கிறார் என்று காட்டட்டும். வடகலே வகுப்பினர், சைவர், ஸ்மார்த் தர், கிறிஸ்துவர் முதலான மதத்தைச சார்ந்தவர்களில் இவருக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு. அவர்கள் ஸுதர்சனர் நடுநிலே நின்று ஆதாரங்களுடன் ஆணித்தரமாக எழுதுவதைப் பாராட்டியே வருகிறார்கள். அத்வைதியான ஆரோக்ய ஆச்ரமத்தலேவர் ஸாத்விக விஜயத்தை ஸுதர்சனர் நடுநிலே நின்று எழுதியிருப்பதைப் பாராட்டி அவருக்கு 'வித்யா விசாரதர்' என்னும் பட்டம் வழங்கியுள்ளார். ஆதி சங்கரருடைய பாஷ்யங்களுக்கு முரணாக, பல துதி நூல்களை அவர் பெயரில் பிற்காலத்தில் இயற்றியும், அவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து

http://acharya.org

ராஜ பத்னியுடன் காமலீலை புரிந்தார் என்று எழுதியும் இவர்கள் ஆதி சங்கரருக்குச் செய்துவரும் துரோகங்கள் எண்ணிலடங்கா. ஸுதர்சனரின் "ஸாத்விக விஜய ஸர்வஸ்வம்", "ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகரா' ஆகிய இரு நூல்களும் காமகோடிக்குத் தபால் மூலம் அனுப்பப் பட்டுள்ளது. நேர்மையிருந்தால் அவற்றுக்கு பதிலுரைக்கட்டும்.

ஸ்ரீவைஷ்ணவவுலகமே ஸுதர்சனரின் தொண்டைப் பாராட்டி, 1—7—2001 அன்று பிற்பகலில் சென்னையில் டி. நகர் Y G P கலையரங்கத்தில் 'ஸ்ரீவைஷ்ணவ சிம்மம்' என்னும் விருது வழங்குகிறது. 'காமகோடி' பத்திரிகை அநாமதேயக் கட்டுரையில் ஸுதர்சனர் பற்றித் தரக்குறைவாக எழுதுவது சிம்மத்தின் கர்ஜனைக்குமுன் கழுதை கத்துவதுபோல் உள்ளது.

ஸுதர்சனர் கீதைக்கு 3000 பக்கங்களில் எளிய தமிழ் நடையில் விவரணம் எழுதியுள்ளார். பிரம்ம ஸூத்ரத்திற்குத் தமிழில் ஸ்ரீபாஷ்யத்தை அனுசரித்து உரையெழுதியிருக்கிறார். ஈச, கேநஉபநிஷத்துக்களுக்கும் அழகிய வ்யாக்யானங்கள் எழுதியிருக்கிறார். பல்லாயிரக் கணக்கான பக்கங்களில் திவ்ய ப்ரபந்தங்களுக்கும் ஸ்ரீராமாயண தனிச்லோகத்திற்கும் ஸம்ஸ்க்ருதத்தில் அமைந்த ஸ்தோத்ரங்களுக்கும் பெரியவாச்சான் பிள்ளை முதலான மஹாசார்யர்கள் எழுதிய மணிப்ரவாள வ்யாக்யானங்களை எளிய தமிழில் விளக்கிப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். இவை பல பதிப்புகள் கண்டுள்ளன. மேலும் இவர் எழுதியும், அச்சிட்டும், வெளியிட்டும் ஸ்ரீவைஷ்ணவுலகுக்குப் பெருமை சேர்த்துள்ள நூல்களும் கட்டுரைகளும் எண்ணிறந்தவை. இத்தகையவரை அநாமதேயக் கட்டுரையில் 'காமகோடி' தாக்கி எழுதுவது—

"ஈயாடுவதோ கருடற்கெதிரே?
இரவிக்கெதிர் மின்மினி ஆடுவதோ?
நாய் ஓடுவதோ உறுமிப் புலிமுன்?
நரி கேசரிமுன் நடையாடுவதோ?
பேயாடுவதோ அழகு ஊர்வசிமுன்?"

என்னும் பாடலையே நமக்கு நினைவுபடுத்துகிறது.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆளிநாடனும் கூரநாதனும்

ஸ்ரீ உ. வே. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L.,
[ஸுதர்சனர்], ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
3-B, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதம் அநாதிகாலமாக வேதங்களில் முழங்கப்படும் மதமாகும் என்பதை நடுநிலையாளர்கள் எவராலும் மறுக்க இயலாது. ஶ்ருதி ஸ்ம்ருதிகளும் ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் என்னும் இரண்டு பெரிய இதிஹாஸங்களும், குறிப்பாக மஹாபாரதத்தின் பகுதியாய் இருப்பதாய், வைதிக மதத்திற்கு ப்ரமாணமாக உலகெங்கும் கொண்டாடப்படும் பகவத் கீதையும், புராணங்களில் மிகப் பழமையானதும் சிறந்ததுமான ஸ்ரீ விஷ்ணு புராணமும் உலகனைத்தையும் சரீரமாகக் கொண்ட திருமகள் கேள்வனை நாராயணனே பரம்பொருள் என்பதை முக்கியக் கொள்கையாக வலியுறுத்துகின்றன என்பது மிகத் தெளிவு. கலி கோலாஹலத்தினால் இந்த உண்மை கலியுகத்தில் படிப்படியாக நலிவுறச் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் சங்ககாலம் வரை இவ்வுண்மை வெள்ளிடைமலைபோலே விளங்கி வந்தது என்பது சங்கநூல்களை ஆராய்பவருக்கு விளங்கும். 'சங்ககாலத் தமிழர் சமயம்', 'சாதி மத ஆராய்ச்சி' முதலான நமது நூல்களில் நாம் இதை நிலைநாட்டியிருக்கிறோம். தமிழ் நாட்டில் சங்க காலத்திற்குப் பிறகு பௌத்தம் ஜைனம் முதலான புறச் சமயங்களும், அத்வைதம், சைவம், சாக்தம் முதலான வேதத்திற்கு அவப்பொருள் கூறும் மதங்களும் தலையெடுக்கத் தொடங்கின. இக்காலத்தில் உண்மையை நிலைநாட்டுவதற்காக எம்பெருமான் ஸ்ரீபாகவத மஹாபுராணத்தில் முன்னறிவிப்புச் செய்திருந்தபடி, நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களையும், நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்களையும் அவதரிக்கச்செய்தான். வால்மீகி, பராசரர், வேதவியாஸர், போதாயநர், மநு முதலான மஹரிஷிகளின் மதமாக விளங்கிவந்த வைதிக

http://acharya.org

மதம் ஆழ்வார்கள் அவதரித்த பின்பு தமிழ்நாட்டில் மக்கள் மதமாக மாறிற்று. இவ்வாழ்வார்களில் வேதம் தமிழ் செய்தவராகப் புகழ்பெற்ற நம்மாழ்வாரும், அவர் அருளிய நாலு தமிழ் வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் போன்ற ஆறு திவ்ய ப்ரபந்தங்களை அருளிய ஆலி நாடனுன திருமங்கையாழ்வாரும், ஆயிரம் பாட்டுகளுக்கு மேல் அருளிச்செய்து தலைமையிடத்தைப் பெற்றுர்கள்.

இந்த ஆழ்வார்களையொட்டித் தோன்றிய நாயன்மார்கள் இயற்றிய தேவாரம் திருவாசகம் முதலானவற்ருலும், ஆதிசங்கரர், பாஸ்கரர், யாதவப்பிரகாசர் என்னும் மூவரால் பரப்பப்பெற்ற அத்வைதக் கொள்கைகளாலும் இந்த மதம் மறுபடியும் நலிவடைந்தது. ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களும் மறையும் நிலைக்கு வந்து விட்டன. இந்நிலையில் கி.பி 9-ம் நூற்ருண்டில் நாதமுனிகள் தொடக்கமாக கி.பி. 14-வது நூற்ருண்டில் மாமுனிகள் ஈருகவுள்ள ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களை எம்பெருமான் அவதரிக்கச் செய்தான். இவ்வாசார்யர்களில், ப்ரஸ்தானத்ரய பாஷ்யங்களை இயற்றி, 74 ஸிம்ஹாஸநாதிபதிகளையும் நியமித்து, 'எம்பெருமானுர் தரிசனம்' என்று நம்பெருமாளே கொண்டாடும்படி இந்த விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை உறுதியான அடிப்படையில் நிலைநாட்டிய எம்பெருமானுர் ஒப்புயர்வற்றவர் ஆவார். அவருக்கு வலது கரம் போல் விளங்கி, ஸ்ரீபாஷ்யத்தை ஏடுபடுத்தி, தமது சிஷ்ய பரம்பரைகளைக் கொண்டு திவ்ய ப்ரபந்தங்களுக்குப் பலபல வ்யாக்யானங்களை வெளிவரும்படி செய்ததன் மூலம் இம்மதத்திற்கு ஒப்புயர்வற்ற தொண்டு புரிந்தவர் கூரநாதனுன கூரத்தாழ்வான்.

கூரத்தாழ்வான் ஆசார்யர்களில் ஒருவராயிருந்தும், பகவத் குணங்களிலே ஆழ்வார்களைப் போலே மிகவும் ஆழ்ந்தவர். அதனுலேயே எம்பெருமானுராலே 'ஆழ்வான்' என்று அபிமானிக்கப் பெற்றவர். இவர் அருளிச்செய்த ஐந்து வடமொழித் துதி நூல்கள் பஞ்சஸ்தவங்கள் என்று பெயர் பெற்றிருக்கின்றன. அவற்றில் ஆழ்வார்கள் அருளிச்செய்த

http://acharya.org

அருளிச்செயல்களின் ஸாரத்தை அவர் வடமொழியில் மிக அழகாக அளித்திருக்கிறார். ஸ்ரீவைகுண்டஸ்தவம் என்னும் முதல் துதிநூல் எம்பெருமானுடைய பரநிலையை விரிவாக வர்ணிப்பதாகும். இரண்டாவது துதியாகிற அதிமாநுஷஸ்தவம் ஆழ்வார்கள் மிகவும் ஈடுபட்ட விபவ நிலையை வர்ணிப்பதாகும். மூன்றாவது துதியாகிய ஸுந்தரபாஹுஸ்தவமும், நான்காவது துதியாகிற வரதராஜஸ்தவமும் திருமங்கையாழ்வார் மிகவும் ஈடுபட்ட அர்ச்சை நிலைகளில் முக்கியமானவையான திருமாலிருஞ் சோலை அழகரையும், காஞ்சி வரதராஜப் பெருமாளையும் அனுபவிப்பவையாகும். ஐந்தாவது துதியாகிய ஸ்ரீஸ்தவம் புருஷகார பூதையான பெரிய பிராட்டியாருடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை விரிவாக விளக்குவதாகும். முதல் நாலு ஸ்தவங்களிலும் ஆழ்வார்களின் அருளிச் செயலைப் பின்பற்றி வ்யூஹநிலையும், அந்தர்யாமி நிலையும், மற்றும் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

திருமங்கையாழ்வார் அவர் காலத்தில் தலையெடுக்கத் தொடங்கிய பௌத்த ஜைன மதங்களையும், சைவ மதத்தையும் ப்ரமாண யுக்திகளைக் காட்டி, தலையெடுக்க முடியாதபடி கண்டித்தருளினார். இது தமிழ் மக்களிடையே வைதிக மதத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்கு அன்று முதல் இன்று வரையில் பேருதவி புரிந்து வருகிறது. கூரத்தாழ்வான் காலத்தில் இந்தத் திவ்ய ப்ரபந்தங்களில் ஈடுபாடில்லாத அத் வைதிகளைத் திருத்துவதற்கு ஆழ்வார்களின் அருளிச் செயல்களை வடமொழியின் மூலமாக அவர்களுக்குக் கொண்டு செல்வதில் கூரத்தாழ்வானுடைய பஞ்சஸ்தவங்கள் பெரிதும் துணை புரிந்தன.

அக்காலத்தில் அத்வைதிகள் ஆழ்வார்களிடம் ஈடுபாடு இல்லாதவர்களாகவும், சிவனுக்குப் பரத்வம் கூறும் சைவ மதத்திலும், சக்திக்குப் பரத்வம் கூறும் சாக்த மதத்திலும் ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருந்தனர். ஸ்ரீபாஷ்யம் முதலானவற்றில் சங்கரரின் மாயாவாத மதம் தலையெடுக்க

http://acharya.org

முடியாதபடி கண்டிக்கப்பட்டு விட்டது. அத்வைதிகளின் தேவதாந்தரப் பற்றை ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் ஈடுபாட்டை விளைப்பதன் மூலமே திருத்தவேண்டிய நிலை வந்தது. எம்பெருமானார் சங்கரரின் மாயா வாத மதத்தை ஶ்ருதி ஸ்ம்ருதிகளைக் கொண்டும், ந்யாய மீமாம்ஸாதி₃ ஶாஸ்த்ரங்களைக் கொண்டும் ஸ்ரீபாஷ்யாதிகளில் கண்டிக்க வேண்டியிருந்தபடியால், வடமொழியிலேயே அமைந்த அவருடைய க்ரந்தங்களில் அத்வைதிகள் ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளாத ஆழ்வார்களின் அருளிச்செயல்களை ப்ர மாணமாக வெளிப்படையாகக் காட்ட இயலாமலிருந்தது. ஆனாலும் அருளிச் செயல்களின் அர்த்தங்களை ஸ்ரீபாஷ்ய கீதா பாஷ்யங்களில் தமது பரம கம்பீரமான ஸ்ரீஸூக்தி களில் பொதித்து வைத்துள்ளார் என்பதை எவராலும் மறுக்க இயலாது. எம்பெருமானாருடைய பரமாசார்யரான ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில், **"மாதாபிதா"** என்று தொடங்கும் ஶ்லோகத்தில் நம்மாழ்வாரின் பெருமையை **"ந:குலபதே: வகுளாபி₄ராமம் ஸ்ரீமத் தத₃ங்க்₄ரியுக₃ளம் ப்ரணமாமி மூர்த்₄நா"** [நம்முடைய குலபதியின் (நம்மாழ் வாரின்) வகுளமாலையால் அலங்கரிக்கப்பெற்ற திருவடிகளைத் தலையாலே வணங்குகிறேன்] என்று பேசியதை அடியொற்றி, கூரத்தாழ்வான் தமது முதல் ஸ்தவமான ஸ்ரீவைகுண்ட ஸ்த வத்தில், **"யோ நித்யம்"** என்று தொடங்கும் முதல் ஶ்லோ கத்தாலே ஆசார்யரான எம்பெருமானாரைச் சரணமடைந்து, அடுத்த இரண்டு ஶ்லோகங்களாலே, நம்மாழ்வாருடைய திரு வடியிணையானது பரமவைதிகர்களுடைய தலைக்கு அலங் காரமாய் இருப்பது என்றும், எல்லாக் காலத்திலும் ஸாத் விகர்களுக்கு எல்லாச் செல்வமுமாய் இருப்பது என்றும், புகலற்றவர்களுக்குத் தஞ்சமாய் இருப்பது என்றும், நம்மாழ் வார் வேதார்த்தங்களாகிற ரத்னங்கள் பொதிந்த பக்திக் கடலாய், அளவற்ற பெருமையையுடையவராய் இருப்பவர் என்றும் பேசி, அவருக்குப் பல்லாண்டு பாடினார். நம் மாழ்வாரைத் தலைவராகக் கொண்ட மற்ற ஆழ்வார்களையும் **"ப்ரேமார்த்₃ர விஹ்வலகி₃ர: புருஷா: புராணா: த்வாம்**

http://acharya.org

துஷ்டுவுர் மது₄ரிபோ மது₄ரைர் வசோபி₄:'' [ஸ்ரீவை குண்டஸ்தவம் 10] [மது ஸூதனனே! பக்தியினுல் கனிந்து தழதழத்த குரலையுடையவர்களாய் எங்களுடைய முன்னோர்களான ஆழ்வார்கள் தங்களுடைய இனிய அருளிச் செயல்களாலே உன்னைத் துதித்தனர்] முதலானவிடங்களில் கூரத்தாழ்வான் குறிப்பிட்டருளினார்.

''உள்ளெலாம் உருகிக்குரல் தழுத்தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பன்
நாராயணா என்னும் நாமம்'' [பெரிய திரு 1-1-5]

என்று திருமங்கையாழ்வாரும்,

''ஆராவமுதே! அடியேனுடலம் நின்பால் அன்பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!''
[திருவாய் 5-8-1]

என்று நம்மாழ்வாரும், இதுபோலவே மற்ற ஆழ்வார்களும் பலவிடங்களில் அருளியதையே ஆழ்வான் இவ்விடத்தில் குறிப்பிடுகிறார் என்பது வெளிப்படையானது. அத்வைதி களுக்கு இருந்த தேவதாந்தரப்பற்றை அறுப்பதற்காக ஆழ் வார்களை அடியொற்றி, கூரத்தாழ்வான் பலபல ஶ்லோகங் களில் விஷ்ணு பரத்வ நிர்ணயம் செய்கிறார். அவர்களுடைய சக்தி வாதத்தை வேரறுப்பதற்காக, உலகிலுள்ள சக்திகளுக் கெல்லாம் மூலாதார சக்தியான ஸ்ரீதேவியே எம்பெருமானை ஆஶ்ரயித்து ஸத்தை பெற்றிருப்பவள் என்பதை,

யஸ்யா: கடாக்ஷணம் அநுக்ஷணம் ஈஶ்வராணாம்
ஐஶ்வர்ய ஹேதுரிதி ஸர்வஜநீநம் ஏதத் |
தாம் ஸ்ரீரிதி த்வது₃பஸம்ஶ்ரயணாந் நிராஹு:
த்வாம் ஹி ஶ்ரியஶ் ஶ்ரியம் உத₃ாஹருத₃ாரவாச: ||
[ஸ்ரீவைகுண்ட 29]

[எவளுடைய கடாக்ஷம் பிரமன் சிவன் இந்திரன் முதலான ஈஶ்வரர்களுக்கும் செல்வத்தை அளிப்பது என்பது எல்லா மக்களாலும் ஒத்துக் கொள்ளப்படுகிறதோ, அந்த லக்ஷ்மி

http://acharya.org

தேவி உன்னை ஆஶ்ரயித்திருப்பதால், "ஶ்ரீ:" என்று பெயர் பெற்ருள் என்று ஜ்ஞானிகள் கூறுகிருர்கள். வல்லமை மிக்க வாக்வைபவத்தையுடைய திருமங்கையாழ்வார் போல்வார் உன்னைத் "திருவுக்கும் திரு" என்று கூறுகிருர் களன்ரோ] என்று கூரத்தாழ்வான் மிகத்தெளிவாக அருளிச் செய்தார். எம்பெருமானை ஆஶ்ரயித்திருப்பதால் ஶ்ரீ: என்று பெயர் பெறுகிருள் பிராட்டி என்பதை "விஷ்ணோ: ஶ்ரீ:" [வி பு 1-8-17] [விஷ்ணுவுக்குச் செல்வமாய் இருப்பவள்] என்று ஶ்ரீபராசரரும், "தவ ஶ்ரியா" [ஸ்தோ ர 38] [உன்னு டைய செல்வமான ஶ்ரீதேவி] என்று ஆளவந்தாரும், "உன் திரு" [திருவாய் 10-10-2] என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்திருப்பதையும், ஶ்ரீதேவிக்கும் தாரகனாய், ஆத்மாவாய் இருப்பவன் எம்பெருமானே என்பதை "திரு வுக்கும் திருவாகிய செல்வா" [பெரிய திரு 7-7-1] என்று திருமங்கையாழ்வாரும், "ஶ்ரிய: ஶ்ரியம்" [ஸ்தோ ரத் 44] [திருவுக்கும் திருவான உன்னை] என்று ஆளவந்தாரும் அரு ளிச்செய்திருப்பதையும் திருவுள்ளம் பற்றியே கூரத்தாழ்வான் இந்த ஶ்லோகத்தில் சாக்த மதத்தைத் தெளிவாக அடியறுக் கிருர். ஐந்தாவது ஸ்தவமான ஶ்ரீஸ்தவத்திலும் முதல் ஶ்லோகத்தில், 'உலகனைத்தையும் படைப்பதையும், மோக்ஷ மளிப்பதையும் எம்பெருமானே செய்கிருன்" என்றும், "பிராட்டி அதைத் தன் முகக் குறிப்பின் மூலம் ஆமோதிப் பவளாய் இருக்கிருள்" என்றும் கூரத்தாழ்வான் அருளியிருப் பது 'பிராட்டிக்கும் எம்பெருமானுக்குப்போலே பரப்ரஹ்மத்வம் உண்டு' என்றும், 'துல்யமான உபாயத்வமும், ஜகத்காரணத் வமும், ஈஶ்வரத்வமும் உண்டு' என்றும் நவீனர்கள் சிலர் கூறிவருவதை அடியறுக்கிறது.

கூரநாதனுகிற கூரத்தாழ்வானுக்கு ஆலிநாடனுகிற திருமங்கையாழ்வாரின் ஶ்ரீஸூக்திகளில் மிகுந்த ஈடுபாடு உண்டு என்பதைப் பஞ்சஸ்தவங்களில் பலவிடங்களில் காண லாம். அவற்றில் தலைசிறந்ததோர் இடத்தைக் காட்டி இக் கட்டுரையை நிறைவுபடுத்துகிரோம்.

http://acharya.org

திருமங்கையாழ்வார், "நிலையிடம்" [பெரிய திருமொழி 11-4] என்று தொடங்கும் திருமொழியில் அவதாரங்களின் மகிமையை அழகிய சந்தப் பாடல்களில் அமைத்துப் பாடுகிறார். அதனுடைய சொல்லிலும் பொருளிலும் மிகவும் ஈடுபட்ட கூரத்தாழ்வான் மத்ஸ்யாவதாரப் பெருமையைப் பேசும் முதல்பாடலை அதே சந்தத்தில் ஒவ்வொரு பதத்தின் பொருளையும் விளக்கித் தமது ஸுந்தர பாஹுஸ்தவத்தில் (ச்லோகம் 92) ஒரு ச்லோகமாக்கியிருக்கிறார். பொதுவாகத் தமிழ்ப்பாட்டுக்களிலும் வடமொழி ச்லோகங்களிலும் சந்தம் ஒன்றாயிராது. அதற்கு விதிவிலக்காக இங்கு கலிகன்றியின் பாட்டிலும், கூரத்தாழ்வானின் ச்லோகத்திலும் சொல்லும் பொருளும் ஒத்திருப்பதோடு சந்தமும் ஒத்திருப்பது மிகவும் வியப்புக்குரிய விஷயமாகும். ஆலிநாடனின் ஸ்ரீஸூக்திகளில் கூரநாதனின் ஈடுபாடு இருந்தபடி இது. இனி, பாட்டையும் ச்லோகத்தையும் பொழிப்புரையோடு கொடுக்கிறோம்.

நிலையிட மெங்குமின்றி நெடுவெள்ளமும்பர் வளநாடுமூட விமையோர்
தலையிட மற்றெமக்கோர் சரணில்லையென்ன அரணாவ னென்னுமருளால்
அலைகடல் நீர்குழம்ப வகடாடவோடி அகல்வானுரிஞ்ச முதுகில்
மலைகளை மீதுகொண்டு வருமீனைமாலை மறவாதிறைஞ் சென் மனனே. [பெரிய திரு 11-4-1]

[நிற்பதற்கு எங்குமே இடமில்லாமல், ப்ரளயகால வெள்ளமானது, தேவர்களது செழிப்பான நாட்டை மூழ்கடிக்க, தேவர்கள் தலைகவிழ்ந்தவர்களாய், 'எமக்கு ஒரு புகல் இல்லையே' என்று கூக்குரலிட, தன் அருளாலே "நான் புகலாகின்றேன்" என்று கூறுகின்றவனாய், அலை வீசும் கடல் நீர் குழம்பும்படியாகவும், தன் கீழ் வயிற்றிலே அலையெறியும் படியாகவும், வானத்தில் பிரமன் முதலானோர் உலகங்களிலே அலைவீசும்படியாகவும் ஓடி, தன் திருமுதுகிலே மலைகளை ஏற்றிக்கொண்டுவரும் மீன் உருக்கொண்ட ஸர்வேச்வரனை ஒருகாலும் மறவாமல் ஏத்துவாய் என் நெஞ்சே!]

http://acharya.org

ப்ரலயஜ நீரபூர பரிபூரித ஸ்வ நிலயாவஸந்நவதூந
ப்₄ரமத₃ஶரண்யபூ₄த ஶரணார்த்தி₃ நாகி ஶரணம் ப₄வந்
ஸ்வக்ருபயா |
சலது₃த₃தீ₄ரிதாம்பு₃ கலுஷீக்ரியாட்₄ய கு₃மந:ஸ்வப்ருஷ்ட₂
வித்₄ருதா-
சலகுல ஏஷ மீநதநுரத்ர ஸுந்த₃ர பு₄ஜோ வநாத்₃ரி
நிலய: || [ஸுந்த₃ரபா₃ஹு 92]

[ப்ரளயத்தில் உண்டான பெருவெள்ளத்தாலே மூழ்கடிக்கப் பட்ட தம் உலகங்களை உடையவர்களாய், தலைகவிழ்ந்தவர் களாய், மயங்கியவர்களாய், புகலற்றவர்களாய்ப் புகலை வேண்டிய தேவர்களுக்குத் தன் அருளாலே புகலாகின்றவனாய், தன் ஸஞ்சாரத்தாலே அலைவீசும் கடலைக் கலங்கச் செய்பவ னாய், தன் முதுகின்மீது ஏற்றிக்கொள்ளப்பட்ட மலைகளை யுடையவனாய் மீனுருக்கொண்டவனான பெருமானே இந்தத் திருமாலிருஞ்சோலையிலே சுந்தரத் தோளுடையானாகக் காட்சியளிக்கிறான்.]

இந்த ஶ்லோகம் பாதந்தோறும் இருபத்து மூன்றெழுத் துக்கள் கொண்டது. அந்தப் பாட்டும் அடிதோறும் ஒற்றொழித்து இருபத்து மூன்றெழுத்துக்கள் கொண்டது என்பது குறிக்கொள்ளத்தக்கது.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்

[கோவை-12, ஸ்ரீஇராமாநுஜ மன்றத்தின் சார்பில் நடைபெற்ற ஸ்ரீபரகாலன் பைந்தமிழ் மாநாட்டில் 23–11–99 செவ்வாய்க் கிழமை அன்று காலை வாசிக்கப்பெற்ற ஸ்ரீஸுதர்சனரின் உரை]

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

வைணவம் — நேற்று இன்று நாளை

By

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் — (ஸுதர்சனர்)

ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

3-B, புத்தூர், அக்ரஹாரம், புத்தூர். திருச்சி - 620 017

1. நேற்று

விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே உண்மையான வைதிக (வேதத்தில் முழங்கப்பட்டுள்ள) மதமாகும். ஆகையால் இது அநாதியானது. எம்பெருமான் தன்னுடைய திருநாபி கமலத்தில் பிரமனைப் படைத்து, அவனுக்கு வேதத்தை உபதேசித்த போதே இந்த மதக்கொள்கைகள் அவனுக்கு உபதேசிக்கப்பட்டு விட்டன. ஆகையால், 'நேற்று' என்னும் பதம் அநாதியான காலம் அனைத்தையும் குறிக்கும். வேதத்தில் முழங்கப்பட்டுள்ள மதம் இதுவே என்பதை ஸ்ம்ருதிகளும், இதிஹாஸங்களும், ஸாத்விக புராணங்களும் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. வேதத்தின் பூர்வபாகத்தை விவரிக்கவந்த மநுஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகள் அனைத்துலகையும் சரீரமாகக் கொண்ட நாராயணனே ஸர்வ ஜகத்காரணனும் மோக்ஷம் அளிப்பவனும் ஆகிறான் என முழங்குகின்றன. நம்நாட்டின் ஆதிகாவியமும் இதிஹாஸங்களில் மிகச்சிறந்ததுமான ஸ்ரீராமாயணமும், ராமன் கதையின் மூலம் இவ்விஷயத்தை மிகத் தெளிவாக விளக்குகிறது. மற்றொரு இதிஹாஸமான மஹாபாரதமும் கண்ணன் கதையின் மூலம் இவ்விஷயத்தை ஆதி முதல் அந்தம் வரையில் திருப்பித் திருப்பி வலியுறுத்துகிறது. வேதங்களிலோ அதை விளக்கவந்த ஸ்ம்ருதி இதிஹாஸ ஸாத்விக புராணங்களிலோ 'உலகம் பொய்' என்று கூறும் அத்வைத மதமோ, மற்ற தெய்வங்களைப் பரம்பொருளாகக் கூறும் சைவம், சாக்தம் முதலான மதங்களோ சொல்லப்படவில்லை என்பதை, நம்முடைய ஆழ்வார்களும் ஆசார்யர்களும் தம் கிரந்தங்களில் நன்கு விளக்கியுள்ளார்கள். 'பெரியாழ்வார் பரதத்துவ நிர்ணயம் செய்தார்'

http://acharya.org

என்பது போன்ற வரலாறுகள் மற்ற மதங்களில் இல்லை. பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட 'விஷ்ணுசித்த விஜயம்' என்னும் நூலில் நாமும் இதை நிலைநாட்டி வருகிறோம்.

தமிழ்நாட்டிலும் மிகப் பழைய காலத்தில் இந்த மதமே வைதிக மதமாகக் கொள்ளப்பட்டது என்பது எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்று சொல்லப்படும் சங்க நூல்களிலிருந்து தெளிவாக விளங்குகிறது. சங்ககாலத் தமிழர் சமயம், சாதி மத ஆராய்ச்சி முதலான நூல்களிலும் இவ்விஷயத்தை நாம் நிலைநாட்டியிருக்கிறோம். சங்க நூல்கள் எதிலும் 'உலகம் பொய்' என்று கூறும் அத்வைத மதமோ, வேறொரு தெய்வத்தைப் பரம்பொருளாகக் கூறும் மதமோ கூறப்பட வில்லை என்பது வெளிப்படையானது. ஆராய்ச்சியாளர் களால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று நிர்ணயிக்கப்படும் சங்க நூல்களுக்குப் பிறகு எழுந்தவை திருக்குறள் முதலான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம் என்னும் காவியமும் என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுகிறார்கள். இவற்றை ஆராய்ந்தால் சங்ககாலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் பௌத்தம் ஜைனம் என்னும் அவைதிக மதங்கள் தலையெடுக்கத் தொடங்கி விட்டன என்று விளங்கு கிறது. காபாலிகர் காளாமுகர் முதலானோர் தமிழ்நாட்டில் புகுந்து 'சிவனே பரம்பொருள்' என்னும் கொள்கையையும், அவைதிகமான ஆசாரங்களையும் பரப்பத் தொடங்கினார்கள் என்றும் விளங்குகிறது. இக்காலத்தை ஆராய்ச்சியாளர்கள் களப்பிரர் காலம் என்கிறார்கள். இக்காலத்திலும், சங்க காலத் தில் காணப்படும் முக்கோற்பகவர்கள் (த்ரிதண்ட சந்நியாஸி கள்) வைதிகமதமான வைஷ்ணவத்தைப் பரப்பி வந்திருக் கிறார்கள் என்பது இக்களப்பிரர்கள் காலத்தையொட்டி எழுந்த ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களிலிருந்து விளங்குகிறது. சங்க காலத்திற்குப்பிறகு வைதிகமதம் நலிவடையத் தொடங் கியதைக் கண்டு ஆழ்வார்கள் தம் திவ்யப்ரபந்தங்களில் அதை நிலைநாட்டினார்கள். ஆழ்வார்களையொட்டி கி. பி. எட்டாம்

http://acharya.org

நூற்றுண்டில் தோன்றிய ஆதி சங்கரர் "உலகம் பொய்" ஜீவனும், பிரம்மமும் ஒன்றே என்பதே வேதக் கருத்து" என்னும் முக்கியக் கொள்கைகளைத் தம் ப்ரஸ்தாந த்ரய (உபநிஷத், பிரம்ம ஸூத்ரம், கீதை) பாஷ்யங்களின் மூலமும் பிரசாரங்கள் மூலமும் பரப்பி, பௌத்த ஜைன மதங்களைக் கண்டிக்கத் தொடங்கினுர். அவரும் தம்முடைய நூல்களில் நாராயணனையே முழுமுதற்கடவுளான ஸகுணப்ரஹ்மமாக அறுதியிட்டார். ஆயினும், "ஸகுணப்ரஹ்மமும் அதனுல் படைக்கப்படும் உலகமும் ஒரு பொய்த்தோற்றமே. எக் குணமுமற்ற அறிவாயிருக்கும் ப்ரஹ்மம் ஒன்றே மெய்யானது" என்று ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்கு முரணுக அவர் வாதம் செய்தமையால் அவர் காலத்தையொட்டி கி. பி. 9-ம் நூற்றுண்டிலிருந்து நாதமுனிகள், ஆளவந்தாராகிற யாமுன முனிவர், எம்பெருமானுராகிற ஸ்ரீராமாநுஜ முனிவர் முதலான ஆசார்யர்கள் அவதரித்து விசிஷ்டாத்வைத மத மாகிற வைஷ்ணவ மதத்தை நிலை நிறுத்தினர். ஆழ்வார் களுடைய திவ்யப்ரபந்தங்களையும் ஸம்ஸ்க்ருத வேதங்களுக்கு நிகரான ப்ரமாணமாகக் கொண்டு இந்தத் தரிசனத்தைப் பரப்பி னுர்கள். ஸ்ரீராமாநுஜர் தம்முடைய நூல்களின் மூலம் வட மொழி வேதங்களின் கருத்து விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே என்று அறுதியிடும்போது ஆழ்வார்களின் திவ்யப்ரபந் தங்களின் துணைகொண்டே இவ்விஷயத்தை அறுதியிட்டார். சங்க நூல்களிலும், ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களி லும் பரிசயமில்லாமற் போனதாலேயே ஸ்ரீராமாநுஜருக்கு முன் தோன்றிய ஆதி சங்கரராலும், பின் தோன்றிய மத்வராலும், "விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே வைதிக மதம்" என்னும் பேருண்மையை அறிந்துகொள்ள இயலாமற் போயிற்று. ஸ்ரீராமாநுஜர் இம்மதத்தை பாரத தேசமெங் கும் பரப்புவதற்காக எழுபத்துநாலு ஸிம்ஹாஸனுதிபதிகளான ஆசார்ய பீடங்களை நியமித்து, தம் சிஷ்ய பரம்பரையைக் கொண்டு தமிழ் வேதமான திவ்யப்ரபந்தங்களுக்குப் பலபல

http://acharya.org

வ்யாக்யானங்கள் வெளிவரச் செய்தார். களப்பிரர் காலத்தில் தமிழ்நாட்டினுள் புகுந்த சைவமதத்தைப் பின்பற்றி ஆழ்வார் களையொட்டித் தோன்றிய நாயன்மார்கள், மும்மூர்த்திகளில் ஒருவனை சிவனுக்குப் பரத்துவம் (முதன்மை) கூறும் சைவ மதத்தைப் பரப்பினார்கள். ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜர் முத லான ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் ச்ருதி ஸ்ம்ருதி முதலான வற்றில் மும்மூர்த்திகளில் ஒருவனை சிவன் சாதாரண ஜீவனா கவே சொல்லப்பட்டுள்ளதால் அவனையும், அவனைப் படைத்த பிரமனையும் படைத்த விஷ்ணுவாகிற நாராயணனே பரம்பொருள் என்று ப்ரமாணங்கொண்டு நிலைநாட்டினார்கள். இராமாநுஜர் காலத்திற்குப்பின் தோன்றிய மெய்கண்டார் முதலான சைவசித் தாந்திகள் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரமசிவனே பரம் பொருள் என்னும் சைவ சித்தாந்தத்தை உருவாக்கி, அதைப் பரப்பத் தொடங்கினார்கள். அவர்கள் வழிவந்தவர்கள் இம் மதத்தைப் பரப்ப வேதத்திற்கு முரண்பட்ட ஆசாரங்களையுடைய ஆதீனங்களை உருவாக்கி சைவத்தைப் பெருமளவில் பரப்பத் தொடங்கினார்கள். விசிஷ்டாத்வைதிகளாலும், த்வைதிகளா லும் பலமுறை கண்டிக்கப்பட்ட அத்வைதிகள் அவர்களி டம் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியாலே ஆதிசங்கரரால் போற் றப்பட்டிருந்த விஷ்ணுவின் பரத்வத்தைப் பெரும்பாலும் கை விட்டு, சமரசவாதிகளாகவும், சைவர்களாகவும் மாறத் தொடங் கினர். ஆதிசங்கரர் காலத்திற்குப் பின் அத்வைதத்தைப் பரப்புவதற்காக ஏற்பட்ட மடங்களின் அதிபதிகள் பிற் காலத்தில் நீறுபூசிய சைவர்களாக ஆகி சமரசவாதிகளாக உருவாகி விட்டார்கள். இவ்வளவு எதிர்ப்புகளையும் மீறி, பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில், ஸ்ரீராமாநுஜரால் நிறுவப்பெற்ற ஸிம்மாஸநாதிபதிகளின் பரம்பரையில் வந்த வர்கள் பாரத தேசத்தில் தென்னாட்டிலும், வடநாட்டிலும், லட்சக்கணக்கானவர்களை இப்பரம வைதிக மதத்தை ஏற்றுத் தலைசிறந்த ஒழுக்கமுடையவர்களாம்படி உருவாக்கி வந்திருக் கிறார்கள். இதுவரை வைணவத்தின் நேற்றைய நிலை. இனி—

http://acharya.org

2. இன்று

நமது பாரதநாடு மேல்நாட்டவர்கள் ஆட்சிக்குள் அகப்பட்ட இந்த இருபதாம் நூற்றாண்டின் நிலையை 'இன்று' என்னும் தலைப்பில் விளக்குகிறோம். இந்த 'இன்று' என்னும் காலமும் நம்நாடு சுதந்திரமடைந்த 1947-க்கு முன்னிருந்த முற்பகுதியாகவும், சுதந்திரமடைந்ததற்குப் பின்உள்ள பிற்பகுதியாகவும் பிரித்துக் காணத்தக்கதாய் உள்ளது. இவ்விருபதாம் நூற்றாண்டில் நமது மதத்திற்குப் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. பல பின்னடைவுகளும் விளைந்துள்ளன. இந்நூற்றாண்டில் நூல்களை அச்சிடும் துறை மிக வேகமாக நாளுக்குநாள் முன்னேறி வருகிறது. இதன் விளைவாக ஓலைச்சுவடிகள் வாயிலாகவே பரவிவந்த நம் பூர்வாசார்ய க்ரந்தங்களும், பிற்கால நூல்களும் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளன. அண்மைக் காலத்தில் போட்டோ ஆப்செட் முறையும், கம்ப்யூடர் அச்சு முறையும் வந்தபின்பு ஆயிரக்கணக்கான பக்கங்கள் உள்ள பழைய கிரந்தங்களை ஒரு சில நாட்களுக்குள்ளே அச்சிட முடிகிறது. இந்த அச்சுமுறையைப் பின்பற்றி இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையார், காதி அநந்தாசார்யர் ஸ்வாமி, காஞ்சி மஹாவித்வான் ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, சே. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமி, எந்தையாரான கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி முதலான பல மஹநீயர்கள் நம்முடைய நூற்றுக்கணக்கான உபயவேதாந்த க்ரந்தங்களையும், வ்யாக்யானங்களையும், ரஹஸ்யங்களையும் அச்சு வாஹனத்தில் ஏற்றி, அனைவர்க்கும் எளிதாகக் கிடைக்கும்படி செய்தனர். மற்ற அனைவரைக் காட்டிலும் சிறப்பாக—எந்தையார் பூர்வாசார்ய க்ரந்தங்களை அச்சிடுவதற்காகவும், அவற்றுக்கு எளிய நடையில் விவரணங்களை வெளியிடுவதற்காகவும், வைணவத்தைத் திரித்துக்கூறும் பிரசாரங்களை அடக்கும் நூல்களை வெளியிடுவதற்காகவும்

http://acharya.org

ஓர் அறக்கட்டளையையும் நிறுவி அதன் ஆதரவோடு ஓர் அச்சகத்தையும் அமைத்து "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" என்னும் ஓர் பத்திரிகையையும் தொடங்கி, அதன்மூலமும் தனியாகவும் பலபல க்ரந்தங்களை நிரந்தரமாக வெளிவருவதற்கு ஏற்பாடு செய்துள்ளது ஒரு தனிப்பெரும் சாதனையாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அதைத் தொடர்ந்து நடத்தும் வண்ணம் அத்துறையில் அடியேனையும் பயிற்றுவித்து ஏராளமான க்ரந்தங்கள் வெளிவந்து கொண்டிருப்பது வைணவவுலகம் அனைத்தும் அறிந்ததே. இவை முன்னேற்றங்கள்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் வெள்ளையரை வெளியேற்றும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்ற எண்ணத்தாலே, 'எம்மதமும் சம்மதம்' என்னும் புது முழக்கம் சுதந்திரப் போராட்ட வீரர்களால் உருவாக்கப்பட்டு, அக்காலத்தில் பத்திரிகைகளாலும் வலிதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. வைதிக மதங்களாக உலவி வந்த அத்வைதம் முதலான வேதாந்தக் கொள்கைகளும், சைவம் வைஷ்ணவம் முதலான கடவுட்கொள்கைகளும் இதனால் இந்நூற்றாண்டில் மிகவும் வலுவிழக்கத் தொடங்கின. ஒரு தலைமுறையே இப்படி உருவாகிவிட்டதால் எல்லா மதத்திலும்போல் வைணவத்திலும் உண்மையான பற்றுள்ளவர்கள் மிகக்குறைந்து விட்டனர். வைஷ்ணவர்களிலும் பலர் சமரசவாதிகளாகி விட்டனர். பொது ஜனப் பத்திரிகைகளால் 'எம்மதமும் சம்மதமே' என்பதே வைதிகமதம் என்பது போன்றதொரு தோற்றம் உருவாக்கப்பட்டு, அதற்கு இந்துமதம் என்றும் பெயர் சூட்டப்பட்டது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மற்ற மதங்களுக்குப்போல் நமது வைணவ மதத்திற்கும் ஏற்பட்ட பெரிய பின்னடைவு இது. இந்தப் பின்னடைவைச் சீர்திருத்தும் நோக்கத்துடன்தான் எந்தையார் நாம் மேலே காட்டிய பல அருஞ்செயல்களைத் தொடங்கினார். 'எம்மதமும் சம்மதம்' என்பது பொய்யின் அடிப்படையில்

http://acharya.org

அமைந்ததாகையாலே உண்மையான ஒற்றுமையை விளக்காது. அவரவர் மதக்கொள்கைகளில் நம்பிக்கையுடன் அவரவர் மதத்தை உறுதியாகப் பின்பற்றிக்கொண்டு, பரஸ்பர சகிப்புத்தன்மையுடன் அனைத்து மக்களும் வாழ்வதே ஒற்றுமைக்கு உண்மையான வழி என்று கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஸுதர்சனம் முழக்கமிட்டு வருவது இன்று அறிவாளிகள் அனைவராலும் ஏற்கப்பட்டுவிட்டது. இந்நிலையைப் பின்பிற்றி வைணவத்திலும் வித்வான்களும் சொற்பொழிவாளர்களும், வைணவப் பத்திரிகையாசிரியர்களும், எழுத்தாளர்களும் சிறப்பான முறையில் இன்று வைணவத்தைப் பரப்பி வருகிறார்கள் என்று கூறுவது மிகையாகாது. இனி—

3. நாலை

இந்நூற்றாண்டில் பல விஞ்ஞான முன்னேற்றங்களால் லோகாயதமதம் நாடெங்கும் மிகவும் வேரூன்றி விட்டது. அதனால் வைணவர்களில் பெரும்பாலானவர்கள் இம்மதக் கொள்கைகளையே அறியாமல், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் திவ்யப் ப்ரபந்தங்கள் ஆகியவற்றின் பெருமைகளையும் அறியாமல் உண்டியே உடையே உகந்தோடுமவர்களாக ஆகிவிட்டார்கள். இம்மதத்தைக் காப்பதற்காக நிறுவப்பெற்ற ஆசார்ய பீடங்களும் மடங்களும் தமது பழைய வலிமையை இழந்துவிட்டன. வைஷ்ணவாலயங்கள் அரசாங்கத்தின் பிடியில் அகப்பட்டுப் பலவித இன்னல்களை அனுபவித்து வருகின்றன. ஒருதலைமுறையே லோகாயதமாக மாறிவிட்டதால் பெற்றோர்கள் இளைஞர்களுக்கு நல்வழிகாட்ட இயலாதவர்களாகி விட்டார்கள். திரைப்படங்கள், தொலைக்காட்சி முதலானவைகள் மிகவும் வளர்ந்து வீடுகள் தோறும் நுழைந்து நிலைபெற்று விட்டபடியால் ‘அடுத்த தலைமுறையை இனித் திருத்தமுடியுமா’ என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான இளைஞர்கள் திரைப்பட நடிகர்களையும், நடிகைகளையும், விளையாட்டு வீரர்களையுமே தங்களுடைய ஆதர்ச புருஷர்களாகக் கொண்டு அவர்களைப் பின்பற்றி நடக்கத் தொடங்கிவிட்டார்கள்.

http://acharya.org

இந்நிலை மாறவேண்டுமானால் — பரம வைதிக தரிசனமான இம்மதத்தில் நம்பிக்கை உள்ள மடாதிபதிகளும், ஆசார்ய புருஷர்களும், வித்வான்களும், வைஷ்ணவப் பத்திரிகை ஆசிரியர்களும், சொற்பொழிவாளர்களும், எழுத்தாளர்களும், நூல் வெளியீட்டாளர்களும் பெருமுயற்சி செய்ய வேண்டும். போர்க்கால அடிப்படையில் பல திட்டங்களைத் தீட்டவேண்டும். விஞ்ஞானம் மிகவும் முன்னேறியிருக்கும் இக்காலத்தில் தொலைக்காட்சி இண்டர்நெட் முதலான சாதனங்களின் மூலமும் நமது மதத்தைப் பரப்ப முயலவேண்டும். விசிஷ்டாத்வைத வைஷ்ணவத்தைப் பரப்புவதற்கென்றே ஒரு மஹாவித்யாலயம் (ஸர்வ கலாசாலை) நிறுவப்படவேண்டும். தன்னலமற்ற வைணவப் பிரசாரகர்கள் நூற்றுக்கணக்கில் உருவாக வேண்டும். இவையனைத்தையும் செயல்படுத்தக் கோடிக்கணக்கில் பணம் வேண்டும். வைணவத்தையும், ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் உயிரென மதிக்கும் பெரிய தொழிலதிபதிகளும், மடாதிபதிகளும், தனிகர்களும் இவற்றையெல்லாம் நிறைவேற்ற முன்வருவார்களா? என்னும் கேள்விக்குக் கிடைக்கும் விடையிலேயே நம் மதத்தின் வருங்காலம் அமையப்போகிறது.

ஸர்வ தேஶ தஶாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா |
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் ||
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்ஜ்வலா |
திகந்த வ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோக ஹிதைஷிணீ ||
ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம்
ஸம்வர்த்தய |
ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய ||

என்னும் பிரார்த்தனையுடன் நிறைவு செய்கிறேன்.

[சென்னை எழும்பூர் சேத்துப்பட்டுப்பாலம் அருகில் ஸ்ரீகுசலாம்பாள் கல்யாண மண்டபத்தில் 4—4—1999 ஞாயிறன்று வைணவப் பேரவையின் சார்பில் நடைபெற்ற ஸ்ரீவைஷ்ணவ மாநாட்டில் வாசிக்கப்பெற்ற உரை]

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முநயே நம:

நாதமுனிகள் வைபவம்

[எழுதியவர்]

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் [ஸுதர்சனர்]

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம், 3-B, புத்தூர் அக்ரஹாரம்,

புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

அநாதியான வேதங்களில் விளக்கப்படும் விசிஷ்டாத்$_3$வைத ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் வேதத்தை விளக்க வந்த மநு முதலான ஸ்ம்ருதிகளிலும், ஸ்ரீராமாயணம் மஹாபா$_4$ரதம் என்னும் இருபெரும் இதிஹாஸங்களிலும், ஸ்ரீவிஷ்ணுபுராணம், பா$_4$க$_3$வதபுராணம், பாத்$_3$மபுராணம் முதலான ஸாத்விக புராணங்களிலும் தெளிவாக விவரிக்கப்பட்டது. தமிழ்நாட்டிலும் மிகப்பழைய காலமாகிற சங்ககாலம் வரையில் இந்த மதமே வேதமதமாகக் கொள்ளப்பட்டது என்பது பரிபாடல் முதலான சங்க நூல்களிலிருந்து மிகத்தெளிவாக விளங்குகிறது. "உலகம் பொய்" என்னும் அத்$_3$வைத வேதா$_3$ந்தக் கொள்கையும், திருமாலைத் தவிர மற்ற தெய்வங்களுக்குப் பரத்வம் கூறும் சைவம் முதலான மதங்களின் கொள்கைகளும் மநு முதலான ஸ்ம்ருதிகள் இராமாயணம் மஹாபா$_4$ரதம் ஆகிய இதிஹாஸங்கள், முற்கூறிய ஸாத்விக புராணங்கள், தமிழ்ச் சங்க நூல்கள் ஆகியவற்றில் காணப்படவில்லை என்பதும், விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதக்கொள்கைகளே இவற்றில் வேதக் கொள்கைகளாக விவரிக்கப்படுகின்றன என்பதையும் நாம் தெளிவாகக் காண்கிறோம். நம்முடைய விஷ்ணுசித்தவிஜயம், சாதிமத ஆராய்ச்சி, சங்ககாலத் தமிழர் சமயம் முதலான நூல்களில் இந்த விஷயம் விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சங்க காலத்திற்குப் பின்பு பௌத்தஜைன மதங்

http://acharya.org

களும், காபாலிகம் காளாமுகம் முதலான சைவப்பிரிவுகளும் தலையெடுத்தன. தமிழகத்தின் இருண்ட காலமான இதைக் களப்பிரர் காலம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இக்காலத்தில் அநாதி வைதிக மதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் மிகவும் வாட்டத்தை அடைந்தது. இந்நிலையில் எம்பெருமான் தன் தரிசனத்தை நிலைநாட்டுவதற்காக ஆழ்வார்களை அவதரிக்கச் செய்தான். காலம் செல்லச்செல்ல அந்த ஆழ்வார்களின் அருளிச்செயல்களும் வழக்கொழிந்து விட்டன. இப்படியான பின்பு வேத முதல்வனை எம்பெருமான் மறைந்த திவ்யப்ரபந்தங்களை வெளிப்படுத்துவதற்காகவும், அதில் நிலைநாட்டப்பெற்ற விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தை வெற்றிபெறச் செய்வதற்காகவும் தன்னுடைய நித்யஸூரிகளில் ஒருவரான கஜானனரின் அம்சமான நாதமுனிகளை, சோழ தேசத்தில் காட்டுமன்னார் கோயில் என்று இப்போது வழங்கப்படும் வீரநாராயண புரத்தில் ஒரு சோபகிருது வருடம் [கி.பி. 823] ஆனி-மீ 7-ம்-வ புதன்கிழமை பௌர்ணமி திதி அனுஷ நக்ஷத்திரத்தில் ஈஶ்வர பட்டாழ்வாருக்குக் குமாரராக ஶடமர்ஷண கோத்திரத்திலே (சொட்டைக்குலத்திலே) அவதரிக்கச் செய்தான். இவருக்குத் திருத்தகப்பனார் இட்டதிருநாமம் ஸ்ரீரங்கநாதன் என்பது. இவர் அஷ்டாங்கயோகாப்யாஸம் கைவரப் பெற்று எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்தவராகையாலே, 'ஸ்ரீரங்கநாதமுனிகள்' என்றும் சுருக்கமாக 'நாதமுனிகள்' என்றும் வழங்கப்பெற்றார்.

இவர் தம் திருத்தகப்பனாரான ஈஶ்வர பட்டாழ்வாரோடும் தம் திருக்குமாரரான ஈஶ்வரமுனிகளோடும் ஸகுடும்பமாகக் காட்டுமன்னார் நியமனத்தோடு வடநாட்டு யாத்திரை புறப்பட்டு, வடதிசை மதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவரை, அயோத்தி முதலான வடநாட்டு திவ்யதேசங்களை ஸேவித்துவிட்டு, யமுனைக்கரையிலே ஸ்ரீகோவர்த்தனபுரம் என்கிற கிரா

http://acharya.org

மத்திலே எழுந்தருளியிருந்தார். "தூயபெருநீர் யமுனைத் துறைவன்" என்கிற எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டு சில வருஷங்கள் அங்கேயே எழுந்தருளியிருந் தார்கள். ஒரு நாள் காட்டுமன்னார் நாதமுநிகளுடைய கனவிலே எழுந்தருளி, "வீரநாராயணபுரத்திற்கு வருவீர்" என்று நியமித்தருள, அவர்களும்—யமுனைத்துறைவரிடம் நிய மனம் பெற்றுக்கொண்டு, பல திவ்யதேசங்களை ஸேவித்துக் கொண்டு வீரநாராயணபுரத்திற்குக் குடும்பத்தோடு எழுந்தருளி னார்கள். மன்னனாருக்குச் சில வருஷம் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும்போது, ஸேவார்த்திகளாக வந்த சில வைஷ்ண வர்கள் "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியை மன் னனார் திருமுன்பே அநுஸந்தித்தருள, அதைக்கேட்ட நாத முனிகள் மிகவுகந்து, "இத்திருவாய்மொழியின் திருநாமப்பாட் டிலே (சாற்றுப்பாட்டிலே) 'ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் பாட்டும் உங்களுக்கு வருமா?" என்று கேட்டார். "இப்பத்துப் பாட்டுத்தவிர மற் றவை கிடைக்கவில்லை" என்று கூறிச் சென்றார்கள். உடனே நாதமுநிகள் "குருகூர்ச்சடகோபன்" என்று ஆழ் வாரால் அருளிச்செய்யப்பட்ட திருக்குருகூருக்குச் சென்று ஸ்ரீமதுரகவிகளுடைய பரம்பரையில் வந்த ஸ்ரீபராங்குசதாஸரை விசாரித்தார். அவரும் "திருவாய்மொழியும் மற்ற திவ்யப்ர பந்தங்களும் நீண்ட காலத்துக்கு முன்பே மறைந்து விட்டன; எங்களுடைய பரமாசார்யரான ஸ்ரீமதுரகவிகள் ஆழ்வார் விஷயமான 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற திவ்யப்ர பந்தத்தை எங்களிடம் அளித்து 'இதை ஒருமுகமாக ஆழ் வார் திருமுன்பே இருந்து ஆழ்வார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு நியமத்துடன் பன்னீராயிரம் உரு அநுஸந்தித்தால் ஆழ்வார் ப்ரஸன்னராவார்' என்று அருளிச்செய்தார்" என்று நாதமுநிகளிடம் கூறினார். நாதமுநிகளும் கண்ணிநுண் சிறுத்தாம்பை அவரிடம் ப்ரார்த்தித்து உபதேசம்பெற்று ஆழ்வார் திருமுன்பே அதை நியமத்தோடு பன்னீராயிரம் உரு

http://acharya.org

அநுஸந்தித்தார். ஆழ்வாரும் அவர் நெஞ்சிலே தோன்றி "உமக்கு என்ன வேணும்?" என்று கேட்க, "திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அடியேனுக்கு இரங்கியருளவேணும்" என்று நாதமுநிகள் விண்ணப்பம் செய்ய, ஆழ்வாரும் அவருக்கு மயர்வற மதிநலமருளி, ரஹஸ்ய த்ரயத்தையும், திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும், அவற்றின் பொருளையும், அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தையும் அநுக்ரஹித்தருளினார். அதற்குப்பின் சிலகாலம் நாதமுநிகள் ஆழ்வார் திருநகரியிலே திவ்யப்ரபந்தங்கள் முதலானவற்றை அநுஸந்தித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். ஒருநாள் இவரை வீரநாராயணபுரத்திற்கு வரச்சொல்லி மன்னனார் கனவிலே நியமித்தருள, இவரும் ஆழ்வாரிடம் விடைகொண்டு வீரநாராயணபுரம் சென்று, மன்னனார் நியமனத்தாலே தமது மருமக்களான மேலையகத்தாழ்வாரையும், கீழையகத்தாழ்வாரையும் கூட்டிக்கொண்டு திவ்யப்ரபந்தங்களுக்கு தேவகானத்தாலே ராகமும் தாளமும் முதலானவற்றை அமைத்து இயலும் இசையும் ஆக்கிப் பாடச்செய்து பரப்பி வந்தார். இவருடைய முக்கிய சிஷ்யர்கள் உய்யக்கொண்டாரும், குருகைக் காவலப்பனுமாவார். அவர்கள் மூலமாக திவ்யப்ரபந்தத்தையும் யோக ரஹஸ்யத்தையும் ப்ரசாரம்செய்வித்து, பிறக்க இருக்கும் தம்முடைய பேரனான யமுனைத்துறைவனுக்கு இவற்றை அளிக்கும்படி நியமித்துவிட்டு, குருகைக்காவலப்பன் கோவிலிலே பரமபதித்தருளினார்.

தாது வருஷம் (கி.பி. 917) மாசி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசி இவருடைய தீர்த்ததினம். சுமார் தொண்ணூற்று மூன்று (93) திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்தார்.

இவர் அருளிச்செய்த க்ரந்தம் 'ந்யாய தத்வம்' என்பது. இதிலிருந்து சில பகுதிகள் எம்பெருமானார், ஶ்ருதப்ரகாசிகா பட்டர், ஸ்ரீவேதாந்ததேசிகர் முதலான ஆசார்யர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. க்ரந்தம் இப்போது இல்லை.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி 53] ஒளி-9, 10]

ஸ்ரீ-ரா-ஸ்ரீ கி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் குடும்ப தர்ம அறக்கட்டளை (டிரஸ்ட்) வழக்கு திருச்சி சப்கோர்ட் OS 37 / 85 தீர்ப்பு

[ஸுதர்சனர்]

நம் நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடைபெற்று வந்த காலத்தில் எந்தையாரான ஸ்ரீ உ வே கி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி உண்மையான வேதமூலமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் மிகவும் நலிவுற்று வருவதைக் கண்டார். மிகவும் விரிந்து பரந்த திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களையும், ரஹஸ்ய வ்யாக்யானங்களையும் அச்சிடுவதற்கும் அவற்றுக்கு எளிய தமிழ் நடையில் விவரணங்கள் எழுதுவதற்கும், ஸ்ரீவைஷ்ணவ மதத்தின்மீது சமரசவாதிகளும், மற்ற மதத்தவர்களும் செய்யும் தாக்குதல்களுக்குத் தக்க பதிலளிப்பதற்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹம் போதுமான ஏற்பாடுகள் செய்யவில்லை என்பதைக் கண்டார். இக்குறைகளைப் போக்க ஓர் பத்திரிகையையும், அந்தப் பத்திரிகையையும் கிரந்தங்களையும் அச்சிடுவதற்கு ஓர் அச்சகத்தையும் தாமே நிறுவி அவற்றை நடத்தவேண்டுமென்று உறுதிகொண்டார். பெரிய நிதிவசதியில்லாமல் இக்காரியத்தைச் செயல்படுத்து

http://acharya.org

வது அரிதாகையாலே, இதற்காக "ஸ்ரீ-ரா-ஸ்ரீ-கி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் குடும்ப டிரஸ்ட்" என்னும் ஓர் அறக்கட்டளையை கி.பி. 1945-ம் ஆண்டு நிறுவி, தாம் சுயமாகத் தேடிச் சேர்த்த செல்வத்தில் கணிசமான பகுதியை இந்த அறக்கட்டளைக்கு உரிமையாக்கினார். அத்துடன் நில்லாமல், நம்நாடு சுதந்திரமடைந்தவுடன் 1947-ன் இறுதியில் தாமே மிக முயன்று இந்த அறக்கட்டளையின் சார்பில் "ஸ்ரீநிவாஸம் அச்சகம்" என்னும் அச்சகத்தை, தாம் அறக்கட்டளைக்காக ஒதுக்கியிருந்த நெ. 8, புத்தூர் அக்ரஹாரம் என்னும் பெரிய திருமாளிகையில் நிறுவி, ஸர்வஜித்-ஸ்ரீ மார்கழி-மீ (12—1—48) திருவோண நக்ஷத்திரத்தில், "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" என்னும் திருநாமம் கொண்ட மாதப்பத்திரிகையையும், "ஸ்ரீஸூக்திமாலா" என்னும் தலைப்பில் பல பூர்வாசார்ய கிரந்தங்களையும் அந்த அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடத் தொடங்கினார். இதைத் தாமே விஜய-ஸ்ரீ சித்திரை-மீ வரை ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். தமக்குப் பின்னரும் இப்பணிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறவேண்டும் என்னும் திருவுள்ளத்தால், காஞ்சீபுரத்தைச் சேர்ந்த கோழியாலம் ரங்கநாதாசார்ய ஸ்வாமி என்னும் வித்வத்வரிஷ்டரைக் கொண்டு தம்முடைய பிதாமஹர் ஸ்தாபித்த ஸ்ரீராமகிருஷ்ண ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யம், அதிகரண ஸாராவளி, ஸ்ரீராமாயணம் கோவிந்தராஜர் வ்யாக்யானம், நியாய ஸித்தாஞ்ஜனம், வேதாந்த கௌஸ்துபம் முதலான க்ரந்தங்களில் காலக்ஷேபம் நடைபெறும்படி செய்தார். அவருடைய அருளாலே திவ்யப்ரபந்த ரஹஸ்ய வ்யாக்யானங்களில் அறிவு பெற்றிருந்த அடியேனை, இந்தக்காலக்ஷேபங்களிலும் அந்வயிக்கும்படி செய்து, அடியேனுடைய ஸம்ஸ்க்ருத ஜ்ஞானத்தையும், ஸ்ரீபாஷ்யாதி ஸம்ஸ்க்ருத க்ரந்த பரிசயத்தையும் வளரும்படி செய்தார். வருங்காலத்தில் இவற்றை நடத்துவதற்குச் சட்ட ஞானமும் தேவையாகையாலே அடியேனை சட்டக்கல்லூரியில் சேர்த்து, 'B.L.' பட்டத்தையும் பெறும்படி செய்து, ஒரு அட்வகேட்டாகவும் ஆக்கினார். அத்துடன்

http://acharya.org

இவற்றை நடத்துவதில் உறுதுணையாய் இருப்பதற்காக அவருடைய இளையகுமாரரான ஸ்ரீ S. ராமய்யங்காரையும் சட்டக் கல்லூரியில் சேர்த்து, சட்டம் படிக்கச் செய்தார். அவருடைய சட்டப்படிப்பு முடிவதற்குள்ளேயே 13—5—1953-ல் விஜய-ஸ்ரீ வைகாசி-மீ 1-ம் தேதியன்று எந்தையார் திருநாட்டை அலங்கரித்தார். கோழியாலம் ஸ்வாமியிடம் தொடர்ந்து அடியேன் தர்க்கம் வியாகரணம் மீமாம்ஸை முதலான ஶாஸ்த்ரங்களில் அடிப்படையான க்ரந்தங்களையும், கீதாதாத்பர்ய சந்த்ரிகை முதலான க்ரந்தங்களையும் பயின்று வந்தேன். சிலவருடங்களில் சட்டப்படிப்புத் தேறிவந்த ஸ்ரீ. ராமய்யங்கார் டிரஸ்ட் நிர்வாகத்தில் உறுதுணையாயிருந்து இருவரும் காரியங்களை கவனித்துவந்தோம். இந்நிலையில் நில உச்சவரம்புச் சட்டம் முதலானவை வரத்தொடங்கியமையால் பெரும்பாலும் நிலங்களாயிருந்த டிரஸ்ட் சொத்துக்கள் பலவற்றை நாங்கள் இருவரும் திருச்சி மாவட்ட நீதிபதியின் அனுமதியுடன் விற்று நீதிமன்றத்தின் மூலம் வைப்புத் தொகையாக வைத்து, பத்திரிகையும் க்ரந்தங்களும் மிகச் சிறப்பாக வெளிவரும்படி செய்தோம். 1972 வரையில் இந்நிலை நீடித்தது.

அச்சகமும் பத்திரிகையும் ஏற்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே டிரஸ்ட் நிறுவப்பட்டதால், டிரஸ்டுப் பத்திரத்தில் டிரஸ்டை நாங்கள் இருவரும் மூன்று வருடத்திற்கு ஒருமுறை மேனேஜிங் டிரஸ்டியாக இருந்து சுழல் முறையில் நிர்வஹிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தபோதிலும், பிற்காலத்தில் ஆசிரியரை எப்படித் தேர்ந்தெடுப்பது, அவருக்கு ஊதியம் கொடுப்பது முதலான விஷயங்களை டிரஸ்ட் பத்திரத்தில் தெளிவுபடுத்த இடமில்லாமலே இருந்தது. 1972-ல் இது பற்றி எங்களிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டது. ‘மூன்று வருடத்திற்கு ஒருமுறை டிரஸ்டின் நிர்வாஹம் மாறும் போது ஆசிரியர் பதவியும் அவ்வாறே மாறவேண்டும்’ என்றும். ‘பிற்காலத்திலும் டிரஸ்டின் மேனேஜிங் டிரஸ்டியே

http://acharya.org

மூன்று வருடத்திற்கு ஒருமுறை சுழல் முறையில் ஆசிரியர் பதவியை வஹிக்க வேண்டுமென்றும் தம்பி கருதினார். 'ஸாமான்ய சாஸ்திரங்களிலும், பூர்வாசார்ய க்ரந்தங்களிலும் ஆழ்ந்த அறிவுள்ளவர்களே ஆசிரியராயிருக்கவேண்டும்' என்பது என் கருத்து. வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி, சதாபிஷேகம் கோவிந்த நரசிம்மாசார்யஸ்வாமி ஆகிய இருவரும் மத்யஸ்தம் செய்து பத்திரிகையையும் க்ரந்தங்களையும் வெளியிடும் டிரஸ்ட், கோவில் உபயங்களை நடத்தும் டிரஸ்ட் என்று இரண்டாகப் பிரிந்திருந்த ஷ டிரஸ்டில், பத்திரிகைகள், க்ரந்தங்கள் டிரஸ்டுக்கும் அச்சகத்திற்கும் அடியேன் நிர்வாகியாகவும், பத்திரிகையாசிரியராகவும் இருந்து நடத்தவேண்டுமென்றும், கோயில் உபய டிரஸ்ட்டுக்கும், எந்தையார் 1943-ல் நிறுவிய ஸ்ரீராமகிருஷ்ண ஸந்நிதி டிரஸ்டுக்கும் தம்பி நிர்வாகியாயிருக்கவேண்டும் என்றும் ஓர் ஏற்பாட்டைச் செய்தனர். பன்னிரண்டு வருடங்கள் இந்த ஏற்பாட்டின்படி நடந்தது. 1984-ல் மறுபடியும் பத்திரிகையாசிரியர் பதவிக்கும், அச்சகநிர்வாஹத்திற்கும் சுழல் முறையை அமல்படுத்தி, தம்மை ஆசிரியராக்க வேண்டுமென்று தம்பி கோரினார். பத்திரிகையைப் பற்றியோ, அச்சகத்தைப் பற்றியோ டிரஸ்ட் பத்திரத்தில் எந்தப் பிரஸ்தாபமும் இல்லாமையால், இதுபற்றி ஒரு நீதிமன்றத் தீர்ப்பு அமைந்தாலொழிய, பிற்காலத்தில் பத்திரிகை க்ரந்தங்கள் தொடர்ந்து வெளியிடுவது தடைபடும் என்னும் பயத்தாலே, அடியேன் திருச்சி சப்கோர்ட்டில் OS 37/85 என்னும் ஸ்கீம் வழக்கைத் தொடுத்தேன். அந்த வழக்கின் தீர்ப்பே விக்ரம-வருஷ வைகாசி விசாகம் (14—6—2000) நம்மாழ்வார் திருநக்ஷத்திரத்தன்று வெளியானது.

இதே விஷயத்தைப்பற்றி இப்பத்திரிகையாலும் க்ரந்தங்களாலும் பயன்பெறுபவர்கள் என்னும் முறையில், சதாபிஷேகம் ஸ்வாமியைத் தலைவராகக் கொண்ட ஸத்க்ரந்த ப்ரகாசன ஸமிதியார், தாங்களும் இந்த டிரஸ்ட் நிர்வாஹத்தில் பங்கு பெறவேண்டும் என்று கோரி, OS 518/90 என்னும் வழக்கை

http://acharya.org

திருச்சி சப்கோர்ட்டில் தொடுத்திருந்தனர். இரண்டு வழக்குகளும் சேர்ந்து விசாரிக்கப்பட்டு தீர்ப்பு கனம் நீதிபதி ஆதிநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.

தீர்ப்பின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு :—

(1) கடந்த 47 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக இருந்துவரும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரே தம் ஆயுள் உள்ளவரையில் அல்லது அவருக்கு இயலாமை ஏற்படும் வரையில் ஆசிரியராய் இருக்கவேண்டும்.

(2) பிற்காலத்தில் அறக்கட்டளைப் பத்திரத்தில் கண்டபடி அறக்கட்டளை நிறுவனரின் ஆண்வழிச் சந்ததியினர் அடங்கிய அறங்காவலர் (டிரஸ்டிகள்) குழு தகுதியின் அடிப்படையில் ஆசிரியரை நியமிக்க வேண்டும். இதில் நிறுவனரின் குடும்பத்தினருக்கு முன்னுரிமை உண்டு. ஆசிரியருக்குத் தக்க ஊதியத்திற்கும் அச்சக நிர்வாஹச் செலவுகளுக்கும் தக்க வழிவகை செய்யவேண்டும்.

(3) வைஷ்ணவ ஸமூஹத்தினர் அனைவரும் இந்த அறக்கட்டளையால் பயன் பெறுபவர்களாயினும், அறக்கட்டளை நிர்வாஹத்தில் தம் குடும்பத்தினர் தவிர வேறு எவரும் பங்குகொள்ளக்கூடாது என்று அறக்கட்டளைப் பத்திரத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறபடியால், ஸமிதியினருக்கு அவர்கள் கோரியபடி டிரஸ்ட் நிர்வாஹத்தில் பங்குகொள்ள உரிமையில்லை. ஆகையால் அவர்கள் தொடுத்த OS 518 / 90 என்னும் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

(4) ஆயினும், இந்த அறக்கட்டளை ஒரு பொதுநல (PUBLIC) டிரஸ்ட் ஆகையால் இதனால் பயன்பெறும் வைஷ்ணவ ஸமூஹத்தினர் எவரும் இந்தப் பத்திரிகையோ அச்சகமோ செயல்படாமல் நிற்கும்நிலை ஏற்பட்டால், அவற்றை நடைபெறச் செய்வதற்கு திருச்சி சப்கோர்ட்டில் இந்தத் தீர்ப்பின்கீழ் மனுச்செய்து பரிஹாரம் பெறலாம்.

http://acharya.org

(5) மற்றபடி அறக்கட்டளைப் பத்திரத்தில் கண்டபடி அச்சகம் மற்றும் பத்திரிகை நிர்வாஹம் சுழல் முறையில் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இரு குடும்பத்தினரிடையே மாறிமாறி வரவேண்டும். முதல் மூன்று வருடம் கிருஷ்ண ஸ்வாமி ஐயங்காரே நிர்வாஹ அறங்காவலர்.

இது ஒரு பொதுநல அறக்கட்டளையாகையாலும், பத்திரிகை க்ரந்தங்களின் வாசகர்களுக்கு இவை தொடர்ந்து நடைபெறும்படி பார்த்துக் கொள்ளுவதற்கு உரிமை உண்டாகையாலும், தீர்ப்பின் முக்கியமான அம்சங்கள் இதுவரையில் விளக்கப்பட்டன. இந்தத் தீர்ப்பு தனிப்பட்ட எவருக்கும் வெற்றியோ தோல்வியோ அல்ல. அறக்கட்டளைக்கே முழு வெற்றியாகும். இதை உணர்ந்து, நிறுவனரின் வழித் தோன்றல்களான இரு குடும்பத்தினரும் பிற்காலத்தில் ஒற்றுமையுடன் செயல்பட்டு **“ஜீயாத் ஆசந்த்₃ர நக்ஷத்ரம் ஸ்ரீவைஷ்ணவ ஸுத₃ர்சனம்”** [ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் சந்திரனும் நக்ஷத்திரங்களும் உள்ள வரையில் வெற்றி பெற்று விளங்கவேண்டும்] என்னும் நிறுவனரின் குறிக்கோளையும், மங்களாசாஸனத்தையும் நிறைவேற்றப்படுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்; எம்பெருமானையும் பிரார்த்திக்கிறோம்.

ராமாநுஜார்ய தி₃வ்யாஜ்ஞா வர்த்த₄தாம் அபி₄வர்த்த₄தாம்|

ராமாநுஜார்ய தி₃வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா |

தி₃க₃ந்தவ்யாபிநீ பூ₄யாத் ஸாஹி லோகஹிதைஷிணீ ||

[ராமாநுஜாசார்யரின் திருவாணை மேன்மேலும் வளரட்டும். ராமாநுஜாசார்யரின் திருவாணை தினந்தோறும் ஒளிபெற்று ஓங்குக. அதுவே உலகனைத்துக்கும் நன்மையை விரும்புவதன்றோ.]

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி 54] ஒளி-3, 4]

உபய கலை ஒற்றுமை

ஸ்ரீ உ வே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L.,
[ஸுதர்சனர்], ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
புது நெ. 5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் தென்கலை வடகலை என்னும் பிரிவுகள் சில நூற்றாண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றினிடையே விசிஷ்டாத்வைத வேதாந்தத்தின் ப்ரதாந ப்ரதிதந்த்ரங்களில் வேற்றுமையில்லாத போதிலும், ரஹஸ்யத்ரயங்களுக்குப் பொருள் கூறுவதில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் காலம் முதல் சில கருத்து வேற்றுமைகள் விளைந்ததை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் இந்த இரண்டு பிரிவுகள் தோன்றிவிட்டன. ஸ்ரீவேதாந்த தேசிகர் அவர் வழி வந்த ஆசார்யர்கள் ஆகியோரைப் பின்பற்றுபவர்களை வடகலை, தேசிக ஸம்ப்ரதாயம் என்றும், பட்டர், நஞ்ஜீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், நாயனாராச்சான்பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலியோரைப் பின்பற்றுபவர்கள் தென்கலை, தென்னாசார்ய ஸம்ப்ரதாயம் என்றும் வழங்கப்படுகிறது. இந்த இரு ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே சில நூற்றாண்டு

களாகவே க்ரந்த ரூபமான சர்ச்சைகள் விளைந்துள்ளன. கி.பி. இருபதாம் நூற்றாண்டில் ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப் பரப்புவதற்காகப் பல பத்திரிகைகள் தோன்றி மதப் பிரசாரத்தைச் செய்து வருகின்றன. இந்தப் பத்திரிகைகள் வாயிலாகவும் அவ்வப்போது ஸம்ப்ரதாய பேத விஷயமாகச் சர்ச்சைகள் நடந்து வருகின்றன.

ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப் பரப்புவதற்காகத தமக்கு தாமே சில நெறிமுறைகளை வகுத்துக் கொண்டுசெயல்படவேண்டும் என்னும் குறிக்கோள் குறித்து விவாதித்து முடிவு செய்வதற்காக 20—1—2001 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு, சென்னை திருவல்லிக்கேணி ரங்கநாதம் செட்டியார் ஹால், 20, தெற்கு மாடவீதியில் ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகையாசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பேசுவதற்கு, சென்னை கீதாசார்யன் ஆசிரியர் ஸ்ரீ உ வே M A வேங்கட கிருஷ்ணன் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். இந்தக் கூட்டத்தில் நம்முடைய உடல்நிலை காரணமாக நம்மால் நேரில் பங்குகொள்ள இயலவில்லை. எனவே எந்த அடிப்படையில் ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகாசிரியர்கள் பரஸ்பர ஒற்றுமையுடன் செயல்படலாம் என்பது பற்றிய நமது கருத்துக்களை இனித் தருகிறோம். இதை அச்சிட்டு அக்கூட்டத்திற்கு அனுப்புகிறோம்.

ஒவ்வொரு பத்திரிகையும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப் பரப்புவதோடு, தத்தம் ஸம்ப்ரதாயக் கருத்துக்களைப் பரப்பவும் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆகையால், அவரவர் ஸம்ப்ரதாயக் கருத்துக்களை வாசகர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தே ஆகவேண்டும். அப்படித் தெரிவிக்கும்போது பின்வரும் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது உபய ஸம்ப்ரதாய ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்பது நமது கருத்து.

1. பூர்வாசார்ய க்ரந்தங்களுக்கு விவரணங்களைப் பத்திரிகைகளில் வெளியிடும் நூல்களில் தவிர, இன்றுள்ளவர்

http://acharya.org

கள் எழுதும் தனிக் கட்டுரைகளில் மற்ற ஸம்ப்ரதாயத்தை மறுத்தோ கண்டித்தோ எழுதுவதைத் தவிர்க்கவேண்டும்.

2. அப்படி எழுதும்போது தேசிகன் திருவுள்ளம் இன்னது, பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் இன்னது, பிள்ளை லோகாசார்யர் திருவுள்ளம் இன்னது என்று ஆசார்யர்களைக் கௌரவமாகக் குறிப்பிட்டே எழுதவேண்டும்.

3. தென்னாசார்யர்கள் என்று பிரஸித்திபெற்ற பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர் முதலான ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை எடுத்து அவர்கள் தேசிக ஸம்ப்ரதாயத்தையே தழுவியிருக்கிறார்கள் என்றோ, தேசிக ஸ்ரீஸூக்திகளை எடுத்து அவர் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தையே தழுவியிருக்கிறார் என்றோ எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

4. பெரிய பிராட்டியார் விஷயத்தில் ஏராளமான தேசிக ஸ்ரீஸூக்திகளையும் மற்ற பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையும் மேற்கோளாக எடுத்துக்காட்டி ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்திலும், பஞ்சமபக்ஷ நிதூஷணியிலும், ஸுதர்சனர் பதில் பதிலாதைது சதகத்திலும். பிராட்டியைப் பரப்ரஹ்மம் என்றோ, "அவள் எம்பெருமானோடு துல்யமான ஈஸ்வரி; அவள் எம்பெருமானுக்கு ஶரீரமல்ல" என்றோ எந்தப் பூர்வாசார்யரும் அருளவில்லை என்றும், நேர்மாறாக அவளும் எம்பெருமானுக்கு ஶரீரமே என்றே அருளியிருக்கிறார்கள் என்றும், அவளைப் பரப்ரஹ்மம் என்றோ எம்பெருமானுக்குத் துல்யமான ஈஸ்வரி என்றோ வாதிடுவது விசிஷ்டாத்வைதத்தையே வேரறுப்பது என்றும் அடியேன் நிலைநாட்டியிருக்கிறேன். இந்த நிரூபணங்களை ஓர் அக்ஷரமும் விடாமல் மறுக்கப் போவதாக எழுதிய ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகையும், மற்றும் உள்ள தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களும் இந்த நிரூபணங்களை இன்றளவும் மறுக்கத் துணியவில்லை. இவற்றை எவராவது மறுக்க முற்பட்டால் அதற்கு ஸாத்விக ரீதியில் பதிலெழுதி விசிஷ்டாத்வைதத்தை ரக்ஷிப்பதற்காக வாதம் புரியும் உரிமை அடியே

http://acharya.org

னுக்கு உண்டு. மற்ற விஷயங்களில் அந்தந்த ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் கொள்கைகளை வலியுறுத்தி எழுதுவதற்கு மற்றவர்களுக்கும் உரிமை உண்டு.

5. பொதுவாக ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நாம் தவிர்க்க முடியாமல் பத்திரிகைகள் வாயிலாக விவாதத்தில் ஈடுபட நேரும்போது 'நாம் அனைவரும் பரம ஸாத்விகர்களான ஆழ்வார்கள் ஆசார்யர்களின் வழிவந்தவர்கள்' என்பதை நினைவில் கொண்டு விஷய விமர்சனங்களை மட்டுமே செய்ய வேண்டுமேயொழிய பரஸ்பரம் தனி நபர் தூஷண பரிஹாஸங்கள் செய்வதையும் பூர்வாசார்யர்களைப் பற்றிக் குறைத்துப் பேசுவதையும் அறவே தவிர்க்கவேண்டும்.

6. மாமுனிகள் ஈருகவுள்ள பூர்வாசார்யர்களின் காலத்திற்குப் பிறகு எழுதப்பட்ட சில ஸம்ப்ரதாயச் சர்ச்சை நூல்களிலும், குருபரம்பரை போன்ற வரலாற்று நூல்களிலும், பூர்வாசார்யர்களை இழிவுபடுத்திப் பேசும் பல விஷயங்கள் மலிந்துள்ளன. இரு ஸம்ப்ரதாயஸ்தர்களும் இவற்றை மேற்கோளாகக் காட்டி, பூர்வாசார்யர்களைக் குறைத்து எழுதும் கட்டுரைகளைத் தவிர்க்கவேண்டும். உதாரணமாக ஸ்ரீதேசிகன் பெரியவாச்சான்பிள்ளையையோ அல்லது பிள்ளை லோகாசார்யரையோ ஆச்ரயித்து அவரிடம் கிரந்த காலக்ஷேபம் செய்தார் என்று எழுதுவதையோ, பிள்ளைலோகாசார்யர் தேசிகனை ஆச்ரயித்து அவருக்கு "சீரொன்று தூப்புல்" என்னும் தனியனிட்டு அவரிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்தார் என்று எழுதுவதையோ தவிர்க்க வேண்டும். அந்தந்த ஆசார்யர்களின் கிரந்தங்களில் உள்ள அகச் சான்றுகளுக்கு இவை முரண்பட்டவையாகையாலே இவை கட்டுக்கதைகள் என்பது வெளிப்படை.

மேலே குறிப்பிட்டுள்ள நெறி முறைகள் அனைத்தையும் உபயகலையையும் சேர்ந்த பத்திரிகைகள் மனப்பூர்வமாகவும், கட்டுப்பாட்டு உணர்ச்சியுடனும் கடைப்பிடித்தால் உபயகலைப் பத்திரிகைகளிடையே விவாதங்கள் தவிர்க்கப்பட்டு உபயகலை ஒற்றுமை ஏற்படும்.

http://acharya.org

உபய கலை ஒற்றுமை - 2

சென்ற இதழ்த் தலையங்கத்தில் நம் தமிழ் நாட்டினுள் தென்கலை வடகலைப் பிரிவினரிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகைகள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றி எழுதியிருந்தோம். அந்த இதழிலேயே ஸ்ரீவைஷ்ணவ யதி ஸம்மேளனம் பற்றிய செய்தியும் வெளியிடப்பட்டது. அதில் உபய கலையைச் சேர்ந்த ஜீயர்களும் பெரும்பாலும் கலந்து கொண்டதால் அவர்களாலும் இவ்வொற்றுமை வளரும் என்றே நாம் நம்பினோம். ஆனால் அந்த நம்பிக்கை பொய்க்கும்படியான நிகழ்ச்சிகள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நடந்து வருகின்றன. அதனால் கோயில்களைப் பொறுத்து உபயகலையினரும் எவ்வாறு நடந்து கொண்டால் உபயகலை ஒற்றுமை ஓங்கும் என்பது பற்றி இவ்விதழில் விவரிக்கிறோம்.

அண்மையில் திருவரங்கம் பெரியகோயிலில் பெரியபெருமாள் திருமேனி, ப்ரணவாகார விமானம், அனைத்து கோபுரங்கள், எல்லா உபஸந்நிதிகள் ஆகியவைகளில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணிகள் நிறைவுபெற்று 11—3—2001 ஞாயிறு தொடங்கி 15—3—2001 வியாழனன்று மஹாஸம்ப்ரோக்ஷணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீரங்கம் ஸந்நிதியில் 1959-ம் ஆண்டு தீ விபத்திற்குப் பின் ஜீர்ணோத்தாரணமாகி நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷணத்திலும், பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் பெரிய ராஜகோபுரம் கட்டப்பட்டு அதற்கு நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷணத்திலும் நாம் நேரில் முழுவதும் அந்வயித்தோம். இந்த ஸம்ப்ரோக்ஷணத்தில் உடல் நிலை காரணமாக நம்மால் பூர்ணமாக அந்வயிக்க இயலவில்லை. ஆயினும், ஸம்ப்ரோக்ஷணத்திற்கு முதல் நாள் (14—3—2001) மிகுந்த சிரமத்துடன் சென்று யாகசாலையையும், திருமாமணி மண்டபத்தில் ரத்னாங்கி சாத்திக் கொண்டு உபயநாச்சிமார்களுடன் எழுந்தருளியிருந்த நம்பெருமாளையும் ஸேவித்துவிட்டு வந்தோம். ஸம்ப்ரோக்ஷணத்தை கேபிள் தொலைக்காட்சி மற்றும் வானொலி, பத்திரிகைகள் மூலம் கண்டும் கேட்டும் அறிந்தும் மகிழ்ந்தோம்.

http://acharya.org

கோயிலில் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கப்படி மிகச்சிறப்பாக ஸம்ப்ரோக்ஷணம் (15—3—2001) நடைபெற்ற சில நாட்களுக்குப் பின் பத்திரிகைகளில் பின் வருமாறு பலவாறு செய்திகள் வந்தன :—

மார்ச்-26 திங்கட்கிழமை திருவரங்கத்திற்கு வருகைதந்த 45-வது பட்டம் அஹோபிலமடம் ஸ்ரீமதழகிய சிங்கர் வெளி யிட்ட கோரிக்கைகள் :— "மூலவர் ரங்கநாதன் நெற்றியில் வடகலை நாமத்தைப் பொறிக்க வேண்டும். ஸ்ரீரங்கம் ராஜ கோபுரத்தில் உள்ள தென்கலைத் திருமண் விளக்கை அப்புறப் படுத்தவேண்டும். வடகலை ஜீயர் கட்டிய ராஜகோபுரத்தில் தென்கலை நாமம் வைத்ததை அகற்ற வேண்டும். வேதாந்த தேசிகன் ஸந்நிதியில் உள்ள தென்கலைத் திருமண் காப்பை அகற்ற வேண்டும். ஸ்ரீரங்கம் கோயிலில் புதிதாகப் போடப்பட்ட தென் கலை திருமண் காப்புகளை அகற்ற வேண்டும்" என்பனவே அச்செய்திகள். ஆஸ்திகர்கள் அனைவரது மனத்தையும் புண் படுத்திய இச்செய்திகளுக்கு இன்று வரை அஹோபிலமடம் 45-வது பட்டம் ஜீயர் ஸ்வாமியால் எந்த மறுப்பும் வெளி யிடப்படவில்லை.

பல நூற்றாண்டுகளாக மூலவரான பெரிய பெருமாளின் திருமுக மண்டலத்தை, தென்கலைத் திருமண் காப்பு அலங் கரித்து வருகிறது. இதை அகற்றுவதற்கோ, வடகலை நாமத் தைப் பொறிப்பதற்கோ, அத்தகைய மூறைகேடான கோரிக்கை களை எழுப்பவோ எவருக்கும் உரிமையில்லை. இரண்டாவது கோரிக்கையில் வடகலை ஜீயர் கட்டிய ராஜகோபுரம் என்பது முழு உண்மையல்ல. வர்த்தமான ஜீயருக்கு முன்பிருந்த 44-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் கோயில் ஸம்ப்ரதாயத் திற்கு எந்த மாறுதலும் செய்வதில்லை என்று உறுதிமொழி எழுதிக்கொடுத்து, ஆஸ்திகர்களான பல அன்பர்களிடம் நிதி வசூலித்து ராஜகோபுரத்தை ஏற்கனவே கல்லால் அமைந் திருந்த கீழ்ப்பகுதிக்குமேல் எழுப்பினார். ஏற்கனவே இருந்த கல் பகுதியிலே தென்கலைத் திருமண் காப்பு சங்கு சக்கரங் களோடு அமைந்திருந்தது. மேற்பகுதியைக் கட்டும்போது அது அழிந்துவிட்டதால் ஜீயர் ஸ்வாமியே பெரியதாகத்

http://acharya.org

தென்கலைத் திருமண் காப்பு சங்கு சக்கரங்களுடன் அமையச் செய்தார். அவர் ஒப்புக்கொண்டபடி, கோயிலில் நெடுங்காலமாக இருந்து வந்த தென்கலை ஸம்ப்ரதாயத்திற்கு எந்த முரண்பாடும் நேராதபடி, இப்போதும் கோபுரத்தில் காட்சி தரும் பெரியபெருமாள் விக்ரஹத்தின் திருமுக மண்டலத்திலும், தென்கலைத்திருமண் காப்பையே அமையச்செய்தார். இப்படி இருக்கும் போது மஹா ஸம்ப்ரோக்ஷண சமயத்தில் கோயில் நிர்வாகிகள், நாட்டு மக்கள் அனைவரும் நெடுந்தூரத்திலிருந்தே கண்டு மகிழ்வதற்காக, கோயில் பாரம்பரியப்படியான தென்கலைத் திருமண் காப்பை நியான் விளக்கின் வடிவில் அமைத்ததில் என்ன தவறு? வடகலைக் கோயில் கோபுரங்களில் இத்தகைய வடகலை விளக்குகள் அமைக்கப்பட்டிருப்பது குறித்து தென்கலையினர் யாரும் ஆட்சேபணை எழுப்பவில்லையே.

ஸ்ரீரங்கம் தாயார் ஸந்நிதி எதிரில் அமைந்துள்ள வேதாந்த தேசிகன ஸந்நிதியில் உள்ள தென்கலைத் திருமண் காப்பை அகற்றவேண்டும் என்ற இவரது நாலாவது கோரிக்கையும் நியாயமல்ல. வேதாந்த தேசிகன் ஸந்நிதி முன்பு தென்கலை ஸந்நிதியாகவே இருந்து. அதன் நிர்வாகத்தைப் பெற்றிருந்த அகோபில மடம் வடகலையாக மாறியபின்பு இந்த ஸந்நிதியும், வடகலையாக மாற்றப்பட்டு விட்டது என்பதும், அதன் விளைவாக வழக்குகள் ஏற்பட்டு 'தேசிகன் ஸந்நிதி முன்புறமுள்ள தென்கலைத் திருமண் காப்பை இடிக்கக்கூடாது, ஸந்நிதிக்காரர்களால் பாதுகாக்கப்படவேண்டும்' என்று நீதிமன்ற ஆணை உள்ளது என்பதும் அனைவரும் அறிந்ததே. வடகலையாக மாற்றப்பட்டுவிட்ட தேசிகனைப் புறப்பாடு செய்வது தடைசெய்யப்பட்டு அது தொடர்பாக 20-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் வாதி பிரதிவாதிகளில் ஒருவரான அழகியசிங்கர் ஜீயர் ஸ்வாமி வழக்கு நிலுவையிலிருக்கும் போதே இப்படிப் பட்ட கோரிக்கையை எழுப்பியது நீதி மன்றத்தை அவமதிப்பதும் ஆகும். கடைசிக் கோரிக்கையின்படி புதிதாகத் தென்கலைத் திருமண் காப்புகள் போடப்பட்டிருந்தாலும், அவை

http://acharya.org

கோயில் ஸம்ப்ரதாயத்திற்கு முரண்படாதவைகளாகையாலே, அவற்றை அகற்றவேண்டிய அவசியம் இல்லை. திருக்குடந்தை, திருவஹீந்திரபுரம், திருவுள்ளூர், அஹோபிலம் முதலான கோயில்களில் அவ்வப்போது புதிது புதிதாக வடகலைத் திருமண் காப்புகள் போடப்படுவதைத் தென்கலையினர் யாரும் இதுகாறும் ஆக்ஷேபித்ததில்லை.

இப்படி நியாயத்திற்கு முரணாக இத்தகைய கோரிக்கைகளைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிடச் செய்தது ஜீயர் ஸ்வாமியினுடைய சகிப்புத் தன்மையின்மையையே காட்டுகிறது.

ஜீயர் ஸ்வாமி மிகவும் படித்தவராகவும், நற்குணங்கள் பல நிரம்பியவராகவும் இருந்தபோதிலும், உணர்ச்சிவசப்பட்டு முன்கோபத்திற்கு ஆட்பட்டு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

சில வருடங்களாகப் பிராட்டி விஷயமான பூர்வாசார்யர்களின் திருவுள்ளக் கருத்துக்களை நாம் எழுதி வருகிறோம். மதுராந்தகத்தில் நடைபெற்ற மாலோல வித்வத் ஸதஸ்ஸில் இது பற்றிய சர்ச்சையை எழுப்பி ஸாத்விக முறையில் நாம் வாதம் செய்தபோது விஷயங்களுக்கு பதில் சொல்ல முடியாமையால், கோபவசப்பட்டு 'உமக்கு சாஸ்திர ஜ்ஞானம் கிடையாது'' என்று கூறினார் ஜீயர் ஸ்வாமி. பிறகு ஸுதர்சனம் பத்திரிகையில் இந்த விவாதம் நடந்து வரும்போது, ந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகை மூலம் இடையில் புகுந்து இதே குற்றச்சாட்டை நம்மீது தம் பத்திரிகையிலும் வெளிவரச் செய்து நம்மைப் பலவாறு தூஷிக்கச் செய்தார். பல வருடங்களாக அஹோபிலமடம், ஆண்டவன் ஆஸ்ரமம் உள்ளிட்ட பல வித்வத் ஸதஸ்ஸுக்களில் ஸ்ரீபாஷ்யத்தின் பல அதிகரணங்களுக்கு வாக்யார்த்தம் சொல்லியிருக்கும் நம்மீது இத்தகைய குற்றச்சாட்டைக் கூறியது அழகியசிங்கர் ஸ்வாமி அவ்வப்போது உணர்ச்சிவசப்பட்டு முன்கோபத்திற்கு ஆட்படுபவர் என்பதற்கு மற்றுமோர் சான்று. கடந்த ஐம்பது வருடங்களாகப் பல்லாயிரக்கணக்கான பக்கங்களில் நாம் எழுதி வரும் கீதாவ்யாக்யானம் முதலான நூல்களில் அரிய சாஸ்த்ரார்த்தங்களை எளிய தமிழில் அனைவருக்கும் புரியும் வண்ணம் நாம் எழுதி வருவதை உபய கலையைச் சேர்ந்த பல வித்வான்கள் பாராட்டி வருவது இவர் அறிந்ததேயாகும். நிற்க.

http://acharya.org

உபய கலையினருக்கும் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்தில் சென்னையில் நடைபெற்ற அனைத்து யதிகள் ஸம்மேளனத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு புறம்பாக ஒருமாதத்திற்குள் ஸ்ரீமதழகிய சிங்கர் திருவரங்கம் கோயில் தொடர்பாக வெளியிட்ட பத்திரிகைச் செய்தியினைக் கண்டித்து ஷ ஸம்மேளனத்தில் இவரோடு கலந்துகொண்ட ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீரங்கம் கோயில் ஸ்ரீரங்க நாராயண ஜீயர், காஞ்சீ வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர், ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர், திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் ஆகிய ஸ்வாமிகள் தலைமை வகிக்க, திருவரங்கம் வீதிகளில் தமிழகம் முழுவதிலுமிருந்து திரண்டு வந்திருந்த பக்தர்கள் 29—3—2001 அன்று கண்டனப் பேரணியை நடத்தினர். இந்த ஊர்வலம் ஸ்ரீரங்கம் கீழச்சித்திரைவீதி வானமாமலை மடத்தில் முடிவுற்று, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம் கோயில் பாரம்பர்யப் பாதுகாப்புக்குழு, ஸ்ரீரங்கம் கோயில் பரம்பரை மிராசு ஸ்தலத்தார்கள் சபா, திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணன் எம்பெருமானார் கைங்கர்ய ஸபா ஆகிய அமைப்புகள் இணைந்து செய்திருந்தன.

கோயில்களில் உபயகலை ஒற்றுமைக்கு நெறிமுறைகள்

இனி தென்னாட்டுத் திருக்கோயில்களில் உபயகலையினரும் ஒற்றுமையாக வாழ்வதற்கான நெறிமுறைகளை அளிக்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள வைணவத் திருக்கோயில்கள் பின்வருமாறு பலவாறு அமைந்துள்ளன.

(1) பெரும்பாலான கோயில்கள் முழுவதும் தென்கலைத் திருமண் காப்புகளோடும், தென்கலை ஆசாரங்களோடும் அமைந்துள்ளன. (2) சில கோயில்கள் முழுவதும் வடகலைத் திருமண் காப்புகளோடும் வடகலை ஆசாரங்களோடும் அமைந்துள்ளன. (3) சில கோயில்கள் இரண்டு திருமண் காப்புகளும் இரண்டு ஆசாரங்களும் கலந்து அமைந்துள்ளன.

பொதுவாக இந்த மூன்று வகைப்பட்ட கோயில்களிலும் ஏற்கனவே உள்ள நிலையை (STATUSQUO) எவரும் மாற்றாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

http://acharya.org

இப்போது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் ஸ்ரீரங்கம் கோயிலைப்பற்றி ஆராய்வோம். ஸ்ரீரங்கம் கோயில் அனைத்து உபஸந்நிதிகள் உட்பட முழுக்க முழுக்கத் தென்கலைக்கோயில் என்று சென்னை உயர்நீதி மன்றம் உள்ளிட்ட கோர்ட்டு தீர்ப்புகள் உள்ளன. கோயிலின் முக்கியப் பகுதிகளான ஆர்ய படாள் வாசலுக்குள் அமைந்த பெரிய பெருமாள் ஸந்நிதி யிலும், பெரிய பிராட்டியார் ஸந்நிதியிலும், ஆண்டாள் ஸந்நிதிகளிலும், சக்கரத்தாழ்வார் ஸந்நிதியிலும், நம்மாழ்வார் முதலான அனைத்து ஆழ்வார்கள் ஸந்நிதிகளிலும் நாதமுனி தேசிகன் தவிர்ந்த மற்ற ஆசார்யர்கள் ஸந்நிதிகளிலும் முழுவதும் தென்கலைத் திருமண் காப்புக்களே உள்ளன. இவையனைத்திலும் மிராஸ் தென்கலை அத்யாபகர் வேதபாராயணக்காரர்களே ஸேவை சாற்றுமுறை செய்து வருகின்றனர். ஒரு சில உப ஸந்நிதிகளில் அவற்றின் நிர்வாகத்தை அவ்வப்போது விலைக்கு வாங்கியவர்களால் அங்கு இருந்த தென்கலைத் திருமண் காப்புகள் வடகலையாக மாற்றப்பட்டன. அந்த ஸந்நிதிகளிலும் ஸம்ப்ரோக்ஷணம் போன்ற விசேஷ காலங்களில் கோயில் மிராஸ் தென்கலை அத்யாபகர்களும், வேதபாராயணக்காரர்களுமே தென்கலை ஸம்ப்ரதாயப்படி ஸேவை சாற்றுமுறை செய்து வருகின்றனர். ஆகையால் இது முழுக்க முழுக்கத் தென்கலைக் கோயிலே என்னும் உயர்நீதி மன்றத் தீர்ப்பு இன்று வரை நடைமுறையில் செயல்பட்டு வருகிறது.

ஆகையால் ப்ரக்ருதம் ஸ்ரீமதழகிய சிங்கர்—ஸ்ரீரங்கம் ராஜ கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள தென்கலைத் திருமண் காப்பு (நியான் விளக்கு) மற்றும் சில திருமண் காப்புகளையும் அகற்றும்படி கிளர்ச்சி செய்வது சிறிதும் நியாயமற்றதும், ஸ்ரீரங்கம் கோயிலில் தொன்று தொட்டு நிலவி வரும் பழக்க வழக்கங்களுக்கும், நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கும் விரோதமானதுமாகும். எனவே இதைக்கைவிட்டு உபயகலை ஒற்றுமைக்கு வழிவகுப்பாராக.

கோயில்களில் தற்போதுள்ள நிலைமைகளை மாற்றாமல், அப்படியே நீடிக்கச் செய்யப் பாடுபடுவதே கோயில்களில் உபயகலை ஒற்றுமை வளரச் சிறந்த வழியாகும். இதற்கு மாறாக, எவராவது நடக்க முற்பட்டால் கோயில்களில் சண்டை சச்சரவுகளும் வழக்குகளும் வளர்ந்து வேற்றுமைகளும் மனக் கசப்புமே அதிகரிக்கும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி 54] ஒளி-9, 10]

ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம் விருது—ஏற்புரை

ஸ்ரீ உ வே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L.,

[ஸுதர்சனர்], ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

புது நெ. 5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

❋ ❋ ❋

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் ஸ்வாமி நம்மாழ்வார் அறக்கட்டளை ஆண்டுதோறும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு அருந்தொண்டாற்றி வரும் அறிஞர்களுக்கு 'ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம்' என்னும் விருதினை இரண்டாண்டுகளாக வழங்கிக் கௌரவித்து வருகிறது. வித்வான்களை உத்ஸாஹப்படுத்தி அவர்களை மேலும் பல ஸம்ப்ரதாயத் தொண்டுகள் புரிய ஊக்குவிக்கும் இந்த நற்பணி வரவேற்கத்தக்கது. ''புருஷ ஸிம்ஹம்'' என்னும் சொல் மனிதர்களில் சிறந்தவர் என்று பொருள்படுவதுபோல், ''ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம்'' என்னும் சொல்லும் 'ஸ்ரீவைஷ்ணவர்களில் சிறந்தவர்கள்' என்று இவர்களைச் சிறப்பிக்கிறது.

ஆனல், ஸிம்ஹத்தினுடைய தனித்தன்மை ''பராபி$_4$ப$_4$வந ஸாமர்த்$_2$யம்'' [எதிரிகளை அடக்கும் திறமை] என்று பூர்வா

http://acharya.org

சார்யர்களால் காட்டப்படுவதைக்காணும் போது, வேதத்திற்குப் புறம்பான பா₃ஹ்ய மதக்கொள்கைகளையும், அதற்கு அவப்பொருள் கூறும் குத்₃ருஷ்டி மதக்கொள்கைகளையும் நிரஸித்து விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமாகிற பரம வைதிக ஸித்தாந்தத்தை நிலை நிறுத்திய நம்முடைய ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்களுக்குமே இந்த "ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம்" எனும் விருதின் முழுப்பொருள் பொருந்தியிருக்கும். 'ப₄க₃வான்' என்னும் ஶப்₃த₃ம் நாராயணன் ஒருவனுக்கே பொருந்தியிருந்தபோதிலும், அச்சொல்லுக்குரிய அர்த்தங்களில் ஒரு சிறிதைப் பெற்றிருப்பதையிட்டு, 'ப₄க₃வான் வால்மீகி', 'வேதவியாஸ ப₄க₃வான்' முதலான வழக்குகள் ஏற்பட்டுள்ளன. அந்த முறையில் ஆழ்வார்களுக்கும் பூர்வாசார்யர்களுக்குமே பொருந்திய இந்த விருதை இக்காலத்திலுள்ளாருக்கும் அளிப்பதில் குறையேதும் இல்லை.

ஒரு விஷயத்தை இங்கு அடியேன் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆழ்வார்களிடமும் ஆசார்யர்களிடமும் காணப்பட்ட பா₃ஹ்ய குத்₃ருஷ்டி மத நிரஸனமாகிற "பராபி₄ப₄வந ஸாமர்த்₂யம்" எனும் ஸிம்ஹத்தின் தனித்தன்மை இக்காலத்தில் அனைவரிடமும் மிகவும் குறைந்து விட்டது. நம்நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு முன்னும் பின்னும் மக்களை ஒன்றுபடுத்துவதற்காக "எல்லா மதங்களும் ஒன்று, மதங்களிடையே அடிப்படை வேற்றுமையில்லை, வேற்றுமையை விளைக்கும் மதங்கள் அடியோடு ஒழியவேண்டும்" முதலான பிரசாரங்கள் அரசியல் வாதிகளாலும் அத்வைத மதத் தலைவர்களான "ஜகத்குரு"க்களாலும், பொதுஜனப் பத்திரிகைகளாலும் செய்யப்பட்டன. இதனால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பலரும் மூளைச் சலவை செய்யப்பட்டு தங்கள் மதத்தில் பற்றில்லாதவர்களாகவும், போலிச் சமரசவாதத்தை ஏற்றுக்கொள்பவர்களாகவும் ஆனார்கள். இந்நிலையை மாற்றவேண்டும் என்னும் திருவுள்ளத்தாலே, எந்தையார் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" பத்திரிகையைத் தொடங்கி, அதில் வைஷ்ணவ மதஸ்தாபனத்தோடு, புதிதாக முளைத்திருக்கும் புல்லுருவி மதமான சமரசவாத

http://acharya.org

மதத்தின் போலித்தன்மையையும், பொருந்தாமையையும் வெளிப்படுத்துவதை அப்பத்திரிகையின் மூக்கியக் குறிக்கோளாகக் கொண்டார். வைதிக வைஷ்ணவ மதத் தலைவர்களும், மடாதிபதிகளும், அவர்கள் நடத்தி வந்த வைஷ்ணவப் பத்திரிகைகளும் இப்போலி மதத்தால் விளைந்து வரும் பேராபத்தை உணராமல், தங்கள் நூல்களிலும் பத்திரிகைகளிலும், வித்வத் ஸதஸ்ஸுக்களிலும், பௌத்தம், ஜைனம், நையாயிகம், வைசேஷிகம், பாஸ்கரமதம், யாதவப்ரகாசமதம் முதலான தற்காலத்தில் எந்த ஆபத்தையும் விளைக்காத மதங்களையும், அத்வைதிகளால் நடைமுறையில் கைவிடப்பட்ட மாயாவாத மதத்தையும் கண்டித்து வந்தார்களேயொழிய, பேராபத்தை விளைத்து வந்த இந்தப் போலி மதத்தைக் கண்டிக்கத்துணியவில்லை. தொடர்ந்து வரும் இந்தப் போலி மதப் பிரசாரங்களைக் கண்டிக்கவேண்டும் என்று நியமித்து எந்தையார் அடியேனையும் உருவாக்கினார். மேலும், மிக விரிந்த திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்கள், ரஹஸ்ய வ்யாக்யானங்கள், ஸ்தோத்ர வ்யாக்யானங்கள் முதலானவற்றை வெளியிடுவதற்கும அவற்றுக்கு எளிய நடையில் விவரணம் வெளியிடுவதற்கும் கிரந்த முத்ராபக ஸபைக்குப்பின் ஸ்ரீவைஷ்ணவவுலகம் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இக்குறையைப் போக்குவதற்காகவும், ஸுதர்சனம் பத்திரிகையை நிரந்தரமாக நடத்துவதற்காகவும் 'S R S K ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப டிரஸ்ட்' என்னும் அறக்கட்டளையைத் தோற்றுவித்து, அதன் மூலம் இத்திருப்பணிகளை நல்ல முறையில் செய்வதற்கு அடியேனுக்குத் தகுதியை விளைத்து, அவர் செய்த முயற்சிகளாலேயே இன்று ஸ்ரீவைஷ்ணவவுலகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஆகையால் "ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம்" என்னும் விருதை ஏற்றுக்கொள்ள அடியேனுக்குத் தகுதியில்லாவிடினும், அடியேனுக்கு ஸத்தையும் பெயரும் பெருமையும் அளித்துள்ள எந்தையார் சார்பில் ஸ்ரீநிவாஸ கிருஷ்ணஸ்வாமி தாஸனான அடியேன் 'ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம்' என்னும் விருதினை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

http://acharya.org

ஸ்வாமி நம்மாழ்வார் அறக்கட்டளை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு கடந்த இரண்டு வருடங்களாகப் பல நற்பணிகளைச் செய்து வருகிறது. அவற்றில் முக்கிய மானது திவ்யப்ரபந்த வித்வத் ஸபையின் ஆதரவில் மூன் ருண்டுகாலப் பாடத்திட்டத்துடன் ஸ்ரீபகவத்கீதை, ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம், திருவாய்மொழி (பகவத் விஷயம்), குருபரம் பராப்ரபாவம் ஆகிய வகுப்புகள் நடத்துவதேயாகும். இதற் காக நம்முடைய வெளியீடுகளான பகவத்கீதை, குருபரம்பரா ப்ர பாவம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம் ஆகியவற்றை வித்யார்த்திகளுக்கு அளித்து, அவற்றில் பயிற்சி அளிக்கப்படு கிறது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவ்வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிருர்கள். இதேபோல் தமிழ் நாட்டின் மற்ற பல நகரங்களிலும், பங்களூர் போன்ற பிற மாநில நகரங்களிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தி ஸ்ரீவைஷ் ணவ தரிசனம் நாடெங்கும் பரவ அறக்கட்டளை வழி வகுக் கும் என்று நம்புகிறேன். இந்த அறக்கட்டளையை வலிமை யுள்ளதாகச் செய்ய, **வைஷ்ணவர்கள் ஒவ்வொருவரும்** இதன் உறுப்பினராகச் சேர்வதற்குரிய கட்டணமாகிய ரூ. 51/-ஐ, "டிரஸ்ட்டிகள், ஸ்வாமி நம்மாழ்வார் (இந்தியா) அறக்கட்டளை, 53/6, ஸௌந்தர்யா காலனி, அண்ணநகர் மேற்கு விஸ்தரிப்பு, சென்னை - 600 101" என்னும் விலாசத் திற்கு அனுப்பவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸர்வ தே₃ஶ த₃ஶா காலேஷ்வ அவ்யாஹத பராக்ரமா |
ராமாநுஜார்ய தி₃வ்யாஜ்ஞா வர்த்த₄தாமபி₄வர்த்த₄தாம் ||
ராமாநுஜார்ய தி₃வ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்ஜ்வலா |
தி₃க₃ந்த வ்யாபிநீ பூ₄யாத் ஸாஹி லோகஹிதைஷிணீ ||

[எல்லா தேசங்களிலும், நிலைகளிலும், காலங்களிலும் ஸ்ரீராமா நுஜாசார்யருடைய திருவாணை தடையற்ற வீறுபெற்று மேலும் மேலும் வளரட்டும். ராமாநுஜாசார்யருடைய திரு வாணை தினந்தோறும் ஒளிபெற்று விளங்குவதாய் எல்லா திசைகளிலும் பரவட்டும். ஏனெனில், அவ்வாணையே அன்றோ உலகிற்கு நன்மை பயப்பது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

சமரசமா
சகிப்புத் தன்மையா?

தினமலரின் நேர்மையின்மை

[ஸாத்விக விஜய ஸர்வஸ்வமும் இணைந்தது]

ஆசிரியர் :

ஸ்ரீ உ.-வே. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.,BL.,

[ஸுதர்சனர்]

ஆசிரியர்: "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"

5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017,

ஸ்ரீ ர., ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.

டிரஸ்டிகள்;—

S கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M. A., B. L. அட்வகேட்,

S. ராமய்யங்கார், B SC., B.L., அட்வகேட்.

விலை ரு. 10] 26—9—2001 [தபால் கூலி 3-00

குறிப்பு

1958-ம் வருடம் முன்னுள் காமகோடி பீடாதிபதியான சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சென்னையில் முகாமிட்டு, "விஷ்ணுவுக்குத் தமோகுணம் உண்டு" என்று உபந்யாஸம் செய்து, அதை எல்லாப் பொதுஜனப் பத்திரிகைகளிலும் வெளியிடும்படி செய்தார். உடனே ஸுதர்சனத்தில் ஸாத்விக விஜயம், ஸந்தேஹ பரிஹாரம் என்னும் இரு நூல்களடங்கிய "ஸாத்விக விஜய ஸர்வஸ்வம்" என்னும் நூலை வெளியிட்டு அதில் நூற்றுக்கணக்கான ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வாக்கியங்களைக் காட்டி, விஷ்ணு ரஜஸ் தமோ குணங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதையும், சிவனுக்கே தமோகுணம் உண்டு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன என்பதையும் விளக்கினோம். அதற்கு எந்த பதிலையும் சொல்ல இயலாமல், சிவனுக்குத் தமோ குணம் உண்டு என்பதை மறைக்கவும் இயலாமல், "விஷ்ணுவுக்கும் தமோகுணம் உண்டு, அதன் விளைவான தோஷங்கள் உண்டு" என்று பீடாதிபதி பிரசாரம் செய்து வந்தார். அவற்றுக்கு "ஸுதர்சனர் பதில்" பகுதியில் அவ்வப்போது நம்மால் தக்க மறுப்புகளும் எழுதப்பட்டன. நாற்பது வருடங்களுக்குப் பிறகு தினமலர்ப் பத்திரிகை அடிபட்டுப்போன இந்த வாதங்களை மறுபடியும் பிரசுரித்து வருகிறது. தினமலரின் நேர்மையற்ற, நடுநிலை தவறிய இச்செயலை எடுத்துக்காட்டி, பொதுஜனப் பத்திரிகைகள் மத விஷயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையை உணர்த்தும் இந்நூலில், ஸாத்விக விஜய ஸர்வஸ்வமும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் பல அறிவாளிகளுக்கும் அனுப்பப்படுகிறது. அவர்கள் நடுநிலை நின்று இந்நூலை விமர்சித்து, தினமலருக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். விமர்சனத்தை ஸுதர்சனம் காரியாலயத்திற்கும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வ்ருஷ (விஷு) ஹு   ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
விஜயதசமி   ஸுதர்சனம் ஆசிரியர்.

http://acharya.org

ஸ்ரீ:

சமரசமா, சகிப்புத்தன்மையா?

தினமலரின் நேர்மையின்மை

எழுதியவர்:
ஸ்ரீ உ. வே. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L.,
[ஸுதர்சனர்], ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
புது நெ. 5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

நம் நாட்டில் அநாதிகாலமாக நிலவிவரும் மதம் வேதங்களை ஆதாரமாகக் கொண்டது. அதனாலேயே அது 'வைதிக மதம்' என்று பலகாலம் அழைக்கப்பட்டு வந்தது. அந்த வேதங்களிலும் அவற்றின் இறுதிப் பகுதியான உபநிஷத்துக்களிலும், இந்த உலகைப் படைத்து இயக்கிவரும் முழுமுதற் பொருள் யார்? இந்த உலகில் அறிவற்ற உடலோடு இணைந்து பிறப்பிறப்புக்களுக்கு உள்ளாகித் துன்புற்றுவரும் ஜீவனின் ஸ்வரூபம் எத்தகையது? என்னும் விசாரமே மிகுதியாகச் செய்யப்பட்டது. அந்த முழு முதற் பொருளுக்கு வேத வேதாந்தங்களில் அதனுடைய பல பெருமைகளை வெளிப்படுத்தும் "ஸத்" [உள்ள பொருள்], "ப்ரஹ்ம" [மிகப் பெரிய பொருள்], "ஆத்மா" [அறிவுடைய பொருள்], "நாராயணன்" [உலகனைத்தையும் வியாபித்துத் தரித்து சரீரமாகக் கொண்டவன்], "விஷ்ணு" [எங்கும் வியாபித்திருப்பவன்], "வாஸுதேவன்" [எங்கும் வசிக்கும் தேவன்], "ஹரி" [அனைத்தையும் ஸம்ஹரிப்பவன்], "அநந்தன்" [எல்லையற்றவன்]' "அச்யுதன்" [தான் அழியாதவனாயிருந்து கொண்டு, அடியவர்களையும் அழியாதபடி காப்பவன்], "புருஷன்" [இதயத்தில் வாழ்பவன்], "ப்ரஜாபதி" [ஜீவர்களுக்குத் தலைவனாயிருப்பவன்], "ஹிரண்ய கர்பன்" [சிறந்த பொருள்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பவன்], "ருத்ரன்" [(அடியார் துன்பங்களைக் கண்டு பொறுக்காமல்) அழுபவன், தீயவர்களை அழச் செய்பவன்], "சிவன்" [மங்களமானவன்], "இந்த்ரன்" [சிறந்த செல்வத்தையுடையவன்], "அக்நி" [அடியாரை உயர் கதிக்கு அழைத்துச் செல்பவன்], "வாயு", "ப்ராணன்" [ஜீவர்களை உயிர் தரிக்கச்செய்பவன்],

http://acharya.org

"யமன்" [அனைவரையும் நியமிப்பவன்] "ஆகாஶம்" [எங்கும் பிரகாசிப்பவன்] முதலான பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவன் எங்கும் பரவியிருப்பவனாலும், **"பரமபதம்"** என்றும், **"ஹிரண்மய லோகம்"** என்றும், **"பரமாகாசம்"** என்றும் சொல்லப்படும் மேலானதொரு உலகில் அவனை எப்போதும் கண்டு கொண்டிருக்கும் ஸூரிகளோடு கூடியவனாய் உலகனைத்தையும் ஆட்சி புரிகிறான் என்றும் முழங்கின. **"மத்ஸ்யம்"** [மீன்], **"கூர்மம்"** [ஆமை], **"வராஹம்"**, **"நரஸிம்ஹன்"**, **"வாமனன்"** **"திரிவிக்ரமன்"**, **"ராமன்"**, **"கிருஷ்ணன்"** முதலான எண்ணிறந்த அவதாரங்களைச் செய்வதாகவும் மறை சாற்றின. அவன் தேவதைகளுக்கெல்லாம் மேலான தேவதை என்றும், பிரமன் முதலான தேவதைகள் அனைவரையும் படைப்புக்காலத்தில் படைத்து, பிரளய காலத்தில் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளுபவன் என்றும் ஓதின. மற்ற எல்லா தேவதைகளும் அவனுக்கு அங்கங்கள் என்றும், அவனே அவர்களுக்கு ஆத்மா என்றும் முழங்கின. இவற்றிலிருந்து தேவர்கள் பலரென்றும் அவர்களைப் படைத்து அளித்துத் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் ஆதிதேவன் ஒருவன் என்றும், அவன் தன்னால் படைக்கப்பட்ட பல பொருள்களுக்குத் தன் பெயர்களிலேயே சிலவற்றைக் கொடுத்திருக்கிறான் என்றும் தெளிவாக விளங்குகிறது. இப்படி ஒரே பெயரால் ஆதி தேவனையும் அவனால் படைக்கப்பட்ட தேவர்களையும் குறித்திருப்பதனால் மக்களுக்குக் குழப்பம் விளையக்கூடும் என்று பார்த்து ஆதிகாலத்தில் வேதத்தை விளக்குவதற்காகவே நூல்களை எழுதிய மனு முதலான ஸ்ம்ருதிகளை எழுதியவர்களும், ஸ்ரீராமாயணத்தை இயற்றிய வால்மீகி மஹரிஷியும், மஹாபாரதத்தை இயற்றிய வேதவியாசரும், தலைசிறந்த ஸாத்விக புராணமான விஷ்ணு புராணத்தை எழுதிய பராசரமஹரிஷியும், ஸ்ரீமத் பாகவதத்தை இயற்றிய சுகப்பிரம்ம ரிஷியும் தம் நூல்களில் நாராயணன், விஷ்ணு, ஹரி, புருஷன் முதலான திருநாமங்களால் எக்காலத்திலும் பிரசித்திபெற்ற நாராயணனாகிற தேவனே ஆதி தேவன் என்றும், ஸ்ருஷ்டி காலத்தில் தன் பெயர்களில் சில

http://acharya.org

வற்றை அளித்து அவனால் படைக்கப்பெற்ற பிரமன், உருத்திரன், இந்திரன், அக்னி, யமன் முதலான தேவர்கள் அவனுக்கு அவயவமாய் இருந்துகொண்டு அவன் உள் நுழைந்து நியமிப்பதால் பல அருஞ்செயல்களைப் புரிகிறார்கள் என்றும் நிர்ணயித்தார்கள். வேத வேதாந்தங்களில் கூறியபடி இவ்வுலகில் அநாதிகாலமாகப் பிறந்து இறந்து துன்புறும் ஜீவர்களுக்கு இத்துன்பத்திலிருந்து விடுதலை அளித்து, பரமபதமாகிற தன்னுலகிற்கு அழைத்துச் செல்லக்கூடியவன் இந்த நாராயணன் ஒருவனே என்றும், மற்ற தேவர்கள் அவனுடைய அருளாலே ஜீவர்களுக்கு இவ்வுலகப் பயன்களை அளிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் விரிவாகத் தம் நூல்களில் கூறியிருக்கிறார்கள். வேதவியாசர் தம்முடைய பிரம்ம ஸூத்ரத்தில் இவ்வர்த்தங்களை விளக்கினார். உலகெங்கும் புகழப்படும் பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணனும் இவ்வர்த்தத்தையே நிலைநாட்டினார். உபநிஷத்துக்களுக்கும், பிரம்ம ஸூத்ரத்திற்கும், பகவத் கீதைக்கும் உரையெழுதிய சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலான பாஷ்யகாரர்களான பிற்கால மதத் தலைவர்களும், தம் பாஷ்யங்களில் இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டில் மிகப்பழைய நூல்களான பரிபாடல் முதலான சங்க நூல்களிலும், சங்ககாலச் சான்றோர்களால் இவ்விஷயம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவையனைத்தையும் விஷ்ணுசித்த விஜயம் என்னும் நம்முடைய நூலில் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட முதலிரண்டு பாகங்களில் வேத வேதாந்த வாக்கியங்களைக் கொண்டும், சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட மூன்றாவது பாகத்தில் ஸ்ம்ருதிகளைக் கொண்டும் நிர்ணயித்திருக்கிறோம். நாலாவது பாகத்திலும், ஐந்தாவது பாகத்திலும் இதிஹாஸ ஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தைக் கொண்டும் சுமார் ஆயிரம் பக்கங்களில் இது நிலைநாட்டப்பட்டு வருகிறது. மஹாபாரதம் விஷ்ணுபுராணம் முதலானவற்றை விளக்கும் மேல் பகுதிகளில் வருங்காலத்தில் இது நிலைநாட்டப்படும். சங்ககாலத் தமிழர் சமயம், சாதிமத ஆராய்ச்சி முதலான நூல்களிலும் இது சங்க நூல்களைக் காட்டி அசைக்க முடியாதபடி நம்மால் நிலை நாட்டப்பட்டுள்ளது.

http://acharya.org

2. பரம்பொருள் நாராயணனே என்னும் விஷயத்தில் சங்ககாலம் வரையில் தென்னாட்டிலும், ஸ்ரீராமாயணம், மனு ஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகள், மஹாபாரதம், விஷ்ணுபுராணம் பாகவதம் முதலான புராணங்கள் ஆகியவை இயற்றப் பட்ட கலியுகத்திற்கு முற்பட்ட காலம் வரை வடநாட்டிலும் எந்த விதமான குழப்பமும் இல்லாமலிருந்தது. தமிழ்நாட்டில் சங்ககாலத்திற்குப் பிறகும், வடநாட்டில் கலியுகம் முற்றிய பிறகும் பல ராஜஸ தாமஸ புராணங்கள் பிரசாரத்தை அடைந்து சிவனைப் பரம்பொருளாகச் சொல்லும் சைவமதம் உருப்பெற்றது. ஆழ்வார்கள் தம்முடைய திவ்ய ப்ரபந்தங்களில் வேத வேதாந்தங்களை ப்ரமாணமாகக் காட்டி அதை மறுத்தனர். ஆழ்வார்களை ஒட்டித் தோன்றிய நாயன்மார்கள் தம்முடைய தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறை நூல்களில் முக்கியமாகத் தாமஸ புராணங்களை ஆதாரமாகக் காட்டி சைவ மதத்தை நிலைநாட்ட முயன்றனர். "சித், அசித், ஈஶ்வரன் என்னும் மூன்று தத்துவங்கள் உள்ளன. சேதநாசேதநங்கள் நாராயணனாகிற ஈச்வரனால் ஆளப்படுகின்றன" என்று மிகத் தெளிவாக வேத வேதாந்தங்களிலும் முற்கூறிய ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலும் காட்டப்பெற்ற விஷயங்களை, ப்ரமாணங்களால் வலியுறுத்தப்படுகையாலே ஏற்றுக்கொண்ட கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பிறந்த ஆதிசங்கரர் தம் பாஷ்யங்களில் "நாராயணன் இப்படி அனைத்துலகையும் படைத்து அளித்து அழிப்பவனாய் இருப்பது பொய்த்தோற்றமான இவ்வுலகத்தைக் குறித்தே ஆகும். உண்மையில் எந்தச் சிறப்புமற்ற அறிவாகிய ஒன்றே மெய்ப்பொருள்; அந்த மெய்ப்பொருள் அநாதிகாலமாக மாயையால் மறைக்கப்பட்டு, சேதநாசேதனங்கள் அடங்கிய உலகமாகக் காட்சியளிக்கிறது" என்னும் அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பினார். அவருடைய சிஷ்ய ப்ரசிஷ்யர்களும் அவருக்குப் பின் பல நூற்றாண்டுகள் வரை இக்கொள்கையை நாடு முழுவதும் பரப்பினார்கள். வேத வேதாந்தங்களிலும், வால்மீகி, வேதவியாசர், மனு, போதாயனர் முதலான மஹரிஷிகளாலும், ஆழ்வார்களாலும் நிலை

http://acharya.org

நாட்டப்பெற்ற பரம வைதிக மதத்திற்கு சங்கரர் பரப்பிய மாயாவாத மதத்தால் பேராபத்து விளைந்து விட்டதைக்கண்டு கொந்தளித்த ஒன்பதாம் நூற்றுண்டில் அவதரித்த ஸ்ரீமந் நாதமுனிகளும் அவருடைய பேரரான யாமுனுசார்யரும் அவருடைய சிஷ்யர்களுக்கு சிஷ்யரான ஸ்ரீராமாநுஜரும் பல நூல்கள் எழுதி சங்கரரின் மாயாவாத மதத்தைக் கண்டித்து வைதிக மதத்தை ரக்ஷித்தனர். ராமாநுஜரை ஒட்டித் தோன்றிய ஆனந்ததீர்த்தர் என்னும் மத்வாசார்யர் சங்கரரின் மாயாவாத மதம் ப்ரமாணங்களுக்கு பூரணுனது என்பதைத் தம்முடைய பாஷ்யங்களில் நிலைநாட்டிஞர். ராமாநுஜருடைய வழிவந்த பற்பல ஆசார்யர்களும், மத்வர் வழி வந்த பற்பல ஆசார்யர்களும் இன்றளவும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி சங்கரரின் மாயாவாத மதம் அடியோடு பொருந்தாது என்று நிரூபித்துள்ளனர். ராமாநுஜர் வழிவந்தவர்கள் தம் நூல்களில் சேதனுசேதனங்களை சரீரமாகக் கொண்டு அவற்றோடு இணைந்த நாராயணனே ஜகத்காரணப் பொருள் என்னும் விசிஷ்டாத்வைத மதத்தை, பல மடங்களையும் ஆசார்ய புருஷர்களையும் ஸ்தாபித்து பாரததேசமெங்கும் இன்றும் பரப்பி வருகின்றனர். அதுபோலவே மத்வர் வழிவந்த ஆசார்யர்களும் பல மடங்களை ஸ்தாபித்து "சேதனுசேதனங்கள் வேறு, பரம்பொருளான நாராயணன் வேறு" என்னும் த்வைத் மத்மே வைதிக மதம் என்று தம் நூல்களில் நிரூபித்து நம் நாட்டில் பரப்பி வருகின்றனர். விசிஷ்டாத்வைதத்திற்கும் த்வைதத்திற்கும் கிளை மதங்களாக வடநாட்டில் தோன்றிய சைதன்ய மதம், வல்லபமதம், நிம்பர்க்க மதம் முதலான மதங்களும் விசிஷ்டாத்வைத த்வைத மதங்களை நிலை நாட்டியும் அத்வைத மதத்தை மறுத்தும் வடநாடு முழுவதும் இன்றளவும் பிரசாரம் செய்து வருகின்றன. சைதன்ய மதத்திலிருந்து தோன்றிய ஹரே கிருஷ்ண இயக்கம் உலகெங்கும் உள்ள லக்ஷக்கணக்கான மக்களைத் திருத்தி 'உலகம் பொய்' என்னும் மாயாவாதத்தை மறுத்து, "கிருஷ்ணனே பரம்பொருள்" என்னும் உண்மையை உலகெங்கும் நிலைநாட்டி வருகின்றனர்.

http://acharya.org

3. விசிஷ்டாத்வைத மதத் தலைவர்களாலும் த்வைதமதத் தலைவர்களாலும் நூற்றுக்கணக்கான நூல்களில் அத்வைத மதம் தலையெடுக்க முடியாதபடி மறுக்கப்பட்டது இதைக் கண்ட அத்வைதிகள் ஆதிசங்கரர் தோன்றிய கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின், அவர் பெயரில் சிருங்கேரி (தெற்கு), பூரி (கிழக்கு), துவாரகை (மேற்கு), ஜோதிர்மட் (வடக்கு) என்னும் பாரதநாட்டின் நாலு திசைகளில் நாலு மடங்களை ஸ்தாபித்து, ஒன்றுக்கொன்று முரண் பட்ட 'சங்கர விஜயம்' என்னும் சங்கரரைப் பற்றிய வரலாற்று நூல்களை எழுதி அதில், ''ஆதி சங்கரர் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், ஸௌரம்' என்னும் ஆறு மதங்களை ஸ்தாபித்தார்; கூடுவிட்டுக் கூடு பாய்ந்து ஒரு அரசனின் உடலில் புகுந்து அரசியோடு சிற்றின்பங்களை அனுபவித்தார்'' முதலான பல பொய்ச் செய்திகளை வெளியிட்டு அதற்கு ஆதாரமாக, பல தேவதைகளைக் குறித்துப் பல துதி நூல்களை இயற்றி அவற்றை எழுதியது ஆதி சங்கரரே என்று பிரசாரம் செய்ய முற்பட்டனர். ''உலகம் பொய்'' என்னும் மதத்தைப் பரப்பிய ஆதிசங்கரர் பணத்தைத்திரட்டியே நடத்த வேண்டிய மடங்களை ஸ்தாபிப்பதற்கு இடமேயில்லை. அவருடைய நூல்களென்று அவர் காலம் தொட்டே சிஷ்ய ப்ரசிஷ்யர்களால் உரைகள் எழுதப்பட்டு, விசிஷ்டாத்வைத ஆசார்யர்களாலும், த்வைத ஆசார்யர்களாலும் கண்டிக்கப்பட்டு வந்த அவருடைய உபநிஷத் ப்ரஹ்ம ஸூத்ர கீதா ஸஹஸ்ரநாம பாஷ்யங்களே அவரது காலத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் வரை பலரால் கையாளப்பட்டு வந்தன. ஸ்ரீராமானுஜர் மத்வர் காலமான கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் சங்கரர் பெயரில் மடங்கள் இருந்ததற்கு எந்த வரலாற்றுச் சான்றுகளும் இல்லை. அவர் பெயரில் தற்போது வழங்கும் துதி நூல்கள் எதுவுமே அவர் காலத்திற்கு ஐந்தாறு நூற்றாண்டுகள் வரை எவராலும் மேற்கோளாகக் காட்டப்படவில்லை. இவற்றிலிருந்து அவருடைய காலத்திற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, ''உலகம் பொய்'' என்னும் அத்வைத மதம் நடைமுறைக்கு ஒவ்வாத

http://acharya.org

தாகையாலே அத்வைதிகளால் கைவிடப்பட்டுவிட்டது என்றும், பிற்காலத்துத் துதி நூல்களைக் கொண்டு அவருக்கு ஆறு மதங்களை ஸ்தாபித்த ஷண்மத ஸ்தாபனாசார்யர் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டு, இந்த ஆறு தெய்வங்களில் எதை வேண்டுமானாலும் வழிபடலாம் என்னும் கொள்கையை அத்வைதிகள் ஏற்றுக்கொண்டு விட்டனர் என்றும் விளங்குகிறது. இக்கொள்கை ஆதிசங்கரருடைய பாஷ்யங்களில், "நாராயணன் ஒருவனே ஸகுணப்ரஹ்மம். அவனை உபாஸித்தவர்களுக்குத்தான் (ஸகுண) மோக்ஷம் கிடைக்கும்" என்று அவர் நிலைநாட்டியிருப்பதற்கு நேரே முரண்பட்டது என்பது 'ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகரா?' என்னும் நமது நூலில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அத்வைதிகளைக் குறித்துச் சில கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு இதுவரை எவரும் பதிலளிக்கவில்லை. அத்வைதிகள் உட்பட்ட பலர் இந்த நூலை ஆதரித்து எழுதியிருக்கிறார்கள். (ரூ. 5/- அனுப்புகிறவர்களுக்கு இந்த நூல் நம்மால் அனுப்பப்படும்.)

4. விசிஷ்டாத்வைத த்வைத மதத்தலைவர்களாலே சங்கரரின் மாயாவாத மதம் தலையெடுக்க முடியாதபடி கண்டிக்கப்பட்டதைக் கண்டு கடுங்கோபங்கொண்ட அத்வைதிகள் சில நூற்றுண்டுகளில் பெரும்பாலும் சைவர்களாகவும் சாக்தர்களாகவும் மாறி ஒன்றுக்கொன்று முரண்பட்ட சிவபரத்வவாதம், சக்திபரத்வவாதம், ஹரிஹரஸாம்யவாதம் முதலான வாதங்களைச் செய்ய முற்பட்டனர். சுமார் மூன்னூறு ஆண்டுகளுக்குள்ளிருந்த அத்வைத வித்வானான அப்பய தீக்ஷிதர் தமது சிவதத்வ விவேகம், சிவார்க்கமணிதீபிகை முதலான நூல்களில் சிவபரத்துவவாதம் செய்ய முயன்று, அது பல ப்ரமாணங்களுக்கு முரண்பட்டிருந்தபடியாலே ஹரிஹர ஸாம்ய வாதத்தைச் செய்து, தாம் செய்த பகவதபசாரங்களுக்குப் பிராயச்சித்தமாக வரதராஜனைத் துதிக்கும் வரதராஜஸ்தவம் எழுதி ஓய்ந்து போனார். ஆக, நம் நாட்டிற்கு சுதந்திரம்

http://acharya.org

கிடைத்த இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதி வரையில் இந்நாட்டில், (1) விசிஷ்டாத்வைதிகளால் நிலைநாட்டப் பட்ட விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதமும், (2) துவைத வைஷ்ணவ மதமும், (3) அத்வைதிகளில் ஒவ்வொரு பகுதி யினர் கடைப்பிடித்து வந்த ஒன்றுடொன்று முரண்பட்ட சைவம், சாகதம், சிவவிஷ்ணு சமரசவாதம் ஆகியவை களும் நிலவிவந்தன.

5. கி பி ஏழாம் நூற்றுண்டில் தோன்றிய நாயன்மார் கள் காலத்திலிருந்து மும்மூர்த்திகளில் ஒருவரான சிவனுக்குப் பரத்வம் கூறும் சைவமதம் வலுப்பெறத் தொடங்கியது. ஆனால் சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலான ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம் எழுதிய ஆசார்யர்களாலும் அவர்கள் வழி வந்தவர்களாலும், சைவமதம் வேதத்திற்குப் புறம்பான மத மாகவே கருதப்பட்டு அவர்களது நூல்களில் மறுக்கப்பட்டது. ராமானுஜர், மத்வர் காலத்திற்குப் பிறகு சைவர்கள் தங்களு டைய மதத்தை வலுப்படுத்துவதற்காகப் பல மடங்களை (ஆதீ னங்களை) ஏற்படுத்திக் கொண்டனர். நாயன்மார்கள் முழு முதற் பொருளாகச் சொன்ன மும்மூர்த்திகளில் ஒருவரான சிவனுக்கு வேதசாஸ்திரங்களில் பல தாழ்வுகள் கூறப்பட்டிருக் கையாலே இந்த மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரமசிவனே பரம்பொருள் என்னும் துரீய (நாலாவது) சிவவாதத்தைத் தம்முடைய சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலான நூல்களில் பரப்ப முற்பட்டனர். அந்த சைவ மதமும் இன்று வரை இந்நாட்டில் நிலவிவருகிறது. ஆக, இருபதாம் நூற் றுண்டின் முற்பகுதி வரையில் வேதாந்த அடிப்படையில் அத் வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மூன்று மதங் களும், கடவுட் கொள்கையின் அடிப்படையில் சைவம் வைண வம் என்னும் இரண்டு மதங்களும் இந்நாட்டில் கடைப்பிடிக் கப்பட்டு வந்தன.

6. இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதி வரையில் நம் நாட்டை ஆண்ட வெள்ளையர்கள் இந்த மத வேற்றுமைகளைப் பற்றிய ஆழமான அறிவு இல்லாமையால் ஸிந்து நதியைத்

http://acharya.org

தொடர்புபடுத்திப் பாரத தேசத்திற்கு இந்தியா என்று பெயர் வைத்ததுபோலே, இங்கு மக்களால் கடைப்பிடிக்கப் பட்டுவரும் எல்லா மதங்களுக்கும் சேர்த்து 'இந்து மதம்' என்னும் பொதுப்பெயரைச் சூட்டினார்கள். அதைப் பயன் படுத்திக்கொண்டு ராமகிருஷ்ணராலும், அவரது சீடரான விவேகானந்தராலும் தோற்றுவிக்கப்பட்டு உலகெங்கும் பரவி யுள்ள ராமகிருஷ்ண மடங்களும் அத்வைதக் கொள்கையை ஏற்றுக்கொண்ட சிவானந்தர், ரமண மஹரிஷி முதலானவர் களும் "எம்மதமும் சம்மதம் என்பதே இந்து மதம்" என் னும் கொள்கையைப் பரப்பத் தொடங்கினர். தமிழ்நாட்டில் வடலூர் ராமலிங்க அடிகளும் தம் அருட்பாவில் இந்த மதத்தைப் பரப்பினார். இது காரணமாக வேத வேதாந்தங் களின் அடிப்படையில் ஆசார்யர்களால் நிலைநாட்டப்பெற்ற அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மதங்கள் வலுவிழக்கத் தொடங்கின. சைவ மதத்தைச் சேர்ந்தவர் களும் பெரும்பாலும் சமரசவாதிகளாக மாறினர்.

7. இந்நிலையில் தென்னாட்டில் ஆழ்வார்களாலும் ராமாநு ஜர் முதலான ஆசார்யர்களாலும் நிலைநாட்டப்பெற்ற விசிஷ் டாத்வைத வைஷ்ணவ மதம் கட்டுக்கோப்புடன் பற்பல திவ்யதேசங்களைப் பக்கபலமாகக் கொண்டு வளருவதைக்கண்டு பொறுககாத காமகோடி பீடாதிபதியான சந்திரசேகர சரஸ் வதி இந்த வைஷ்ணவ மதத்தை எப்படியாவது அழித்து விடவேண்டும் என்று உறுதி பூண்டு கி பி 1957-ல் சென்னை யில் முகாமிட்டு "விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு" என்னும் சாஸ்திர விருத்தமான் பிரசாரத்தைச் செய்து, அதைப் பெரும்பாலும் அத்வைதிகளாலும் சமரசவாதிகளாலும் நடத்தப்பட்டு வரும் ஆங்கில தமிழ் தினசரிப் பத்திரிகை களில் வெளியிடும்படி செய்தார். 'சமரசப் பிரசாரம்' என் னும் போர்வையில் நடந்த இந்த விஷ்ணு துவேஷப் பிர சாரத்தைக் கண்டித்து, "விஷ்ணுவுக்குத் தமோகுணத்தின் வாஸனையும் கிடையாது" என்பதை நிலைநாட்டி, 'ஸாத்விக விஜயம்' என்னும் இலவச நூலை நாம் வெளியிட்டு ஆஸ்திக

http://acharya.org

வுலகமெங்கும் பிரசாரம் செய்தோம். இதற்குப் பீடாதிபதி ஒருபந்யாஸத்தில் பதிலுரைக்க முற்பட்டார். அதில் எழுப்பப் பெற்ற ஐயங்களை விளக்கி "ஸாத்விக விஜய ஸந்தேஹ பரிஹாரம்" என்னும் கட்டுரையையும் சேர்த்து 'ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம்' என்னும் இலவச வெளியீடாக வெளியிட்டு எல்லாப் பத்திரிகைகளுக்கும் விமர்சனத்திற்கு அனுப்பினோம். த்ரிமதஸ்தர்களான பல மஹனீயர்கள் அதைக் கொண்டாடினர். மறுப்பெழுத நினைத்து அதைப் பெற்றவர்கள் மறுப்பெழுத இயலாதவராயினர். பத்திரிகைகள் இதை விமர்சனம் செய்யத் துணிவற்று நின்றன. பீடாதிபதியோ அவரைச் சார்ந்தவர்களோ யாதொரு பதிலும் இன்றளவும் எழுதவில்லை.

8. ஆயினும், பீடாதிபதி பலவிதமாக விஷ்ணு வைஷ்ணவ த்வேஷப்ரசாரத்தைச் செய்ய முற்பட்டார். அவருக்குப் பக்கபலமாய் நின்ற அரசியல் பத்திரிகைகள் அவற்றை வடிகட்டிச் சிற்சில விஷயங்களையே பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தன. அவற்றுக்கும் அவ்வப்போது ஸுதர்சனத்தில் தனிக்கட்டுரைகளாகவும், ஸுதர்சனர் பதில் பகுதியிலும் பதிலெழுதிப் பீடாதிபதிக்கும் அனுப்பினோம். அப்படி அவர் இதுவரை செய்த பிரசாரங்களாவன :— (1) ஆசார்ய ஸ்வாமிகள் சென்னை உபந்யாஸங்கள் என்கிற புத்தகத்தை வெளியிடுவித்து அதில் ஸ்ரீராமாநுஜர் முதலான பூர்வாசார்யர்களையும் வைஷ்ணவ மதத்தையும் தாக்கியெழுதியிருப்பது. (2) (விகாரி ஐப்பசியில்) நரகாசுரனைக் கொன்றதால் கண்ணனுக்கு வீரஹத்தி தோஷம் வந்தது, ராவணனைக் கொன்றதால் ராமனுக்கு ப்ரஹ்மஹத்திதோஷம் வந்தது என்று பிரசாரம் செய்தது. (3) விஷ்ணுவை தூஷிக்கும் எம்பாவையைப் பிரசாரம் செய்யும் பாவமாநாடுகளைக் கோயில் அதிகாரிகளைத் தூண்டிவிட்டுக் கோயில் பணத்தைச் செலவிடச் செய்து வைஷ்ணவர்களின் ஆக்ஷேபத்தையும் பொருட்படுத்தாமல் விஷ்ணு கோவில்களிலேயே பல வருடங்களாக நடத்தச்செய்தது. (வைஷ்ணவர்கள் ஒருமுகமாகப் பல வருடங்கள் எதிர்த்தபிறகு படிப்படியாகப் மாநாடுகள் ஓய்ந்தன.)

http://acharya.org

(4) அநந்தகிருஷ்ண சாஸ்திரி, போலகம் ராம சாஸ்திரி, ஜகதீஶ்வரசாஸ்திரி முதலானோரைத் தூண்டிவிட்டு விசிஷ்டாத்வைதத்தையும், ஸ்ரீராமாநுஜர் முதலான ஆசார்யர்களையும் தூற்றும் நூல்களை வெளியிடச் செய்தது. (5) தினமணி, கல்கி முதலான பத்திரிகைகளில் உள்ள தன் அடியார்களைக்கொண்டு விஷ்ணு வைஷ்ணவ தூஷணக் கட்டுரைகளை இடைவிடாமல் வெளியிடச் செய்தது. (6) 12—2—61 'கல்கி'யில் விஷ்ணுவானவர் சிவலிங்கத்தின் அடியைக் காணாமல் தோல்வியுற்றார் என்று எழுதினது. (7) திருப்பாவை திருக்குறளை தூஷித்திருக்கிறது என்னும் பிரசாரத்தைத் தொடங்கி பங்கப்பட்டது. (8) திருப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமாலை சிவன், சக்தி முதலான பல தெய்வங்களும் கலந்ததொரு கலந்த கட்டியென்று பிரசாரம் செய்தது. (9) வருடாவருடம் 'ஆகம ஸதஸ்' நடத்தி வைஷ்ணவர்கள் சிலருக்குப் பணம் கொடுத்து அவர்களை வைஷ்ணவ மதத்துக்கு விரோதமாகப் பேசச்செய்தது. இப்படி மற்றும் பல. இப்பிரசாரங்களனைத்தும் நம்மால் தக்க ஆதாரங்களைக் காட்டி ஸுதர்சனத்தில் மறுக்கப்பட்டன. பீடாதிபதியும் அவரைச் சார்ந்தவர்களும் யாதொரு பதிலையும் கூறாமல், மேன்மேலும் இத்தகைய பொய்ப்பிரசாரங்களையே செய்து வந்தனர்.

9. நம்முடைய தொடர்ந்த மறுப்புக்களின் விளைவாக தினமணி, விகடன் போன்ற சில பத்திரிகைகளில் இந்தப் பொய்ப் பிரசாரங்களை வெளியிடுவது பெரும்பாலும் நின்றுவிட்டது. இந்நிலையில் தினமலர் பத்திரிகையில் 14—8—2001 முதல், "அறிவோமா ஆன்மீகம்" என்ற தலைப்பில் "அரியும் சிவனும் ஒன்னு", "சிவவிஷ்ணு அபேதம்" முதலான தலைப்புகளில் காமகோடி பெரிய சங்கராசார்யரின் வாதங்கள் சுமார் ஒருமாத காலமாகத் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. "விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு" என்னும் வாதமும் இக்கட்டுரைகளில் அடிக்கடி வெளியிடப்படுகிறது. இந்த வாதங்களனைத்தும் நாற்பது வருடங்களுக்கு முன் நம்மால்

http://acharya.org

வெளியிடப்பெற்ற ''ஸாத்விக விஜயம்'' என்னும் நூலிலும், அதைத் தொடர்ந்து வெளியிடப்பெற்ற கட்டுரைகளிலும், ஸுதர்சனர் பதில்களிலும் வேதங்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், சங்கரர் ராமாநுஜர் முதலான ஆசார்யர்களுடைய நூல்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் காட்டி மறுக்கப்பட்டுள்ளன. நாம் காட்டிய பிரமாணங்களுக்கு எந்த பதிலையும் கூறாமல் வெறும் யுக்தி வாதங்களையும், விதண்டாவாதங்களையும், பொய் வாதங்களையும் செய்து காமகோடிப் பெரிய பீடாதிபதி வெளியிட்ட ''தெய்வத்தின் குரல்'' என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை தினமலர் வெளியிட்டு வருகிறது. தினமலர்ப் பத்திரிகை பொதுமக்களுக்கு அரசியல் செய்திகளையும், உலகச் செய்திகளையும் தெரிவிப்பதற்காக வெளியிடப்படுவது. பாமர மக்கள் விரும்பும் சினிமா நடிகைகளின் அரை நிர்வாணப் படங்களையும் அவர்களைப் பற்றிய கிசுகிசுச் செய்திகளையும் வெளியிடுவதன் மூலம் லக்ஷக்கணக்கான மக்களை வாசகர்களாகக் கொண்டுள்ளது. அரசியல் திரைப்படச் செய்திகளை வெளியிடுவதோடு நிறுத்திக்கொள்ளாமல், 'பக்தி மலர்' என்னும் புதுப்பகுதியிலும் 'அறிவோமா ஆன்மீகம்' தலைப்பிலும் தினமலர் நாளிதழ், வாரமலர் முதலானவற்றில் மத சம்பந்தமான கட்டுரைகளையும் வெளியிட்டு மக்களைக் குழப்பி வருகிறது. ஒரு சில நூற்றாண்டுகளுக்குள் ஒவ்வொரு சைவத் தலத்துக்குப் பெருமை உண்டாக்குவதற்காகக் கற்பிக்கப்பட்ட ஸ்தல வரலாறுகளையும் வெளியிட்டு வருகிறது. இவை பெரும்பாலும் விஷ்ணுவையும் அவருடைய அவதாரங்களான நரசிங்கன், ராமன், கிருஷ்ணன் முதலான மூர்த்திகளையும் இழிவுபடுத்தும் கதைகளாகவே இருக்கின்றன. இவற்றை வெளியிடுவதன் மூலம் வைஷ்ணவர்களின் மனத்தை மிகவும் புண்படுத்தி வருகிறது இப்பத்திரிகை. உலகச் செய்திகளை வெளியிடுவதால் வைஷ்ணவர்கள் உள்ளிட்ட எல்லாப் பொதுமக்களும் இதை வாங்கிப் படிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, விஷ்ணுவையும் அவனுடைய அவதாரங்களையும் இழிவுபடுத்தும் அண்மைக்காலத் தல புராணக் கட்டுக்கதைகளை வெளியிட்டு வைஷ்ணவர்களின் மனத்

http://acharya.org

தைப் புண்படுத்துவது எவ்வகையிலும் நியாயமல்ல. அபத்தமான தல புராணக் கதைகளை வெளியிடுவதன் மூலம் அறிவாளிகளின் சிரிப்புக்கே இப்பத்திரிகை இலக்காகி வருகிறது. தெய்வங்களை இழிவுபடுத்துவதினால் நாத்திகம் தழைத்தோங்குவதற்கே இத்தகைய கட்டுரைகள் வழி வகுக்கின்றன. வேதங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும், சங்கரர், இராமாநுஜர், மத்வர் முதலான ஆசார்யர்களின் பாஷ்யங்களிலும் பரம்பொருளாகக் கொண்டாடப்படும் விஷ்ணுவையும், வைணவ மதக் கொள்கைகளையும் தாழ்த்திப்பேசும் கற்பனைக் கதைகளை வெளியிடுவதுபோல் சிவனைத் தாழ்த்திக் கூறும் கதைகளை இப்பத்திரிகை வெளியிடுவதேயில்லை. இதுபோல் கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான மதக் கருத்துக்களையும், கடவுள்களையும் தாழ்த்தியும் திரித்தும் பேசினால் என்ன ஆகும்? என்பதை இப்பத்திரிகை நிர்வாகிகள் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். வைஷ்ணவர்கள் ஸாத்விகர்களாகவும் சிறுபான்மையினராகவும் இருப்பதால், அவர்களுடைய தெய்வத்தையும் மதக்கொள்கைகளையும் தாக்கி எழுதுகிறது என்று விளங்குகிறது. சிவவிஷ்ணு சமரசவாதம் என்னும் போர்வையில் 'விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு' முதலான விஷ்ணு த்வேஷக் கருத்துக்களை இடைவிடாமல் வெளியிட்டு வருவதிலிருந்து பாமர வைஷ்ணவர்களை மூளைச் சலவை செய்து வைஷ்ணவ மதத்தை அழிப்பதையே முக்கியக் குறிக்கோளாக இப்பத்திரிகை கொண்டுள்ளது என்று விளங்குகிறது. மதங்களிடையே ஒற்றுமை விளைக்க வேண்டுமென்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் பரஸ்பர சகிப்புத் தன்மையே அந்த ஒற்றுமையை விளைக்குமேயொழிய 'சிவனும் விஷ்ணுவும் ஒன்று, சைவமும் வைணவமும் ஒன்றே' முதலான பிரசாரங்களால் போலிச் சமரசம் பேசி ஒற்றுமையை விளைக்க முடியாது. இவர்களுடைய இப்போலிச் சமரச வாதத்தின் விளைவாக இவர்கள் செய்யும் சிவவிஷ்ணு சமரசவாதம் "கிறிஸ்துவம் இஸ்லாம் இந்துமதம் ஆகிய எல்லா மதங்களும் ஒன்றே. எம்மதமும் சம்மதமே" என்னும் வாதமாக விரிவடைந்து

http://acharya.org

இந்த நாட்டில் மிகவும் பரவிவிட்டது. இதன் விளைவாக 'இந்து மதம்' என்னும் பொதுப்பெயரில் அடக்கப்பட்ட சைவர் வைணவர் ஆகிய இந்துக்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் மதங்களில் நம்பிக்கையற்றவர்கள் ஆகிவிட்டார்கள். கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களும் இவர்களுடைய போலிச் சமரச வாதங்களில் மயங்காமல் தங்களுடைய மதங்களில் உறுதியான நம்பிக்கையுடன் வாழ்கின்றனர். இந்நிலை நீடித்தால் இந்து மதத்திற்குள் அடங்கிய சைவம் வைணவம் முதலான மதங்கள் படிப்படியாக நலிவடையும். கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான மதங்களே மேலோங்கி நிற்கும் காலமும் நாளடைவில் வர வாய்ப்புண்டு. இதை உணர்ந்து தினமலர் போன்ற பத்திரிகைகள் போலிச் சமரச வாதத்தையும் விஷ்ணுவைத் தாக்கிப் பேசும் தலபுராணக் கட்டுக்கதைகளையும் வெளியிடுவதை நிறுத்தும் என்று நம்புகிறோம். இனி 'விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு', 'சிவவிஷ்ணு அபேதம்', 'அரியும் சிவனும் ஒன்னு' முதலான தினமலர்க் கட்டுரைகளை ஆராய்ந்து அவற்றின் பொய்ம்மையை விளக்குவோம்.

விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு என்னும் வாதத்தின் பொய்ம்மை.

10. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்றும் அறிவற்ற மூலப்ரக்ருதியின் குணங்கள் என்று நம்முடைய வேத சாஸ்திரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூலப்ரக்ருதிக்கே நிறம் முதலான குணங்கள் கிடையாது. ஆகையால் 'ஸத்வம்-வெளுப்பு, ரஜஸ்-சிவப்பு, தமஸ்-கருப்பு' 'கறுப்பு நிறமுடைய விஷ்ணு தமோகுணமுடையவர், சிவப்பு நிறமுடைய பிரம்மா ரஜோகுணமுடையவர், வெளுப்பு நிறமுடைய சிவன் ஸத்வ குணமுடையவர்' என்னும் பீடாதிபதியின் வாதத்திற்கு அடிப்படையே இல்லை. இதை ஒப்புக்கொண்டால் வெளுப்பு நிறமுடைய வெள்ளையர்களெல்லாம் ஸத்வ குணமுடையவர்கள் என்றும், கறுப்பு நிறத்தை மிகுதியாகக் கொண்ட நம்நாட்டவர்கள் எல்லாம் தமோ குணமுடையவர்

http://acharya.org

கள் என்றும் சொல்லவேண்டிவரும். நமது ஸாத்விக விஜயத்தில் பீடாதிபதியைக் குறித்து இக்கேள்வி கேட்கப்பட்டது. அவர் எந்த பதிலேயும் சொல்லவில்லே. அவருடைய கட்டுரையை வெளியிடும் தினமலர் இக்கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறது என்பது உலகிற்குத் தெரியவேண்டும்.

11. ஸத்வ ரஜஸ் தமோ குணங்களைப் பற்றி ப₄க₃வத் கீதையில் ப₄க₃வான் கிருஷ்ணனல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அந்த ஶ்லோகங்களும் அவற்றின் பொருளும் பின்வருமாறு :

ஸத்வம் ரஜஸ்தம இதி கு₃ணு: ப்ரக்ருதிஸம்ப₄வா: |
நிப₃த்₄நந்தி மஹாபா₃ஹோ தே₃ஹே தே₃ஹிநமவ்யயம் ||
தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம |
ஸுக₂ஸங்கே₃ந ப₃த்₄நாதி ஜ்ஞாநஸங்கே₃ந சாநக₄ ||
ரஜோ ராக₃ாத்மகம் வித்₃தி₄ த்ருஷ்ணுஸங்க₃ஸமுத்₃ப₄வம் |
தந்நிப₃த்₄நாதி கௌந்தேய கர்மஸங்கே₃ந தே₃ஹிநம் ||
தமஸ் த்வஜ்ஞாநஜம் வித்₃தி₄ மோஹநம் ஸர்வதே₃ஹிநாம் |
ப்ரமாத₃ாலஸ்ய நித்₃ராபி₄ஸ் தந்நிப₃த்₄நாதி ப₄ாரத ||
ஸத்வம் ஸுகே₂ ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி ப₄ாரத |
ஜ்ஞாநமாவ்ருத்ய து தம: ப்ரமாதே₃ ஸஞ்ஜயத்யுத ||
ரஜஸ் தமஶ்சாபி₄பூ₄ய ஸத்வம் ப₄வதி ப₄ாரத |
ரஜஸ் ஸத்வம் தமஶ்சைவ தமஸ்ஸத்வம் ரஜஸ் தத₂ா ||
ஸர்வத்₃வாரேஷு தே₃ஹேऽஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே |
ஜ்ஞாநம் யத₃ா தத₃ா வித்₃யாத் விவ்ருத்₃த₄ம் ஸத்வமித்யுத ||
லோப₄: ப்ரவ்ருத்திராரம்ப₄: கர்மணுமஶம: ஸ்ப்ருஹா |
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்₃தே₄ குருநந்த₃ந ||
அப்ரகாஶோऽப்ரவ்ருத்திஶ்ச ப்ரமாதே₃ா மோஹ ஏவ ச |
தமஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்₃தே₄ குருநந்த₃ந ||
யத₃ா ஸத்வே ப்ரவ்ருத்₃தே₄ து ப்ரளயம் யாதி தே₃ஹப்₄ருத் |
ததே₃ாத்தமவித₃ாம் லோகாநமலாந் ப்ரதிபத்₃யதே ||
ரஜஸி ப்ரளயம் க₃த்வா கர்மஸங்கிஷு ஜாயதே |
தத₂ா ப்ரலீநஸ் தமஸி மூட₄யோநிஷு ஜாயதே ||

http://acharya.org

கர்மணஸ் ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம் ப₄லம்।
ரஜஸஸ்து ப₂லம் து₃:க்க₂ம் அஜ்ஞாநம் தமஸ: ப₂லம் ||
ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப₄ ஏவ ச |
ப்ரமாத₃மோஹௌ தமஸோ ப₄வதோऽஜ்ஞாநமேவ ச ||
ஊர்த்₄வம் க₃ச்ச₂ந்தி ஸத்வஸ்தா₂ மத்₄யே திஷ்ட₂ந்தி ராஜஸா:।
ஜக₄ந்யகு₃ணவ்ருத்திஸ்தா₂ அதோ₄ க₃ச்ச₂ந்தி தாமஸா: ||

[கீதை 14-5...18]

[(ஸ்வரூபத்தில்) இந்த குண ஸம்பந்தமற்றவனாய், தேஹத்தி லிருப்பவனான ஜீவனை, ப்ரக்ருதியிலுள்ள ஸத்வரஜஸ்தமஸ் ஸுக்கள் தேஹத்தில் கட்டுப்படுத்துகின்றன. அவற்றில், நிர்மலமாயிருக்கிறபடியால் ஸத்வம் ப்ரகாசஸுகங்களுக்குக் காரணமாயிருப்பது; ஆரோக்கியத்துக்குக் காரணமாயிருப்பது. ஸுகத்தில் பற்றையும், ஞானத்தில் பற்றையும் இவனுக்கு ஏற்படுத்தி இவனைக் கட்டுகிறது. (சப்தாதி விஷயங்களில்) ஆசையையும், (புத்ரமித்ராதிகளிடம்) பற்றையும் உண்டு பண்ணும். (ஆண் பெண்களிடையேயுள்ள) காமத்துக்குக் காரணமாயிருப்பதென்று ரஜோ குணத்தை அறிவாயாக. அது தேஹத்திலிருக்குமிவனைக் கிரியைகளில் பற்றை உண்டுபண்ணுவதன் மூலம் கட்டுப்படுத்துகிறது. விபரீதஜ்ஞானத்தாலுண்டாகும் தமோகுணம், எல்லா ஜீவர்களுக்கும் விபரீதஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறது. அந்தத்தமம் கவனமின்மை, சோம்பல், தூக்கம் ஆகியவற்றை உண்டுபண்ணுவதன்மூலம் ஜீவனைக் கட்டுப்படுத்துகிறது. ஸத்வம் ஸுகத்தில் மூட்டுகிறது; ரஜஸ்ஸு கர்மத்தில் மூட்டுகிறது. தமம் அறிவை மறைத்து, கவனமின்மையில் மூட்டுகிறது; ஜீவர்களுக்கு ஒரு காலத்தில் ரஜஸ்தமஸ்ஸுக்களை அமுக்கிக் கொண்டு, ஸத்வம் தலையெடுக்கிறது; மற்றொரு சமயம் ஸத்வதமங்களைக் கீழ்ப் படுத்தி ரஜஸ்ஸு விஞ்சி நிற்கிறது; பிறிதொரு பொழுதில் ஸத்வ ரஜஸ்ஸுக்களைக் கீழ்ப்படுத்தித் தமம் தலைதூக்கி நிற்கிறது.

http://acharya.org

(அந்தந்தக் காலங்களில் ஜீவனை முறையே ஸத்வ குணமுள்ளவன்; ரஜோகுணமுள்ளவன்; தமோகுணமுள்ளவன் என்கிறோம் என்று கருத்து.) எல்லா இந்திரியங்களிலும் எப்போது சேதனனிடம் அறிவு உண்டாகிறதோ, அப்போது ஸத்வ குணம் வளர்ந்துள்ளதென அறியலாம். திரவியலோபமும், செயல்படும் தன்மையும், பலஸாதனமான கர்மங்களில் தொடக்கமும், இந்திரியஜயமின்மையும், விஷயேச்சையும் ரஜோகுணம் விஞ்சியுள்ளபோது உண்டாகின்றன. அறிவின்மையும், சோம்பலும், கவனமின்மையும், விபரீதஜ்ஞானமும் தமம் அதிகமாயுள்ளபோது ஏற்படுகின்றன. ஸத்வம் விஞ்சியிருக்கும்போது ஜீவன் மரணமடைந்தால், ஆத்மஜ்ஞானமுடையவர்கள் அடையும் மலமற்ற உலகங்களை அடைகிறான். ரஜோகுணம் அதிகமாயிருக்கையில் இறந்தானாகில், பலஸாதன கர்மங்களில் பற்றுள்ள குலங்களில் பிறக்கிறான். தமம் மூடியிருக்கும்போது முடிந்தவன் (நாய், பன்றி முதலிய) மூடயோனிகளில் பிறக்கிறான். நல்ல கருமத்தினால் ஸத்வ குணத்தாலுண்டாகும் துக்கமற்ற பலனுண்டாகிறது. ரஜஸ்ஸினால் துக்கமாகிற பலனும் தமத்தினால் அறிவின்மையும் ஏற்படுகின்றன. ஸத்வத்தினால் அறிவுண்டாகிறது. ரஜஸ்ஸினால் உலோபமும், தமத்தினால் அஸத் கர்மப்ரவ்ருத்தியும், விபரீத அறிவும், அறிவின்மையும் (படிப்படியாக) உண்டாகின்றன. ஸத்வகுண நிஷ்டர்கள் உயரேயுள்ள உலகங்களுக்குச் செல்கின்றனர். ராஜஸர்கள் இடையிலிருக்கின்றனர்; தாமஸர்கள் மேலும் மேலும் இழிதொழில்களைச் செய்து கீழ்நோக்கிப் போகின்றனர்.]

12. "ப்ராக்ருதமான இந்த முக்குணங்களுமற்றவன் பரமபுருஷனான நாராயணன்; சுத்தஸத்வமயமான திருமேனியையும் ஸ்தானத்தையுமுடையவன், ஸத்வ குணத்திற்கு ப்ரவர்த்தகன் பரமபுருஷனே" என்னும் அர்த்தங்களை ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் அனைத்தும் ஒருமிடறாக (ஏக கண்டமாக) பறை சாற்றுகின்றன. இதில் வைதிகர்கள்

http://acharya.org

எவர்க்கும் இதுவரையில் கருத்து வேறுபாடு இருந்ததேயில்லை. அத்வைதிகளும் சைவர்களுங்கூட அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில் இதை ஆக்ஷேபிக்க முற்பட்டதில்லை. இதனாலேயே, **"க: ஸ்ரீ: ஶ்ரிய:"** [திருவுக்கும் திருவாகியவன் யார்?] என்ற ஆளவந்தார், அடுத்தபடியாக **"பரமஸத்வஸமாஶ்ரய: க:** [பரம ஸத்வத்திற்கு இருப்பிடம் (அல்லது ப்ரவர்த்தகன்) யார்?] என்று பகவத் பரத்வத்தை நிஸ்ஸந்தேஹமாக நிலை நாட்டித்தரும் அடையாளமாக இதைப் பேசியருளினர். லக்ஷ்மீநாதன் யாரென்பதில் எப்படிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாதோ, அப்படியே இதிலும் அது இருக்க இடமேயில்லை என்று அவ்வாசார்யப் பெருமானுடைய கருத்து. இப்படிப்பட்ட விஷயத்தை மாறுபடுத்தி, பரமபுருஷன் தமோ குணமுள்ளவன் என்று பீடாதிபதி பிரசாரம் செய்ததற்கு ப்ர மாணம் என்ன என்று நாம் கேட்டோம். விஷ்ணு கறுப்பு நிறமுடையவராகையால் அவர் தமோகுணமுடையவர் என்றும், சிவன் வெளுப்பு நிறமுடையவராகையால் அவர் ஸத்வ குணமுடையவர் என்றும் கந்த புராணத்தில் ஸூத ஸம் ஹிதையில் கூறியுள்ளது என்று தம் சிஷ்யர் மூலம் பீடாதிபதி பதில் அனுப்பினர்; நாம் ஸாத்விக விஜயத்தில் புருஷஸூக்தத் தில் **':தமஸ: பரஸ்தாத்"** என்று தமோ குணத்திற்கு அப் பாற்பட்டவன் அவன் என்றும், விஷ்ணு ஸூக்தத்தில் **"ரஜஸ: பராகே"** என்று ரஜோகுணத்திற்கு அப்பாற்பட்டவன் அவன் என்றும் வேதங்களில் கூறியிருப்பதற்கு நேர் மாறாக இருக்கும் இந்தத் தாமஸ புராண வசனம் ஏற்கத்தகாதது என்று காட்டினோம். அத்துடன் மைத்ராயணீய உபநிஷத், ஶ்வேதாஶ் வதர உபநிஷத், சதபதப்₃ராஹ்மணம், ஸுபாலோபநிஷத், மனுஸ்ம்ருதி, ஸ்ரீராமாயணம், மஹாபா₄ரதம், விஷ்ணு புராணம், வராஹ புராணம், லிங்க புராணம், ஸ்ரீமத்₃ பா₄க₃வத புரா ணம், பாத்₃ம புராணம் முதலான ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களை எடுத் துக்காட்டி இவற்றுக்கு மாறான, **"எந்தப் புளுகும் கந்தபுரா ணத்தில்"**என்றுபொதுமக்களிடம் பிரசித்திபெற்ற கந்தபுராண வாக்கியம் நல்லோர்களால் ஏற்கத் தக்கதன்று என்று நிலை

http://acharya.org

நாட்டி பீடாதிபதிக்கும் அனுப்பி, ஆயிரக்கணக்கான ஆத்திக அறிவாளிகளுக்கும் இலவசமாக அனுப்பினோம். பல ஆத்திகர்கள் இதைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதினர். இதைப் பாராட்டி சென்னை ஆரோக்ய ஆஶ்ரமத்தலைவர் நமக்கு "வித்யா விசாரத" என்னும் விருதை அளித்தார். பீடாதிபதியாலோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களாலோ, **"விஷ்ணுவே பரமஸத்வ மூர்த்தி"** என்பதற்கு ஆதாரமாக நாம் காட்டிய ப்ரமாணங்களுக்கு மறுப்பும் சொல்லப்படவில்லை. "விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு" என்னும் வாதத்திற்குக் கந்தபுராணம் தவிர வேறெந்த ஆதாரமும் காட்டப்படவுமில்லை.

13. ஸாத்விக விஜயத்தை 1—1—1958 ஸ்ரீவைகுண்ட ஏகாதசியன்று பெற்ற காமகோடி பீடாதிபதி அதற்கு மூன்றாவது நாளான 4—1—1958 அன்று ஓர் உபந்யாஸம் செய்து எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடுவித்தார். அதில் ஸாத்விக விஜயத்தில் கூறப்பட்ட சில விஷயங்களுக்குப் பதில்கூற முற்பட்டார். ஸுதர்சனம் அடுத்த இதழில் 'ஸாத்விக விஜய ஸந்தேஹ பரிகாரம்' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதி, (1) மஹாகவிகளின் வாக்கே வேதவாக்கு. (2) ஸ்ம்ருதிகள் எல்லாவற்றுக்கும் மூலச்ருதி உண்டு. (3) எல்லா தெய்வங்களும் ஒன்று. (4) விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு முதலான பீடாதிபதியின் உபந்யாஸக் கட்டுரையில் வெளியிடப்பட்ட வாதங்களுக்குப் பதில் எழுதி அவருக்கு அனுப்பினோம். ஸாத்விக விஜய ஸந்தேஹ பரிகாரத்தையும் இணைத்து ஸாத்விக விஜய ஸர்வஸ்வம் என்னும் நூலாக 1958-ல் முதல் பதிப்பும், 1966-ல் இரண்டாவது பதிப்பும் வெளியிட்டோம். அத்துடன் நமது விஷ்ணுசித்த விஜயம் இரண்டாம் பாகத்திலும் இவற்றை இணைத்து அதிலும் இரண்டு பதிப்புகளை வெளியிட்டுள்ளோம். இதனால் பல்லாயிரக்கணக்கான ஆத்திகர்கள் இவற்றைப் பெற்று, "விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு" என்னும் பீடாதிபதியின் கூற்றின் பொய்ம்மையை உணர்ந்து

http://acharya.org

பாராட்டி வருகிறார்கள். பீடாதிபதியும் இதற்கு எந்தப் பதிலும் உரைக்க இயலாமலே காலமானார். இப்படியிருக்கும் போது, தினமலர் 'விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு' என்னும் இந்த அடிபட்டு மாண்டொழிந்து விட்ட வாதத்தைத் திரும்ப அச்சிட்டு வருகிறது. இது சிறுவர்கள் செத்த பாம்பைக் காட்டிப் பயமுறுத்துவதை ஒக்கும்.

14. 'சிவனுடைய நிறம் வெளுப்பு' என்று இக்கட்டுரைகளில் அடிக்கடி எழுதப்படுகிறது. அதற்கு எந்த ப்ரமாணமும் காட்டப்படவில்லை. *ஸாத்விக விஜயத்தில் (பக்கம் 9-ல்) நாம் காட்டியிருக்கும் விஷ்ணுபுராண வாக்கியத்தில் **''குமாரோ நீலலோஹித:''** என்று சிவன் பிறக்கும்போதே கறுப்பும் சிவப்பும் கலந்த நிறமுடையவனாகத் தோன்றினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்தாம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள ஸுபாலோபநிஷத் வாக்கியத்தில், **''க்ரோதஜோ ருத்ர:''** [பிரமனின் கோபத்தினால் ருத்ரன் உண்டானான்.] என்று சொல்லியிருப்பதிலிருந்து கோபத்தால் உண்டான உருத்திரன் ரஜஸ் தமோ குணங்களை உடையவனே என்று விளங்குகிறது. எட்டாம் பக்கத்தில் எடுக்கப்பட்ட சுக்ல யஜுர் வேத சதபதப்ராஹ்மண வாக்கியத்தில் **''அநபஹதபாப்மா வா அஹம்''** என்று சிவன் பிறக்கும்போதே தன்னைப் பாபம் நீங்கப் பெறாதவன் என்று கூறியிருப்பதால் ரஜஸ்தமோகுணங்களை உடையவனே என்பது தன்னடையே தேறும். கிருஷ்ண யஜுர் வேதத்தில் ஸம்ஹிதை ஆறாவது காண்டம் இரண்டாவது ப்ரச்நத்தில் சிவன் திரிபுரங்களை எரித்ததை விளக்கும் போது **''ருத்ரோ வை க்ரூர:''** [ருத்ரனே கொடியவன்.] என்று க்ரூர தேவதையாக வர்ணிக்கப்பட்டிருக்கையாலும் ருத்ரன் ரஜஸ்தமோகுணங்கள் மிக்கவன் என்று விளங்குகிறது. நாயன்மார்களில் ஞான சம்பந்தர் தம் திருநாரையூர்ப் பதிகத்தின் இறுதிப் பாடலில், ''எரியுருவண்ணமாய உருவானை''

---

* **76 பக்கமுள்ள 'ஸாத்விக விஜய ஸர்வஸ்வம்' ரூ. 6/- விலையில் ஸுதர்சனம் காரியாலயத்தில் கிடைக்கும்.**

http://acharya.org

என்றும், சுந்தரமூர்த்தி நாயனர் தம் திருநாட்டுத்தொகை 9-ம் பாட்டில், "தழலுமேனியன் தையலோர் பாகம் அமர்ந்த வன்" என்றும் சிவனை எரிக்கும் நெருப்புப் போன்ற நிற முடையவன் என்றே கூறியிருக்கிறார்கள். ஆழ்வார்களும் "ஒன்று செந்தீ" [திருநெடுந்தாண்டகம்2] "உருவம் எரி" [முதல் திருவ. 5] என்று சிவனை நெருப்பு வண்ணனாகவே பேசியிருக்கிறார்கள். ஆகையால் சிவன் வெளுப்பு என்று பீடாதிபதி அடிக்கடி எழுதுவது ஆதாரமற்றது என்று விளங்குகிறது. விஷ்ணுவுக்கும் கிருதயுகத்தில் வெளுப்பு நிற மென்றும், அடுத்ததான திரேதாயுகத்தில் பொன்னிறம் என் றும், அடுத்ததான துவாபரயுகத்தில் பசுமை நிறமென்றும், அடுத்ததான கலியுகத்தில் நீல நிறமென்றும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. "நிகழ்ந்தாய் பால் பொன் பசுப்புக் கார் வண்ணம நான்கும்" [நான் திருவ. 24]

"பாலினீர்மை செம்பொன் நீர்மை பாசியின் பசும்புறம்
போலும் நீர்மை பொற்புடைத் தடத்து வண்டு
விண்டுலாம்
நீல நீர்மையென்றிவை நிறைந்த காலம் நான்குமாய்
மாலின் நீர்மை வையகம் மறைத்தது என்ன நீர்மையே"

[திருச்சந்தவிருத்தம் 44] முதலான இடங்களில் ஆழ்வார்கள் திருமாலின் நிறம் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ் வொன்றாக இருப்பதாகப் பாடியிருக்கிறார்கள். ஆகையால் நிறத்தைவிட்டு விஷ்ணுவுக்குத் தமோ குணம், சிவனுக்கு ஸத்வ குணம் என்று எழுதி, பல விதண்டாவாதங்களைச் செய் யும பீடாதிபதியின் கற்பனைக் கோட்டைகள் அடியோடு தகர்ந்துவிட்டன. பீடாதிபதிக்கு இந்த நிற மயக்கம் உண் டானதற்கு ஓர் காரணம் உண்டு. ஶ்வேதாஶ்வதர உபநிஷத் தில், மூலப்ரக்ருதியை வர்ணிக்கும்போது ஸத்வ ரஜஸ்தமோ குணங்களுடைய மூலப்ரக்ருதியை "லோஹித சுக்ல க்ருஷ்ணு" [சிவப்பு வெளுப்பு கறுப்பு உடையது.] என்று கூறப்பட்டுள்ளது.] உண்மையில் மூலப்ரக்ருதிக்கோ அதனு டைய ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுக்கோ நிறம் கிடையாதா

http://acharya.org

கையால், வெளுப்பு என்பதை ஸத்வ குணத்திற்கு ஒரு குறி யீடாகவும், சிவப்பு என்பதை ரஜோ குணத்திற்கு ஒரு குறி யீடாகவும், கறுப்பு என்பதைத் தமோ குணத்துக்கு ஒரு குறி யீடாகவுமே கொள்ளவேண்டும். அதைப் புரிந்து கொள்ளா மல் பீடாதிபதி வெளுத்ததெல்லாம் ஸத்வ குணம் என்றும், சிவந்ததெல்லாம் ரஜோகுணம் என்றும், கறுத்ததெல்லாம் தமோகுணம் என்றும் மயங்கி, தம்கட்டுரைகளில் பலகுயுக்தி வாதங்களையும் விதண்டாவாதங்களையும் செய்கிறார். ஸத்வ ரஜஸ்தமோ குணங்களுக்கு நிறமுண்டு என்பதற்கோ இந்த மூன்று குணங்களை உடையவை முறையே வெளுப்பாகவும், சிவப்பாகவும், கறுப்பாகவும் இருக்கும் என்பதற்கோ சாஸ்தி ரங்களில் எந்த ப்ரமாணமும் கிடையாது. இந்த மூன்று நிறத்தையும் உடையவர்கள் உலகில் மூன்று குணங்களை யும் உடையவர்களாகவும், அவர்களிலும் ஒருவர்க்கொருவர் குணங்களில் மிகவும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதையும், வெளுப்பு நிறமுடையவர்கள் பலர் கீதையில் சொல்லப் பட்ட ரஜஸ்தமோ குணங்களின் விளைவுகளைக் கொண்ட வர்களாயிருப்பதையும், கறுப்பு நிறமுடையவர்களில் பலர் கீதையில் சொல்லப்பட்ட ஸத்வ குணத்தின் விளைவுகளைக் கொண்டவர்களாயிருப்பதையும் நாம் உலகில் காண்கிறோம். ஆகையால் இது ஶாஸ்த்ரவிருத்தம் மட்டுமல்ல; ப்ரத்யக்ஷ விருத்தமும் ஆகும். ஆக இவ்வளவால் "கறுப்பு நிறமு டைய விஷ்ணு தமோகுணமுடையவர், வெளுப்பு நிற முடைய சிவன் ஸத்வ குணமுடையவர்" என்று பீடாதி பதி எழுதியது பரம அபத்தமானது, ப்ரமாணங்களுக்கு முரண்பட்டது என்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

'எல்லாத் தெய்வமும் ஒன்னு' 'அரியும் சிவனும் ஒன்னு' என்ற பீடாதிபதியின் வாதத்திற்கு மறுப்பு

15. வேத சாத்திரங்கள் 'நாராயணனுகிற பரம் பொரு ளிடமிருந்து எல்லா தேவர்களும் உண்டாகிறார்கள். அந்தர் யாமியான அவனாலேயே ரட்சிக்கப்படுகிறார்கள். ப்ரளய காலத்தில் அவனுக்குள்ளே ஒடுங்குகிறார்கள்' என்று முழக்க

http://acharya.org

மிடுகின்றன. 'தேவதைகளுக்கெல்லாம் மேலான ஒரு தேவதையே பரம்பொருள்' என்று ஶ்வேதாஶ்வதர உபநிஷத் முழங்கிற்று; தைத்திரீய உபனிஷத் 'ஒரு தேவனே ஆத்மா, மற்ற தேவதைகள் அனைவரும் அவனுடைய அங்கங்கள்' என்று முழங்கிற்று. ஆனால் அதே வேத வேதாந்தங்கள் 'எல்லாம் ப்ரஹ்மமே' என்றும் கூறுகின்றன. அப்படிக் கூறும்போது தேவதைகள் மட்டுமல்லாமல் எல்லா ஆத்மாக்களும் அறிவற்ற பொருள்கள் அனைத்துமே பிரம்மம்தான் என்று கூறுகின்றன. ஆகையால் இந்த அபேத வாக்கியங்களை முக்கியமாக வைத்துக்கொண்டு பொருள்கூற முற்பட்டால் 'எல்லா தேவர்களும் ஒன்று' என்பதுடன் நில்லாது. 'எல்லா ஆத்மாக்களும் அறிவற்ற பொருள்களும் பிரம்மம் தான்' என்று சொல்லவேண்டி வரும். இப்படிக்கொள்வது எல்லாவற்றையும் படைத்து அளித்து அழிப்பது பிரம்மம் என்று கூறும் வேத வாக்கியங்களோடும் முரண்படும்.

16. ஆதிசங்கரர் பேத அபேத வாக்கியங்களிடையே முரண்பாட்டைப் பின்வருமாறு பரிஹரிக்கமுற்பட்டார். அதாவது—''எல்லா ஜீவாத்மாக்களுக்கும், பரமாத்மாவுக்கும் வேறுபாடே இல்லை என்பதை 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' 'தத் த்வமஸி' முதலான அபேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. 'அசேதனப் பொருள்களும் ப்ரஹ்மமும் ஒன்று' என்று சொல்லும் வாக்கியங்கள் 'திருடனாக நினைத்தது உண்மையில் திருடனல்ல; கம்பமே' என்னும் வாக்கியத்திற்போலே, 'உண்மையில் அசேதனப் பொருள்கள் இல்லை; அறிவுமாத்திரமான ப்ரஹ்மமே உள்ளது' என்னும் பொருள் உடையவை. 'ப்ரஹ்மமாகிய நாராயணன் உலகைப் படைத்து அளித்து அழிக்கிறான்' என்று கூறும் வாக்கியங்கள் 'பொய்த்தோற்றமான உலகில் நாராயணன் ஜகத்காரணனாயிருப்பதைக் கூறுபவை' என்றும் கொண்டார். 'எல்லா தேவதைகளும் ஒன்று' 'அரியும் சிவனும் ஒன்னு' என்று கூறும் பீடாதிபதி ஆதிசங்கரரின் ஆத்மைக்ய வாதத்தைக் கைவிட்டு, தேவதைக்ய வாதத்தை ஒரு சமயமும், அதை

http://acharya.org

யும் குறுக்கிக்கொண்டு 'அரியும் சிவனும் ஒன்று' என்னும் வாதத்தை ஒரு சமயமும் செய்வது அவர் ஆதிசங்கரருக்குச் செய்யும் பெரிய துரோகமாகும்.

17. "எல்லா தேவதைகளும் ஒன்று. எல்லா ஆத்மாக்களும் ஒன்று" என்பது ஆதிசங்கரர் தொடங்கி, பீடாதிபதி வரையிலுள்ள அத்வைதிகளின் கொள்கையாகும். இதன் மேல் "இப்படி உபதேசிக்கும் பீடாதிபதி போன்ற ஆசார்யர்களுக்கும் அவ்வுபதேசத்தைப் பெறும் சிஷ்யர்களுக்கும் வேறுபாடு உண்டா? இல்லையா?" என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு, "உண்மை (பாரமார்த்திக) நிலையில் வேறுபாடு இல்லையானாலும், பொய்த் தோற்றமான (வ்யாவஹாரிக) நிலையில் வேறுபாடு உண்டு. நாம் காணும் ஆசார்யன் சிஷ்யன் முதலான வேறுபாட்டுடன் கூடிய உலக நிகழ்ச்சிகள் எல்லாம் இந்தக் கனவுபோன்ற பொய்த் தோற்ற நிலையில் உள்ளன. உண்மை நிலையில் இவை இல்லை" என்று அத்வைதிகள் தம் நூல்களில் பதில் கூறியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் "நாராயணனுகிற புருஷோத்தமனுக்கும், அவனால் படைக்கப்பட்டவனாக வேதவேதாந்தங்களில் சொல்லப்படும் பிரமனுக்கும், அந்தப் பிரமனால் படைக்கப்பட்டவனாக சதபதப்ராஹ்மணம் முதலான வேத பாகங்களில் சொல்லப்பட்ட உருத்திரனுக்கும் வ்யாவஹாரிக நிலையில் வேறுபாடு உண்டு. பிரமன் முதலான தேவர்களைப் படைப்பவனாய், சுத்த ஸத்வத் திருமேனியையுடைய நாராயணனே வ்யாவஹாரிக நிலையில் உள்ள ஸகுண ப்ரஹ்மம். அவனால் படைக்கப்பட்டு அவனை அந்தர்யாமியாகக் கொண்ட பிரமனுகிற தேவன் ரஜோகுணத்தை மிகுதியாகக் கொண்டவனாய் உலகைப் படைக்கிறான். அவனால் படைக்கப்பட்டவனாய் நாராயணனை அந்தர்யாமியாகக் கொண்ட உருத்திரன் ப்ரளய காலத்தில் தமோகுணத்தை மிகுதியாகக் கொண்டு உலகை அழிக்கிறான். இறுதியில் இந்தப் பிரமனும் உருத்திரனும் மற்ற தேவர்களும் எல்லா உலகும், உலகமுண்ட பெருவாயனை நாராயணனால் தனக்குள் அடக்கிக் கொள்ளப்படுகிறார்கள்.

http://acharya.org

இவையனைத்தும் பொய்த்தோற்றமான வ்யாவஹாரிக நிலையில் அநாதிகாலமாக நடந்துகொண்டு வருகிறது. உண்மை நிலையில் எல்லா ஆத்மாக்களும் எந்த வேறுபாடுமில்லாத ஓர் அறிவின் பொய்த்தோற்றங்களே என்பதை உலகிலுள்ள எல்லா ஆத்மாக்களும் உணர்ந்து விட்டால் இந்தப் பொய்த் தோற்றமான கனவுலகம் கலைந்து போகும்'' என்று கூறி யிருக்கிறார்கள். அதனாலேயே ஆதிசங்கரர் தம் பாஷ்யங் களில் நாராயணனையே ஆதிகர்த்தாவாகவும், பரமாத்மாவாக வும் பல விடங்களில் பறைசாற்றியிருக்கிறார். ''இந்த வ்யாவ ஹாரிக நிலையில் பரமாத்மாவான நாராயணன் ரஜஸ் தமோ குணங்களற்ற சுத்த ஸத்வ மூர்த்தியாய் இருப்பவன். அத னால் அவனாலேயே ஸகுண மோக்ஷத்தை அளிக்கமுடியும். ரஜோகுணத்தை மிகுதியாகக் கொண்ட பிரமனாலும், தமோ குணத்தை மிகுதியாகக் கொண்ட உருத்திரனாலும், முக்குண முள்ள மற்ற தேவர்களாலும், ஸகுண மோக்ஷத்தை அளிக்க முடியாது. அவர்களால் தம் பக்தர்களுக்கு அளிக்கப்படும் பிரமனின் உலகம், சிவலோகமாகிய கைலாசம், இந்திரன் முதலான மற்ற தேவர்களின் உலகங்கள் ஆகியவை அனைத் தும் பிரளய காலத்தில் அழிந்து விடுமாகையாலே அவை மோக்ஷமல்ல'' என்று கீதா பாஷ்யம் முதலானவற்றில் ஆதி சங்கரர் மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

18. இந்த ஆதிசங்கரர் முதலான தம்முடைய 'பரமா சார்யர்களின் கொள்கைக்குப் பெரிய துரோகம் இழைத்து, நூற்றுக்கணக்கான ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வாக் கியங்களுக்கு முரணாக, தாமஸ புராணமான கந்தபுராண வசனத்தைக் கொண்டு, ''விஷ்ணு சிவன் ஆகிய இருவருக்கும் தமோ குணமுண்டு ஆகையால் இருவரும் ஒன்றே'' என்று பீடாதிபதி ஸ்தாபிக்க முற்படுவது ஸகல ப்ரமாணங்களுக்கும் சங்கரர் முதலான அவருடைய பரமாசார்யர்களின் வாக்கியங் களுக்கும் முரண்பட்டதாகும். விஷ்ணு சிவன் ஆகிய இரு வருக்கும் தமோ குணமுண்டு என்று இவர் வாதம் செய்வதால் 'இருவரும் ஸகுண ப்ரஹ்மமல்ல' என்பதே இவருடைய

http://acharya.org

கொள்கையென்று தேறும். விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் மேலான மற்றொன்று வழிபடத்தக்க ஸகுண ப்ரஹ்மம் என்று எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை. விஷ்ணு சிவன் ஆகிய இருவருக்கும் மேலானதாகக் கொண்டு வேறு எந்த தேவதைக்கும் அறிவாளிகள் கோவில் கட்டி வழிபடவுமில்லை. ஆகையால் இவர் செய்யும் சிவவிஷ்ணு சமரசவாதம் 'ஜகத் காரணமான ஸகுண ப்ரஹ்மம் அத்வைத மதத்தின்படி இல் லவே இல்லை' என்று சொல்லுவதாகவே முடியும். சிவன் விஷ்ணு ஆகிய இருவரில் ஒருவருக்காவது ரஜஸ்தமோ குணங் கள் அடியோடு இல்லை சுத்த ஸத்வ குணமே உள்ளது என்று ப்ரமாணங்களைக் காட்டி ஒப்புக்கொண்டாலொழிய அத்வைத ஸித்தாந்தத்தின்படி ஏற்கப்படும் ஸகுண ப்ரஹ்மத்தை இல்லை செய்ததாகி விடும். ஆகையால், "தமஸ: பரஸ்தாத்" என்று புருஷ ஸூக்தத்திலும், "ரஜஸ: பராகே" என்று விஷ்ணு ஸூக்தத்திலும் ரஜஸ் தமோ குணங்களுக்கு அப்பாற்பட்ட வனாக முழங்கப்படுபவனும், நூற்றுக்கணக்கான ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வாக்கியங்களிலும் அத்வைதிகள் உள் ளிட்ட ஸகல வைதிகர்களின் நூல்களிலும் ஸத்வ குணமுடைய வன் என்று பறை சாற்றப்படுபவனுமான விஷ்ணுவே ஸகுண ப்ரஹ்மம் என்று ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஆகையால் பீடாதிபதி வலிந்து வாது செய்யும் சிவ விஷ்ணு ஸாம்ய வாதமும், சிவவிஷ்ணு ஐக்ய வாதமும் கண நேரமும் நிலை நிற்கமாட்டாதவை என்று தேறிற்று.

19. தினமலர் கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாக, குயுக்தி வாதங்களும், விதண்டாவாதங்களும், பொய்வாதங் களும் நிறைந்த, மறைந்த பீடாதிபதியின் கட்டுரைகளை, "அறிவோமா ஆன்மீகம்" என்னும் தலைப்பில் வெளியிட்டு வருவதற்குக் காரணம் என்ன என்பதை நமது அன்பர்களுக்கு நாம் விளக்கவேண்டியது அவசியமாகிறது. "திரு. உ. நர சிம்மன், 1/87, இசையகம், தேப்பெருமாநல்லூர் (அஞ்சல்), கும்பகோணம் (வழி) - 612 206. போன் : 95435, 463118" என்னும் விலாசத்திலுள்ள வடகலை ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வைணவ இளைஞர் நீண்ட நாட்களாக தின

http://acharya.org

மலர் பத்திரிகையிலும், வார மலரிலும் விஷ்ணு வைஷ்ணவ துவேஷ ப்ரசாரங்கள் இடைவிடாமல் வெளியிடப்படுவது கண்டு மிகவும் மனம் புண்பட்டு, இக்கட்டுரைகளை ''சங்கரமணி'' என்னும் பெயரில் எழுதிவரும் திரு சங்கரசுப்பிரமணியன், (தினமலர் நாளிதழ், மெர்க்குரி அபார்ட்மெண்ட்ஸ், 42/1, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008. போன்: (0441) 8414121 அல்லது 8414131) என்பவரோடு கடிதங்கள் மூலமும், தொலைபேசி மூலமும், FAX செய்திகள் மூலமும் தொடர்பு கொண்டார். ''அவர் வெளியிடும் வாதங்கள் மிகவும் அபத்தமாய் இருக்கின்றன'' என்றும், சைவ வைஷ்ணவ ஒற்றுமையும், உலகிலுள்ள எல்லா மதங்களுக்கிடையே ஏற்படவேண்டிய ஒற்றுமையும் பரஸ்பர சகிப்புத் தன்மையால் தான் விளையும். அவர்கள் செய்து வரும் சமரச வாதத்தால் நாத்திக வாதமே வலுவடையும். தற்போது நடைபெறும் மதம் மாறி உண்டாகும் கலப்புத் திருமணங்கள் போன்றவையும் 'எல்லா மதமும் ஒன்று' என்னும் சமரசச் சாக்கடையால் விளைந்தது'' என்றும், 'இதனால் இந்து மதத்தை வளர்க்க முடியாது' என்றும், 'நாளடைவில் இந்து மதம் என்னும் பொதுப்பெயரில் அடங்கிய வைதிக மதங்கள் அனைத்தும் அழிந்து விடும்' என்றும் விளக்கினார். அதற்கு சங்கரமணி ''தங்களது கருத்துக்களை வரவேற்கிறேன். மேலும் புதிய கருத்துக்கள் உண்டானால் அதை தினமலரில் வெளியிடுகிறேன்'' என்று தொலைபேசியில் அவரிடம் கூறினார். அவருக்கு உ. நரசிம்மன் நம்முடைய ஸாத்விக விஜய ஸர்வஸ்வம், சங்ககாலத் தமிழர் சமயம் என்னும் இரண்டு நூல்களையும் முழுவதையும் ஸிராக்ஸ் செய்து குரியர் தபால் மூலம் அனுப்பினார். இவற்றைப் பெற்ற பின்பும் தாம் தொலைபேசியில் சொன்னபடி மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் ''விஷ்ணுவுக்குத் தமோ குணமுண்டு'' முதலான மறைந்த காமகோடி பீடாதிபதியின் அடிபட்டுப்போன வாதங்களையே தொடர்ந்து ஒரு மாதமாக தினமலரில் வெளியிட்டு வருகிறார். அந்த வாதங்களும், தினமலரில் பல வருடங்களாக 'சமரச

http://acharya.org

வாதம்' என்னும் போர்வையில் வெளியிடப்படும் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ ப்ரசாரங்களும் அடியோடு பொருந்தாதவை என்றும், "மத சகிப்புத் தன்மையோடு மூரண்பட்ட இவை, சைவ வைஷ்ணவர்களிடையே மனக் கசப்பையே வளர்க்கும்" என்றும் விரிவாக விளக்கி சங்கரமணிக்குத் தெரிவித்து வருகிறார். அவையனைத்தையும் தொகுத்து, "சமரசச் சாக்கடையில் சில புழுக்கள்", "காமகோடியும் கலியுக சிசுபாலர்களும்" முதலான தலைப்புக்கள் கொண்ட தனிப்புத்தகம் ஒன்றையும் வெளியிடுவதாக இருக்கிறார். தொடர்ந்து சங்கரமணி சமரச வாதம் செய்தால் விரைவில் அவரை நேரில் சந்தித்துப் பேசவும் உறுதி கொண்டுள்ளார்.

20. திரு. உ. நரசிம்மனைப் போன்ற இளைஞர்கள் கிளர்ந்தெழுந்து தினமலர் போன்ற பொது ஜனப்பத்திரிகைகள் அசுர ராக்ஷஸ பலத்துடன் பிடிவாதமாகச் செய்து வரும் இந்தப் போலிச் சமரசவாதத்தைக் கண்டிக்கத் துணிவுகொள்ள வேண்டும். நம் வீட்டில் திருடன் ஒருவன் வந்து விலையுயர்ந்த நகைகளை எடுத்துச் சென்றால், திருடன் பலமுள்ளவன் என்னும் காரணத்தால் நாம் குறைந்தபக்ஷம் எதிர்ப்பையாவது காட்டாமலிருப்போமா? தெருவில் செல்லும்போது நம் வீட்டுப் பெண்களைக் காலிகள் கிண்டல் செய்தால், "காலிப் பயல்கள்' என்று சும்மா இருந்து விடுவோமா? குறைந்தபக்ஷ எதிர்ப்பையாவது காட்டுவோமல்லவா! அப்படியே நாம்பொது ஜனப் பத்திரிகைகளில் நம் உயிரினும் மேலான வைணவத்தை அழிப்பதற்காகத் தொடர்ந்து செய்யப்படும் பொய்ப் பிரசாரத்தைக் கண்டிக்கவேண்டும். சோம்பியிருக்கும் வைஷ்ணவர்கள் ஒட்டு மொத்தமாகத் திரண்டெழுந்து அறப்போராட்டத்தை நடத்தினாலொழிய இந்தப்பேடிகள் அடங்கமாட்டார்கள். இளைஞர்களில் பலர் தங்கள் எதிர்ப்புக்குரலை மேலே காட்டியுள்ள சங்கரமணியின் விலாசத்துக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும், நம்முடைய இந்த நூலைப்பெறும் வைணவப் பத்திரிகைகளும், நடுநிலைப் பத்திரிகைகளும் இதை விமர்சனம் செய்து தினமலருக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

http://acharya.org

21. இனி, தினமலரின் வாதங்களின் பொய்ம்மையை விளக்குவதற்காக, "தினமலர் சங்கரமணியைக் குறித்துச் சில கேள்விகள்" என்னும் தலைப்பில் நாம் சில கேள்விகளை வெளியிடுகிறோம். நேர்மையும் மனச்சாக்ஷியும் இருந்தால் அவற்றுக்கு சங்கரமணி தினமலரிலோ அல்லது தனிப்புத்தக மாகவோ பதிலெழுதி வெளியிடட்டும். "சென்னை-4, மயிலாப் பூர், T S V கோயில் தெரு"விலிருந்து வெளிவரும் காமகோடி ஆகஸ்ட் 2001 இதழில், நாம் ஸுதர்சனத்தில் வெளியிட்ட விஷயங்கள் எதற்கும் பதிலளிக் காமல், போலிச் சமரச வாதத்தையே 'கிணற்றுத் தவளைகள்' என்னும் தலைப்பில் எழுதியுள்ளது அந்தப் பத்திரிகையாசிரியர்களும் நேர்மை மனசாக்ஷி உள்ளவராக இருந்தால் இக்கேள்விகளுக்குத் தம் பத்திரிகை வாயிலாக பதிலளிக்கட்டும். அப்படிச் செய்யாவிடில் அவர்கள் எழுதும், பேசும் போலிச் சமரச, போலி ஒற்றுமை வாதங்கள் வைணவ மதத்தை அழிக்கும் நோக்கமுடையவை என்பதை நல்லறிவு படைத்தோர் உணருவார்கள்.

முக்கியமான அறிவிப்பு

22. இந்நூல் 1958-ம் ஆண்டில் காமகோடி பீடாதி பதி சந்திரசேகர சரஸ்வதியை வாயடங்கச் செய்த "ஸாத்விக விஜய ஸர்வஸ்வம்" என்னும் நூலோடு இணைத்து தினமலர் சங்கர மணிக்கும், 'காமகோடி' பத் திரிகைக்கும் அனுப்பப்படுகிறது. மற்றும் எல்லாப் பொது ஜனப் பத்திரிகைகளுக்கும், ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகை களுக்கும், நடுநிலை நின்று விமர்சனம் செய்வதற்காக அனுப் பப்படுகிறது. தினமலரும், காமகோடியும் அச்சிட்டு நம் கேள்விகளுக்குப் பதிலளித்தால் அவை ஸுதர்சனத்தில் ஆராயப்படும். பதிலளிக்காமல் போலிச் சமரச வாதத் தையே தொடர்ந்து செய்து வந்தால் அப்பத்திரிகைகள் நேர்மையற்றவை, மனஸ்ஸாக்ஷியில்லாதவை, முதுகெலும் பற்றவை என்று நடுநிலையாளர்கள் முடிவுகட்டுவார்கள்.

http://acharya.org

தினமலர் சங்கரமணியைக் குறித்துச் சில கேள்விகள்

1. "உலகம் பொய், எல்லா ஆத்மாக்களும் எந்தப் பேதமும் அற்ற (நிர்விசேஷமான) அறிவாயிருக்கும் ப்ரஹ்மமே; அது ஒன்றே மெய். அநாதிகாலமாக அது மாயையால் மறைக்கப்பட்டு உலகமாகிற பொய்த் தோற்றம் உண்டாகிறது" என்னும் சங்கருடைய மாயாவாத மதமும், "சித், அசித், ஈஸ்வரன் என்னும் மூன்று தத்துவங்கள் அடங்கிய உலகம் முழுவதும் மெய்யானது; முறையே சித் அசித் எனப்படும் ஜீவர்களையும் அறிவற்ற ஜடப்பொருள்களையும் தன் சரீரமாகக் கொண்டு ஒன்றாக இணைந்து நிற்கும் நாராயணனே ப்ரஹ்மம். அவனைத் தஞ்சமாகக் கொண்டு சுத்த ஸத்வ மயமான பரமபதத்திற்குச் சென்று ஜீவர்கள் அவனை அநுபவித்துப் பேரானந்தம் அடைந்து கைங்கர்யம் செய்வதே மோக்ஷம்" என்னும் ராமாநுஜரால் நிலை நிறுத்தப்பட்ட விசிஷ்டாத்வைத மதமும், "ஈஸ்வரனாகிற நாராயணன் வேறு. அவன் சொத்தான சேதநாசேதநங்களடங்கிய உலகங்கள் வேறு. இங்குள்ள ஜீவர்கள் பரமபதத்திற்குச் சென்று நாராயணனை அடைவதே மோக்ஷம்" என்னும் மத்வரால் பரப்பப்பட்ட த்வைத மதமும் இந்நாட்டில் நெடுங்காலமாக ஒவ்வொரு பகுதி மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும்போது, நீங்கள் "அரியும் சிவனும் ஒண்ணு' என்னும் மதமே இந்நாட்டில் உள்ளது. அதுவே இந்து மதம். அதை அனைவரும் ஏற்கவேண்டும்" என்று எல்லா மக்களுக்கும் பொதுவான பொதுஜனப் பத்திரிகையில் பிரசாரம் செய்வது நேர்மை சிறிது மற்ற செயலல்லவா?

2. ஸாத்விக விஜய ஸர்வஸ்வத்தில் நூற்றுக்கணக்கான ஸ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வாக்கியங்களைக் காட்டி, "நாராயணனாகிற விஷ்ணு ஒருவனே ரஜஸ் தமோ குணங்களுக்கு அப்பாற்பட்டவன். சுத்த ஸத்வ மயமான திருமேனியை உடையவன்" என்றும், "பிரமன் ரஜோகுணம் மிகுந்த சரீரத்தை உடையவன" என்றும், "சிவன் தமோ குணம் மிகுந்த சரீரத்தை உடையவன்" என்றும் நிலைநாட்டியிருப்பதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?

http://acharya.org

3. "கந்தபுராண ஶ்லோகம் ஒன்றில் விஷ்ணு கறுப்பு நிறமுடையவனாகையால் தமோ குணமுடையவன் என்றும், சிவன் வெளுப்பு நிறமுடையவனாகையால் ஸத்வகுணமுடையவன் என்றும் கூறியிருப்பதே ப்ரமாணம்" என்று சொல்லுவீர்களேயானால், உலகில் வெளுப்பு நிறமுடைய வெள்ளையர்களில் பலர் அணுகுண்டு போட்டு நாடுகளை அழிக்கும் தமோ குணமுடையவர்களாயிருப்பதற்கும், கறுப்பு நிறமுடைய நம் நாட்டவர் பலர் நற்செயல்கள் புரியும் ஸத்வகுணம் மிக்க சான்றோர்களாய் இருப்பதற்கும் என்ன சமாதானம் கூறப் போகிறீர்கள்?

4. ஶாஸ்த்ரங்களில் மூலப்ரக்ருதிக்கும், ஸத்வ ரஜஸ் தமஸ் ஸுக்களாகிற அதன் குணங்களுக்கும் எந்த நிறமும் கிடையாது என்று கூறியிருப்பதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

5. "லோஹித சுக்ல க்ருஷ்ணம்" [ஶ்வேதாஶ்வதரம்] என்னும் உபநிஷத் வாக்கியத்தில் முக்குணங்களுக்கு நிறம் கூறியிருக்கிறது என்பீர்களாகில், நூற்றுக்கணக்கான ஶாஸ்த்ர வசனங்களில் முக்குணங்களுக்கு நிறமில்லை என்று கூறியிருக்கையால், முக்குணங்களை நிறத்தால் குறித்துள்ள இது போன்ற ஒரு சில வாக்கியங்களில் நிறங்கள் முக்குணங்களைக் சாட்டும் வெறும் குறியீடுகளே என்று விளங்கவில்லையா?

6. "சிவன் நெருப்புப் போன்ற நிறமுடையவன்" என்று சாஸ்திரங்களும், சிவ பக்தர்களான நாயன்மார்களும் தெளிவாகச் சொல்லியிருக்கும்போது சிவன் வெளுப்பு நிறமுடையவன் என்று எந்த ப்ரமாணத்தைக் கொண்டு சொல்லுகிறீர்கள்?

7. வைதிகர்கள் அனைவரும் ஓதும் தைத்திரீய நாராயண வல்லியில், "நாராயணனே பரப்ரஹ்மம்; நாராயணனே பர தத்வம், நாராயணனே பரஞ்ஜோதி, நாராயணனே பரமாத்மா இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் நிறைந்திருப்பவன் நாராயணனே"

http://acharya.org

என்று முழங்கப்படுகிறது. மஹோபநிஷத்தில், "நாராயணன் ஒருவனே (ப்ரளய காலத்தில்) இருந்தான். பிரமனும் இல்லை, ஈசானனும் இல்லை" என்று ஓதப்படுகிறது. நாராயணோப நிஷத்தில் "நாராயணனிடமிருந்து பிரமன் உருத்திரன் இந்திரன் முதலான அனைவரும் உண்டாகிறார்கள் என்று ஓதப்படுகிறது. ஸாத்விக விஜயம் பக்கம் 7, 8-ல் காட்டப் பட்ட "சதபதப்₃ராஹ்மண" வாக்கியத்தில், பிரமனுக்கும் உஷஸ் என்னும் அவனுடைய பத்தினிக்கும் உடலுறவு ஏற் பட்டு ருத்₃ரன் பிறந்ததாகவும், பிறக்கும்போதே 'நான் பாபம் நீங்கப் பெறவில்லை' என்று கூறி அவன் அழுததாக வும், அவனுக்கு அழுததால் 'ருத்₃ரன்' என்னும் பெயரையும், ப₄வன், ஶர்வன், ஈஶானன், பசுபதி, பீ₄மன், உக்₃ரன் முதலான பரம்பொருளின் திருநாமங்களையும் அவனுடைய பாபம் நீங்குவதற்காகப் பிரமன் வைத்ததாகவும் முழங்கப்படுகிறது. இதிலிருந்து 'சிவன் பாபம் நீங்கப்பெறாத ஒரு சீவனே' என் றும், அவனுடைய பெயர்கள் முதலில் பரம்பொருளான நாரா யணனின் பெயராகவே இருந்தன என்றும் விளங்கவில்லையா?

8. இப்படி 'பரம்பொருளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு தெய்வத்தின் பெயர்கள் நாராயணனின் நாமங்களே' என்று கூறுவதுபோல் 'நாராயணனின் நாமங்கள் மற்றொரு தெய்வத் தின் பெயர்களே' என்று கூறமுடியாதபடி நாராயண நாமத்தின் 'ண' என்னும் எழுத்து தடுக்கிறது என்பதை "பூர்வபதா₃த் ஸம்ஜ்ஞாயாம் அக₃:" என்னும் பாணினி ஸூத்ரம் காட்டித் தருவதை உங்களால் மறுக்க முடியுமா?

9. முற்கூறிய காரணங்களினாலும் மற்றும் (நம்மால் விஷ்ணுசித்த விஜயத்தில் காட்டப்பட்ட) ஆயிரக்கணக்கான ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வாக்கியங்களாலும் 'நாரா யணன் ஒருவனே பரம்பொருள், பிரமன் சிவன் முதலான அனைத்து தேவதைகளும் முக்குணமுள்ள ஜீவர்களே' என்று விளங்குவதை உங்களால் மறுக்க முடியுமா?

http://acharya.org

10 சிவபுராணம், லிங்கபுராணம் முதலானவை சிவ னைப் பரம்பொருளாகக் காட்டுகின்றனவே என்று கூறுவீர் களாகில், அவை புராணங்களிலேயே தாமஸ புராணங்களாக எடுக்கப்பட்டிருக்கையால் சிவபக்தர்களுக்கு சிவபக்தியை விளைப்பதற்காக உண்மைக்கு மாறான விஷயங்களைச் சேர்த்துச் சொல்லப்பட்ட புராணங்கள் என்று விளங்கவில்லையா?

11. இந்தத் தாமஸ புராணங்களில் விஷ்ணுவுக்குத் தாழ்வையும் சிவனுக்குப் பெருமையையும் கூறும் 'அடிமுடி தேடிய கதை', 'கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை செய்த கதை', 'விஷ்ணுவின் அவதாரங்களைச் சிவன் கொன்ற கதைகள்' முதலான கதைகளில் ஒன்றுகூட நாயன்மார்கள் காலத்திற்கு முற்பட்ட சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் முதலான தமிழிலக் யங்களிலும், காளிதாஸன் முதலான சிவபக்த கவிகள் இயற்றிய வடமொழிக் காவிய நாடகங்களிலும் எடுக்கப்படாததிலிருந்து இவை பிற்காலக் கற்பனைகள் என்று விளங்கவில்லையா?

12. உங்களுக்குப் பரமாசார்யரான ஆதிசங்கரர் தம் மதக்கொள்கைகளை நிலை நாட்டிய உபநிஷத் ப்ரஹ்ம ஸூத்ர கீதா ஸஹஸ்ரநாம பாஷ்யங்களில் இக்கதைகளில் ஒன்று கூட எடுக்கப்படாததிலிருந்து அவராலும் சிவபரத்வ வாதம் ஏற்கப்படவில்லை என்று விளங்கவில்லையா?

13. ஆதிசங்கரர் ப்ருஹதாரண்யகம் (3-7-3) அந்தர் யாமி ப்ராஹ்மணத்தை விவரிக்கும்போது, ஸர்வாந்தர்யாமி யான தேவதையை "ஈஶ்வரோ நாராயணாக்ய:" [நாராய ணன் என்னும் பெயருடைய ஈஶ்வரன்.] என்று கூறுவதன் மூலம் நாராயணன் ஒருவனே ஸகுண ப்ரஹ்மம் என்று காட்டினார். அதற்கு உரையிட்ட வார்த்திககாரர் "வியாஸரின் கொள்கையை அனுஸரித்து சங்கரர், நாராயணன் ஒருவ னையே பரதெய்வமாகக் கொண்டவர்" என்று காட்டினார். இந்த வார்த்திகத்துக்கு உரையிட்ட ஆனந்தகிரி என்னும் பழைய அத்வைதாசார்யரும், "நாராயணன் புராண ஆகமங் களால் மாத்திரம் அறியப்படுபவனல்லன்; புருஷஸூக்தம்

http://acharya.org

முதலான வேதங்களாலும் அறியப்படுபவன்'' என்று உத்₃கோ₄ஷித்திருக்கிறார். ப்₃ரஹ்மஸூத்ரம் [2-2-4] ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில், ''நாராயணன் மூலப்ரக்ருதியைக் காட்டிலும், மேலானவனென்றும், பிரஸித்தனென்றும், பரமாத்மாவென்றும், ஸர்வாத்மாவென்றும் பாஞ்சராத்ரிகள் கூறுவதை நாம் மறுக்கவில்லை. பகவானுன அவனை அபி₄க₃மனம் முதலானவைகளிலே எப்போதும் **வேறு எவரிடமும் நெஞ்சைச் செலுத்தாமல்** ஆராதிப்பதை அவர்கள் ஆதரிப்பதை நாம் தள்ளவில்லை'' என்று ''நாராயணனே பரமாத்மா'' என்றும், 'அவனிடமே **அநந்யப₄க்தி** செய்யவேண்டும்' என்றும் முழங்கியிருக்கிறார். கீ₃தாபா₄ஷ்யத்திலும் தொடங்கும் போதே ''நாராயணன் அண்டம் முதலானவற்றுக்குக் காரணமான மூலப்ரக்ருதிக்கும் மேலானவன்; ஆதிகர்த்தாவான அந்த நாராயணனே கிருஷ்ணனாய் அவதரித்தானன்றோ'' என்று கோஷித்தார். கீதையிலும் ஸஹஸ்ரநாமத்திலும், 'ஈஶ்வரன், மஹேஶ்வரன்' என்று வருமிடங்களிலெல்லாம், 'நாராயணன் என்னும் பெயருடையவன்', 'வாஸுதேவன் என்னும் பெயருடையவன்' என்று விளக்கினார். கீதை 7-23 பா₄ஷ்யத்தில், ''அற்பமான அறிவுடைய அந்ய தேவதாபக்தர்களுக்கு அழிவுள்ள பலன்களே கிடைக்கின்றன. மற்ற தேவர்களை ஆராதிப்பவர்கள் **'தே₃வயஜ:'** என்று கூறப்படுகிறார்கள். அவர்கள் தேவர்களை அடைகிறார்கள். என் பக்தர்கள் என்னை அடைகிறார்கள். இப்படி ஆயாஸம் ஸமானமாயிருந்தபோதிலும் அழிவற்ற பலனைப் பெற என்னை அடையவில்லையே இவர்கள்! இது என்ன கஷ்டம்? என்று வருத்தத்தைக் காட்டுகிறான் ப₄க₃வான்'' என்றும், கீதை 9-23,25 பா₄ஷ்யத்தில், ''மற்ற தேவதைகளைப் பூஜிப்பவர்கள் அஜ்ஞானத்தோடு பூஜிக்கிறார்கள் என்று கருத்து. தேவ பூஜகர்கள் தேவர்களை அடைகிறார்கள்; பித்ருக்களைப் பூஜிப்பவர்கள் பித்ருக்களை அடைகிறார்கள். பூதகணங்களைப் பூஜிப்பவர்கள் விநாயகர், மாத்ருகணம், சதுர்ப₄கி₃நீ முதலான பூ₄தங்களை அடைகிறார்கள். என்னைப் பூஜிக்கும்

http://acharya.org

வைஷ்ணவர்கள் என்னையே அடைகிறார்கள். மற்றவர்களைப் பூஜிப்பவர்களுக்கும் பூஜிக்கும் சிரமம் ஒன்றுயிருந்தபோதிலும் நானே ஸகலயஜ்ஞங்களுக்கும் ஸ்வாமி என்பதை அறியாமையாலே அவர்கள் என்னை அடைவதில்லை. அதனால் அவர்கள் அற்பபலனைப் பெறுகிறார்கள் என்று கருத்து'' என்றும் கல்வெட்டாகக் காட்டியிருக்கிறார் ஆதிசங்கரர். இந்த வாக்கியங்களுக்கு நேர்மாறாகக் காமகோடி பீடாதிபதியும் அவரது சிஷ்யர்களும் ''நாராயணனுக்குத் தமோகுணம், பிரம்மஹத்தி, வீரஹத்தி முதலான தோஷங்கள் உண்டு'' என்றும், ''சிவன் சக்தி விநாயகர் முதலானவர்களே பரம்பொருள்'' என்றும் கூறுவது ஆதிசங்கரருக்கு இழைக்கும் மிகப்பெரிய துரோகமல்லவா?

14. இப்படி ஆதிசங்கரர் தம் கொள்கைகளை விளக்கும் பாஷ்யங்களில் நாராயணனே பரமாத்மா என்றும், பிரமன், உருத்திரன், சக்தி, விநாயகர் முதலான தேவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் மிகத் தெளிவாகக் கூறியிருக்கும் போது, பின் வந்த சங்கர மடாதிபதிகளால் ஒவ்வொரு தெய்வத்திடம் பக்தி உண்டாவதற்காக அவர்களைத் துதித்து எழுதப்பட்ட நூல்களை ஆதிசங்கரர் இயற்றியதாகக் கற்பித்து, 'சங்கரர் ஷண்மதஸ்தாபனம் செய்தார்' என்னும் பெரும் பொய்யைக் கூறிவருவது அவருக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமல்லவா? (சங்கரமணிக்கும், 'காமகோடி'க்கும் இவ்வுண்மையை விளக்கும் 'ஆதிசங்கரர் ஷண்மதஸ்தாபகரா?' என்னும் நமது நூலை அனுப்பியிருக்கிறோம். எவர் வேண்டுமானாலும் ரூ. 2/- தபால் கூலிக்கு அனுப்பி இந் நூலை நம்மிடமிருந்து பெறலாம்.)

15. 'ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிவவிஷ்ணு சமரசவாதிகள்' என்று பீடாதிபதி கூறியதாக தினமலரில் வெளிவந்துள்ளது. ''சிறியார் சிவப்பட்டார்'' முதலான பல இடங்களில் திருமழிசையாழ்வாரும், ''பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே கபாலநன் மோக்கத்துக் கண்டு கொண்மின்'' முதலான பலவிடங்களில் நம்மாழ்வாரும்,

http://acharya.org

மற்ற ஆழ்வார்களும் நாராயணனே பரமாத்மா என்றும், சிவன் அவனுக்கு அடங்கிய ஜீவனே என்றும் கல்வெட்டாகக் காட்டியிருக்கிறார்கள். அடிமுடி தேடிய கதை முதலான தாமஸ புராணக் கதைகளைச் சொல்லி நாயன்மார்களும் விஷ்ணுவைத் தாழ்த்திப் பேசியிருக்கிறார்கள். உண்மை இவ்வாறிருக்கும் போது அவர்கள் சமரசவாதம் செய்தனர் என்று பீடாதிபதி கூறுவது அப்பட்டமான பொய்யல்லவா?

16. சிவன் நடராஜராயிருப்பதாலும் விஷ்ணு ரங்கராஜராயிருப்பதாலும் இருவரும் சமமே என்ற பீடாதிபதியின் கூற்றைப் பிரசாரம் செய்கிறீர்கள். நடமாடும் நடராஜருக்கு அருகிலேயே உயர்ந்த ஸ்தானத்திலே கோவிந்தராஜர் நடராஜனை நோக்கிக் காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருப்பதையும், கோவிந்தராஜனின் கால்பக்கம் நடராஜர் கூத்தாடுவதையும் பார்க்கும்போதே இருவரிலும் கோவிந்தராஜரே பெரியவர் என்று தெரியவில்லையா?

17. தினமலர் 9-9—2001 வாரமலரில் ராமன் லிங்க ப்ரதிஷ்டை செய்வதற்காக அனுமனைச் சிவலிங்கம் கொண்டு வரச் சொன்னதாகவும், கொண்டு வருவதற்குள் ராமன் மணலில் லிங்கம் செய்து பிரதிஷ்டை செய்ததாகவும், அதை வாலால் இழுத்த அனுமனின் வால் அறுந்து விட்டதாகவும் ஒரு அபத்தமான கதையை வெளியிட்டுள்ளீர்கள். வால்மீகி ராமாயணத்தில் இல்லாத இந்தத் தல புராணக் கதை சிறுவர்களும் சிரிக்கக் கூடியதாயிருக்கிறது என்பதை மறுக்கமுடியுமா?

18. "பிள்ளையார் மஹாவிஷ்ணுவின் ஸுதர்சன சக்கரத்தை வாயில்போட்டு விழுங்கிவிட்டார். விஷ்ணு காதைப் பிடித்துக் கூத்தாடியவுடன் பிள்ளையார் சிரித்து வாயிலுள்ள சக்கரம் கீழேவிழ, விஷ்ணு அதை எடுத்துக்கொண்டார்" என்னும் பரம அபத்தமான, சிறுபிள்ளைத் தனமான கதையை எந்த ஆதாரமும் காட்டாமல் பீடாதிபதி எழுதுகிறார். தெய்வங்களை இழிவுபடுத்தும் இத்தகைய கதைகளால் நாத்திகமே வளரும் என்பதை மறுக்கமுடியுமா?

http://acharya.org

19. ஆத்திசூடியில் ஔவையார் "திருமாலுக்கு அடிமை செய்' 'அரனை மறவேல்' என்று இரண்டு தெய்வங்களையும் சமமாக வழிபடும்படி கூறியிருப்பதாக பீடாதிபதி கூறுகிறார். "ஆத்திசூடியில் 'அறனை மறவேல்' [தர்மத்தை மறக்காதே] என்றே ஔவையார் பாடியிருக்கிறார். 'ர'கர எழுத்துக்குரிய வாக்கியம் 'அரவ மாட்டேல்' என்பதே" என்று கூட அவர் அறியவில்லை. இப்படி 'ர'கரத்துக்கும், 'ற'கரத்துக்கும் உள்ள வேற்றுமைகூட அறியாமல், ஆத்திசூடியைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் பீடாதிபதி பேசியதை நீங்கள் வெளியிடுவது அவருக்கு இழிவைத் தருமேயல்லது பெருமையைத் தராது என்று விளங்கவில்லையா?

20. சங்ககாலத்தை ஒட்டி இளங்கோவடிகள் என்னும் சமணரால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில், 'திருவேங்கட முடையான் சங்கு சக்கரமேந்திய செந்தாமரைக்கண்ணனை திருமாலே' என்று பாடப்பட்டிருப்பதாலும், ஆழ்வார்கள் ஒன்பதின்மரும் ஆண்டாளும், அவனை அப்படிப் பாடியிருப்பதாலும், நாயன்மார்கள் முதலான மற்ற தெய்வபக்தர்களில் எவரும் அவனை மற்றொரு தெய்வமாகப் பாடாமலிருப்பதாலும் நெடுங்காலமாக அவன் திருமாலாகவே சேவை சாதிக்கிறான் என்று தெளிவாக விளங்கும்போது, பீடாதிபதி அவனைச் சிவனென்றும், சக்தியென்றும், முருகனென்றும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசியிருப்பதும், நீங்கள் கடந்த ஒருமாத காலமாக 'அறிவோமா ஆன்மீகம்' என்னும் தலைப்பில் வெளியிட்டு வரும் கட்டுரைகளில் சிவன் விஷ்ணுவைக் காட்டிலும் சிறந்தவன் என்று விதண்டாவாதங்கள் செய்து எழுதி வருவதும் அவரது விஷ்ணு த்வேஷத்தை வெளிப்படையாகக் காட்டவில்லையா?

21. 'சிவனே பரம்பொருள்', 'சக்தியே பரம்பொருள்' 'விநாயகரே பரம்பொருள்', 'முருகனே பரம்பொருள்' என்று முன்னுக்குப்பின் முரணாக நீங்கள் பேசியும், எழுதியும் வருவது மக்களுக்குக் குழப்பத்தை விளைக்குமேயொழியத் தெளிவை விளைக்காது என்று நீங்கள் உணரவில்லையா?

http://acharya.org

22. 'அரியும் சிவனும் ஒன்னு' என்று சைவ வைஷ்ணவ சமரசவாதத்தை நீங்கள் பேசுவதால் "அல்லாவும், பரமபிதாவும், சிவனும், விஷ்ணுவும், மற்றுமுள்ள எல்லா மதக் கடவுளரும் ஒன்று தான்" என்னும் சர்வசமய சமரசவாதம் இந்துக்களிடையே மிகவும் பரவி, நம்முடைய சைவ வைஷ்ணவ மதங்களின் கடவுட் கொள்கைகளையும், அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் வேதாந்தக் கொள்கைகளையும் மிகவும் நலிவடையச் செய்து விட்டது என்பது உங்களுக்கு விளங்கவில்லையா?

23. கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களும் தங்கள் மதக் கொள்கைகளில் உறுதியாயிருப்பதையும், இந்துக்கள் மதவிஷயத்தில் குழப்பவாதிகளாயிருப்பதையும் காணும்போது பொது ஜனப் பத்திரிகைகளின் குழப்பவாதத்தால் நம்முடைய மதக் கொள்கைகளெல்லாம் நாளடைவில் அழிந்து, நம்நாட்டில் கிறிஸ்தவமும், இஸ்லாமும் மேலோங்கி நிற்கும் காலம் வரக்கூடும் என்பதையும், அதற்கு உங்களது பிரசாரங்களே காரணம் என்பதையும் மறுக்கமுடியுமா?

24. "ஒவ்வொருவரும் தங்கள் மதத்தில் உறுதியுடன் இருந்து, மற்ற மதங்கள் அவரவர் நிலைக்கேற்பப் படிப்படியாக முன்னேறி வருவதற்காகப் பரம்பொருளால் படைக்கப்பட்டவை. ஆகையால் அவற்றின் மீது துவேஷம் கொண்டு அழிக்க முயலலாகாது" என்னும் சகிப்புத் தன்மையுடன் இருப்பதே பல மதங்களைச் சேர்ந்தவர்களிடையே ஒற்றுமைக்கு வழி என்பதையும், ஆதாரங்களைக் காட்டாமல் பொய்களைக் கூறி மதங்களிடையே போலிச் சமரசவாதம் பேசுவது நாளடைவில் வேற்றுமையையே வளர்க்கும் என்பதையும், மக்களின் மத நம்பிக்கையை அழித்துவிடும் என்பதையும் உங்களால் மறுக்க முடியுமா?

25. நாட்டு நடப்புக்களையும், அரசியல் செய்திகளையும் கதைகளையும், கட்டுரைகளையும் வெளியிடவேண்டிய தின மலர் போன்ற பத்திரிகைகள் மதங்களைப் பற்றிய ஆழ்ந்த

http://acharya.org

அறிவில்லாதவர்களைக் கொண்டு ஒருதலைப் பட்சமாக மதக் கருத்துக்களையும் மதக்கட்டுரைகளையும் வெளியிடுவது மக்களுக்குக் குழப்பத்தையே விளைக்கும் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா?

26. சைவர் வைஷ்ணவர் கிறிஸ்துவர் இஸ்லாமியர் முதலான பல மதங்களைச் சார்ந்த வாசகர்களைக் கொண்ட தினமலர் போன்ற பத்திரிகை அவர்கள் அனைவருடைய பணத்தாலும் நடத்தப்படுகிறது என்பதை மறுக்க முடியாது. அத்தகைய பத்திரிகைகளில் சிவவிஷ்ணு சமரச வாதம் பேசும் ஒரு சாராரின் கருத்துக்களை மட்டுமே வெளியிடுவதும், வைஷ்ணவர்கள் பரம்பொருளாகக் கொண்டாடும் விஷ்ணுவை இழிவுபடுத்தியும், வைணவ மதத்தைத் திரித்துக் கூறியும் கட்டுரைகளை வெளியிடுவதும் நியாயமாகுமா?

முடிவுரை

நம்நாடு சைவம், வைஷ்ணவம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான பல மதங்களைச் சார்ந்த மக்களைக் கொண்டதாய் இருப்பது. இவர்கள் அனைவரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டுமென்பதில் எவருக்குமே கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இதைச் சாதிப்பதற்கு வழி என்ன? என்பதே நம் முன் நிற்கும் முக்கியமான கேள்வியாகும். இம்மதங்கள் அனைத்தையும் ஒன்றாக்கிவிட வேண்டும் என்று சிலரும், அழித்துவிடவேண்டுமென்று சிலரும் கூறுகிறார்கள். பல வகைப்பட்ட மதக் கொள்கைகளை உடைய இம்மதங்களை ஒன்றாக்கி விடுவது இயலாதது என்று பகுத்தறிவு உள்ள எவருக்கும் விளங்கும். முகலாயச் சக்கரவர்த்தி அக்பர் இஸ்லாத்தையும் வைதிகமதத்தையும் ஒன்றாகக 'தீன்-இலாஹி' என்று இரண்டும் கலந்த ஒரு மதத்தை உருவாக்கினார். அவர் காலத்திலேயே பொதுமக்கள் அதை ஏற்கவில்லை. அவருக்குப்பின் அம்மதத்தைப் பற்றிய பேச்சே இல்லை. சாதி மதங்களை அழிக்க வேண்டுமென்று முழக்கமிட்டுக் கொண்டு பொது மக்களின் பணத்தைக் கொள்ளையடித்துவரும் அரசியல்வாதி

http://acharya.org

களாலும் இவற்றை அழிக்க முடியவில்லை. சாதி மதங்களைக் காட்டியே அவர்கள் ஓட்டுப்பெற வேண்டியிருப்பதால் அவர்கள் சாதி மதங்களை வளர்த்தே வருகிறார்கள். மேலும், ஒரு கடவுளிடமும் ஒரு மதத்திலும் உறுதியான நம்பிக்கை இருந்தால்தான் அவன் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை வாழ முடியும். இன்று பலருக்கு மதங்களில், குறிப்பாக சைவத்திலும், வைஷ்ணவத்திலும் நம்பிக்கை மிகக் குறைந்து விட்டதால் இந்துக்கள் என்ற பொதுப்பெயர் சூட்டப்பட்ட மக்களில் பலர் ஒழுக்கத்தை இழந்து, பணம் சம்பாதிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுவிட்டார்கள். சுதந்திரத்திற்குப்பின் நம் நாட்டு அரசியல்வாதிகளாலும், பொதுஜனப் பத்திரிகைகளாலும் முறையே கட்சியைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், வாசகர்களைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் தொடர்ந்து செய்யப்பட்ட மதச் சமரசவாதமே இதற்குக் காரணம் ஆகும். பணம் சம்பாதிப்பதிலேயே குறியுள்ள அரசியல்வாதிகளைத் திருத்த முடியாது. நாட்டின் நலனில் அக்கறையுள்ள பொதுஜனப் பத்திரிகைகளாவது—சர்வமத சமரசவாதம் செய்வதை நிறுத்திக்கொண்டு அவரவர் மதத்தில் உறுதியான நம்பிக்கையோடும், சகோதர மதங்களில் சகிப்புத் தன்மையோடும் வாழவேண்டுமென்று பிரசாரம் செய்யவேண்டும். குறிப்பாக, ஆத்திகர்களிடையே மிகவும் பிரசாரமடைந்துள்ள தினமலர் 'அறிவோமா ஆன்மீகம்', 'பக்தி மலர்', 'வாரமலர்' முதலானவற்றில் விஷ்ணுவைத் தாழ்த்திப் பேசும் தலபுராணக் கட்டுக்கதைகளையும், சிவவிஷ்ணு ஸாம்ய வாதத்தையும், சைவ வைஷ்ணவ சமரச வாதத்தையும் வெளியிடும் கட்டுரைகளையும் நிறுத்திக்கொண்டு, "அவரவர் மதத்தில் உறுதியாயிருந்து கொண்டு, எல்லா மதங்களும் பரம்பொருளின் படைப்புக்களே என்னும் எண்ணத்தோடும், சகோதர மதங்களைச் சார்ந்தவர்களிடமும் அன்போடும், ஒற்றுமையோடும் இருங்கள்" என்று பிரசாரம் செய்யவேண்டும். இது ஒன்றே நம்நாட்டில் மக்களிடையே நல்லொழுக்கம் வளருவதற்கு வழியாகும்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி 55] ஒளி - 1, 2]

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

சென்ற இதழில் "சமரசமா சகிப்புத் தன்மையா?—தினமலரின் நேர்மையின்மை" என்னும் தலைப்பில் நாம் வெளியிட்ட நூல் தினமலர் சங்கரமணிக்கு அனுப்பப் பட்டது. இந்தச் சர்ச்சைக்கு மூல காரணமாய் இருந்த "திரு. உ. நரசிம்மன், 1/87, இசையகம், தேப்பெருமாநல்லூர்" அவர்கள் சங்கரமணியுடன் FAX மூலமாகவும் கடிதங்கள் வாயிலாகவும், நேரிலும் பலமுறை தொடர்பு கொண்டார். அதன் பயனாக திரு. சங்கரமணி நம்முடைய நூலில் நிர்ணயிக்கப்பெற்ற விஷயங்களில் தமது இசைவை மனப்பூர்வமாக அவரிடம் தெரிவித்தார். அதன் பிறகு நாம் நமது நூலில் வலியுறுத்திய சகிப்புத் தன்மை சங்கரமணியின் கட்டுரைகளில் பின்பற்றப்படுவதையும் காண்கிறோம். இது விஷயமான முழு விபரங்கள் அடங்கிய கட்டுரையை எழுதி திரு. உ. நரசிம்மன் நமக்கு அனுப்பியிருக்கிறார். அது அடுத்து வெளியிடப்படுகிறது. இவரைப் போலவே பல அன்பர்கள் முனைந்தால் பொது ஜனப் பத்திரிகைகளின் வைஷ்ணவ விரோதப் போக்கு மாறும்.

http://acharya.org

647 & 648 ஸுதர்சனம் இதழில் வெளியான 'சமரசமா, சகிப்புத் தன்மையா?—தினமலரின் நேர்மையின்மை' நூலின்

ஜெயபேரிகை

[உ. நரசிம்மன், 1/87, இசையகம், தேப்பெருமாநல்லூர்-612 206]

29—7—2001 தினமலர் இதழின் கட்டுரையில் 'அரனும் அரியும் ஒன்றே' எனும் கருத்தினை தினமலர்—திருச்சி பதிப்பின் சென்னை அலுவலகத்தில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றும் திரு. சங்கரமணி அவர்கள் எழுதியிருந்தார். அவரது கருத்தில் இருந்த பல் முரண்பாடுகளையும், வேதம் போன்ற ஆதார நூல்களுக்குப் புறம் பான கருத்துக்களையும் சுட்டிக்காட்டி FAX மூலம் அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தேன. நமது கருத்துக்களைப் பெற்று எந்த பதிலையும் கூறாது தினமலர் நாளிதழில் 'அறிவோமா ஆன்மீகம்' பகுதியில், 'ஹரியும் சிவனும் ஒண்ணு', 'பிள்ளையார் விஷ்ணுவின் ஸுதர்சன சக்கரத்தை விழுங்கியதாகக் கூறப்படும் பொய்க்கதை', 'ராமர் லிங்க பூஜை செய்ததாகக் கூறப்படும் பொய்க்கதை' போன்றவற்றைத் தொடர்ந்து பிரசுரித்து வந்தார்.

கடிதங்கள் மூலமும் தொலைபேசி உரையாடல்கள் மூலமும் பல வழி களில் சங்கரமணியின் கருத்துக்கள் அபத்தமானவை என்பதையும் ஆதாரமற்றவை என்பதையும் விளக்கி எழுதினேன்; பேசினேன். நமது கருத்துக்களுக்குப் பதில் அளிப்பதாகக் கூறிய சங்கரமணியிடமிருந்து பல நாட்களாகியும் பதில் இல்லை. ஆனால் மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்ட, மண்ணோடு மண்ணாய்ப் போனவர்களின் வாதங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்த சங்கரமணியினையும், தினமலர் நாளி தழையும் கண்டித்தும் சங்கர சுப்ரமணி அவர்களது மனச்சாட்சி குறித்தும் பலகேள்விகளை எழுப்பியும் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் மாத இதழின் ஆசிரியரும் தனியொரு மனிதராகவே நின்று வைஷ்ணவத்தைக் காத்து வருபவருமான புத்தூர் ஸ்வாமி 'சமரசமா, சகிப்புத் தன்மையா?' (தின மலரின் நேர்மையின்மை) எனும் நூலினை வெளியிட்டு திரு. சங்கர சுப்ரமணிக்கும் அனுப்பினர்.

http://acharya.org

வேத, வேதாந்த, இதிஹாச, ஸாத்விகபுராணங்கள், சங்க இலக்கியம் எனப் பல ஆதார நூல்களிலிருந்து ஆதார பூர்வமான கருத்துக்களை எடுத்து புத்தூர் ஸ்வாமி எழுதிய நூலுக்கு பதில் சொல்ல இயலாததால் தினமலரும், திரு. சங்கர சுப்ரமணியும் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ பிரசாரங்களைக் கைவிட்டன.

சமரசமா சகிப்புத் தன்மையா? நூல் வெளியான பிறகு, திரு. சங்கரமணி அவர்களைச் சந்திக்க அனுமதி பெற்று 2001 நவம்பர் 15-ம் தேதி அன்று அவரது இல்லத்தில் சந்தித்தேன். இந்த உரையாடலில் நடந்த சாரமான விஷயங்கள் ஸுதர்சனம் வாசகர்களுடன பகிர்ந்துகொள்ளத்தக்கவை.

ஸ்ரீரங்கத்தைத் தாய் மண்ணாகக் கொண்ட திரு. சங்கரமணி எனும் 31 வயது இளைஞர். 'சமரசமா, சகிப்புத் தன்மையா?' எனும் நூலினை வெகுவாகப் பாராட்டினர். ஆதார பூர்வமான அந்தக் கருத்துக்களுக்கு பதில் தரும் அளவுக்கு ஞானம் தனக்கு இல்லை என்பதை ஒப்புக்கொண்ட சங்கரமணி, தாங்கள் எழுதிய பிறகு வால்மீகி ராமாயணம் முழுவதும் படித்தேன். எந்த ஒரு இடத்திலும் ராமர் லிங்க பூஜை செய்ததாகச் செய்தி இல்லை என்பதை அறிந்தபோது மனம் திருந்தியதாகக் கூறும் சங்கரமணி, வேதங்கள் முதல் சங்க இலக்கியம் வரை எந்த இடத்திலும் சிவ பார்வதிக்கு பிள்ளையார் எனும் குழந்தை இருந்ததாகக் குறிக்கப்படவில்லை என்பதை நாம் எழுதியதைப் படித்து ஏற்றுக் கொண்டு 'பிள்ளையார் நாயன்மார்களின் கண்டுபிடிப்பு' என்பதை ஒப்புக்கொள்கிறார்.

பிள்ளையார் முழு முதல் கடவுள் என்றால் முழு முதல் கடவுளையே பெற்ற சிவன் முழு முதல் கடவுள் இல்லை எனத் தேறுகிறது எனச் சொன்னபோது சங்கரமணிக்கே சிரிப்பு வருகிறது. 'சுக்லாம்பரதரம்' ஸ்லோகம் விஷ்ணுவைப் பற்றியது என நீங்கள் எழுதிய பிறகு தான் புரிந்தது என்கிறார்.

'அறனை மறவேல்' (தர்மத்தை மறவேல்) என்பதை 'அரனை மறவேல்' (சிவனை மறவேல்) என மாற்றிக் கூறிய காமகோடியின் சைவ வெறியினைச் சுட்டிக் காட்டியபோது இந்த ஆத்திசூடி விஷயம் பற்றி சங்கரமடத்துக்குத் தான் கேள்விகேட்டு அனுப்பியதாகவும் கூறினர்.

http://acharya.org

'கட்டாயம பதில் வராது' என்று கூறினேன். பதிலளித்தால் அவர்களது முகத்திரை (முகமூடி) கிழியுமே? என்றேன. இன்றுவரை பதில் இல்லை என்பதும் உண்மை.

'சிவன் தனது பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெருமாளைப் ப்ரார்த்தித்த கதைகள் உண்டு' என்பதை விவாதத்தின்போது ஒரு கடிதத்தில் அடியேன் குறிப்பிட்டிருந்தேன். அதை நினைவுகூர்ந்த சங்கரமணி அப்படிப்பட்ட கதைகள் இருந்தால் எழுதும்படியும் அதை தினமலரில் பிரசுரிப்பதாகவும் கூறினர்.

புத்தூர் ஸ்வாமி 'சமரசமா சகிப்புத் தன்மையா?' நூல் எழுதியதும் நான் தங்களுடன் விவாதம் செய்ததும் சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டு என நிரூபிக்க அல்ல. "விஷ்ணுவுக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டு" என்றும், "விஷ்ணுவுக்கு தமோ குணமுண்டு" எனவும் தாங்கள் வெளியிட்ட காமகோடியின் கருத்துக்கள் ஆதாரமற்றவை மதவெறியால் கூறப்பட்டவை என்பதை உணர்த்தத்தான். சைவத்தை, சிவனைத் தாழ்த்தி எழுதுவதற்காக இந்த விவாதம் நடக்கவில்லை, மாருக விஷ்ணுவைப் பற்றி வேத வேதாந்தங்களுக்குப் புறம்பான பொய்க் கதைகளை வெகுஜனப் பத்திரிகைகள் வெளியிட்டு, பாமரத்தனமான வாசகர்கள் பலரை மூளைச் சலவை செய்யக் கூடாது என்பதற்காகத் தான். சைவத்தைப் பற்றிக் காழ்ப்புணர்ச்சி எங்களுக்குக் கிடையாது; மாருக வைஷ்ணவத்தை விஷ்ணு பரத்துவத்தை நசுக்க நினைக்கும் கலியுக சிசுபாலர்களின் செயல்களை ஆதாரத்துடன் வேரறுக்க வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. அதைத்தான் செய்தோம்.

'ஹரியும் சிவனும் ஒன்று' என்றும் 'சைவ வைஷ்ணவ ஒற்றுமை' என்றும் பலர் பேசுவதாலும் காமகோடி போன்ற உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளவர்கள் செய்யும் பொய்ப் பிரசாரத்தாலும் (பல பொய்க் கதைகளைக் கூறி) வைஷ்ணவத்தை அழிக்க எண்ணுகின்றனர். இந்த மூளைச் சலவையில் பல வைஷ்ணவர்கள் மனமாறியதுண்டு. "சைவ வைஷ்ணவ ஒற்றுமை" என்றும், "ஹரியும் சிவனும் ஒன்று" என்றும் தங்களைப் போன்று பேசுபவர்களுக்கு நான் கேட்கும் கேள்வி இதுதான்.—

http://acharya.org

"இன்றைக்கு விபூதி இட்டுக்கொள்ளும் வைஷ்ணவர்கள் உண்டு. ஆனால் திருமண் இட்டுக்கொள்ளும் சைவர்கள் இல்லை. ஆனால் தன் மத உயர்வுகளைப் பேசும் வைஷ்ணவர்களை பிரிவினைவாதி எனப்பேசும் தங்களது கூற்று இங்கு உடைபடுகிறது" என்றேன்.

இந்த உலகில் சைவ வைஷ்ணவ ஒற்றுமையை 100-க்கு 200 சதவிகிதம் ஆதரிப்பவன் நான். ஆனால் அந்த ஒற்றுமை பொய்க் கதைகளால் வைஷ்ணவத்தை இழித்தும் பழித்தும் பேசி 'பெரியண்ணன்' மனப்பான்மையால் வரக்கூடாது. இதுதான் எங்கள் வாதம். சைவன் சைவனாகவும், வைஷ்ணவன் வைஷ்ணவனாகவும் வாழ்ந்தால் போதும். சைவத்தைப் பற்றியும் முழுமையாக அறியாது வைஷ்ணவத்தைப் பற்றியும் முழுமையாக அறியாது 'ஹிந்து' என்றபெயரில் பாமரனாக வாழ்வது மதநெறி முறைகளுக்குப் புறம்பானது என்று கூறி உண்மையான மத ஒற்றுமை என்பது சமரசத்தால் உண்டாகாது பரஸ்பர சகிப்புத் தன்மையால்தான் உண்டாகும் எனக்கூறி விடை பெற்றேன்.

தினமலர் நாளிதழில் இருமுறை வைஷ்ணவ மதச் சின்னமான திருமண், மோட்சம் தரும் மந்திரமான 'கோவிந்தா' இரண்டும் கிண்டல் செய்யப்பட்ட போது அடியேன் கண்டித்து, தொலைபேசி மற்றும் கடிதம் மூலம் மேற்கொண்ட முயற்சியை ஏற்று தினமலர் திருச்சி பதிப்பின் ஆசிரியர் குழு இனி எக்காரணம் கொண்டும் 'திருமண்; கோவிந்தா' இரண்டும் ஏமாற்றத்தின் அடையாளமாகக் கிண்டல் செய்யப்படக்கூடாது எனத் தீர்மானித்ததாகக் கூறினார் சங்கரமணி.

தனி மனித முயற்சிகள் பலன் தரக் கூடியவை என்பது தினமலருடனான இந்த விவாதத்தில் விளங்குகிறது. நாடெங்கும் உள்ள வைஷ்ணவர்கள் பத்திரிக்கைகளில் காணும் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ பிரசாரங்களைக் கண்டித்து, தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும் என்பது திண்ணம்.

புத்தூர் ஸ்வாமியின் நூல்களிலிருந்து மேற்கோள்களைக் கைக்கொண்டு அடியேன் செய்த முயற்சிகளில் கிடைத்த இந்த முன்னேற்றம் அல்லது வெற்றியினை ஸ்ரீமந் நாராயணனுக்கும் புத்தூர் ஸ்வாமிக்கும் ஸமர்ப்பிப்பதே சரியானதாகும்.

http://acharya.org

ஸுதர்சனர் குறிப்பு

நம்முடைய நூலையும், அதில் கேட்கப்பட்ட கேள்விகளையும் பாராட்டியுள்ள சங்கரமணியின் நேர்மை வரவேற்கத் தக்கது. ஆனால், காமகோடி பீடாதிபதி ஜெயேந்திரரும், அந்த மடத்தைச் சேர்ந்த மகாதேவன் என்பவரும் தினமலரின் 'ஆன்மீகப்' பகுதியில் கருத்துக்களை எழுதுகின்றனர். மறைந்த காமகோடிப் பெரியவரின் கட்டுரைகளும் வெளியிடப்படுகின்றன. 19—12—2001 "அறிவோமா ஆன்மீகம்" பகுதியில், "அ, உ, ம் என்ற மூன்றும் சேர்ந்தே, ஓங்காரமான ப்ரணவம் உண்டாகிறது. 'அ' என்பது ஸ்ருஷ்டி—ப்ரம்மா, 'உ' என்பது பரிபாலனம்—மஹாவிஷ்ணு, 'ம்' என்பது சம்ஹாரம்—பரமசிவன்; மும்மூர்த்திகளும் தோன்றியது ஒரே மஹா சக்தியில்தான். அதனால் அவள் ப்ரணவ வடிவானவள்" என்று தொடங்கி, உமா என்னும் தேவியின் பெயர் இந்த மூன்று எழுத்துக்களால் ஆனதாயிருப்பது என்றும், அது தேவி ப்ரணவம் என்றும் எழுதப்பட்டுள்ளது. இது "ஏகோஹ வை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:" [நாராயணன் ஒருவனே ப்ரளயகாலத்தில் இருந்தான் பிரமன், சிவன் முதலான எப்பொருளும் இல்லை.] என்று மஹோபனிஷத்திலும், "நாராயணனிடமிருந்தே பிரமன், சிவன் முதலான அனைவரும் உண்டாகிறார்கள்" என்று நாராயணோபநிஷத்திலும் மற்றும் ஸுபால உபநிஷத் முதலான பலவேத வாக்கியங்களிலும், நாராயணனே ஜக₃த் காரணனாகக் கூறியிருப்பதற்கு முரணானது. தேவியை ஜக₃த் காரணமாகக் கூறும் ஒரு உபநிஷத் வாக்யம் கூட இல்லை. தேவீ பாகவதம் முதலான பிற்காலத்தில் எழுந்த பொய்ந் நூல்களையே காமகோடிகள் ப்ரமாணமாகக் கொண்டு, வேதத்திற்கு முரணாகப் பேசுகிறார்கள் என்று தெளிவாக விளங்குகிறது. கேநோபநிஷத்தில் "உமா ஹைமவதீ" என்று உமாதேவி ஹிமவானின் புத்ரியாய், பரம்பொருளை அறிந்தவளாகக் குறிக்கப்படுகிறாளேயொழிய, பரம்பொருளாகச் சொல்லப்படவில்லை. ஆகையால் இந்த விளக்கம் வேதவிருத்தம் என்று நல்லோர்களால் காற்கடைக் கொள்ளத்தக்கது 14—12—01 தினமலர் சிறுவர் மலரில் அடிமுடி தேடிய கட்டுக் கதையை வெளியிடுவதன் மூலம் சிறுவர் பிஞ்சு நெஞ்சில் விஷ்ணுத்₃வேஷமாகிற நஞ்சு விதைக்கப்படுகிறது. இத்தகைய விளக்கங்கள் தினமலரில் வெளிவந்தால் அவை 'ஸுதர்சனர் பதில்', 'ராமபாணம்' முதலானவற்றில் கண்டிக்கப்படும். அன்பர்கள் பலரும் கண்டிக்கவேண்டும்.

http://acharya.org